ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத் வரவரமுநயே நம:

ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலா

(கட்டுரைகளின் தொகுப்பு)

வெளியிடுவோர்:

பரமனடி ட்ரஸ்ட்

1-39/1-32, அக்ரஹாரம் தெரு,

திருவெள்ளறை, திருச்சி - 621009.

அலைபேசி: 8838850650

வெளியீட்டு நாள்: ப்லவ தை விசாகம் (26.**01.2022)**

Not for Sale

For private circulation only

பதிப்பாளரின் விண்ணப்பம்

கடந்த நூற்றாண்டில் எழுந்தருளியிருந்த தலைசிறந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய வித்வான்களுள் முதல் வரிசையில் எண்ணப்படத் தகுந்தவர்கள் காரப்பங்காடு ஸ்வாமியும் வேளுக்குடி ஸ்வாமியும். இவர்கள் தங்களுடைய உபந்யாஸங்கள் மூலமாகவும் காலக்ஷேபங்கள் மூலமாகவும் கட்டுரைகள் மூலமாகவும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்துக்குச் செய்திருக்கும் கைங்கர்யம் கடலின் மிகப்பெரிது. இவர்கள் காலத்தில் பிறக்கப் பெறாதபடியால் இவர்களுடைய உபந்யாஸங்களையோ காலக்ஷேபங்களையோ கேட்கும் பாக்யமில்லாதவர்கள் இழந்துபோகாதபடி, இவர்கள் அருளிச்செய்த அர்த்தங்களை நிதிபோலே சேமித்து வைத்தவர் ஒருவர் உளரென்றால் அவர் காரப்பங்காடு ஸ்வாமியுடைய தௌஹித்ரர் ஸ்ரீ. உ. வே. முரளீதரன் ஸ்வாமி தாம்.

இவர் மஹான்கள் பலருடைய பற்பல கட்டுரைகளைச் சேமித்து வைத்ததோடு மட்டுமல்லாமல், பல உபந்யாஸங்களையும் காலக்ஷேபங்களையும் ஒலிநாடாக்களில் பதிவு செய்துகொண்டு, அவ்வப்பொழுது ஏடுபடுத்தப்பட்ட கட்டுரைகளாக அவற்றை வெளியிட்டுள்ளார். இவற்றையொழியவும் பல நூல்களை முதன்முறையாகப் பதிப்பிட்ட பெருமையும், முன்னோரால் தெலுங்கு லிபியில் பதிப்பிக்கப்பட்ட சில மிக முக்யமான நூல்களை முதன்முறையாகத் தமிழில் பதிப்பித்த பெருமையும் உடையவர். கோயிலாத்தான் ஸ்ரீ.உ.வே. விஜயராகவாசார்ய ஸ்வாமியுடைய துணையோடு, பல வருடங்களுடைய கடும் உழைப்புக்குப் பின், பல்லாயிரக்கணக்கிலும், சில சமயங்களில் லக்ஷக்கணக்கிலும் செலவு செய்து வெளியிடப்பட்ட நூல்கள் யாவற்றையும் விலைக்கல்லாமல் வெறிதே ஸ்ரீவைஷ்ணவர்களுக்குக் கொடுத்தவர் இவர். இவரைப்போல்

இப்படித் தன்னலமற்ற ஸம்ப்ரதாய கைங்கர்யம் செய்பவர்கள் இக்காலத்தில் மிகவும் துர்லபர்.

காரப்பங்காடு ஸ்வாமியிடத்திலும் வேளுக்குடி ஸ்வாமியிடத்திலும் பக்திகொண்ட இவர், அவர்களுடைய உபந்யாஸங்களையும் காலக்ஷேபங்களையும் ஒலிநாடாக்களில் பதிவு செய்துகொண்டு, அவற்றைச் சோம்பாது ஒன்றுவிடாமல் எழுதி ஏடுபடுத்தி வெளியிட்டுள்ளார் என்பது மட்டுமன்று; அவர்கள் அருளிச்செய்த அர்த்தங்கள் ஏட்டளவில் மட்டும் நின்றுபோகாதபடி அவர்களுடைய உபதேஶங்களை அநுஷ்டாந பர்யந்தமாக்கிக் கொண்டவர். கைகேயி பரதாழ்வானுக்கு ராஜ்யம் வேண்டியபோது, சக்ரவர்த்தி அவளிடம் "இது ஶாஸ்த்ரவிருத்தம், நம் முன்னோர்கள் இசைந்ததுமன்று, இதைச் செய்வதால் நமக்கு ஶ்ரேயஸ்ஸும் உண்டாகாது; எனவே நாம் இதைச் செய்யலாகாது" என்றான். இந்த ஸ்வாமியும் எது ஶாஸ்த்ரவிருத்தமோ, எதை நம் பூர்வாசார்யர்கள் இசையவில்லையோ, எதைச் செய்வதால் நமக்கு ஶ்ரேயஸ்ஸு உண்டாகாதோ, அதை நாம் செய்யலாகாது என்று வ்ரதம் கொண்டவர். நம் பூர்வாசார்யர்களுடைய க்ரந்தங்களிலும் இதிஹாஸ புராணங்களிலும் மிக்க ஈடுபாடு கொண்ட இவர், அவற்றில் சொல்லப்பட்ட முக்யமான அநுஷ்டாநங்களைத் தாம் கைக்கொண்டதோடு மட்டுமல்லாமல் பிறரையும் அவற்றைக் கடைப்பிடிக்கச் சொல்லி வலியுறுத்துவார்.

இந்த ஸ்வாமி வாகம்ருதவர்ஷீ வேளுக்குடி ஸ்ரீ.உ.வே. வரதாசார்ய ஸ்வாமியுடைய ஶதமாநோத்ஸவத்தின் நினைவாகச் சில நூல்களை வெளியிடவேணும் என்று திருவுள்ளம்பற்றி அவற்றை வெளிக்கொணர்வதற்கான ஏற்பாடுகள் செய்து, அவை புத்தகவடிவில் வெளிவருவதற்கு முன்னமே நரகத்தை நக்கு வைகுந்தம் புகுந்தார். இந்த ஸ்வாமியுடைய குடும்பத்தாரின் விருப்பப்படி இந்த க்ரந்தங்கள் பரமனடி டிரஸ்டால் வெளியிடப்படவுள்ளன. இந்த நூல்களுள் "ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலா" பரமனடி டிரஸ்ட் செய்த நிதியுதவியையும்

ஸ்ரீவைஷ்ணவர்கள் சிலர் ஸ்ரீ.உ.வே. முரளீதரன் ஸ்வாமியிடம் கொடுத்த நிதியுதவியையும் கொண்டு பரமனடி டிரஸ்டால் தற்போது வெளியிடப்படுகிறது.

வேளுக்குடி ஸ்வாமி, புத்தூர் ஸ்வாமி முதலிய மஹான்கள் பலருடைய கட்டுரைகள் அடங்கிய இத்தொகுப்பு, ஸ்ரீ.உ.வே. முரளீதரன் ஸ்வாமியின் திருவுள்ளத்துக்குச் சேர, "ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலா" என்ற பெயரில் வெளிவருகிறது. இதில் வித்வான்களுடைய கட்டுரைகளும், ஸ்ரீ.உ.வே. முரளீதரன் ஸ்வாமி வேளுக்குடி ஸ்வாமியின் உபந்யாஸங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதிய கட்டுரைகளும், ஸ்ரீ.உ.வே. முரளீதரன் ஸ்வாமி வேளுக்குடி ஸ்வாமியின் தனிப்பெருமைகளை விளக்குவதாக எழுதிய கட்டுரையும் அடங்கியுள்ளன. இத்தொகுப்பின் மூலம் வாகம்ருதவர்ஷீ ஸ்வாமியின் பெருமைகளையும் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் கோட்பாடுகளையும், பற்பல ஸம்ப்ரதாயார்த்தங்களையும் ஸ்ரீவைஷ்ணவர்கள் அறிந்து அநுபவிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

இந்த நூலைப் பரிசோதித்துப் பிழைதிருத்தம் செய்து உபகரித்தருளியவராய், ஸ்ரீ உ.வே. தி.அ. க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியுடைய பாகிநேயரான தேசூர் நல்லான் சக்கரவர்த்தி ஸ்ரீ உ.வே. ஸ்ரீவத்ஸாங்கன் ஸ்வாமிக்கு க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த நூலை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த 'RNR Printers' அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

ப்லவ தை விசாகம்.

(26:01:2022)

பரமனடி டிரஸ்ட்,
திருவெள்ளறை.

	பொருளடக்கம்	பக்கம் எண்
1	ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமியின் வாழ்வும் வாக்கும்	6
2	ஸ்ரீந்ருஸிம்ஹாவதார வைபவம்	91
3	வேதங்களும் வேதமுதல்வனும்	145
4	வேதம் - 1,2,3,4,5	177
5	விஶிஷ்டாத்வைதம்	204
6	ஸ்ரீ பாஷ்ய மங்கள ஶ்லோக விவரணம்	240

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வேங்கடகு3ரவே நம:

அடியேன் செய்யும் விண்ணப்பம்

ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமியின் வாழ்வும் வாக்கும்

(ஸ்ரீ உ.வே. முரளீதரன் ஸ்வாமி)

கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே.காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி, "நிரூபம ப்ரஹ்யாத வாக்வைபவஶாலி" என்று நிருவகம் பெற்றவர். அவருடைய ப்ரதா3னசிஷ்யரான கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாசார்யார் ஸ்வாமி "வாகsம்ருதவர்ஷீ" என்று நிருவகம் பெற்று விளங்கியவர். இவருக்கு பெருமைகள் பலவுண்டு. அவற்றுள் சிலவற்றை அடியேன் ஏற்கனவே வெளியிட்டுள்ள ஸ்ரீ உ.வே.காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி வைபவம் என்னும் நூலில் குறிப்பிட்டிருக்கிறேன். இப்பொழுது நம் வேளுக்குடி ஸ்வாமியின் திருவவதார ஶதமாந உற்சவம் நடந்து கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில் இவருடைய வைபவானுபவபரமாக மேலும் சில விஷயங்களை விண்ணப்பிக்க விழைகிறேன்.

ஸ்ரீ.உ.வே. காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி காலத்திற்கு பிறகு ஆசார்யன் பூர்வரூபம், சிஷ்யன் உத்தரரூபம் என்னும் வேதாந்த கட்டளைக்குச் சேர அவருடைய ஸ்தாநத்தில் அவருடைய மறுவுருவாய்த் திகழ்ந்து ஸ்ரீ வைஷ்ணவ உலகில் மிகவும் ப்ரஸித்தராயும் முதல்வராயும் விளங்கி வந்தவர் நம் வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி. வசீகரமான திருமேனி ஸௌந்தர்யமென்ன, வைடுஷ்ய பூர்த்தியென்ன, பகவத்பாகவத ஆசார்ய பக்தியென்ன, ஸ்ரீவைஷ்ணவவிநயம் கலந்த எளிமையென்ன, இது போன்ற ஆத்ம குணங்களென்ன, இவற்றால் மஹாதேஜஸ்வியாய் விளங்கியவர் நம் வேளுக்குடி ஸ்வாமி. ஆழ்ந்ததெளிந்த ஞானமென்ன, சிறந்த நினைவாற்றலென்ன, அபாரமான குரல்வளமென்ன, விஷயங்களை உபபாதநம் செய்து நன்கு விவரிக்கும் ஆற்றலென்ன, இவற்றால் பரமாச்சாரியரான ஸ்ரீபராசரபட்டர் இப்படித்தான் எழுந்தருளியிருந்தாரோ! என்று நமக்கு நினைக்கத்தோன்றும். மேலும்

ஸ்ரீபாஷ்யாதி ப்ரவசநத்தில்வாத்ஸ்ய வரதாசார்யரான நடாதூர் அம்மாளை போலவும், பகவத் விஷயாதி க்ரந்த ப்ரவசநத்தில் நம்பூர் வரதரான நம்பிள்ளையை போலவும் சிறந்து விளங்கியவர் நம் வேளுக்குடி ஸ்வாமி.

அந்த காலத்தில் காரப்பங்காடு ஸ்வாமியும் வேளுக்குடி ஸ்வாமியும் சேர்ந்த ஒரு புகைப்படத்தை ஒரு பத்திரிகையில் வெளியிட்டிருந்தார்கள். அதற்கு கிளியும், இளங்கிளியும் என்று ஒரு தலைப்பு கொடுத்திருந்தார்கள். கிளியின் ஸ்தாநத்தில் காரப்பங்காடு ஸ்வாமி. இளங்கிளியின் ஸ்தாநத்தில் நம் வேளுக்குடி ஸ்வாமி. கிளியின் குரல் மிகவும் இனிமையாக இருக்கும். அதைப்போன்றது காரப்பங்காடு ஸ்வாமியின் குரல். இளங்கிளிக்கு இரண்டு வைபவங்கள் உண்டு. தாய் கிளியுடைய பேச்சையே இதுவும் பேசும். இதனுடைய குரல் தாய்கிளியைவிட மிகவும் இனிமையாக இருக்கும். காரப்பங்காடு ஸ்வாமிக்கு நம் வேளுக்குடி ஸ்வாமியைப் போன்று வேறு ஒரு சிஷ்யர் யாரும் அமைந்திருக்க முடியாது. இதைப்போன்று நம் வேளுக்குடி ஸ்வாமிக்கும் காரப்பங்காடு ஸ்வாமியை போன்று வேறு ஒரு ஆசார்யன் அந்தக் காலத்திலேயே கிடைத்திருக்கமாட்டார். எனவே இருவருக்குமுண்டான குருசிஷ்யபா4வம் அத்யாஶ்சர்யமானது.

காரப்பங்காடு ஸ்வாமிக்கும் நம் வேளுக்குடி ஸ்வாமிக்கும் பல விஷயங்களில் ஒற்றுமை உண்டு, ஒரு சில விஷயங்களில் இருவருக்கும் வாசியுமுண்டு. இவற்றையும் மேலும் நம் வேளுக்குடி ஸ்வாமின் சிறப்பியல்புகள், மேலும் அவர் தம் உபந்யாஸங்களில் காட்டியருளியுள்ள சில விசேஷார்த்தங்கள் இவற்றில் சிலவற்றை விஷயமாகக் கொண்டுள்ளது இக்கட்டுரை.அடியேனுக்கு ஐந்து வருடங்களுக்கு முன்பே சர்கரை வியாதி முற்றி கண்பார்வை போய்விட்டது. கைவிரல்களும் கால்விரல்களும் ஸ்வாதீநத்தை இழந்துவிட்டன. இருப்பினும் நெஞ்சில் சிறிது உரம் இருக்கிறது. நம் வேளுக்குடி ஸ்வாமியை பற்றிய சில விஷயங்களை உலகிற்கு தெரிவிக்க வேண்டும் என்ற பாரிப்பு அடியேனுக்கு இருந்துவந்தது. இவற்றை அடியேன் வாய்வார்த்தையாக(dictation) சொல்லக்கேட்டு அதைத் திருத்தமாக எழுதி ஒரு கட்டுரையாக வடிமைத்துக் கொடுத்து மஹோபகாரம் புரிந்துள்ளார் திருமதி வித்தியாலக்ஷ்மி அவர்கள். முதல் முன்னம் அவருக்கு அடியேன் சார்பாகவும், ஸ்ரீ உ.வே. வேளுக்குடி ஸ்வாமியின் குடும்பத்தாரின் சார்பாகவும் மற்றும் ஸ்ரீவைஷ்ணவ உலகின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம் வேளுக்குடி ஸ்வாமியின் சிறப்பியல்புகள் பற்றி பல விஷயங்களை விண்ணப்பிக்க வேண்டும். அவற்றுள் முதன்முதலில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் இவர் ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு செய்தருளியுள்ள ஒரு மஹோபகாரமாகும். அதாவது இவர் வித்யார்த்தி தசையில் இருக்கும்போது ஒரு வருட காலம் ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருந்த கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே. தேசிகவரதாச்சார்யார் ஸ்வாமியின் ஸ்ரீபாஷ்ய காலஷேபத்தில் அன்வயித்திருந்தார். அதன் பிறகு சென்னையில் சுமார் 12 ஆண்டுகளுக்கும் மேலாக ஸ்ரீ உ.வே.காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி திருவடிவாரத்தில் க்ரந்த காலக்ஷேப க்ரமத்தில் பல வேதாந்த க்ரந்தங்களையும், பல ஸம்பிரதாய க்ரந்தங்களையும் அதிகரித்தார். இக்காலத்தில் அவர் காரப்பங்காடு ஸ்வாமி காட்டி அருளியுள்ள விசேஷார்த்தங்கள் பலவற்றை உடனுக்குடன் குறிப்புகளாக எழுதி வைத்துக் கொள்ளும் பழக்கத்தை மேற்கொண்டு வந்தார். இக்காரணத்தினால் காரப்பங்காடு வித்வத் பரம்பரையில் வாழையடி வாழையாக வந்துகொண்டிருந்த சில விசேஷார்த்தங்கள் வந்து தங்கிய மடுவாய் இவர் விளங்கினார். இந்த விஷயங்களை தம்முடைய உபந்யாஸத்தின்போது ஸ்ரீவைஷ்ணவ உலகிற்கு வெளியிட்டு காரப்பங்காடு வித்வத்பரம்பரையில் வந்துகொண்டிருந்த அந்த விசேஷார்த்தங்களை ஸ்ரீவைஷ்ணவ உலகம் இழக்காமல் இன்றளவும் அனுபவத்தில் கொள்ளும்படி இவர் மஹோபகாரம் புரிந்தவராவார். இவரை காரப்பங்காடு பரம்பரையில் வந்த கடைசி மகாவித்வான் என்றும் நாம் கூறலாம். இருவருக்கும்ஒற்றுமை என்று வரும்பொழுது இரண்டு ஸ்வாமிகளுக்குமே ஸ்ரீபாஷ்யம், பகவத்விஷயம், ஸ்ரீராமாயணம், திருப்பாவை, ஸ்ரீமத்பாகவதம்,பகவத்கீதை போன்ற க்ரந்தங்களில் ஆழ்ந்த ஈடுபாடு உண்டு. மற்றொரு ஒற்றுமை, இருவருடைய உபந்யாஸங்களும் க்ரந்த காலக்ஷேப ரீதியில் அமைந்திருக்கும். இருவருமே , க்ரந்தங்களை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வருவர். காரப்பங்காடு ஸ்வாமி க்ரந்தத்தை வைத்துக்கொண்டு உபந்யாஸம் ஸாதிப்பாரே தவிர அதிலிருந்து பங்க்திகளை வாசித்து காட்ட மாட்டார். ஆனால் வேளுக்குடி ஸ்வாமி உபந்யாஸம் ஸாதிக்கும் போது க்ரந்தங்களில் சில பங்க்திகளை ஸேவிப்பதும் உண்டு. காரங்காடு ஸ்வாமியின் உபந்யாஸம், ஒரு பள்ளி ஆசிரியர் பள்ளிச் சிறுவனுக்கு போதித்தால் எப்படி அடிப்படை விஷயங்களை போதிப்பாரோ அந்த ரீதியில் அமைந்திருக்கும். வேளுக்குடி ஸ்வாமி உபந்யாஸங்கள் ஒரு கல்லூரி முதல்வர் கல்லூரி

மாணவனுக்கு எவ்வாறு போதிப்பாரோ அதேபோன்று பேருரையாக அமைந்திருக்கும்.

காரப்பங்காடு ஸ்வாமி காலக்ஷேபம் ஸாதிப்பதற்கு முன்பு பூர்வ-அவலோகநம் செய்துகொண்டு காலக்ஷேபத்திற்கு வருவார். இதை அவரே கூறுவார். ஒரு அம்பட்டன் தன் கத்தியை ஷவரம் செய்வதற்கு முன்பு கூர்மையாக இருந்தாலும் ஒருமுறையாவது பட்டை தீட்டி தான் ஷவரம் செய்வான். அதேபோலத்தான் வித்வானும் அவனுக்கு தெரிந்த விஷயமாய் இருந்தாலும் பூர்வ-அவலோகநம் செய்யாமல் காலக்ஷேபத்திற்கு வரக்கூடாது என்று காரப்பங்காடு ஸ்வாமி ஸாதிப்பார். ஆனால் வேளுக்குடி ஸ்வாமி இந்த நியதியை வைத்துக்கொள்ளவில்லை. அவர் தினமும் பலமணி நேரம் க்ரந்தங்களை ஸேவிப்பது என்று வைத்துக் கொண்டிருந்தார், ஆனால் அவரிடத்தில் இந்த நியதியை பார்க்க முடியாது, இதை அவரே பலமுறை கூறியிருக்கிறார். காரப்பங்காடு ஸ்வாமியினுடைய உபந்யாஸங்கள் ஒரு திட்டமிட்ட உரையாக(Planned Speech) இருக்கும். தான் என்ன சொல்ல வேண்டும் அதை எப்படிச் சொல்ல வேண்டும் என்பதையெல்லாம் திட்டமிட்டுக் கொண்டு வருவார் காரப்பங்காடு ஸ்வாமி. ஆனால் வேளுக்குடி ஸ்வாமி இந்த நியதியை வைத்துக்கொள்ளவில்லை. அவர் உபந்யாஸம் ஆரம்பிக்கும் முன் அவர் என்ன சொல்லப் போகிறார் என்று அவருக்கே தெரியாது. அவரது உபந்யாஸம் எல்லாம் Extempore speech என்கிற ரீதியில் அமைந்திருக்கும்.உபந்யாஸம் முடிந்த பிறகுதான் திருமாளிகைக்கு சென்று உடனே டைரி எழுதும் பழக்கம் அவருக்கு இருந்தது. டைரியில் எல்லா விவரங்களையும் அவர் எழுதிக் கொள்வார். இப்படிப் பல ஒற்றுமையும் பார்க்கலாம் பல வேற்றுமைகளும் பார்க்கலாம். ஆனால் இருவருடைய உபந்யாஸங்களுமே சிறப்பாக அமையும். இருவருக்கும் உண்டான மற்றொரு ஒற்றுமை பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.அதுதான் உபபாதந ஸாமர்த்தியம். இருவருக்குமே திருஷ்டாந்தம் மூலமாக விஷயங்களை விளக்கிச் சொல்லும் ஸாமர்த்தியம் உண்டு. திருஷ்டாந்தங்களும் சாஸ்திர ஸம்பிரதாயத்தில் இருந்தே எடுத்துச் சொல்வர். நம் வேளுக்குடி ஸ்வாமி ஒரு உபந்யாஸத்தில் முக்கியமான த்ருஷ்டாந்தங்கள் 160க்கும் மேலேதான் குறித்து வைத்துள்ளதாக குறிப்பிடுகிறார். ஸ்வாமி எம்பெருமானாருடைய திவ்ய ஸூக்திகளிலிருந்து காலக்ஷேபத்தில் உபபாதநம் பண்ணிக்காட்டும் சமயத்தில், காரப்பங்காடு பரம்பரையில் வந்த வித்வான்களுக்கு ஒரு தனிச்சிறப்பு உண்டு. இது

மற்றவர்களுக்கு இல்லை என்று அடியேன் கூறவரவில்லை. ஸ்வாமி எம்பெருமானார் திவ்ய ஸூக்திகளிலிருந்து விவரணம் பண்ணும்போது அதில் உண்டான ஆழ்ந்த பொருள்களான சாஸ்திர ஸம்பிரதாய அர்த்தங்கள் பின்னிப்பிணைந்து இருப்பதை மிகவும் நேர்த்தியாக வெளிக்கொணர்ந்து காண்பிப்பது ஒரு தனிச்சிறப்பு. இச்சிறப்பு எவ்வாறு காரப்பங்காடு ஸ்வாமிக்கு அமைந்திருந்ததோ, அவ்வாறே நம் ஸ்வாமிக்கும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. பகவத் விஷயத்தில் ஈட்டுக்கு ஒரு சிறப்பு, அந்த ஈட்டின் தனிப்பெருமையை, அதன் பெருமையும் சிறப்பும் குறையாமல் மிகவும் அழகாக எடுத்துக்காண்பிப்பார் நம் ஸ்வாமி. ஆழ்வாருடைய வைபவத்தையும் பகவானுடைய வைபவத்தோடு சேர்த்து எல்லாரும் அனுபவிக்கும்படி ஸ்வாமியினுடைய உபந்யாஸங்கள் அமைந்திருக்கும். அது ஒரு தனிச்சிறப்பு.

அடியேன் கூறியவாறு, ஸ்ரீமத்பாகவதத்திலும் வீரராகவாச்சார்யார் வியாக்கியானத்திலிருக்கும் சிறப்பையெல்லாம் மிகவும் அனுபவித்து ஆங்காங்கு எடுத்துக் கூறுவார். என்ன காலக்ஷேபமாக இருந்தாலும், அங்கே ஸ்ரீமத்பாகவதம் வரும்; ஸ்ரீராமாயணம் வரும்; ஸ்ரீவிஷ்ணுபுராணமும் வரும்; ஸ்ரீபாஷ்யம் வரும்; பகவத்விஷயம் வரும்; எல்லாம் வரும். இது ஏன் இப்படி வருகிறது என்றால் திருஷ்டாந்த பர்யந்தமாக விஷயங்களை எடுத்துக் கூறுவதால் வருகிறது. திருஷ்டாந்தங்கள் மூலம் அர்த்தங்களை விளக்கிக் கூறுவது காரப்பங்காடு ஸ்வாமியின் பாணி. அதை நன்கு பின்பற்றியவர் நம் வேளுக்குடி ஸ்வாமி. இருவரின் அணுகுமுறையிலும் ஒரு வித்தியாசமும் இல்லை.

காரப்பங்காடு ஸ்வாமிக்கு ஸ்ரீபாஷ்யத்தில் மிகவும் ஈடுபாடு உண்டு. ஸ்வாமியின் திருவுள்ளம் குளிரும்படி மிகவும் அற்புதமாக ஸ்ரீபாஷ்ய உபந்யாஸம் ஸாதிப்பார் நம் வேளுக்குடி ஸ்வாமி. காலக்ஷேபத்தில் விஷயங்களை அதியற்புதமாக விளக்கிச் சொல்வார். இவ்வாறு விஷயங்களை வேறு யாராலும் சொல்ல முடியாது என்று கூறலாம். அந்த அளவுக்கு ரொம்ப அழகாக எடுத்துச் சொல்வார். காரப்பங்காடு ஸ்வாமி சிஷ்யர்களில், காரப்பங்காடு ஸ்வாமிக்கு பிறகு, வேதாந்த காலக்ஷேபம் பண்ணியவர் நம் ஸ்வாமி ஒருவரே என்று கூறலாம். எந்த க்ரந்தத்தை காலக்ஷேபம் செய்து முடிக்கும்பொழுது அந்த க்ரந்தத்தை காலக்ஷேபம் செய்ய தமக்கு யோக்கியதை காரப்பங்காடு ஸ்வாமியுடைய அனுக்கிரகத்தினால்தான் வந்தது என்றும் குறிப்பிடுவார்.

ஸ்ரீ உ.வே.காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமியின் ஷஷ்டிஸப்தபூர்த்தி மலரில் நம் வேளுக்குடி ஸ்வாமி **“வரதன் கண்ட வேங்கடவன்”** என்னும் ஒரு ஆச்சர்யமான கட்டுரையை எழுதியுள்ளார். அதிலே ஸ்ரீ பாஷ்யத்தில் நம் ஸ்வாமி எம்பெருமானார் காட்டியுள்ள ஆசார்ய லக்ஷணங்கள் விஷயமாக சில அர்த்தங்களைக் கொண்டு அவற்றை காரப்பங்காடு ஸ்வாமி வைபவபரமாக நம் வேளுக்குடி ஸ்வாமி எழுதியுள்ளார்.

ஒரு வித்வானுக்கு அழகு என்னவென்றால், நம் பூர்வாசார்யர்கள் ஸ்ரீஸூக்திகளிலேயே ஊன்றியிருக்க வேண்டும். பூர்வாசார்யர்கள் ஸ்ரீஸூக்திகளுக்கு மூலமாய் அமைந்திருப்பதனால்தான், வேதங்களுக்கும், இதிஹாச புராணங்களுக்கும் ,ஆழ்வார் அருளிச்செயல்களுக்கும், ப்ரமாணபா4வமுண்டு என்பதை நாம் அறியலாம். பூர்வாசார்யர்கள் ஸ்ரீஸூக்தி அனுபவத்திற்காகவே இவை அனைத்தும் இருக்கின்றன என்பது ஸம்பிரதாயம் .பூர்வாசார்யர்கள் ஸ்ரீஸூக்திகளை நன்கு உபபாதநம் பண்ணிகாட்டுபவன் தான் வித்வான். காலக்ஷேபத்தில் வித்வான் செய்யக்கூடிய காரியம் இது ஒன்றே. உபபாதந ஸாமர்த்தியம் வித்வானுக்கு மிகவும் ஆவஶ்யகம். இதிலே ஸ்ரீ காரப்பங்காடு ஸ்வாமி மிகவும் சிறந்து விளங்கினார். அவரைப்போலவே நம் வேளுக்குடி ஸ்வாமியும் மிகவும் சிறந்து விளங்கினார். குறிப்பாக ஸ்ரீ பாஷ்யம், பகவத்கீதை காலக்ஷேபம் ஸாதிக்கும்பொழுது ஒரு வித்வான் அவசியம் கடைபிடிக்க வேண்டிய ஒரு க்ரமம் உண்டு. அதாவது பகவத் ப்ரபாவத்தை ஆழ்வார் திருவாய்மொழியில் அத்யாச்சரியமாக வெளியிட்டுள்ளார்.அப்படி வெளியிடும் காலத்தில் ஈட்டில் காட்டப்படும் பகவத்ப்ரபாவத்தோடு ஆழ்வாருடைய ப்ரபாவமும் வந்து சேருகிறது. ஆழ்வாருக்கு உண்டான பெருமை பகவத்விஷய ப்ராவண்யப்ராசுர்யம் என்பதாகும். அதனால் நம்பிள்ளை ஈடு ஒருபக்கம் பகவத்ப்ரபாவம் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்திகளில் எப்படி பிரகாஶிக்கிறது என்பதை காட்டுவதோடு, அதனுடன் சேர்த்து மறுப்பக்கம் ஆழ்வாருக்கு உண்டான பகவத்விஷய ப்ராவண்யப்ராசுர்யம் எப்படி அமைந்திருக்கிறது என்பதையும் காட்டவேண்டும். ஈட்டிலே நம்பிள்ளை இந்த க்ரமத்தை தான் அனுஸரித்துள்ளார். ஈட்டிலுள்ள இந்த தனித்தன்மையை நன்றாக உணர்ந்து அனுபவித்து காலக்ஷேபம் ஸாதிக்கும் பாங்கு காரப்பங்காடு ஸ்வாமியினுடைய காலக்ஷேபத்துக்கு உண்டு. இதைப் போல் நம் வேளுக்குடி ஸ்வாமியும் ஈட்டைக் காலக்ஷேபமாக ஸாதிக்கும்போது அணிதரஸாமர்த்தியம்

வாய்ந்தவராக விளங்கினார் என்று சொன்னால் அதுமிகையாகாது. இதை தனிப்பெருமை என்று கூறினாலும், ஒருவிதத்தில் பார்க்கப் போனால் இதே ஒரு க்ரமத்தை ஸ்ரீவேதவியாஸபகவான் ஸ்ரீமத்பாகவத மஹாபுராணத்தில் காட்டி அருளியுள்ளார். ஸ்ரீமத்பாகவத மஹாபுராணத்தில், பகவத்ப்ரபாவத்தை அருளிச் செய்யும் பொழுது அவ்வப்போது பல பாகவதர்களுடைய ப்ரபாவங்களையும் அவர்களுடைய உன்னதமான சரித்திரங்களையும் ஸ்ரீவேதவியாஸபகவான் காட்டிக் கொண்டே போகிறார். ஸ்ரீவேதவியாஸ பகவான் எவ்வளவோ புராணங்கள் அருளிச் செய்துள்ளார். ஸ்ரீமத்பாகவத மஹாபுராணத்துக்குண்டான பெருமை வேறு எந்த புராணத்திலும் இல்லை என்று சொல்லலாம். மத்ஸ்யபுராணம், பாகவதபுராணம் என்னும் இவ்விரண்டு புராணங்களைக் குறிப்பிடும்போது மட்டும் வடதேசத்தில் உள்ளவர்கள் மத்ஸ்யமகாபுராணம், பாகவதமகாபுராணம் என்று குறிப்பிடுவர். பிரைமரி கமிட்மெண்ட் என்று சொல்வார்களே, அது ஒரு வித்வானுக்கு பூர்வாசார்யர்கள் ஸ்ரீஸூக்தியில்தான் அமையவேண்டும். அது ஒரு வித்வானுக்கு அவசியம் அமையவேண்டிய ஒரு ஸம்ஸ்காரம். இதை பூர்வாசார்யர்கள் குறித்த பாரதந்த்ரியம் என்று சொல்வர்.

வேளுக்குடி ஸ்வாமிக்கிருந்த ஆசார்ய பக்திக்கு எவ்வளவோ எடுத்துக்காட்டுகள் உண்டு . எந்த க்ரந்த காலக்ஷேப சாற்றுமுறையானாலும் தவறாமல் காரப்பங்காடு ஸ்வாமியிடம், தான் அர்த்தக்ரஹணம் பண்ணினது. தான் ஸாதித்த அர்த்தங்களெல்லாம் காரப்பங்காடு ஸ்வாமி ஸாதித்த அர்த்த விஷேஷங்கள் என்று தவறாமல் குறிப்பிட்டு தன்னுடைய க்ருதஜ்ஞதையை காண்பிப்பார். இங்கு அவர் கூறும் வார்த்தைகள் எல்லாம் வேங்கடாசார்ய ஸ்வாமி ஸாதித்தது என்று தனித்தனியாக கூற வேண்டிய அவசியம் இல்லை. ஏனென்றால் அனைத்தும் ஸ்வாமி ஸாதித்தது தான். அதனால் சாத்துமுறையின் போது அக்னாலேஜ்மென்ட் செய்வார். இந்த ஒரு தன்மை தன்னுடைய ஆசார்யனிடம் தனக்கு உண்டான நன்றியுணர்வை தெரிவித்துக் கொள்வதன்றோ!

சின்ன சின்ன விஷயங்களானாலும் மகான்கள் அதில் குறிப்பாக இருப்பர். இதுதான் அவர்களின் சிறப்பு. சின்ன விஷயம் என்று அலட்சிய பா$_4$வத்தில் இருக்க மாட்டார்கள். நம் ஸ்வாமியும் பெரிய மகான், காலம் தப்பாமல் நடந்து கொள்வதில் ஸ்வாமி காலத்தில் ஸ்வாமிக்கு நிகர் யாருமே இல்லை.அடியேன் ஸ்வாமியிடம் ஆயிரம் உபந்யாஸத்திற்கு மேல் கேட்டிருக்கிறேன். அதில் எங்கேனும் ஒரு இடத்தில் கூட யாரையாவது கண்டித்ததோ, யாரையாவது குறை

சொல்வதோ, ஏதேனும் அமங்கலமான அஶுபமான வார்த்தை சொன்னதாகவோ, வியர்த்தமாய் வார்த்தை சொல்வதென்பதோ, வம்பு பேசுவதென்பதோ, இது எதுவும் ஸ்வாமியிடம் காணக்கிடைக்காது.

ஸ்வாமியினுடைய ஆசார்ய பக்திக்கு இன்னுமொரு எடுத்துக்காட்டு கூறுகிறேன். ஸ்வாமி என்றைக்குமே தம் ஆசார்யரான ஸ்வாமி வேங்கடாசார்யாரை அவருடைய திருநாமம் சொல்லி குறிக்கவே மாட்டார். ஸ்வாமி என்பார், காரப்பங்காடு ஸ்வாமி என்பார், ஆனால் வேங்கடாசார்ய ஸ்வாமி என்று சொல்லவே மாட்டார். ஆரம்ப காலத்தில் இருந்து இந்த நியதியை வைத்துக் கொண்டிருந்தார். இந்த உயர்ந்த ஸம்ஸ்காரம் இவரிடம் இருப்பதை, ஒரு சில வித்வான்கள் எப்படியாவது ஸ்வாமியினுடைய திருநாமத்தை வேளுக்குடி ஸ்வாமி சொல்ல வைக்க வேண்டும் என்று முயன்றனர். ஆனால் முயற்சி எதுவும் பலிக்கவில்லை. ஆனால் ஒருநாள் ஸ்வாமியினுடைய அபிப்பிராயத்தில் துரதிஷ்டவசமாக என்ன நடக்கக் கூடாதோ அது நடந்துவிட்டது. ஸ்வாமியினுடைய திருநாமத்தை ஒருநாளும் சொல்லக்கூடாது என்று விரதம் வைத்துக்கொண்டிருந்தார். அவருடைய திருத்தகப்பனார் ஸ்ரீகிருஷ்ணமாச்சாரியாருடைய ஶதாப்தியை விசேஷமாய்க் கொண்டாடினார். அந்த சமயத்தில் பல வித்வான்கள் அவருக்கு மிகவும் நெருங்கியவர்கள் வந்திருந்தனர். ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருக்கையில், எல்லாரும் சேர்ந்து ஒரு விளையாட்டாக பிடிவாதமாய் ஸ்வாமியின் திருநாமத்தை அவர் கூறும்படி பண்ணினர். அவரும் ஸ்வாமியின் திருநாமத்தை சொல்லும்படி நடந்துவிட்டது. அதற்காக மிகவும் வருந்தி குலுங்கி குலுங்கி அழுதார் என்று அவர் திருக்குமாரர் வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமி சொல்வார். தன் தகப்பனாரை இதற்கு முன்பும் இதற்குப் பின்பும் எதற்காகவும் அழுது கண்டதில்லை. வாழ்க்கையில் மிகவும் கஷ்டமான நேரங்களில் கூட இவ்வாறு அழுததில்லை என்று கிருஷ்ணன் கூறுவார். ஸ்வாமி திருநாமத்தை சொல்லும்படி அமைந்துவிட்டதே என்று அது ஒன்றுக்கு மட்டுமே அவர் வாழ்நாளில் அழுதிருக்கிறார்.

காரப்பங்காடு ஸ்வாமிக்கும், வேளுக்குடி ஸ்வாமிக்கும் குரு-சிஷ்ய பா$_4$வம் எவ்வாறு அமைந்திருந்தது என்பதற்கு அடியேன் ஒரு நிகழ்ச்சியை இங்கு விண்ணப்பிக்க விரும்புகிறேன். காரப்பங்காடு ஸ்வாமி 1970வது வருடம் தம்முடைய 66வது நட்சத்திரத்தில் பரமபதித்தார். அது ஆகஸ்ட் மாதம் என்று

நினைவு. அதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு, சித்திரை மாதத்தில் ஸ்வாமி திருமாளிகைக்கு எதிரே கோவில் கொண்டிருக்கும் மாதவனுக்கு பிரஹ்மோத்ஸவம். பிரஹ்மோத்ஸவத்தில் ஒருநாள் காலை கருடவாகன ஸேர்வை. அப்போது அவனை ஸேவிக்க வேண்டும் என்கிற எண்ணத்தில் வேளுக்குடி ஸ்வாமி அங்கே எழுந்தருளினார். ஆனால் உபயகாரர்கள் வருவதற்கு சிறிது தாமதம் ஏற்பட்டது. அதற்குள் காரப்பங்காடு ஸ்வாமியை தெண்டன் ஸமர்ப்பித்து விட்டு வந்துவிடவேண்டும் என்று வேளுக்குடி ஸ்வாமி காரப்பங்காடு ஸ்வாமி திருமாளிகைக்கு எழுந்தருளினார்.

காரப்பங்காடு ஸ்வாமி நோவு சாத்தி கொண்டிருந்தார், படுத்த படுக்கையாய் இருந்தார். காரப்பங்காடு ஸ்வாமியை தண்டம் ஸமர்ப்பித்து விட்டு அப்படியே இருந்தார் வேளுக்குடி ஸ்வாமி. அன்று காரப்பங்காடு ஸ்வாமி திருவுள்ளத்தில் என்ன தோன்றிற்றோ தெரியவில்லை சாஸ்திர ஸம்பிரதாய விஷயங்களை எடுத்துச் சொல்ல வேண்டுமென்று காரப்பங்காடு ஸ்வாமிக்கு தோன்றி வேளுக்குடி ஸ்வாமிக்கு விஷயங்களை ஸாதிக்க ஆரம்பித்துவிட்டார். காலையில் சுமார் ஏழுமணி அளவில் ஆரம்பித்தது மாலை நாலரைமணிக்கு தான் முடிந்தது. காரப்பங்காடு ஸ்வாமி சில நேரம் படுத்துக்கொண்டும், சில நேரம் உட்கார்ந்தும் விஷயங்களை சொல்லிக் கொண்டே வந்தார். இருவரும் தீர்த்தம் கூட அருளவில்லை, ப்ரசாதம் ஸ்வீகரிக்கவில்லை, ஒன்றும் பண்ணாமல் ஸ்வாமி விஷயங்களை சிலசமயம் படுத்தும் சில சமயம் உட்கார்ந்தும் ஸாதிக்கிறார், வேளுக்குடி ஸ்வாமி நின்றுகொண்டே கேட்கிறார். இடைவிடாமல் காலை ஏழுமணி முதல் மாலை ஐந்துமணி வரைக்கும் இடைவிடாமல் விஷயங்களை தொடர்ந்து வேளுக்குடி ஸ்வாமிக்கு சிக்ஷித்தார் காரப்பங்காடு ஸ்வாமி. பின் மாலை ஒரு நான்கரை மணிக்கு மேல் ஸன்னிதிக்குச் சென்று மாதவனை ஸேவித்துவிட்டு தனது திருமாளிகைக்கு எழுந்தருளினார் வேளுக்குடி ஸ்வாமி. இதை அடியேனுடைய மாமா ஸ்ரீமான் உ.வே.பார்த்தசாரதி அய்யங்கார் ஸ்வாமி அடியேனுக்குத் தெரிவித்தார். ரொம்ப ஆச்சர்யமான விஷயம்! சாஸ்திரஸம்பிரதாய விஷயங்களில் எவ்வளவு ஊற்றம் இருந்தால் தன் கடைசி காலத்திலும் திருமேனி நோவு சாத்திக்கொண்டிருந்த காலத்திலும் காரப்பங்காடு ஸ்வாமி மணிக்கணக்காக தம்முடைய பிரதான சிஷ்யருக்கு அர்த்தங்களை ஸாதிப்பார். அதை அவ்வளவு ஶ்ரத்தையோடு காலை முதல் மாலை வரை நின்றுகொண்டே அத்தனை விஷயங்களையும் க்ரகித்துக்

கொண்டார் வேளுக்குடி ஸ்வாமி. இருவரும் அன்னபானாதிகள் ஒன்றும் ஸ்வீகரிக்காமலும் ஓய்வுகூட எடுக்காமலும் காரப்பங்காடு ஸ்வாமி விஷயங்களை சொல்வதும், வேளுக்குடி ஸ்வாமி க்ரகிப்பதும், இப்படி ஒரு நிகழ்ச்சி எங்குமே நடந்திருக்காது.

ஸ்வாமி தம்முடைய சிஷ்யர்கள் அனைவரையுமே தம்முடைய திருக்குமாரர்களாகவே பா4வித்து அர்த்தங்களை ஸாதித்து வந்தார். அதிலே வேளுக்குடி ஸ்வாமி காரப்பங்காடு ஸ்வாமி திருமாளிகையில், ஸ்வாமி குடும்பத்தில் ஒருவராகவே பழகி வந்தார் இறுதிவரைக்கும். வேளுக்குடி ஸ்வாமிக்கு பெண்பார்த்து திருமணம் செய்துவைத்ததே காரப்பங்காடு ஸ்வாமி தான். இந்தப் பெண்ணைத்தான் திருமணம் பண்ணிக் கொள்ளவேண்டும் என்று நிர்பந்தித்து கல்யாணம் செய்து வைத்ததாக கூறுவர். அடியேன் ஸமீபத்தில் ஸ்ரீவைஷ்ணவ ரத்னமாலா என்கிற புத்தகத்தை வெளியிட்ட பிறகு, அடியேன் தம்பி மூலமாக ஹேமலதா ரமாமணி என்பவருக்கு அனுப்பி வைத்தேன். இந்த ஹேமலதா ரமாமணி என்பவர் யார் என்றால், ஸ்ரீ உ.வே.காரப்பங்காடு வேங்கடாசார்யார் ஸ்வாமி வைபவத்தில் அடியேன் பத்மாசினி அம்மையார் என்று ஒருவரை குறிப்பிட்டிருந்தேன். அவருடைய மருமகள்தான் இவர். ரமாமணி என்பவர் அந்த காலத்தில் மிகவும் பிரஸித்தராய் இன்கம்டாக்ஸ் லாயராக இருந்து வந்தவர். இன்று அந்த ஹேமலதா ரமாமணி அம்மையாருக்கு 91 திருநட்சத்திரங்கள் நடைபெற்று வருகிறது. அடியேனுடைய தம்பி இவரை தெண்டனிட்டு இந்தப் புத்தகத்தை கொடுத்தபோது அந்த அம்மையார் மிகவும் ஸந்தோஷப்பட்டார். அப்பொழுது ஒரு விஷயம் கூறினார். அதாவது டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலையில், கல்யாணி நர்சிங் ஹோம் ஒன்று இருக்கிறது, பழைய காலத்து நர்சிங் ஹோம். அதற்கு எதிரே தான் இந்த அம்மையார் இல்லம் 4 மாடி கட்டிடம் இருந்தது. அங்கேதான் இவர் இருந்தார். வேளுக்குடி ஸ்வாமியின் தேவிகள், வேளுக்குடி கிருஷ்ணன் ஸ்வாமியை இந்த கல்யாணி மருத்துவமனையில் தான் பிரசவித்தார். அந்த காலத்தில் காரப்பங்காடு ஸ்வாமியின் தேவிகள் இந்த ஹேமலதா ரமாமணி அவர்களுடைய கிரகத்தில் பத்தியசாப்பாடு செய்து கொண்டு கல்யாணி மருத்துவமனையில் படுத்துக்கொண்டிருந்த வேளுக்குடி ஸ்வாமியின் தேவிகளுக்கு கொடுத்து வந்தார். என்னுடைய கிரகத்திலிருந்து தான் வேளுக்குடி ஸ்வாமி தேவிகளுக்கு உணவு செல்லும். அதை உங்கள் பாட்டிதான் பத்தியசாப்பாடு செய்து எடுத்துச்

செல்வார் என்று அவர் அடியேனுக்குத் தெரியப்படுத்தினார். இதனாலேயே காரப்பங்காடு ஸ்வாமி குடும்பத்தினருக்கும் வேளுக்குடி ஸ்வாமிக்கும் எப்பேர்பட்ட உறவுமுறை இருந்தது என்பதை நாம் அறியலாம்.

எப்பொழுது காரப்பங்காடு ஸ்வாமி திருமாளிகைக்கு எழுந்தருளினாலும், காரப்பங்காடு ஸ்வாமி காலத்திற்குப் பின்னும் கூட திருமாளிகையில் இருக்கும் ஒவ்வொரு அறைக்கும் செல்வார். திருமாளிகையின் ஆரம்பத்திலேயே காரப்பங்காடு சிங்கப்பெருமாள் ஸ்வாமி படம் உண்டு. அவரை நாங்கள் கொள்தாத்தா என்று அழைப்போம். அவருடைய படம் பெரியதாய் இருக்கும், வேளுக்குடி ஸ்வாமி அங்கே சென்று ஸேவிப்பார். பெருமாள் அரைக்குச் சென்று ஸேவிப்பார், எங்களுடைய பாட்டி எங்கே இருப்பாரோ அங்கே போய் ஸேவிப்பார். திருமாளிகையில் ஒவ்வொரு அறைக்கும் சென்று அங்கு இருப்பவரிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டு வருவார். ஒருமுறை இப்படித்தான் காரப்பங்காடு ஸ்வாமி திருமாளிகைக்கு வேளுக்குடி ஸ்வாமி எழுந்தருளி இருக்கிறார். யாருமில்லை, ஏகாந்தமாய் மடைப்பள்ளியில் எங்கள் பாட்டி தளிகை பண்ணிக்கொண்டு இருந்தார். இவர் போய் அப்படியே பின்னே நிற்கிறாராம். இவர் வந்ததே தெரியாது பாட்டிக்கு. பாட்டியை தொந்தரவு செய்யக்கூடாது என்று ஒரு ஓரமாய் நின்று கொண்டிருந்தாராம். பாட்டி தளிகைப் பண்ணிக்கொண்டிருக்கிறார். சிறிது நேரத்திற்குப் பின், பாட்டி திரும்பியபோது வேளுக்குடி ஸ்வாமியை பார்த்து ஸ்தம்பித்து விட்டார். நீங்கள் வந்ததே தெரியவில்லை என்றாராம். அதற்கு வேளுக்குடி ஸ்வாமி, 'தேவரீர் பெருமாளுக்கு தளிகை ஸமர்ப்பிப்பது, தளிகை பண்ணுவது, ரொம்ப ஆச்சர்யமாக இருக்கு, தளிகை வாசனை கமகம என்று வருகிறது, ரொம்ப ஶ்ரத்தையாக பண்ணுகிறீர் என்று அதை எதற்கு குலைக்கவேண்டும் என்று நான் ஒரு ஓரமாய் நின்று தேவரீர் பண்ணும் கைங்கர்யத்தை பார்த்து அனுபவித்துக்கொண்டிருந்தேன்' என்று சிரித்துக்கொண்டே கூறினாராம். பெருமாளுக்கு தளிகை ஆகிவிடும் திருவாராதனம் முடிந்ததும் இருந்து சாப்பிடுமாறு எங்கள் பாட்டி கூறினாராம். அப்போது சாப்பிட்டு விட்டு சென்றாரா என்பது தெரியவில்லை.

ஆகாரத்தில் மிகவும் நியமத்துடன் இருப்பார் நம் ஸ்வாமி. இன்று நாம் இருக்கும் நிலையே வேறு சின்ன விஷயமா இருந்தாலும் சின்ன விஷயம் தானே என்று நாம் இருந்து விடுவோம். ஆனால் மகான்களுடைய நிலையே வேறு. அவர்களுக்கு சின்ன விஷயங்களும் பெரிய விஷயங்கள் தான். எல்லாவற்றிலும்

மகான்களுக்கு நிஷ்டை உண்டு. ஸ்வாமி ஆகாரத்தில் மிகவும் நிஷ்டையுடன் வாழ்ந்து வந்தவர். ஸன்னிதிகளில் ஆங்காங்கே பல அநாச்சாரங்கள் சேர்ந்து விட்டபடியால் ஆசாரக் குறைவு ஏற்படுமாதலால் அங்கே ப்ரசாதம் ஸ்வீகரிக்கணும் என்கிற அவசியம் ஏற்பட்ட காலத்தில் எவ்வளவு அவசியமோ அவ்வளவே ஸ்வீகரிப்பர்.

தற்போது ஸ்ரீபெரும்புதூரில் எம்பார் ஜீயர் ஸ்வாமியாய் எழுந்தருளியிருக்கும் ஜீயர் ஸ்வாமி, பூர்வாசிரமத்தில் குமாரவாடி ராமானுஜாசார்யார் ஸ்வாமியாக மிகவும் ப்ரசித்தியுடன் எழுந்தருளி இருந்தவர். காரப்பங்காடு ஸ்வாமிக்கும் மிகவும் நெருங்கியவராய் இருந்தார். அவர் ஒருமுறை அடியேனிடம் ஸாதித்த விஷயத்தை இங்கு வாசக அன்பர்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். அவர் கூறினார் 'அடியேனுக்கு வேளுக்குடி ஸ்வாமியுடன் அவ்வப்போது சில விஷயங்களில் விவாதங்கள் வருவதுண்டு. அவருடன் பல விஷயங்களில் அடியேன் சர்ச்சையில் இறங்கி இருக்கிறேன். எங்களுக்குள் அபிப்ராய பேதங்கள் உண்டு, இருந்தாலும் எங்களுக்குள் என்றைக்குமே சௌஜன்யபங்கம் ஏற்படவில்லை. வேளுக்குடி ஸ்வாமி மிகவும் பெரியவர். அவருடைய வாக்வைபவம் அத்யாச்சர்யமானது. எல்லாரையும் கவரும் விதத்தில் மிக எளிமையாக ஸம்ப்ரதாய அர்த்தங்களை எல்லாம் எடுத்துச் சொல்லும் திறமை அவரிடம் இருந்தது. அடியேன் கிராமங்களில் பல நிகழ்ச்சிகள் நடத்தும்போது வேளுக்குடி ஸ்வாமியையும் அழைத்துச் செல்லும் வழக்கம் உண்டு.எந்த கிராமமாக இருந்தாலும், எந்த இடமாக இருந்தாலும், எவ்வளவு அஸௌகரியங்கள் இருந்தாலும் வேளுக்குடி ஸ்வாமி மறுத்து ஒரு வார்த்தை கூறியது கிடையாது. எங்கு அழைத்துக் கொண்டு போனாலும் வருவார். அவருக்கு பாதரட்சை போட்டுக்கொள்ளும் பழக்கம் கிடையாது. அவருக்கு கார்வசதி செய்துதரும் அளவுக்கு என்னால் இயலாது. அடியேனுடன் பேருந்தில் எங்கேயானாலும் கூட ப்ரயாணம் செய்வார். சிறிதும் முகத்தில் வாட்டமும் அதிருப்தியும் காண இயலாது. ரொம்ப ஸந்தோஷமாய் எந்த அஸௌகரியமும் பொருட்படுத்தாமல் என் கூட வந்து நிகழ்ச்சியை நன்கு நடத்திக் கொடுப்பார். அவர் வந்தால் ஶ்ரோதாகளுக்கும், கிராமத்து ஜனங்களுக்கும் ரொம்ப ஸந்தோஷமாக இருக்கும். அவருடைய தோற்றப் பொலிவு எல்லாரையும் கவரும். அவர் வந்து உபந்யாஸம் பண்ணுவதை கிராமத்து ஜனங்கள் ரொம்ப

பெரிய பாக்கியமாக கருதி கொண்டாடியதுண்டு. இது குமாரவாடி ஸ்வாமி அடியேனுக்கு ஸாதித்த விஷயம்.

தம்மைப் பற்றிச் ஸ்வாமி காலக்ஷேபங்களில் சில ரசமான விஷயங்களைச் சொல்லுவதுண்டு. அதில் ஒரு சிலவற்றை இப்போது குறிப்பிடுகிறேன். ஸ்வாமிக்கு முதன்முதல் உபந்யாஸம் மயிலை ஸ்ரீமாதவன் ஸன்னிதியிலே. காரப்பங்காடு ஸ்வாமி திருப்பாவை காலக்ஷேபங்கள் நடந்துகொண்டிருந்தன. அப்போது ஒருநாள், திருப்பாவையிலிருந்து ஏதாவது ஒரு விஷயம் எடுத்து உன்னுடைய உபந்யாஸ கைங்கர்யத்தை ஆரம்பித்துக் கொள்ள வேண்டும். ஒரு நாள் நான் சொல்கிறேன் தயாராக இரும். நீரும் விஷயங்கள் ஸாதிக்கணும் அப்படின்னு காரப்பங்காடு ஸ்வாமி கூறியிருந்தார். என்னவென்று காரப்பங்காடு ஸ்வாமி கூறவில்லை. மறுநாளே திடீரென்று காரப்பங்காடு ஸ்வாமி திருப்பாவை காலக்ஷேபத்தில், 'இப்போது நம் வேளுக்குடி ஸ்வாமி சில விஷயங்கள் இங்கே விண்ணப்பம் செய்வார்' என்று கூறிவிட்டார் வேளுக்குடி ஸ்வாமி இதை எதிர்பார்க்கவில்லை தயாராகவும் இல்லை. கோதையும் கண்ணனும் என்கிற தலைப்பில் வேளுக்குடி ஸ்வாமி காரப்பங்காடு ஸ்வாமி திருமுன்பு சில விஷயங்களை ஸாதித்தார். முதல் உபந்யாஸமே Extempore speech ஆக அமைந்தது. வேளுக்குடி ஸ்வாமி தயாராகவே வரவில்லை, பூர்வ-அவரோஹணம் செய்யாமலேயே முதல் உபந்யாஸம் அமைந்தது. பிற்காலத்தில் சில சமய விஷேஷங்களில் அவருக்கே தான் உபந்யாஸத்தில் என்ன ஸாதிக்கப் போகிறோம் என்று தெரியாது. கொடுக்கப்பட்ட தலைப்புக்கு ஏற்றாப்போல் விஷங்களை கொட்டுவர். பிறகு திருமாளிகைச் சென்றபின் உபந்யாஸம் என்ன தலைப்பு, அங்கு என்ன விசேஷம், யார் யார் பெரியவர்கள் வந்திருந்தார்கள், அங்கு என்ன விஷயங்கள் ஸாதித்கப்பட்டன என்று எல்லாவற்றையும் டைரியில் குறிப்பு எழுதி வைப்பார். அப்படி இவருடைய உபந்யாஸங்கள் Extempore speech ஆக அமைந்திருந்தது. காரப்பங்காடு ஸ்வாமி உபந்யாஸங்களில் பலவிடங்களில் தாத்தா இப்படிச் சொல்வார் என்று அடிக்கடி கூறுவார். தாத்தா ஒரு நித்தியசூரி, ஒரு நித்தியசூரியை பெற்றிருப்பது விசேஷம் என்று காரப்பங்காடு ஸ்வாமி அடிக்கடி சொல்லுவார், என்று வேளுக்குடி ஸ்வாமி ஸாதிப்பர். இங்கு தாத்தா என்று குறிப்பிடுவது சிங்கபெருமாள் ஸ்வாமியை.

மேட்டூரில் நடந்த ஒரு ஸ்ரீராமாயண உபந்யாஸம், ஸ்வாமி திரு உள்ளத்தில் அப்படியே நின்றுவிட்டது. அதைப்பற்றி சிறிது தெரிவிக்கிறேன்.

மேட்டூரில், ஒன்பது நாட்கள் நமது ஸ்வாமியினுடைய ஸ்ரீராமாயண உபந்யாஸம் நடந்து கொண்டிருந்தது. அதற்கு அங்கிருந்த ஸ்மார்த்தர்கள் பலரும் வந்திருந்தனர். அவர்கள் நம்முடைய ஸ்வாமியினுடைய உபந்யாஸம் மிக ஆச்சர்யமாக இருப்பதை கண்டு களித்தனர். அவர்களில் சிலர், அவர்களிலேயே அவர்கள் ஸம்பிரதாயத்தை சேர்ந்த ஒரு மகாவித்வானை அணுகி, 'இங்கே வேளுக்குடி வரதாச்சார்யார் என்று ஒரு ஸ்ரீவைஷ்ணவர் வந்திருக்கிறார் மிக அற்புதமாக ஸ்ரீராமாயண உபந்யாஸம் ஸாதிக்கிறார். நீங்கள் ஒரு நாள் அவருடைய உபந்யாஸதிற்கு வந்திருந்து கேட்டு உங்கள் அபிப்ராயத்தை தெரிவிக்க வேண்டும்' என்று அவரிடம் பிரார்த்தித்தனர். அவரும் வந்தார் உபந்யாஸத்தைக் கேட்டார், கேட்டபிறகு, 'நீங்கள் கூறுவதைப் போல இவருடைய உபந்யாஸம் மிகவும் அற்புதமாகவும் ஆச்சர்யமாகவும், மிகவும் ஆனந்தத்தை கொடுப்பதாகவும் அமைந்திருக்கிறது. ஆனால் இது ஆச்சர்யம் அன்று, இவர் இவ்வாறு அர்த்த விசேஷங்களை பொழிவதற்கு காரணம், இவருடைய பூர்வாசார்யர்கள், அவர்களுடைய க்ரந்தங்களில் காட்டிச் சென்ற அர்த்த விசேஷங்களே ஆகும். அதுதான் மிக மிக ஆச்சர்யம்' என்று சொன்னார். இதைக்கேட்ட நம் வேளுக்குடி ஸ்வாமி மிகவும் ஸந்தோஷப்பட்டார். நம்முடைய ஸம்பிரதாயத்தை சேர்ந்தவர் அல்லாத ஒருவர் நம்முடைய பூர்வாசார்யர்கள் பெருமையை தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்பது தான் நம்முடைய ஸ்வாமியினுடைய ஸந்தோஷத்திற்கு காரணம். இந்த நிகழ்ச்சி ஸ்வாமி திருவுள்ளத்தில் அப்படியே நிலைத்து நின்றுவிட்டது. ஸ்வாமி தம்முடைய உபந்யாஸங்களில் பலமுறை இந்நிகழ்ச்சியை குறிப்பிட்டுள்ளார். இதைப்போன்று நம் ஸ்வாமி மற்றொரு நிகழ்ச்சியும் தம் உபந்யாஸத்தில் அடிக்கடி சொல்வார். அதாவது அகோபில மடத்தின் ஆதரவில் கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ.வே. இஞ்சிமேட்டு அழகியசிங்கர் திருமுன்பே ஸ்ரீபாஷ்ய வாக்கியஸதஸ் ஒன்று நடந்தது. அதற்காக நம் வேளுக்குடி ஸ்வாமி அங்கு எழுந்தருளி இருந்தார். வேளுக்குடி ஸ்வாமி வாக்கியார்த்தம் சொல்ல சமயம் நேரிட்ட போது அழகியசிங்கர் எந்த விஷயம் பற்றி பேச வந்திருக்கிறீர்கள் என்று கேட்டார். அதற்கு நம் ஸ்வாமி ஸர்வத்ரப்ரஸித்த்$_4$யதிகரணம் பற்றி விண்ணப்பிக்க வந்துள்ளேன் என்று சொன்னார். ஸர்வத்ரப்ரஸித்$_4$யதியாக வேண்டும் என்று திருவுள்ளமோ என்று சிரித்துக்கொண்டே இஞ்சிமேட்டுஅழகியசிங்கர் சொன்னார். அவர் மிகபெரிய, ஞானியும் தவஸ்வியுமானதால் அவருடைய திருவாக்கு நன்கு

பலித்தது. காரப்பங்காடு ஸ்வாமி காலத்திற்கு பிறகு, காரப்பங்காடு ஸ்வாமி சிஷ்யர்களில் வேதாந்த காலக்ஷேபம் பண்ணியவர் நம் ஸ்வாமி ஒருவரே. இதுவும் நம் வேளுக்குடி ஸ்வாமிக்கு ஒரு சிறப்பு. காரப்பங்காடு ஸ்வாமி தம்முடைய ஸ்ரீகோசங்களில் சிறுகுறிப்பு எழுதிவைத்து கொள்வதுண்டு. குறிப்புகள் தவிர ஆங்காங்கே பங்த்திகள் பக்கத்தில் ஒன்று இரண்டு மூன்று என்று காரப்பங்காடு ஸ்வாமி குறித்து வைத்துக் கொள்வார். அந்த இடங்களிலெல்லாம் இரண்டு மூன்று என்று எழுதி இருந்தால் மூன்று விஷயங்கள் சொல்ல வேண்டும்; 1,2 என்றால் இரண்டு விஷயங்கள் சொல்ல வேண்டும் என்பதற்காக அப்படி ஒருவிதமாக எழுதியிருப்பார். ஆனால் வேளுக்குடி ஸ்வாமி குறிப்புகளாகவே எழுதிக் கொண்டு வருவார். புத்தகத்தில் இப்படி அவர் எழுதி வைத்துள்ள குறிப்புகள் ஏராளம். எங்கேயும் அர்த்தங்கள் விட்டுப் போய்விடக் கூடாது. நம்முடைய பூர்வாசார்யர்கள், அவரவர் வழிவந்த பெரிய மகான்கள், மகரிஷிகள், ஆழ்வார்கள், இவர்களெல்லாம் ஸாதித்த அர்த்தங்கள் விசேஷங்கள் ஜீவிக்க வேணும். நான்குபேருக்கு எடுத்துக் கூறும் போது தான் அர்த்தங்கள் ஜீவிக்கும். அதற்காக அந்த பகுதிகள் வரும்போது அர்த்தங்களைச் சொல்வர் ஸ்வாமி. எந்த சாஸ்த்ரார்தமாய் இருந்தாலும் சரி, எந்த ஸம்பிரதாய அர்த்தமாக இருந்தாலும் சரி, எடுத்துச் சொல்லி அனுபவிக்கிற காலத்தில்தான் அந்த சாஸ்த்திரம் ஸம்பிரதாயத்திற்கு ஒரு ஜீவனம் ஏற்படும். இதில் மிகவும் குறிப்பாக இருப்பார் ஸ்வாமி. அந்தந்த இடத்துக்கு தகுந்த மாதிரி எந்த அர்த்தமும் விட்டு போய்விடக்கூடாது என்பதிலே மிகவும் குறிப்பாக இருப்பார் ஸ்வாமி. அதனால் தான் எல்லாவற்றையும் ஒரு நோட்புக்கில் குறித்து எழுதி வைத்துக் கொள்வார். திருப்பாவை ஒவ்வொரு பாசுரத்திலும் சொல்ல வேண்டிய அர்த்தங்களை எல்லாம் சங்க்$_3$ரஹமாய் குறிப்பு எடுத்து வைத்துக் கொள்வார் ஸ்வாமி. அனைத்தையும் குறிப்பு எடுத்து வைத்துக் கொண்டு ஆங்கிலத்தில் சினாப்ஸிஸ் என்று சொல்வதைப் போல் ஒரு அர்த்தம் கூட விட்டுப் போகாமல் எல்லாவற்றையும் தவறாமல் கூறுவார்.

திருப்பாவை 30 பாசுரங்கள். ஒவ்வொரு பாசுரத்திற்கும் மூன்று மஹாச்சாரியர்களுடைய நான்கு வியாக்கியானம். எவ்வளவோ அர்த்தங்கள் அந்த வியாக்கியானங்களில் காட்டப்பட்டுள்ளன. அந்த வியாக்யான பங்த்திகளுக்கு பின்னணியில் எவ்வளவோ சாஸ்திர ஸம்பிரதாய வசனங்கள் இருக்கின்றன. எவ்வளவோ சாஸ்திர வசனங்கள் இருக்கு, எவ்வளவோ

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் இருக்கின்றன, எல்லாம் விட்டுப் போகாமல் எடுத்து சொல்வார். இவ்வாறு விட்டுப் போகாமல் கூறினால் தான் ஒரு திருப்பாவை பாசுரத்தின் அர்த்தத்தை முழுமையாக கூற இயலும்.மார்கழி மாதம் வந்தது என்றால் நம் ஸ்வாமி ஓரிடத்தில் மட்டும் சொல்லமாட்டார், இரண்டு மூன்று இடங்களில் உபந்யாஸம் சொல்லுவார். ஒரு வருடம் நான்கு இடங்களில் உபந்யாஸம் செய்ததாக கேள்விப்பட்டேன். எதற்கு இத்தனை இடங்களில் கூறுகிறார் என்றால் ஒரே உபந்யாஸத்தில் அனைத்து அர்த்தங்களையும் சொல்ல அவகாசம் இருக்காது. அதனால் காலை உபந்யாஸத்தில் சில அர்த்தங்களை சொல்வார் மற்ற அர்த்தங்களை ஸங்க்₃ரஹமாய் கூறிவிட்டு, பின் மதியம் நடக்கும் உபந்யாஸத்தில் சில அர்த்தங்களை சொல்வார், அதேபோல் மாலை உபந்யாஸத்தில் இன்னும் சில அர்த்த விசேஷங்களை கூறி அன்றைய நாள் பாசுரத்தின் அனைத்து அர்த்தங்களையும் கூறி விடுவர். ஒரு நீளமான நோட்புக்கில் குறுக்கே மூன்று கோடு போட்டுக்கொண்டு காலை மதியம் மாலை அன்றைக்கு காலையில் நடந்த உபந்யாஸத்தில் என்ன அர்த்தங்கள் கூறினார், அதே போல் மதியம் கூறியது, பின் மாலை கூறியது என்று அன்றைக்கே குறிப்பு எழுதி வைத்துக் கொள்வார். அவரிடமிருந்த இன்னொரு சிறப்பு இந்த டைரி பராமரித்து வந்தது. என்ன உபந்யாஸமாய் இருந்தாலும் அதன் தலைப்பு என்ன, அந்த உபந்யாஸத்தில் என்ன விஷயம் சொன்னார், அங்கு யார் யார் வந்திருந்தார்கள், என்ன விசேஷம், அந்த க்ரஹத்தில் என்ன விசேஷமாய் நடந்தது, யாரோடு வார்த்தை பரிமாற்றம் செய்யுமாறு அமைந்தது, யாரிடம் என்ன விஷயம் தெரிந்து கொண்டார், எந்த விதத்தில் பார்த்துக் கொண்டார்கள் என்று அனைத்தையும் டைரியில் எழுதுவார். ஸ்வாமி வாழ்க்கையில் நடந்த எந்த நிகழ்ச்சியையும் டைரியில் குறிப்பிடாமல் விட்டு போனது என்பது கிடையாது.

என்ன காலக்ஷேபமாக இருந்தாலும் முமுக்ஷுப்படி, ஸ்ரீ பாஷ்யம், பகவத்விஷயம் காலக்ஷேபமாக இருந்தாலும் எத்தனை நாள் நடந்தது என்று குறித்து வைப்பார். இதுவரைக்கும் 325 உபந்யாஸங்கள் ஆகியிருக்கு, இதுவரைக்கும் 500 ஆகியிருக்கு, என்று சொல்லுவார். இதைப்போன்று எந்த ஸ்ரீகோசமாய் இருந்தாலும் சரி, அதில் முக்கியமாக கூறப்பட்டுள்ள அர்த்தம், அதை வெளிக் கொணர்ந்து காண்பிக்க வேண்டும் என்றால் அதை உடனே ஸ்ரீகோசத்தின் பின் பக்கம் எழுதி விடுவர்.

ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபனாசார்யராய் என்று நாம் ஸ்ரீவைஷ்ணவர்களை சிறப்பித்துக் கூறுகிறோம். இந்த இடத்தில் வேதமார்கம் என்பது என்ன என்பதை பிள்ளைலோகம் ஜீயர் **'ராமானுஜாசாரிய திவ்யசரிதை'** என்னும் க்ரந்தத்தில் குறித்துள்ளார். சரணாகதி மார்க்கம்தான் வேத மார்க்கம் என்பதை நாம் இங்கே சாரமாக அறியலாம். இது இந்த க்ரந்தத்தில் உள்ள ஒரு அபூர்வமான விஷயம் ஆகும். இதைப் போன்று ந்யாயஸிம் தாஞ்சனத்திற்கு ரத்னபேடிகா என்று ஒரு வியாக்கியானம் உள்ளது. அதில் பத்னீத்துவம் என்றால் என்ன என்று விளக்கப்படுகிறது. இது இந்த க்ரந்தத்திலுள்ள ஒரு அபூர்வமான விஷயம். பதி செய்யும் தர்ம காரியங்களுக்கு உடந்தையாய் இருப்பதுதான் பத்னீத்துவம் என்பது. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரத்திலே வேதாந்தாச்சார்யார் மூலமந்திராதிகாரத்தில் திருமந்திரம் தாரகம், த்வயம் போஷகம், சரமஶ்லோகம் போக்யம் என்னும் ஒரு அர்த்தத்தை காட்டியருளியுள்ளார். இது இந்த க்ரந்தத்தில் காணப்படும் ஒரு அபூர்வமான விஷயம். இவ்வாறு ஒவ்வொரு க்ரந்தத்தில் காணப்படும் அபூர்வமான விஷயங்களை எடுத்துரைப்பது நம் வேளுக்குடி ஸ்வாமியின் சிறப்பியல்புகளில் ஒன்றாகும். இப்படி க்ரந்தங்களில் ஆங்காங்கே காணும் விஷயங்களை எடுத்துரைக்க வேண்டும் என்றிருப்பவற்றை பின்னால் குறிப்பெடுத்து வைத்துக் கொண்டு சமயம் வரும்போது அதை வெளிக் கொணர்ந்து காண்பிப்பது நமது ஸ்வாமியின் சிறப்பு இயல்பாகும். இதைப் போன்று முமுக்ஷுப்படி, தத்வத்ரயம், ஸ்ரீவசனபூஷணம், ஆசார்யஹ்ருதயம் இந்த நான்கு ரகசிய க்ரந்தங்களில், அவற்றிலே காணப்படும் மூல சூர்ணிகைகளை உதாஹரிக்க வேண்டுமென்றால் ,உடனே அதற்குண்டான மாமுனிகளுடைய வியாக்கியானத்தையும் பங்க்தி ஸேவித்து வாசித்து காண்பிப்பார். இது தவறாமல் வேளுக்குடி ஸ்வாமி பின்பற்றும் வழக்கமாகும். இந்த நான்கு க்ரந்தங்களுக்குண்டான மாமுனிகளின் வியாக்கியானத்தின் ஒரு முக்கியத்துவத்தை ஸ்வாமி சிற்சில சமயங்களில் வலியுறுத்தி கூறுவதுண்டு. அதாவது இந்த நான்கு ரகசியக்ரந்தங்களில் மணவாளமாமுனிகளுடைய வியாக்கியானத்தை ஒருவன் ஒரு ஆசார்யன் கீழ் அடிபணிந்து பயின்றான் என்றால் அவனுக்கு அவசியம் தெரிய வேண்டிய சாஸ்திர ஸம்பிரதாயார்த்தங்களெல்லாம் புலப்பட்டு விடும் என்பதே அது.

ஸ்ரீபாஷ்யத்தை ப்ரவசனம் செய்யும் காலத்திலும், சாஸ்திர ஸம்பிரதாயம் வல்ல பெரியோர் அனுசரிக்கும் க்ரமம் ஒன்று உண்டு. சாஸ்திர

ஸம்பிரதாய அர்த்த விசேஷங்களை ஒருசேர காண்பித்துக் கொண்டு போகிறார் நம் ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யாதிக்ரந்தங்களிலே. ஆங்காங்கே ஸ்ரீபாஷ்யபங்க்திளுக்கும், சாஸ்திர வசனங்களுக்கும், ஆழ்வார்கள் ஆசார்யர்களுடைய ஸ்ரீஸூக்திகளுக்கும் உள்ள பொருத்தத்தை காண்பிக்கவேண்டும். ஸ்ரீபாஷ்யம் என்பது கேவலம் சாஸ்திர மரியாதைக்கு மட்டும் சேர்ந்ததன்று. நம்முடைய ஸம்பிரதாயத்தின் உயிர்நாடியான அர்த்தவிசேஷங்களை பலவிடங்களில் நம் ஸ்வாமி காட்டியருளியுள்ளார். நமக்கு பரம வைதிகமான விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் எப்படி அநாதிஸித்தமோ அப்படியே ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயமும். இப்படி சாஸ்திர ஸம்பிரதாயம் இரண்டும் ஸ்வாமி எம்பெருமானாரின் ஸ்ரீஸூக்திககளில் நன்கு பிரகாசிப்பதை நாம் காணலாம். இதை வெளிப்படுத்திக்காட்டும் ஒரு ஸாமர்த்தியம், ஒரு அழகு நம் ஸ்வாமிக்கு உண்டு. வேளுக்குடி ஸ்வாமியுடைய ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபங்கள் சில, ஒலி நாடாக்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவற்றை நாம் அனுபவிக்கும் காலத்தில், அந்த ஸ்ரீபாஷ்யம் ரசம் மாறாதபடி மிகவும் அழகாக ப்ரவசனம் பண்ணும் ஸாமர்த்தியம் நம் ஸ்வாமிக்கு அமைந்திருப்பதை நாம் ஆச்சர்யமாக அனுபவிக்கலாம்.

ஆங்காங்கே பக்தியின் பல்வேறு அம்சங்களை அனுபவிப்பதில் ஸ்வாமி எம்பெருமானாருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. பல்வேறு ஸ்ரீவசனங்களை எடுத்துக்கொண்டு அவற்றில் பக்தியின் அம்சங்கள் எப்படி சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை ஸ்ரீபாஷ்யம் வேதார்த்த ஸங்க்ரஹம் என்ற க்ரந்தங்களிலெல்லாம் காட்டியருளினார் ஸ்வாமி எம்பெருமானார். அந்த க4ட்டங்களிலெல்லாம் பிற ஆழ்வார்களுடைய பெருமை என்ன, நம்மாழ்வாருடைய பெருமை என்ன, இவருக்குண்டான பகவத் பக்தியின் விசேஷ அம்சங்கள் யாவை? சாஸ்திரம் ஸம்பிரதாயம் இவற்றுடன் எப்படி பின்னிப் பிணைந்து இருக்கின்றன, போன்ற விஷயங்களை எடுத்துச் சொல்லவேண்டும். இது நம் ஸ்வாமியினுடைய ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபதுக்குண்டான ஒரு தனிச்சிறப்பு. இதை வாய் வார்தைகளால் சொல்லி விளக்க இயலாது. எல்லாம் அனுபவ ஸித்தம். அடியேன் கீழ் சொன்ன விஷயத்தையே மேலும் ஒருமுறை வலியுறுத்திச் சொல்கிறேன். சாஸ்திரம் ஸம்பிரதாயம் இரண்டுமே நமக்கு மிகவும் முக்கியம்.

ஒன்றைவிட்டு ஒன்றை பிரிக்கமுடியாது. இவை இரண்டும் பின்னிப் பிணைந்து இருப்பது.

காரப்பங்காடு ஸ்வாமி வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமி இவர்கள் அணுகுமுறையே ரொம்ப ஆச்சர்யமாக இருக்கும். முன்னோர்கள் வந்த வழி அது. அதாவது சாஸ்திர க்ரந்தங்களை காலக்ஷேபம் பண்ணும்போது அது ஸம்பிரதாய ரீதியில் பார்க்க வேண்டும், அணுகுமுறை ஸம்பிரதாய ரீதியில் இருக்கணும். ஸம்பிரதாய க்ரந்தங்களை காலக்ஷேபம் பண்ணும் காலத்தில் அதை சாஸ்திரபரமாக அந்த ஸம்பிரதாயத்தை எடுத்துகொண்டு போகணும். இரண்டுமே வேறுவேறு கிடையாது. சாஸ்திரத்திற்கு பாங்காக காப்பாக இருப்பதுதான் ஸம்பிரதாயம். முன்னோர்கள் வந்தவழிதான் ஸம்பிரதாயம்.

இப்போது ஸ்ரீபாஷ்யத்திலேயே பார்க்கலாம். ஆரம்பத்தில் ஸ்ரீபாஷ்யம் மங்கள ஶ்லோகத்தில் **"ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே"** என்கிறார் ஸ்வாமி எம்பெருமானார். இதற்கு தேசிகன் வியாக்கியானம் பண்ணுகிறார் தத்வடீகையில் **"ஸ்ரீநிவாச பரப்பிரஹ்மம்"** என்று. வியாக்கியானம் பண்ணும்போது **"ஸ்ரீநிவாச பரப்பிரஹ்மம்"** என்று சொல்லும் காலத்தில் விசேஷணத்வம் தான் பிராட்டிக்கு சொல்லப்பட்டிருக்கிறது, என்பதை தேசிகரே காண்பிக்கிறார். ஸம்பிரதாயம் என்ன என்று தேசிகரே காண்பித்து கொடுக்கும்போதும், தேசிக ஸம்பிரதாயஸ்தர்கள் ஒத்துக் கொள்ளமாட்டேன் என்கிறார்களே. பிராட்டி ஒரு ப்ரஹ்மம், பெருமாள் ஒரு ப்ரஹ்மம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அது எவ்வளவு சாஸ்திர விரோதம், இதெல்லாம் தெரியவேண்டும்.

இப்போது முதலிலேயே மங்கள ஶ்லோகம் இருக்கிறது. அதன்பிறகு, குருவந்தனம் இருக்கிறது. அவை இரண்டுக்கும் ஒரு தொடர்பு இருக்கிறது, ஒரு ஸங்கதி இருக்கிறது. அது என்னவென்றால், இந்த லோகத்தில் பகவானுடைய அனுக்கிரகத்தாலே ஆசார்யப்ராப்தி. நமக்கு கிட்டின ஆசார்யன் அனுகிரகத்தால் பகவத் பிராப்தி. அதாவது மோக்ஷப்ராப்தி, இதுதான் ஸம்பிரதாயம். அதனால் தான் பகவானைக் குறித்து மங்கள ஶ்லோகம் பண்ணுகிறார், அதற்குப் பின் வேதவியாஸர் குறித்து குருவந்தனம் பண்ணுகிறார் ஸ்வாமி எம்பெருமானார். இந்த அர்த்தம்தான் ஸ்ரீவசனபூஷணத்தில் மிக அழகாக காண்பிக்கப்படுகிறது. இப்போது **"ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே"** என்கிறார். இந்த இடத்தில் இன்னொரு

விஷயமும் சொல்லவேண்டும். இது காரப்பங்காடு வேங்கடாசார்ய ஸ்வாமி, வேளுக்குடி ஸ்வாமி சொல்லும் அர்த்தம். அதாவது ஸ்ரீபாஷ்யத்தை நம் ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீரங்கத்தில் அனுபவித்தார்.

ஸ்ரீரங்கநாதன் திருவடி வாரத்தில் இந்த க்ரந்தத்தை அருளிச்செய்யும் காலத்தில், மங்கள ஶ்லோகத்தில் அவனைக் குறிக்காமல், **"ஸ்ரீநிவாஸே"** என்று திருவேங்கடமுடையானை குறிக்கிறார். ஸ்ரீபாஷ்யத்திற்கு முன்பாக ஸ்வாமி எம்பெருமானார் அருளிச்செய்த க்ரந்தம் வேதார்த்த ஸங்க்ஹம், அது திருவேங்கடமுடையான் திருமுன்பே அவர் விண்ணப்பித்த ஒரு உபந்யாஸமாகும். அதில் சொல்கிறார் **"சேஷிணே சேஷஸாயினே"** என்று திருவரங்கசெல்வனை நினைவு கூறுகிறார். திருவேங்கடமுடையான் முன்பு திருவரங்கன், திருவரங்கன் முன்பு திருவேங்கடமுடையான், இது ஏன் இப்படி செய்கிறார். திருவேங்கடமுடையான் முன்பு மங்கள ஶ்லோகம் பண்ணும் காலத்தில் **"ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே"** என்று அவனை சொல்லலாமே, திருவரங்கசெல்வன் முன்பு மங்கள ஶ்லோகம் பண்ணும்போது **"சேஷிணே சேஷஸாயினே"** என்று அவனைச் சொல்லலாமே, சேஷித்வம் திருவேங்கடமுடையானுக்கும், சேஷஸாயித்வம் திருவரங்கனுக்கும் சொல்லலாம். ஆனால் ஏன் அப்படி சொல்லவில்லை என்றால்? இரண்டு அபிப்ராயம் இருக்கின்றது. இது ஸம்பிரதாயம். ஸ்ரீபாஷ்ய சாஸ்திர க்ரந்தம் அருளிச்செய்கிறார் எம்பெருமானார். இது மோக்ஷ சாஸ்திரம். இந்த சாஸ்திரத்தை அப்யசிப்பது, அநுஸந்தானம் செய்வது, இதுவே அனுஷ்டானமாய் அமையும். என்ன அனுஷ்டானமாக அமையும் என்றால் சாஸ்திர அனுஷ்டானமாக அமையும். நம்மாழ்வார், சாஸ்திரத்தில் சொல்லியிருக்கும் உயர்ந்த அர்த்தங்களை அனுபவிக்கும் காலத்தில், அவற்றை திருவேங்கடமுடையான் விஷயமாகத்தான் அனுபவித்திருக்கிறார். அவர் சரணாகதி பண்ணினதும் சரி, கைங்கர்யத்தை ப்ரார்தித்ததும் சரி, மங்களாசாசனம் பண்ணினதும் சரி, இதெல்லாம் உயர்ந்த சாஸ்த்ரார்த்தங்கள். இதெல்லாம் திருவேங்கடமுடையான் விஷயமாகத்தான் ஆழ்வார் பண்ணியிருக்கிறார். அதனால் எல்லா சாஸ்திரங்களையும் உள்ளடக்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீபாஷ்யத்தை அருளிச்செய்யும் காலத்தில் நம்மாழ்வார் வழிவந்து திருவேங்கடமுடையானை நினைவு கூறுகிறார் எம்பெருமானார்.

சரி, சேஷ ஸாயினே என்று ஏன் திருவேங்கடமுடையான் இடம் சொல்லவேண்டும் என்றால், மிகவும் ஆச்சர்யமான அபிப்ராயம் இது. ஸ்வாமி எம்பெருமானார் திருவுள்ளக் கருத்தை இவர்கள் சொல்கிறார்கள். பதின்மர்பாடும் பெருமாள் என்னும் சிறப்பு திருவரங்கசெல்வனுக்குதான், திருவேங்கடமுடையானுக்கு இல்லை. திருவரங்கன் ஒருத்தனுக்கு தான் இந்த சிறப்பு. ஸ்ரீரங்கத்திலிருந்து அறையர் ஸ்வாமி திருவேங்கடத்துக்கு எழுந்தருளுகிறார், எம்பெருமானுக்கு அறையர் ஸேவை நடத்தும்படி அனைவரும் ப்ரார்திக்கிறார்கள். அறையர் ஸேவையில் பதின்மர்பாடும் பெருமாள் என்று பாடுகிறார் அறையர் ஸ்வாமி. அப்போது எல்லாரும் இந்த பெருமை எங்களுடைய பெருமாளுக்கு இல்லையே, சோழியன் கெடுத்துவிட்டானே என்பார்களாம். ஆழ்வார்களில் தொண்டரடிப் பொடியாழ்வார் அந்த திருவரங்கச்செல்வனை மட்டும் தான் பாடினார், திருவேங்கடமுடையான் மற்றும் எந்த பெருமாளையும் பாடவில்லை. அதனால் பதின்மர்பாடும் பெருமாள் என்ற பெருமையை எங்கள் பெருமாளுக்கு இல்லையே இல்லாத பெருமையை பாடுகிறீரே என்று அங்குள்ளவர்கள் மிகவும் வருத்தப்பட்டார்கள். அப்போது அங்கு அதில் என்ன பா$_4$வமென்றால், திருவரங்கச்செல்வன் ஒருத்தன் திருவேங்கடமுடையான் மற்றொருத்தன் என்பது கிடையாது. இரண்டு பேரும் ஒருத்தர் தான், தர்மிஐக்கியம் அதுதான் தாத்பரியம். இங்கே அவரைப் பற்றி பாடுவது, அங்கே இவரைப் பற்றிப் பாடுவது, ஒரே பெருமாள்தான் இங்கும் அங்கும் இருக்கிறார் என்பது தர்மிஐக்கியம் என்று அர்த்தம்.

பெருமாள், திருவேங்கடமலையிலிருந்து திருவரங்கத்திற்கு போனார் என்று சொல்வார்கள். இந்த தர்மிஐக்கியம் என்னும் அர்த்தத்தை இன்னொரு ஆழ்வார் காண்பித்திருக்கிறார். எம்பெருமானார் காண்பித்தார் என்பதில்லை, எம்பெருமானார், ரிஷிகள், ஆழ்வார் வழிவந்தவர். தாமாக ஒரு அபிப்பிராயத்தை தமக்கு என்று வைத்துக் கொள்ளமாட்டார். அமலனாதிபிரானில் திருவரங்கசெல்வனை மட்டும் பாதாதிகேசம் அனுபவிக்கிறார் திருப்பாணாழ்வார். இப்படி அவர் அனுபவிக்கும் காலத்தில் **“மந்தி பாய் வடவேங்கட மாமலை”** என்று பாசுரம் பாடும்போது அவர் திருவரங்கனை பாதாதிகேசம் அனுபவித்தாலும் பெருமான் திருவேங்கடமுடையான் அவருக்கு ஸேவை ஸாதித்தாராம். இந்த தர்மிஐக்கியம் திருப்பாணாழ்வார்

காண்பித்திருக்கிறார். அதனாலே தொண்டரடிப்பொடியாழ்வார் நேரடியாக திருவேங்கடமுடையானைப் பாடாமல் இருந்தாலும், திருவரங்கச்செல்வனை பற்றி பாசுரம் அருளிச்செய்தவர், திருவேங்கடமுடையானைப் பற்றியும் அருளிச்செய்ததாக வைத்துக் கொள்ளவேண்டும், தர்மிஜக்கியம் இருக்கிறபடியாலே என்கிற ஸம்ப்ரதாயார்த்தத்தை நாம் கொள்ளவேண்டும். இப்படி சேஷிணே சேஷசாயினே என்று சொல்வது , **"ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே"** என்று சொல்வது, என்ற இவ்விரண்டிற்கும் ஒருமைபடுத்துவது இவ்வாறே. ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே என்னும் இடத்தில், இங்கு ஸம்பிரதாயம் வந்து சேருகிறது. உடையவர் திருவுள்ளக்கருத்தை உள்புகுந்து பார்க்கும் ஸமயத்தில் அங்கு ஸம்பிரதாயம் வந்து சேருகிறது.

அடுத்தது ப்ரதிக்ஞாவாக்கியம். ப்ரதிக்ஞா வாக்கியத்தில் என்ன சொல்கிறார் "ப$_4$கவத்$_3$ போ$_3$தா$_4$யந க்ருதாம் விஸ்தீர்ணாம் ப்$_3$ரஹ்ம ஸூத்ரவ்ருத்திம் பூர்வாசார்யா: ஸம்சிக்ஷிபு:| தந்மதாநுஸாரேண ஸூத்ராக்ஷராணி வ்யாக்யாஸ்யந்தே|" என்று பகவத் ஶப்த ப்ரயோகத்தை பண்ணியிருக்கிறார். இங்கே எம்பெருமானார் போதாயன ரிஷி விஷயமாக பகவத் ஸப்த ப்ரயோகத்தை செய்திருக்கிறார். இங்கே முதலில் போதாயன ரிஷி யார் என்பது நமக்குத் தெரியவேண்டும். அவரைப்பற்றி இரண்டு விஷயங்கள் நமக்குத் தெரியவேண்டும். போதாயனர் வ்யாஸருடைய சிஷ்யர் என்று சில பேர் உபந்யாஸகர்கள் சொல்லுகிறார்கள், வேறு சில உபந்யாஸகர்கள் அவர் ப்ரசிஷ்யர் என்று சொல்லுகிறார்கள். ஆனால் நம்முடைய வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமி போதாயனர் வியாஸருடைய சிஷ்யப்ரசிஷ்ய பரம்பரையில் வந்த ஒரு ரிஷி என்று சொல்லியிருக்கிறார். நம் வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமி பரமப்ராமாணிகர். அதை பலவிதத்தில் நிரூபிக்கலாம். அவர் திருவாக்கு பொய்க்காது, அவர் திருவாக்கில் எது வருகிறதோ அது ப்ரமாணமாக இருந்தால்தான் வரும். அவர் போதாயனர் சிஷ்யப்ரசிஷ்யர் பரம்பரையில் வந்தவர் என்று சொன்னால் நாம் அதை தான் எடுத்து கொள்ள வேண்டும்.

சூதபௌராணிகர் என்பவர் எல்லாப் புராணத்திற்கும் ப்ரவர்த்தகர். அவர் சொல்வது போல் தான் இப்பொழுது புராணங்கள் எல்லாம் இருக்கின்றன. இவர் யார் என்றால் ரோமஹர்ஷணர் என்னும் ரிஷியின் திருக்குமாரர். இந்த ரோமஹர்ஷணர் என்பவருக்கு, திருமேனி முழுவதும் ரோமமாகவே இருக்கும்.

அவர் நான்கு வர்ணதிற்குட்பட்டார் அல்லர். இருந்தாலும் வியாஸருடைய அனுகிரகத்திற்கு பாத்திரமானவர், வியாஸசிஷ்யர். நான்கு வர்ணத்திற்கும் சேராதபடியினால், இந்த வேதாந்தத்தை நேரடியாக அப்யஸிக்கக்கூடிய யோக்கியதை அவருக்கு இல்லை. அதனால் புராணங்கள் மூலமாக பெருமாளைப் பற்றின சரித்திரம், புராண புருஷர்கள் பற்றிய சரித்திரம், வேதாந்த அர்த்தங்கள் இவற்றை நன்றாக அவருக்கு சொல்லி வைத்தார் வ்யாசர். ஜனங்களுக்கு கதை மூலமாக வேதாந்தத்தை புரிய வைக்கமுடியும் என்றும் அதன் மூலம் புராண புருஷர்கள் பற்றிய விவரங்கள் வேதாந்த கருத்துக்களை நன்கு புரிய வைக்க முடியும் என்று வியாஸர் அவரை நியமித்தார். அவரைப் பற்றின சரித்திரம் மேலே இருக்கிறது.

ரிஷிகளுக்கு ஒரு தடவை புராண ப்ரவர்தனம் பண்ணிக் கொண்டிருந்த சமயத்தில், அவருக்கு தகுந்த ஆசனம் கொடுத்து மரியாதை கொடுத்து காலக்ஷேபம் கேட்க அமர்ந்தனர் ரிஷிகள். அவரும் காலக்ஷேபம் ஸாதிக்கும் தருணத்தில் அங்கு பலராமர் வருகிறார். அவர் பெரியவர் என்பதால், அவரை பார்த்ததும் ரிஷிகள் எல்லாரும் எழுந்து அவருக்கு மரியாதை கொடுக்கின்றனர். இந்த ரோமஹர்ஷணர் வயதில் மிகவும் பெரியவரானபடியால் திருமேனி களைப்பு காரணமாக அவரால் எழுந்திருந்து பலராமருக்கு மரியாதை செலுத்த முடியவில்லை. இதனால் கோபமுற்ற பலராமர் தம்முடைய கலப்பையினால் அவர் மீது பாய்ந்து ரிஷிகள் எல்லாம் தடுப்பதற்கு முன் அவரை அடித்தார். ரோமஹர்ஷண ரிஷிக்கு உடனே பிராணவ்யோகம் ஏற்பட்டு விட்டது. உடனே எல்லா ரிஷிகளும் மிகவும் வருத்தம் அடைந்து, பலராமரை மிகவும் கடிந்து கொண்டனர். அவர்கள் சொன்னார்கள் ரோமஹர்ஷணமக ரிஷி எப்பேர்பட்ட மகானுபாவர், வியாஸ சிஷ்யர். அவர் பகவத் புராணங்களையெல்லாம் ப்ரவசனம் பண்ணிக் கொண்டிருக்கிறார். அவருடைய திருவாக்கால் பகவத் கதைகளை கேட்பதற்கு எங்களுக்கு எத்தனை பாக்கியம். அவரிடம் ரிஷிகள், ப்ராஹ்மணர்கள் எவ்வளவு கௌரவ புத்தி வைத்திருக்கிறோம். கொஞ்சம் கூட யோசனை பண்ணாமல் இப்படி அடித்து விட்டீரே. இப்போது அவருக்கு ப்ராணவ்யோகம் ஏற்பட்டுவிட்டதே என்று கடிந்து கொண்டனர். பலராமரும் வருத்தப்பட்டார். அதற்கு பிராயச்ஸித்தமாக திவ்யதேசவாசம் பண்ண வேண்டுமென்று பலராமன் தீர்த்த யாத்திரை சென்றார். அது ஒரு சரித்திரம்.

ஆனால் ரோமஹர்ஷணர் பரமபதித்ததும் அவருடைய ஸ்தாநத்தில், அவருடைய திருக்குமரரான இந்த சூதரை வந்து அமரச் செய்து அவருக்கு ஆஸநம் கொடுத்து பரமரிஷிகள், ப்ராஹ்மணோத்தமர்கள் அனைவரும் அந்த சூதபௌராணிகர் திருவாக்கால் விஷயங்களையெல்லாம் கேட்கிறார்கள். பாகவதத்திலும் இந்த நிகழ்வு, பாகவத மஹாத்மியத்தில் ஆரம்பத்தில் வருகிறது. சூதர் எழுந்தருளுகிறார், **"பகவான் ஸௌநகமுனி"** என்கிறார் பராசரபட்டர். அந்த ஸௌநகமுனி முதலான அனைவரும் சூதருக்கு உயர்ந்த ஆசனத்தை கொடுத்து, அவரிடம் கிருஷ்ண சரித்திரத்தை சொல்லும்படி பிரார்த்திக்கிறார்கள். அப்பொழுது அந்த சூதர் அவர்களிடம் கேட்கிறார்," நீங்கள் எல்லாம் ரிஷிகள், பிராமணர்கள் உத்தமர்கள், உயர்ந்த ஆச்சார அனுஷ்டானங்கள் வாய்ந்தவர்கள், எல்லாவற்றிலும் பெரியவர்கள், எனக்கு இந்த உயர்ந்த ஆசனத்தை கொடுத்து என்மூலம் கேட்ககூடிய கௌரவத்தை எனக்கு கொடுக்கிறீர்கள் இது தகுமா?". அதற்கு அவர்கள், அப்படி" இல்லை. தேவரீர் ஸாக்ஷாத் வியாஸரின் சிஷ்யர். தேவரீரின் திருத்தகப்பனாரை போலேவே வியாஸரிடம் அர்த்தங்களை க்ரஹித்தவர்... புராண ப்ரவர்தனம் என்ற இந்த உயர்ந்த கைங்கர்யத்தில் தேவரீர் ஈடுபட்டிருக்கிறீர். தேவரீர் எவ்வளவு பெரியவர் என்று அடியோங்களுக்கெல்லாம் தெரியும். தேவரீர் திருவாக்கில் கிருஷ்ணசரித்திரம் சொல்ல வேண்டும். பகவானின் எல்லா திருவவதார சரித்திரங்களையும் சொல்ல வேண்டும். நாங்கள் கேட்க", என்று தேவக்ஷேத்திரமான நைமிசாரண்யத்தில் ஸௌநகாதி மஹரிஷிகள் சூதரை பிரார்த்தித்து கொள்கின்றனர். அவர் இந்த பாகவதத்தை சொல்வதாக இந்த பாகவதம் ஆரம்பிக்கிறது.

இந்த சூதர் வியாஸருக்கு சிஷ்யரா ப்ரசிஷ்யரா? என்று கேள்வி. காரப்பங்காடு ஸ்வாமியின் ஷஷ்டியப்தபூர்த்தி மலரில் **"சுகர் சுவைத்த வேதக்கனி"** என்று ஒரு கட்டுரை. அதில் வியாஸருடைய நான்கு சிஷ்யர்களின் திருநாமங்களைக் குறிப்பிட்டு, அவர்களுடைய சிஷ்யர் சூதர் என்றும், சூதர் தன்னுடைய திருத்தகப்பனாரிடமும் அர்த்த க்ரஹணம் செய்தவர் என்றும் எழுதியிருந்தார். வியாஸருக்கு ப்ரசிஷ்யராக அவர் எழுதியிருந்தார். இது எப்போவோ நடந்தது. ஸமீபகாலத்தில் நான் ஸ்ரீ உ.வே. மன்னார்குடி ராஜகோபாலாச்சார்யார் பாகவத ஸப்தாகம் காலக்ஷேபம் கேட்க நேர்ந்தது. இதற்கு முன்பே காரப்பங்காடு ஸ்வாமியின் காலக்ஷேபங்களை

எல்லாம் ஒருவர் ஏடுபடுத்தி வைத்திருந்தார். அது ஒரு பெரிய கட்டாக அடியேனிடம் வந்து சேர்ந்தது. அதில் பார்த்து வந்த போது காரப்பங்காடு ஸ்வாமி சூதரை வியாஸரின் சிஷ்யர் என்று எழுதி இருக்கிறார். அப்போதே எனக்கு கொஞ்சம் நெருடியது. இதென்ன, காரப்பங்காடு ஸ்வாமி சூதரை வியாஸருடைய சிஷ்யர் என்கிறார். ஆனால் அவருடைய ஷஷ்டியப்தபூர்த்தி மலர் அவரே பார்த்தது. அதிலேயே சூதரை வியாஸருக்கு ப்ரசிஷ்யர் என்றுதான் சொன்னார். காரப்பங்காடு ஸ்வாமி ஏன் சூதரை வியாஸருடைய சிஷ்யராக சொல்லவேண்டும்? எனக்கு இது ஒரு புதிராகவே இருந்தது.

மற்றொரு சமயத்தில் ஏதோ ஒரு தடவை உடையவருடைய நேர்சிஷ்யரான அனந்தாழ்வான் அருளிச் செய்த **"வேங்கடாசல இதிஹாஸமாலா"** என்ற க்ரந்தத்தில், ஆரம்பத்தில் பார்க்கும் போது இரண்டு விஷயங்கள் கண்ணில் பட்டது. அனந்தாழ்வான் சூதரை வியாஸரின் சிஷ்யராகதான் சொல்கிறார். ஆச்சர்யமாக இருந்தது அடியேனுக்கு. காரப்பங்காடு ஸ்வாமி வியாஸருடைய சிஷ்யராய் சூதரை சொன்னது இதை அடியொட்டி தானோ என்னவோ. சிஷ்யராகவும் இருந்திருக்கலாம், இரண்டு விதமாகவும் சிஷ்ய ப்ரசிஷ்யராகவும் இருந்திருக்கலாம். வாதிகேசரி அழகியமணவாள ஜீயர் நாயனார் பெரியவாச்சான் பிள்ளையிடமும் அர்த்த க்ரஹணம் பண்ணினவர், அவர் திருக்குமாரர் நாயநாராசான்பிள்ளை ஸ்வாமியிடமும் அர்த்த க்ரஹணம் பண்ணினவர். அதனாலேயே இந்த விஷயத்தை நான் சொன்னேன், அந்த மாதிரிதான் சூதரும் என்று அடியேன் நினைத்துக் கொண்டேன். எதற்கு சொல்ல வருகிறேன் என்றால் பெரியவர்கள் சிஷ்யர் என்றாலும் சரி, சிஷ்யப்ரசிஷ்யர் என்றாலும் சரி, சிஷ்ய ப்ரசிஷ்யர் பரம்பரை என்றாலும் சரி, நாம் அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும். காரப்பங்காடு ஸ்வாமி, வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமி இவர்களின் திருவாக்குகளை அப்படியே எடுத்துக் கொள்ள வேண்டும். அதுதான் ப்ராமாணிகம் என்பதற்காக சொன்னேன்.

இதற்கு மேல் **'பூர்வாசார்யா:'** என்று இருக்கிறது. **'பூர்வாசார்யா:'** என்று யாரை குறிக்கிறார்? தனக்கு முற்பட்ட யாமுனாச்சாரியாரையும், நாதமுனிகளையும் குறிக்கிறாரா என்று ஒரு கேள்வி வரும். இதற்கு திருமலை வாதூல ஸ்ரீநிவாஸாசார்யார் ஸ்வாமி இயற்றிய **"யதீந்த்ரமத தீபிகையில்"** விளக்கம் வருகிறது. 'பூர்வாச்சார்யா:' என்று சொல்வதற்கு

அர்த்தம் அங்கு சொல்லப்படுகிறது. அது போதாயன பரம்பரையில் வந்தடங்கர், த்ரமிடர், பவனந்தி; இன்னும் ரிஷிகள், நாதமுனிகள், ஆளவந்தார்; அவர்கள் வழிவந்த ஆசார்ய புருஷர்கள், பெரியோர்கள் அதாவது ஆளவந்தாரின் சிஷ்யர்கள்; இவர்கள் எல்லாம் தான். 'பூர்வாசார்யா:' என்று சொல்கிறார். ஏனென்றால் ப்ரதிஜ்ஞா வாக்யத்தில் 'ஸங்க்ஷிப்பு:' என்று உடையவர் அருளிச்செய்துள்ளார். மேல்குறிப்பிட்ட ரிஷிகளும் ஸங்க்ரஹமாக க்ரந்தங்களை அருளிச்செய்துள்ளனர். அதேபோல் நாதமுனிகள் பண்ணின க்ரந்தமாய் இருந்தாலும், ஆளவந்தார் பண்ணின க்ரந்தமாய் இருந்தாலும் எல்லாம் சுருக்கமாக அதாவது ஸங்கிரகமாக அருளிச் செய்யப்பட்டவை தான். அதனால் 'பூர்வாசார்யா:' என்ற இடத்தில், இந்த அர்த்தம் வரும். ஸ்வாமி எம்பெருமானார் எந்த பதப்ரயோகம் பண்ணினாலும், எந்த அர்த்தத்தை அருளிச்செய்தாலும் அதன் பின்னணியில் ஏதாவது ஒரு சாஸ்திரவசனம் இருக்கும், இல்லையென்றால் அவர் அருளிச் செய்ததற்கு தாத்பரியம் என்ன, அபிப்பிராயம் என்ன என்பதற்கு பிற்பட்ட ஆசார்ய புருஷர்கள் பற்பல க்ரந்தங்களில் காண்பித்திருக்கிறார்கள். ஸ்வாமி எம்பெருமானார் திருவுள்ளம் பற்றிய அர்த்தத்தை பிற்பட்ட பல மகான்கள் காண்பித்திருக்கிறார்கள், பல ஸ்ரீபாஷ்ய க்ரந்தங்களில், ஆதி சப்தத்தில் அதெல்லாம் அடங்குகிறது. இன்னும் உடையவர் திருவுள்ளக் கருத்துக்களை ஸுதப் ப்ரகாஶிகையில் ச்ருதப்ப்ரகாசிகை, பா$_4$வபரகாஶிகை ,மூலபா$_4$வப்ரகாஶிகை, உபநிஷத் பாஷ்யம் இப்படி எவ்வளவோ க்ரந்தங்களிலும், மேலும் தொட்டாச்சார்யார் ஸ்வாமி அருளிச் செய்த பஞ்ச விஜய க்ரந்தங்களிலும், மேலும் திருநாராயணபுரத்தில் மைசூர் அனந்தாழ்வான் அருளிச் செய்த க்ரந்தங்கள் இதைப் போன்ற எவ்வளவோ க்ரந்தங்களில் உடையவர் திருவுள்ளக் கருத்துக்களை பற்பல ஆசார்யர்கள் ஆங்காங்கு எழுதி வைத்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஸ்ரீபாஷ்யம் காலக்ஷேபம் பண்ணும் காலத்தில் கொண்டு சேர்க்க வேண்டும். மேலும் சாஸ்திர வசனங்களையும் கொண்டு சேர்க்க வேண்டும்.

இன்னொரு உதாரணம் சொல்கிறேன். ப்ரஹ்ம ஶப்தார்தத்தை அருளிச்செய்கிறார் எம்பெருமானார். அந்த ஸ்ரீஸூக்தியை இரண்டு விதமாக பிரிக்கிறார்கள், ஶப்த ஸாமர்த்தியம், அர்த்த ஸாமர்த்தியம் என்பவை. அர்த்த சாமர்த்தியத்தில் எம்பெருமானார் இந்தத் ப்ரஹ்ம சப்தத்திற்கு உண்டான தாத்பரியத்தை அருளிச் செய்கிறார். அதாவது பகவான் மோக்ஷப்ரதன் என்று

காண்பிக்கிறார். அர்த்த ஸ்வாரஸ்யத்தில், தாபத்த்ரயத்தை போக்குவதால் அவன் அந்த அர்த்தத்தில் மோக்ஷப்ரதன் என்று காண்பிக்கிறார். இது எங்கிருந்து இவர் எடுத்திருக்கிறார்? என்று கேள்வி வரும். இது விஷ்ணுபுராணத்தில் தாபத்த்ரயம் என்றால் என்ன? என்று ஸ்ரீபராசர பகவான் காண்பித்திருக்கிறார். இது எம்பெருமானார் அங்கிருந்து எடுத்த விஷயம் என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் இது எம்பெருமானார் அங்கிருந்து எடுத்த விஷயமன்று. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் தாபத்த்ரயம் என்றால் என்ன என்று விளக்கும் இடத்தில் தாபத்த்ரயம் என்றால் என்ன என்று மட்டும் விளக்கி இருக்கிறாரே தவிர, தாபத்த்ரயத்தை போக்குபவன் பகவான் என்ற அர்த்தத்தை காண்பிக்கவில்லை. அதனால் தாபத்த்ரயம் என்றால் என்ன என்று விளக்கும் இடமாக அது இருக்கிறதே தவிர, தாபத்த்ரயத்தை போக்குபவன் பகவான் என்பதற்கு அது ப்ரமாணமாகாது. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை பார்க்கும்போது அடியேனுக்கு தோன்றியது இது. ஆனால் எம்பெருமானார் எந்த இடத்தில் இந்த அர்த்தத்தை வைத்திருக்கிறார் என்று தெரியவில்லை. அதன் பின் பிருந்தாவனத்தை சேர்ந்த உத்தராதி தேசங்களில் பாகவத மஹாபுராணத்தில் பிரவசனம் பண்ணும் காலத்தில் ஆரம்பத்தில் பலஶ்லோகங்கள் சொல்கிறார்கள். அதில் இந்த ஶ்லோகத்தை சொல்கிறார்கள்

ஸச்சிதாநந்தரூபாய விஶ்வோத் பத்யாதி ஹேதவே
தாபத்த்ரய விநாசாய க்ருஷ்ணாய வயம்நம:’

இது எங்கே இருக்கிறது என்றால், பத்ம புராணத்தில் பார்வதிதேவி பரமசிவனை இந்த பாகவதத்தின் பெருமையைச் சொல்ல வேண்டும் என்று கேட்கிறாள். சிவபெருமான் பார்வதிதேவிக்கு உபதேஸம் செய்கிறார். அவ்விடத்தில் இதுதான் முதல் மங்கள ஶ்லோகம்.

இங்கே ஸ்பஷ்டமாக தாபத்த்ரயத்தை போக்குபவன் கிருஷ்ணபகவான் என்று தெரிகிறது. அவனை நாம் வணங்குகிறோம். இதுதான் பிரமாணம். இங்கே இன்னொரு விஷயத்தைச் சொல்லவேண்டும். பரமசிவனார் ஸச்சிதானந்த ரூபாய என்கிறார். பகவானுடைய திவ்யஸ்வரூபம் ஸச்சிதானந்த ஸ்வரூபம் அவன் ஸத்ஸ்வரூபன் சித்ஸ்வரூபன் ஆனந்த ஸ்வரூபன். ஆனால் ஸ்வரூபாய என்று சொல்லவில்லை அங்கே, ரூபாய என்கிறார், திவ்ய மங்கள விக்ரஹத்தை குறிக்கிறார். பகவானுடைய

திவ்யாத்மஸ்வரூபத்திற்கு பிரகாசகமாய் இருப்பது, அவனுடைய திவ்ய மங்கள விக்ரஹம் என்பது ஸம்ப்ரதாயார்த்தம். அதனாலேயே ஆழ்வார்கள் பகவானுடைய திவ்யாத்மாஸ்வரூபத்தை காட்டிலும் பகவானுடைய திவ்யமங்கள ரூபத்திலேயே ஈடுபட்டார்கள் என்பதும் ஸம்பிரதாயம். அதனால்தான் ஸ்வரூபாய என்பதற்கு ரூபாய என்று காட்டுகிறார் பரமசிவனார், ஸம்பிரதாயத்தை தான் காண்பிக்கிறார் இந்த இடத்தில். சாஸ்திரமும் ஸம்பிரதாயமும் பின்னிப் பிணைந்து இருப்பதை காண்கிறோம். இப்படித்தான் விஷயங்களை நிரூபித்துக்கொண்டே போகவேண்டும். இது தான் காரப்பங்காடு வித்வத் பரம்பரைக்கே உள்ள பெருமை. இது மற்ற வித்வத் பரம்பரைக்கும் உள்ளது, ஆனால் அழிந்து போய்விட்டது. வேளுக்குடி ஸ்வாமி காலம் வரைக்கும் இந்த பரம்பரை ஜீவித்து கொண்டிருந்தது. காரப்பங்காடு வித்வத் பரம்பரையில் கடைசியாக வந்தவர் வேளுக்குடி வரதாச்சாரிய ஸ்வாமி. அவர் வரையிலும் இந்த பரம்பரை ஜீவித்திருந்தது. பிறகு வரவில்லை.

வீடுமின் முற்றவும் ப்வேசம், அங்கு நம்பிள்ளை ஈட்டில். ஸ்ரீபாஷ்யம் ஸாதித்த பின்பு என்று வருகிறது, அந்த பின்பு என்பதை பின்பும் என்று வைத்துக் கொள்ளவேண்டும். இது ஒரு சூட்சமம். சாதாரணமாக எந்தவாக்கியமும் ஏவகாரத்தோடு சேர்ந்தது என்று ஒரு ந்யாயம் இருக்கிறது. அதுப்ரகாரம் பார்த்தால் ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்த பின்பே என்ற அர்த்தம் வைத்துக் கொள்ள வேண்டும். ஆனால் அவ்வாறு வைத்துக் கொண்டால், அதுதவறு. எம்பெருமானார் எப்பவும் ஸாத்ய பக்தியைத்தான் சொல்லியிருக்கிறாரே தவிர, ஸாதந பக்தியைச் சொல்லவில்லை. அங்கு பின்பு என்று வைத்துக் கொள்ளக்கூடாது, பின்பும் என்று வைத்துக் கொள்ளவேண்டும். அப்போது தான் ஸம்பிரதாயம் அங்கு விளங்கும். பின்பே என்று சொன்னால் ஸம்பிரதாயத்திற்கு விருத்தம் வந்து விடும். ஸம்பிரதாயத்திற்கு விருத்தம் வந்துவிடாமல் பின்பும் என்று சொல்ல வேண்டும். அப்படியெல்லாம் காரப்பங்காடு ஸ்வாமி காண்பித்து கொடுத்தவர். ஆங்காங்கு பங்க்திகளை ஸேவித்து அர்த்தம் சொல்லும் காலத்தில், பங்க்திகளில் உள்புகுந்து அர்த்தத்தை வெளிக்கொணர்ந்து காண்பிக்கும் போது, இப்படியெல்லாம் பெரியவர்கள் காலக்ஷேபம் பண்ணியிருக்கிறார்கள். இப்படி எவ்வளவோ உதாரணங்கள் இருக்கின்றன.

வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமி ரொம்ப பிரமாணிகர். இன்னொரு விஷயம். அடியேன், வேளுக்குடி ஸ்வாமியாய் இருந்தாலும் சரி, காரப்பங்காடு ஸ்வாமியாக இருந்தாலும் சரி, இரண்டு பேரும் ஸாதித்த விஷயங்களை அவர் சொன்னதை இவர் சொன்னதாகவும் சொல்லுவேன், இவர் சொன்னதை அவர் சொன்னதாகவும் சொல்லுவேன். இப்போது காரப்பங்காடு ஸ்வாமியின் காலக்ஷேபங்களை ஏடுபடுத்தி எழுதும் காலத்தில் அவரது மாதவன் பெருமை, கிருஷ்ணபக்தி, கீதையும் கீதாச்சார்யனும் என்ற புத்தகங்களில் வேளுக்குடி ஸ்வாமியின் அர்த்தங்கள் ஏதாவது சேருமானால் அதை அடியேன் அப்படியே சேர்த்துக் கொண்டு விடுவேன். ஏனென்றால், அவர் வேறு இவர் வேறு இல்லை என்பதை வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமியே காட்டியுள்ளார். அவரே சொன்னது: நம்மாழ்வார் செட்டியார் என்று ஒரு பெரிய பாகவதோத்தமர் இருந்தார், அவர் வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமி வேறு, காரப்பங்காடு ஸ்வாமி வேறு இல்லை என்று அபிப்ப்ராயம் தெரிவித்தார். ஆரம்ப காலத்தில் இப்படி அவர் சொன்ன இவ்வார்த்தை அப்படியே பலித்தது, இது வேளுக்குடி ஸ்வாமியே பலமுறை தெரிவித்திருக்கிறார் .இது நான் **'காரப்பங்காடு ஸ்வாமி வைபவம்**' என்னும் நூலில் **'வேளுக்குடி ஸ்வாமி வைபவம்'** என்ற ஒரு கட்டுரையில் குறிப்பிட்டது –வேளுக்குடி ஸ்வாமி பரமப்ராமாணிகர் என்பதை தெரிவிப்பதற்காக.

வேளுக்குடி ஸ்வாமியின் குறிப்பேடு வைத்துக்கொண்டு மாதவன் பெருமை என்னும் புத்தகத்தை எழுதும் காலத்தில், **"திருவேங்கடமுடையானுக்கு திருமாலை ஸமர்ப்பிக்கும் கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தார் ஆளவந்தார்"** என்று எழுதியிருந்தேன். புஷ்ப கைங்கர்யம் பண்ணினார் ஆளவந்தார் என்று ஸ்வாமி ஏதோ ஒரு காலக்ஷேபத்தில் ஸாதித்தது நினைவிருந்தது அடியேனுக்கு. ஆனால் அடியேன், இந்த புத்தகத்தை பப்ளிஷ் பண்ணவில்லை. பப்ளிஷ் பண்ணுபவர்களுக்கு ஸாப்ட்காபி அனுப்பினேன். அவர்களையே ஒருமுறை ப்ரூப் பார்த்துப் ப்ளிஷ் செய்யச் சொன்னேன். அதில் அவர் ஒரு மிஸ்டேக் இல்லாத வரியை மிஸ்டேக் இருக்கு என்று எடுத்தே விட்டார். இன்னொரு இடத்திற்கு வரியை எடுக்கவில்லை, ஆனால் ஆட்ஷேபம் தெரிவித்தார். விஷப்பால் கொடுத்தாளே பூதனா அவளை இராக்ஷஸி என்று எழுதி இருந்தேன், கம்சன் அசுரன். அவள் ராக்ஷஸியாக இருக்கமுடியாது என்று அவர் ஆட்சேபித்தார், இல்லை அவள்

இராக்ஷஸிதான் என்று நான் கூறினேன். பின் இந்த சந்தேகத்தை திருநாராயணபுரம் அரையர் ஸ்வாமி ஸ்ரீராம்சர்மா என்ற ஸ்வாமியிடம் கேட்டபோது அவர், பூதநாபிசாசம் என்னும் ஜாதியைச் சேர்ந்தவள். இது இராட்ச்ச ஜாதியின் ஒரு உட்பிரிவாகும். ஆதலால் அவள் இராக்ஷஸிதான் என்று தெளிவுபடுத்தினார்

ஆறாயிரப்படி குருபரம்பர ப்ரபாவத்தில் திருவேங்கடமுடையானுக்கு ஆளவந்தார் புஷ்ப கைங்கர்யம் பண்ணினதாக இல்லை என்று அந்த வரியையும் அடித்து விட்டார். புத்தகம் வெளிவந்தது, மேல்சொன்ன விஷயங்கள் அதில் வராததால் நான் கேட்டபோது அவர் ஆறாயிரப்படியில் இந்த விஷயங்கள் இல்லையே என்றார், நான் சொன்னேன் அதில் இல்லை என்றால் வேறு ஏதாவது க்ரந்தத்தில் இருக்கும். வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமி ஸாதித்தது இந்த விஷயம் ஆகையால் தான், நான் சேர்த்துக் கொண்டேன். ஆறாயிரப்படியில் இருக்கிறதா என்று பார்க்கவில்லை. இப்படி சொல்லிவிட்டு நான் அரையர் ஸ்வாமியை கேட்டேன். அவர் திருவேங்கடமுடையானுக்கு ஆளவந்தார் புஷ்ப கைங்கர்யம் பண்ணினார் என்பது நிச்சயம். நான் சிறுவனாக இருக்கும்போது ஸன்னிதியில் திருவேங்கடமுடையானை ஸேவிக்க செல்லும்போது பார்த்திருக்கிறேன். சந்தனம் அரைக்கும் இடத்திற்கு பக்கத்தில் ஆளவந்தார் பலகை என்று ஒன்று உண்டு. ஆளவந்தார் திருவேங்கடமுடையானுக்கு அந்த இடத்தில் புஷ்பங்களைக் கொண்டு வைத்துக்கொண்டு பின் அங்கிருந்து தான் பெருமாளுக்குப் புஷ்பங்களை ஸார்த்த எடுத்துச் செல்வார் போலும். பிற்காலத்திலும் அது தொடர்ந்து நடந்து வந்தது. புஷ்பங்களைக் கொண்டு வைக்கும் அந்த இடத்திற்கு ஆளவந்தார் பலகை என்று பெயர். ஆளவந்தார் காலத்திற்குப் பின் ஆளவந்தாரின் கைங்கர்யமாகவே நினைத்து அந்த பா$_4$வத்தில் புஷ்பங்களை அங்கு வைத்து பின் அங்கிருந்து எடுத்து திருவேங்கடமுடையானுக்கு ஸார்த்தி வந்தார்கள். ஆளவந்தார் பலகை என்று நாங்களெல்லாம் போய் ஸேவிப்போம். நாளடைவில் பெருமாள் ஸேவிக்கும் கூட்டம் அதிகமானதால் அந்த இடத்தை எல்லாம் மாற்றி விட்டனர். இப்போது அந்த இடம் இல்லை. ஆனால் நான் எல்லாம் பார்த்திருக்கிறேன், மலைமேல் பெருமாள் ஸன்னதிக்கு முன்பு நரசிம்மர் ஸன்னதிக்கு பக்கத்தில், பெருமாளுக்கு சந்தனம் அரைக்கும் இரண்டு சந்தன கற்கள்ளிருந்த இடம்.

அந்த இடத்தில் புஷ்பங்களை வைத்திருந்து, பின் எம்பெருமானுக்கு அப்புஷ்பங்களை எடுத்துச் செல்வதை என் கண்ணால் நான் பார்த்திருக்கிறேன், அந்த இடத்தை தெண்டனிட்டு ஸேவித்திருக்கிறேன். இது நான் பார்த்த விஷயம். இதுவே ஆளவந்தார் புஷ்ப கைங்கர்யம் பண்ணினார் என்பதற்கு ப்ரமாணம். ஆறாயிரப்படியில் இல்லை என்றால், வேறு ஏதாவது க்ரந்தத்திலிருக்கலாம். வேளுக்குடி வரதாச்சாரிய ஸ்வாமி ஸாதித்திருக்கிறார் என்றால், உண்மை தான் ஸாதித்திருக்கிறார். இது அனுபவ ஸித்தமாக இருந்தது, காலவிசேஷம் அதெல்லாம் போய்விட்டது, அதன் மதிப்பு யாருக்கும் தெரியவில்லை. அதனால் ஆளவந்தார் பலகை என்ற இடத்தை எடுத்து விட்டனர், இந்த தேவஸ்தான நிர்வாகத் துறையினர் எடுத்து விட்டனர் என்று அறையர் ஸ்வாமி சொன்னார். வேளுக்குடி ஸ்வாமி ஸாதித்தார் என்றால் சில விஷயங்கள் அபூர்வமாக இருக்கலாம். அவர் பல க்ரந்தங்கள் ஸேவித்தவர். பல மகான்களிடம் காலக்ஷேபம் கேட்டவர், பண்ணினவர். பல விஷயங்களை பல க்ரமங்களை அனுசரித்து காலக்ஷேபங்களை க்ரஹித்தவர். அவர் ஸாதித்த விஷயங்களுக்கு தனிப்பெருமை உண்டு.

அடியேன் சொன்னது போல் ஸ்ரீபாஷ்யத்தில் இத்தகைய எவ்வளவோ இடங்கள் இருக்கின்றன. இன்னொரு இடம் சொல்கிறேன், இன்னொரு க்ரமும் சொல்கிறேன். காரப்பங்காடு ஸ்வாமி, வேளுக்குடி ஸ்வாமி இவர்களெல்லாம் எந்த க்ரந்தத்தை காலக்ஷேபம் ஸாதித்தாலும் அந்தந்த க4ட்டம் என்று வரும்போது ஒரு அவதாரிகை ஸாதிப்பார்கள். அந்த க்ரந்தத்திலேயே அவதாரிகை இருந்தால் அது வேறு விஷயம். அந்த ப்ரகரணத்தை, அந்த க4ட்டத்தை ஆரம்பிக்கும் முன் ஒரு அவதாரிகை ஸாதித்த பின்பே மேலே விஷயங்களை எடுத்து ஸாதிப்பார்கள். பிற்பட்டவர்கள் யாரும் இந்த க்ரமத்தை அனுசரிக்கவில்லை. இது மிகவும் முக்கியமானது. இந்த க்ரமத்தையெல்லாம் அனுசரித்தவர் வேளுக்குடி ஸ்வாமி, ஸ்ரீபாஷ்யத்திலும் சரி, பகவத் விஷயத்திலும் சரி. பகவத் விஷயத்தில் ஒவ்வொரு திருவாய்மொழிக்கும் காலக்ஷேபத்தில் ப்ரவேசத்தை எடுத்துக் கொள்வதற்கு முன்பாக, ஒரு உபந்யாஸம் ஒன்றரை மணிநேரம் ஸ்வாமியின் அவதாரிகை அமையும். ஒவ்வொரு திருவாய்மொழிக்கும், ஒவ்வொரு பதிகத்துக்கும் அதேபோல் அவதாரிகை அமையும். அவர் முதல்நாள் அவதாரிகை ஸாதித்துவிட்டு மறுநாள் தான் பிரவேசத்தை எடுத்துக் கொள்வார்.

இப்படித்தான் பகவத்விஷயம் முழுவதும் காலக்ஷேபம் ஸாதித்திருக்கிறார். பல திருவாய்மொழிகளுக்கு அவதாரிகை ஸாதித்த கேசட்டுகள் அடியேனிடம் இருக்கின்றன. பகவத்விஷய க்ரந்த காலக்ஷேபம் கொஞ்சம் அடியேனிடம் இருக்கின்றன. ஸ்வாமியின் கடந்த காலங்களில் இப்படி அவர் ஸாதிப்பது என்பது முக்கியம்.

ஶ்ருதிக$_4$ட்டம் என்று வருகிறது. அந்த ஶ்ருதிக$_4$ட்டம் வரும்பொழுது ஸ்வாமி அதற்கு அவதாரிகை ஒன்று ஸாதித்திருக்கிறார். மிகவும் ஆச்சர்யமான அவதாரிகை அது. அதை ஆரம்பிக்கும் முன் இதற்கு அவதாரிகை ஸாதித்திருக்கிறார். அந்த ஶ்ருதிக$_4$ட்டதிற்கு என்ன பூர்வபக்ஷம் என்ன ஸித்தாந்தம் அந்த இடத்தில் விஷயவாக்கியம் என்ன என்று ஆச்சர்யமாக ஸாதித்திருக்கிறார். அத்வைதிகள், "நிர்விசேஷம்ப்ரஹ்ம" என்று சொல்வதுதான் இந்த இடத்தில் பூர்வபக்ஷம் .அதைத்தள்ளி "ஸவிசேஷம்ப்ரஹ்ம" என்று எம்பெருமானார் காட்டுகிறார். ஶ்ருதிக$_4$ட்டத்திற்கே அதுதான் விசேஷம். "ப்ரஹ்மம் ஸவிசேஷம்" என்று நிரூபிக்கும் காலத்தில் நம் ஸ்வாமி எம்பெருமானார் எந்த வேதவாக்கியத்தை கொண்டு இதை நிரூபிக்கிறார் என்றால்-

"ஸதேவ ஸோம்ய இதமக்ராஸீத் ஏகமேவ அத்விதீயம்" என்ற ஶ்ருதி வாக்கியம் இந்த இடத்தில் **"ஸவிசேஷம் ப்ரஹ்ம"** என்பதற்குப் ப்ரமாணம். இந்த ஶ்ருதிக்கு உண்டான தாத்பர்யார்த்தத்தை திருவுள்ளம் பற்றி எம்பெருமானார் இங்கே இப்படி அருளிச் செய்திருக்கிறார், என்று ரொம்ப அழகாக வேளுக்குடி ஸ்வாமி ஸாதிக்கிறார். ஒரு சில ப்ரமாண வசனங்களுக்கு பதார்த்தம், வாக்யார்த்தம், தாத்பர்யார்த்தம் மூன்றும் விசேஷமாய் அமைந்திருக்கும். தாத்பர்யார்த்தம் என்று வரும் போது ஒரு சில ஶ்லோகங்களுக்கு ப்ரமாண வசனங்களுக்கு, இரண்டு தாத்பர்யார்த்தங்களும் உண்டு. அதெல்லாம் நம் ஆசார்ய புருஷர்கள் விவரித்திருகிறார்கள். ஸ்வாமி எம்பெருமானார் பதார்த்தத்தை விசேஷமாக கொண்டு வேதார்த்த ஸங்க்ரஹத்தின் ஆரம்பத்தில் அருளிச்செய்கிறார். வாக்யார்த்தத்தையும், ஸ்ரீபாஷ்யத்தையும் வேறு ஒரு இடத்தில் திருவுள்ளம் பற்றுகிறார். இந்த இடத்தில் அவர் திருவுள்ளம் பற்றுவது இந்த ஶ்ருதி வாக்கியத்தின் தாத்பர்யார்த்தத்தை என்று இந்த விஷயத்தை அவதாரிகையிலே மிகவும் அழகாக காண்பித்திருக்கிறார் நம் ஸ்வாமி.

“ஸதேவ ஸோம்ய இதமக்ராஸீத் ஏகமேவ அத்விதீயம்” என்ற ஶ்ருதி வாக்கியம் சாந்தோக்கிய உபநிஷத் ஸத்வித்யா பிரகரணத்தில் வருகிறது. **“தத்த்வமஸி ஸ்வேதகேதோ”** , என்ற வேதவாக்கியம் ஒன்பது இடங்களில் வருகிறது. இந்த வாக்கியத்திற்கு அர்த்தம் அருளிச்செய்ய நம் ஸ்வாமி பலமணி நேரங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறார். அவை அனைத்தும் அடியேனிடம் இருக்கின்றன. இது மிகவும் ஆச்சர்யமான க4ட்டம். ஸ்வாமி திருவாக்கிலே இந்த வாக்கியத்திற்கு அத்யாஶ்சர்யமாய் அர்த்தம் அருளிசெய்யப்பட்டிருக்கிறது. இதற்கு மேலே ஸர்வத்ர ப்ரஸித்த் யதிகரணத்திற்கு விஷய வாக்கியம்.

“ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம தஜ்ஜலாம் இதி ஶாந்த உபாஸீத” , என்று வருகிறது. ஸ்வாமி எம்பெருமானாருக்கு திருவுள்ளம் என்ன? பக்தி. இந்த **“பகவத்பக்தி”** என்கிற ஒரு விஷயத்தை, வேதாந்த தாத்பர்யமாய் காண்பிப்பதுதான் எம்பெருமானாருக்கு நோக்கு. இது அவருடைய திருவவதார ரகசியங்களில் ஒன்று. இந்த பக்திக்கு விசேஷ அம்சங்கள் எல்லாம் உண்டு. அதில் ஒரு ஶ்ருதி ஒரு அம்சத்தை காண்பிக்கும், மற்றொரு ஶ்ருதி மற்றொரு அம்சத்தை காண்பிக்கும், என்று எடுத்துக்கொண்டு போகவேண்டும். எம்பெருமானார் இந்த ஶ்ருதி வாக்கியங்களுக்கு அர்த்தம் அருளிச்செய்யும் காலத்தில், ஶ்ருதி வாக்கியத்தினாலே காண்பிக்கப்படும் பகவத் பக்தியின் அம்சம் என்ன என்பதையும் காண்பிப்பார். இவையெல்லாம் இந்த காலக்ஷேபம் ஸாதிக்கும் காலத்தில், வித்வான்கள் எடுத்துக்காட்ட வேண்டிய விஷயங்கள். இந்த **“ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம”** , என்ற ஶ்ருதி வாக்கியம், பகவத் பக்தியினுடைய எந்த அம்சத்தை காண்பிக்கிறது என்று விளக்குகின்ற காலத்தில், நம் வேளுக்குடி ஸ்வாமி இதற்கு உதாரண புருஷர்களாக இரண்டு பேரை எடுக்கிறார். ஒருவர் ப்ரஹ்லாதாழ்வான், மற்றொருவர் நம்மாழ்வார். இவர்கள் படியை நன்றாக விவரித்து காண்பித்து, இந்த வேதவாக்கியத்தின் தாத்பர்யத்தை மிகவும் அழகாக நிரூபிக்கிறார். ஸ்வாமி எம்பெருமானார் திருவுள்ளக் கருத்தை, நன்றாக க்ரஹித்த நம் வேளுக்குடி ஸ்வாமியின் ரொம்ப ஆச்சர்யமான உபந்யாஸம் அது. அந்த உபந்யாஸம் அடியேனிடம் இருக்கிறது.

இதற்கு அடுத்தபடியாக ஸ்மிருதி புராணக4ட்டம் என்று வருகிறது. ஸ்மிருதிக4ட்டம், புராணக4ட்டம் என்று தனித்தனியாக சொல்லக்கூடாது.

இரண்டும் சேர்த்து ஒரே பிரகரணம். ஸ்மிருதி எடுக்கும்போதும் ஸ்மிருதி புராணக$_4$ட்டம் என்று தான் சொல்லவேண்டும். புராணத்தை எடுக்கும்போதும் ஸ்மிருதி புராணக$_4$ட்டம் என்றுதான் சொல்லவேண்டும். ஸ்வாமி எம்பெருமானார் ஸ்மிருதி புராணக$_4$ட்டம் என்கிறார் ஸ்பஷ்டமாக. ஸ்மிருதி என்றால் கீதை, புராணம் என்றால் விஷ்ணுபுராணம். முதலில் கீதார்த்தத்தை காண்பிக்கிறார், அதன்பிறகு ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் இருந்து ஶ்லோகங்களை எடுத்திருக்கிறார். மறுபடியும் கீதாஶ்லோகம் கொண்டு முடிக்கிறார். முதலில் கீதை ஶ்லோகம் வருகிறது, விஷ்ணுபுராணம் வருகிறது மறுபடியும் கீதை வருகிறது. இந்த கீதைக்குள் உள்ளடக்குகிறார் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தை ஸ்வாமி எம்பெருமானார். அதற்கு ஒரே அந்தஸ்து கொடுக்கவில்லை எம்பெருமானார். ஒரே அந்தஸ்து கொடுக்கக்கூடாது. இது ஜீவாத்மா பண்ணின க்ரந்தம், அது பரமாத்மா பண்ணின க்ரந்தம். அதில் ஒருவன் ஸர்வக்ஞன், இன்னொருவன் ஸம்சாரி. அதனால் சொல்லும்போது ஸ்மிருதி புராணம்க$_4$ட்டம் என்று சொல்கிறார். ஸ்மிருதிக$_4$ட்டம், புராணம்க$_4$ட்டம் என்று தனித்தனியாக சொல்லவில்லை. அந்த ஸ்மிருதிக$_4$ட்டத்துக்குள்ளேயே புராணத்தை அடக்குகிறார் எம்பெருமானார்.

இந்த இடத்தில் இரண்டு விஷயம். ஒன்று அத்வைதிகள் பூர்வபக்ஷத்தை சொல்லும் காலத்தில், அதற்கு ப்ரமாணமாக முதலில் ஶ்ருதியை எடுக்கிறார்கள், அதன்பின் விஷ்ணுபுராண ஶ்லோகங்களை எடுக்கிறார்கள், அதற்கு பின்தான் கீதையை எடுக்கிறார்கள். அவர்களுடைய பௌர்வாபர்யக்ரமம் என்னவென்றால், முதலில் ஶ்ருதி, அதன்பின் விஷ்ணுபுராணம் அதன்பின் கீதையை எடுக்கிறார்கள். அந்த க்ரமத்திலேயே பூர்வபக்ஷத்தை அமைத்திருக்கிறார் நம் ஸ்வாமி எம்பெருமானார். ஆனால் அதற்கும் மேலே, அந்த பூர்வபக்ஷத்தை தள்ளி, ஸித்தாந்தத்தை சொல்லும் காலத்தில், இவர் ஒரு க்ரமத்தை அனுசரிக்கிறார். முதலில் ஶ்ருதி, அதன் பின் ஸ்மிருதி, அதன் பின் புராணம் அதிலும் புராணத்தை ஸ்மிருதியில் உள்ளடக்குகிறார். இவர் அனுசரித்த க்ரமம் வேறு, பூர்வபக்ஷிகள் அனுசரித்த க்ரமம் வேறு. இவர் அமைத்த க்ரமத்திற்கு தாத்பர்யம் என்னவென்றால், என்ன தான் பெரியவராக இருந்தாலும், **“பகவான்பராசரர்”** என்று சொன்னாலும், அவர் அருளிச்செய்த க்ரந்தம் எவ்வளவு உயர்வாக இருந்தாலும், **“பகவான்”** அருளிச்செய்த கீதைக்கு ஸமமாக எடுக்கமுடியாது. அந்த

அர்த்தத்தை காண்பிக்கிறார் அங்கு ஸ்வாமி எம்பெருமானார். அது மாத்திரம் இல்லை, அந்த ஸ்மிருதியில் புராணத்தை உள்ளடக்குவதற்கு இன்னொரு அபிப்ராயம் இருக்கிறது. அங்குதான் அது மிகவும் அழகு, ரசமானது. அதை வேளுக்குடி ஸ்வாமி மிகவும் நன்றாக காட்டியிருக்கிறார். அவருடைய **"ஜீவாத்வைதம்"** என்ற தலைப்பில் ,அவர் ஸாதித்த விஷயங்களை, அடியேன் ஒரு கட்டுரையில் டாக்குமெண்ட் செய்தேன். அதில் கடைசியில் இந்த ரகசியத்தை வைத்திருக்கிறேன். அது எல்லோருக்கும் புரியாது. இப்போது சொன்னால் புரியும். அந்த ஸ்மிருதி வசனங்கள், புராணவசனங்கள், இருக்கின்றன அல்லவா அதற்கும் ஶ்ரோதகமாய் அமைந்திருப்பவை கீதாஶ்லோகங்கள். பகவான் பண்ணின கீதை, மகரிஷிகள் பண்ணின புராணங்களுக்கு ஶ்ரோதகமாய் இருக்கிறது என்று அர்த்தம். ஏனென்றால் பூர்வபக்ஷிகள், ஒரு விஷ்ணுபுராண ஶ்லோகத்தை எடுத்து இது அத்வைதத்தைதான் சொல்லுகிறது என்கிறார்கள். உடனே அந்த இடத்தில் கீதாஶ்லோகத்தை உதாஹரித்து கீதை தாத்பர்யத்தை காண்பித்து, இந்த ஶ்லோகம் அத்வைதத்தை காண்பிக்கவில்லை, விசிஷ்டாத்வைதத்தை தான் காண்பிக்கிறது, **"ஜீவபரபேதத்தை"** தான் காண்பிக்கிறது என்று ஸ்வாமி எம்பெருமானார் நிரூபிக்கிறார். அந்த விஷ்ணுபுராண ஶ்லோகத்திற்கு ஶ்ரோதகமாய் கீதாஶ்லோகம் இருக்கிறது. கீதைக்குண்டான பல விசேஷங்களில் இதுவும் ஒன்று. மகரிஷிகள் வாக்கியங்களுக்கு ஶ்ரோதகமாய் அமைந்திருப்பது கீதைக்குண்டான விசேஷம். இதை நம் வேளுக்குடி ஸ்வாமி மிகவும் அழகாக அந்த இடத்தை காண்பித்திருக்கிறார். இப்படித்தான் காலக்ஷேபம் ஸாதிக்கின்ற அதிகாரி பங்க்திகளுக்கு உள்புகுந்து அர்த்தத்தைச் சொல்லவேண்டும்.

இனி ஸ்ரீராமாயணத்தில் நம் ஸ்வாமி காட்டியருளியுள்ள சில விஷேஷார்த்தங்களை பற்றி பார்க்க வேண்டும். அதற்கு முன்பு ஸ்ரீராமாயணத்துடன் தொடர்புடைய, ஸ்வாமி காட்டியருளியுள்ள சில பொதுவான விஷயங்களை பற்றி விண்ணப்பிக்கிறேன். முதலில் ஒரு விஷயம், இதை ஒரே ஒருமுறை தான் ஸ்வாமி தன் உபந்யாஸங்களில் ஏதோ ஒன்றில் எடுத்துரைக்கிறார். அதாவது "ஸ்ரீவால்மீகி ராமாயணத்தை" "ஸ்ரீமத்ராமாயணம்" என்று குறிப்பிடுவது தேசிக ஸம்பிரதாயத்தில் உள்ளவர்களுடைய வழக்கம். தென்னாச்சாரிய ஸம்பிரதாயத்தை சேர்ந்தவர்கள், "ஸ்ரீராமாயணம்" என்றே

குறிப்பிடுவார்கள். ஸ்வாமி “ஸ்ரீமத்ராமாயணம்” என்றால் என்ன அர்த்தம், “ஸ்ரீராமாயணம்” என்றால் என்ன அர்த்தம் என்பதை நன்கு விளக்கி, “ஸ்ரீமத்ராமாயணம்” என்று சொல்வதைவிட “ஸ்ரீராமாயணம்” என்று சொல்வதில் தான் அதிகமாக அர்த்தபுஷ்டி உள்ளது என்பதைக் காட்டியிருக்கிறார். “ஸ்ரீமத்ராமாயணம்” என்றால் ஸ்ரீவல்லபனான ஸ்ரீய:பதியான பகவானுடைய சரித்திரம் என்று அர்த்தம். இங்கு பிராட்டிக்கு விசேஷணத்வம் தான் உள்ளது. அவள் ப்ரகாரமாகத்தான் இருக்கிறாள். பெருமாளுடன் சேர்ந்தவளாக அவள் இருக்கிறாள். இங்கு பெருமாளுக்குத்தான் ப்ராதான்யம். பெரியபிராட்டியாருடன் எப்பொழுதும் சேர்ந்து இருப்பவனான பெருமாளுடைய திவ்யசரித்திரம் என்று அர்த்தம். ஸ்ரீராமாயணம் என்றால் பெரியபிராட்டியார், பெருமாள் இவர்களுடைய திவ்யசரித்திரம் என்று வரும். பெரியபிராட்டியார் என்ன, பெருமாள் என்ன இங்கு திவ்ய தம்பதிகளின் சரித்திரம் ஸ்ரீராமாயணம் என்று அர்த்தமாகும். ஆதலால் பெருமாளுடைய சரித்திரம் என்பதோடு பிராட்டியின் சரித்திரம் என்பதும் இங்கு சேருகிறது. அதனால் இப்படி சொல்வதிலேயே அர்த்தபுஷ்டி உள்ளது. வால்மீகியும் ஸ்ரீராமாயணம் பிராட்டி சரித்திரத்துடன் சேர்ந்திருப்பது என்பதை “ஸீதாயா: சரிதம் மஹத்” என்று சொல்கிறார். அதனால் ஸ்ரீராமாயணம் என்று சொல்வதிலேயே அதிகமான அர்த்தபுஷ்டி உள்ளது என்பதை நாம் பார்க்கலாம்.

ஆரம்பகாலத்திலிருந்தே ஸ்வாமியினுடைய ஸ்ரீராமாயண உபந்யாஸம் மிகச் சிறப்பாக அமைந்திருக்கும். அந்த காலத்தில் பக்ஷிராஜஐயங்கார் என்று ஒரு பெரியவர் இருந்தார். அவருக்கு கம்பராமாயணத்தில் மிகவும் ஊற்றம் உண்டு. அவர் ஒருமுறை நம் வேளுக்குடிஸ்வாமியிடம் வந்து, “தேவரீர் ஸ்ரீராமாயணத்தை மிக ஆச்சர்யமாக உபதேசிக்கிறது, எல்லோரும் கேட்டு மிகவும் ஆனந்திக்கிறார்கள். ஆனால் தேவரீருடைய உபந்யாஸங்களில் கம்பராமாயணத்தை பற்றி எந்தவிதமான ஒரு விஷயமும் காணப்படுவதில்லை. கம்பரை கம்பநாட்டாழ்வார் என்று சிறப்பித்துச் சொல்வது ஸ்ரீவைஷ்ணவர்களுடைய வழக்கம். அதுதான் ஸம்ப்ரதாயம் .அவர் ‘சடகோபர் அந்தாதி’ என்னும் ஒரு மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு அந்தாதியை ஆழ்வார் விஷயமாக எழுதியுள்ளார். அதுவும் அனைவரும் அறிந்ததே. தேவரீர் ஸ்ரீவால்மீகி ராமாயணத்தில் இருந்து விஷயங்களை எடுத்துச் சொல்வதை போன்று ஆங்காங்கே கம்பராமாயணத்தில் இருந்து விஷயங்களை எடுத்து ஸாதிக்கும்படி பிரார்த்தித்துக் கொள்கிறேன்” , என்று சொன்னார். ஸ்வாமிக்கு இதுவும் மிகவும்

நியாயமாகப்பட்டது. உடனே கம்பராமாயணத்தை எடுத்துக்கொண்டு அதில் உள்ள படலங்கள், அதற்கு விளக்கமாக அமைந்த உரைகள், குறிப்பாக கோபாலகிருஷ்ணமாச்சார்யார் எழுதியுள்ள உரை, அதையெல்லாம் படித்து அதிலும் மிகத்தேர்ச்சி பெற்றார். அதன் பிறகு ஸ்ரீராமாயண உபந்யாஸம் எங்கு செல்வதாக இருந்தாலும் ஆங்காங்கே கம்பராமாயணத்தில் இருந்தும் விஷயத்தை எடுத்துச் சொல்லும் ஒரு வழக்கத்தை மேற்கொண்டிருந்தார். இதனால் அவரது உபந்யாஸங்கள் மேலும் சிறப்பாக வாய்ந்தவையாக விளங்கின.

இனி பொதுவாக நம் ஸ்வாமி காட்டியுள்ள ஒரு சிறப்பு நமக்கு தெரிய வேண்டும். அதாவது ஸ்ரீவால்மீகி இராமாயணத்திற்கு உண்டான ஒரு சிறப்பு, "படிகொண்ட கீர்த்தி ராமாயணம் என்னும் பக்திவெள்ளம் குடிகொண்ட கோவில் இராமானுசன்" என்பது அமுதனாருடைய திருவாக்கு. ஸ்ரீராமாயணமாகிற பக்தி வெள்ளம் குடிகொண்ட கோவில் இராமானுசன். அந்த ஸ்ரீராமாயணம் எப்படி இருக்கிறது என்றால் அது படிகொண்ட கீர்த்தி வாய்ந்தது. படிகொண்ட கீர்த்தி அது என்ன என்பதை தாமே எழுதிய கட்டுரையில் மிக அழகாக விளக்குகிறார் நம் ஸ்வாமி. ஸ்ரீராமாயணம் என்னும் தலைப்பில் அவர் கட்டுரை ஒன்று அமைந்துள்ளது. அதில் ஸ்ரீராமாயணத்திற்குண்டான ஒரு மிகச்சிறப்பு என்ன என்றால், படிகொண்டது என்பதை விளக்குகிறார். ஒரு ரத்னவியாபாரியிடம் ஒரு உயர்ந்த இரத்தினக்கல் இருக்கிறது. ஒரு கோணத்தில் ஒரு வர்ணம் அழகாக பிரகாசிக்கிறது அதைப் பார்த்து மிகவும் ஆச்சர்யப் படுகிறான் ஆனந்தபடுகிறான். உடனே மற்றொரு கோணத்தில் பார்க்கிறான் அதே வைரக்கல் மற்றொரு வண்ணம் பிரகாசிக்கிறது, அதைப் பார்த்து ஆனந்த படுகிறான் ஆச்சர்யப்படுகிறான். திரும்பவும், மற்றொரு கோணத்தில் பார்த்தால் மற்றொரு வர்ணம் பிரகாசிக்கிறது மறுபடியும் ஆனந்தமும் ஆச்சர்யமும் படுகிறான். ஒரு கல்லுக்கு இவ்வளவு சிறப்பு இருக்கும் என்றால் ஸ்ரீராமாயணத்திற்கு எவ்வளவு சிறப்பு இருக்க வேண்டும் .அவ்விடத்தில் தான் படிகொண்ட கீர்த்தி இராமாயணம் என்னும் சிறப்பு வருகிறது. அதாவது ஸ்ரீராமாயணத்தில் வஸ்துநிர்தேஸம் இது. ஸ்ரீராமாயணத்தில் மையக்கருத்து என்று பார்க்கும் அளவில் ஒரு கோணத்தில் பார்த்தால் ஒரு அர்த்தம் பிரகாசிக்கும் அது மையக்கருத்தாக இருக்கும். மற்றொரு கோணத்தில் ஸ்ரீராமாயணத்தை பார்த்தால் அப்பொழுது மற்றொரு அர்த்தம் பிரகாசிக்கும் அப்பொழுது அது மைய கருத்தாகவும் அமையும்.மற்றொரு கோணத்தில் பார்க்கும் பொழுது அப்போது வேறு ஒரு அர்த்தம் பிரகாசிப்பிக்கும்.

இப்படி ஒவ்வொரு கோணத்திலும் வெவ்வேறு அர்த்தங்களைக் கொடுத்து அதுவே மையக் கருத்தாகவும் அமையும். அதுதான் தனிசிறப்பு. இப்படி இராமாயணத்திற்கு உண்டான கீர்த்திதான் “படி கொண்ட கீர்த்தி” .

“வேத வேத்யே பரே பும்ஸி ஜாதே தசரதாத்மஜே | வேத: ப்ராசேதஸாதாஸீத் ஸாக்ஷாத் ராமாயணாத்மநா:||” என்று ஸ்காந்த புராண ஶ்லோகம். இந்த ஶ்லோகம் நித்யமும் பாராயணம் பண்ணும் காலத்தில் உபக்ரமத்தில் பாராயணம் செய்யப்படுகிறது. இந்த ஶ்லோகத்தின் அர்த்தம் என்னவென்றால், பகவானுடைய இந்த திருவவதாரத்தை அனுபவிப்பதற்காக வேதபுருஷன் வால்மீகியாக திருவவதாரம் கொண்டனன். அதனால் வேத புருஷனின் திருவவதாரம் ஸ்ரீராமாயணம் என்பது ஒரு சிறப்பு. வேதமே ஸ்ரீராமாயணமாக அவதரித்தது. குலசேகராழ்வார், ஸ்ரீராமபிரானை கொண்டாடும் போது ஸ்ரீராமாயணம் போலவே இனிப்பவனே என்கிறார். வால்மீகி ராமாயணத்தை இயற்றிய பிறகு, அதை முதன் முதலில் ஸ்ரீராமபிரானுடைய குழந்தைகளான லவகுசர்களுக்கு வால்மீகி உபதேஸம் பண்ணுகிறார். அவர்களுக்கு உபதேஸம் பண்ணும்பொழுது அதை வேதத்திற்கு உபப்ரஹ்மணமாக விளக்கிச் சொல்கிறார்.

“ஸ து மேகா$_4$விநௌ த்$_4$ருஷ்ட்வா வேதே$_4$ஷு பரிநிஷ்டிதௌ|
வேத$_3$வுபப்$_3$ருஹ்மணார்த்தாய தாவ-அக்$_3$ராஹ்யத ப்ரபு$_4$:”

உப$_3$ப்ரஹ்மணம் என்றால் விளக்கம் என்று அர்த்தம். வேதத்திற்கு விளக்கமாக அவர் ஸ்ரீராமாயணத்தை உபதேஸம் பண்ணுகிறார். இது ஸ்ரீராமாயணத்திலேயே வ்யக்த்தம். இப்படி வேதபுருஷனுடைய திருவவதார விசேஷம் ஸ்ரீராமாயணம். இதைப்போன்று திவ்யதம்பதிகளுடைய வைபவபரமாய் அமைந்துள்ளது ஸ்ரீராமாயணம். ஸ்ரீராமாயணம் திவ்யதம்பதிகளில் பகவானுடைய பெருமையாவதென்ன, பிராட்டியின் பெருமையென்ன, இருவருக்கும் உண்டான சேர்த்தியின்பெருமையென்ன இப்படி திவ்யதம்பதிகளுடைய வைபவம் முப்புரியூட்டியனவாறு அமைந்துள்ளது. திவ்யதம்பதிகளிடத்திலே பரஸ்பரம் இருவருக்குமிடையே இருக்கும் ஒரு பரிமாற்றம் என்ன? அவர் ஒருவரை குறித்து மற்றவர் சொல்லிய வார்த்தைகள் என்ன? இது போன்ற விஷயங்களை தெள்ளத்தெளிவாக வால்மீகி பகவான் ஸ்ரீராமாயணத்திலே விளக்கியுள்ளார். நம்முடைய ஆசார்யர்கள்

ஸ்ரீராமாயணத்தை சரணாகதி சாஸ்திரம் என்றே வர்ணிக்கிறார்கள். குறிப்பாக பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த தனிஶ்லோகி வ்யாக்கியானதிலும், தேசிகனின் அபயப்ரதானஸாரம் என்ற ரகசிய க்ரந்தத்திலேயும் ஸ்ரீராமாயணம் சரணாகதி சாஸ்திரம் என்பதை நன்கு விளக்கி அருளியுள்ளார்கள்.

சாஸ்த்ர ஸங்கிரகம் ஆன அர்த்த பஞ்சகத்தை சாஸ்த்ரத்தை விட தெள்ளத்தெளிவாக எல்லாரும் புரிந்து கொள்ளும் வகையில் ஸ்ரீராமாயணம் தெரிவிக்கிறது. இது ஸ்ரீராமாயணத்திற்குண்டான மற்றொரு சிறப்பாகும். அர்த்த பஞ்சகம் என்றால் ஐந்து அர்த்தங்கள் - ஜீவாத்மா ஸ்வரூபம், பரமாத்மா ஸ்வரூபம், விரோதி ஸ்வரூபம், உபாய ஸ்வரூபம், உபேய ஸ்வரூபம் என்னும் ஐந்து விஷயங்களைப் பற்றியது. இதை நாம் ஸ்ரீ ராமாயணத்தின் மூலம் நன்குகற்று தெளியலாம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஸ்ரீராமாயணத்திற்கு உண்டான தனிப்பெருமையாவது மிகவும் விசேஷமாக பிராட்டியுடைய வைபவம். அதை நமக்கும் பிரகாசிக்க வேண்டும் என்று தோன்றியதாகும் ஸ்ரீராமாயணம் என்று அர்த்தம். இதை வால்மீகி மகரிஷியே தெரிவிக்கிறார் .நாம் பெற்ற குழந்தைக்கு மூன்று பெயர் வைப்போம். அதுபோல் வால்மீகி தான் பெற்ற குழந்தையான ஸ்ரீராமாயணத்திற்கு மூன்று திருநாமங்களை இடுகிறார். முதலில் வைத்த பெயர் "பௌலஸ்தியவதம்" என்பது. புலஸ்தியர் என்பவர் ஒரு பெரிய மகரிஷி ஆவார். இவர் வசிஷ்டருக்கு சமமான ஒரு பெருமையும், கீர்த்தியும் வாய்ந்தவர். இவர்தான் ராக்ஷஸர்களுக்கு மூலபுருஷர். இவருடைய வம்சத்தில் தோன்றிய படியினாலே ராவணன் பௌலஸ்தியன் என்று வழங்கப்படுகிறான். அவனுடைய வதத்தை பற்றி சொல்லும் க்ரந்தமாக இருப்பதனால் "பௌலஸ்தியவதம்" என்னும் பெயரை வால்மீகி ஸ்ரீராமாயணத்திற்கு இடுகிறார். அடுத்தபடியாக ஸ்ரீராமபிரானுடைய திவ்யசரித்திரத்தை இந்த க்ரந்தம் நன்கு விவரிப்பதாக அமைந்துள்ளது. அதனால் இதற்கு ஸ்ரீராமாயணம் என்னும் ஒரு பெயரை இடுகிறார் வால்மீகி. ஆனால் இவ்விரண்டு திருநாமங்களினால் அவருக்கு திருப்தி பிறக்கவில்லை. பகவானுடைய திருவுள்ளமானது என்ன என்பதை சிறிது கணிசித்து பார்க்கிறார். அப்பொழுது அவருக்கு ஒரு உண்மை புலப்படுகிறது. அதாவது பகவான் நரசிம்மாவதாரம் கொண்டான் அந்த அவதாரத்தில் அதிகமான பெருமை யாருக்கு என்றால் பரம பாகவதோத்தமனான பிரகலாதாழ்வானுக்கு தான். அங்கே ஒரு மூஷூர்த்தம் தான் நரசிம்மமூர்த்தி எழுந்தருளி இருந்தார். அங்கு பிராட்டியுடைய பிரஸ்தாவம் இல்லை.

நரசிம்மமூர்த்தியுடைய அந்த உக்கிரத்தை பார்த்த பிராட்டி அவரிடத்தில் நெருங்குவதற்கு பயந்தாள். அடுத்தபடியாக பகவான் திருவவதாரம் கொண்டது ஸ்ரீராமாவதாரம். அதில் பிராட்டிக்கே அதிகமான சிறப்பை ஸங்கல்பித்துள்ளான். அதற்கு அடுத்தபடியாக அவன் தான் கொண்டுள்ள ஸ்ரீகிருஷ்ணாவதாரத்தில் தன்னுடைய சிறப்பை மிகவும் பிரகாசித்துள்ளான். அதனால் பிராட்டியினுடைய வைபவம் தோற்றுவதற்காகவே பகவான் ஸ்ரீராமபிரானாகத் திருவவதாரம் கொண்டனன் எனும் உண்மை வால்மீகி பகவானுக்கு புலப்படுகிறது. பகவானுடைய திருவுள்ளத்தை கணிசித்த வால்மீகி ஸ்ரீராமாயணத்திற்கு "சீதாயா: சரிதம் மஹத்" என்று பெயரிடுகிறார். மகத்தான சரிதம் சீதை பிராட்டியின் சரித்திரம் என்கிறார். மகத்தான என்று விஷேணம் இடுகிறார்.

ஸ்ரீராமாயணத்தில், ஸ்ரீராமாவதார காலத்திலேயே பெருமாளுக்கும் மிகப் பெருமை உண்டு. இளையபெருமாள் என்ன, பரதாழ்வான் என்ன, சத்ருக்னாழ்வான் என்ன அனைவருக்குமே தனிச்சிறப்புகள் உண்டு. இதற்கும் மேலே புராணபுருஷர்களுக்கு இங்கே சிறப்பை நாம் பார்க்கிறோம். சரபங்கர்,சபரி,சடாயு மஹாராஜர்,திருவடி போன்ற பல புராண புருஷர்கள் மிகவும் பெருமை வாய்ந்தவர்களாகப் பார்க்கப் படுகிறார்கள். ஆனால் எல்லோரையும் விட அதிகமான பெருமை யாருக்கு என்றால் அது பெரிய பிராட்டியாருக்குத்தான். இப்படித்தான் பகவான் இந்தத் திருவவதாரத்தை ஸங்கல்பித்துள்ளான் என்பதை உணர்ந்த வால்மீகி "சீதாயா: சரிதம் மஹத்" என்று சொல்கிறார். மஹத்தான சீதாபிராட்டியின் சரிதம் இந்த ஸ்ரீராமாயணம். ஆக இதுதான் பகவானுக்கும் திருவுள்ளம். இந்தத் திருநாமம்தான் வால்மீகிக்கும் திருவுள்ளம் என்று நாம் அறியலாம்.

இந்த ஸ்ரீராமாயணத்தைப் பற்றி சொல்ல வரும் சமயத்தில் நான் ஒரு விஷயம் சொன்னேன். சாஸ்த்ர க்ரந்தங்களைப் பார்க்கும் சமயத்தில் ஸம்ப்ரதாய க்ரந்தங்களையும் பார்த்துக் கொண்டு வர வேண்டும். ஸம்ப்ரதாய க்ரந்ததங்களை அனுபவிக்கும் காலத்தில் சாஸ்த்ர க்ரந்தங்களையும் பார்த்துக் கொண்டு வர வேண்டும் என்பது தான் நம் முன்னோர்கள் கண்ட முறை. ஸ்ரீராமாயணம் என்பது ஸம்பிரதாய க்ரந்தம், மிகவும் சீறிய அர்த்தங்களை எல்லாம் ஸ்ரீராமாயணத்தில் இருந்து எடுத்திருக்கிறார்கள் நம் பெரியோர்கள். அதிலே ஸ்ரீராமாயணத்தின் அர்த்தத்தை அனுபவிக்கும் காலத்தில் சாஸ்த்ர முகத்தால் அனுபவிக்க வேண்டும். அதாவது எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யம் அருளிச் செய்த காலத்திற்கு

பின்பு தோன்றிய வியாக்கியானங்கள் எதுவாக இருந்தாலும் அதை அனுபவிக்கும் காலத்தில் ஸ்ரீ பாஷ்யத்தை கொண்டு அனுபவிப்பது என்பது ஒரு க்ரமம். அந்த க்ரமத்தை நமக்கும் காண்பித்து கொடுத்தவர் பகவத் விஷய காலக்ஷேபத்தின் ஆராயிரப்படிகாரர் திருகுருகைபிரான்பிள்ளான். சாக்ஷாத் எம்பெருமானாரால் தம்முடைய திருக்குமாரராக அபிமானிக்கப்பட்டவர். இந்த ஆறாயிரப்படியை ஸேவித்தால் தெரியும்.

அதேபோல் ஸ்ரீராமாயணத்தை அனுபவிக்கும் காலத்தில், ஆங்காங்கே ஸ்ரீபாஷ்யத்தை உபயோகம் கொள்ள வேண்டும். இதற்கு பல உதாரணங்களை வேளுக்குடி ஸ்வாமி குறிப்பிடுவது உண்டு. திருப்பாவையில் நிறைய ஸ்ரீபாஷ்ய அர்த்தங்களை சொல்வார் வேளுக்குடி வரதாச்சார்யார் ஸ்வாமி. பகவத்கீதையை விவரிக்கும் காலத்தில் நிறைய ஸ்ரீபாஷ்ய விஷயங்களை எடுத்துக் கொள்வார். திருநெடுந்தாண்டகம் சாஸ்த்ரபரம். இது ஒரு திவ்யசாஸ்த்ரம். அதை சொல்லும் காலத்தில், சாஸ்த்ரபரமாகவே பெரியவாச்சான்பிள்ளை அர்த்தத்தை காண்பித்திருக்கிறார், வ்யாக்கியானம் பண்ணியிருக்கிறார், ஸ்ரீபாஷ்யத்தின் அர்த்தங்கள் எல்லாம் அதில் நிறைய வருகிறது. அது வரும் போதெல்லாம் ஸ்ரீபாஷ்ய அனுபவம் நமக்கு விஷயமாக வேண்டும்.

கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ உ.வே.ஜகத்குரு கா4தி அனந்தாச்சார்யார் ஸ்வாமி மிகவும் ஆச்சர்யமாக ஒரு க்ரந்தம் பண்ணியிருக்கிறார். வால்மீகி பாவதீபம் என்கிற க்ரந்தம். அதிலே வால்மீகி பகவான் பரத்வநிர்ணயம் எப்படி பண்ணுகிறார் என்ற விஷயத்தை இருபது ஸம்ஸ்க்ருத ஶ்லோகங்களில் நிரூபிக்கிறார். அதற்கு அவர் ஸம்ஸ்க்ருத வியாக்கியானமும் செய்து இருக்கிறார். அந்த வியாக்கியானத்தை ஸ்ரீ உ.வே.டி.ஏ.கிருஷ்ணமாச்சார்யார் ஸ்வாமி தமிழில் மொழிபெயர்த்து ஸப்தகிரியில் வெளியிட்டார். அதெல்லாம் புத்தகமாக போடவேண்டும் என்று அடியேன் கணினியில் எல்லாம் பண்ணி வைத்திருந்தேன். அதை ஸ்ரீ.உ.வே. டி.ஏ. கிருஷ்ணமாச்சார்யார் ஸ்வாமி மற்றும் தி. கோபாலாச்சார்யார் ஸ்வாமி ப்ரூஃப் பார்த்தார்கள். இந்த "வால்மீகி பா4வதீபம்" என்கிற க்ரந்தத்தை, டி. ஏ. கிருஷ்ணமாச்சார்யார் ஸ்வாமி அவருடைய சதாபிஷேக மலராய் வரவேண்டும் என்று அடியேன் ஒருவனுக்குத் தான் அனுமதி கொடுத்திருந்தார். தன்னைப் பற்றி வேறு எந்த மலரும் வரக்கூடாது என்று தன் மீது அபிமானமாய் இருப்பவர்கள் எல்லோரையும் மிகவும் நிர்ப்பந்தம் பண்ணினார். ஆனால் இந்த காதி ஸ்வாமியின் “வால்மீகி பா4வ தீபம்”

எல்லோருக்கும் பிரகாசமாக பயன்பட வேண்டும் என்று தீவிரமாக இருந்தார். அது நம் துர்லபம் என்னவென்றால் இந்த க்ரந்தம் வெளிவரும் சமயம் அவரது திருத்தம்பியார் கோபாலாச்சார்யார் ஸ்வாமி பரமபதித்துவிட்டார். அதனால் அந்த சமயம் அந்த க்ரந்தம் வெளிவரவில்லை. அதன் பிறகும் அடியேனுக்கு இரண்டாவது ப்ரூஃப் ஆத்தான் ஸ்வாமி பார்த்து கொடுத்தார். அப்போதும் அந்த க்ரந்தம் வெளிவரவில்லை. அதன் மூலத்தை மாத்திரம் ஸமீபத்தில் சதாபிஷேகம் கண்ட காதி ஸ்வாமி வெளியிட்டார். அது இருபது ஶ்லோகங்கள். அதற்கு உண்டான சம்ஸ்கிருத வியாக்கியானம், ஒரு சுருக்கமான அர்த்தம் ஹிந்தியில் என்று எல்லாவற்றையும் சேர்த்து ஒரு புத்தகமாக வெளியிட்டிருக்கிறார். இந்த க்ரந்தத்தை ஸேவிக்கும் காலத்தில், ஸ்ரீராமாயணத்தை எப்படி அனுபவிக்க வேண்டும் என்பதற்குண்டான வழியை அந்தக் காதி ஸ்வாமி காண்பித்திருக்கிறார்.

சாஸ்திரமுகத்தினாலே அந்த ஸ்ரீராமாயணத்தை அனுபவிக்கிறோம். அதை வால்மீகி பகவான் பரத்வநிர்ணயம் பண்ணுவதை, அருளிச் செயலில் உள்ள பாசுரங்களுக்கும், ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்திகளுக்கும் சமன்வயப்படுத்தி இரண்டையும் சேர்த்து பலவிடங்களில் சொல்லி காண்பித்திருக்கிறார் காதி ஸ்வாமி. அந்த க்ரந்தம் ஸேவிப்பதற்கு மிகவும் ஆச்சர்யமாக இருக்கும். இந்த ஸ்ரீராமாயண காலக்ஷேபத்திலே நம் வேளுக்குடி ஸ்வாமி ஆச்சர்யமாக அர்த்தங்களை காண்பித்திருக்கிறார். எப்படி ஸ்ரீபாஷ்யம் ஸாதிக்கும் காலத்தில் எம்பெருமானார் திருவுள்ளக் கருத்தை வெளிக்கொணர்ந்து காண்பிப்பாரோ, அப்படி ஸ்ரீராமாயண காலக்ஷேபம் ஸாதிக்கும் காலத்தில் நன்றாக அர்த்தவிசேஷங்களை வெளிக் கொணர்ந்து காண்பிப்பார் நம் வேளுக்குடி ஸ்வாமி. இப்படி சில விஷயங்கள் அடியேன் பொதுவாக சொன்னேன்.

இப்படி ஸ்ரீராமாயணத்தை பல கோணங்களில் பார்க்கும்போது பல அர்த்தங்கள் அந்த க்ரந்தத்திற்கு மையக் கருத்தாக நமக்கு விளங்குகின்றன. அதை பற்றி இப்பொழுது நான் சொல்கிறேன்.முதலில் முதல் ஶ்லோகத்தை நாம் எடுத்துக் கொள்வோம் .

"தபஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீவாக்விதாம் வரம்
நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர் முனிபுங்கவம்".

அதாவது ஸ்ரீவால்மீகியினுடைய ஆசிரமத்திற்கு ஸ்ரீநாரத பகவான் எழுந்தருளுகிறார். இந்த நாரத பகவான் யார் என்றால் அவர்தான் தபஸ்வாத்யாயநிரதர். அவர்தான் வாக்விதாம்வரர், முனிபுங்கவர் என்று இந்த ஶ்லோகம் தெரிவிக்கிறது. ஸ்ரீநாரத பகவானுக்கு இவை மூன்றும் விசேஷகுணங்களாக அமைந்திருக்கின்றன. இவற்றின் அர்த்தமாவது யாது என்றால்? தப: என்ற சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. அதில் முக்கியமாக நாம் சொல்ல வேண்டிய அர்த்தம் புலன்களை அடக்கி நித்திய நைமித்திக கர்மங்களைச் செய்வதில் நிஷ்டை படைத்தவர் என்பது. ஸ்வாத்யாய நிரதர்ரென்றால் வேத பாராயணத்தில் நிஷ்டை படைத்தவர் என்பது. வாக்விதாம்பரர் என்றால் சிறந்த வாக்சாதுரியம் உடையவர் என்றபடி. பிரம்மா, வியாஸர், வால்மீகி, சனகசனந்தனாதிகள் போன்ற மிகப்பெரிய ரிஷிகள் என்ன, இவர்கள் எல்லோருக்குமே உபதேஸம் செய்தருளிய பெருமை ஸ்ரீநாரதருக்கு உண்டு. அவ்வளவு ஞானமும் வாக்சாதுர்யமும் உடையவர் ஸ்ரீநாரதபகவான். முனிபுங்கவர் என்றால் முனிவர்களில் தலைசிறந்தவர் என்றபடி. முனி என்பது மனனசீலரைக் குறிக்கும். ஸதா ஸர்வ காலமும் பகவானைப் பற்றிய சிந்தனை கொள்பவர். பகவானைப் பற்றிய மனன சீலர். அவர்களில் தலையானவர் என்றபடி. இப்படிப்பட்ட பெருமை உடையவர் இந்த நாரதபகவான். தபஸ்வீ என்பது வால்மீகியை குறிக்கும். தப ஆலோசனே என்று தாது. ஸ்ரீ நாரத பகவானைக் குறித்து வால்மீகி வினவுகிறார். அப்பொழுது பரிபப்ரச்னம் என்று இந்த ஶ்லோகம் தெரிவிக்கிறது. பரி என்ற உபஸர்க்கமாவது நிர்வேத உடைமையை தெரிவிக்கிறது. அதாவது நமக்கு தெரியவில்லையே நமக்கு தெரிய வேண்டுமே என்ற கருத்துடன் கேட்கப்பட்ட கேள்வி என்பதை தெரிவிக்கிறது

ஸ்ரீ நாரதபகவானைக் குறித்து வால்மீகி 16 கேள்விகளை கேட்கிறார் என்பது பிரஸித்தமான விஷயம். அதை மேல் ஶ்லோகங்களில் நாம் காணலாம். அதில் முதல் கேள்வி குணவான் க:? என்பது. இந்த லோகத்தில் தற்பொழுது யார் இந்த திருக்கல்யாண குணங்கள் உடையவன் என 16 திருக்கல்யாண குணங்களை எடுக்கிறார் வால்மீகி.

அதில் முதன் முதலில் குணமுடையவன் யார் என்று கேட்கிறார் இவ்விடத்தில் குணவான் என்பது எந்த அர்த்தத்தில் வால்மீகியால் காட்டப்பட்டது என்பதை நம் ஆசார்யர்கள் மிக ஆச்சர்யமாக தெரியபடுத்துகிறார்கள். அதாவது இந்த குண சப்தம் இவ்விடத்திலே குண ஸாமான்யத்தை குறிக்காது என்றும், ஒரு

குணவிசேஷத்தையே குறிக்கும் என்றும் அவர்கள் செய்யும் வியாக்கியானத்தில் இருக்கும்படி. தனம் உடையவன் தனவான் எனப்படுகிறான். தர்மத்திலே ஊற்றமுடையவன் தார்மீகன். அதன்படி குணங்களை உடையவன் குணவான். இது இந்த குணவான் என்ற சப்தத்திற்கு ஸாமான்யரான நாம் கொள்ளும் அர்த்தம். யார் குணங்களை உடையவன் என்பது இங்கு விவக்ஷிதமில்லை. ஏதோ ஒரு குணவிசேஷத்தை இந்த குணவான் என்கிற சப்தம் குறிக்கிறது. அதாவது யாது என்று பார்க்குமளவில் அந்த குண விசேஷம் "ஸௌசீல்யம்" என்னும் மகா குணம் உடையவன் யார் என்பது "குணவான் க:?" என்பதற்கு அர்த்தம் ஆகும். இவ்விடத்தில் குணவான் என்னும் சப்தத்தை பலவிதமாக எடுத்துரைக்கிறார் நம் வேளுக்குடி ஸ்வாமி. அவருடைய உபந்யாஸம் மிக விசேஷமாக அமைந்திருக்கும். அவை எல்லாவற்றையும் தொகுத்து அடியேன் ஸ்வாமியின் உபந்யாஸ கட்டுரையாக "குணவான்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை வெளியிட்டுள்ளேன். அவ்விடத்திலே ஸ்வாமி காட்டும் விசேஷங்கள் அனைத்தையும் கண்டு அன்பர்கள் தெளியலாம்.

இவ்விடத்திலே ஒரே ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் அடியேன் தெரிவிக்கிறேன். அடியேன் ஏற்கனவே சொல்லியபடி ஒரு ரத்ன வியாபாரி ரத்தினக் கல்லை பல கோணங்களில் பார்ப்பதைப் போல ஸ்ரீராமாயணத்தை நாம் பல கோணங்களில் பார்க்கலாம். அப்போது பல கருத்துக்கள் ஸ்ரீராமாயணத்திற்கு மையக் கருத்தாகக் தோற்றமளிக்கும் என்று அடியேன் ஸ்வாமி ஸாதித்திருந்ததை விண்ணப்பித்திருந்தேன். அதைப் போன்று மேலும் ஒரு விஷயம். அதை ஸ்ரீராமாயணத்திற்கு மையக் கருத்தாகக் கொள்ளலாம் என்று ஸ்வாமி மிக அழகாக விளக்கிக் காட்டியுள்ளார். அதாவது உபக்ரமம் உபஸம்ஹார ந்யாயம் என்று ஒன்று உண்டு. ஒரு க்ரந்தத்தில் மையக் கருத்து எது என்று நாம் நிர்ணயிக்கும் பொழுது, அதனுடைய உபக்ரமம் எப்படி அமைந்துள்ளது, அதனுடைய உபசம்ஹாரம் எப்படி அமைந்துள்ளது, இவை இரண்டையும் சேர்த்துப் பார்த்தால், நமக்கு அந்த க்ரந்தத்திற்கு உண்டான மையக்கருத்து தெரிய வருகிறதா? என்று நாம் செய்யக்கூடிய ஆராய்ச்சி. அப்படிப் பார்த்தால் ஸ்ரீராமாயணம் "குணவான் க:" என்று ஆரம்பிக்கிறது. கடைசியில் ஸ்ரீராமன் பட்டாபிஷேகம் கொண்டான் என்று பட்டாபிஷேக ஸர்க்கத்துடன் ஸ்ரீராமாயணம் முடிவு பெறுகிறது. இப்படி ஆரம்பத்தில் குணவான் என்பது, கடைசியில் ஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் என்பது, இவை இரண்டையும் நாம் சேர்த்து

பார்க்கும்போது, பகவான் ஸ்ரீராமாவதாரக் காலத்தில் தம்முடைய திருக்கல்யாண குணங்கள் பலவற்றையும் லோகத்தாரிடையே பிரகாசிப்பித்து, கடைசியில் குணஸாம்ராஜ்ய பட்டாபிஷேகம் கொண்டனன். அதுவே இந்த திருவவதாரத்திற்கு முக்கிய ப்ரயோஜனம். இராமாயணத்திற்கு மையக் கருத்தும் இதுவே என்று ஒரு அர்த்தம். கோசல ஸாம்ராஜ்யம் பகவானுக்கு திருவுள்ளமாக இருந்திருக்கும் பக்ஷத்தில், அதையே முதல் முன்னமே பகவான் கொண்டருளியிருப்பான். ஆனால் அவனுக்கு அது ஒரு பொருட்டில்லை. தன்னுடைய திருக்கல்யாண குணங்களை லோகத்தாரிடையே முதலில் பிரகாசிப்பித்து, அதன் பிறகு தான் ராஜ்யம் கொள்ள வேண்டும் என்பது தான் அவனிடத்திலே இருந்த திவ்ய ஸங்கல்பமாகத் தெரிகிறது. அதனால் குண ஸாம்ராஜ்யம் என்ற விஷயம் தான் ஸ்ரீராமாயணத்திற்கு மையக் கருத்து என்பதை நாம் அறியலாம். இனி மேற் கொண்டு விஷயங்களை எடுத்துச் சொல்கிறேன்.

வால்மீகி கேட்ட 16 கேள்விகளுக்கும் ஸ்ரீ நாரத பகவான் ஒரே பதிலை தான் சொல்கிறார். அதாவது கேட்ட 16 திருக்கல்யாணகுணங்களும் பொருந்தியவர் இக்ஷ்வாகு குலத்தில் தோன்றிய ஸ்ரீராமபிரான். “இக்ஷ்வாகு வம்சப்ரபு: ராம:”என்கிறார் நாரதர். இந்த ஸ்ரீராமன் யார் என்றால் அவன் தான் நாராயணன் என்பது மேலே ஸ்ரீஇராமாயணத்திலே ஸ்பஷ்டமாக குறிக்கப்பட்டுள்ளது.

“பவான் நாராயணோ தேவ:” என்று தேவர்கள் எல்லாரும் ராவண வதத்திற்கு பிறகு ஸ்ரீ ராமபிரானை துதிக்கிறார்கள். இங்கே பகவான் ஸ்ரீராமபிரானாக எதற்கு திருவவதாரம் செய்ய வேண்டும் என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக மூன்று நான்கு காரணங்களை எடுக்கிறார்கள் நமது ஆசார்யர்கள். அவற்றைப் பற்றி அடியேன் ஸ்பஷ்டமாகவே தெரிவிக்கிறேன். அதற்கு முன்பு காரண பஹுத்வம் என்னும் நியாயம் நமக்கு தெரியவேண்டும். இந்த நியாயம் பல இடங்களில் வரும். குறிப்பாக, பகவானைக் குறித்து இந்த நியாயம் பல இடங்களில் வரும் என்பதை முதலில் பார்ப்போம். இந்த காரணபஹுத்வம் என்னவென்றால் ஒரு காரியம் நடப்பதற்கும் நடக்காமல் இருப்பதற்கும் பல காரணங்கள் இருக்கலாம். அதில் ஒரு காரணத்தை மாத்திரம் நாம் பற்றிக்கொண்டு, மற்ற காரணங்களை தள்ளி விடுதல் என்பது கூடாது. எல்லா காரணங்களையுமே நாம் கொள்ள வேண்டும்

என்பது அவசியம். அதுதான் இந்த நியாயம். இந்த நியாயம் பலவிடங்களில் வரும். பகவானை குறித்தே பல இடங்களில் வரும். இந்த நியாயத்தை நாம் காணலாம்.

பகவான் சிசுபாலனுக்கு மோட்சம் கொடுத்தான். அவன் ஏன் மோட்சம் கொடுத்தான் என்பதற்கு நான்கு பெரியவர்கள் நான்கு காரணங்களை கூறுகிறார்கள். கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும் சேட்பால் பழம் பகைவனாயினும், வைதவனைத் திருப்பி வைவது, சிக்ஷிப்பது, இவை அஜ்ஞானகார்யமாகையால் லோகத்தார் போலல்லாமல் பரமசேதநனான ஸர்வேஶ்வரன் அவனுக்கும் அருள் பாலித்தான் என்று நாரதர் தர்மபுத்ரருக்குச் சொன்னார். இது ஸ்ரீநாரதர் கூறும் காரணம். ஆளவந்தார் மற்றொரு காரணத்தை அருளிச் செய்கிறார். அதாவது சிசுபாலனுக்கு மோக்ஷம் அளிக்க வேண்டுமென்று விமர்சிக்கையில், "மோக்ஷமளியாவிடில் வந்து பிறப்பான். பூர்வ ஜன்ம ஸம்ஸ்கார மடியாக பிறந்து ஸாது ஜனங்களை மேலும் துன்புறுத்துவான். அவனை ஸம்ஹரிக்கத் தானும் மறுபடி பிறக்க வேண்டி வரும் என்று" மோக்ஷமளித்ததாக ஆளவந்தார் ஸாதித்தாராம். நம் ஸ்வாமி எம்பெருமானார் மற்றொரு காரணத்தை அருளிச் செய்கிறார். அதென்னவென்றால், "அவனுக்கு அந்திமதசையில் பக்தி ஏற்படும்படி தன்னை காட்டித் தந்து பக்தியுண்டாக்கி மோக்ஷமளித்தான்" என்று எம்பெருமானார் பணிப்பாராம். தேசிகன் வேறு ஒரு காரணத்தை அருளிச் செய்கிறார். இந்த நால்வருமே நமக்கு பரம ஆப்தர்கள். இவர்களில் ஒருவர் சொன்ன ஒரு காரணத்தினை மாத்திரம் நாம் எடுத்துக் கொண்டு, மற்றவர்கள் சொன்ன காரணத்தை நிராகரித்தல் என்பது கூடாது. நான்கு பெரியவர்கள் நான்கு காரணத்தைச் சொல்லி இருக்கிறார்கள் என்றால் நான்கு காரணங்களையும் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் இந்த நியாயம்.

வெண்ணெய் உண்ட வாயன் திருவரங்கத்து எம்பெருமான். இவன் வெண்ணெய் சாப்பிட்டான் என்பதற்கு பல மகான்களால் பல காரணங்கள் சொல்லப்பட்டிருக்கிறது. பூதனை கண்ணனுக்கு விஷம் கொடுக்க வேண்டும் என்று முலைப்பால் கொடுக்க முயல்கிறாள். அப்பொழுது கண்ணன் கண்களை மூடிக்கொண்டான் என்று ஶுகர் ஸ்ரீமத்பாகவத மஹாபுராணத்திலே வர்ணனம் பண்ணுகிறார். கண்ணன் ஏன் தனது கண்களை மூடிக்கொண்டான் என்பதற்கு பல மகான்கள் பல பா$_4$வங்களை அருளிச் செய்திருக்கிறார்கள். வடதேசத்தில் நூறு காரணங்களைச் சொல்கிறார் ஒரு மகான். திரௌபதிக்கு சரணாகதி பலிக்கவில்லை என்பது ஸம்பிரதாயம். அதற்கும் மஹாச்சார்யர்கள் பல

காரணங்களைச் சொல்லி இருக்கிறார்கள். இப்படி 'காரணபஹுத்வம்' என்ற நியாயம் பல இடங்களில் வருகிறது. இங்கேயும் பகவான் ஏன் இக்ஷ்வாகு வம்சத்தில் தோன்றினான் என்பதற்கு நான்கு முக்கிய காரணங்கள் உள்ளன. இனி அவற்றையும் ஒவ்வொன்றாக பார்ப்போம்.

முதல் காரணமாவது கோசல தேசத்து ராஜாக்களுக்கு பல சிறப்புகள் உண்டு. அவற்றுள் ஒன்று அவர்கள் தங்கள் குல தெய்வத்திற்கு செய்யும் திருவாராதனமாகும். அவர்களுடைய குலதெய்வத்திற்கு நாராயணன் என்றும், ஜெகந்நாதன் என்றும், இரண்டு திருநாமங்கள். இவனை நன்கு அனுபவித்து அனுபவித்து மிக நன்றாக திருவாராதனம் ஸமர்ப்பிப்பார்கள் இக்ஷ்வாகு ராஜாக்கள். இதை கண்ட பகவான் இவர்களுடைய குலத்தில் தோன்றி தனக்குத்தானே திருவாராதனம் செய்து கொண்டு இவர்களை போல் தானும் திருவாராதன ரஸம் அனுபவிக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினான். அதனால் இக்ஷ்வாகு வம்சத்தில் பிரபுவ: ராம: என்று வந்து தோன்றினான். இக்காரணத்தை கூரத்தாழ்வான் பஞ்சஸ்தவத்தில் ஏதோ ஓரிடத்தில் அருளிச் செய்திருக்கிறார் என்று அடியேனுக்கு நினைவு. நீங்கள் பார்த்துக் கொள்ளவும்.

இனி இரண்டாவது காரணத்தை பார்ப்போம். அடியேன் வெண்ணெய் உண்ட வாயன் என்று குறிப்பிட்டேன். இதற்கு நம்முடைய ஆசார்யர்கள் அத்யாச்சர்யமாக வியாக்கியானம் அனுக்கிரஹித்துள்ளார்கள். அதாவது யசோதை பிராட்டியினுடைய மனோரதத்தை ஒன்றுக்கு பத்தாகப் பெருக்கி கண்ணன் பூர்த்தி செய்வான் என்று நம்முடைய ஆசார்யர்கள் மிக ரசமாக அனுபவிப்பார்கள். ஸ்ரீநந்தகோபருடைய திருமாளிகையில் பாலும் தயிரும் வெண்ணெயும் நெய்யாலான கவ்யங்கள் எங்கும் நிறைந்திருக்கும். யசோதை பிராட்டிக்கு 80 வயதாகியும் புத்திரப்பேறு வாய்க்கவில்லை. அதன்பிறகு தான் கண்ணன் பிறந்தான். தனக்குப் புத்திரப்பேறு வாய்க்காத காலத்தில், யசோதை பிராட்டியானவள் ஐயோ! நம் க்ருஹம் எங்கும் கவ்யங்கள் நிறைந்து இருக்கின்றனவே! இதை அனுபவிப்பதற்கு நமக்கு ஒரு குழந்தை பிறக்கவில்லையே! என்று ஒரே அங்கலாய்ப்பு செய்து கொண்டே இருப்பார்களாம். அதனால் கண்ணன் பிறந்து அவளுடைய மனோரதத்தை பல மடங்கு பூர்த்தி செய்தான். அவளுடைய திருமாளிகையில் கவ்யம் என்பதே இல்லாமல் செய்துவிட்டான். கோகுலத்திலேயும் கவ்யம் இல்லை என்றபடி செய்து விட்டான். அதுதான் வெண்ணெய் உண்ட வாயன் எல்லாவற்றையும் சாப்பிட்டுவிட்டான்.

இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்கிறார்கள் நம்முடைய ஆசார்யர்கள். இந்த யசோதை பிராட்டியின் அங்கலாய்ப்புக்கு ஏற்ப, தசரத மகாராஜரும் 60000 ஆண்டுகள் ஆகியும் அவருக்கு புத்திரப்பேறு வாய்க்கவில்லை. அவரும் மிகுந்த வருத்தப்படுவாராம். நம் கோசல ஸாம்ராஜ்யம் பரந்து விரிந்த ஸாம்ராஜ்யம். இங்குள்ள பிள்ளைகளை ரக்ஷிப்பதற்கு நமக்கு ஒரு குழந்தை இல்லையே என்று வருத்தப்படுவார். அவருடைய குறை தீர வந்து பிறந்தான் பகவான் "இக்ஷ்வாகு வம்ச பிரபுவ: ராம:". எப்படி தசரத மகாராஜாவுடைய மனக்குறையை பூர்த்தி செய்வதற்காக பகவான் திருவவதாரம் செய்தருளினாரோ, அப்படியே இங்கும் யசோதைபிராட்டி மனக்குறை தீர அவளுக்குப் புத்திரனாக வாய்த்தான், வந்து பிறந்தான் என்று, இப்படியே ஒன்றுக்கொன்று த்ருஷ்டாந்தபா4வத்தில் அமைந்த இந்த இரண்டு விஷயங்களையும் சேர்த்து பார்க்கிறார்ளாம் நம் ஆசார்யர்கள்.

இனி அடுத்தபடியாக மூன்றாவது காரணத்தை பார்ப்போம். கோசல தேசத்து ராஜாக்களுக்கு பல சிறப்புகள் உண்டு என்று அடியேன் கீழே குறிப்பிட்டேன். மற்றொரு சிறப்பாவது தன்னிடம் சரண் என்று வந்த பிரஜைகளை எப்படியாவது காப்பாற்றுவது என்பதில் மிகவும் உறுதி பூண்டவர்கள் இந்த ராஜாக்கள். இந்த சரண்யத்வம் என்பது இவர்களுக்கு குல தர்மமாக வாய்த்தது. இதிலே மிகவும் நிஷ்டை பெற்றவர்களாக விளங்கினார்கள் இந்த கோசல தேசத்து ராஜாக்கள்.

உண்மையில் சரண்யத்வம் என்பது பகவானுக்கே உண்டான அஸாதாரண தர்மமாகும். அவனுக்கே உண்டானது இந்த சரண்யத்வம். சரணாகதிக்கு இன்னார் அதிகாரிகள், இன்னார் அதிகாரிகள் அல்லர் என்பது கிடையாது. யார் வேண்டுமானாலும் சரணாகதி பண்ணலாம். ஆனால் ஒரே ஒரு நியமம் மாத்திரம் உண்டு. இதை விஷயநியமம் என்று அருளிச் செய்வார்கள். அதாவது பகவான் ஒருவன் இடத்திலேயே நாம் சரணாகதியைச் செய்யவேண்டும். அவன் ஒருவனே சரண்யன். அது மிக மிக முக்கியம். தனக்கு உண்டான சரணயத்வத்தை லோகத்தாரிடையே பிரகாசிபிக்க திருவுள்ளம் பற்றினான் பகவான். அதற்காக இங்கு வந்து பிறப்போம் என்று பார்த்தான். இந்த சரணயத்வத்தை குலதனமாக கொண்டிருக்கும் கோசல தேசத்தில் ராஜாக்கள் பரம்பரையில் தானும் பிறக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினான், வந்து பிறந்தான் என்பது ஒரு பா4வம்.வியாக்கியான சக்கரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை தனிஶ்லோகி வியாக்கியானங்களில் ஏதோ ஓரிடத்தில் சூசக மரியாதையில்

காட்டியருளியுள்ளார். கோசல தேசத்து ராஜாக்களில் ஒருவன் மாந்தாதா என்பவன். அவனை பற்றிய ஶ்லோகம் ஒன்றை உதாஹரிக்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. இவ்வர்த்தத்தைப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச் செய்வதற்கு முக்கிய காரணம் ஸ்ரீஇராமாயணமே. அதை வால்மீகியே காட்டியருள்கிறார். ரகுகுலத்தில் தோன்றியவன் என்று குறிப்பிடலாம். ஆனால் ஸ்ரீராமபிரானுக்குதான் ராகவன் என்ற திருநாமம் அமைந்தது. இது காரண இடுகுறிப்பெயர் ஆகும்.

"ரகுகுல வர்த்தந: ராகவ:" என்று அருளிச் செய்கிறார் வால்மீகி. ரகுகுலத்தினுடைய பெருமைகளை பலவாறு பெருக்கினான் பகவான் ஸ்ரீராமன். அதுதான் ரகுகுல வர்த்தந: ராகவ: என்று இருக்கலாம். சரண்யனான தான் இந்த கோசல தேசத்திலே தோன்றி அந்தத் தேசத்து ராஜாக்களுக்கு முக்கியமான குல தர்மமாக உடைய இந்த க்ரமத்தையும் மற்ற விஷயங்களையும் மிகவும் ஆதரித்து அனுஷ்டித்து அதை பலவாறு பெருக்கியும் பகவான் லோகத்தாருக்கு நன்மை பயந்தான். அதுகொண்டு "ரகுகுல வர்த்தந: ராகவ:" என்று அருளிச்செய்திருக்கிறார் வால்மீகி. இதையே மூலதனமாகக் கொண்டு இங்கு பெரியவாச்சான்பிள்ளை இப்படி ஒரு காரணத்தை தனிஶ்லோகி வியாக்கியானத்தில் காட்டி அருளியுள்ளார்.

இனி அடுத்தபடியாக நான்காவது காரணமாக தேவர்கள் பண்ணின சரணாகதி. அதற்கு முன்பு ஒரு விஷயத்தைப் பற்றித் தெரிவிக்கிறேன். அதாவது பகவான் கோசல தேசத்து குலபெருமையை கணிசித்தே அதில் தானும் பிறக்க ஆசைப்பட்டுப் பிறந்து, அதன் பெருமையை பலவாறு பெருக்கினான். இது இவனுக்குண்டான ஸ்வபாவமாகும் என்பதை பற்றி ஒரு விஷயத்தை தெரிவிக்கிறேன். நம்முடைய ஸம்ப்ரதாயத்திலே பல அர்ச்சாவதார எம்பெருமான்களுண்டு. அதில் முக்கியமாக திருவரங்கத்து செல்வன், திருவேங்கடமுடையான், பேரருளாளன், ஸ்ரீநாராயணபெருமாள் என்று நால்வரை எடுக்கிறார்கள். இந்த நால்வருக்குமே உண்டான பெருமை இவர்கள் ஆசார்ய புருஷர்களாகவும் திருவவதாரம் செய்துள்ளார்கள். இந்தப் பெருமை திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி பெருமானுக்கும் உண்டு. அவனே நம் ஸ்வாமி எம்பெருமானாராக அவதாரம் செய்ததாக ஒரு ஸம்பிரதாயம். அது இருக்கட்டும். இந்த நான்கு எம்பெருமான்களில் திருவரங்கச்செல்வன் அழகியமணவாளப் பெருமாள் நாயனாராகவும், திருவேங்கடமுடையான் வேதாந்தாச்சார்யாராகவும்,

திருநாரணன் வாதிகேசரி அழகியமணவாள ஜீயராகவும், திருவவதாரம் செய்தார்கள் என்பது ஸம்பிரதாயம்.

ஸ்ரீ காஞ்சி பேரருளாளனுக்கு மிகவும் சிறப்புண்டு. ஏனென்றால் அவன் இரண்டு ஆசார்யர்களாக திருவவதாரம் செய்தருளியுள்ளான். முதலில் பிரதிவாதி பயங்கரம் அண்ணனாகவும், பிறகு பிள்ளைஉலகாரினாகவும் இப்படி இரண்டு திருவவதாரஞ் செய்தருளிய பெருமை பேரருளாளனுக்குண்டு. அவன் பிரதிவாதி பயங்கரம் அண்ணனாக திருவவதாரம் செய்தகாலத்தில், அநாதியானதும் பரமவைதிகமானதுமான நமது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நன்கு நிலை நாட்டியும், பரவச்செய்தும், கட்டிக்காத்தும் போந்தான். அவன் பிள்ளை உலகாரியனாக திருவவதாரம் செய்தருளிய காலத்தில், அநாதியானதும் பரமவைதிகமானதுமான நமது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தை கட்டிக்காத்தும், நிலைநாட்டியும், பரவச் செய்தும் போந்தார். இப்படி சாஸ்திர ப்ரவர்த்தனதுக்காக ஒரு திருவவதாரம், ஸம்பிரதாயத்திற்காக மற்றொரு திருவவதாரம் என்று இரண்டு திருவவதாரங்களை செய்த பெருமை தேவப்பெருமாளுக்குண்டு. இது தேவபெருமாளுடைய தனிச்சிறப்பாகும். இந்தப் பெருமை வேறு எந்த அர்ச்சாவதாரப் பெருமாளுக்கும் கிடையாது. இப்படி இதில் இன்னொரு விசேஷமும் உண்டு. இப்படி இரண்டு திருவவதாரங்கள் செய்தருளின காலத்தில், இந்த இரண்டு திருவவதாரங்களுமே முடும்பை வம்சத்தில் தான் செய்தான். அவன் பிரதிவாதி பயங்கரம் அண்ணனாகவும், ஸ்ரீ பிள்ளைஉலகாரியன் ஆகவும் தோன்றியது இந்த முடும்பை வம்சத்திலேதான். இந்த வம்சம் மிகப் பெருமை வாய்ந்தது. பகவானுக்கு மிகவும் அபிமதமான வம்சம் இந்த முடும்பை வம்சம். இதை கணிசித்தான் பகவான். இந்த வம்சத்தில் தோன்றி, இதன் பெருமையை பலகாலும் பெருக்க வேண்டும் என்று திருவுள்ளம் பற்றினான். அதற்காக இரண்டு பெரிய மஹாசார்யர்களாக திருவவதாரம் செய்தருளினான் என்பதை நாம் அறியலாம். இப்படி தாம் உகந்த திருவம்சத்தில் திருவவதாரம் செய்து, அதன் பெருமையை பலகாலும் பெருக்குவது என்னும் ஸ்வபாவத்தை உடைய பகவான், இந்த ஸ்வபாவத்தின்படி கோசல தேசத்தில் ராஜாக்களுடைய சிறப்பான குலதர்மமான சரண்யத்வத்தைத் தான் வந்து பிறந்து பிரகாசிப்பித்தான் என்பதை நாம் அறியலாம்.

இனி நான்காவது காரணம், தேவர்கள் பண்ணிய சரணாகதி. ஸ்ரீராமாயணம் ஐந்தாவது ஸர்க்கத்திலிருந்து ஆரம்பிக்கிறது. முதல் நான்கு ஸர்க்கங்கள்

அவதாரிகை என்னும் க்ரமத்தில் அமைந்துள்ளன. ஐந்தாவது ஸர்க்கம் தசரத மஹாராஜா செய்த புத்திர காமேஷ்டியாக வர்ணனையுடன் ஆரம்பிக்கிறது. யாகத்தை விஷயமாக கொண்டு ஆரம்பிக்கிறது. தசரத மஹாராஜா புத்திரகாமேஷ்டி யாகம் பண்ண வேண்டும் என்று விரும்பினார். தம்முடைய குலகுருவான வசிஷ்டரிடம் இதைப்பற்றி தெரிவித்தார். வசிஷ்டர் "அவசியம் செய்ய வேண்டும். இந்த புத்திரகாமேஷ்டி யாகத்தில் அடியேன் தேவரீருக்காக செய்யலாம் என்று இருந்தாலும் அதில் அடியேனுக்கு திருவுள்ளம் இல்லை. காட்டிலே மகாதபஸ்வியாய் தபஸ் செய்து கொண்டு இருக்கும் ரிஷ்யசிருங்க முனிவரை பிரார்த்தித்து அவரைத் தலைமையாக கொண்டு இந்த புத்திரகாமேஷ்டி யாகத்தை செய்வோம் என்று தசரதன் மகாராஜாவுக்கு வசிஷ்டர் நியமனம் ஸாதித்தார்.

அவரும் காட்டிலுள்ள ரிஷ்யசிருங்க முனிவருக்கு செய்தி அனுப்பினார். ரிஷ்யசிருங்கரும் தசரத மகாராஜாவின் அழைப்பை ஏற்று புத்திரகாமேஷ்டி யாகத்தை தலைமை தாங்கினார். இங்கே வசிஸ்டர் உடைய ஹ்ருதயம் எவ்வளவு விசாலமானது என்பதை நாம் அறிந்து உணரவேண்டும். ரிஷ்யசிருங்கர் பெரிய ரிஷி, மகா தபஸ்வி. அவர் இங்கே பொன்னடி ஸார்த்த வேண்டும், அவருடைய பெருமை நகரத்தாரான அயோத்தி நகர ஜனங்களுக்கு தெரிய வேண்டும், அவருடைய ஸம்பந்தம் இங்கு உள்ளார்க்கு ஏற்பட வேண்டும் என்று மிகவும் விசாலமான திருவுள்ளம் வசிஷ்டருக்கு. இப்படி தசரத மஹாராஜா யாகம் செய்யும்போது அங்கே தேவர்கள் அனைவரும் கூடி இருந்தார்கள் ஹவிர் பாகத்தை பெறுவதற்காக. அவ்விடத்தே பகவானும் வந்து சேர்ந்தான். அப்போது ஸ்ரீவிஷ்ணு பகவானை குறித்து தேவர்கள் சரணாகதி பண்ணுகிறார்கள். புத்திரபாக்கியம் ஏற்படுவதற்காக புத்திரகாமேஷ்டி யாகம் செய்கிறார் தசரதர். அவருடைய குலத்தில் தோன்றி தேவரீர் ராவணனை வதம் செய்ய வேண்டும். தேவரீர் ஒருவரே நால்வராக தசரத மகாராஜாவுக்கு புத்திரர்களாக திருவவதாரம் செய்ய வேண்டும் என்று வேண்டி பகவானிடம் சரணாகதி செய்கிறார்கள். அவர்கள் செய்த சரணாகதியை பகவானும் ஏற்றுக்கொள்கிறான்.

இவ்விடத்திலே ராவணவதார்த்தம் (லோக கண்டகனான ராவணன்) என்று அர்த்தம். கண்டகம் என்றால் முள். தேவர்கள் லோககண்டகனான ராவணனுடைய வதத்திற்காக பகவானிடம் சரணாகதி ஏன் வேண்டுகிறார்கள் என்றால் அதற்கும் ஒரு காரணம் உண்டு. இதை உத்தர ராமாயணத்தில் சொல்லப்படும் ஒரு சரித்திரம்

விளக்குகிறது. ராவணன் ஒரு முறை திருவயோத்திக்கு விஜயம் செய்து அங்குள்ள ராஜாவை வென்று அயோத்தியை துவம்சம் செய்து, அயோத்தி ஜனங்களையும் இம்சித்து விட்டு சென்றான். அப்பொழுது அந்த ராஜா என்னுடைய குலத்தில் தோன்றிய ஒருவனால்தான் உனக்கு அழிவு என்று ஒரு சாபம் கொடுக்கிறான். இந்த சாபத்தை தேவர்கள் அறிந்திருப்பவர்கள் ஆனபடியாலே, ராவணனை பகவான் கொன்றழிப்பதற்கு இதுதான் தக்கதருணம் என்று கருதி ராவண வதார்த்தம் பகவானிடம் சரணாகதியைச் செய்தார்கள். நீ தசரதனுக்கு புத்திரனாகப் பிறக்கவேண்டும் என்று வேண்டுகிறார்கள் என்பது நான்காவது காரணம். இந்தப் ப்ரகரணத்திற்கு "பகவத்ஸ்ரீவிஷ்ணுபரத்வம்" என்பதும், "பகவானுடைய சரண்யத்வம்" என்பதும் தாத்பர்யம். தேவர்கள் அனைவரும் சரணாகதி பண்ணினார்கள் என்பதால் இங்கு விஷ்ணு பரத்வம் பிரகாசிக்கிறது, பகவான்தான் சரண்யன் எனும் ஸாஸ்த்ரார்த்தமும் ப்ரகாசிக்கிறது. இப்படி இரண்டு தாத்பர்யார்த்தங்கள் இந்தப் ப்ரகரணத்திற்கு உண்டு. இப்படி நான்கு காரணங்களை நாம் பார்த்தோம்.

இதற்கு மேலே, ஸ்ரீராமபிரானுடைய திவ்ய மங்கள விக்ரஹத்தை பலவாறு வர்ணிக்கிறார் ஸ்ரீநாரதர். அதன்பிறகு ஸ்ரீராமபிரானுக்குண்டான மேலும் பல திருக்கல்யாண குணங்களையும் வர்ணிக்கிறார். மேலும் ஸ்ரீராமபிரானுடைய உன்னதமான சரித்திரத்தை சுருக்கமாக அருளிச்செய்திருக்கிறார். இவை அனைத்தையும் விஷயமாகக் கொண்டது முதல் ஸர்க்கம். இதை சங்க்ஷேபராமாயணம் என்றும் குறிப்பிடுவர். இப்படி முதல் சர்கத்தை நாம் சிறிது அனுபவத்தில் கொண்டோம். வேளுக்குடி ஸ்வாமிக்கு இது மிகவும் அபிமதமான விஷயம். அடியேன் ஏதோ சொன்னேன். வாசக தோஷத்தை அன்பர்கள் க்ஷமித்தருள வேண்டும்.

நாரத முனிவர் - தமது ஆசிரமத்துக்கு வந்து ஸ்ரீராமாயணத்தைச் சுருக்கமாக உபதேசித்துவிட்டுச் சென்ற பின், வால்மீகி முனிவர் பகலில் செய்ய வேண்டிய அனுட்டானத்திற்காகத் தமஸாநதிக்குச் சென்றார். அதன் துறையினருகில் இரண்டு அன்றிற் பறவைகள் ஆணும் பெண்ணுமாய் ஒன்றோடொன்று கலந்து களித்து கலகலவென்று ஒலித்துக்கொண்டிருத்தலை கண்ணுற்ற வேடனொருவன் இரக்கம் சிறிதுமின்றி அவற்றுள் ஆண் பறவையை அம்பெய்து வீழ்த்தினான். இரத்தம் சொட்டச்சொட்ட அது நிலத்தில் விழுந்து புரண்டு துன் பப்படுவதை கண்ட பெண் பறவை ஏங்கி கூவியழுதது. அது கண்டு

மிகவும் மனம் தளர்ந்து சோகமடைந்த வால்மீகி முனிவர் திருவாக்கிலிருந்து, “மா நிஷாத ப்ரதிஷ்டாந்த்வமகம சாச்வதீ: ஸமா:, யத் க்ரௌஞ்சமிதுநாத் ஏகம் அவதீ: காமமோஹிதம்” என்னும் ஶ்லோகமொன்று முதன் முதலாகத் திடீரென்று வெளிவந்தது. இதன் பொருள் - திருவற்ற வேடனே, நீ அன்றிலின் இரட்டையை அணுகி அதனுள் (நியாயமான) காமத்தினால் மயக்கமடைவிக்கப்பட்ட ஆண் பறவையைக் கொன்றுவிட்டனையாகையால், இனி வரும் பலவாண்டு காலங்களில் ஒருபோதும் பெருமையுடன் நிலைபெற்றிருத்தலை அடையாதிருக்கக் கடவாய் (அப்பறவையைப் போல் நீயும் இறக்கக் கடவாய்) என்பது ஆகும். (நிஷாத - வேடனே), பறவைகளைக் கொல்வது வேடனுக்குச் சாதி தருமமாகையால் பாபமல்லவாயினும், ஒன்றோடொன்று புணர்ந்து இன்புற்றிருக்கும்போது கொல்லுதல் பாபச்செயலே என்க. இச்செய்யுள் வாயிலாக வால்மீகி வேடனுக்குச் சாபங்கொடுத்தாரென்பது வெளிப்படை.

வால்மீகி மிகவும் வருந்துகிறார் . நாம் ஒரு க்ஷணம் சோகத்தை அடைந்து நிதானத்தை இழந்து விட்டோம், உணர்ச்சிவசப்பட்டு விட்டோம், இந்த வேடனை சபித்து விட்டோம், ஒரு அமங்கல வார்த்தையை சொல்லிவிட்டோம் என்று வருத்தப்படுகிறார். அப்பொழுது அங்கே பிரம்மா வருகிறார். அவர் வால்மீகியை ஸமாதானப்படுத்துகிறார். இந்த ஶ்லோகம் உண்மையில் மங்கள வார்த்தை தான். தேவரீர் ஸ்ரீநிவாசனை மங்களாசாசனம் பண்ணும்படி அமைந்தது இந்த ஶ்லோகம். “இந்த ஶ்லோகத்தின் பதங்களை இப்படி அன்வயப்படுத்தி பார்ப்பீர். பார்த்தால் இது உண்மையில் மங்களகரமான வார்த்தையே என்பதை நீர் உணர்ந்து கொள்வீர்” , என்று பிரம்மா அவரிடம் சொல்கிறார். மேலும் இராமாயணத்திற்கு வடமொழியிலேயே விரிவுரை எழுதிய கோவிந்தராஜர் - “நான்முகனுடைய திருவருளால் வால்மீகியின் வாக்கிலிருந்து முதன்முதலாகத் தோன்றிய இந்த ஶ்லோகம் வெறும் சாபமாயிருக்கத் தக்கதல்ல, கடவுள் வாழ்த்தாக(வும்) இருக்கத் தக்கதென்று முன்புள்ள ஆசார்யர்கள் வர்ணிக்கின்றனர்” என்று தொடங்கி, இது கடவுள் வாழ்த்தாவதனை விளக்கி, இறுதியில் “இங்ஙனம் இந்த ச்லோகத்தினால் இஷ்ட தேவதையை த்யானித்து வாழ்த்துதல் என்னும் மங்களம் செய்யப்பட்டது” என்றெழுதி முடிக்கின்றார். அதையொட்டி இது கடவுள் வாழ்த்து என்பதனைச் சிறிது விளக்கமாகச் சொல்கிறேன்..

(ஹே) மாநிஷாத, யத் (த்வம்) க்ரௌஞ்ச மிதுநாத் காமமோஹிதம் ஏகம் அவதீ: (தத்) த்வம் சாச்வதீ: ஸமா: ப்ரதிஷ்டாம் அகம: என்று அந்வயம்.

“திருமகளுக்கு இடமான (திருமார்பையுடைய)வனே (-ஸ்ரீநிவாஸனான திருமாலின் அவதாரமான இராமபிரானே) எதனால் (நீ) மந்தோதரி, இராவணன் என்னும் இராக்கதரின் இரட்டையை அணுகிச் சென்று, அதனுள் (சீதையின் திறத்தில் அநியாயமாக) காமங்கொண்டதனால் மோஹமடைவிக்கப்பட்ட ஆணான இராவணனைக் கொன்றனையோ அதனால் நீ இனி வருங்காலமெல்லாம் (ஒரு கணமும் ஓயாமல்) பெருமையுடன் நிலைபெற்று இருக்கக் கடவாய்” என்பது அதன் பொருள். தன் பேடையினிடத்தில் குற்றமற்ற காதல் கொண்டு கலந்த ஆணன்றிலை கொன்ற வேடனைச் சபித்து, மந்தோதரி முதலாம் தன் மனைவிகளிருக்கச் செய்தேயும் அயலான் மனைவியான சீதையின் திறத்தில் தகாத காமவெறி கொண்டு கலக்கவெண்ணிய இராவணனைக் கொன்று உலகத்தைக் காத்த இராம்பிரானை இதனால் வாழ்த்தினார் வால்மீகி. இது வால்மீகி முனிவர் தாமே வாழ்த்திய வாழ்த்தாகும்.

பிறகு ப்ரம்மா வால்மீகியிடம்,”நீர் உன்னதமான ஸ்ரீராமபிரான் சரித்திரத்தை ஒரு காவியமாக இயற்றக் கடவீர். இதற்குண்டான சக்தி விசேஷத்தை நான் உமக்கு கொடுக்கிறேன். ராமபிரானுடைய சரித்திரம் முழுவதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் உமக்கு நன்றாக விளங்கும்” , என்று சொல்கிறார். அவர் கூறியபடி வால்மீகியும் ஸ்ரீராமபிரானுடைய சரித்திரத்தை எழுதுகிறார். இதுதான் ஆதி காவியம் எனப்படும் ஸ்ரீராமாயணம். பிற்பாடு தோன்றிய காவியங்களுக்கு எல்லாம் மூலபூதமாய் அமைந்தது. ஸ்ரீவால்மீகி ராமாயணம் ஒரு பக்தி சாஸ்திரம், மோக்ஷ சாஸ்திரம்.

“ராமாயணம் என்னும் பக்தி வெள்ளம் குடி கொண்ட கோவில் ராமானுஜன்” என்கிறார் அமுதனார். பக்தி வெள்ளம் ஆவது என்னவென்றால் இங்கே திருஷ்டாந்தம் பாகவதத்தில் ஒரு விஷயத்தை நாம் பார்க்கலாம். பகவான் ஸ்ரீ கிருஷ்ணாவதாரம் கொண்டபோது யமுனை நதியில் குடைந்து நீராடுகிறான். அவனுடைய ஸம்பந்தம் பெற்ற யமுனை மிகவும் புனிதமாக ஆகிறது. அதைப்போன்று மாமுனிகள் ஸ்ரீ ஸூக்திகளில் பகவான் குடைந்து ஆடுகிறான். நாம் இதை பிரதிவாதி பயங்கரம் அண்ணன் தாம் எழுதிய “வரவரமுநி சதகம்” என்னும் க்ரந்தத்தில் குறிப்பிடுகிறார். யமுனை நதிக்கு பகவானுடைய ஸாந்நித்யம் அமைந்தது போன்று மாமுனிகளின் ஸ்ரீ ஸூக்திகளுக்கும் பகவானுடைய ஸாந்நித்தியம் உண்டு என்பது பிரதிவாதி பயங்கரம் அண்ணன் காட்டியருளும் ஒரு விசேஷார்த்தம். அதைப் போன்றுதான் இங்கும்

திவ்யதம்பதிகளுடைய வைபவபரமாக அமைந்துள்ள படியால் திவ்ய தம்பதிகளுடைய ஸாநித்தியம் இந்த வால்மீகி இராமாயணத்திற்கு உண்டு. இப்படி பகவத் அம்சம், பகவத் ஸம்பந்தம் பெற்ற க்ரந்தமாகையால் இது ஒரு மோக்ஷ க்ரந்தமாகிறது. இத்துடன் ஸம்பந்தப்பட்டவர்களுக்கு எல்லாம் மோக்ஷம் நிச்சயம் என்பது இதிலிருந்து நமக்கு புலப்படும்.

இது பகவத் அம்சம் பொருந்திய க்ரந்தம் என்பதற்கும் ஒரு சான்று உண்டு. அது ஸ்ரீராமாயணத்தின் பெருமையை நமக்கு நன்கு காட்டித் தருகிறது. அதாவது ஸமீப காலம் வரை நம்முடைய மடங்களிலும், ஆசார்ய புருஷர்களுடைய திருமாளிகைகளிலும், மற்றுமுண்டான பெரியோர்களுடைய திருமாளிகைகளிலும் ஒரு வழக்கம் நிலவி வந்தது. அதாவது ஸ்ரீவால்மீகி ராமாயணத்தை கோயிலாழ்வார் உள்ளேயே எழுந்தருளப் பண்ணுவது வழக்கம். திருவாராதன காலத்தில் மட்டும் இந்த க்ரந்தத்தை கோவில் ஆழ்வாரிலிருந்து எடுத்து பாராயணம் செய்வர். இறுதியில் திருகாப்பு சேர்க்கும் காலத்தில் இந்தக் க்ரந்தத்தையும் கோவில் ஆழ்வார் உள்ளேயே எழுந்தருளப் பண்ணிக் கொள்வர். இப்படி பகவானுடன் ஒருசேர கோயிலாழ்வாரில் எழுந்தருளப் பண்ணப்படும் க்ரந்தம் ஸ்ரீவால்மீகி ராமாயணம். இந்தப் பெருமை திருவாய்மொழிக்கு கூட கிடையாது. பகவத்தம்சம் பொருந்தியபடியினாலே பகவானுடன் ஒருசேர எழுந்தருள பண்ணப்படும் க்ரந்தம் என்பதை நாம் அறியலாம். பகவத் அம்சம் இருக்கிறபடியால் இந்த க்ரந்தம் பக்தி வெள்ளம் ஆகிறது. அநாதி காலமாக வந்து கொண்டிருக்கும் பிறப்பு இறப்பு ஆகிற ஸம்சாரத்தில் உழன்று திரியும் ஸாமான்ய ஜனங்களும் இராமாயணத்துடன் ஸம்பந்தப்பட்டு பகவத் ப்ராப்தியாகிற மோக்ஷ இன்பத்தை பெற்றுவிடலாம். பிரம்மா சொன்னார், வால்மீகி எழுதினார் என்பது ஒருவர் மாத்திரமே. இங்கு வால்மீகி ஸ்ரீராமாயணத்தை இயற்றுவதற்குண்டான காரணம் என்ன என்பதை ஒரு பெரியவர் நமக்கு மிக அழகாக தெரியப்படுத்துகிறார்.

ஸமீபகாலம் வரை நம்மிடையே எழுந்தருளியிருந்த ஒரு பெரிய மகான் கீர்த்தி மூர்த்தி ஸ்ரீ உ.வே பிரதிவாதி பயங்கரம் ஜகத்குரு கா4தி அனந்தாசார்யார் ஸ்வாமி ஆவார். இவர் ஒரு பெரிய மகான். மகாஞானியும், மகாதபஸ்வியுமான இந்த ஸ்வாமி “வால்மீகிபாவதீபம்” என்னும் ஒரு க்ரந்தத்தை இயற்றியுள்ளார். 20 ஶ்லோகங்கள் கொண்ட இதற்கு அவரே ஸம்ஸ்கிருதத்தில் ஒரு வியாக்கியானத்தையும் அனுக்ரஹித்துள்ளார். வால்மீகி இராமாயணத்திற்கு

முக்கிய விஷயம் என்ன என்றால் அது பகவானுடைய மேலான தன்மையை விளக்கும்படியாய் அமைந்து பிரகாசிக்கும் ஒரு க்ரந்தம். பகவத் பரத்வத்தை வால்மீகி எப்படிச் செய்கிறார் என்பதை விளக்கும் க்ரந்தம். இதிலே அவதாரிகைலேயே அவர் ஒரு விஷயம் ஸாதிக்கிறார். வால்மீகி ஏன் இந்த க்ரந்தத்தை எழுதினார் என்பதற்கான காரணத்தை அவர் தெரிவிக்கிறார். ஸாமான்ய ஜனங்கள் பகவானிடம் பக்தி பெற்று மோக்ஷ இன்பத்தை பெற வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அவர் ஸ்ரீராமாயணத்தை இயற்றியுள்ளார்.பகவானுடைய சரித்திரம் மிகவும் உன்னதமான சரித்திரம். இந்த க்ரந்தத்தை கொண்டு பகவானுடைய சரித்திரத்தை வைபவத்தை நாம் அறியும் காலத்தில் அவனுடன் ஸம்பந்தப்பட்டவர்களாய் அவனுடைய அனுக்ரஹம் நிரம்பப் பெற்றவர்கள் அவனையடைவதாகிய மோட்ச இன்பத்தை நாம் பெற்று உய்வுபாயம் கொள்கிறோம்.இப்படி பக்தி வெள்ளமாகிற இக்க்ரந்தம் மோக்ஷ க்ரந்தம் ஆகிறது.

இனி பிரம்மா ஏன் வால்மீகியை ஸ்ரீராமபிரானுடைய சரித்திரத்தை எழுதும்படி சொன்னார். இதற்கு உண்டான காரணங்களை நம் வேளுக்குடி ஸ்வாமி உபந்யாஸத்தில் அடிக்கடி சொல்வார். அதாவது ராக்ஷஸர்களுடைய தபஸ்ஸை கலைக்கும் பொருட்டு அவர்கள் முன்னே பிரம்மா தோன்றி, அவர்கள் வேண்டும் வரங்களை கொடுத்துவிடுகிறார். இதனால் வரபலம், புஜபலம் இவற்றைக் கொண்ட இந்த ராக்ஷஸர்கள் ரிஷி முனிவர்கள் என்ன, ஸாமான்ய ஜனங்கள் என்ன அனைவரையும் துன்புறுத்துகிறார்கள். இப்படி லோகத்தில் உள்ள அனைவரும் துன்பப்படுவதற்கு பிரம்மா காரணமாகிறார். இதை அவர் நினைத்துப் பார்க்கிறார். சிறிது மனச்சாந்தி இழந்தவராய், இதற்கு நாம் ஏதாவது ஒரு பிராயச்ஸித்தத்தை செய்ய வேண்டும், லோகத்தாருக்கு ஏதாவது ஒரு நன்மை செய்ய வேண்டும் என்று கருதி, அவர் சாஸ்திரப்ரவர்தனம் பண்ணுகிறார். ஸ்ரீராமாயணமாகிய இதிஹாசம் என்ன, மற்றுமுண்டான புராணங்கள், தர்மசாஸ்திரங்கள் என்ன, இதுபோன்ற சாஸ்திரங்களை அவர் சாஸ்திரப்ரவர்தனம் பண்ணுகிறார். இத்தால் லோகத்தார் பயனடைந்து மோக்ஷானந்தம் பெறவேண்டும் என்பது அவருடைய திருவுள்ளம். இக்காரணத்தினால் தான் அவர் வால்மீகியை ஸ்ரீராமனுடைய சரித்திரத்தை எழுதும்படி நியமித்தார் என்று வேளுக்குடி ஸ்வாமி நன்கு அனுபவித்துச் சொல்வர்.

இனி இந்த ஸ்ரீராமாயணத்திலே பாலகாண்டத்தில் வரும் ஒரு விஷயத்தைப் பற்றிப் பார்ப்போம். பாலகாண்டம் விஷ்ணு பரத்வத்துடன் ஆரம்பிக்கிறது, ஸ்ரீராம பரத்வத்துடன் முடிகிறது. அடியேன் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி புத்திரகாமேஷ்டி யாகத்தில் பகவான் எழுந்தருளுகிறார், தேவர்கள் சரணாகதி பண்ணுகிறார்கள் என்பதால் பகவானுடைய பரத்வம் அங்கு பிரகாசமடைகிறது. பாலகாண்டத்தின் கடைசியில் ஸ்ரீராமபிரானுடைய பரத்வத்தை நாம் நன்கு அனுபவிக்கலாம். இப்படி ஆரம்பத்திலும் பரத்வம்தான், கடைசியிலும் பரத்வம் தான். உபக்ரம உபஸம் ஹார நியாயத்தைக் கொண்டு பாலகாண்டதிற்கே முக்கிய விஷயம் பகவத் பரத்வம், ஸ்ரீராம பரத்வம் என்பதை நாம் அறியலாம். ஸ்ரீராமாயண காலக்ஷேபத்தின்போது பரசுராமரை பரசுராம ஆழ்வான் என்று வேளுக்குடி ஸ்வாமி குறிப்பிட்டார். இது அடியேனுக்கு கொஞ்சம் வினோதமாகபட்டது. ஏனென்றால் பெரியாழ்வார் திருமொழி வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகள் பரசுராம கர்வ பங்கம் என்று அருளிச்செய்துள்ளார். கர்வமுடைய ஒருவர் அவரை எப்படி ஆழ்வாராக நாம் சிறப்பித்துச் சொல்லலாம் என்பது அடியேனுக்கு புரியவில்லை. இங்குதான் காரப்பங்காடு ஸ்வாமி அடிக்கடி சொல்லும் ஒரு விஷயம் அடியேனுக்கு ஞாபகம் வந்தது. அதாவது எந்த விஷயமாக இருந்தாலும் நாம் மூலத்தைப் பார்க்க வேண்டும். மூலத்தில் அது எப்படி சொல்லப்பட்டிருக்கிறது என்பதை நாம் நன்கு அறிய வேண்டும். அடிக்கடி மூலத்தை நாம் ஸேவிக்க வேண்டும். மூலத்தை நாம் நன்கு தெரிந்து கொண்டால்தான் அதன் பிறகு நாம் வார்த்தை சொன்னால், அந்த வார்த்தை சரியாக அமையும் என்பதை காரப்பங்காடு ஸ்வாமி அடிக்கடி வலியுறுத்தி சொல்வர். எனவே பாலகாண்டத்தில் இந்த கட்டம் எப்படி சொல்லப்பட்டிருக்கிறது பார்ப்போம் என்று, க்ரந்தத்தை ஸேவித்துப் பார்த்தேன்.

கடைசி இரண்டு ஸர்க்கங்கள் இந்த பரசுராமரை பற்றியது. திருக்கல்யாணம் முடிந்த பிறகு எல்லோரும் அயோத்திக்கு திரும்பி வந்து கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது திடீரென்று எங்கும் புயல் காற்று போல் வீசிற்று. மரங்களும் செடிகொடிகளும் வேகமாக இங்கும் அங்கும் அலைந்தன. புழுதியைக் கிளப்பிக் கொண்டு பயங்கரமாக காற்று வீசியது. பிராணிகள் பயந்து இங்குமங்கும் ஓடித் திரிந்தன. ஏதோ ஒரு ஆபத்து ஏற்பட போகிறது, என்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன. தம்முடைய தபோ வலிமையினால், வசிஸ்டர் என்னவென்று பார்த்தார். பரசுராமர் மிகக் கோபத்துடன் அதிவேகமாக வந்து

கொண்டிருப்பதை அவர் காண்கிறார். எதற்குமே அஞ்சாத நெஞ்சை உடைய மகாசக்தி வாய்ந்த, மகாதபஸ்வியான வசிஷ்டரே நடுங்குகிறார். பரசுராமரால் இந்த குழந்தைகளுக்கு என்ன ஆபத்து வந்துவிடுமோ என்று தசரதர் மிகவும் பயப்படுகிறார். பரசுராமர் வருகிறார், வசிஷ்டர் அவரை வரவேற்கிறார், மிகவும் கோபத்துடன் இருக்கிறார் பரசுராமர். தசரதர் அவரை வணங்கி சரணாகதி பண்ணி, என்னுடைய குழந்தைகளை தேவரீர் பொருத்தருளவேண்டும். இப்போதுதான் அவர்களுக்கு திருமணம் ஆகி இருக்கிறது, என்று வேண்டி நிற்கிறார் தசரதர். அப்பொழுது ஸ்ரீராமபிரானுக்கு வயது 12. பரசுராமர் தசரதருடைய சரணாகதியை ஏற்கவில்லை. தசரதர் மயங்கி கீழே விழுந்து விடுகிறார். பெருமாள் பரசுராமரை குறித்து சில வார்த்தைகளைச் சொல்லுகிறார். "தேவரீருடைய சரித்திரத்தை அடியேன் கேள்விப்பட்டிருக்கிறேன். தேவரீருடைய வைபவம் மகத்தானது. தேவரீருடைய திருத்தகப்பனார் ஜமதக்னி என்னும் ரிஷியை அநியாயமாக ஒரு க்ஷத்ரியன் கொன்றான். இத்தால் கோபமுற்ற தேவரீர் அந்த க்ஷத்திரியனுடைய இருபத்தோரு தலைமுறை ஸந்ததியாரை கொன்று, அவர்கள் இரத்தத்தைக் கொண்டு பித்ரு தர்ப்பணம் செய்தீர். ப்ராஹ்மண ஸமாஜத்திற்கே ஏற்பட்டிருந்த ஒரு அவதி நீங்கிற்று. இதை அடியேன் வரவேற்கிறேன், இதை அடியேன் ஆமோதிக்கிறேன்" என்று பெருமாள் வார்த்தை சொன்னார். ஆனால் இதையெல்லாம் கேட்பதற்கு பரசுராமருக்கு மனம் இடம் கொடுக்கவில்லை. அவர் சொன்னார், "நான் ஒருவன் ராமன் இருக்க நீயும் ஒரு ராமன் என்று பெயர் வைத்துக் கொள்வதா? நீ ஏதோ சிவபெருமானுடைய உடைந்த வில்லை எடுத்து நாண் ஏற்றினாய், இதோ பார் என்னிடம் இருப்பது விஷ்ணுவினுடைய மிகவும் சக்தி வாய்ந்த வில். இதை எடுத்து நாண் ஏற்றுபார்ப்போம், நீ இதை எடுத்து நாண் ஏற்றாவிடில் உன்னை மல்யுத்தம் செய்து கொல்வேன்" என்கிறார் பரசுராமர். பெருமாள் அடுத்தக்ஷணம் அந்த வில்லை அனாயாசமாக எடுத்து நாண் ஏற்றுகிறார். இதை பார்க்கிறார், ஆச்சர்யப்பட்டுப் போகிறார் பரசுராமர். அப்பொழுது சொல்கிறார், "ராமா! நீ யார் என்பதை நான் தெரிந்து கொண்டு விட்டேன். நீ சாக்ஷாத் விஷ்ணு பகவான். விஷ்ணுவைத் தவிர இந்த வில்லை யாராலும் தொடவும் முடியாது. அப்படிப்பட்ட சக்தி வாய்ந்தது இந்த வில். இதை எடுத்து நாணேற்றியபடியால், நீ விஷ்ணுவே! என்பது திண்ணம். நீ ஏதோ ஒரு காரியத்தின் பொருட்டு இங்கே ஸ்ரீராமனாக திருவவதாரம் செய்திருக்கிறாய். அந்த காரியம் நன்றாக கூடிய சீக்கிரம் நிறைவேற வேண்டும் என்று அடியேன் மங்களாசாசனம்

செய்கின்றேன். நீ நன்றாக இருப்பாய். உன்னுடைய பெருமை எங்கும் விளங்க வேண்டும்" என்று சொல்லி ஸ்ரீராமரை வலம் வந்து வணங்குகிறார். தன்னிடம் இருக்கும் விஷ்ணு சக்தியையும் ஸ்ரீராமபிரானுக்கு கொடுக்கிறார். இது எல்லாம் பாலகாண்டத்தில் கடைசி ஸர்க்கத்தில் நாம் காணலாம். "மார்கண்டேயனும் கரியே" என்கிறார் ஆழ்வார். பகவானுடைய பரத்வத்திற்கு மார்கண்டேயர் சாக்ஷி பூதர் என்பது அவருடைய திருவுள்ளம். அதைப் போன்றுதான் இங்கும் ஸ்ரீராமபிரானுடைய பரத்வத்திற்கு சாக்ஷி பூதராய் விளங்கியவர் பரசுராமர். இத்தால் பரசுராமரை ஆழ்வான் என்று சிறப்பித்துச் சொல்வது முற்றிலும் பொருத்தமுடையது என்பதை புரிந்து கொண்டேன். இத்துடன் பாலகாண்டம் முடிவு பெறுகிறது

ஸ்ரீராமாவதாரத்திலும் ஸ்ரீராமாயணத்திலும் பெரியவாச்சான்பிள்ளை மிகவும் ஊற்றத்துடன் இருந்தவர் என்பது நாம் அனைவருக்கும் தெரிந்த உண்மை. ஆங்காங்கே வரும் பல கட்டங்களுக்கு மிகரஸமாகவும், அர்த்தபுஷ்டி வாய்ந்ததாகவும் உள்ள ஸ்ரீஸூக்திகளை அருளிச்செய்துள்ளார். இவற்றில் மிகவும் ஈடுபட்டிருந்தவர் நம் வேளுக்குடி ஸ்வாமி. இத்தகைய பெரியவாச்சான் பிள்ளையுடைய ஸ்ரீஸூக்திகளை தம்முடைய உபந்யாஸங்களில் தவறாமல் குறிப்பிடுவர். அத்தகைய ஒரு சில ஸ்ரீஸூக்திகளைப் பற்றிப் பார்ப்போம்.

இளையபெருமாளுடைய பெருமையை பரதனுக்கு எடுத்துரைக்கிறார் குகபெருமாள். இதை "உப்பங்கழியின் பெருமையை கடலுக்குச் சொல்கிறான்" என்று பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்துள்ளார். கழி என்றால் உப்பங்கழி. கடல், அளவில் மிகப் பெரியது. உப்பங்கழி, அளவில் மிகச் சிறியதாக இருக்கும். இளையபெருமாளுடைய வைபவம் உப்பங்கழி போன்றது, பரதாழ்வான் வைபவம் கடலைப் போன்றது என்று ஸாதாரணமாகத் தோன்றும் அர்த்தம். ஆனால் இங்கே நாம் இப்படி அர்த்தம் கொள்ளக்கூடாது. நஹி நிந்தா நியாயத்தைக் கொண்டு, இந்த வாக்கியத்தில் இளையபெருமாளுடைய வைபவத்தை குறைவுபடுத்தி பேசுவதில் பெரியவாச்சான்பிள்ளைக்கு நோக்கமில்லை, பரதாழ்வானுடைய பெருமையை எடுத்துரைப்பதிலேயே அவருக்கு நோக்கம் என்பதை நாம் அறியலாம். இங்கே இப்படி நாம் பெரியவாச்சான்பிள்ளையுடைய ஸ்ரீஸூக்திக்கு அர்த்தம் கொள்ளுமளவில் நஹிநிந்தா நியாயத்தை நாம் அவசியம் கொள்ளவேண்டும். இதை நம் ஸ்வாமி சுட்டிக்காட்டுவர். ஸ்ரீராமாயணத்தில் ஸ்ரீராமாவதாரத்தில் பெருமாளும், பிராட்டியும், இளையபெருமாளும் தண்டகாரண்யத்தில்

பர்ணசாலையில் தங்கி இருக்கிறார்கள். பர்ணசாலை என்னும் இடம் இன்றும் பாதுகாத்து வரப்பட்டிருக்கிறது. பத்ராசலதிற்கு சுமார் முப்பது கிலோ மீட்டர் தொலைவில் தண்டகாரண்யத்தில் இந்த பர்ணசாலை என்னும் இடம் உள்ளது. அங்கு பெருமாளுக்கு ஒரு ஸந்நிதியும் உண்டு. பெருமாளும் பிராட்டியும் தங்கியிருந்த குடில் ஒன்று இன்றும் பாதுகாத்து வரப்பட்டுள்ளது. இவ்விடத்தில் கோதாவரி ஒரு நீச்சல் குளம் போல தோற்றமளிக்கும். அன்றும் அப்படித்தான் இருந்தது. இன்றும் அப்படித்தான் உள்ளது. ஒருமுறை இங்கு பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நீச்சல் போட்டி ஏற்பட்டது. இளையபெருமாள் தான் நடுவர். இக்கரையில் இருந்து அக்கரைக்கு செல்ல வேண்டும் அக்கரையில் இருந்து நீந்தி மீண்டும் இக்கரைக்கு வரவேண்டும். யார் முதலில் வருகிறார்களோ? அவர்தான் போட்டியில் ஜெயித்தவர். இக்கரையிலிருந்து அக்கரைக்கு செல்லும் பொழுது பெருமாள் வேகமாக நீந்தி முதலில் சென்று விடுகிறார் ஆனால் திரும்பி வரும் பொழுது பெருமாள் வேண்டுமென்றே மெதுவாக வருகிறார். பிராட்டி வேகமாக நீந்தி முதலில் வந்து போட்டியில்வெற்றி பெற்று விடுகிறார். அப்பொழுது பின்னாடிமெதுவாக நீந்திக் கொண்டு வரும் பெருமாளைப் பார்த்து பிராட்டி ஸந்தோஷத்துடன் பரிகாசம் தோற்றும்படி கைகொட்டிச் சிரிக்கிறாள். அவள் ஸந்தோஷத்தில் சிரித்து, தன்னை பரிகாசம் செய்வதை பெருமாள் மிகவும் ரஸித்து மகிழ்கிறார். இந்த கட்டத்தை பற்றி தன்னுடைய கருத்தைச் சொல்லும்பொழுது பெரியவாச்சான்பிள்ளை “பத்தினிக்கு தோற்பான் பரம ரஸிகன்” என்று அருளிச்செய்துள்ளார், பெருமாளுடைய ராஸிக்யத்தை கொண்டாடியபடி. இது மிகவும் ரஸமான விஷயம் என்பதால் இதை மிகவும் அனுபவித்து சொல்வர் நம் வேளுக்குடி ஸ்வாமி.

பெரியவாச்சான்பிள்ளை வால்மீகியை சதுரன் சதுரன் என்று கொண்டாடுகிறார். அதிஸாமர்த்தியசாலி என்று அர்த்தம். ஸ்ரீராமாயணத்தில் பலவிடங்களில் வால்மீகியுடைய இத்தகைய வைதுஷ்யம் நன்கு வெளிப்படுகிறது. விஸ்வாமித்ரர் முதலிய முனிவர்கள் பெருமாளுக்கு அனுகூல பாவத்தில் இருக்கும் புராணபுருஷர்கள். இவர்கள் மட்டும் பெருமாளுடைய வைபவத்தை பரக்க நிரூபித்திருக்கிறார்கள். அவர்கள் பெருமாள் வைபவத்தை வெளியிடும்படி ஶ்லோகங்கள் அமைத்த பாங்கு வால்மீகிக்கு உண்டு. ஆனால் வால்மீகி இத்துடன் மட்டும் இருப்பவர் அல்லர், அவர் பெருமாளுக்கு அனுகூல பாவத்தில் மட்டுமல்லாமல் விரோத பாவத்தில் அமைந்த பல வ்யக்த்திகள்

மூலமாகவும் பெருமாளுடைய வைபவத்தை பரக்க அருளிச்செய்துள்ளார். மாரீசன் என்ன, அகம்பனன் என்ன, தாரை என்ன, சூர்ப்பணகை என்ன, ராவணன் என்ன, மந்தோதரி என்ன இவர்கள் அனைவர் வார்த்தையிலும் நாம் பெருமாளின் வைபவத்தை பரக்க அனுபவிக்கும்படி வால்மீகி ஶ்லோகங்களை அமைத்துள்ளார். இவற்றுள் சூர்ப்பணகையுடைய வார்த்தையை மட்டும் எடுத்துக் கொள்கிறேன்.

"தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ புண்டரீக விசாலாட்சௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ" என்பது பெருமாளையும், இளையபெருமாளையும் பற்றி சூர்ப்பணகை வார்த்தை. இதற்கு வியாக்கியானம் நிர்வகிக்கும் பெரியவாச்சான்பிள்ளை, இந்த ஶ்லோகத்தினுடைய ஒவ்வொரு பதத்திற்கும் பரத்வ பரமாக வியாக்கியானம் அருளிச்செய்துள்ளார். ஸௌலப்ய பரமாகவும் வியாக்கியானம் அனுக்ரஹித்துள்ளார். ஸௌந்தர்ய பரமாகவும் வியாக்கியானம் அனுக்ரஹதுள்ளார். ராமாவதாரம், பூர்ணாவதாரம் என்று கொண்டாடப்படுகிறது. இதற்கு பலகாரணங்கள் உண்டு. அவற்றில் ஒரு முக்கிய காரணம் பெருமாளுடைய பரத்வ, ஸௌலப்ய, ஸௌந்தர்ய திருக்கல்யாண குணங்கள் அனைத்தும் ஒருசேர நன்கு பிரகாசித்திருப்பதை நாம் பார்க்கலாம். அதனால் இவற்றை வர்ணிக்க புகுந்த வால்மீகியும் பதங்களை எப்படி அமைத்தார் என்றால், ஶ்லோகங்கள் உடைய பதங்களை நாம் பரத்வ பரமாகவும், ஸௌலப்ய பரமாகவும், ஸௌந்தர்ய பரமாகவும் அனுபவிக்கலாம்.

"கௌசல்யா சுப்ரஜா ராம, பூர்வா ஸந்த்யா ப்ரவர்த்ததே, உத்திஷ்ட நர ஸார்தூல, கர்த்தவ்யம் தைவமாஹ்நிகம்" ,என்று விஸ்வாமித்ரர் பெருமாளுக்கு ஸுப்ரபாதம் பாடுகிறார். இந்த ஶ்லோகமும் பெருமாளுடைய பரத்வமென்ன, ஸௌலப்யமென்ன, சௌந்தர்யமென்ன இவற்றை நாம் ஒருசேர அனுபவிக்கும்படி அமைந்துள்ளது. ஸ்ரீராமாயணம் பாராயணம் செய்பவர்களுக்கு இத்தகைய பல ஶ்லோகங்கள் புலப்படும். இது வால்மீகியினுடைய ஒரு தனிச் சிறப்பாகும்.

இனி பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நடந்த திருக்கல்யாணத்தைப்பற்றி பார்ப்போம். திருக்கல்யாணத்தை வர்ணிக்கும் ஶ்லோகங்களுக்கு, அவ்விடத்தில் பெரியவாச்சான்பிள்ளை விசேஷமாக ஒன்றும் அருளிச்செய்யவில்லை. ஆனால் பிற்பாடு பெருமாள் காட்டிற்குப் புறப்பட வேண்டும் என்றிருக்கும் பொழுது அவர் பிராட்டியை நாட்டிலேயே அரண்மனையிலிருந்து கௌசல்யா தேவியை நன்கு

பார்த்துக் கொள்ளும்படி சொல்கிறார். இதனால் ப்ரணயரோஷம் தலையெடுத்த பிராட்டி, பெருமாளைக் குறித்து பின்வரும் ஶ்லோகத்தை சொல்கிறார்.

“கிம் த்வாமந்யத வைதே$_3$ஹ: பிதா மே மிதி$_2$லாதி$_4$ப:| ராம ஜாமாத்ரம் ப்ராப்ய ஶ்த்ரியம் புருஷவிக்ரஹம்||”

என்று ஶ்லோகம். அதாவது பித்ருவசநபரிபாலார்த்தமாக,”வனவாஸோ மஹோதய:” என்று ஸௌமுக்யத்தோடே வநவாஸ ஸுமுகர் என்று நாட்டார் அபர திருநாமம் சாற்றும்படி வநவாஸ ஸுமுகராய், அப்போது உலகுடைய நாச்சியாரான ஸ்ரீஜநகராஜன் திருமகளுடைய ஸுகுமாரமான திருமேனியின் மென்மையைத் திருவுள்ளம் பற்றிப் பிராட்டியை “திருவயோத்தியிலே நாம் மீண்டு வருமளவும் ச்வச்ரூ ச்வசுராதி பரிபாலநம் பண்ணிக் கொண்டு இரும் (மாமியார் மாமனார் முதலானாரை ரக்ஷித்துக் கொண்டிரு)”என்று பெருமாள் வேண்டிக்கொள்ள, அவ்வார்த்தை வ்ரணக்ஷாரம் போலே பிராட்டிக்கு அஸஹ்யமாய், ப்ரணயாபிமாநங்கள் வ்யுத்க்ரமமாகையாலே, பெருமாளைக் குறித்து க்ஷேபோக்தி பண்ணுகிறாள் இச்லோகத்தாலே.ராம - (வெளியழகாலே) ரமிக்கச்செய்பவரே! மிதி$_2$லாதி$_4$ப: - மிதிலைக்கு அரசராய், வைதே$_3$ஹ - விதேஹ குலத்திற் பிறந்த, மே பிதா - என்னுடைய தகப்பனாரான ஜநகர், புருஷவிக்$_3$ரஹம் - ஆணும்பையுடைய, ஸ்த்ரியம் -பெண்ணான, த்வா - உம்மை, ஜாமாதரம்- மாப்பிள்ளையாக,ப்ராப்ய - அடைந்து, கிம் அமந்யத - என்ன நினைத்திருப்பர்?

இந்த ஶ்லோகத்தை வியாக்கியானிக்கப் புகுந்த பெரியவாச்சான்பிள்ளை பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நடந்த திருக்கல்யாணத்தைப் பற்றி மிகவும் விசேஷமாக, விபுலமாக வியாக்கியான பங்க்திகளை அமைத்துள்ளார் என்று நம் வேளுக்குடி ஸ்வாமி காட்டியருளியுள்ளார். காட்டிலே பெருமாளும் பிராட்டியும் இளைய பெருமாளும் சென்றுகொண்டிருந்த பொழுது அத்திரிமகரிஷியின் ஆஶ்ரமத்தை அடைகிறார்கள். ரிஷியுடன் பெருமாள் வார்த்தை ஆடிக் கொண்டிருக்கிறார். ரிஷியுடைய தர்மபத்தினி அனுசூயை என்பவள். ஒரு கோடீஸ்வரனை பார்த்து பிச்சைக்காரன் பொறாமைப்பட முடியுமோ? முடியாது அன்றோ? அதைப் போன்று அனுசூயையின் பெருமை மிகப் பெரியது, அவளைக் குறித்து யாரும் பொறாமை படவே முடியாது என்பதால் அவளுக்கு அனுசூயை என்று திருநாமம். அவள் பிராட்டியுடன் உரையாடிக் கொண்டிருந்ததை வால்மீகி நன்கு வர்ணிக்கிறார். இங்கும் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் நடந்த

திருக்கல்யாணம் பற்றிய ஒரு சில குறிப்புகளை நாம் காணலாம். உன்னுடைய கல்யாணத்திற்கு யார் யாரெல்லாம் வந்திருந்தார்கள்? என்ன என்ன ஓதியிட்டார்கள் என்று அனசூயை பிராட்டியைப் பார்த்து கேட்கிறாள். இவர் மிகப் பெரிய பெரிய பெருமை வாய்ந்தவர் தானே, இவர் இப்படியெல்லாம் கேள்வி கேட்கலாமா என்றால், என்னதான் மிகப்பெரிய பெரியவளாக இருந்தாலும் அவளும் ஒரு பெண்பிள்ளை தானே இது ஸ்த்ரீகளுக்குண்டான ஸ்வபாவமன்றோ என்று சிரித்துக் கொண்டே சொல்வர் நம் வேளுக்குடி ஸ்வாமி. அதன்பிறகு அனுசூயை பிராட்டியைப் பார்த்து ஒரு வார்த்தை சொல்லுகிறார்,"உன்னுடைய கணவர் ஸ்ரீராமபிரான் திருக்கல்யாண குணங்களை பூரணமாக உடையவர். அக்காரணத்தினால் அவரை விட்டுபிரிய மனமில்லாமல் நீ அவரை பின்தொடர்ந்து வந்துள்ளாய் இது வரவேற்கத்தக்கதக்கதே." இங்குதான் பிராட்டி ஒரு சீரிய சாஸ்திரார்த்தத்தை வெளிப்படுத்துகிறார். அதாவது குணக்ருத தாஸ்யம், ஸ்வரூபக்ருத தாஸ்யம் என்று இரண்டு விஷயங்கள். நாம் பகவானுடன் சம்பந்தப்பட்டிருப்பவர்கள். இந்த ஸம்பந்தம் குணக்ருததாஸ்யத்தில் அடங்காது. ஒரு திருத்துழாய் முளைக்கும் பொழுதே மணத்துடன் முளைக்குமா போலே நாம் இயற்கையாகவே அதாவது நம்முள் இருக்கும் ஒரு அசாதாரண தர்மத்தின் படியே பகவானுக்கு சேஷப்பட்டவர்கள் ஆகிறோம். இதுதான் ஸ்வரூபக்ருத தாஸ்யம் என்பது. பிராட்டியும் இவ்விஷயத்தை அனுசூயை இடம் சொல்கிறாள். "என்னுடைய கணவர் சமஸ்த கல்யாண குணாத்மகன் என்பது உண்மையே. ஆனால் அவருடைய திருக்கல்யாண குணங்களுக்கு தோற்று நான் அவரைப் பின் தொடர்ந்து வந்துள்ளேன் என்பதன்று. அவருக்கு திருக்கல்யாண குணங்கள் இல்லாமல் இருந்தாலும் நான் அவரை பின் தொடர்ந்து வந்து இருப்பேன். ஆனால் அவர் திருக்கல்யாண குணங்கள் நிறைந்தவர் ஆகிய படியாலே, அவருடைய திருக்கல்யாண குணங்களுக்கு தோற்று வந்துள்ளேன் என்று தோற்றமளிக்கிறது" என்று சொல்கிறார் பிராட்டி. ஸ்வரூபக்ருத தாஸ்யத்வம் என்பது ஒரு சீரிய சாஸ்திரார்த்தம். நாம் அனைவருமே பகவானைப் பற்றி இருக்கும் ஸ்வரூபக்ருத தாஸ்யத்தை சேர்ந்தவர்களே. அதை இங்கே பிராட்டி திருவாக்கினால் வெளிப்படுத்துகிறார் வால்மீகி. பெருமாளுடன் பிராட்டிக்கு உண்டான பிடிப்பு அதை வால்மீகி நன்கு வெளிப்படுத்தி காட்டுகிறார்.

"நைஷா பஶ்யதி ராக்ஷஸ்ய நாமான் புஷ்ப்பலத்$_3$ருமான்| ஏகஸ்த$_2$ஹ்ருத$_3$யா நூனம் ராமமேவானு பஶ்யதி||" என்று சுந்தரகாண்டத்தில்

பிராட்டியை பற்றிய ஒரு ஶ்லோகம்.அதாவது நூனம் பஶ்யதி- இப்போது இவள் (சீதை), ராக்ஷஸ்ய - ராக்ஷஸிகளை, ந பஶ்யதி - கவனியாதிருக்கிறாள், இமான் - இந்த, புஷ்ப்பலத்3ருமான் - புஷ்பம், பழங்களுள்ள மரங்களையும், ந - கவனியாதிருக்கிறாள், ஏகஸ்த$_2$ஹ்ருத$_3$யா - ஒன்றிலேயே நிலைநின்ற ஹ்ருதயமுடையவளாய், ராமம் ஏவ - ஸ்ரீராமரையே, அனுபஶ்யதி - இடைவிடாது தியானித்துக் கொண்டிருக்கிறாள். இங்குதான் பிராட்டி இப்படி இருக்கிறாள் என்பதன்று. ஸ்ரீராமாயணம் முழுவதும் அவளுடைய ஸ்வபாவம் இப்படியே இருந்தது என்பதை வால்மீகி நன்றாக காட்டியருளுகிறார்.

காட்டிலே பல இடங்களுக்கு சென்ற போது ஆங்காங்கே ரிஷிகள் தபஸ் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்த்து பெருமாள் மிகவும் ஸந்தோஷம் அடைகிறார். அதுமட்டுமன்று வழி எங்கும் இருக்கும் இயற்கை எழில் அது பெருமாளின் திருஉள்ளத்தை மிகவும் கவர்கின்றது. அவ்வப்பொழுது "ப்ரியே ப்ரியே" என்று சீதையை குறித்து இவ்விஷயத்தைச் சொல்லி மகிழ்வர். ரிஷிகள் தபஸ்செய்யும் காட்சி என்ன, இயற்கை எழில் என்ன, இது போன்ற விஷயங்கள் எல்லாம் பெருமாள் திருவுள்ளத்தை நன்கு கவர்ந்தது. அதுபோன்று பிராட்டியின் திருவுள்ளத்தை இவை கவர்ந்ததா என்றால் அதுதான் இல்லை. பிராட்டிக்கு இதெல்லாம் ஒரு பொருட்டே இல்லை. அவளுக்கு எல்லாம் பெருமாள் தான். பெருமாளைத் தவிர அவளுடைய திருவுள்ளம் வேறு எதிலும் ஈடுபடவில்லை. பிராட்டியினுடைய இந்த ஸ்வபாவத்தை ஸ்ரீராமாயணம் முழுவதும் ஆங்காங்கு காட்டுகிறார் வால்மீகி. இது ஒரு அத்யாச்சர்யமான விஷயம். இவர்கள் மூவரும் சித்திரகூடத்தை நோக்கி செல்கிறார்கள். வழியில் மலைச்சாரல், மலைகள் குகைகளில் எல்லாம் ரிஷிகள் தபஸ் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள். கீழே மந்தாகினி நதி ஓடுகிறது. நதியின் இருபுறங்களிலும் பூக்கள் புஷ்பித்து பல வர்ணங்களில் பூக்கள் அந்த நதியில் விழுகின்றன. அந்த புஷ்பங்களால் அந்த நதி பல வர்ணங்களுடன் மிக நன்றாக காட்சியளிக்கிறது . அந்த நதியில் நீராடும் பெருமாளுக்கு திருவுள்ளத்திலே மிக்க மகிழ்ச்சியை கொடுக்கிறது. "ப்ரியே ப்ரியே" என்று சீதையிடம் சொல்லி, "இதோ பார் ரிஷிகள் தபஸ் செய்து கொண்டிருக்கும் காட்சி எவ்வளவு அழகாக இருக்கிறது. இந்த இயற்கை எழில் எவ்வளவு அழகாக இருக்கிறது. இந்த நதி எப்படி பல வர்ணங்களுடன் காட்சியளிக்கிறது," என்று சொல்கிறார். பல மரங்கள் பழுத்து பழங்களும் நிறைந்திருக்கின்றன. அவற்றுள் நெல்லிக்கனியை மாத்திரம் எடுத்துக்கொண்டு

பிராட்டி மடியில் கட்டிக் கொள்கிறாள் என்று வால்மிகி எழுதுகிறார். பெருமாளுக்கு பிடித்ததென்று அவற்றை எடுத்து மடியில் கட்டிக் கொண்டாளா, இல்லை தனக்கு பிடித்ததென்று அவற்றை எடுத்து மடியில் கட்டிக் கொண்டாளா என்பதற்கு வால்மீகி வர்ணிக்கவில்லை. எனினும் நாம் நெல்லிக்கனி சாப்பிடும்பொழுது பிராட்டியின் நினைவு நமக்கு கண்டிப்பாக வரவேண்டும் என்பதற்காக அடியேன் இங்கு குறிப்பிட்டேன்.

இனி நம் ஸ்வாமியுடைய சிறப்பு இயல்பு ஒன்றைப் பற்றி இங்கே குறிப்பிடுகிறேன். அதாவது ஒரு விஷயத்தைப் பற்றி சர்ச்சை என்று வந்தால் நம் ஸ்வாமி அதில் ஈடுபடமாட்டார், ஆனால் அந்த விஷயம் பற்றி தமக்கு ஏதாவது கருத்து தெரிவிக்க வேண்டும் என்று இருந்தால், அதை பிற்பாடு பல வருடங்களுக்கு பின்பு அதற்கென்று சமயம் வாய்க்கும் பொழுது சொல்லிவிடுவர். இரண்டு உதாரணங்களை அடியேன் காட்டுகின்றேன். அந்த காலத்தில்" ஸ்ரீ ராமானுஜ ஸித்தாந்த வைஜெயந்தி" எனும் ஒரு பத்திரிகை ஐந்து வருட காலம் வந்து கொண்டிருந்தது. அதற்கு வடகலை ராமானுஜ தாசர் ஆசிரியராய் இருந்து வந்தார். அப்பத்திரிகையில் ஒருவர் ஒரு ஆட்ஷேபனை தெரிவித்தார். பகவத் விஷய வியாக்கியான அரும்பதத்தில் விபீஷணனை விபீஷணாழ்வான் என்று குறிப்பிடப்பட்டிருந்தது. இதைப்பற்றி அந்த அன்பர் விபீஷணனை விபீஷணாழ்வான் என்று எப்படி சிறப்பித்து சொல்லலாம்? விபீஷணனைப் பற்றி பெருமாளும் "ராஜ்யகாங்க்ஷி விபீஷண:" என்று சொல்கிறார், திருவடியும் "ராஜ்யகாங்க்ஷி விபீஷண:" என்று சொல்கிறார். விபீஷணன் ராஜ்ஜியத்துக்கு ஆசைப்பட்டு பெருமாளிடம் சரண் புகுந்தவன் என்பது இங்கே தோன்றக்கூடிய பா$_4$வார்த்தம். அதனால் அர்த்தகாமரான ஒருவரை ஆழ்வார் என்று எப்படி சிறப்பித்துச் சொல்லலாம் என்று இந்த அன்பர் எழுப்பியிருந்த ஆட்ஷேபம். இதற்கு வித்வான்களான பல பெரியோர்கள் யாராவது தகுந்த ஸமாதானத்தை பத்திரிகையில் எழுதினால், பலருக்கு அதில் உண்மையை அறிவதில் உதவி புரியும் என்று அவர் சொல்லி இருந்தார். ஆனால் இதற்கு தகுந்த பதில் கூற எந்த வித்வானும் முன் வரவில்லை. ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஸூக்தி ரத்நாகரம் இளையவல்லி சடகோபாசார்யார் ஸ்வாமி மட்டும் ஏதோ சில விஷயங்கள் எழுதி இருந்தார். அவர் எழுதியிருந்ததிலிருந்தும் ஏதும் தெளிவு பிறக்கவில்லை. மேலும் சிலர் ஏதோ எழுதி இருந்தார்கள். ஆனால் இந்த விஷயத்திற்கு தகுந்த

ஸமாதானம் எதிலும் காணப்படவில்லை. இதற்கு பல வருஷங்களுக்குப் பிறகு வேளுக்குடி ஸ்வாமி இந்த விஷயத்தை காலக்ஷேபத்தில் எடுத்துக்கொண்டார்.

பெருமாளும், திருவடியும் "ராஜ்யகாங்க்ஷி விபீஷண:" என்று விபீஷணனை பற்றிச் சொல்லியிருப்பதனால், இதை விபீஷணன் ராஜ்ஜியத்திற்கு ஆசைப்பட்டவன் என்று தீர்மானித்துவிட முடியாது. இவர்கள் வார்த்தையை பெரியவாச்சான்பிள்ளை "வழிப்போக்கன் வார்த்தை" என்று தள்ளி விட்டார் என்று வேளுக்குடி ஸ்வாமி கூறினார். உடனே அடியேன் தனிஶ்லோக வியாக்கியானத்தை ஸேவித்து பார்த்தேன். இங்கும் அப்படியே பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்தி அடியேனுக்கு காணப்படவில்லை. சரி வேறு எங்கேயாவது பெரியவாச்சான்பிள்ளை இப்படி ஒரு அபிப்ராயத்தை தெரிவித்து இருக்கலாம் அதைத்தான் ஸ்வாமி சுட்டிக்காட்டுகிறார் என்று அடியேன் நினைத்துக் கொண்டேன். நம் ஸ்வாமி மேலும் என்ன சொன்னார் என்றால் தேசிகனும் அபயபிரதான ஸாரம் என்னும் ரகசிய க்ரந்தத்தில் விபீஷணனை விபிஷணாழ்வான் என்று நாம் சிறப்பித்துச் சொல்லுதல் முற்றும் பொருத்தம் உடையதே என்பதை காட்டியருளியுள்ளார் என்றும் சொன்னார். பெரியவாச்சான்பிள்ளை போலவே அவரும் காட்டியுள்ளார் என்று சொன்னார். அதாவது நாம் இங்கே எப்படி அர்த்தம் கொள்ளவேண்டும் என்றால் ஒருவருடைய நிலையை அறுதியிடும்பொழுது அவரைப் பற்றி பிறர் என்ன சொல்லி இருக்கிறார்கள் என்பதைக் கொண்டு நாம் அவரைப் பற்றி அறுதியிட முடியாது. அவர் தம்மைப் பற்றி என்ன சொல்கிறார் என்பதை கொண்டு அவரைப் பற்றி நாம் அறுதியிட வேண்டும். இதுதான் அந்தரங்க நியாயம் என்பது. விபீஷணன் நிலையை பெருமாளும் திருவடியும் எப்படி சொல்கிறார் என்பதே கொண்டு நாம் நிர்ணயிக்க முடியாது. விபீஷணன் தம்மைப் பற்றி

"ஸோऽஹம் பருஷிதஸ்தேந தாஸவச்சாவமானித: |
த்யக்த்வா புத்த்ரம் ச தா3ரம் ச ராகவம் சரணம் க3த: ||"

என்கிற ஶ்லோகத்தை இங்கே உதாஹரிக்க வேண்டும். இவ்வாறு சொல்லிக் கொண்டதைக் கொண்டு, அவர் ஸ்ரீராம கைங்கர்யத்தை ஆசைப்பட்டு பெருமாளிடம் சரணாகதி பண்ணினவர் என்பதை நாம் அறியலாம். இப்படி தீர்மானிக்கும் பக்ஷத்தில் அவரை விபீஷணாழ்வான் என்று சிறப்பித்துச் சொல்வது முற்றிலும் பொருத்தமுடையது என்பது இங்கே நாம் அறியலாம். இந்த

அந்தரங்க நியாயம் என்பது பல விடங்களில் வரும். ஆழ்வாருடைய வைபவத்தை பார்க்கும் பொழுது, இவர் நித்தியசூரிகளில் ஒருவரொ என்று நினைக்கத்தோன்றும். ஆனால் “மாறி மாறி பல பிறப்பும் பிறந்து” என்று அவர் தம்மை பற்றி சொல்லிக்கொண்டபடியாலே இவர் நித்திய ஸம்சாரிகளில் ஒருவரே என்ற உண்மை புலப்படும்.

நமக்கு சாஸ்திரங்கள் பல இருக்கின்றன. வேதாந்தம் இருக்கிறது, இதிஹாச புராணங்கள் இருக்கின்றன, தர்ம சாஸ்திரங்கள் இருக்கின்றன, ப்ரஹ்மசூத்திரப்ரபந்தம் இருக்கிறது இவ்வளவு சாஸ்திரங்கள் இருக்கும்போது பகவான் ஏன் கீதோபதேசத்தை செய்யவேண்டும் என்னும் ஒரு ஆக்ஷேபம் எழுகிறது. இங்கும் அந்தரங்க நியாயத்தை நாம் கொள்ள வேண்டும். சாஸ்திரங்கள் எவ்வளவோ பலவாக இருந்தாலும், அவன் இப்படிப்பட்டவன் என்பதை நமக்கு சுட்டிக் காட்டினாலும், அதை விட பலமடங்குகளில் சிறப்புடையது பகவான் தன்னைப்பற்றி சொல்லிக்கொண்ட வார்த்தைகளாகும். ஏனென்றால் அவன் தன்னைப் பற்றி சொல்லிக்கொண்டதை வைத்துக்கொண்டு நாம் அவனை அறிவதே சாலச் சிறந்ததாகும். அதனால் அந்தரங்க நியாயம் என்பதை கொண்டு பகவான் கீதா சாஸ்திரத்தை அருளிச்செய்தது முற்றிலும் பொருத்தமுடையது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

காரப்பங்காடு ஸ்வாமி “ராமாயணசாரம்” என்னும் ஒரு நூல் எழுதி இருந்தார். அதில் பெரியவாச்சான்பிள்ளையுடைய ஸ்ரீஸூக்தி ஒன்றை தம்முடைய வாக்கியமாக எடுத்து எழுதி இருந்தார் .“கட்டிலே வைத்த போதோடு காட்டிலே விட்டபோதோடு வாசியற பெருமாள் நினைவை பின்தொடர்ந்தாள் பிராட்டி” என்பது பெரியவாச்சான்பிள்ளையுடைய ஸ்ரீஸூக்தியில் கட்டிலே வைத்தபோதோடு என்பதற்கு பதிலாக கட்டிலிலே வைத்தபோதோடு என்று தவறாக அச்சாகி இருந்தது. இதை கண்ட ஒரு மகா வித்வான் ஒருவர் காரப்பங்காடு ஸ்வாமியை பரிகாஸம் செய்தார். “இவர் பெரியவாச்சான் பிள்ளையுடைய ஸ்ரீஸூக்தியை காப்பியடித்துவிட்டார். காப்பி அடிக்கும் போது சரியாக கூட காப்பி அடிக்கத் தெரியவில்லை இவருக்கு. கட்டிலே என்பதற்கு பதிலாக கட்டிலிலே என்று எழுதிவிட்டார்,” என்று அவர் பரிகாசம் செய்தார். இதற்கு காரப்பங்காடு ஸ்வாமி இங்கே அச்சு பிழையும் இல்லை அல்லு பிழையும் இல்லை கட்டிலே என்றால் என்ன அர்த்தம் ஸித்திக்குமோ அதுதான் கட்டிலிலே என்றாலும் கிடைக்கும் என்று சொன்னார். இவ்விஷயம் பெரிதாக ஒன்றும்

சர்ச்சையைக் கிளப்பவில்லை. ஆனால் நம் வேளுக்குடி ஸ்வாமியின் திருவுள்ளத்திலே மட்டும் இது தங்கியிருந்தது. பிற்பாடு இந்த விஷயம் ஸம்பந்தமாக தமக்கு தெரிவிக்க வேண்டிய கருத்தை ஸ்வாமி மிக அழகாக தெரிவித்தார். ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபத்தின்போது ஒரு சமயம் வாய்த்தது. மதாசார்யர்களுள் ஆதிசங்கரரும், மத்வாச்சாரியாரும் உபநிஷத்துக்கள் எல்லாவற்றுக்கும் பாஷ்யம் எழுதியுள்ளார்கள். நம் ஸ்வாமி எம்பெருமானார், அந்த க்ரமத்தில் பாஷ்யம் அருளிச்செய்யவில்லை. அவர் ஸ்ரீபாஷ்யம், வேதார்த்த ஸங்க்ரஹம் முதலான க்ரந்தங்களிலும் ஒரு சில வேத வாக்கியங்களை மட்டும் எடுத்துக்கொண்டு, அதற்குண்டான உண்மையான கருத்தை வியாக்கியானம் செய்துள்ளார். நம்முடைய ஸித்தாந்தத்தின்படி உபநிஷத்துக்களுக்கு வியாக்கியானம் அனுக்கிரஹித்தவர் ரங்கராமானுஜமுனி என்னும் பெரியவர். இவரை நாம் “உபநிஷத் பாஷ்யக்காரர்” என்றும் குறிப்பிடுவதுண்டு. இவர் தாம் பாஷ்யம் அருளிச்செய்யும் பொழுது பலவிடங்களில் ஆதிசங்கரருடைய வியாக்கியான பங்க்திகளை அப்படியே எடுத்து தம்முடைய வார்தையாகவே அமைத்துள்ளார். குறிப்பாக பிருஹதாரண்யக உபநிஷத் பாஷ்யத்தில், ஆதிசங்கரருடைய வியாக்கியான பங்க்திகளை தம்முடைய வ்யாக்யானமாகவே எடுத்து அமைத்துள்ளார். இதை சுட்டிக் காட்டுவார் நம் ஸ்வாமி. இதுபோன்று பெரியவாச்சான்பிள்ளையுடைய வியாக்கியான ஸ்ரீஸூக்திகள் பலவற்றை ஸம்ஸ்கிருத பாஷையில் அப்படியே மொழிபெயர்த்து தம்முடைய பாஷ்யத்தில் சேர்த்துக்கொண்டார்தேசிகன் பொய் இலாத நம் மணவாள மாமுனிகளும் இந்த ஸம்பிரதாயத்தை கை கொண்டவரே. அதாவது புருஷகார வைபவபிரகரணத்தில் “எதிர் சூழல் புக்கு “ என்று அருளிச்செய்துள்ளார். “எதிர் சூழல் புக்குஎன்கிறபடியே” என்று இருந்திருந்தால் அவர் ஆழ்வாருடைய ஸ்ரீஸூக்தியை உதாஹரித்திருப்பவராவார்.ஆனால் அப்படி எழுதாமல் “எதிர் சூழல் புக்கு” என்றுமட்டும் எழுதியிருப்பதனால் அவர் ஆழ்வார் ஸ்ரீஸூக்தியை தம்முடைய ஸ்ரீஸூக்தியாகவே அமைத்திருக்கிறார். “மேலும் கங்கா கூலே பம்பா தீரே” என்றும் அவர் அருளிச்செய்துள்ளார். “கங்கா தீரே பம்பா கூலே” என்று அவர் எழுதியிருக்கலாம் அப்படி எழுதி இருந்தாலும் அதே அர்த்தம் தான் சித்திக்கும். ஆனால் அவர் “கங்கா கூலே பம்பா தீரே” என்று எடுத்து எழுதி இருப்பதற்கு மூலம் என்னவென்றால் ஸ்ரீராமாயணத்தில் முதல் ஸர்க்கத்திலே “கங்கா கூலே பம்பா தீரே” என்றுதான் இருக்கிறது. அதனால் நம் மணவாள மாமுனிகளும்

“கங்கா கூலே பம்பா தீரே” என்றுதான் எழுதி இருக்கிறார். இத்தால் நாம் காணும் உண்மை என்னவென்றால், “முன்னோர் மொழியை பொன்னே போல் போற்றிக் காக்க வேண்டும்” என்பது நன்னூல் இலக்கண மரபாகும். இந்த மரபின் வழி வந்தவர்கள் நம் பெரியோர்கள். இதனால்தான் பெரியவர்களுடைய வார்த்தைகளை தம்முடைய வாக்கியங்கள் ஆகவே எடுத்து அமைத்து இவர்கள் எழுதி உள்ளார்கள். அது அவர்களிடத்தில் இவர்களுக்கு உண்டான ஒரு கௌரவ பிரதிபத்தியைத் தான் காட்டும். இந்த இலக்கண மரபுப்படி பெரியோர்களுடைய திருவாக்குகளானவை “Eternal and Universal”. அவற்றை நாம் அப்படியே எடுத்து கொள்வதில் தவறொன்றுமில்லை. இப்படி சர்ச்சை என்று வந்த பொழுது அதைத்தான் பட்டுக் கொள்ளாமல் பிறகு சர்ச்சைகுண்டான விஷயம் பற்றி தமக்கு தெரிவிக்க வேண்டிய கருத்தை ஸ்வாமி தெரிவித்து விடுவர்.

பெங்களூரில் என்று நினைக்கிறேன், ஒருமுறை வேளுக்குடி ஸ்வாமியின் ஸ்ரீராமாயண காலக்ஷேபம். அந்த காலக்ஷேபத்தில் ஒரு நாள் ஒரு விஷயத்தை மிகவும் அழகாக எடுத்துரைத்தார். மிகவும் ஆச்சர்யமான விஷயம் அது. பிராட்டி திருவடியிடம் "நீர் அறிந்த ராமனைப் பற்றி எனக்கு கொஞ்சம் சொல்ல வேண்டும்" என்று கேட்கிறாள். திருவடி தாம் அறிந்த ராமனைப் பற்றி பிராட்டியிடம் விண்ணப்பம் பண்ணுகிறார். பகவான் ஸ்ரீராமனுடைய திருக்கல்யாண குணங்கள், அவனுடைய திருமேனி சௌந்தரியம், இவற்றையெல்லாம் பலவாறு வர்ணிக்கிறார் திருவடி. அதில் ஒரு ஆச்சர்யமான வார்த்தை கூறுகிறார்.

ராமபிரான் தன்னுடைய அனுஷ்டானத்தினால் சாஸ்திர மரியாதையில் நிலைநிற்பவர், மற்றும் அத்தை நிலைநாட்டுபவர். சாஸ்திர மரியாதைக்கு ஆட்பட்டவர், பிறரையும் ஆட்பட செய்பவர். இதனால்தான் வடதேசங்களில் அவர்கள், ராமபிரான், ராமன், பெருமாள், சக்கரவர்த்தித்திருமகன் என்றெல்லாம் நாம் இராமனை குறிப்பிடுவது போல் அழைக்க மாட்டார்கள். "மரியாதா புருஷோத்தம் ராம்" என்று ஸ்ரீராமபிரானை குறிப்பிடுவர்கள். சாஸ்திர மரியாதையில் நிலைநிற்பது, பிறரையும் நிலைநிற்கச்செய்வது இவ்வாறு இருக்கும் புருஷர்களில் தலைச்சிறந்தவர் பெருமாள். ஆகையால் புருஷோத்தமன். மரியாதை என்பது சாஸ்திரமரியாதை, வேதத்திற்கு மரியாதை என்று பொருள். இந்த விஷயத்தை பற்றி நம் வேளுக்குடி ஸ்வாமி மிகவும் அழகாக அரைமணிநேரம் எடுத்துக்கொண்டு விளக்கினார். அவர் விரிவாக இதைப் பற்றி விளக்கியுள்ளதை, நான் இங்கு சுருக்கமாக கூறியுள்ளேன். அந்த

காலக்ஷேபம் கிடைக்கின்றது அதை கண்டிப்பாக கேட்க வேண்டும். அவருடைய அந்த காலக்ஷேபத்தை ஒரு கட்டுரையாக ஏடுபடுத்தினால் மிகவும் சிறப்பாக இருக்கும். இந்த விஷயத்திற்காக அவர் எடுத்துக்கொண்ட அரைமணி காலம். அவருடைய வாக்வைபவம் மிகவும் சிறப்பாக அமைந்தது.

பெருமாள் பிராட்டியை ஏன் காட்டிற்கு அனுப்பினார் என்று நம்முள் கேள்வி எழக்கூடும். இது ஒரு முக்கியமான கேள்வி. இந்த கேள்விக்குண்டான பதில் க்ரந்தத்தில் இருப்பதுதான், ஆசார்யர்களும் அருளிச் செய்ததுதான். ஆனால் நம் ஆசார்யர்கள் இந்த கேள்வியை நேரடியாக கேட்கவில்லை. பிராட்டி வைபவபரமாய், அவர்கள் அருளிச்செய்த வார்த்தை இந்த கேள்விக்கு பதிலாக அமைகிறது. இதற்காக நாம் உத்தரஸ்ரீராமாயணத்தையும் பார்க்கவேண்டும். பத்தாயிரம் வருடங்கள் மலடுகிடக்கிறாள் பிராட்டி. பின்பு கர்ப்பம் தரிக்கிறாள். இந்த விஷயத்தை பெருமாளிடம் கூறுகிறாள். பெருமாள் மிகவும் மகிழ்வுடன் பிராட்டியிடம் "இந்த சமயத்தில் நீ என்ன விரும்புகிறாய்?" என்று கேட்கிறார். ஒரு நாள் இரவாவது கங்கை கரையில் இருக்கும் ரிஷிகளுடைய ஆஶ்ரமத்திற்கு செல்ல வேண்டும். அங்கே வசிக்க வேண்டும் என்று பிராட்டி தன் விருப்பத்தை தெரிவிக்கிறாள். இங்கு பிராட்டி தான் மட்டும் அங்கே போய் வசிக்க வேண்டும் என்று கூறவில்லை. பெருமாளுடன் சேர்ந்து அங்கே செல்ல வேண்டும் என்றுதான் நினைக்கிறாள். ஆனால் பெருமாளுக்கு ராஜ்ய நிர்வாகத்தின் காரணமாக பிராட்டியை மட்டும் செல்லும்படி கூறுகிறார். தபோவனத்திற்குச் சென்றபின் இளையபெருமாள் பெருமாளுடைய திருவுள்ளக் கருத்தை தெரிவிக்கிறார். இப்படி மேலே சரித்திரம்.

பகவானோடு பிராட்டிக்கு பிரிவு என்பது உண்டா, இல்லையா என்னும் விசாரத்தை முதலில் நாம் செய்ய வேண்டும். ஏனென்றால் இந்தக் கேள்விக்கு இரண்டு விதமாக பதில் நமக்கு தெரிய வேண்டும். ஒன்று சாஸ்த்ரபரமாக தெரியவேண்டும்; மற்றொன்று ஸ்ரீராமாயண கதைபோக்கில் பதில் தெரிய வேண்டும். பெருமாளுக்கும் பிராட்டிக்கும் உண்டான ஸம்பந்தம் நித்ய ஸம்பந்தம், நித்ய யோகம். பெருமாளுக்கும் பிராட்டிக்கும் உண்டான ஸம்பந்தம் அவினாபா$_4$வ ஸம்பந்தம், அன்யோன்ய பா$_4$வ ஸம்பந்தம். பிராட்டியும் பெருமானையும் இரண்டு பேரையும் ஒருவரை விட்டு மற்றொருவரை பிரிக்க முடியாது. இது சாஸ்திரத்தில் கூறப்பட்ட விஷயம். இந்த பிராட்டிக்கும் பெருமானுக்கும் இருக்கும்படியான நித்திய யோகம் “ஸ்ரீமந்நாரயண சரணௌ

சரணம் ப்ரபத்யே” என்கிற மந்த்ர ரத்தினத்தின் பூர்வ வாக்யத்தில் ஸ்ரீமத் என்கிற ஶப்தம் காண்பிக்கின்றது. அதனால் பெருமானுடன் நித்யமான சம்பந்தத்தைவுடையவள் பிராட்டி. இதை ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் பராசர பகவானும் சொல்கிறார், சதுஶ்லோகியில் ஆளவந்தாரும் காண்பித்திருக்கிறார், இன்னும் பல இடங்களில் வந்திருக்கும் விஷயமே இது. ஸ்ரீராமாயணத்திலேயே இதற்கு ஆதாரம் உண்டு. “அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபாயதா” என்பது பிராட்டி வார்த்தை. அதாவது “சூரியனை விட்டு பிரியாத ப்ரபையை போன்று நான் பெருமாள் விட்டு என்றும் பிரியாதவள்,” என்பது பிராட்டி கூறும் வார்த்தைக்கு அர்த்தம். இதை போலவே பெருமாளும் “அநன்யாஹி மயா ஸீதா பாஸ்கரேண ப்ரபாயதா” , என்று வார்த்தை கூறுகிறார். அதாவது சூரியனை விட்டுப் பிரியாத ப்ரபையைப் போலே என்றும் பிராட்டி என்னுடன் சேர்ந்து இருப்பவள் என்று பெருமாள் கூறுகிறார். அதனால் இவற்றை கொண்டு பார்க்கும் காலத்தில் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் பிரிவு என்பது இல்லை. அவர்களுடைய சேர்த்தி என்பது நித்ய யோகம், நித்ய ஸம்பந்தம். அனால் ஸ்ரீராமாவதார காலத்தில் ஏதோ அவதாரத்திற்காக சரித்திர போக்கில் பிராட்டி பெருமானை சிறிது காலம் பிரிய நேரிடுகிறது. அந்த இடங்களை நம் ஆசார்யர்கள் எப்படி நிர்வஹிக்கிறார்கள் என்றால் பிராட்டியினுடைய வைபவபரமாய் நிர்வஹிக்கிறார்கள். முதலில் பிராட்டி பிரிவது அவளுடைய காருண்யத்தை காண்பிக்கிறது; இடையில் பிராட்டி பெருமாளை பிரிந்ததால் அவளுடைய அத்யந்த பாரதந்த்ரியம் என்கிற வைபவம் அங்கு ப்ரகாசிக்கிறது; இறுதியாக பிரிவில் அநந்யார்ஹ சேஷத்வம் என்கிற ஆகாரம் பிராட்டியின் வைபவத்தில் நாம் பார்க்கலாம் . இந்த மூன்று பிரிவுகளுமே பிராட்டியினுடைய வைபவத்தை பறைசாற்றும்படியாகத்தான் அமைந்திருக்கிறது.

“**சீதாயா: சரிதம் மஹத்**” என்கிறார் வால்மீகீ. மேலும் சுந்தரகாண்டத்தில் “**ராஜ்யம் வா த்ரிஷு லோகேஷு ஸீதா வா ஜநகாத்மஜா|த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத்கலாம்।।**” என்று திருவடியின் வார்த்தை. பிராட்டியின் வைபவபரமாக அமைந்திருப்பதால் வால்மீகி முனிவர் “மகத்தான சீதையின் சரிதம்” என்று பெயரிட்டுள்ளார். ஸுந்தரகாண்டத்தில் கீழே திருவடியின் வார்த்தையாக வரும் ஶ்லோகம் என்ன சொல்கிறது என்றால் அதாவது த்ரிஷுலோகேஷு - மூன்று உலகங்களில், ஸகலம் - எதொன்றிருந்தால் வேறு எதொன்றையும் அபேக்ஷிக்க மாட்டோமோ அது, ராஜ்யம் - ராஜ்யமா, வா -

அல்லது, ஜநகாத்மஜா - ஜநகர் திருமகளான, ஸீதா - ஸீதையா, வா - என்று அறிய விரும்பினால், த்ரைலோக்ய ராஜ்யம் - த்ரிலோகாதிபத்யமும், ஸீதாயா: - ஸீதையின், கலாம் - ஓர் அணுவுக்கு, நாப்னுயாத் - ஈடாகமாட்டாது. மூன்று லோகங்களையும் ஒரு தராசிலும், சீதையை மற்றொரு தராசிலும் வைத்து ஒப்பு நோக்கினால் ஜநனகனின் குமாரத்தியான சீதையின் பதினாறு பங்கில் ஒரு பங்கு ஒப்புமை கூட பெறாது என்பது இந்த ஶ்லோகத்தின் பொருள். இவை இரண்டுமே பிராட்டியின் வைபவத்தை தெரியப்படுத்துகிறது. பிராட்டியினுடைய வைபவம் ப்ரகாசிக்க வேண்டும், மற்றும் பிராட்டியின் வைபவத்தை நாட்டாரிடையே நன்கு ப்ரகாசிப்பிக்க வேண்டும் என்பதற்காகவும், பெருமாள் பிராட்டியை காட்டிற்கு அனுப்பி வைத்தார். அந்த பகவானை விட்டு பிரிந்த காலத்திலேயும் பகவான் இட்டவழக்காய் இருந்தாள் பிராட்டி. அதுதான் பாரதந்த்ரியம். அத்யந்த பாரதந்த்ரியம் என்னும் ஸ்வரூபம், இங்கு பிராட்டியினுடைய வைபவமாய் விளங்கி நிற்கிறது. இந்த வைபவத்தை ப்ரகாசப்படுத்தவே பெருமாள் பிராட்டியை காட்டுக்கு அனுப்பினார் என்பதே உண்மையான வார்த்தை. இதையே மேலும் நன்றாக அறிய விளக்கமாக விண்ணப்பிக்கிறேன்.

ஸ்ரீராமர் சீதையை அக்நி சாட்சியாக கைபிடித்தவர். ஏகபத்னி வ்ரதன், சாஸ்த்ர பரமான ஆசார அனுஷ்டானங்களைக் கைகொண்டவர். ஸ்ரீராமாவதாரம், பகவானுடைய அனுஷ்டான பரமான திருவவதாரம் என்று கொண்டாடப்படுகிறது. பெருமாள் “ராமோ விக்ரஹவான் தர்ம:” என்னுமாப் போலே தர்மமே வடிவெடுத்தவர். இப்படிபட்டவர், அக்நி சாட்சியாக கைபிடித்த தன் மனைவியை, அவள் பூரண கர்பிணியாக இருக்கும் பொழுது, இப்படி காட்டுக்கு அவளை அனுப்பலாமா என்று ஒரு ஆட்ஷேபம் வருகிறது. இவ்வாறான ஒரு காரியத்தை பெருமாள் எப்படி செய்யலாம்? ஒரு ஸாமான்யவன் இவ்வாறு கைபிடித்த மனைவியை கைவிட்டாலே அவனுக்கு பெரும் பாவம் ஸம்பவிக்கும். அப்படியிருக்க பெருமாள் இவ்வாறு பிராட்டியை கைவிடலாமா என்று ஒரு ஆட்ஷேபம் வருகிறது. இந்த ஆட்ஷேபத்திற்கு ஸமாதானம் என்னவென்று பார்ப்போம். இந்த ஆட்ஷேபத்திற்கு அனுகூலமாக இருக்கும் ஒரு விஷயத்தை இங்கு நாம் காணலாம். என்னவென்றால் வால்மீகி பகவானே பெருமாளிடம் “ஸ்ரீராமா! பிராட்டி நிரபராதி” என்று சொல்கிறார். அதற்கு பதில் ஒன்றும் கூறவில்லை பகவான். இதை நான் செய்யும் ஆட்ஷேபமாக எடுத்துக் கொள்ள முடியாது.

ஸ்ரீவால்மீகியின் திருவாக்கைக் கொண்டே பெருமாளுடைய இந்த காரியம் சரியென்று படும். இதற்கு ஸமாதானமாவது என்ன என்பதை பார்க்கவேண்டும். இங்கு ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் பெருமாளுடைய இந்த காரியத்திற்கு ஸ்ரீவால்மீகி பகவானைத் தவிர வேறு யாருமே தங்கள் கருத்தை தெரிவிக்கவில்லை. ஏனென்றால் பெருமாளுடைய ஒரு காரியத்தை விமர்சித்து விசாரம் பண்ணும் யோக்கியதை நமக்கு உண்டோ? பெருமாளுடைய காரியத்தை சரி? தவறு? என்று சொல்வதற்கு நாம் யார்? இதைபற்றி விசாரம் பண்ணும் யோக்யதை நமக்கு உண்டா என்று பார்த்தால் அது நமக்கு கிடையாது.

சாஸ்திர மரியாதையை பகவான் மீறுபவனல்லன், என்றாலும் சாஸ்திரம் பகவானைக் கட்டுப்படித்தாது. நாம் ஒரு பொருளை திருடினால் அது திருடு, தண்டிக்கத் தகுந்தது என்கிறது சாஸ்திரம். ஆனால் "பகவான் வெண்ணெய்யை களவுண்டான்" என்று இத்தை சொல்லி அனுபவிக்கும் காலத்தில் நம்முடைய பாபங்கள் களவாடப்படுகின்றன. இதுதான் பகவானுக்குண்டான ஏற்றம். பகவான் செய்கின்ற எந்த ஒரு காரியமும் தர்மத்திற்கு புறம்பன்று. ஆனால் அதைபற்றி விசாரம் செய்யும் யோக்யதை நமக்கு கிடையாது. பகவானுடைய திருவுள்ளம் என்ன என்பதை அறியவேண்டும். அது புலப்பட்டாலும் புலப்படும், சில விஷயங்களில் புலப்படாமலும் போகலாம்.

வால்மீகி பகவான் மட்டும் **"ஸ்ரீராமா பிராட்டி நிரபராதி"** என்று சொல்கிறாரே அவருக்கு மட்டும் இதற்கு யோக்யதை இருக்கிறதா என்று பார்க்கும்பொழுது, அவருக்கு அந்த யோக்யதை உண்டு. காட்டில் பிராட்டியை விட்டுவிட்டு இளையபெருமாள், "பெருமாள் திருவுள்ளம் இருக்கும்படி" என்று சென்றுவிடுகிறார். அச்சமயம் பிராட்டி இளையபெருமாளிடம் "இவ்வாறு பெருமாளுடைய திருவுள்ளம் ஆன பின்பு, இனி நான் ப்ராணத் த்யாகம் செய்து கொள்வதை தவிர வேறு வழியில்லை, என்றாலும் பெருமாளுடைய ஸந்ததி என் வயிற்றில் வளர்கிறபடியால், பெருமாளுடைய திருவுள்ளத்தை பின்பற்றி, நான் ப்ராணத்த்யாகம் பண்ணாமல் உயிர் தரித்திருக்கிறேன். பெருமாளுடைய ஸந்ததி அவருக்குப் சேரவேண்டும்" என்று விண்ணப்பிக்கிறாள். காட்டிலே இளையபெருமாள் தன்னை விட்டுச் சென்ற பிறகு பிராட்டி அழுது கொண்டிருக்கிறாள். வால்மீகி ஆஶ்ரமத்தின் ஸமீபத்திலேயே பிராட்டி இருக்கிறாள். வால்மீகி ஆஶ்ரமத்தை சேர்ந்தவர்கள் சிலர், இவ்வாறு யாரோ ஒரு கர்ப்பிணி பெண் அபலையாக காட்டில் அழுது கொண்டிருப்பதை காண்கிறார்கள்.

வால்மீகியிடம் அதைக் கூறுகிறார்கள். ஸ்ரீவால்மீகியும் பிராட்டியை ஆஶ்ரமத்திற்கு அழைத்துக் கொண்டு வருமாறு கூறுகிறார். அவர்களும் பிராட்டியை அழைத்துக் கொண்டு ஆஶ்ரமத்திற்கு வருகிறார்கள். அங்கு வால்மீகி பகவான் பிராட்டியிடம் அவளுடைய கதையை கேட்கிறார். பின் வால்மீகி பகவான் பிராட்டிக்கு அடைக்கலம் தருகிறார். தன்னுடைய ஆஶ்ரமத்திலேயே இருக்கும்படி கூறுகிறார். தன்னுடைய பெண்பிள்ளையைப்போல் பிராட்டியை வளர்த்து வருகிறார். வால்மீகி பகவானுக்கு வாத்ஸல்ய பா$_4$வம் ஏற்பட்டுவிட்டது. தன் குழந்தையாகவே பேணி வளர்த்துவருகிறார் பிராட்டியை. பின் பிராட்டிக்கு குழந்தைகள் பிறக்கிறார்கள். அவர்களுக்கும் நன்றாக எல்லா வித்யைகளும் சொல்லிக்கொடுத்து நல்ல அதிகாரிகளாக உருவாக்குகிறார்.

பகவானிடம் வாத்ஸல்யபா$_4$வம் பலர் வைத்துக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீக்ருஷ்ணாவதார காலத்தில் கோபிமார்களென்ன, கோகுலத்தில் இருந்த தாய் பசுக்களென்ன இவர்களெல்லாம் ஸ்ரீக்ருஷ்ணபகவானிடத்தில் தாயன்புவைத்திருந்தார்கள் என்று நாம் சரித்திரத்தில் காண்கிறோம். ஆழ்வார்களில் பெரியாழ்வாருக்கும், குலசேகராழ்வாருக்கும் பகவானிடத்தில் வாத்ஸல்ய பா$_4$வம் இருந்தது. அர்சாவதார எம்பெருமான்கள் விஷயத்தில், ஸ்ரீகாஞ்சி தேவப்பெருமாளிடம் நாடாதூர் அம்மாள் என்னும் ஆசார்யரும், திருநாராயணபுரத்தில் திருநாரணன் எம்பெருமானிடத்து ஸ்ரீஆய் ஜநந்யாசார்யாரும் தாயன்பு வைத்திருந்தார்கள் என்று சரித்திரம் காண்கிறோம். இவ்வாறு பிராட்டியின் விஷயத்தில், பிராட்டியிடம் தாயன்பு வைத்திருந்தார்களா என்று பார்த்தால், நமது ஆழ்வார்களும், ஆசார்யர்களும் ஸ்ரீவால்மீகி பகவானுக்கு பிராட்டியினிடத்து அவ்வாறான வாத்ஸல்ய பா$_4$வம் இருந்ததாக காட்டிக் கொடுக்கிறார்கள்.

பெருமாள் கைவிட்ட காலத்தில் பிராட்டிக்கு அடைக்கலம் கொடுத்து வாழும்படி பண்ணினார் ஸ்ரீவால்மீகி. அவளுடைய குழந்தைகளை தன் சிஷ்யர்களாக வைத்துக்கொண்டு நல்ல அறிவாளிகளாக ஆக்கினார். வால்மீகி பிராட்டியினிடத்து வாத்ஸல்யபா$_4$வம் உடையவராகையால், பெருமாள் பண்ணின காரியத்தை அவரால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. பகவான் தர்மஸ்வரூபியாக இருப்பவர். “ராமோ விக்ரஹவான் தர்ம:” என்று மாரீசன் சொன்ன வார்த்தை. பகவான் “அகில ஹேயப்ரத்யநீகன்” எல்லா தோஷங்களுக்கும் எதிர்தட்டாய் இருப்பவன். எப்படி சூரியினிடம் இருள் நெருங்க

முடியாதோ, அதுபோன்று தர்மஸ்வரூபியான பகவானிடம் எந்த அதர்மமும் நெருங்க முடியாது. ஆனால் நமது கண்களுக்கு இது தோஷமாக படுகிறதே? லோகரீதியாக பார்க்கையில் இது தகாத காரியம் ஆயிற்றே? இதை நாம் எவ்வாறு எடுத்துக்கொள்வது? என்கிற கேள்வி நமக்குள்ளே தோன்றுகிறது. இங்கு பெருமாளுடைய திருவுள்ளம் என்ன என்பதை அறியவேண்டும். இங்கே மஹரிஷிகள் ஆச்சர்யமாக ஒரு விஷயத்தை தெரியப்படுத்துகிறார்கள்.

பகவான் ஸ்ரீந்ருஸிம்மாவதாரம் எடுத்தான், அந்த காலத்தில் யாருக்கு பெருமை? பகவான் ஸ்ரீராமாவதாரம் கொண்டான், அந்த காலத்தில் அதிகமான பெருமை யாருக்கு? பகவான் ஸ்ரீக்ருஷ்ணாவதாரம் எடுத்தபொழுது யாருக்கு அதிகமான வைபவம் ஏற்றம்? என்பதை நிச்சயிக்கிறார்கள் மஹரிஷிகள்.

ஸ்ரீமத்பாகவதத்தில் ஸ்ரீந்ருஸிம்மாவதாரத்தை பரீக்ஷித்திற்கு சொல்லப்புகுந்த ஸ்ரீஶுகர், ப்ரஹலாதனுடைய வைபவமாக வர்ணிக்கிறார். ப்ரஹ்லாதனுடைய உந்நதமான சரித்திரம் என்று ஸ்ரீந்ருஸிம்மாவதாரத்தை வர்ணிக்கிறார். ஸ்ரீந்ருஸிம்மாவதாரத்தில் பரம பாகவததோத்தமனான ப்ரஹ்லாதாழ்வானுக்குத்தான் அதிகமான ஏற்றம். ஸ்ரீந்ருஸிம்மாவதார காலத்தில் பிராட்டி பற்றிய ப்ரஸ்தாவமே இல்லை. அந்த பெருமாளைவிட பரம பாகவதோத்தமானான ப்ரஹ்லாதாழ்வானுக்குத்தான் ஏற்றம் அதிகம்.

ஸ்ரீராமாவதாரத்திற்கு வந்தால், “சீதாயா: சரிதம் மஹத்” என்று ஸ்ரீவால்மீகி ஸ்ரீராமாயணத்தை சீதையின் மகத்தான சரித்திரமாகவே வர்ணிக்கிறார். இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் ஸ்ரீராமாவதாரகாலத்தில் பகவானைவிட, புராணபுருஷர்களைவிட, பகவத் அடியார்களைவிட சீதாபிராட்டிக்கே ஏற்றம் அதிகம். “இதிஹாஸ ஸ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தால் சிறையிருந்தவள் ஏற்றம் சொல்லுகிறது” என்றார்கள் நம்முடைய ஆசார்யர்கள். பெருமாள் எவ்வளவோ வைபவசாலி. அவனுடைய வைபவங்களை அபாரமாக வர்ணிக்கவேண்டும், வர்ணித்த பிற்பாடு அதை கழிக்கவேண்டும், அதைவிட உயர்ந்தது பிராட்டியினுடைய சரித்திரம் என்று சொல்கிறார். ஸ்ரீராமாவதார காலத்தில் இளையபெருமாளென்ன, ஸ்ரீபரதாழ்வானென்ன, ஸ்ரீசத்ருக்ணாழ்வானென்ன, ஸ்ரீஜடாயுமாஹாராஜரென்ன, ஸ்ரீவிபீஷணாழ்வானென்ன, ஸ்ரீசுக்ரீவமஹாராஜரென்ன, சபரி என்ன, சரபங்கரென்ன, விச்வாமித்ரரென்ன, வசிஷ்டரென்ன இப்படி எத்தனையோ

வைபவசாலிகள், உத்தமாதிகாரிகள். ஆனால் அவர்கள் அனைவரை காட்டிலும், பெருமாளையும் காட்டிலும் பிராட்டிக்கே ஏற்றம் அதிகம்.

ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் இதைப் போல் ஏற்றம் யாருக்கு அதிகம் என்று பார்க்கிறபொழுது, ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுக்கே ஏற்றம் அதிகம் என்று தெரிகிறது. ஸ்ரீவ்யாஸ பகவான் மஹாபாரதத்தை அருளிச் செய்கிற காலத்தில் "நாராயணகதாமிமாம்" என்று ஆரம்பிக்கிறார். நாராயண கதை, தூதுபோனவன் ஏற்றம் என்று பாண்டவதூதனான பகவானுக்குத்தான் ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்தில் ஏற்றம். ஸ்ரீபார்த்தசாரதியான பகவானுக்குத்தான் ஏற்றம். பெருமாளுடைய மூன்று திவ்ய மஹிஷிமார்களும் திருவவதரிக்கிறார்கள். ஸ்ரீதேவிநாச்சியார் ஸ்ரீருக்மிணிபிராட்டியாகவும், பூதேவி நாச்சியார் ஸத்யபாமையாகவும், நீளாதேவி நாச்சியார் நப்பின்னை பிராட்டியாகவும் திருவவதாரம் பண்ணுகிறார்கள். மேலும் எவ்வளவோ அதிகாரிகள் திருவவதாரம் பண்ணுகிறார்கள். ஆனால் எல்லாரைக்காட்டிலும் இந்த திருவவதாரத்தில் பகவானுக்குத்தான் ஏற்றம். இப்படி மூன்று திருவவதாரங்களையும் ஒன்று சேர்த்துப் பார்க்கும் காலத்தில், ஒரு திருவவதாரத்தினால் பரம பாகவதோத்தமானான ஸ்ரீப்ரஹ்லாதனுக்கு அதிகமான ஏற்றம் ஏற்பட்டது. மற்றொரு திருவவதார காலத்தில் ஸ்ரீபெரியபிராட்டியாருடைய திருவவதார விசேஷமான ஸ்ரீசீதாபிராட்டிக்கே அதிகமான ஏற்றம் இருந்தது, மற்றொரு திருவவதார காலத்தில் பகவான் ஸ்ரீக்ருஷ்ணனுக்கே ஏற்றம் அதிகம் என்றும் மஹரிஷிகள் நிஶ்சயித்திருக்கிறார்கள். இதை கொண்டு பார்க்கும் காலத்தில் ஸ்ரீராமாவதார காலத்தில் ஸ்ரீபெரியபிராட்டயாரான சீதாபிராட்டிக்கே ஏற்றமும், அவளுக்குண்டான வைபவமும் அதிகமாக விளங்கவேண்டும் என்பது பெருமாளுடைய திருவுள்ளமாகத் தெரிகிறது. அதனால் பகவான் பெரியபிராட்டியாரான ஸ்ரீசீதாபிராட்டியினுடைய வைபவம் அதிகமாக விளங்கவேண்டும் என்பதற்காக இக்காரியத்தை செய்திருப்பதாகத் தெரிகிறது. பிராட்டியினுடைய வைபவத்தை நிரூபிக்கும் காலத்தில் சேதநர்களான தன்னுடைய குழந்தைகளிடத்தில் அதிகமான க்ருபை உண்டு என்பது தெரிகிறது. பிராட்டி முதல்தரம் பெருமானை விட்டு பிரிந்து தன்னுடைய க்ருபா விசேஷத்தை வெளிப்படுத்தினாள். தேவமாதர்களை சிறை வைத்தான் ராவணன். அவனிடம் தான் சிறைபுகுந்து தேவமாதர்களை சிறையிலிருந்து மீட்டாள். ராமன் ராவணனை வதம் பண்ண தேவமாதர்கள் அனைவரும் சிறையிலிருந்து

மீண்டதாகத் தெரிகிறது. இப்படி தன்னுடைய குழந்தைகளான சேதநர்கள் விஷயத்தில் க்ருபையை காட்டிய பிராட்டி பகவான் விஷயத்தில் தனக்கு இருக்கும் பாரதந்த்ரியம், அநந்யார்ஹசேஷத்வம் என்னும் இரண்டு ஆகாரங்களை ஆஶ்சர்யமாக பொருள்படுத்தியிருக்கிறாள் என்று தெரிகிறது. "கட்டிலே விட்டபோதோடு காட்டிலே விட்டபோதோடு வாசியற பெருமாள் திருவுள்ளத்தை பின்தொடர்ந்தாள் பிராட்டி" . கட்டிலே என்றால் அந்தப்புறக்கட்டில், பகவான் பிராட்டியை தன்னோடு வைத்துக் கொண்டிருந்த போதும், காட்டிலே விட்டபோதோடு அந்த காலத்திலேயும் பகவானுடைய நினைவை பின்தொடர்ந்து அதன்படி நடந்து கொண்டாள் பிராட்டி. இதுதான் பகவத் பாரதந்த்ரியம். பகவான் இட்டவழக்காய் இருப்பது. பிராட்டிக்குண்டான இந்த தன்மை நம்மிடத்திலும் இருக்கவேண்டும். பிராட்டி போன்று நமக்கும் பகவத் பாரதந்த்ரியம், அநந்யார்ஹ சேஷத்வம் இரண்டுமே ஸ்வரூபம். இந்த சாஸ்த்ரார்த்தத்தை பிராட்டி மூலம் வெளிப்படுத்தினார் பகவான். பிராட்டியுடைய பகவத்பாரதந்த்ரியம் நமக்கு ஒரு உதாரணமாகத் திகழ்கிறது. பிராட்டி வெளிப்படுத்திய அநந்யார்ஹசேஷத்வம் நமக்கும் ஏற்கத் தகுந்தது என்பது தெரிகிறது. பகவத் பாரதந்த்ரியம், அநந்யார்ஹசேஷத்வம் இரண்டும் நமக்கும் இருக்க வேண்டிய தன்மைகள். நம்முடைய ஆத்ம ஸ்வரூபத்தை சேர்ந்தவை. இவற்றை வெளிப்படுத்தி காட்டுவதன் மூலம் ஒரு பக்கம் பிராட்டியினுடைய வைபவம் விளங்குகிறது, மற்றொரு பக்கம் ஒரு ஆதர்ஶ புருஷராய் விளங்குகிறார் பிராட்டி நமக்கு.

பகவான் தன்னிடத்தில் பிராட்டிக்கு இருக்கும் ஸ்வரூபத்தை வைபவத்தை விளங்கப் பண்ணுவதன் மூலம், பகவான் இந்த திருவவதாரத்தில் பெரியபிராட்டியின் பெருமையே எல்லாவற்றையும் விட, எல்லோரையும் விட விஞ்சியிருக்கும் படியாக திருவுள்ளம் பற்றினான் என்று தெரிகிறது. அதனால் அவனுடைய திருவுள்ளம் இருக்கும்படி அறிகிற காலத்திலே அவனிடம் எந்த தோஷமும் இல்லை என்று ஒருவாறு புரிந்து கொள்ளலாம். இதிலே மற்றுமொரு விஷயம் கவனிக்கவேண்டும். பெருமாளுக்கும், பிராட்டிக்கும் பிரிவு என்பதே கிடையாது. ஏதோ லோகரீதியில் சிறிது காலம் இப்படி அமைந்திருந்தாலும் அவர்களிடையே பிரிவு என்பதே கிடையாது. இதை திவ்யதம்பதிகளான அவர்களே வெளியிட்டிருக்கிறார்கள். சூரியனை விட ப்ரபை வேறுபட்டது. ஆனால் சூரியனையும் ப்ரபையையும் பிரித்துப் பார்க்க முடியாது. சூரியனிருக்கும் இடத்தில் தான் ப்ரபையும் இருக்கும். எப்படி சூரியனையும்

ப்ரபையையும் பிரித்துப் பார்க்கமுடியாதோ அப்படியேதான் பெருமாளும் பிராட்டியும். இதை ஸ்ரீராமாவதார காலத்திலே ஒருவரை ஒருவர் பிரிந்து இருக்கும்போது தனித்தனியாக இருவரும் வெளியிட்டிருக்கிறார்கள். இதை வால்மீகிபகவான் நமக்கு காட்டியருளிகிறார். ஏதோ லோகரீதியாக பிரிந்திருக்கவேண்டிய சூழல் அமைந்ததே தவிர இருவருக்கும் பிரிவு என்பதே கிடையாது. அது நம்மால் அவஶ்யம் அறியத்தக்கது. இப்படி அறிகிற காலத்தில் நாம் லோகரீதியாக பகவானிடத்தில் தோஷமிருப்பதாக காணப்படுகிறதே அது தோஷமன்று என்பதை புரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீமத்பாகவத மஹாபுராணத்தில் விசேஷ ஈடுபாடு கொண்டிருக்கும் பெருமை காரப்பங்காடு வித்வத் பரம்பரைக்கே உண்டான பெருமையாகவும், மேலும் காரப்பங்காடு ஸ்ரீ உ.வே.சிங்கபெருமாள் ஸ்வாமி, காரப்பங்காடு ஸ்ரீ உ.வே. தேசிகவரதாச்சார் ஸ்வாமி, காரப்பங்காடு ஸ்ரீ உ.வே. வேங்கடாசார்ய ஸ்வாமி எல்லாருமே ஸ்ரீமத் பாகவதத்தில் விசேஷ ஈடுபாடு கொண்டவர்களாவர். நம் வேளுக்குடி ஸ்வாமிக்கும் இந்த பெருமைவுண்டு. நம் வேளுக்குடி ஸ்வாமியினுடைய ஸ்ரீமத்பாகவத மஹாபுராண உபந்யாஸங்கள் மிகவும் சிறப்பாக அமைந்திருக்கும். எந்த காலக்ஷேப வைபவமாக இருந்தாலும் சரி நம் வேளுக்குடி ஸ்வாமிக்கு ஸ்ரீக்ருஷ்ணாவதார எம்பெருமானுடைய வைபவத்தை கூறுவதில் நம் ஸ்வாமிக்கு விசேஷ ஈடுபாடு உண்டு. தம்முடைய திறமையெல்லாம் வெளிப்படுத்திக் காட்டுவார் நம் ஸ்வாமி. விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை ஸ்ரீவைஷ்ணவ பரமான வ்யாக்யானம் ஸ்ரீமத்பாகவதத்திற்கு வீரராகவாச்சார்யர் என்பவர் அருளிச்செய்துள்ளார். இந்த வ்யாக்யானம் சந்த்ர "சந்த்ரிகா " என்னும் பெயர் பெற்றது. இதை வீரராக வீயம் என்றும் சொல்லுவர். நம் ஸ்வாமிக்கு இந்த வீர ராகவாச்சார்யரிடத்தில் மிகுந்த ஈடுபாடு உண்டு. வீரராகவாச்சார்யர் காட்டியருளிய அர்த்த விசேஷங்களை ஆங்காங்கே உபந்யாஸங்களில் எடுத்துச் சொல்லுவார் நம் ஸ்வாமி.

ஸ்ரீமத்பாகவத மஹாபுராணத்திற்கு அமைந்துள்ள மற்றொரு வியாக்யானம் "பா$_4$வார்த்தீபிகை" என்னும் பெயர் கொண்டது. இதை அருளிச்செய்தவர் ஸ்ரீதராசார்யர் என்னும் பெரியவர். இவர் அத்வைத ஸித்தாந்தத்தை சேர்ந்தவராயினும் சிறந்த க்ருஷ்ணபக்தர்.

ஒரு காலக்ஷேபத்தில் ஸ்ரீதராச்சார்யார் காட்டும் ஒரு விசேஷ அர்த்தத்தை நம் ஸ்வாமி குறிப்பிட்டார். இது நாம் அனைவரும் நன்கு அனுபவிக்க வேண்டிய வியாக்யானமாகும். இதைப்பற்றி சிறிது தெரிவிக்கிறேன். ஸ்ரீக்ருஷ்ணாவதார காலத்தில் ப்ரஹ்மாவும் பகவானிடம் அபச்சாரப்படுகிறார், இந்த்ரனும் பகவானிடம் அபச்சாரப்படுகிறான்.

வருடத்திற்கு ஒருமுறை இந்திரனுக்கு பூஜை செய்யும் வழக்கம் கோகுலத்திலே நடந்து வந்தது. இந்தப் பூஜையை பகவான் இந்த்ரனுக்கல்லாமல் ப்ராஹ்மணர்களுக்கும், பசுக்களுக்கும், கோவர்த்தந மலைக்கும் ஸமர்ப்பிக்கச் சொல்லுகிறான். தனக்குண்டான பூஜையை பகவான் க்ருஷ்ணன் நிறுத்திவிட்டான் என்பதை அறிந்த இந்திரன் மிகவும் கோபம் கொள்கிறான். பகவானை மிகவும் துச்சமாக மதித்து வைது வார்த்தை சொல்கிறான். ஸ்ரீமத் பாகவதத்திலே ஒரு ஶ்லோக்த்திலே இது காட்டப்படுகிறது. இதற்கு வ்யாக்யானம் அனுக்ரஹிக்கிறார் ஸ்ரீதராசார்யர்.

இந்த ஶ்லோகத்தில் இந்திரன் பகவானை தூஷிக்கிறான். தூஷணபரமான இந்த ஶ்லோகத்திற்கு பூஷணபரமாக வ்யாக்யானிக்கிறார் ஸ்ரீதராச்சார்யார். தூஷணபரமான ஒவ்வொரு வார்த்தையும் பூஷணபரமாகவே வ்யாக்யானம் பண்ணுகிறார். இந்திரன் பகவானை கொண்டாடிப் பேசுவதாக வியாக்கியானம் பண்ணுகிறார். ஸ்ரீமத்பாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் இருபத்தைந்தாவது அத்யாயத்தில் ஐந்தாவது ஶ்லோகம்.

வாசாலம் பாலிஷம் ஸ்தப்$_3$த$_4$ம அக்ஞம் பண்டி$_4$தமானினம்|
க்ருஷ்ணம் மர்த்யமுபாஶ்ருத்ய கோபா மே சக்ருரப்ரியம் ||

இந்த ஶ்லோகத்திற்கு இரண்டு நிர்வாகங்கள் உண்டு. இந்த இரண்டு நிர்வாகங்களையும் வேளுக்குடி ஸ்வாமி மிக அழகாக எடுத்துக்காட்டியுள்ளார். இந்த இரண்டு நிர்வாகங்களையும் அதன் வ்யாக்யான பங்திகளை ஸேவித்து காட்டி அவற்றை ஸ்ரீ உ.வே.முரளிதர ஸ்வாமியின் நியமனத்தால் நமக்காக இங்கு ஸாதித்திருக்கிறார் ஒரு ஸ்வாமி. அவர் வாசக தோஷங்களை ஶமித்தருளுமாறு வேண்டிக்கொண்டு மேலே ஸாதிக்கிறார்.

முதலில் ஸ்ரீமத்பாகவதத்திற்கு ஸ்ரீவீரராகவாசார்ய ஸ்வாமி அருளிய சந்த்ர சந்த்ரிகா என்னும் வ்யாக்யானத்தின் பங்கிதகள் வருமாறு “ஏவம் ஸதி கேவலம் வாசாலங்குஸ்திதம் ப$_3$ஹு ச வத$_3$ந்தம் பா$_3$லிஷம் மூர்க$_2$ ஸ்தப்$_3$த$_4$

மவினீதமஜ்ஞும் பண்டிதமாத்மானம்மன்யமாநம் மர்த்யம் மந்நிக்ர$_3$ஹாத் மநிஷ்யமாணம் ச க்ருஷ்ணமாஶ்ருத்ய யே கோ$_3$பா: மம அப்ரியம் சக்ரு:” என்று அர்த்தம் அருளியுள்ளார். இதில் ஸ்ரீவீரராகவாசார்ய ஸ்வாமி யோகிகார்த்தத்தை, இந்த்ரன் சொல்லக்கூடிய இந்த நிந்தாரூபமான ஶ்லோகத்தை, இது நிந்தநா ரூபமாகத்தானுள்ளது என்று நிர்வஹித்துள்ளார்.

ஸ்ரீதர ஶ்வாமி பா$_4$வார்த்த தீபிகா என்னும் வ்யாக்யானத்தில் இந்த ஶ்லோகத்திற்கு தாத்பர்யார்த்தத்தை காட்டியுள்ளார். இது இந்திரன் கண்ணனை ஸ்துதி ரூபமாக நிர்வஹித்துள்ளார் என்று இவருடைய அபிப்ராயம். இந்த இரண்டாவது நிர்வாஹதிற்கான பங்க்திகளை பின்வருமாறு காண்போம். வாசாலம் இதி **“ததா$_2$ வாசாலம் ப$_3$ஹுபா$_4$ஷிணம் பா$_3$லிஶம் ஶிஷ்டம் பண்டி$_4$தமானினம் பண்டி$_4$தோஹம் இத்யாத்மானம் மன்யமானம் அத: ஸ்தப்$_3$த$_4$வினிதமிதி|”** இது நிந்தாரூபமாகத்தான் முதலில் நிர்வஹிக்கிறார். **“நிந்தா$_3$யாம் யோஜிதாऽமீந்த்$_3$ரஸ்ய பா$_4$ரதீ ஸ்ரீக்ருஷ்ணம் ஸ்தௌதி”** , இங்கு ஸ்ரீதராசார்யார் ஸ்வாமி இந்த்ரனானவன் க்ருஷ்ணனை நிந்தித்தாலும் கூட, அந்த வார்த்தைகளெல்லாம் க்ருஷ்ணனை ஶ்தோத்திரம் பண்ணுவதாகவே அமைந்துள்ளது என்பதை காண்பிக்கிறார். “ததா$_2$ஹி” , அது இப்படி; “வாசாலம் ஶாஸ்த்ரயோநிம்” , ஶாஸ்த்ரத்தை சொல்லுகிறவன் க்ருஷ்ணன் என்று வாசாலம் என்னும் ஶப்தத்திற்கு நிர்வஹித்துள்ளார். ஶாஸ்த்ரத்தை சொல்லுகிறவன், இது ஸ்துதி ரூபமாகத்தான் கொள்ளவேண்டும். “பா$_3$லிஶமேவமபி ஶிஶுவந்நிரபி$_4$மாநினம்” என்றால் துளியும் அஹங்காரமற்றவன் என்கிறது. “கர்வாபி$_4$மானோ அஹங்காரஹ” என்கிறாப்போலே ஶிஷுவத் அஹங்காரமே இல்லாதவனுக்கு இதுவும் ஸதுதி ரூபமாய் நிர்வஹித்துள்ளார். “ஸ்தப்$_3$த$_4$மந்யஸ்ய வந்த்$_4$யஸ்யபா$_4$வாத$_3$நம்ரம்” , என்றால் இவனை காட்டிக்கொடிக்க யாராலும் இயலாது. ஆகையால் இவன் வணக்கம் இல்லாதவானாக இருக்கிறான் என்று இங்கு பொருள்; (ஸ்தப்$_3$த$_4$ம் - அந்யாஸய ப$_3$ந்த$_4$ஸ்ய அபா4வாத்). ஆகையால் இவன் விநம்ரன். “அஜ்ஞும் நாஸ்தி ஜ்ஞோ யஸ்மாத்தம் ஸர்வஜ்ஞமித்யர்த்த$_2$:”, அஜ்ஞும் நாஸ்திஜ்ஞோ யஸ்மாத்தம் ஸர்வஜ்ஞமிதி என்று இங்கு பஞ்சமீ விப$_4$க்தியில் நிர்வஹித்துள்ளார். என்றால் இவனைக் காட்டிலும் ஞானியில்லாதவன் என்று பொருள். யஸ்மாத் – எவனைக் காட்டிலும்; ய: - அறிகிறவன் ; நாஸ்தி - இல்லையோ அப்பேர்பட்டவன் க்ருஷ்ணன். ஆகையால் இவன் அஜ்ஞன் என்று பஞ்சமீ ப$_4$ஹுவ்ரீஹீயில்

நிர்வாஹத்தில் இப்படி காட்டியுள்ளார். அவர் அங்கே வீர ராகவீயத்தில் நைதத்புருஷஸமாஸம் என்றால் “ஜாநாதிக்ஜ்ஞ: - நஜ்ஞ: அக்ஜ்ஞ:” என்று நிந்தா ரூபமாய் அங்கு நிர்வஹித்துள்ளார். ஸ்துதி ரூபமாய் இங்கே ஸ்ரீதராசார்யார் நிர்வஹித்துள்ளார். யஸ்மாத் நஜ்ஞ: ந வித்$_4$யதே - அந்த க்ருஷ்ணன் அஜ்ஞன் என்று இது ஸ்துதி ரூபமாய் இருக்கிறது. மேற்கொண்டு “பண்டி$_4$தமாநினாம் ப்ரஹ்மவிதா$_3$ம் ப$_3$ஹுமானனீயம் | க்ருஷ்ணம் ஸதா$_3$நன்த$_3$ரூபம் பரம் ப்ரஹ்ம” , பண்டிதமாநினம் - இந்த ஶப்தப்ரயோகம் ஸ்ரீராமாயணத்திலும் காணலாம். இந்த வ்ருத்தாத்தம் கைகேயியின் துர்குணத்தை சொல்லக்கூடிய விஷயத்தில் வசிஷ்டாதிகள் சொல்லக்கூடிய வார்த்தை. இந்த பண்டிதமாநினம் என்பது பண்டிதமாநினீ என்று கைகேயியையின் துர்குணத்தை சொல்லுகிறார். “ஆத்மகாமாத் ஸதாசண்டிக்ரோதநா பண்டிதமாநினீ” , என்கிறது ஸ்ரீராமாயணம்.அதாவது அவள் பண்டிதமந்யதே - என்றால் கர்வாபி$_4$மானத்தால் தன்னை ஒரு பெரிய புத்திசாலி என்று நினைத்திருக்கிறவள். இந்த வார்த்தைதான் வீரராகவீயத்தில் கண்ணனுக்கு இந்த்ரன் சொல்லக்கூடிய வார்த்தையாய் பார்த்தோம். நிந்தாரூபமாய்த்தான் இவ்வார்த்தை அங்கே இருக்கிறது. பண்டிதமாநிம் என்று நிர்வாகம். “மானம்” என்றால் ஆங்கிலத்தில் (superiority) என்று கொள்ளலாம். ஸ்ரீதீரியத்தில் பண்டிதை: மாநின: என்றால் பண்டிதர்களால் ப்ரஶம்ஸிக்கப்படுகிறவன் என்று இங்கே பொருள் நிர்வஹித்தார் ஸ்ரீதாராசார்யார் என்றால் ப்$_3$ரஹ்ம ஜ்ஞானிகளான ப்$_3$ரஹ்மரிஷிகள் எல்லோரும் க்ருஷ்ணனை “நீ தான் பரப் ப்$_3$ரஹ்மம்” , என்று ஸ்துதித்தார்கள். ஆகையால் இவன் பண்டிதமாநினாம் என்று இங்கு நிர்வாஹம். அதற்கு மேலே “மர்த்$_2$யம்” . மர்த்$_2$யம் என்றால் (மனிதன்) “ம்ரீயதே இதி மர்த்$_2$ய:” - ஆங்கிலத்தில் (Mortal). அதை மர்த்$_2$யம் என்கிறார். “ததா$_2$பி ப$_4$க்தவாத்ஸல்யேன மனுஷ்யதயா ப்ரதீயமானமிதி” என்றால் பராத்பர வஸ்துவாய் ஸச்சிதாந்த ரூபியாய் இருகிற “ஆத்மானம் மானுஷம் மன்யே” என்கிறபடி ஸ்வ இச்சா ரூபியாய் மனிதனாய் வந்தவதரித்தான் இல்லையோ கண்ணன். ஆகையால் இவன் மர்த்$_2$யம் என்று இப்படி ஸ்துதி ரூபமாய் இந்த வ்யாக்யானத்தை நிர்வஹித்துள்ளார் ஸ்ரீதராசார்யர் பா$_4$வார்த்த தீ$_3$பிகா என்னும் வ்யாக்யானத்தில். ஆகையால் இந்த ஶ்லோகத்திற்கு இரண்டு நிர்வாஹங்களுண்டு. ஒன்று வீரராகவீயத்தில் நிந்தாரூபமாக அமைந்துள்ளதையும், இரண்டு பா$_4$வார்த்த$_2$ தீ$_3$பிகையில் ஸ்ரீதராசார்யர் இந்த

ஶ்லோகத்தை ஸ்துதி ரூபமாக நிர்வஹித்துள்ளதையும் வேளுக்குடி ஸ்வாமி மிகவும் அழகாக எடுத்துக்காட்டியுள்ளதைக் கண்டோம்.

இது எப்படி பொருந்தும் என்று கேள்வி. மூலத்திற்கு முற்றிலும் விருத்தமாக இப்படி அர்த்தம் அருளிச்செய்யலாமா என்பது கேள்வி. மூலத்திற்கு முற்றிலும் தகாத பொருந்தாத முறையில் இப்படி வ்யாக்யானம் பண்ணலாமா என்று கேள்வி. அதுவும் உயர்ந்தவரான ஸ்ரீதாராசார்யர் இப்படி பண்ணலாமா? என்று கேள்வி. இங்கு தான் ஒரு பெரிய விசேஷமிருக்கிறது. இந்த்ரன் தன்னுடைய அபிப்ராயத்தில் நிந்தித்து வார்த்தை சொல்கிறான். ஆனால் பகவான் தன்னுடைய திருவுள்ளத்தில் அதை பூஷணமாக எடுத்துக்கொள்கிறான். இந்த்ரன் தன்னை கொண்டாடும்படி ஏற்றுக்கொள்கிறான் பகவான். இந்த்ரன் தன்னை தூஷிக்கும் காலத்தில் பகவானுக்கு திருவுள்ளத்திலே ஏற்பட்ட ஒரு பரம ஸந்தோஷம் ஒரு பூரிப்பு அதை கணிசிக்கிறார் வ்யாக்யாதா. கடும் கோபம்கொண்டு கல்மாரி பெய்வித்தான் இந்த்ரன். ஆனால் அதனுடைய விசேஷம் என்னவென்றால் அவன் தன்னையறியாமலேயே கோகுலத்தில் இருக்கும் அனைத்து ஜீவராசிகளையும் பகவானுடைய திருவடிகளுக்குகீழ் கொண்டு சேர்த்தான். பகவான் கோவர்தந மலையை குடையாகப் பிடிக்க கோகுலத்து அனைத்து ஜீவராசிகளும் பகவானிடம் சென்று அவனிடம் அடைக்கலம் புகுந்தன. இப்படி கோகுலத்து அனைத்து ஜீவராசிகளுக்கும் பகவானுக்கும் ஒரு ஸமாக3மம் ஏற்படுவதற்கு இந்த்ரன் ஒரு காரணமாகிறான். இப்படி அவன் பகவானிடம் பட்ட அபசாரம் அபசாரமாக இல்லாமல் உபசாரமாகவே அமைந்துவிட்டது. கோகுலத்திலுள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் பகவானுக்கும் உண்டான ஒரு சேர்க்கை மிக அற்புதமாகவே அமைந்தது. அதனால் இது இந்த்ரன் பகவானுக்குப் பண்ணின பெரிய ஒரு உபகாரம் என்றே நாம் சொல்லலாம். இது பகவானுடைய திருவுள்ளத்திலிருந்தது. அதனால்தான் அவன் இந்திரன் செய்த தூஷணத்தை பூஷணமாகவே ஏற்றுக்கொண்டான். பகவானுடைய திருவுள்ளத்தை நன்றாக அறிந்த ஸ்ரீதராசார்யர் அதை அனுசரித்து இங்கே வ்யாக்யானம் பண்ணுகிறார் என்பதை நாம் அறியலாம்.

பகவானுடைய திருவுள்ளத்தில் ஏற்பட்ட ஒரு பூரிப்பு, அவன் எதையுமே திருவுள்ளத்திலே தூஷணமாகக் கொள்ளாமல் பூஷணமாகவே கொண்டான். கோவிந்தனான பகவானுக்கும் கோகுலவாசிகளுக்கும் ஏற்பட்டதான ஸமாகமம்.

அனைவரையும் ஒருசேர பகவானிடம் கொண்டு சேர்த்தான் இந்த்ரன். இப்படி இந்த்ரன் பகவானுக்கு பண்ணின மஹோபகாரமே பகவானுடைய திருவுள்ளத்தில் மேலோங்கி இந்த்ரன் செய்த தூஷணத்தையும் பகவான் பூஷணமாகவே கொண்டான். வ்யாக்யாதா பகவானுடைய திருவள்ளத்தை எப்படி அறிந்தார்? அதையும் நாம் பார்க்கவேண்டும். பிறகு இந்த்ரன் பத்து ஶ்லோகங்களாலே பகவானை ஸ்தோத்ரம் பண்ணுகிறான். தன்னுடைய தவறுக்கு வருந்தி பகவானிடம் தன்னை க்ஷமித்தருளுமாறு ப்ரார்த்தித்துக்கொள்கிறான். பகவான் அவனுக்கு அனுக்ரஹம் பண்ணுகிறான். அவனுக்கு இதமான வார்த்தைகளை எடுத்துச் சொல்கிறான்.

இந்த்ரன் என்பது ஒரு பதவி, பகவான் செய்து வைத்த கட்டளை. அதன்படி நடந்து கொள்ளும்படி இந்த்ரனுக்கு நல்வார்த்தை சொல்லி அனுப்பி வைக்கிறான் பகவான். இந்த இடத்தில் பகவான் இந்த்ரனோடு பேசியிருக்கிறான். இனி ப்ரஹ்மா செய்த அபசாரத்தையும் பார்ப்போம்.

ப்ரஹ்மா கோபால பிள்ளைகளையும், கன்றுக்குட்டிகளையும் பகவானிடமிருந்து பிரித்து,ஒரு வருடகாலம் ஸத்ய லோகத்திலே மறைத்து வைத்துவிடுகிறார். அப்பொழுது பகவானே அந்த கோபால பிள்ளைகளாகவும், கன்றுக்குட்டிகளாகவும் வடிவுகொண்டு ப்ரஹ்மா செய்த காரியத்தை யாரும் அறியாதபடி இருக்கிறான். பிறகு ப்ரஹ்மா பகவானிடம் தான் அபசாரப்பட்டதை நினைத்து மிகவும் வருந்துகிறார். பகவானிடம் அபராதக்ஷாபணம் வேண்டி நிற்கிறார். நாற்பது ஶ்லோகங்களாலே பகவானை ஸ்தோத்ரம் பண்ணுகிறார். இந்த இடத்திலே ஸ்ரீமத் பாகவதம் எப்படி அமைந்துள்ளது என்பதை நாம் பார்க்க வேண்டும். இந்த்ரனும் அபசாரப்படுகிறான் ப்ரஹ்மாவும் அபசாரப்படுகிறார். இந்த்ரன் பத்து ஶ்லோகங்களாலே பகவானை ஸ்தோத்ரம் பண்ணுகிறான். பகவான் இந்த்ரனுடன் பேசியிருக்கிறான். ப்ரஹ்மா இந்த்ரனைவிட மிகப்பெரிய அதிகாரி. அவர் பகவானை நாற்பது ஶ்லோகங்களாலே ஸ்தோத்ரம் பண்ணுகிறார். ஆனால் பகவான் ப்ரம்மாவிடம் ஒரு வார்த்தைகூட பேசவில்லை. இந்த்ரனிடம் பேசிய பகவான் ஏன் ப்ரஹ்மாவிடம் பேசவில்லை? ஏன் ப்ரஹ்மா விஷயத்தில் ஒரு விதமாகவும், இந்த்ரன் விஷயத்தில் மற்றொரு விதமாகவும் நடந்துகொண்டான் என்றால், இந்த்ரன் பகவானிடத்தில் பண்ணிய அபசாரத்திற்கும், ப்ரஹ்மா பகவானிடத்தில் பண்ணிய அபசாரத்திற்கும் வித்தியாசமுள்ளது. இந்த்ரன் கோகுலத்தின் ஜீவராசிகளை பகவானுடன் சேர்த்து வைத்தான். ப்ரஹ்மாவோ பகவானுக்கு மிகவும் இனியவர்களான

கோபாலர்களையும், கன்றுக்குட்டிகளையும் பகவானிடமிருந்து பிரித்து வைத்தார். அதனால் பகவானுடைய திருவுள்ளத்திலே ப்ரஹ்மா செய்த காரியத்தினால் சிறிது வருத்தம் இருந்தது. அதனால்தான் பகவான் ப்ரம்மாவிடம் எதுவும் பேசவில்லை. இப்படி ஸ்ரீமத்பாகவத்திலிருக்கும் மர்மங்கள் அவற்றை அறிந்து வ்யாக்யானம் செய்தவர் நம் ஸ்ரீதராசார்யர்.

நம் ஸ்வாமி இதை போன்ற அர்த்த விசேஷங்களெல்லாம் மிகவும் அனுபவித்து சொல்வார். எங்கேயும் ரஸம் மாறாமல் விஷயங்களை எடுத்துச் சொல்லவேண்டும். மூலத்திற்கும் விரோதம் வராமல், வ்யாக்யான பங்க்திகளுக்கும் விரோதம் வராமல், மூலத்திலிருந்தும், வ்யாக்யானத்திலிருந்தும் விலகாமல் அர்த்தங்களை எடுத்துச் சொல்லவேண்டும். மூலத்திற்கும், வ்யாக்யானத்திற்கும் அப்பாற்பட்ட விஷயங்களை கொண்டுவரக்கூடாது. இப்படி மூலத்திற்கும், வ்யாக்யான பங்க்திகளுக்கும் இருக்கக்கூடிய ரஸம் மாறாமல் சொல்லவேண்டும். இது வித்வானுக்கு அவஶ்யம் இருக்கக்கூடிய ஒரு ஸம்ஸ்காரமாகும். நம் ஸ்வாமி இவ்விஷயத்திலே அணிதரஸாமர்த்யம் உடையவராய் விளங்கினார்.

இனி, ஸ்ரீக்ருஷ்ணாவதார சரித்ரம் மற்றொன்றைக் காண்போம். இதையும் பலமுறை வேளுக்குடி ஸ்வாமி அனுபவித்து சொல்லியிருக்கிறார். ஸ்ரீக்ருஷ்ணாவதார காலம் நூற்றியிருபத்தைந்து வருடங்கள். அதில் ஒருமுறை பெருமாள் க்ருஷ்ணனுக்கு தொண்ணூறு திருநட்சத்திரங்களாக இருந்தபொழுது. அவனும் குந்திதேவியும் ஒரு இடத்தில் உட்கார்திருக்கிறார்கள். எதுவும் பேசவில்லை. திடீரென்று குந்திதேவி அழ ஆரம்பித்துவிட்டார். அப்பொழுது பகவான் கேட்கிறான், “ஏன் அத்தை அழுகிறாய்?” அப்பொழுது குந்திதேவி, “நீ குழந்தையாய் இருக்குபொழுது நடந்த ஒரு விஷயம் ஞாபகத்திற்கு வந்தது. உணர்ச்சிவசப்பட்டுவிட்டேன்” , என்று சொல்கிறாள். அந்த நிகழ்ச்சி யாது என்று பகவான் கேட்க, அதற்கு குந்திதேவி “நீ குழந்தையாய் இருக்கும்போது மிகவும் விஷமம் பண்ணுவாய். ஒருமுறை உன்னுடைய விஷமம் தாங்காமல் உன்னுடைய தாயார் உன்னை உரலில் கட்டிபோட்டுவிட்டாள். உரலிலிருந்து விடுபடமுடியாமல் நீ அழுகிறாய். அந்த பக்கமாக வந்த ஸ்ரீநந்தகோபாலர் அதைப் பார்க்கிறார். யசோதையைக் கடிந்து கொள்கிறார். “என்ன இது எண்பது வருடமாக மலடுகிடந்து பின் இப்போதுதான் ஒரு குழந்தையை பெற்றெடுத்திருக்கிறாய். அதை இப்படி அழவிடுகிறாயே?” பின் உரலிலிருந்து உன்னை விடுவித்தார். மேலும் உன்னிடம் வாசலுக்கு சென்று உனது இரண்டு கைகளிலும் நெல்லை

அள்ளிக்கொண்டு வாசலில் வந்திருக்கும் நாவல் பழக்காரியிடம் நெல்லை கொடுத்து நாவல் பழம் வாங்கிக்கொள்ளுமாறு கூறுகிறார். குழந்தையும் தன் இருகைகளிலும் நெல்லை அள்ளிச்சென்று வாசலிலிருந்த நாவல் பழக்காரியிடம் கொடுக்கிறான். அந்த நாவல் பழக்காரியும் மிகவும் அன்புடன் குழந்தைக்கு நல்ல நாவல் பழங்களை எடுத்துக்கொடுக்கிறாள், குழந்தையிடம் மிகவும் அன்புடன்,ஆசையுடனும் இருக்கிறாள். பின் அவள் புறப்படுவதற்கு முன்னம் குழந்தை தனக்கு அளித்த நெல்மணிகளெல்லாம் பொற்காசுகளாக மாறியிருப்பதைக் கண்டு மிகவும் ஆச்சர்யப்படுகிறாள். இதென்ன அதிசயம்! குழந்தை இப்பொழுது கொண்டுவந்த நெல்மணிகள் எப்படி பொற்காசுகளாயின என்று மிகவும் வியந்து குழந்தை கண்ணனை மேலும் அன்புடன் கொண்டாடிவிட்டுச் செல்கிறாள். உரலிலிருந்து விடுபடமுடியாது அழுத பகவான் எப்படி நெல்லைப் பொன்னாக்கினான்? இதுதான் அவனுடைய சௌலப்யமும் அவனுடைய பரத்வமும் இருக்கும்படி.

க்ருஷ்ணாவதாரத்திற்கே உண்டான ஒரு தனிச்சிறப்பு இது. அதாவது எங்கு பரத்வம் தோன்றுமோ அங்கு உடனே சௌலப்யமும் தோன்றும். எங்கு பகவானுடைய சௌலப்யம் தோன்றுமோ அங்கு உடனே பரத்வமும் தோன்றும். இப்படி ஒருசேர பரத்வம், சௌலப்யம் இரண்டையும் ஒருசேர வெளியிடும் தனித்தன்மை க்ருஷ்ணாவதார எம்பெருமானுக்குண்டு. இப்படி பாகவதத்திலிருக்கும் இரண்டு விஷயங்களைக் கண்டோம். இப்படி நாம் அறியவேண்டிய அர்த்த விசேஷங்கள் ஆயிரமாயிரமாய் இருக்கின்றன. இவற்றை தமக்கே உண்டான கம்பீரமான குரல்வளத்துடன், எளிமையும் இனிமையும் கலந்த வார்த்தைகளால் உபதேஸித்தருளியுள்ளார் நம் வேளுக்குடி ஸ்வாமி. அடியேன் ஏதோ அறிந்த வகையில் ஒரு விதமாக ஒருசில அர்த்தவிசேஷங்களை விண்ணப்பித்துள்ளேன். நம் வேளுக்குடி ஸ்வாமி போல் வேறு யாராலும் இவ்வளவு அழகாக வார்த்தை சொல்ல இயலாது. இதில் அவருக்கு நிகர் அவரேதான். அவருடைய உபதேசங்கள் ஒலிநாடாக்கள் மூலம் இன்றும் கிடைப்பவற்றை கேட்டு அனுபவித்து ஆனந்தித்து பயன் பெறவேண்டும் என்று அன்பர்களை அடியேன் ப்ரார்த்தித்து நிற்கிறேன். வாசகதோஷத்தை க்ஷமித்தருளும்படி ப்ரார்த்திக்கிறேன்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவேங்கடகுரவே நம:

ஸ்ரீந்ருஸிம்ஹாவதார வைபவம் – 1

முதல் பதிப்பின் முன்னுரை

ஸ்ரீ உ.வே. கோ. க. வா. அண்ணாவிலப்பன் குமாரவேங்கடாசார்ய ஸ்வாமி

திருவவதார ஶதாபிஷேக மஹோத்ஸவ நினைவு வெளியீடு

த்$_3$ரவந்தி தை$_3$த்யா: ப்ரணமந்தி தே$_3$வதா:
நஶ்யந்தி ரக்ஷாம்ஸ்யபயாந்தி சாரய:।
யத்கீர்த்தநாத் ஸோத்$_3$பு$_4$த$_3$ ரூபகே
மமாஸ்து மாங்க$_3$ள்யவிவ்ருத்$_3$த$_4$யே ஹரி:॥

(விஷ்ணுதர்மம் 43-28)(எந்தப் பரமபுருஷனைக் கீர்த்தநம் செய்வதால் அஸுரர்கள் ஓடுகின்றனரோ, தேவர்கள் வணங்குகின்றனரோ, ராக்ஷஸர்கள் அழிகின்றனரோ, எதிரிகள் புறமுதுகு காட்டுகின்றனரோ, அத்புத ரூபமுள்ள அந்த நரசிங்கனான ஹரி என் மங்களம் வளர்வதின் பொருட்டு ஆகட்டும்)

ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன் சேதந உஜ்ஜீவநார்த்தமாகச் செய்தருளும் எண்ணிறந்த அவதாரங்களுள் ஒரு பத்து அவதாரங்கள் மிக முக்யமாகக் கொள்ளப்படுகின்றன. இந்தப் பத்து அவதாரங்களில் மிகச்சிறப்புற்று விளங்குவது ஸ்ரீநரஸிம்ஹாவதாரமாகும். நம்முடைய ஆத்ம நன்மையைத் திருவுள்ளத்தில் கொண்டும், அவனுடைய விபவாவதார அநுபவங்களை இழந்து விட்ட நமக்கு நம்முடைய இழப்பை ஓரளவு ஈடு செய்யும் பொருட்டும் பகவான் தன்னுடைய *விபவாவதாரத் திருமேனிகளை அர்ச்சாரூபேண பரிக்ரஹித்து* பல திவ்யதேஶங்களில் அர்ச்சாவதாரமாக எழுந்தருளி இருக்கிறான். இத்தகைய எம்பெருமான்களுக்குள் திருவரங்கத்துச் செல்வனையும், திருவேங்கடமுடையானையும், காஞ்சீ பேரருளாளனையும், திருநாரணனான

ஸ்ரீயதிராஜ ஸம்பத்குமாரனையும் நமதாசார்யர்கள் முதன்மையாகக் கொண்டனர். இந்த எம்பெருமான்கள் அனைவருக்குமே தனிச்சிறப்புகள் பல உண்டு.

இவர்களுள் பேரருளாளனுடைய தனிச்சிறப்புகளில் மிக முக்யமானது அவன் நம்முடைய ஸம்ப்ரதாயப் பெருமாளாக இருப்பதாகும்.

(1) அநாதியானதும் பரமவைதிகமானதுமான நம்முடைய விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தையும் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தையும் நிலைநாட்டுவதிலும், கட்டிக்காப்பதிலும், பரவச் செய்வதிலும் நமது ஆசார்யர்களுக்குப் பலவிதத்திலும் உறுதுணையாய் இருந்தவன் என்பதாலும்
(2) சீரிய ஶாஸ்த்ர ஸம்ப்ரதாய அர்த்தவிஶேஷங்களை பஹுமுகமாக ப்ரகாஶிப்பித்திருப்பவன் என்பதாலும்
(3) இதற்காகத் தானே ஆசார்ய புருஷர்களாக – ஸ்ரீப்ரதிவாதிபயங்கரம் அண்ணனாகவும் ஸ்ரீபிள்ளைலோகாசார்யராகவும் திருவவதரித்தவன் என்பதாலும்
(4) நம்முடைய ஸம்ப்ரதாய வளர்ச்சிப் பணிகளுக்காகப் பல மஹான்களை அவதரிப்பித்தருளியவன் என்பதாலும்

காஞ்சீ தேவாதிராஜனுக்குண்டான இந்த தனிப்பெருமையை நாம் வேறு எந்த ஒரு எம்பெருமானுக்கும் சொல்லிவிட முடியாது.

இருப்பினும் கஜேந்த்ர வரதனான தேவப்பெருமாளைப் போலவே ப்ரஹ்லாத வரதனான சிங்கப்பிரானும் நமக்கு ஸம்ப்ரதாயப் பெருமாளாக விளங்கி வருகிறான். விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகாசார்யர்களாக நம் ஸ்வாமி எம்பெருமானாரால் நியமிக்கப்பட்ட 74 ஸிம்ஹாஸநாதிபதிகள் தொடக்கமாக அவர்கள் ஸந்ததியில் வந்துள்ள ஆசார்ய புருஷர்கள் அனைவராலும் இன்றளவும் ஒருசேர அவரவர் திருமாளிகை திருவாராதன எம்பெருமானாக ஆராதிக்கப்பட்டு வருபவன் சிங்கப்பிரானே ஆவான்.

*.....(ஸ்வாமி எம்பெருமானார்)..... அநந்தரம், இம்மூவர்க்கும் போலே மற்ற எழுபத்தொரு முதலிகளுக்கும் (திருவாராதன எம்பெருமானாக)

அழகியசிங்கரையே ப்ரஸாதித்தருளினார்* என்று ஸ்ரீபிள்ளைலோகம் ஜீயரால் ஸ்ரீராமாநுஜார்ய திவ்யசரிதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குண்டான காரணத்தையும் ஸ்ரீபிள்ளைலோகம் ஜீயரே மேற்கொண்டு தெரிவிக்கிறார் –

**அதுக்கடி யென்யென்னில், *வளர்ந்த வெங்கோப மடங்கலொன்றாய் ..... விளைந்திடும் சிந்தையராகையாலே ப்ரஸாதித்தருளக் குறையில்லை. அதுக்கடி என்னென்னில் ரஜஸ்தமோ மிஶ்ரமான விபூதியாகையாலே

வல்லாளன் மன்னுமணிக்குஞ்சி பற்றிவரவீர்த்து என்றும்,
மலை கீழ்துபிளந்தசிங்கம் என்றும்

இரணியனிலங்கு பூணகலம் பொங்குவெங்குருதி பொன்மலை பிளந்து பொழிதருமருவி யொத்திழிய வெங்கண்வாளெயிற்றோர் வெள்ளிமா விலங்கல்விண்ணுறக் கனல்விழித்தெழுந்த தங்ஙனேயொக்க வரியுருவானான் என்றும்,

வால்நிறத் தொர் சீயமாய் என்றும்

(1) ஶுத்தஸத்வ மயமான திவ்யமங்களவிக்ரஹமாகையாலே தமஸ்ஸைத் தலைமடியப் பண்ணி ரஜஸ்ஸை ஆஸநபலத்தாலே கீழ்ப்படுத்தி மேல்கொள்ளுமதாகையாலும், (2) ஆஶ்ரித விரோதி நிரஸந ஸமர்த்தமாகையாலும் (3) ஆஶ்ரிதர்க்கு அநுபாவ்யமாய் இருக்கையாலும், (4) *வளர்ந்த வெங்கோப மடங்கலொன்றாய் அன்று வாளவுணன், கிளர்ந்த பொன்னாகங் கிழித்தவன் கீர்த்திப் பயிரெழுந்து விளைந்திடும் சிந்தை இராமாநுச*னாகையாலும், (5)*மாறாய தானவனை வள்ளுகிரால் மார்பிரண்டு கூறாகக்கீறிய கோளரியை வேறாக வேத்தியிரு*க்குமவராகையாலும், (6) தம்முடைய உத்தேஶ்ய வஸ்துவாகையாலும் ப்ரஸாதித்தருளக் குறையில்லை** - என்று.

அதாவது, ஸ்வாமி எம்பெருமானாருக்கு சிங்கப்பிரானிடத்தில் உள்ள ஈடுபாட்டையே காரணமாகக் காட்டினாராயிற்று. ஆக, எம்பெருமானார் ஸம்ப்ரதாய ப்ரவர்த்தகாசார்யர்களுக்குச் சிங்கப்பிரானையே ஸம்ப்ரதாயப் பெருமாளாகக் காட்டித் தந்தவர் என்று கொள்ளக் குறையில்லை.

கந்தாடை திருவம்ஶத்து ஆசார்ய புருஷர்கள் அனைவருமே சிங்கப்பெருமாள் எழுந்தருளி இருக்கும் அர்ச்சா ஸ்தலங்களில் அதிமாத்ர ப்ராவண்யம் மிக்கவர்களாயும் கைங்கர்ய நிரதர்களாயும் விளங்கி வருகின்றனர். நமது வர்த்தமான ஸ்ரீமுதலியாண்டான் ஸ்வாமியும் சிங்கப்பெருமாள் கோயில் கொண்டு உள்ள ஸ்தலத்தையே தம்முடைய வாஸஸ்தாநமாகக் கொண்டு ஸம்ப்ரதாய ரக்ஷண கைங்கர்யங்களை நியமேந செய்து கொண்டு வருகிறார்.

முதலியாண்டான் திருமாளிகை என்றே வ்யவஹரிக்கப்பட்டு வரும் நம் திருமாளிகைக்குண்டான ஒரு சிறப்பு என்னவென்றால் - நம் திருமாளிகையில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய எம்பெருமான்கள் இருவருமே (அழைத்து வாழ்வித்தவரான தேவப்பெருமாளும், *அழகியான் தானே யரியுருவன் தானே என்னும்படியான சிங்கப்பிரானும்) திருவாராதனம் கண்டருளுகின்றனர். இந்த எம்பெருமான்களிடத்தில் கைங்கர்ய நிரதராயும் இதற்கேற்ற ஜ்ஞாந பக்தி வைராக்யங்களை நிதி போல் உடையவராயும் விளங்கி வந்தவர் ஸ்ரீ உ வே கீர்த்திமூர்த்தி கோயில்கந்தாடை வாதூல அண்ணாவிலப்பன் குமார வேங்கடாசார்ய ஸ்வாமி. அன்னாரிடத்தில் மிகுந்த மதிப்பும் மர்யாதையும், அன்பும் ஆதரவும் காட்டி அவருக்கு பரமாப்தராய் விளங்கி வந்தவர் கீர்த்திமூர்த்தி ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி.

ஸ்ரீ உ வே வேளுக்குடி ஸ்வாமியுடைய திருவவதார ஶதாபிஷேக மஹோத்ஸவம் ஸமீபத்தில் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இப்பொழுது ஸ்ரீ உ வே கோ.க.வா.அ. குமார வேங்கடாசார்ய ஸ்வாமியினுடைய திருவவதார ஶதாபிஷேக மஹோத்ஸவம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த நன்னாளில் இந்த இரண்டு மஹான்களையும் நினைவு கூரும்படியாகவும், ஸ்ரீவைகுண்டவாஸிகளான அவர்கள்தம் திருவுள்ளம் உகக்கும்படியாகவும் ஸ்ரீ உ வே வேளுக்குடி ஸ்வாமியின் உபந்யாஸங்களிலிருந்து ஏடுபடுத்தப்பட்ட குறிப்புகளின் விரிவாக்கமாக ஸ்ரீநரஸிம்ஹாவதார வைபவாநுபவபரமான இரண்டு உபந்யாஸக் கட்டுரைகளை *ஸ்ரீவைஷ்ணவ ரத்நமாலா* வாசக அன்பர்களுக்கு ஸமர்ப்பிப்பதில் மகிழ்வு கொள்கிறேன். அன்பர்கள் இந்த வெளியீட்டை உகந்து ஏற்று இது போன்ற வெளியீடுகள் மேலும் வெளிவர அடியேனை அநுக்ரஹிக்குமாறு ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்.

தாஸன்,

முரளீதரன்

30-11-2001

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமத்$_3$ வரவரமுநயே நம:

ஸ்ரீந்ருஸிம்ஹாவதார வைபவம் – 1

ந்யாய வேதாந்த வித்வான்
வாகம்ருதவர்ஷீ
ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி
(ஏடுபடுத்தப்பட்ட உபந்யாஸக் கட்டுரை)

ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன் ஸகல சேதந உஜ்ஜீவநார்த்தமாகச் செய்தருளிய திருவவதாரங்கள் எண்ணிறந்தவை. இதை *அஜாயமாந: ப$_3$ஹுதா$_4$ விஜாயதே* (புருஷ ஸூக்தம்) என்று வேதபுருஷனும், *ப$_3$ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந* (கீதை 4-5) என்று வேதவேத்யனான பகவான் தானும், *சன்மம் பல பல செய்து* (3-10-1), *பலபிறப்பாய்* (1-3-2), *பிறப்பில் பல்பிறவிப் பெருமான்* (2-9-5), *எந்நின்ற யோநியுமாய்ப் பிறந்தாய்* (திருவிருத்தம்-1) என்று பரமவைதிக ஸார்வபௌமரான நம்மாழ்வாரும் நமக்குக் காட்டியருளுகின்றனர். இத்தகைய திருவவதாரங்களுள் ஒரு பத்து அவதாரங்கள் முக்யமாகக் கொள்ளப்படுகின்றன.

தேவுடையமீனமாய்ஆமையாய்ஏனமாய் அரியாய்க்குறளாய்*
மூவுருவினிராமனாய்க் கண்ணனாய்க் கற்கியாய்முடிப்பான் கோயில்*
சேவலொடுபெடையன்னம் செங்கமலமலரேறிஊசலாடி*
பூவணைமேல்துதைந்தெழு செம்பொடியாடிவிளையாடும்புனலரங்கமே*
(பெரியாழ்வார் திருமொழி – 4-9-9)

மீனோடுஆமைகேழல்அரிகுறளாய் முன்னும்இராமனாய்த்
தானாய்* பின்னும்இராமனாய்த் தாமோதரனாய்க்கற்கியும்
ஆனான் தன்னை* கண்ணபுரத்துஅடியன் கலியனொலிசெய்த*
தேனாரின்சொல்தமிழ்மாலை செப்பப்பாவம்நில்லாவே*
(பெரிய திருமொழி – 8-8-10)

என்று பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் அருளிச்செய்துள்ளனர். இந்தத் திருவவதாரங்களில் ம்ருகாவதாரம் சிலவாயும் நராவதாரம் சிலவாயும் உள்ளன. நரங்கலந்த ம்ருகாவதாரமாய் அமைந்துள்ளது நரஸிம்ஹாவதாரம் ஒன்றே! இந்தத் திருவவதாரத்துக்குண்டான சிறப்பு மற்ற எந்தத் திருவவதாரத்துக்குமே இல்லை எனலாம். மஹர்ஷிகளும், ஆழ்வார்களும், அவர்கள் வழிவந்த நமது ஆசார்யர்களும் பரக்க அநுபவித்த இந்தத் திருவவதார எம்பெருமானுடைய வைபவங்களை நாமும் ஒருவாறு அநுபவித்து மகிழ்வு கொள்ளுமாறு யதாமதி சில விஷயங்களை இக்கட்டுரை வாயிலாக விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரத்துக்கு உண்டான (1) நாராயணத்வ (ஸர்வாந்த ராத்மத்வ- ஸர்வவ்யாபகத்வ) பூர்த்தியும், (2) அடியார்களுடைய வார்த்தையை ஸத்யமாக்கிக் கொடுக்கும் ஸங்கல்ப விஶேஷத்தைக் கொண்டிருக்கிற ப்ரபாவமும், (3) *நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந்* என்றும், *அழகியான் தானே அரியுருவன் தானே* (நான்முகன் திருவந்தாதி - 22) என்றும், *அழகியசிங்கன்* என்றும் கொண்டாடப்படும் ஸௌந்தர்ய பூர்த்தியும் முதலில் நாம் அநுபவத்தில் கொள்ள வேண்டிய உண்மைகளாகும்.

சேதந அசேதந பதார்த்தங்கள் வாசியற எல்லாவற்றையுமே தனக்குச் சொத்தாகக் கொண்டு தான் அவற்றுக்கு ஸ்வாமியாய் இருப்பவன் பகவான்.

பூ$_4$மிராபோSநலோ வாயு: க$_2$ம் மநோபு$_3$த்$_3$தி$_4$ரேவ ச ।
அஹங்கார இதீயம் மே பி$_4$ந்நா ப்ரக்ருதிரஷ்டதா$_4$॥

(கீதை 7-4)(நிலம், நீர், தீ, காற்று, ஆகாசம் என்னும் பஞ்ச பூதங்களும், மனம் முதலிய இந்த்ரியங்களும், மஹான், அஹங்காரம் என்று எட்டுவிதமாகப் பிரிந்து இருக்கும் இந்த ப்ரக்ருதி என்னுடையதேயாகும் என்று அறிவாயாக) என்றும்,

அபரமேயமிதஸ் த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்$_3$தி$_4$ மே பராம் ।
ஜீவபூ$_4$தாம் மஹாபா$_3$ஹோ யயேத$_3$ம் தா$_4$ர்யதே ஜ$_3$கத் ॥

(கீதை 7-5)(தடக்கையனே! இந்த அசேதந ப்ரக்ருதி தாழ்ந்தது. இதைக் காட்டிலும் மிகவும் வேறுபட்டதாய் ஜீவன் என்று பெயர்பெற்றதாய் முற்கூறிய அசேதந ப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானதான ப்ரக்ருதியை என்னுடையது என்று அறிவாயாக!)

என்றும் அருளிச்செய்கிறான் கண்ணன். இப்படி பகவானுக்கு சேதந அசேதந பதார்த்தங்கள் எல்லாம் சொத்தாய், ஶேஷபூதமாய் இருக்கின்றன என்பது ஸகல வேத ஸாரமான திருமந்த்ரத்துக்கும் ஸங்க்ரஹமான ப்ரணவத்தினால் அறியப்படும் அர்த்தமாகும். ஆனால் இந்த அர்த்தத்தை விஶேஷமாகக் கொள்ளவில்லை நமதாசார்யர்கள். இங்கே கொள்ளப் பட வேண்டிய பரமார்த்தம் என்னவென்றால் – அதுதான் திருமந்த்ரத்திலே உள்ள நாராயண ஶப்தத்தினுடைய உண்மையான அர்த்தம். நமக்குண்டான வீடு, தோட்டம், பஶு, பத்நி, புத்ரன், ஆடை, ஆபரணங்கள் முதலானவை நமக்கு ஶேஷமாய் இருக்கின்றன. இவைகள் நமக்கு ஶேஷமாய் இருப்பவைகளே தவிர நமக்கு ஶரீரமாய் இருப்பவைகள் அன்று. எம்பெருமானுக்கு சேதநாசேதநங்கள் எல்லாம் ஶேஷபூதம் என்றால் இங்கே குறிப்பிடப்படும் ஶேஷத்வம் எப்படிப்பட்டது? நமக்கு க்ருஹ க்ஷேத்ராதிகள் எல்லாம் ஶேஷமாய் இருப்பது போலன்று நாம் அவனுக்கு ஶேஷமாய் இருப்பது. பகவானுக்கு ஶேஷப்பட்ட பதார்த்தங்கள் எல்லாம் ஶரீரதயா ஶேஷம் – நமக்கு ஶரீரம் எப்படி ஶேஷமாய் இருக்கிறதோ, அப்படியே பகவானுக்கு நாம் ஶேஷபூதர்கள் ஆவோம்.

இதுதான் க்ருஹ க்ஷேத்ர புத்ர களத்ராதிகளைப் போலே ப்ருதக்ஸித்த்யாதிகளுக்கு யோக்யமாம்படி இருக்கையன்றிக்கே, ஶரீரம் போலே அவற்றுக்கு அயோக்யமாய் இருக்கை என்று தத்வத்ரயம் (41). இந்த உயர்ந்த அர்த்தத்தை உள்ளபடி காட்டுவதுதான் நாராயண பதம்.

ஒருவனுக்கு ஶேஷமாய் இருப்பதெல்லாம் ஶரீரமன்று. ஆனால் ஶரீரமாய் இருப்பவை எல்லாம் ஶேஷமாய் இருந்தே தீர வேண்டும். ஸ்ரீபாஷ்யத்திலே நம் ஸ்வாமி எம்பெருமானார் ஶரீர லக்ஷணத்தை - *யஸ்ய சேதநஸ்ய யத்$_3$ த்$_3$ரவ்யம் ஸர்வாத்மநா ஸ்வார்த்தே$_2$ நியந்தும் தா$_4$ரயிதும் ச ஶக்யம், தச்சே$_2$ஷதைக ஸ்வரூபஞ்ச, தத்தஸ்ய ஶரீரம்* (2-1-4)(எந்த சேதநனுக்கு எந்த த்$_3$ரவ்யம் தானிருக்கும் வரையில் அந்தச் சேதநனுடைய பயனுக்காக அவனால் நியமிக்கவும், த$_4$ரிக்கவும் தக்கதாய் இருக்கிறதோ, அவனுக்கு ஶேஷமாய் இருக்கையையே இயல்பாகக் கொண்டதாகவும் இருக்கிறதோ, அந்த த்ரவ்யம் அந்த சேதநனுக்கு ஶரீரமாகும்) என்று அருளிச் செய்திருக்கிறார். இதன்படி பார்த்தால் நியமேந ஶேஷமாய், நியமேந வ்யாப்யமாய், நியமேந தார்யமாய், நியமேந நியாம்யமாய் இருப்பதுதான் ஶரீரத்துக்கு லக்ஷணம் என்று தெரிகிறது. சேதநாசேதநாத்மகமான இந்த ஜகத்தானது பகவானுக்குக் கேவலம்

ஶேஷபூதமாய் மட்டும் இருக்கவில்லை. இந்த ஜகத்தானது பகவானுக்கு ஶரீரதயா ஶேஷமாய் இருக்கிறது. பகவான் இந்த ஜகத்துக்கு ஆத்மா ஆவான். இதுதான் நாம் சார்ந்திருக்கும் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தினுடைய ப்ரதாந ப்ரதிதந்த்ரார்த்தமாகும்.

இப்படி ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் உண்டான ஶரீராத்ம பாவத்தை ஸ்பஷ்டமாகக் காட்டும் திருநாமம்தான் *நாராயண:* என்பது. நாராயண ஶப்தத்தால் அறியப்படுவதான ஸர்வாந்தராத்மத்வத்தையும் (சேதநங்களோடு அசேதநங்களோடு வாசியற எல்லாவற்றிலும் எம்பெருமான் அந்தராத்மாவாய் எழுந்தருளி இருக்கும் தன்மையையும்) வ்யாபகத்வத்தையும் (எங்கும் நிறைந்திருக்கும் தன்மையையும்) எந்தத் திருவவதாரத்தில் பகவான் காட்டியருளி இருக்கிறான் என்றால் – அது ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரத்திலேயே என்கிறார்கள் நமதாசார்யர்கள். இதுதான் முதல்முன்னம் நாம் அறிய வேண்டிய ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரத்துக்கு உண்டான வைபவமாகும். சிங்கப்பிரானுடைய இந்த வைபவத்தை மஹர்ஷிகளும் ஆழ்வார்களும் அத்யாஶ்சர்யமாக அநுபவித்திருக்கிறார்கள். ஸ்ரீமத்பாகவத மஹாபுராணத்திலே எம்பெருமானுடைய திருவவதார சரித்ரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றுள் ந்ருஸிம்ஹாவதார சரித்ரத்தைப் பற்றி –

ஸத்யம் விதா$_4$தும் நிஜப்$_4$ருத்ய பா$_4$ஷிதம்
வ்யாப்திம் ச பூ$_4$தேஷ்வகி$_2$லேஷு சாத்மந:।
அத்$_3$ருஶ்யத அத்யத்$_3$பு$_4$தரூபம் உத்$_3$வஹந்
ஸ்தம்பே$_4$ ஸபா$_4$யாம் ந ம்ருக$_3$ம் ந மாநுஷம் ॥

(7-8-18) என்று ஆஶ்சர்யமாக வர்ணிக்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர். தன் அடியவர்களுடைய வாக்கை ஸத்யமாக்குவதற்காக நரசிங்கப் பெருமாளுடைய திருவவதாரம் என்கிறார் வ்யாஸர். இங்கே ப்ருத்யன் (அடியவன்) என்று சொல்லப்படுபவன் ப்ரஹ்லாதாழ்வான் மட்டும் அல்லன். ப்ரஹ்மா, ஶிவன், இந்த்ர சந்த்ராதிகள் யாவரோடும் வாசியற அனைவருமே எம்பெருமானுக்கு ப்ருத்யர்கள்தான்.

ஸ்வத்வமாத்மநி ஸஞ்ஜாதம் ஸ்வாமித்வம் ப்$_3$ரஹ்மணி ஸ்திதம் ।
உப$_4$யோரேஷ ஸம்ப$_3$ந்தோ$_4$ ந பரோபி$_4$மதோ$_4$ மம ॥

(விஷ்ணுதத்த்வம்)(உடைமையாய் இருக்கும் தன்மை ஆத்மாவிடம் உள்ளது. உடையவனாய் இருக்கும் தன்மை ப்ரஹ்மத்திடம் உள்ளது. இருவருக்கும் இதுவே ஸம்பந்தம். வேறு ஸம்பந்தம் எனக்கு இஷ்டமன்று) என்று ப்ரமாண வசநம்.

தாஸபூ$_4$தா: ஸ்வத: ஸர்வே ஹ்யாத்மந: பரமாத்மந:।
நாந்யதா$_2$ லக்ஷணம் தேஷாம் ப$_3$ந்தே$_4$ மோக்ஷே தத$_2$வ ச ॥

இயற்கையாகவே பரமாத்மாவுக்கு எல்லா ஜீவாத்மாக்களும் தாஸபூதர்கள். ஸம்ஸாரத்திலோ அல்லது மோக்ஷ தஶையிலோ இவர்களுக்கு வேறுவகை லக்ஷணமில்லை என்கிறார் பரமஶிவன்.

ஸ்வோஜ்ஜீவநேச்சா$_2$ யதி$_3$ தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி$_3$।
ஆத்மதாஸ்யம் ஹரே : ஸ்வாம்யம் ஸ்வபா$_4$வஞ்ச ஸதா$_3$ ஸ்மர ॥

(விஷ்ணுதத்த்வம்)(உன்னுடைய உஜ்ஜீவநத்திலே உனக்கு ஆசை இருக்குமானால், உன் இருப்பில் உனக்கு ஆசையிருக்குமானால், ஆத்மாவினுடைய தாஸனாய் இருக்கும் தன்மையையும் இவைகளின் இயல்பையும் எப்பொழுதும் நினைப்பாயாக)

என்னும்படி தாஸனாய் இருந்தால்தான் பூதனாய் இருக்கமுடியும். பூ – ஸத்தாயாம் என்று தாது. ஸத்தை பெற்றவன் பூதன் என்றபடி. எம்பெருமானை உள்ளபடி ஒருவன் அறிந்து விடுவானேயானால் அவன்தான் ஸத்தை பெற்றவன். பரமாத்ம ஜ்ஞாநத்தாலே ஸத்பா$_4$வம் என்கிறது வேதாந்தம்.

நாம் பரமாத்மாவை அறிவதற்கு ப்ரஸங்கம் உடையவர்கள். பரமாத்மா நமக்கு ஆத்மா; நாம் அவனுக்கு ஶரீரதயா தாஸபூதர்கள்; நாம் அவனுக்கு அத்யந்த பரதந்த்ரர்கள்; நாம் அவனுக்கு நியத-ப்ரகாரமாய் விளங்குபவர்கள்; நாம் அவனுக்கு அப்ருதக்ஸித்த விஶேஷணமாய் இருப்பவர்கள்* என்றெல்லாம் அவனைப் பற்றியும் நம்மைப் பற்றியும் நாம் அறிய வேணும். பகவானுடைய தாஸர்களாக நாம் நம்மை அபிமாநித்தாலொழிய *பூ-ஸத்தாயாம்* என்கிற ஸத்தை விளங்குவதற்கு ப்ரஸக்தியே கிடையாது.

சேதநாசேதநாத்மகமான இந்த ஜகத்தினுடைய ஸ்வரூபம், ஸ்திதி, ப்ரவ்ருத்தி, நிவ்ருத்திகள் அனைத்தையும் தனக்கு அதீநமாகக் கொண்டவன்

பகவான். இந்த அர்த்தத்தை நம்மாழ்வார் அத்யத்புதமாக முதல்பத்து முதல் திருவாய்மொழியில் அருளிச்செய்திருக்கிறார். *நாமவன் என்று தொடங்கும் நான்காவது பாசுரத்தில் ஜகத்தினுடைய ஸ்வரூபம் பரமாத்மாதீநம் என்கிறார். *அவரவர் என்று தொடங்கும் ஐந்தாவது பாசுரத்தில் ஜகத்தினுடைய ஸ்திதி பரமாத்மாதீநம் என்கிறார். *நின்றனர் என்று தொடங்கும் ஆறாவது பாசுரத்தில் ஜகத்தினுடைய ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் அனைத்தும் பரமாத்ம ஸங்கல்ப அதீநம் என்கிறார்.

இதைத்தான் நம் ஸ்வாமி எம்பெருமானாரும் *ஸ்வாதீ$_4$ந த்ரிவித$_4$ சேதநாசேதந ஸ்வரூப ஸ்தி$_2$தி ப்ரவ்ருத்தி பே$_4$த$_3$ம்* (ஸ்ரீரங்ககத்யம்-1) என்று அருளிச் செய்துள்ளார். எக்காரணத்தாலே இப்படி ஜகத்தினுடைய ஸ்வரூப ஸ்திதி ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளைத் தனக்கு அதீநமாக எம்பெருமான் கொண்டுள்ளான் என்பதை அடுத்த பாசுரத்திலே விவரிக்கிறார் நம்மாழ்வார். முதல் திருவாய்மொழியிலே ஏழாவது பாசுரமான இதுதான் இந்தப் பதிகத்துக்கே உயிர்ப்பாசுரமாய் விளங்குகிறது. இந்தப் பதிகத்துக்கு மட்டும் இது உயிர்ப்பாசுரம் அன்று; இது திருவாய்மொழிக்கே உயிர்ப்பாசுரமாகும். இது மட்டுமன்று; பரமாத்மாவையே உயிர் (ஆத்மா) என்று சொல்லுகிற பாசுரமும் இதுதான். *உடன்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன்* என்று அருளிச்செய்துள்ளார் ஆழ்வார்.

இஶ்ஶரீரத்துக்கு ஆத்மா தா$_4$ரகனாய்நியாமகனாய் ஶேஷியாய் இருக்குமா போலே, இஶ்ஶரீராத்மாக்களுக்குத் தான் தா$_4$ரகனாய், நியாமகனாய், ஶேஷியாய் இருக்கும் என்று ஈடு வ்யாக்யாநம்.

உம்முயிர் வீடுடையான் (1-2-1) என்கிறார் நம்மாழ்வார். இதற்கு இரண்டு விதமாக அர்த்தம் கொள்ளலாம். *உந்தன் உயிர்* = ஆத்மா; *உந்தன் உடல்* = அசித்; *நம்முடைய ஶரீரம் ஆத்மா இரண்டையும் உடையவன் அவன்* என்று ஒரு அர்த்தம். *உங்களுக்கு இது வீடானாப் போலே அவனுக்கு உங்கள் உயிர் உடலாய் இருக்கிறது. அசித்தை வீடாக (ஶரீரமாக) நாம் கொள்கிறோம்; நம்மை வீடாக (ஶரீரமாக) அவன் கொள்கிறான்* என்பது மற்றொரு அர்த்தம். ஆக சேதநாசேதநங்களைத் தனக்கு ஶரீரமாகக் கொண்டு ஆத்மாவாய் அவன் இருக்கிறான்.

இப்படி *உடல்மிசை உயிரெனக் கரந்தெங்கும் பரந்துள்ள (எல்லா வஸ்துக்களிலும் ஆத்மாவாய் அவற்றை அந்தர்ப$_3$ஹிஶ்ச வ்யாபித்து எழுந்தருளி இருக்கும்) தன்மையைக் காட்டும்படியாய் ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் அமைந்திருப்பது - *எங்குமுளன் கண்ணன்* என்ற ப்ரஹ்லாதாழ்வானுடைய வார்த்தையை ஸத்யமாக்குவதற்காகத்தான். *அத்$_3$ருஶ்யத அத்யத்$_3$பு$_4$தரூபம் உத்$_3$வஹந் ஸ்தம்பே$_4$ ஸபா$_4$யாம் ந ம்ருக$_3$ம் ந மாநுஷம்* என்னும்படி தோன்றினான் என்கிறார் வ்யாஸர்.

அத்வைதிகள் பரமாத்மாவைத்தான் ஸத்யமாக ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் நம்முடைய ஸித்தாந்தம் இதுவன்று; நம்முடைய ஸித்தாந்தப்படி பரமாத்மாவும் ஸத்யம்; சேதந அசேதநாத்மகமான இந்த ஜகத்தும் ஸத்யம்; பரமாத்மாவினுடைய குணங்கள் ஸத்யம்; பரமாத்மாவினுடைய திருமேனி ஸத்யம். ஸ்ரீமத்பாகவதத்திலே மற்றொரு ஆஶ்சர்யமான ஶ்லோகம். தேவகிப் பிராட்டியின் திருவயிற்றில் கர்பமாக எழுந்தருளுகிறான் பகவான்.

அப்போது ப்ரஹ்மாதி தேவர்கள் ஆகாஶத்தில் தோன்றி அந்த கர்பமான பரமாத்மாவை ஸ்தோத்ரம் பண்ணுகிறார்கள்.

ஸத்யவ்ரதம் ஸத்யபரம் த்ரிஸத்யம்
ஸத்யஸ்ய யோநிம் நிஹிதம் ச ஸத்யே ।
ஸத்யஸ்ய ஸத்யம்ருதஸத்யநேத்ரம்
ஸத்யாத்மகம் த்வாம் ஶரணம் ப்ரபந்நா:॥

(பாகவதம் 10-2-26) என்று ஶ்லோகம். *இங்கு அஸத்யம் என்கிற ஶப்தமே காணப்படவில்லையே? அனைத்துமே ஸத்யமாகத்தானே சொல்லப்படுகிறது* என்று ஸ்ரீவீரராகவாசார்யருடைய வ்யாக்யாநம். இப்படிப்பட்ட ஸத்யமான ஜகத்துக்கு அந்தராத்மாவாய் எழுந்தருளி இருப்பவன்தான் ஸத்யஸ்வரூபனான நாராயணன். நாராயணத்வமாகிற ஸர்வ அந்தராத்மத்வத்தை (தன்னையொழிந்த எல்லா வஸ்துக்களிலும் வ்யாபித்துத் தான் அவற்றுக்கு ஆத்மாவாக எழுந்தருளி இருப்பதை)க் காட்டுமாறு அமைந்திருக்கிற திருவவதாரம்தான் ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம் என்கிறார்கள் நமதாசார்யர்கள்.

இப்படி ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய வார்த்தையை ஸத்யமாக்குவதற்காகத் திருவவதரிக்கும்போது அவனுடைய வார்த்தையை

மட்டும் ஸத்யமாக்கும் படி திருவவதரிக்கவில்லை பகவான். ப்ரஹ்மாதி தேவர்கள் ஹிரண்யனுக்குக் கொடுத்த வரங்களையும் ஸத்யமாக ஆக்கிக்கொண்டே திருவவதரித்தான். இங்கே வ்யாஸரால் குறிக்கப்பட்ட *ப்ருத்ய:* ஶப்தமானது ப்ரஹ்மாதி தேவர்களையும் குறிக்கும் என்பதை நாம் அறியலாம்.

ஆயிரக்கால் மண்டபத்திலே ஹிரண்யன் குறிப்பிட்ட தூணில் இருந்தே பகவான் தோன்றுவதற்குக் காரணம் ஸ்ரீப்ரஹ்லாதன் வார்த்தையை ஸத்யமாக்குவதற்காக. ம்ருகமாகவும் இல்லாமல் மநுஷ்யனாகவும் இல்லாமல் நரங்கலந்த சிங்க உருவாய்த் திருவவதாரம் பண்ணுவதற்குக் காரணம் ப்ரஹ்மா ஹிரண்யனுக்குக் கொடுத்த வரத்தை ஸத்யமாக்குவதற்காக. ப்ரஹ்மாவும் பகவானுக்கு ப்ருத்யன்(தாஸன்)தான். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானோடு ப்ரஹ்மாவோடு வாசியற பரமாத்மாவுக்கு எல்லாருமே தாஸர்களாக இருப்பதால் இவர்கள் வாக்குகளை ஸத்யமாக்குவதற்காக திருவவதரித்தான் என்கிறார் வ்யாஸர்.

ஹிரண்யன் ப்ரஹ்மாவைக் குறித்து அபாரமாகத் தபஸ்ஸைப் பண்ண ப்ரஹ்மாவும் அவன் கேட்ட வரங்களை எல்லாம் கொடுக்கிறார். *தொகுத்த வரத்தனாய்த் தோலாதான்* (நான்முகன் திருவந்தாதி - 5)(தவம் செய்து ஸம்பாதிக்கப்பட்ட வரங்களை உடையவனாய், வரங்களைக் கொடுத்தவர்களிடத்திலும் தோல்வி அடையாதவனாய்) என்று ஹிரண்யனைப் பற்றி அருளிச்செய்துள்ளார் ஆழ்வார். தன்னுடைய புஜபலத்தினாலும், ப்ரஹ்மாவிடம் இருந்து பெற்ற வரபலத்தினாலும் செருக்கை அடைந்தவனாய் இந்த்ரன், ஸூர்யன், வாயு முதலான தேவர்களை விரட்டிவிட்டுத் தானே அவர்களுடைய ஸ்தாநத்தை ஏற்று யாகங்களில் இந்த தேவர்களுக்குக் கொடுக்கப்படும் ஹவிர் பாகத்தையும் தானே பெற்று அநுபவித்து வந்தான் ஹிரண்யன்.

தே$_3$வா: ஸ்வர்க$_3$ம் பரித்யஜ்ய தத்த்ராஸாந் முநிஸத்தம ।
விசேருரவநௌ ஸர்வே பி$_3$ப்$_4$ராணா மாநுஷீம் தநும் ॥

(1-17-5) என்று ஸ்ரீவிஷ்ணுபுராணம். மஹாக்ரூரனான ஹிரண்யனுக்கு அஞ்சி இந்த தேவர்கள் ஸ்வர்கத்தை விட்டு மநுஷ்ய உருக் கொண்டு மறைந்து திரிந்து வாழ்ந்து வந்தார்கள்.

இப்படியெல்லாம் ஸ்ரீமந் நாராயணன் வரங்களைக் கொடுப்பது இல்லையே! ஏன் இந்த ப்ரஹ்மா உள்ளிட்ட தேவர்கள் எல்லாம் வரங்களைக் கொடுத்து விடுகிறார்கள்? என்று கேள்வி. **இந்த தேவதைகளை ஒருவன் ஸேவித்து விடுவானேயானால் *நாமும் ஒருவனால் ஸேவிக்கப் பெற்றோமே* என்று அபாரமான ஸந்தோஷத்தில் தங்களையும் மறந்து வாங்குபவர்களையும் மறந்து எப்படியெல்லாமோ வரங்களைக் கொடுத்து விடுகிறார்கள். ஆனால் பகவானை எவன் ஸேவித்தாலும், அவன் யாரால் ஸேவிக்கப்பட்டாலும் அது இருவருக்குமே ஸ்வரூப ஸித்தமாய் இருக்கும். அதனால் அது ஒன்றும் ஆஶ்சர்யமன்று. தன்னை ஆஶ்ரயித்தவன் இப்படிப்பட்டவன் என்பதை வாசி பார்த்து, அதிகாரம் பார்த்து, ஆழம் பார்த்து,தேஶம் பார்த்து, அவனது ருசி பார்த்துத்தான் அவனுக்கு வேண்டியதைக் கொடுப்பான் பகவான்** என்று பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்திருக்கிறார்.

அந்தக் காலத்தில் திருவேங்கடமுடையானுக்கு அந்தரங்கராக கோவிந்த ஸ்வாமி என்று ஒரு பக்தர் இருந்தார். இவரைப் பற்றித் திருமங்கையாழ்வார் பெரிய திருமொழி (5-8-5)யில் குறிப்பிடுகிறார். திருவேங்கடமுடையானைக் கண்ணனாக ஸேவிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டுப் பெருமாளையும் ப்ரார்த்திக்கிறார். திருவேங்கடமுடையானும் இவருக்குத் தன்னைக் கண்ணனாகக் காட்டியருளினான். பெருமாள் மறையப்போகும் தருணத்தில் தன்னையும் கூடவே பரமபதத்துக்கு அழைத்துக் கொண்டு போகவேண்டும் என்று அவனிடத்தில் ப்ரார்த்திக்கிறார். ஆனால் பெருமாள் திருவுள்ளம் பற்றவில்லை. *இன்னும் சில காலம் இந்த லோகத்திலேயே இருந்து போகங்களை அநுபவித்து விட்டுப் பிறகு வாரும்* என்று சொல்லுகிறான் திருவேங்கடமுடையான். *எம்பெருமானே! அடியேன் தேவரீரிடம் ப்ரார்த்தித்தேன். தேவரீரும் அடியேனுக்கு ஸேவை அநுக்ரஹித்து அருளியாகி விட்டது. தேவரீரே ஸேவை ஸாதிக்கும்படியான பாக்யத்தைப் பெற்ற அடியேன் இப்பொழுதே ஏன் பரமபதம் வரக்கூடாது?* என்று பெருமாளைப் பார்த்துக் கேட்கிறார் கோவிந்த ஸ்வாமி. பகவான் *உமக்கு இன்னும் வைராக்யம் வரவில்லை* என்று சொல்கிறான். ஆக அவன்தன்னை நேரே ஸேவித்திருக்கும் பாக்யத்தைப் பெற்ற பெரியவரைக்கூட *இரும்* என்று சொன்னானே தவிர, *பரமபதம் வா* என்று சொல்லவில்லை. ஆக பகவான் யாரையும் அதிகாரம் பார்த்துத்தான் அநுக்ரஹிப்பவன். ஆனால் ப்ரஹ்மாதி தேவர்களோ *நாமும் ஒருவனால் ஸேவிக்கப் பெற்றோமே!* என்ற

ஆநந்தத்திலே தம் ப்ரபாவங்களையும் மறந்து, வாங்குபவர்களுடைய தகுதியையும் மறந்து வரங்களைக் கொடுத்து விடுகிறார்கள். இதைப் போலத்தான் ஹிரண்யன் வரங்களைக் கேட்டதும் ப்ரஹ்மா அவற்றைக் கொடுத்ததும்.

ஹிரண்யன் கேட்ட வரங்கள் யாவை? தனக்கு *இரவிலே மரணம் கூடாது; பகலிலே மரணம் கூடாது* என்கிறான். தனக்கு *உள்ளே மரணம் கூடாது; வெளியிலே மரணம் கூடாது* என்று கேட்கிறான். தனக்கு *பூமியிலும் ஆகாஶத்திலும் மரணம் ஸம்பவிக்கக்கூடாது * என்று கேட்கிறான். எல்லாவற்றுக்கும் *கொடுத்தேன் கொடுத்தேன்* என்கிறார் ப்ரஹ்மா. வரங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் கேட்டு ஓய்ந்த அவனும் கடைசியாக *உன்னால் ஶ்ருஷ்டிக்கப்பட்ட எத்தாலும் எனக்கு மரணம் ஸம்பவிக்கக்கூடாது* என்று கேட்கிறான், அவனுக்கு வரங்கள் கொடுத்து ஓய்ந்து போன ப்ரஹ்மாவுக்கு அப்பொழுதுதான் உயிரே வந்தது. *நல்லவேளை! என்னால் ஶ்ருஷ்டிக்கப்பட்ட வஸ்துவினாலேதான் மரணம் கூடாது என்கிறான்; என்னை ஶ்ருஷ்டித்த தெய்வத்தினால் மரணம் ஸம்பவிக்கக் கூடுமல்லவா! என்று ஶாந்தி அடைகிறார் ப்ரஹ்மா.

அகாரவாச்யனான எம்பெருமான்தானே ப்ரஹ்மாவுக்கும் காரணமாய் இருக்கிறான். அவன் எப்படிப்பட்டவன்? அவன் கொடுத்த அதிகாரத்திலே ப்ரஹ்மா இருக்கிறார்; அவன் கொடுத்த அதிகாரத்திலே பரமசிவன் இருக்கிறார்; அவன் கொடுத்த அதிகாரத்திலே இந்த்ராதி தேவர்கள் இருக்கிறார்கள்.

யுக$_3$கோடி ஸஹஸ்ராணி விஷ்ணுமாராத்$_4$ய பத்$_3$மபூ$_4$:।
புநஸ் த்ரைலோக்யதா$_4$த்ருத்வம் ப்ராப்தவாநிதி ஶ்ரும॥

(பாரதம் ஸபா 14-8)(ஆயிரங்கோடிக்கணக்கான யுகங்கள் விஷ்ணுவை ஆராதித்து மறுபடியும் மூவுலகங்களுக்கும் பதியாய் இருக்கும் தன்மையைப் பெறுகிறார் என்று அறிகிறோம்) என்றும்,

ப்$_3$ரஹ்மாத$_3$யஸ் ஸுராஸ் ஸர்வே விஷ்ணும் ஆராத்$_4$ய தே புரா ।
ஸ்வம் ஸ்வம் பத$_3$மநுப்ராப்தா: கேஶவஸ்ய ப்ரஸாத$_3$த:॥

(நாரஸிம்ஹ புராணம்)(ப்ரஹ்மா முதலான எல்லாத் தேவர்களும் முன் விஷ்ணுவை ஆராதித்துத் தத்தம் பதவிகளைக் கேஶவனுடைய அருளாலே பெற்றார்கள்)

என்றும் சொல்லுகிறபடியே, இவர்களுக்குண்டான அறிவு, ஶக்தி, அதிகாரம், பதவி எல்லாமே அவன் கொடுத்ததாகும். சிலர் இவற்றால் இவர்களை மேன்மையுற்ற பரதத்த்வங்களாக அபிமாநித்து ஆஶ்ரயித்து வரத்தை வேண்டுகின்றனர். இவர்களும் தம்மை ஆஶ்ரயித்தவர்கள் கேட்ட வரங்களைக் கொடுத்து விடுகிறார்கள். இதன் பிறகு இவர்கள் கொடுத்த வரங்களை ரக்ஷிக்கிற பொறுப்பை பகவான் தன்னுடையதாக ஏற்றுக் கொள்கிறான். இப்படி எம்பெருமானாலே அதிகாரி புருஷர்களாக நியமிக்கப்பட்ட ப்ரஹ்மாதி தேவர்கள் ஒருவனுக்கு வரம் கொடுப்பார்களேயானால், எம்பெருமான் ஸர்வாதிகாரியாய் இருந்தாலும், ஸர்வ ப்ரபாவங்களும் தலையெடுத்தவனாக இருந்தாலும், இவர்கள் கொடுத்த வரங்களை அழிக்கிற ஸாமர்த்யத்தை உடையவனாக இருந்தாலும், அவற்றை அவன் அழிக்கிறதில்லை. ப்ரஹ்மாதி தேவர்களால் கொடுக்கப்பட்ட வரங்களுக்கு உட்பட்டவனாகவே தன்னை அமைத்துக் கொள்கிறான். இதுதான் இவனுக்குண்டான ஏற்றம். இதைத்தான் இந்த பாகவத ஶ்லோகத்திலே கொண்டாடுகிறார் வ்யாஸர். ப்ரஹ்மா கொடுத்த வரங்களின்படி மநுஷ்யனாகவும் இல்லாமல், ம்ருகமாகவும் இல்லாமல், இரவிலோ பகலிலோ இல்லாமல், நரங்கலந்த சிங்கமாக – சிங்கப்பிரானாக – திருவவதரிக்கிறான் என்கிறார் வ்யாஸர். ஆக எம்பெருமானுடைய ந்ருஸிம்ஹாவதாரத்துக்கு ப்ரயோஜநம் தன்னுடைய அடியவனான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய வாக்கை ஸத்யமாக்குவதற்காக என்றும், அவனுடைய ஸ்ரீந்ருஸிம்ஹாவதார க்ரமம் – ப்ரகாரம் – தன்னுடைய அடியவனான ப்ரஹ்மாவினுடைய வரங்களை ஸத்யமாக்குவதற்காக என்றும் பகவானுடைய திருவவதார ப்ரயோஜநம், திருவவதார க்ரமம் இரண்டையுமே இந்த ஶ்லோகத்தில் நிரூபிக்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர்.

இப்படி பகவான் நரசிங்கனாய் – நரங்கலந்த சிங்கமாய்– திருவவதாரம் செய்தருளியபோது இந்த நரங்கலந்த ம்ருகத்வம் அவனிடத்திலே பொருந்தியபடியைப் பல த்ருஷ்டாந்தங்களைக் கொண்டு அத்யாஶ்சர்யமாய் அநுபவிக்கிறார்கள் நம் பெரியோர்கள். நரங்கலந்த ம்ருகத்வத்தின் சேர்த்தியழகைப் போல் எம்பெருமானிடத்திலே காணப்படும் பலவிதமான சேர்த்திகளின் அழகையும் சிறப்புகளையும் வெளிப்படுத்துபவையாய் இந்த த்ருஷ்டாந்தங்கள் அமைந்துள்ளன. இத்தகைய த்ருஷ்டாந்தங்களில் இரண்டை இப்பொழுது அநுபவத்தில் கொள்வோம்.

பெரியாழ்வார் *நான்மறையின் பொருளே!* (1-5-3), *ஏலு மறைப் பொருளே!* (1-5-9) என்கிறார். மறையான வேதத்துக்கு எம்பெருமான் பொருளாய் இருக்கிறான். *பகவத்விஷயத்திலே பொருந்தியிருப்பது வேதம்* என்றபடி. *தூயானை – தூயமறையானை* என்கிறார் திருமங்கையாழ்வார். தூயான் பகவான் பரிஶுத்தன் என்றபடி. அவனை தெரிவிக்கிற வேதத்துக்குத் தூயமறை என்று பெயர்.

பெரியவாச்சான் பிள்ளை வ்யாக்யாநம் இருக்கும்படி- எம்பெருமானுக்கு எக்காரணத்தாலே ஶுத்தன் என்று பெயர்? வேதாந்தத்தாலே பரதத்தாவமாகக் கொண்டாடப்படுகிற படியாலே. வேதத்துக்கு எத்தாலே ஶுத்தி? காரணனான, பரமாத்மாவான நாராயணனைத் தெரிவிக்கிறபடியாலே. அவனைத் தெரிவித்தால்தான் வேதத்துக்கு ஶுத்தி. வேதபுருஷனால் அறிவிக்கப்படுவது அவனுக்கு ஶுத்தி. வேதப்ரதிபாத்யத்வம் பரமாத்மாவுக்கு ஶுத்தி. ப்ரஹ்ம-ப்ரதிபாதகத்வம் வேதத்துக்கு ஶுத்தி. இப்படி வேதத்துக்கும் வேதவேத்யனுக்கும் உண்டான பொருத்தத்தைப் பெரியாழ்வார் பாசுரம் பாடி இருக்கிறார் - *ஏலு மறைப்பொருளே* என்று. நரசிங்கப்பிரானுக்கு நரத்வமும் ம்ருகத்வமும் எப்படிப் பொருந்தியிருக்கின்றன என்பதற்கு இது ஒரு த்ருஷ்டாந்தமாகும்.

முடிச்சோதியாய் உனதுமுகச்சோதிமலர்ந்ததுவோ?
அடிச்சோதிநீநின்ற தாமரையாயலர்ந்ததுவோ?
படிச்சோதியாடையொடும் பலகலனாய் நின்பைம்பொன்
கடிச்சோதிகலந்ததுவோ? திருமாலே! கட்டுரையே
(திருவாய்மொழி 1-3-1)

முடிச்சோதியாய் உனதுமுகச்சோதி மலர்ந்ததுவோ? = திருமுக மண்டலத்தின் ஒளியானது க்ரீடத்தினுடைய காந்தியாக மலர்ந்ததுவோ? *அடிச்சோதி நீநின்ற தாமரையாய் அலர்ந்ததுவோ?* = உன்னுடைய திருவடிகளின் காந்தியானது நீ எழுந்தருளி இருக்கும் ஆஸநபத்மமாய் அலர்ந்ததுவோ? *நின் பைம்பொன் கடிச்சோதி படிச்சோதியாடையொடும் பல்கலனாய்க் கலந்ததுவோ?* =பரந்தும் அழகியதாயும் இருக்கும் திருவரையின் காந்தியானது இயற்கையான ஒளியையுடைய உன்னுடைய பீதாம்பரமும் மற்றும் பலவாகவும் உள்ள திருவாபரணங்களுமாகக் கலந்ததுவோ?– என்று அழகருடைய திவ்யமான அவயவங்களுக்கும் அவனுடைய திவ்ய

பூஷணங்களுக்கும் உண்டான பொருத்தத்தைக் கண்டு அகமகிழ்ந்து உள்குழைந்து பாசுரம் பாடுகிறார் நம்மாழ்வார். நரசிங்கப்பிரானுக்கு நரத்வமும் ம்ருகத்வமும் எப்படி பொருந்தி இருக்கின்றன என்பதற்கு இது மற்றொரு த்ருஷ்டாந்தமாகும்.

நரத்வம் ம்ருகத்வம் என்னும் இரண்டையும் சேர்த்துக் காட்டினான் எம்பெருமான். *அழகியான்தானே அரியுருவன்தானே* என்றும் *அழகியசிங்கன்* என்றும் அவனைப் பரம ஸுந்தரமூர்த்தியாக அநுபவித்தார்கள் அவனடியார்கள். சிங்கப்பிரானுடைய அவயவ ஸௌந்தர்யத்தை அநுபவிக்கப்புகாநின்ற ஸ்ரீபராஶரபட்டர் அத்யாஶ்சர்யமான ஶ்லோகம் ஒன்றை அருளிச் செய்திருக்கிறார்.

ந்ருஹரித$_3$ஶயோ: பஶ்யந் ஔ பத்திகம் க$_4$டநாத்$_3$புத$_4$ம்
நரமுத ஹரிம் த்$_3$ருஷ்ட்வைகைகம் ஸமுத்$_3$விஜதே ஜந:।
இதி கில ஸிதாக்ஷீரந்யாயேந ஸங்க$_3$மிதாங்க$_3$கம்
ஸ்பு$_2$டஸடமஹாத$_3$ம்ஷ்ட்ரம் ரங்கே$_3$ந்த்$_3$ர ஸிம்ஹமுபாஸ்மஹே ॥
(ஸ்ரீரங்கராஜஸ்தவம் – உத்தர ஶதகம் 64)

கேவல ம்ருகாவதாரம் வராஹாவதாரம். கேவல நராவதாரம் ஸ்ரீராமக்ருஷ்ணாதி அவதாரங்கள். எம்பெருமானுடைய நராவதாரங்களோ, ம்ருகாவதாரங்களோ நமக்கு ரஸிப்பது ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரத்தை நாம் அநுபவத்தில் கொள்வதற்கு முன்புவரை என்கிறார் ஸ்ரீபராஶரபட்டர். ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரத்தை நாம் ஒருமுறை அநுபவித்து விட்டோம் என்றால், அதன்பிறகு எம்பெருமானுடைய கேவல ம்ருகாவதாரமோ அல்லது கேவல நராவதாரமோ ரஸிக்காது. இதற்கு ஒரு த்ருஷ்டாந்தத்தையும் அருளிச்செய்கிறார் பரம ரஸிகரான ஸ்ரீபராஶர பட்டர். பால், சர்க்கரை இரண்டுமே இனிப்புப் பண்டங்கள்தான். சிலர் சர்க்கரை இல்லாமல் பாலையே புஜித்துக் கொண்டிருப்பர். சிலர் பால் இல்லாமல் சர்க்கரையையே புஜித்துக் கொண்டிருப்பர். ஆனால் பாலையும் சர்க்கரையையும் நன்கு சேர்த்துக் கலந்து புஜித்துவிட்டால், அதன்பிறகு பாலோ சர்க்கரையோ தனித்தனியாக ருசிக்காது. இதைப்போன்று நரங்கலந்த சிங்காவதாரத்தை அநுபவித்துவிட்டால், கேவல நராவதாரம் கேவல ம்ருகாவதாரம் எதுவுமே ரஸிக்காது. ஆகையால் ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம்தான் சாலச்சிறந்தது; அதுதான் அத்புத அவதாரம் என்கிறார் ஸ்ரீபராஶரபட்டர்.

இந்த உண்மையை ஸ்ரீவேதவ்யாஸரும் *நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந்* என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமாத்யாயத்திலே அத்யத்புதமாய் தெரிவித்திருக்கிறார். *நாரஸிம்ஹவபு:* என்னும் ஶப்தம் *நரங்கலந்த ஸிம்ஹ உருவானவன்* என்னும் அர்த்தத்தைத் தெரிவிக்கிறது. அவனை *ஸ்ரீமாந்* என்று கொண்டாடுகிறார் ஸ்ரீவேதவ்யாஸர். இந்த இடத்தில் உள்ள *ஸ்ரீமாந்* என்னும் ஶப்தத்துக்கு ஸ்ரீபராஶரபட்டரைத் தவிர வேறு யாராலும் வ்யாக்யாநம் பண்ண முடியாது. ஸ்ரீவேதவ்யாஸருடைய திருவுள்ளக் கருத்தை அறிந்த பட்டர் அத்யாஶ்சர்யமாக வ்யாக்யாநம் அநுக்ரஹித்திருக்கிறார். மற்றவர்கள் ஸ்ரீலக்ஷ்மிந்ருஸிம்ஹனைச் சொல்லுகிறார் வேதவ்யாஸர் என்று அர்த்தம் பண்ணுவர்கள். பராஶரபட்டர் பண்ணும் வ்யாக்யாநம் அதுவன்று. அவன் எப்பொழுதுமே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன்தான். அதைக் குறிப்பிடுவது இங்கே விஶேஷமன்று. பிறகு அர்த்தமென்ன? ஸ்ரீமாந் = ஸௌந்தர்ய லக்ஷ்மீவாந் என்று அர்த்தம் அருளிச் செய்கிறார் பட்டர். சிங்கப்பிரானுக்குண்டான ஸௌந்தர்யஸ்ரீயைக் குறிப்பதுதான் இங்குள்ள *ஸ்ரீமாந்* என்னும் ஶப்தம். நரங்கலந்த சிங்கவுருக் கொண்டு திருவவதரித்த எம்பெருமான் ஸௌந்தர்யஸ்ரீயை அபாரமாகக் கொண்டவன் என்று அர்த்தம். இந்தத் திருவவதாரத்தில் மட்டும்தான் எம்பெருமான் அழகியசிங்கன் என்று கொண்டாடப்படுகிறான். வேறு எந்தத் திருவவதார எம்பெருமான் விஷயத்திலும் இதைப்போன்று *அழகிய* என்னும் அடைமொழி காணப்படுகிறது இல்லை. ஸ்ரீந்ருஸிம்ஹாவதார எம்பெருமானுக்கு உண்டான அழகு வேறு எந்த அவதார எம்பெருமானுக்கும் கிடையாது.

ஆக ஸ்ரீந்ருஸிம்ஹாவதார எம்பெருமானுக்குண்டான ஸௌந்தர்ய பூர்த்தியை நிரூபணம் பண்ணுவதற்காக அமைந்துள்ளதுதான் *நாரஸிம்ஹவபு: ஸ்ரீமாந்* என்னும் ஸ்ரீவேதவ்யாஸருடைய ஸ்ரீஸூக்தியாகும். இதைத்தான் திருமழிசை ஆழ்வாரும் *அழகியான்தானே அரியுருவன்தானே* (நான்முகன் திருவந்தாதி 22) என்று அருளிச்செய்துள்ளார். நரசிங்கப் பெருமாளுடைய வைபவங்கள் எல்லாவற்றையும் அநுபவிப்பதற்கு இந்த ஒரு திவ்யஸூக்தியே போதும். இதிலே நரசிங்கப் பெருமாளுடைய எல்லா வைபவங்களுமே அடக்கம். ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரத்தைப் பற்றிய மற்ற ஆழ்வார்களுடைய திவ்யஸூக்திகளும் அவற்றுக்கு அமைந்துள்ள (நமதாசார்யர்களுடைய) வ்யாக்யாந ஸ்ரீஸூக்திகளும் *அழகியான்தானே அரியுருவன்தானே* என்னும்

இந்த வசநத்திற்கே விவரணமாக அமைந்துள்ளன எனலாம். நரசிங்கப் பெருமானுடைய அழகிலே அவனுடைய பெருமைகள் அனைத்துமே அடக்கம். மணவாளமாமுநிகள்,

சேர்ப்பாலும் கண்டசர்க்கரையும் சேர்ந்தாற்போலே ஒன்றுக்கொன்று ரஸாவஹமாய்ச் சேர்ந்து அநுபவிப்பார்க்கு அத்யந்த போக்யமாய் இருக்கையாலே *அழகியான்தானே அரியுருவன்தானே* என்றாரிறே திருமழிசையாழ்வார். அங்காந்த வாயும் மொறாந்த முகமும் நா மடிக்கொண்ட உதடும் குத்த முறுக்கின கையும் அதிர்ந்த அட்டஹாஸமுமாய் இருக்கிற இருப்பிறே இவர்க்கு அழகியதாய்த் தோற்றுகிறது. ஆஶ்ரித விரோதி நிரஸநார்த்தமாகக் கொண்ட வடிவாகையாலே, அவ்வடிவும் அதில் உண்டான வ்யாபாரங்களும் எல்லாம் பகவத்குண ஜ்ஞாநமுடையவர்களுக்கு அழகுக்குடலாய்த் தோற்றுமிறே

என்று அருளிச்செய்துள்ளது (பெரியாழ்வார் திருமொழி 4-8-8 வ்யாக்யாநம்) இங்கே அநுஸந்தேயம்.

அங்காந்த வாயும் மொறாந்த முகமும் நா மடிக்கொண்ட உதடும் குத்த முறுக்கின கையும் அதிர்ந்த அட்டஹாஸமுமாய் இருக்கிற இருப்பிறே என்கிற இந்த வசநத்தை பூர்வாசார்யர்களுடைய வ்யாக்யாநங்களிலே பலபலவிடங்களிலே காணலாம். (ந்ருஸிம்ஹப் பெருமானுடைய) அங்காந்த வாயும் = அகன்ற வாய், மொறாந்த முகமும் = பெரிய திருமுகமண்டலம், நா மடிக் கொண்ட உதடு = உதட்டைக் கடித்துக் கொண்டும், நாக்கை வெளியே நீட்டிக் கொண்டும் இருக்கிற பயங்கரமான வடிவம், குத்த முறுக்கின கை = குத்துவதற்காக முறுக்கப்பட்ட கை. இத்துடன் *இறுத்து நோக்கின நோக்கு* (=அக்நி கக்கும்படியான பார்வை) என்றும் நரஸிங்கப் பெருமானைப் பற்றி வர்ணிக்கிறார் அழகியமணவாளப்பெருமாள் நாயனார். எம்பெருமான் அக்நியாய் ஜ்வலிப்பவன், அக்நி ரூபமாய் இருப்பவன் என்கிறார் நாயனார்.

உக்$_3$ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுக$_2$ம் ।
ந்ருஸிம்ஹம் பீ$_4$ஷணம் ப$_4$த்$_3$ரம் ம்ருத்யும்ருத்யும் நமாம்யஹம் ॥

(அச்சத்தை விளைவிப்பவனும், ஒளிபொருந்தியவனும், எல்லாப் பக்கங்களிலும் முகத்தை உடையவனும், அச்சுறுத்தும் வடிவை உடையவனும்,

மங்களத்தைச் செய்பவனும், யமனுக்கு யமன் போன்றவனும், திருமாலுடைய அவதாரமானவனுமான ஸ்ரீந்ருஸிம்ஹனை வணங்குகிறேன்) என்று நரசிங்கப் பெருமானைப் பற்றிய மந்த்ரம்.

நரத்வமும் ம்ருகத்வமும் கலந்து மிக அழகாகப் பொருந்தியுள்ள திவ்யமங்களவிக்ரஹத்தை உடையவனான எம்பெருமானை நமது ஆழ்வார்களும் ஆசார்யர்களும் எப்படி அநுபவித்துள்ளார்கள் என்று பார்ப்போம். ஆழ்வார்கள் நரசிங்கப்பிரானை அநுபவிக்கும் காலத்தில் அவனது திருமேனி ஸௌந்தர்யத்திலேயே அதிகமாக ஈடுபடுகிறார்கள். முதலில் திருமழிசைப்பிரானுடைய அநுபவத்தைப் பார்ப்போம். நரசிங்கப்பிரானுடைய திருமேனி ஸௌந்தர்யத்தை வர்ணிக்கப்புகா நின்ற திருமழிசையாழ்வார் *இமையோர் தலைவன் அரிபொங்கிக் காட்டும் அழகு* என்று ஆரம்பிக்கிறார். *நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவன்... நித்யஸூரிகள் பரிய இருக்குமவன் ஆஶ்ரிதார்த்தமாக நரஸிம்ஹமாய்ச் சீறிக் காட்டின அழகு* என்று பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம். *திறந்து எரிகான்ற பிலம்வாய்* = விரிந்து நெருப்பை உமிழும் குஹை போன்ற பெரியவாய். *எரிவட்டம் கண்கள்* = உருண்டு சிவந்து ஜ்வலிக்கும் திருக்கண்கள். அவனது திருமேனியோ *எரிபொங்கும் திருமேனி* - அதாவது அக்நி போன்று கிளர்ந்து தோன்றின திருமேனி. ஆக இதுதான் *இமையோர் பெருமான் அரிபொங்கிக் காட்டும் அழகாகும். இவனே அழகுக்கு எல்லை நிலமாயும், அழகுக்கு அழகு சேர்க்கும் பெருமாளாயும் இருப்பவன் ஆவான்.

பெரியாழ்வார் *வாளெயிற்றுச்சீயமுமாய்* (பெரியாழ்வார் திருமொழி 4-8-8) என்று ஒளிவீசும் பற்களையுடைய சிங்கமாய் பகவான் திருவவதரித்ததைக் கொண்டாடுகிறார். *இங்கு *வாளெயிறு* என்றார் – அழகுக்குடலாகையாலே* *அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய்* (பெரிய திருமொழி 1-7-2) *ஏய்ந்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரியாய்* (பெரிய திருமொழி 1-7-3)என்று இவ்வவதாரத்துக்கு எயிறு சொல்லுமிடமெல்லாம் அழகுக்குடலாகவிறே சொல்லுவது** என்று வ்யாக்யாநம்.

இனி நரசிங்கப்பெருமானுடைய ஆஶ்ரித விரோத நிரஸந ப்ரகாரத்தை வர்ணிக்குமதாய் அமைந்துள்ள பெரியாழ்வார் பாசுரம் ஒன்றைக் காண்போம்.

அளந்திட்டதூணை அவன்தட்ட * ஆங்கே

வளர்ந்திட்டு வாளுகிர்ச்சிங்கவுருவாய்*
உளந்தொட்டிரணியன் ஒண்மார்வகலம்*
பிளந்திட்டகைகளாற் சப்பாணி.....*
(பெரியாழ்வார் திருமொழி 1-6-9)

அளந்திட்ட தூணை அவன் தட்ட - ஹிரண்யன் எந்தத் தூணைத் தட்டி, *இங்கு இருக்கிறானா நீ சொல்லுகிறவன்?* என்று ஸ்ரீப்ரஹலாதாழ்வானைப் பார்த்துக் கேட்டானோ அந்தத் தூணில் அவன் தட்டிய இடத்திலேயே தோன்றுகிறான் சிங்கப்பிரான். *முன்பே ந்ருஸிம்ஹத்தை வைத்து நட்ட தூண் என்னவொண்ணாதபடித் தானே தனக்குப் பொருந்தப் பார்த்து அளந்திட்ட தூண்* என்று வ்யாக்யாநம்.

ஆங்கே வளர்ந்திட்டு வாளுகிர்ச்சிங்கவுருவாய் - அஸ்த்ர ஶஸ்த்ரங்களில் ஒன்றாலும் படக்கடவனல்லவாகவும், தேவாதி சதுர்வித (தேவ மநுஷ திர்யக் ஸ்தாவர) ஜாதியில் உள்ளவற்றில் ஒன்றின்கையிற் படக்கடவனல்லனாகவும் ப்ரஹ்மருத்ராதிகள் கொடுத்த வரத்துக்கு விரோதம் வராதபடி ஒளியை உடைத்தான உகிர்களை (நகங்களை) உடைய நரஸிம்ஹ ரூபியாய் *திருவவதரித்தவன்* என்று வ்யாக்யாநம்.

உளந்தொட்டு இரணியன் ஒண்மார்வகலம் பிளந்திட்ட கைகள் - ஒருவேளை ஹிரண்யன் மனம் திருந்தி அநுகூலனாய் மாறக் கூடுமோ என்று அவனுடைய ஹ்ருதயத்தை பரீக்ஷை செய்து பார்த்து அதாவது, ஹிரண்யன் காட்டிய தூணில் அவன் அடித்த இடத்தில் அவன் சிறிதும் எதிர்பாராதவாறு நரஸிம்ஹமாய்த் தோன்றினபடியாலும் *சிரம்பற்றி முடியிடியக் கண்பிதுங்க வாயலறத் தெழித்தான்* (பெரியாழ்வார் திருமொழி 4-9-8) என்கிறபடியே ஹிரண்யன் அதிர்ச்சி அடையும்படித் தான் பண்ணிய பீடா விஶேஷங்களால் ஒருகால் ஹிரண்யன் தன் மனம் மாறி ப்ரதிகூலனாய் இருந்த தன் நிலையை மாற்றிக் கொண்டு, அநுகூலனாய் ஆகி இருக்கிறானோ என்று அவனது ஹ்ருதயத்தைப் பரீக்ஷை பண்ணி, அப்படி ஹிரண்யன் மனம் திருந்தாதபடியால்,

இரணியன் ஒண்மார்வகலம் பிளந்திட்ட கைகள் - *நரஸிம்ஹனுடைய கோபாக்நியாலும் தன்னுடைய உதரத்தில் பயாக்நியாலும் பிறந்த பரிதாபத்தாலே அக்நி முகத்தில் பொன் போலே உருகிப் பதம் செய்து ஒளி விடுகையாய் இருக்கும் ஹிரண்யனுடைய மார்பை இருபிளவாகக் கிழித்த கைகள்* என்று வ்யாக்யாநம்.

ஹிரண்யன் ப்ராணன் உடையதோ ப்ராணன் இல்லாததோ தன்னைக் கொல்லக் கூடாது என்ற வரத்தைப் பெற்றிருப்பவனாதலால் பகவானுக்கு அவன் மார்பைக் கிழித்தெறிய நகமே ஆயுதமாயிற்று.

பிஶாசாந் தா$_3$நவாந் யக்ஷாந் ப்ருதி$_3$வ்யாம் சைவ ராக்ஷஸாந் ।
அங்கு$_3$ள்யக்$_3$ரேண தாந் ஹந்யாமிச்ச$_2$ந் ஹரிக$_3$ணேஶ்வர ॥

(யுத்த காண்டம் 18-23)(வாநர ஸமூஹத்துக்கு அரசனே! பிஶாசங்களையும், அஸுரர்களையும், யக்ஷர்களையும், உலகிலுள்ள ராக்ஷஸர்களையும் நான் விரும்பினேனாகில் என் விரல் நுனியாலே கொல்லுவேன்) என்று ஸ்ரீராமன் சொன்னது தன்னுடைய நரஸிம்தாவதார சரித்திரத்தைத் திருவுள்ளத்திற் கொண்டேயன்றோ!

இவன் உள்ளபடியே த்வேஷியா அல்லது வெளிப்படையாக மட்டும் த்வேஷத்தைக் காட்டுகிறானா என்று அவன் உள்ளத்தைத் தொட்டுப் பார்த்தான் பகவான். ஆகையால் ஒருவனை பகவான் கைவிடுவது என்றால் ஆந்தனையும் பார்த்துத்தான் கைவிடுவனே தவிர வெளிப்படையாக ஒருவன் த்வேஷத்தைக் காட்டினான் என்பதனால் மட்டும் அவனைக் கைவிடுவது என்பது பகவானுக்குண்டான தன்மையன்று. ஹிரண்யன் மார்பை பகவான் தொட்டுப் பார்க்க அங்கே த்வேஷம் மலிந்து கிடந்தது என்பதால் அதைக் கிழித்து விட்டான் என்கிறார்கள் நமதாசார்யர்கள்.

ஹிரண்யன் எப்படிப்பட்டவன் என்பதை *உரம் பற்றி இரணியன்* (4-9-8) என்றும் *அதிருங்கழற்பொருதோள் இரணியன்* (4-1-1) என்றும் வர்ணிக்கிறார் பெரியாழ்வார். *உரம் பற்றி இரணியன்* = தேவர்கள் கொடுத்த வரபலங்களையும் தன்னுடைய புஜபலத்தையும் நினைத்து ஒருவராலும் ஓரழிவில்லை என்று வரங்கொடுத்த தேவர்களோடு அல்லாதாரோடு வாசியற எல்லாரையும் நெருக்கித் தன் கீழேயாக்கி *தன்னுடைய நாமமேயொழிய பகவந்நாமம் அத்தேஶத்தில் நடக்கவொண்ணாது* என்று விலக்கி, திருநாமம் சொன்னதுவே ஹேதுவாக, *பள்ளியிலோதி வந்த தன் சிறுவனான ப்ரஹ்லாதனை வாசாமகோசரமான பீடைகளைப் பண்ணியவன் ஹிரண்யன்* என்று வ்யாக்யாநம். *அதிருங்கழற்பொருதோள் இரணியன்* - ப்ரஹ்மலோக பர்யந்தமாக எல்லாரையும் தன் கீழாக்கி ஈரரசற விருந்தவனாகையாலே த்வநியா நின்றுள்ள வீரக்கழலை உடையவனாய், தனக்கு ஓர் எதிரி இல்லாமையாலே யுத்த கண்டூதி

வர்த்தியாநின்றுள்ள ஹிரண்யன்* என்று வ்யாக்யாநம். நரஸிம்ஹாவதார வைபவத்தை அநுபவிக்கிறவர்களுடைய ஏற்றத்தை, *நாதனை நரசிங்கனை* (4-4-6) என்றும், *நம்பனை நரசிங்கனை நவின்றேத்துவார்களைக் கண்டக்கால்* என்றும் பெரியாழ்வார் அருளிச்செய்துள்ளார்.

"யத$_3$பராத$_4$ஸஹஸ்ரமஜஸ்ரஜம் த்வயி ஶரண்ய ஹிரண்ய உபாவஹத் ।
வரத$_3$ தேந சிரம் த்வமவிக்ரிய: விக்ருதிமர்ப$_4$கநிர்ப$_4$ஜநாத$_3$கா$_3$: ॥"

(வரதராஜஸ்தவம் - 68)(எம்பெருமானே! ஹிரண்யன் உன்னிடத்தில் ஆயிரமாயிரமாய் அபசாரப்பட்டான். நீ உன் திருவுள்ளத்திலே அனைத்தையும் பொறுத்துக் கொண்டே வந்தாய். அப்போது மநோ விகாரத்தை அடையாமலிருந்த நீ ப்ரஹ்லாதாழ்வான் பிறந்த பின்பு அவனிடத்தில் அபசாரப்பட்ட ஹிரண்யனிடத்தில் மிகவும் சீற்றம் கொள்ளுதலான மநோ விகாரத்தை அடைந்தாய்!)என்று அருளிச்செய்திருக்கிறார் ஸ்ரீகூரத்தாழ்வான்.

**ஈஶ்வரன் அவதரித்துப் பண்ணிய ஆனைத்தொழில்கள் எல்லாம் பாகவதாபசாரம் பொறாமை* என்று நஞ்ஜீயர் அருளிச்செய்வர் **

என்று ஸ்ரீவசநபூஷணம் (ஸூத்ரம் 192)

அதாவது – ஸங்கல்ப மாத்ரத்தாலே ஸர்வத்தையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வஶக்தியான ஸர்வேஶ்வரன் தன்னை அழியமாறி இதர ஸஜாதீயனாய் அவதரித்துக் கைதொடனாய் நின்று (கையாலே தொட்டுச் செய்கிற ஸஹாயபூதனாய், கைவிடாதே என்றபடி) செய்த ஹிரண்ய ராவணாதி நிரஸந ரூபாத்யதிமாநுஷ சேஷ்டிதங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் துடக்கமான அவ்வோ பாகவத விஷயங்களில் அவரவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே என்று ஆப்ததமரான நஞ்ஜீயர் அருளிச்செய்வர் என்கை என்று மணவாளமாமுநிகளுடைய வ்யாக்யாநம். துஷ்ட நிக்ரஹத்துக்காகவே (பாகவத அபசாரம் செய்தவனை சித்ரவதமாகக் கொல்வதற்காகவே) எம்பெருமானுடைய திருவவதாரங்கள் அமைந்துள்ளன என்பது நமதாசார்யர்களுக்குத் திருவுள்ளமாகத் தெரிகிறது.

ப்ரஹ்லாதாழ்வான் திறத்திலே ஹிரண்யன் அபசாரப்பட்டபடியாலே எம்பெருமான் திருவுள்ளத்திலே அபாரமான சீற்றம் உண்டாயிற்று. அந்த

சீற்றத்தோடே ப்ரஹ்லாதாழ்வானை அநுக்ரஹித்துக் கொண்டே நரங்கலந்த ஸிம்ஹ உருக்கொண்டு பகவான் திருவவதாரம் பண்ணியருளினன்.

சீற்றத்தோடு அருள்பெற்றவன் (திருவாய்மொழி 3-6-6)– சீற்றமும் அநுக்ரஹமும் ஒருசேர ஒரு வ்யக்தியினிடத்தில் ஒரே ஸமயத்தில் எப்படி இருக்கக் கூடும்? என்று கேள்வி.

உத்பத்தி விநாஶாதி ரஹிதனாய், ஜந்மாதிதோஷயுக்த பதார்த்தங்களுக்கெல்லாம் நியாமகனானவன் அத்யந்த விலக்ஷணமான திருமேனியையுடையனாய், ஹிரண்யன் பக்கல் சீற்றம் செல்லா நிற்கச் செய்தே தன்னுடைய அநுக்ரஹ பாத்ரமான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு வந்து அணையலாம்படி நிற்பதும் செய்து, ஹிரண்யன் மேலுள்ள சீற்றத்தாலும் பிள்ளை பக்கலுள்ள வாத்ஸல்யத்தாலுமாகக் கலங்கிச் சிவந்த திருக்கண்களயுமுடையனாய், அவன் பக்கல் வ்யாமுக்தனுமாய், அயர்வறும் அமரர்களுக்கு ஸர்வ ப்ரகார போக்யமானாற்போலே எனக்கு எல்லாப்படியாலும் போக்யமானவனையல்லது மற்றொருவரைக் காலமுள்ளதனையும் உஜ்ஜீவநஹேதுவாகவுடையேனல்லேன்

என்பது இந்தப் பாசுரத்துக்கு நஞ்ஜீயர் அநுக்ரஹிக்கும் வ்யாக்யாநம்.

....ஹிரண்யன் பக்கல் சீற்றமும் செல்லாநிற்கச் செய்தே, அருளுக்குப் பாத்ரபூதனான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குத் திருவடிகளின்கீழே வந்து புகுரலாம்படி நின்ற சீற்றத்தோடே அருள்பெற்றவன் என்றதாயிற்று. ஹிரண்யன் த்வேஷத்துக்கு விஷயமானாற்போலேயாயிற்று இவன் அருளுக்கு விஷயமானபடி..... ஹிரண்யன் பக்கல் சீற்றமும் செல்லாநிற்க, ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குக் கிட்டலாயிருந்தபடி எங்ஙனே? என்று எம்பெருமானாரைச் சிலர் கேட்க, *ஸிம்ஹம் ஆனைமேலே சீறினாலும் குட்டிக்கு முலையுண்ணலாம்படி இருக்குமிறே* என்று அருளிச்செய்தார்..... (செங்கண்மால்) ஹிரண்யன் பக்கல் சீற்றத்தாலும் சிவந்திருக்கும், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் பக்கல் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்குமிறே ..... (*உக்ரம் வீரம் மஹாவிஷ்ணும் என்கிறபடியே) ஹிரண்யனுக்குக் கிட்டவொண்ணாதபடி பெரியவனாய் இருக்கும் இருப்பைச் சொல்லுதல், ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குக் கிட்டலாம்படி வ்யாமோஹத்தை உடையவனாய் இருக்கும் என்னுதல்....

என்னும் ஈடு வ்யாக்யாந ஸ்ரீஸூக்தி இங்கே அநுபவிக்கத்தக்கது. அதாவது, *சீற்றத்தைக் காட்டுகிற காலத்திலே அருளைக் காட்ட முடியுமா?* என்று எம்பெருமானாரை ஶிஷ்யர்கள் வினவ, அதற்கு அவர் த்ருஷ்டாந்தம் காட்டுகிறார். *பெண் சிங்கமானது யானையுடைய மத்தகத்தைப் பிளக்கக் கோபத்துடன் பாய்கிற காலத்திலும் தன் குட்டிக்குப் பாலைச் சுரப்பது போல* என்று த்ருஷ்டாந்தம். *ஒரு பெண் சிங்கத்துக்கே இந்த ஸ்வபாவம் இருக்குமானால், நம் நரசிங்கத்துக்கு அந்தப் பெருமை இருக்காதா?* என்று கேட்கிறார் எம்பெருமானார்.

வித்வேஷோ த$_3$யிதே புத்ரே கத$_2$மாஸீந்மஹாத்மநி ।

ப்$_3$ரூஹி மே ப$_4$க$_3$வந்யேந ப்ரஹ்லாத$_3$ஸ்ய அச்யுதாத்மதா ॥

(ஸ்ரீமத்பாகவதம் 7-1-47) *எதனாலே ப்ரஹ்லாதாழ்வானை த்வேஷித்தான் அவனுடைய தகப்பனான ஹிரண்யன்?* என்று ஸ்ரீநாரதரைப் பார்த்துக் கேட்கிறார் யுதிஷ்டிரர். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் தன் தகப்பனான ஹிரண்யனிடத்தில் ஏதாவது தகாத முறையில் நடந்து கொண்டிருப்பானேயானால் ஹிரண்யன் அவனிடத்தில் கோபம் கொள்ள ந்யாயம் உண்டு. ப்ரஹ்லாதாழ்வான் ஹிரண்யனிடத்தில் முறை தவறி நடந்து கொண்டவன் அல்லன். அவன் ஹிரண்யனுக்கு ஹிதத்தை உபதேஶித்தவனேயாவான். பரமபாகவதோத்தமனாகையாலும்,

த$_4$ர்மாத்மா ஸத்யஶௌசார்யாதி$_3$கு$_3$ணாநாமாகர: பர:।

உபமாநமஶேஷாநாம் ஸாது$_4$நாம் ய: ஸதா$_3$ऽப$_4$வத் ॥

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-15-156) என்று மஹர்ஷியால் கொண்டாடப்படும் பெருமை வாய்ந்தவனாயும் இருக்கும் ப்ரஹ்லாதாழ்வான் யாரிடமும் அபசாரப்பட ப்ரஸக்தியே இல்லை. அப்படியென்றால் ஹிரண்யன் ப்ரஹ்லாதாழ்வானிடத்தில் ஏன் கோபம் கொள்ள வேண்டும்? நம்மாழ்வார் பாசுரம் பாடுகிறார் –

எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து
இங்கில்லையாலென்று இரணியன் தூண்புடைப்ப
அங்கப் பொழுதே அவன் வீயத்தோன்றிய என்
சிங்கப்பிரான் பெருமை ஆராயும் சீர்மைத்தே

(திருவாய்மொழி 2-8-9)

எங்குமுளன் கண்ணன் என்பதுதான் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் சொன்ன வார்த்தை. *எங்குமுளன் கண்ணன் என்ற* என்பது ப்ரஹ்லாதாழ்வான் பகவானைப் பற்றிய ஓர் உயர்ந்த உண்மையை வெளிப்படுத்தும்படியாய்ச் சொன்ன வார்த்தையின் கௌரவாதிஶயத்தைக் குறிக்கும் ஶப்தம். ஹிரண்யனுக்குக் குமாரனாகப் பிறந்த குழந்தையான ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் சொன்னான் *எங்குமுளன் கண்ணன்* என்று. இது மிகவும் உயர்ந்த வார்த்தை. பகவானைப் பற்றிய மிக உயர்ந்த இந்த வார்த்தையை யார் சொன்னாலும் சொல்லப்பட்ட வார்த்தைக்குண்டான அர்த்தகௌரவத்தைக் கணிசித்துச் சொன்னவனை உபசரித்துக் கொண்டாட வேண்டும்.

மகனை என்றது ஹிரண்யன் வயிற்றில் பிறந்த ஸம்பந்தத்துக்கு அநுகுணமான ஶப்தம். இப்படிப்பட்ட உயர்ந்த வார்த்தை சொன்னவன் தன் வயிற்றில் பிறந்த குழந்தையாக இருக்கும்போது அந்தக் குழந்தையிடத்தில் ஹிரண்யனுக்கு மிகுந்த ஸந்தோஷமும் அன்பும் பெருமையும் உண்டாகி இருக்க வேண்டும். தன் குழந்தை விபரீதமாக வார்த்தை சொல்லியிருந்தாலும், தன் ஸம்பந்தத்தை உடையவன் என்பதால் அதைப் பொருட்படுத்தாமலாவது ஹிரண்யன் இருந்திருக்கலாம். வார்த்தை சொல்லுபவன் சத்ருவாக இருந்தாலும், அவனால் சொல்லப்பட்ட வார்த்தை உயர்ந்த அர்த்தத்தைக் கொண்டிருக்குமானால், அப்படிப்பட்ட உயர்ந்த அர்த்தத்துக்குண்டான கௌரவாதிஶயத்துக்கேற்ப சொன்னவனை ஒருவன் கொண்டாட வேண்டும் என்பதுதான் முறை. வார்த்தை சொல்லுபவன் விபரீத அர்த்தத்தைச் சொன்னவனாக இருப்பனேயானால், அப்படிச் சொன்னவன் தன் வயிற்றில் பிறந்த பிள்ளை என்பதால் அந்த வார்த்தையை ஒருவன் பொருட்படுத்தாமலாவது இருக்க வேண்டும். இந்த இடத்திலே ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் ஹிரண்யனுக்கு மகனாகவும் இருப்பவன்; அவனிடத்திலே உயர்ந்த வார்த்தையையும் சொல்லி இருப்பவன். தன் பிள்ளை என்று ஹிரண்யன் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானை கௌரவித்திருக்க வேண்டாமா? வார்த்தையின் அர்த்தகௌரவத்திற்காகவாவது அவனைக் கொண்டாட வேண்டாமா? உயர்ந்த அர்த்தத்தைச் சொன்ன ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானை உபசாரம் செய்து கொண்டாடுவது ப்ராப்தமாய் இருக்க, (இப்படிச் செய்யாமல் இருப்பதே அபசாரமாகும்) அவனிடத்தில் மிகுந்த அபசாரங்களையும் ஹிரண்யன் செய்ய ஆரம்பித்தானே! என்று ஆஶ்சர்யப்படுகிறார்கள் நமதாசார்யர்கள்.

எங்கும் உளன் கண்ணன்* - ஸர்வேஶ்வரன் ஸர்வக$_3$தன் என்றான். *மயா ததமித$_3$ம் ஸர்வம்* *ந தத$_3$ஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூ$_4$தம் சராசரம்* என்று அவன்தான் சொன்ன வார்த்தையாயிற்று இவன்தான் சொல்லிற்று..... இவ்வர்த்தத்தை ஶத்ருவே சொல்லிலும் கேட்டபோதே காலிலே விழவேண்டும் வார்த்தை சொல்லிற்று; ப்ரமாண விருத்தமான அர்த்தத்தைச் சொல்லிலும் கொண்டாட வேண்டும்படியாயிற்று ஸம்பந்தம்; பருவத்தாலும் கொண்டாட வேணும்..... பள்ளியில் ஓதும் பருவத்தில் உள்ளவையடையக் கொண்டாட்டமாய் இருக்கும்; அதுக்குமேலே *தன் சிறுவன்* தன் வயிற்றில் பிறந்தவன் வார்த்தை மிகவும் ப்ரியமாய் இருக்கும்; *வாயில் ஓராயிரநாமம்* அதுக்குமேலே திருநாமத்தைச் சொல்லிற்று.... இவையொன்றுமில்லையாகிலும் சொன்ன போதை இனிமைதான் கொண்டாட வேணும்..... திருநாமம் சொன்னதுவே ஹேதுவாக *புத்ரன் அன்று* என்று விட்டான் அவன்..... என்னும் ஈட்டு திவ்யஸூக்தி இங்கே அநுஸந்தேயம். *பரமாத்மா எங்கும் உளன்* என்று ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் சொன்ன உயர்ந்த அர்த்தத்தைத்தானே பகவானும் கீதையில் –

மயா ததமித$_3$ம் ஸர்வம் ஜக$_3$த$_3$வ்யக்தமூர்த்திநா ।
மத்ஸ்தா$_2$நி ஸர்வபூ$_4$தாநி ந சாஹம் தேஷ்வவஸ்தி$_2$த:॥
ந ச மத்ஸ்தா$_2$நி பூ$_4$தாநி பஶ்ய மே யோக$_3$மைஶ்வரம்।
பூ$_4$தப்$_4$ருந் ந ச பூ$_4$தஸ்தே$_2$ऽ மமாத்மா பூ$_4$தபா$_4$வந:॥

(9-4,5)(சேதநாசேதநங்களாகிற இவ்வுலகம் யாவும் மறைந்து உறைகின்ற என்னால் வ்யாபிக்கப் பெற்றிருக்கின்றன; நான் இவற்றைத் தரிப்பதற்காகவும், ஆள்வதற்காகவும் ஸ்வாமியாய் இருந்து பரந்திருக்கிறேன்; ஆதலால் எல்லாப் பொருள்களும் ஆத்மாவான என்னிடத்தில் இருக்கின்றன. நான் அவற்றால் தாங்கப்பட்டு அவற்றில் நிற்பவனல்லன்; நான் அவற்றைத் தரிக்கும் போது என்னுடைய ஸங்கல்பத்தினாலேயே தரிக்கிறேன்) என்றும்,

ந தத$_3$ஸ்தி விநா யத்ஸ்யாந்மயா பூ$_4$தம் சராசரம் (10-39)

(அசைவனவும் அசையாதனவுமான பொருள்களில் அந்தர்யாமியான என்னை விட்டுப் பிரிந்திருக்கும் பொருள் ஒன்றுமே இல்லை) என்றும் சொல்லிக் கொண்டான். இந்த உண்மையை அநுஸரித்து வார்த்தை சொன்ன

ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானிடத்தில் ஸ்ரீபாததீர்த்தம் பெற்றுக் கொள்ள வேண்டியவன் ஹிரண்யன்! ஆனால் அவனோ ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானிடத்தில் எத்தகைய க்ரூரமான செயல்களை எல்லாம் செய்யத்துணிந்தான்.

பள்ளியிலோதி வந்த தன் சிறுவன் வாயிலோராயிரநாமம்
ஒள்ளியவாகிப் போதவாங்கதனுக் கொன்று மோர்பொறுப்பிலனாகிப்
பிள்ளையைச் சீறி வெகுண்டு தூண்புடைப்பப்பிறை யெயிற்றனல் விழிப் பேழ்வாய்
தெள்ளிய சிங்கமாகிய தேவைத்திருவல்லிக்கேணிக் கண்டேனே!
(பெரிய திருமொழி 2-3-8)

என்று திருமங்கையாழ்வார் பாசுரம். *பள்ளியோதும் பருவத்திற் சொல்லுவதெல்லாம் ப்ரியமாயிருக்கும்; தன் வயிற்றில் பிறந்தவன் சொல்லிற்றெல்லாம் இனிதாயிருக்கும். சத்ருவே சொல்லிலும் ஶிரஸாவஹிக்க வேண்டுமத்தைச் சொல்லிற்று..... திருநாமம் சொன்னதுவே ஹேதுவாக வயிற்றில் பிறந்தவனைக் கைவிட்டான் இவன்* என்று வ்யாக்யாநம். பாடசாலையில் கற்றுணர்ந்த தன் மகனுடைய மழலைச் சொல்லைக் கேட்க விரும்புகிறான் அஸுரர்களுக்குத் தலைவனான ஹிரண்யன்.ஆனால் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் திருவாயில் வந்ததோ எம்பெருமானுடைய திருநாமங்களில் ஓர் ஆயிரம். **ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் *நாராயண:* என்ற ஒரு திருநாமத்தைத்தான் சொன்னான்* என்று புராணங்களில் சொல்லப்பட்டுள்ளதே! ஆழ்வார் இங்கு *ஆயிரநாமம்* என்று சொல்லுகிறாரே? என்றால் இதற்கு ஸமாதாநத்தைப் பலவிதமாகச் சொல்லலாம்.

(1) சிறிய குழந்தையான ப்ரஹ்லாதாழ்வான் *நாராயண:* என்ற ஒரு திருநாமத்தைச் சொன்னாலும் அது பகவானுடைய ஆயிரம் திருநாமங்களைச் சொன்னதுக்கு ஸமாநமாகும் என்பது ஒரு ஸமாதாநம்.

(2) அஸுரர்களின் தலைவனான ஹிரண்யனுடைய பிள்ளையானவன் தன் தகப்பனான அந்த அஸுரன் மடியில் உட்கார்ந்து கொண்டு *நாராயண:* என்று சொன்னான் என்றால், அது ஆயிரமன்று, பல்லாயிரம் திருநாமங்களைச் சொல்வதற்கும் துல்யம்தான் என்கிறார்கள் நம் பெரியோர்கள்.

(3) *நாராயண:* என்னும் ஒரு திருநாமத்துக்குண்டான அர்த்தபூர்த்தி வேறு எந்த ஒரு திருநாமத்துக்கும் இல்லை. ப்ரணவத்துடனும் நமஶ் ஶப்தத்துடனும் சேர்ந்த இதுவே பெரிய திருமந்த்ரம் எனப்படுகிறது. வ்யாபக மந்த்ரங்களுக்குள்ளேயும் இதுதான் உயர்ந்த மந்த்ரமாகும். விஷ்ணு வாஸுதேவ மந்த்ரங்களைவிட இதற்குத்தான் மிகுந்த ஏற்றம் உள்ளது. இதுதான் வ்யாபகனைச் சொல்லுகிறது; வ்யாப்தி பதார்த்தங்களைச் சொல்லுகிறது; வ்யாபகனுடைய குணங்களைச் சொல்லுகிறது; வ்யாப்தியைச் சொல்லுகிறது; வ்யாப்தி ப்ரகாரத்தைச் சொல்லுகிறது; வ்யாப்தி ப2லத்தைச் சொல்லுகிறது. இதுதான் ஸர்வார்த்த ப்ரதிபாதகம். மற்ற மந்த்ரங்கள் ஏகதேஶார்த்த ப்ரதிபாதகங்கள். ஸர்வார்த்த ப்ரதிபாதகமான நாராயண மந்த்ரத்தைச் சொன்ன ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் அதில் அடக்கமான ஆயிரம் திருநாமங்களையும் சொன்னவனே ஆவான் என்று விளக்கம் அருளிச்செய்கிறார்கள் நம் பெரியோர்கள்.

பகவானுடைய திருநாமங்களைச் சொன்ன தன் பிள்ளையைத் தன் வழிப்படுத்த முயற்சிசெய்கிறான் ஹிரண்யன். இதற்காக அவன் மேற்கொண்ட வழிகள் பலிக்காமற் போகவே தன் பிள்ளை மீது சீறி வெகுண்டு எழுகிறான். அவனைக் கொல்வதற்கு யத்நிக்கிறான். ஸ்ரீமத்பாகவதத்திலும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் இவற்றை மஹர்ஷிகள் ஆஶ்சர்யமாக வர்ணிக்கிறார்கள்.

ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைக் கொல்வதற்காகத் தான் செய்த முயற்சிகள் எதுவும் பலிக்காமற் போனதைக் கண்ட ஹிரண்யன் *பிள்ளாய்! உனக்குக் கொடிய விஷம் கொடுத்தும், யானையுடைய கால்களில் உன்னை இடறியும், மலையில் இருந்து உன்னை உருட்டித் தள்ளியும், ஸமுத்ரத்தில் உன்னைத் தள்ளியும், அக்நிகுண்டத்தின் நடுவில் உன்னை நிறுத்தியும் உனக்கு ப்ராண வியோகம் ஏற்படவில்லை. இதற்குண்டான காரணம் என்னவென்று நான் யோசித்துப் பார்த்தேன். நீ என்னுடைய மகனாக இருப்பதனால்தான் உனக்கு ப்ராண வியோகம் ஏற்படவில்லை என்று அறிந்தேன். ஆனால் பிள்ளாய்! வரபலத்தினாலே எனக்கு ப்ராணன் போகாது என்று நான் அறிந்திருந்தாலும் மரணபயம் மட்டும் என்னை விட்டு அகலவில்லை. உனக்கு மரணத்தை ஏற்படுத்த நான் இத்தனை முயற்சிகள் செய்தும் நீ சிறிதுகூட மரணபயம்

இல்லாமல் இருக்கிறாயே! அதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை* என்று தன் மகனைப் பார்த்துக் கூறுகிறான்.

ஒருவனுக்கு பய ப்ராப்தி எப்பொழுது என்றும் அபய ப்ராப்தி எப்பொழுது என்றும் வேதாந்தம் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. பகவச் சரணாரவிந்தங்களிலே ஶரணாகதி பண்ணினவனுக்கு எப்பொழுதுமே அபய ப்ராப்திதான். பகவத் ஸமாஶ்ரயணம் பண்ணாதவனுக்கு எப்பொழுதுமே பய ப்ராப்திதான். எம்பெருமானைப் பற்றாமல் பய ப்ராப்தி படைத்தவன்தானே ஹிரண்யன். *ஸம்ஸார பயமே எனக்குக் கிடையாதே, பாம்பு தேள்களைக் குறித்தா நான் பயப்படப் போகிறேன்? என்கிறான் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான். இந்த ஶரீரத்தைக் குறித்துத்தான் ஒவ்வொருவனும் பயப்பட வேண்டும். ஆனால் அதற்குப் பயப்படுகிறவர்கள் யாருமே இல்லை. பாம்பு தேள் கடித்தால் ரூப நாஶம்தான். ஆனால் ஸம்ஸாரத்துக்கநுகுணமான இந்த ஶரீரம் கடித்தால் ஆத்ம ஸ்வரூப நாஶமே ஏற்பட்டுவிடும் என்கிறார்கள் நமதாசார்யர்கள். அநாதிகாலமாக நமக்கு ஏற்பட்டுக் கொண்டு வரும் ஸ்வரூப நாஶத்தைப் பற்றித்தான் நாம் பயப்பட வேண்டும். *இப்படிப்பட்ட ஸம்ஸாரத்துக்கே நான் பயப்படாமல் இருக்கும்போது எனக்கு ப்ராண வியோகத்தை உண்டாக்க நீ செய்யும் யத்நங்களுக்கா நான் பயப்படப் போகிறேன்?* என்று பதில் சொல்லுகிறான் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான்.

நம் ஸ்வாமி எம்பெருமானாரால் *ஆண்பிள்ளை* என்று கொண்டாடப் பட்டவரான ஸ்ரீஅநந்தாழ்வான் திருவேங்கடமுடையானுக்கு புஷ்ப கைங்கர்யம் செய்வதற்காக ஸ்ரீரங்கத்திலிருந்து திருவேங்கடத்துக்கு எழுந்தருளுகிறார். அங்கே நந்தவனத்தில் கொடியதான க்ருஷ்ண ஸர்ப்பம் ஒன்று அநந்தாழ்வானைக் கடித்து விட்டது. உடனே வைத்யம் பண்ணிக் கொள்ள வேண்டும் என்று அநந்தாழ்வானை ப்ரார்த்தித்தார்கள் அருகே இருந்த ஶிஷ்யர்கள். அதற்கு அநந்தாழ்வான், *அது கடித்த பாம்பு; இது (இந்த ஶரீரம்) கடியுண்ட பாம்பு. அது வலியதாகில் விரஜையிலே தீர்த்தமாடி பரமபதநாதனுக்குக் கைங்கர்யம் பண்ணுகிறேன்; இது (இந்த ஶரீரம்) வலியுடையதாகில் திருவேங்கடமுடையானுக்குக் கைங்கர்யம் பண்ணுகிறேன்* என்று ஸாதித்தாராம். *அநாதிகாலமாக ஸம்ஸாரம் என்கிற பாம்பு நம்மைத்

தீண்டிக் கொண்டு இருக்கிறதே! அதற்கு யாருமே பயப்படுகிறதாகத் தெரியவில்லையே* என்கிறான் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான்.

அடுத்தபடியாக ப்ரஹ்லாதாழ்வானைப் பார்த்து ஹிரண்யன், *உன்னுடைய நாராயணன் எங்கிருக்கிறான்? என்று கேட்கிறான். அதற்குத்தான் ப்ரஹ்லாதாழ்வான் *எங்குமுளன் கண்ணன்* - *அவனை இல்லை என்று ஒத்துக்கொள்ளாத நாஸ்திகனுக்கும் அவன் அந்தராத்மாவாய் இருப்பவன்; அவனை உண்டு என்று ஒத்துக்கொள்ளும் ஆஸ்திகனுக்கும் அவன் அந்தராத்மாவாய் இருப்பவன்; ஆஸ்திக நாஸ்திக விபாகமற, தூணிலோ துரும்பிலோ விபாகமற பரமாத்மா எங்கும் எதிலும் அந்தராத்மாவாய் எழுந்தருளியிருப்பவன்* என்கிறான். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய இந்த வாக்கை நிரூபிக்கும்படியாய் அமைந்ததுதான் பகவானுடைய ஸ்ரீந்ருஸிம்ஹாவதாரம். மேற்கொண்டு நடந்ததைத்தான் ஆழ்வார் ஆஶ்சர்யமாக அருளிச்செய்கிறார் –

அளந்திட்டதூணை அவன்தட்ட * ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச்சிங்கவுருவாய்*
உளந்தொட்டிரணியன் ஒண்மார்வகலம்*
பிளந்திட்டகைகளாற் சப்பாணி.....*

(பெரியாழ்வார் திருமொழி 1-6-9)

ஆஹ்லாத$_3$ ஶீதநேத்ராம்பு$_3$: புளகீக்ருத கா$_3$த்ரவாந் ।

ஸதா$_3$ பரகு$_3$ண ஆவிஷ்டோ த்$_3$ரஷ்டவ்ய: ஸர்வதே$_3$ஹிபி$_4$:॥

(ஸ்ரீவிஷ்ணுதத்வம்)(ஸந்தோஷத்தினால் உண்டான குளிர்ந்த ஆனந்தக் கண்ணீரை உடையவனாகவும், பரமபுருஷனுடைய குணங்களால் ஆட்கொள்ளப்பட்டவனாகவும் இருக்கும் பகவத்பக்தன் எல்லா ஜீவர்களாலும் காணத்தக்கவன்)

என்று சொல்லுகிறபடியே, எம்பெருமான் நரசிங்கமாய் ஆவிர்பவித்ததைக் கண்ட ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் ஆடினான்; ஓடினான்; பாடினான்; ஶிரம் மேல் கை கூப்பினான். ஹிரண்யனிடத்தில், *புருஷோத்தமனான பகவான் ஆவிர்ப்பவித்திருக்கிறான்; நீ அவனிடத்தில் அபசாரப்பட்டது போதும்; இப்போதாவது அவனை வணங்கு* என்று ப்ரார்த்தித்துக் கொள்கிறான். அதற்கு

ஹிரண்யன், *உன்னையும் கொன்று, இவனையும் (பகவானையும்)கொன்று, அனைவரையும் கொன்று, இப்படிக் கொன்ற என்னுடைய ஆயுதத்தை வணங்குவேனேயன்றி வேறு யாரையும் வணங்க மாட்டேன்* என்கிறான்.

ஸாதாரணமாக ஸ்ரீகூரத்தாழ்வான் பாசுரங்கள் எல்லாம் பரம லலிதமாக அமைந்திருக்கும். ஆனால் நரசிங்கப் பெருமாள் ஹிரண்யனுடைய மார்பைக் கிழித்தெறியும் செயலை வர்ணிக்கும் இடத்தில் *நக$_2$க்ரகசகப்ரதி$_2$க்ரதி$_2$த தை$_3$த்ய வக்ஷஸ்ஸ்த$_2$லீ ஸமுத்த$_2$ருதி$_4$ரச்சடாச்சு$_2$ரித பி$_3$ம்பி$_3$தம் ஸ்வம் வபு: விலோக்ய* (ஸுந்தரபாஸு ஸ்தவம் - 97) என்று அந்த க்ரமத்திலேயே கடினமான சொற்றொடர்களைக் கொண்டு வர்ணித்திருக்கிறார்.

ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானைப் பார்த்து *குழந்தாய்! உன்னுடைய தகப்பனாரை உன் முன்னிலையில் சித்ரவதமாகக் கொன்று விட்டேன். அப்படியும் நீ மனம் தளரவில்லை. உனக்கு வேண்டிய வரத்தை என்னிடம் பெற்றுக் கொள்வாய்!* என்று பகவான் சொல்லுகிறான். அப்பொழுது,

யா ப்ரீ திரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ ।
த்வாமநுஸ்மரதஸ்ஸா மே ஹ்ருத$_3$யாந் மாபஸர்ப்பது ॥

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-20-19)(விவேகம் அற்றவர்களுக்கு விஷயங்களில் யாதொரு அழிவற்ற ப்ரீ தி உள்ளதோ, அந்த ப்ரீ தி உன்னை நினைக்கும் போது என் நெஞ்சை விட்டு அகலாமல் இருக்கட்டும்) என்று பகவானிடத்தில் ப்ரார்த்தித்துக் கொள்கிறான் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான். அதற்கு பகவான்,

மயி ப$_4$க்திஸ்தவாஸ்த்யேவ பூ$_4$யோऽப்யேவம் ப$_4$விஷ்யதி।
வரஸ்து மத்த: ப்ரஹ்லாத$_3$ வ்ரியதாம் யஸ்தவேப்ஸித:॥

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-20-20)(ப்ரஹ்லாதனே! என்னிடத்தில் உனக்கு பக்தி உள்ளது. மேலும் இப்படியே இருக்கும். உனக்கு ப்ரியமான வேறு ஒரு வரத்தை என்னிடமிருந்து பெற்றுக்கொள்!) என்கிறான். அப்போது –

மயி த்$_3$வேஷாநுப$_3$ந்தோபூத் ஸம்ஸ்துதாவுத்$_3$யதே தவ ।
மத்பிதுஸ் தத்க்ருதம் பாபம் தே$_3$வ தஸ்ய ப்ரணஶ்யது ॥

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 1-20-21)(உன்னைத் துதிப்பதில் ஈடுபட்டு இருந்த என்னிடத்தில் என்னுடைய தந்தைக்கு நீண்ட காலம் த்வேஷம் இருந்து வந்தது.

பகவானே! என் தந்தைக்கு இதனால் ஏற்பட்ட பாபம் நீங்க வேண்டும்) என்று பகவானிடம் வேண்டிக் கொள்கிறான் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான்.

நன்மையால் மிக்க நான்மறையாளர்கள் என்கிறார் ஆழ்வார். நன்மையைத் தீமையாகப் பார்க்காமல்*, நன்மையை மட்டும் நன்மையாகப் பார்க்காமல், தீமையையும் நன்மையாகப் பார்ப்பவர்கள்தான் *நன்மையால் மிக்க நான்மறையாளர்கள். நான்கு மறைகளையும் அத்யயநம் பண்ணியவர்களுக்குத்தான் இக்குணம் வரும் என்கிறார்கள் நம் பூர்வாசார்யர்கள். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் போல்வார், ஸ்ரீகூரத்தாழ்வான் போல்வார், பிராட்டி போல்வார், ஆண்டாள் போல்வார் என்று த்ருஷ்டாந்தம் காட்டுகிறார்கள் நம் பெரியோர்கள். ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் தன்னிடம் அபசாரப்பட்ட தந்தைக்கும் பகவான் மூலமாக வாழ்ச்சி உண்டாக்கிக் கொடுத்தான். அவன்தான் பரம பாகவதோத்தமன்.

நரசிங்கப் பெருமாளை ஆராத்ய தெய்வமாகக் கொண்ட எம்பெருமானார், அவர்தம் வழிவந்த நம்முடைய ஆசார்ய புருஷர்கள் பாகவதோத்தமர்கள் அனைவருடைய திருவடிகளுக்கும் வாழி வாழி வாழி என்று பல்லாண்டு பாடி அடியேனுடைய விண்ணப்பத்தை முடித்துக் கொள்கிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

அமரர்க்கரிய ஆதிப்பிரான்

ந்யாய வேதாந்த வித்வான்

வாகம்ருதவர்ஷீ

ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

(ஏடுபடுத்தப்பட்ட உபந்யாஸக் கட்டுரை)

ஶ்ரிய: பதியான ஸர்வேஶ்வரனால் *மயர்வற மதிநலம் அருளப் பெற்ற திருப்பாணாழ்வார், பெரிய பெருமாள் தன்னுடைய திருப் பாத கமலம், நல்லாடை, உந்தி, தேட்டரும் உதரபந்தம், திருமார்பு, கண்டம், செவ்வாய், வாட்டமில் கண்கள் எல்லாவற்றையும் தமக்குக் காட்ட, அவற்றைத் தாம் கண்டபடியை ஆஶ்சர்யமாக வர்ணநம் செய்யும்படியாக அமைந்துள்ளதுதான் *அமலனாதிபிரான்* என்னும் திவ்யப்ரபந்தம். இதிலே எட்டாவது பாசுரத்திலே *பரியனாகி வந்த அவுணன் உடல்கீண்ட அமரர்க்கரிய ஆதிப்பிரான்* என்னும் பகுதியாலே ஆழ்வார் நரஸிம்ஹாவதாரத்தை அநுபவிக்கிறார். நரஸிம்ஹாவதார அநுபவபரமாக ஆழ்வார் இங்கே திருவுள்ளம் பற்றியருளின அர்த்தங்களை நமதாசார்யர்கள் விவரித்திருப்பதை அடியொட்டிச் சில விஷயங்களை இனி அநுபவத்தில் கொள்வோம்.

திருப்பாணாழ்வார் பத்தே பாசுரங்களில் பரம வேதாந்த ஸாரபூதமான அர்த்தங்கள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தும்படியாய் அமைந்துள்ளது இந்த திவ்யப்ரபந்தம். இதிலே ஐந்தாவது பாசுரத்திலே *பாரமாய பழவினை பற்றறுத்து* என்று ஆழ்வார் அருளிச்செய்ததின் மேல் சில ஆக்ஷேபங்கள் எழ, அந்த ஆக்ஷேபங்களுக்கு ஸமாதாநமாய் மேல் பாசுரங்கள் சில அமைந்துள்ளன என்பது பூர்வாசார்யர்களுடைய வ்யாக்யாநம்.

பாரமாய பழவினைகள் பற்றறுத்தான் என்கிறார் ஆழ்வார். *பெரிய பிராட்டியார் புருஷகாரம் செய்தருளினபடியாலே பெரிய பெருமாள் தாம் அநாதிகால ஆர்ஜிதமாகச் செய்த பாபங்கள் – துஷ்கர்மங்கள் அனைத்தையும் போக்கினான்* என்று ஆழ்வார் திருவுள்ளமாக, *அது கூடுமோ?*பகவான் உம்முடைய பழவினைகள் எல்லாவற்றையும் அறுத்திருப்பானா?* என்னும்

கேள்வி எழுந்தது. உடனே, *துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன்* - *தம்முடைய தகப்பனாருடைய தலையைக் கொய்து விட்டதால் பரமசிவனார் மஹாபாதகியானார். அந்த பாபத்துக்குண்டான நிவ்ருத்தியை எம்பெருமான் உண்டாக்கினானே!* என்று ஆழ்வார் த்ருஷ்டாந்தம் காட்டுகிறார். பரமசிவன் விஷயத்திலேயும் பெரியபிராட்டியார் புருஷகாரத்தினுடைய ப்ராபல்யம்தான். அங்கேயும் பரமசிவனுடைய பாபத்தைப் பெரியபெருமாள் போக்கினார். இங்கேயும் ஆழ்வாருடைய பாபங்களைப் பெரியபெருமாள் போக்கியருளினார். அவர் செய்த பாபம் தகப்பனார் தலையைக் கிள்ளியது. இங்கே ஆழ்வார் தாம் அக்ருத்யகரண, க்ருத்யாகரண, பகவதபசார, பாகவத அபசாராதிகளான எத்தனையோ பாபங்களைச் செய்ததாகச் சொல்லிக் கொள்கிறார்.

இந்த த்ருஷ்டாந்தத்தின் மேல் ஓர் ஆக்ஷேபம் எழுகிறது. *எம்பெருமான் பரமசிவனாருடைய பாவத்தைப் போக்கியருளினான் என்று வேண்டுமானால் சொல்லலாம் – அதற்குப் பல காரணங்கள் இருக்கிறபடியாலே. ஆனால் அவன் ஆழ்வாருடைய பாவங்களைப் போக்கினான் என்று எப்படிச் சொல்ல முடியும்? பரமசிவனார் பகவானுடைய குமாரரான ப்ரஹ்மாவினுடைய புத்ரராகையாலே பகவானுக்கு பௌத்ர ஸ்தாநத்திலே அமைந்தவர்; ஸம்ஹார கர்த்தாவாய் பகவான் நியமித்தருளிய தொழிலைச் செய்து கொண்டிருப்பவர்; அதற்கும் மேலே எம்பெருமானிடத்தில் சென்று தன்னுடைய பாபத்தைப் போக்கடிக்குமாறு ப்ரார்த்தித்துக் கொண்டவர். இக்காரணங்களாலே பகவான் பரமசிவனாருக்கு அநுக்ரஹம் புரிந்தான் என்று சொல்வதை ஒப்புக்கொள்ள முடியும். ஆழ்வாரிடத்திலே இக்காரணங்கள் பார்க்கப்படாததனாலே எவ்விதத்திலும் பரமசிவனாரை ஆழ்வார் தமக்கு த்ருஷ்டாந்தமாகக் கொள்ள முடியாது* என்று ஆக்ஷேபம் எழுகிறது. இந்த ஆக்ஷேபத்திற்கு ஸமாதாநமாகத்தான் ஆழ்வார் அடுத்த பாசுரத்தில் *எம் ஐயனார் அணியரங்கனார்* என்று அருளிச்செய்கிறார்.

அடுத்தபடியாக, *பாரமாய பழவினை பற்றறுத்து* என்று அருளிச் செய்திருப்பதற்கு மேலும் ஒரு வகையில் ஆக்ஷேபம் எழ, அதற்கு *பரியனாகி வந்த அவுணனுடல் கீண்ட அமரர்க்கரிய ஆதிப் பிரான்* என்று அடுத்ததான எட்டாவது பாசுரத்திலே ஸமாதாநம் அருளிச்செய்கிறார் ஆழ்வார். இங்கே மூன்று விஷயங்களை நாம் குறிக்கொள்ள வேண்டும். (1) ஆழ்வார் *தம்முடைய பாபங்களைப் போக்கடித்தான் பகவான்* என்று ஐந்தாவது பாசுரத்திலே சொல்கிறார். (2) ஆறாவது பாசுரத்திலே *துண்டவெண்பிறையன் துயர் தீர்த்தவன்*

என்று அதற்கு த்ருஷ்டாந்தம் சொல்கிறார். *அவர் யார்? நீர் யார்? அவரை நீர் த்ருஷ்டாந்தமாக எடுக்க முடியுமா?* என்ற ஆக்ஷேபத்துக்கு ஸமாதாநத்தை ஏழாவது பாசுரத்திலே அருளிச்செய்கிறார். (3) மேலும் ஓர் ஆக்ஷேபம் எழ அதற்கு ஸமாதாநத்தை அடுத்ததான எட்டாவது பாசுரத்திலே அருளிச்செய்கிறார். இப்படி ஐந்தாவது, ஆறாவது, ஏழாவது, எட்டாவது பாசுரங்களுக்குண்டான தொடர்பை நாம் அறிந்து கொள்ள வேண்டும். இனி அந்த ஆக்ஷேபமானது என்ன என்பதைக் காண்போம்.

நம்மாழ்வார் திருவிருத்தம் முதல் பாசுரத்திலே *பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா ஒழுக்கும் அழுக்குடம்பும்...* என்று அருளிச்செய்திருக்கிறார். *பொய்ந்நின்ற ஞானம்* எனப்படுவது அஜ்ஞாநம். *பொல்லாவொழுக்கு* என்பது அவித்யா ஸஞ்சிதமான கர்மங்கள். அழுக்குடம்பாவது கர்மாதீநமான ஶரீரம். ஆக ஶரீரத்தைச் சொல்லி, அதற்கு மூலகாரணமான கர்மங்களைச் சொல்லி, அதற்கும் மூலகாரணமான அஜ்ஞாநத்தைச் சொல்கிறார் ஆழ்வார் இப்பாசுரத்திலே. பொய்ந்நின்ற ஜ்ஞாநம், தத்கார்யமான பொல்லாவொழுக்கு, தத்கார்யமாக அழுக்குடம்பு என்று காரணகார்ய பாவத்திலே அமைந்துள்ளது இப்பாசுரம்.

சிலவிடங்களிலே செடிகள் முளைக்கின்றன. அவற்றை வெட்டி விடுகிறோம். ஆனால் சிறிது நாள்களில் அச்செடியானது மறுபடியும் முளைக்க ஆரம்பித்து விடுகிறது. செடியினுடைய வேரை அழித்தாலன்றோ அது மறுபடியும் வளராமல் இருக்கும்! *பாரமாய பழவினை பற்றறுத்தான்* (கர்மங்களை பகவான் அழித்தான்) என்றால், செடிகளுக்கு வேர் போன்று இந்தக் கர்மங்களுக்கு மூலகாரணமான அஜ்ஞாநம் – அவித்யா என்னும் வேரைத்தானே பகவான் போக்கடிக்க வேண்டும்? இங்கே *ஆழ்வாருடைய அஜ்ஞாநம் தொலைந்ததா?* என்று கேள்வி.

பாரமாய பழவினை பற்றறுத்தான் - பகவான் ஆழ்வாருடைய அஜ்ஞாநத்தைப் போக்கடித்தான் என்றால்தான் தத்கார்யமான – அஜ்ஞாநத்தாலே ஆர்ஜிதமான கர்மங்கள் எல்லாம் தொலைந்தன எனலாம். *அஜ்ஞாநத்தைப் போக்கடிக்க ஆழ்வார் என்ன பண்ணினார்?* என்னும் கேள்வி எழுகிறது. தம்முடைய அஜ்ஞாநத்தைப் போக்கடிக்கத் தாம் ஒன்றும் பண்ணவில்லை என்கிறார் ஆழ்வார். அப்படியென்றால் ஆழ்வாருக்கு அஜ்ஞாநம் எப்படி ஒழிந்தது? இங்குதான் ஆழ்வார் அருளிச்செய்கிறார். அஜ்ஞாநமே, தமோ குணமே ஓர்

வடிவெடுத்தாற் போலே இருந்தவன் ஹிரண்யன் – அவனை ஒழித்த நரசிங்கப் பெருமாளே – அவன்தான் திருவரங்கத்து எம்பெருமான் – தம்முடைய அஜ்ஞாநத்தையும் அழித்து விட்டான் – என்று.

அஜ்ஞாநம் – அவித்யை என்பது எப்படிப்பட்டது? அது பண்ணும் கார்யம் என்ன? என்பதை நமதாசார்யர்கள் ஆஶ்சர்யமாகத் தெரிவிக்கிறார்கள். தன்னோடு ஸம்பந்தித்தாரை பகவத் ப்ரவணனாக ஆகவொட்டாதே விபரீதங்களை அநுஷ்டிப்பிக்குமிறே அஜ்ஞாநம். விபரீத அநுஷ்டானத்துக்கு ஹேதுபூதமாய் இருப்பது அவித்யை. அதனால்தான் பொய்ந்நின்ற ஞானம் என்று சொன்னவுடனே பொல்லா ஒழுக்கு என்கிறார் ஆழ்வார். விபரீதமான அநுஷ்டானம் – துராசாரம் – பொல்லாத ஒழுக்கமாகும். அஜ்ஞாநம் தன்னோடு ஸம்பந்தப்பட்டவர்கள் அனைவரையும் துராசாரம் உடையவர்களாக ஆக்கிவிடும். தன்னோடு ஸம்பந்தித்தாரை துராசாரம் படைத்தவர்களாக ஆக்குகிறதோ இல்லையோ, அவர்களை ஸதாசாரம் இல்லாதவர்களாக ஆக்கிவிடும். இப்படிப்பட்ட அஜ்ஞாநத்தினுடைய திரண்ட பாவம் – தமோ குண அபிபூதமான தத்வம்தான் ஹிரண்யன் என்று காட்டியருளுகிறார் ஆழ்வார்.

அஜ்ஞாநமே, தமோ குணமே ஓர் வடிவெடுத்தாற் போலே இருக்கிற ஹிரண்யனைத் தன் திருக்கையிலுள்ள நகத்தாலே கிழித்தெறிந்தது போலவே தன்னுடைய *ஜ்ஞாநக்கையினாலே தம்முடைய அஜ்ஞாநத்தையும் போக்கியருளினான் நரசிங்கப் பெருமாளாகிற திருவரங்கத்து எம்பெருமான் என்கிறார் ஆழ்வார். *ஞானக்கைதா* என்று (திருவாய்மொழி 2-9-2) பகவானை ப்ரார்த்திக்கிறார் நம்மாழ்வார்.

அமிழ்ந்தினார்க்குக் கை கொடுத்தாற் போலே இருக்கையாலே ஞானலாபம். *ஞானமான கையைத்தா* என்கிறார்

என்று ஈடு வ்யாக்யாநம். எம்பார் முதலியாண்டானைப் பற்றிய ஐதிஹ்யம் ஒன்று இங்கே நினைவு கொள்ளத்தக்கது. முதலியாண்டானுக்கு ஒரு முறை தற்காலிகமாக எங்கேயோ வெளியூர்க்கு எழுந்தருளும்படி நேரிட்டது. அப்போது அவருடைய அந்தரங்க ஶிஷ்யர் ஒருவர் எம்பாரை ஆஶ்ரயித்து அவரிடத்தில் கைங்கர்யம் புரிந்து வந்தார். முதலியாண்டான் வெளியூரிலிருந்து திரும்பி வந்ததும் பழையபடியே முதலியாண்டானை ஆஶ்ரயித்து அவருக்கு அந்தரங்கராகக் கைங்கர்யம் புரிய ஆரம்பித்து விட்டார். அப்போதுதான் அவர்

முதலியாண்டானுடைய ஶிஷ்யர் என்பதை அறிந்த எம்பார், *ஐயோ! முதலியாண்டானுடைய ஶிஷ்யராய் இருந்த ஒருவரை (என்னுடைய ஶிஷ்யராய் நினைத்து) என்னுடைய கிங்கரராகக் கொண்டு விட்டேனே!** என்று மனம் வருந்தி முதலியாண்டானிடம் சென்று தன்னுடைய அபராதத்தைப் பொறுத்தருளும்படி வேண்டி நின்றார். அப்பொழுது முதலியாண்டான் ஸாதித்தாராம் - *எம்பாரே! கவலைப்பட வேண்டாம். ஒருவன் கிணற்றில் விழுந்து விடுவானேயானால், ஒருவர் அவனைக் கைகொடுத்து தூக்குவதைக் காட்டிலும் இருவர் கைகொடுத்துத் தூக்குவது ஸுலபம்தானே. அவரோ ஸம்ஸாரத்தில் விழுந்திருக்கிறார். அவருக்கு நீரும் கை கொடுத்தீர்; அடியேனும் கை கொடுக்கிறேன். இதில் தவறொன்றும் இல்லை* - என்று. *எதைக்கொண்டு இப்படிச் சொல்லுகிறீர்?* என்று எம்பார் முதலியாண்டானைக் கேட்க, முதலியாண்டான், **ஞானக்கைதா* என்று ஆழ்வார் பாசுரம் பாடியிருக்கிறாரே** என்று ஸாதித்தாராம்.

ஜ்ஞாநமாகிய கையை எம்பெருமான் கொடுத்தால் அஜ்ஞாநம் தொலைந்து விடுகிறது. எது ஜ்ஞாநம்? பரமாத்மாவினுடைய விஶேஷ க்ருபைதான் ஜ்ஞாநம். ஆக ஆழ்வாருக்குண்டான அஜ்ஞாநத்தை எம்பெருமான் போக்கடித்தான் என்பதற்கு அஜ்ஞாநமே ஒரு வடிவெடுத்தாற் போலே இருக்கும் ஹிரண்யனை நரசிங்கப் பெருமாள் கொன்றொழித்தது த்ருஷ்டாந்தமாகும். நர சிங்கப் பெருமான் தோன்றினான். உடனே ஹிரண்யன் அழிந்து விட்டான். பெருமாள் ஹிரண்யனுடன் போர் புரியவில்லை. ஜ்ஞாநம் ஏற்படுமேயானால் அஜ்ஞாநம் உடனே அழிந்துவிடும். ஶங்கரர் அத்புதமான த்ருஷ்டாந்தம் ஒன்று காட்டுகிறார். ஒரு பெரிய மலை. அதனுள் ஒரு குகை இருக்கிறது. அது எத்தனையோ ஆண்டுகளாக இருள் சூழ்ந்தே கிடக்கிறது. திடீரென்று அந்த இடத்தில் ஒருவன் சென்று விளக்கை ஏற்றி வைக்க, அத்தனை காலமாக அங்கிருந்த இருட்டு அனைத்தும் ஒழிந்து விட்டது. *நான் பல வருடங்களாக இங்கு இருந்து வருகிறேன். நீ இன்று விளக்கு ஏற்றி வைத்தால் நான் இங்கிருந்து போய்விட மாட்டேன். நீ ஒரு மண்டலமாவது, ஒரு மாஸமாவது, ஒரு வாரமாவது தொடர்ந்து இங்கு விளக்கேற்றி வைத்தால்தான் நான் இந்த இடத்தை விட்டு அகலுவேன்* என்று இருட்டானது விளக்கேற்றி வைத்தவனைப் பார்த்துச் சொல்ல முடியுமா? எத்தனை காலமாக ஓர் இடத்தில் இருள் சூழ்ந்திருந்தாலும் ஒளி அங்கு வந்தவாறே இருள் அகன்று விடும். அதுபோல எத்தனை காலமாக

நாம் அஜ்ஞாநத்தை ஸம்பாதித்து வைத்திருந்தாலும், பகவான் நமக்கு ஞானக்கை அநுக்ரஹிப்பானேயானால், நம்முடைய அஜ்ஞாநம் உடனே அழிந்து விடும். *ஜ்ஞாநாக்நி: ஸர்வகர்மாணி பஸ்மஸாத் குருதே* என்கிறான் பகவான் கீதையிலே.

ஆக, *பரியனாகி வந்த அவுணன் உடல் கீண்ட அமரர்க்கரிய ஆதிப்பிரான்* என்பதனால், *ந்ருஸிம்ஹ மூர்த்தியான திருவரங்கத்து எம்பெருமான் தமக்கு ஜ்ஞாநத்தைக் கொடுத்துத் தம்முடைய கர்மங்களையும் அவற்றுக்கு மூலபூதமான அவித்யையையும் அழித்து விட்டான்* என்று காட்டியருளுகிறார் ஆழ்வார். எந்த இடத்திலேயும் வேதாந்தார்த்தத்தை உள்ளடக்கித்தான் பகவானுடைய சரித்ரம் சொல்லப்பட வேண்டும். மஹர்ஷிகளோ, ஆழ்வார்களோ, ஆசார்யர்களோ இந்த க்ரமத்தில்தான் பகவானுடைய சரித்ரங்களை அநுபவித்திருக்கின்றனர். பகவான் ஹிரண்யனைக் கொன்றான் என்பது *அவித்யா ரூபத்தை அழிப்பது ஜ்ஞாநம்* என்னும் அர்த்தத்தைக் காட்டும். இந்த அர்த்தத்தைத் தெரிவிப்பதாய் ஸ்ரீராமாயணத்திலும் ஒரு சரித்திரத்தைக் காட்டியருளுகிறார்கள் நமதாசார்யர்கள். தாடகையை அழித்தான் எம்பெருமான். தாடகேயர்களில் – தாடகையின் புத்ரர்களில் – ஸுபாஹுவை உடனே கொன்றொழித்தான் பகவான். ஸ்ரீராமாயணத்தில் ஸுபாஹுவைப் பற்றிச் சொல்லப்படும் இடங்கள் மிகவும் குறைவு. ஸுபாஹுவை அழித்த போது மாரீசனை அழிக்கவில்லை. அவனை ஓட்டி விரட்டி விடுகிறான் பகவான். தாடகை என்றால் அவித்யை – பொய்ந்நின்ற ஜ்ஞாநம். தாடகைக்கு இரண்டு புத்ரர்களைப் போலே அவித்யா ஸம்பந்தத்தாலே ஏற்படும் கர்மங்களும் ஸஞ்சித கர்மா (அல்லது பூர்வ கர்மா) என்றும் உத்தர கர்மா என்றும் இரண்டு விதம். பூர்வகர்மங்கள் என்பது பகவத் ஸமாஶ்ரயணத்துக்கு முன் ப்ரஹ்ம வித்யாநிஷ்டனால் - ஶரணாகதனால் – செய்யப்பட்ட கர்மங்களாகும். பகவத் ஸமாஶ்ரயணத்துக்குப் பிறகு ஶரணாகதன் புத்திபூர்வமாகப் பாவங்களைச் செய்ய மாட்டான். இருப்பினும் ஏதோ வாஸநா விஶேஷத்தாலோ, அறியாமையினாலோ, அநவதாநத்தாலோ அவன் சிற்சில பாவங்களைச் செய்ய நேரிட்டால் அவை உத்தர கர்மங்கள் எனப்படும். ஶரணாகதனுடைய பூர்வபாபங்களைப் பகவான் ஸுபாஹுவை அழித்தது போல் அழித்து விடுகிறான். ஶரணாகதனுடைய உத்தரபாபங்களை, *இவை இவனிடத்தில் ஒட்டாமல் விலகி விடட்டும்* என்ற தன் ஸங்கல்பத்தினாலே மாரீசனை ஓட்டி விரட்டியதுபோல்

விரட்டி விடுகிறான். வேதாந்தம் இந்த உண்மையை இரண்டு த்ருஷ்டாந்தங்களைக் கொண்டு விளக்குகிறது.

தத்$_3$ யதா$_2$ புஷ்கர பலாஶ ஆபோ ந ஶ்லிஷ்யந்தே ஏவம் ஏவம்விதி$_3$ பாபம் கர்ம ந ஶ்லிஷ்யதே (சாந் 4-14-3)(தாமரை இலையில் உள்ள நீர் அதில் எப்படி ஒட்டுவது இல்லையோ, அப்படியே ப்ரஹ்மோபாஸகனிடம் பாப கர்மம் ஒட்டாது)என்னும் வாக்யம் உத்தர பாபங்கள் விஷயத்தில் த்ருஷ்டாந்தத்தைத் தெரிவிக்கிறது.

தத்$_3$ யதா$_2$ இஷீகதூலம் அக்$_3$நௌ ப்ரோதம் ப்ரதூ$_3$யேத ஏவம் ஹாஸ்ய ஸர்வே பாப்மாந: ப்ரதூ$_3$யந்தே (சாந் 5-14-3)(துடைப்பத்தில் உள்ள ஈர்க்கு என்னும் பஞ்சு போன்ற பகுதி நெருப்பில் இடப்பட்டால் அழிவதுபோல இந்த உபாஸகனுடைய எல்லாப் பாவங்களும் அழிகின்றன) என்பது ஸஞ்சிதகர்மா விஷயத்தில் த்ருஷ்டாந்தமாகும். இதை ஸ்ரீவேதவ்யாஸர் –

தத$_3$தி$_4$க$_3$ம உத்தர பூர்வாக$_4$யோரஶ்லேஷ - விநாஸௌ தத்$_3$ வ்யபதே$_3$ஶாத்

(4-1-13)(ப்ரஹ்மவித்யையை அடைந்தவுடன் உபாஸகனுக்கு இனி வரப்போகும் பாபங்களினுடைய ஒட்டாமையும், அவனால் முன்னமே செய்யப்பட்ட பாபங்களினுடைய அழிவும் ப்ரஹ்ம வித்யா மாஹாத்ம்யத்தால் விளைகின்றன – வேதவாக்யங்கள் அப்படி ஓதுகின்றமையால்) என்று அருளிச்செய்துள்ளார்.

..... அவனும் (விஶ்வாமித்ரரும்) ராமலக்ஷ்மணர்களைக் கொண்டுபோய்க் கர்மஜ்ஞாநங்களாலே அவித்யையை நிரஸிக்குமாபோலே, அவர்களை இடுவித்துத் தாடகையை நிரஸிப்பித்து – அநந்தரம் புண்யபாபரூபமான உபயவித கர்மங்களையும் போலே தாடகாஜநிதர்களான ஸுபாஹு மாரீசர்களையும் அழித்து, அதுதன்னில் *உத்தரபூர்வாக$_4$யோ: அஶ்லேஷவிநாஸௌ* என்னுமாப்போலே ஒருத்தனைக் கொன்று ஒருத்தனை அகலவடித்து....

(*தருணௌ ஶ்லோக வ்யாக்யாநம்) என்னும் பெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி இங்கே அநுஸந்தேயம். எந்த இடத்திலே பகவானுடைய எந்த சரித்திரம் சொல்லப்பட்டாலும் நாம் அந்த சரித்திரத்தை மட்டும் பார்க்கக்கூடாது. அந்த சரித்ரத்தால் சொல்லப்பட்ட ரஹஸ்யார்த்தம் என்னவென்பதையும் காண வேண்டும். அப்படிப்பட்ட அர்த்தம் ஒன்றைத்தான் ஆழ்வார் *பரியனாகி வந்த

அவுணனுடல் கீண்ட அமரர்க்கரிய ஆதிப்பிரான்* என்னும் தம்முடைய திவ்யஸூக்தியால் தெரிவிக்கிறார் என்கிறார்கள் நமது ஆசார்யர்கள்.

கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ (பெரிய திருமொழி 8-1-1) என்று திருக்கண்ணபுரத்து ஸ்ரீவைஷ்ணவர்களைப் பற்றி அருளிச்செய்திருக்கிறார் திருமங்கையாழ்வார். திருக்கண்ணபுரத்திலே ஸ்வாமிகள் திண்ணையிலே உட்கார்ந்து கொண்டு வார்த்தையாடிக் கொண்டிருப்பார்களாம். அவர்கள் ஸாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தாலே அவர்கள் பேச்சு ஶாஸ்த்ரார்த்த கர்பிதமாய் - ஶாஸ்த்ரார்த்தங்கள் ப்ரகாஶிக்கும் படியாய் அமைந்திருக்குமாம். அதைப்போல பகவானுடைய எந்த சரித்ரத்தை நாம் அநுபவித்தாலும் அந்த சரித்ரம் மட்டும் முக்யமன்று; அதனுடைய உள்ளுறை பொருளான ஶாஸ்த்ர, ஸாம்ப்ரதாயிக விஷயம் என்னவென்பதையும் நாம் காண வேண்டும்.

பரியனாகி வந்த - *பெருத்து வந்த* என்று அர்த்தம். ஹிரண்யன் ஏன் பெருத்திருக்கிறான் என்பதற்கு விஶேஷமாக வ்யாக்யாநத்தை அநுக்ரஹித்திருக்கிறார்கள் நமது ஆசார்யர்கள்.

(1) *ஸர்வலோகத்திலுள்ள தமஸ்ஸெல்லாம் திரண்டு ஒரு வடிவு கொண்டாப் போலே அதிஸ்தூலனாய், மஹாமேரு நடந்தாப் போலே எதிர்த்து வந்த ஹிரண்யன்* என்று தேஶிகனுடைய வ்யாக்யாநம்.

(2) பருத்த தேஹத்தை உடையவனாய் இருந்தான் ஹிரண்யன். *ஊட்டியிட்டு வளர்த்த பன்றி போலே உடம்பை வளர்த்தானித்தனை* என்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. சில ராஜாக்களுக்குப் பன்றி மாம்ஸத்தில் அதிக ஈடுபாடு இருக்குமாம். அதனால் (ராஜாக்களுக்காக) நல்ல ஆஹாரங்களைக் கொடுத்துப் பன்றிகளை புஷ்டியாய் வளர்ப்பார்களாம். அதுபோல நரசிங்கப் பெருமாளுடைய நகத்துக்கு நல்ல ஆஹாரமாக வரவேண்டும் என்று தேவர்கள் எல்லாரும் ஹிரண்யனுக்கு வர புஜபலங்களைக் கொடுத்து அவனை நன்கு வளர்த்து வைத்திருக்கிறார்களாம்.

(3) ஹிரண்யன் பெருத்திருக்கிறான் என்று அருளிச்செய்யும் ஆழ்வார் திருவுள்ளக்கருத்தை அழகியமணவாளப்பெருமாள் நாயனார் மேலும் விவரிக்கிறார். ஹிரண்யன் வைஷ்ணவன் அல்லாதவனானபடியினாலே

நைந்திராதே, மெலிந்திராதே,ஒசிந்திராதே பெருத்திருக்கிறான் என்று வ்யாக்யாநம். ஸ்ரீவைஷ்ணவர்களான அடியார்கள் என்றால் பெருத்திருக்க மாட்டார்கள். அவர்கள் ஏன் இளைத்திருக்க வேண்டும்? இதற்கு மூன்று காரணங்களைக் காட்டுகிறார் வ்யாக்யாதா.

(1) பகவத்குணங்களை அநுஸந்தித்துக் கொண்டிருப்பதினாலே நைந்திருப்பார்களாம் ஸ்ரீவைஷ்ணவர்கள்

*ஸததம் கீர்த்தயந்தோ மாம் யதந்தஸ்ச த்$_3$ருட$_4$வ்ரதா ।
நமஸ்யந்தஶ்ச மாம் ப$_4$க்த்யா நித்யயுக்தா உபாஸதே ॥*

(9-14)(என்னை பக்தியோடு எப்போதும் ஸங்கீர்த்தநம் செய்கிறவர்களாய், உறுதியான ஸங்கல்பத்தை உடையவர்களாய், என் விஷயமான அர்ச்சநம் முதலான செயல்களில் ஈடுபடுகிறவர்களாய், என்னை வணங்குகிறவர்களாய், என்னோடு சேர்ந்திருப்பதையே எப்போதும் விரும்புமவர்களாய் உபாஸிக்கிறார்கள்)

என்கிறான் பகவான் கீதையிலே. *ஸததம்* என்றால் *ஸர்வதா – எப்பொழுதும்* என்றர்த்தம். தேஶிகன் தாத்பர்ய சந்த்ரிகையில், *ஸததம்* என்பதை ஒரே பதமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்தமில்லை; *ஸ+ததம்* என்று கொண்டு வீணை, புல்லாங்குழல், மிருதங்கம் என்னும் இம்மூன்றையும் வைத்துக் கொண்டு எப்போதும் பகவத் பஜனையில் – திருநாம ஸங்கீர்த்தநத்தில் – ஈடுபடுபவர்கள் என்றும் கொள்ளலாம் என்று அருளிச்செய்திருக்கிறார். பகவத்விஷயமே இல்லை என்று சொல்பவனான ஹிரண்யன் எங்கிருந்து பகவத் குணாநுஸந்தாநம் பண்ணப் போகிறான்?

(2) பகவச்சே$_2$ஷத்வத்தை அறிந்து மெலிந்திருப்பார்களாம் ஸ்ரீவைஷ்ணவர்கள். பகவத்விஷயத்தையே ஒத்துக்கொள்ளாத ஹிரண்யன் எங்கிருந்து பகவச்சே$_2$ஷத்வத்தை ஒத்துக் கொள்ளப் போகிறான்?

*பரமேஶ்வர ஸம்ஜ்ஞோSஜ்ஞ கிமந்யோ மய்யவஸ்தி$_2$தே ।
ததா$_2$பி மர்த்துகாமஸ் த்வம் ப்ரப்$_3$ரவீஷி புந: புந:॥

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 17-23)(மூடனே! நான் இருக்கையில் பரமேஶ்வரன் என்னும் பெயருள்ள வேறு ஒருவன் இருக்கிறானா? அப்படியும் சாக விருப்பம்

கொண்டு நீ மறுபடியும் மறுபடியும் அவனைச் சொல்லுகிறாயே) என்று சொல்லி பகவத்விஷயத்தை ஒத்துக்கொள்ளாமல் தன்னையே ஈஶ்வரனாக அபிமாநித்திருப்பவன்தானே ஹிரண்யன்!

(3) ஸர்வேஶ்வரனை ஆசைப்பட்டுத் தளர்ந்த உடம்பாய் ஒசிந்திருப்பார்களாம் ஸ்ரீவைஷ்ணவர்கள். இவர்கள் ஏன் பகவானை அடைய ஆசைப்பட வேண்டும்? இவர்கள் தேஹமே ஆத்மா என்று இருப்பவர்கள் அல்லர். தேஹ அதிரிக்தமான வஸ்து ஆத்மா என்றும், இந்த ஆத்மா பகவச்சே$_2$ஷத்வத்தையே ஸ்வரூபமாகக் கொண்டு உள்ளது என்றும் அறிந்திருப்பவர்களாய், பகவச்சே$_2$ஷத்வமாகிற ஆத்மாவுக்கு உண்டான இத்தன்மை (ஸ்வரூபம்) ஸித்திக்க வேண்டும் என்பதற்காக *பரமாத்மாவைப் பெற வேண்டும், அடைய வேண்டும்* என்று அவனைப் பற்றியே *நினைந்து நைந்து உள்கரைந்து உருகி* உடம்பை இளைக்கப் பண்ணுபவர்களே ஸ்ரீவைஷ்ணவர்கள் என்கிறார் நாயனார். ஆழ்வார்கள் திவ்யதேஶங்களில் இளைத்த மெலிந்த திருமேனியுடனே ஸேவை ஸாதிக்கிறார்கள். *ஆராவமுதே! அடியேனுடலம் நின்பாலன்பாயே நீராயலைந்து கரைய உருக்குகின்ற நெடுமாலே* (திருவாய்மொழி 5-8-1) என்றும், *மானேய்நோக்கு நல்லீர்! வைகலும் வினையேன் மெலிய* (திருவாய்மொழி 5-9-1) என்றும் நம்மாழ்வார் நிலையை நாம் காணலாம்.

ஆக, பகவத் குணாநுபவம் யாரிடத்தில் இல்லையோ, ஶேஷியான பகவானுடைய அநுபவத்தை யார் ஆசைப்படவில்லையோ, இக்குணங்கள் இல்லாததனால் பெருத்த உடம்பை உடையவர்களாய் யார் இருக்கிறார்களோ அவர்கள் எல்லாருமே ஹிரண்யனுக்கு தாயாதிகள்தான் என்கிறார் அழகியமணவாளப்பெருமாள் நாயனார்.

(4) *பரியனாகி* - மிகப்பெருத்த உடம்பனாம் ஹிரண்யன். பெருத்த உடம்பு என்பதற்கு த்ருஷ்டாந்தமாக கும்பகர்ணனையும் சொல்ல முடியாது என்கிறார்கள் நம் பெரியோர்கள். போர்க்களத்திலே கும்பகர்ணன் வந்து நிற்கிறான். தன் பெருத்த உடம்பு மட்டும் போதாது என்று கையில் சூலத்தை வேறு வைத்துக் கொண்டு இருக்கிறான். அவனைப் பார்த்தான் குரங்குகளுக்கு அரசனான ஸுக்ரீவன்; அவனைப் பார்த்தவளவில் பயந்து நடுநடுங்கி ராமனிடம்கூட சொல்லிக் கொள்ளாமல் அப்பொழுதே கிஷ்கிந்தைக்கு ஓடிப் போய் விட்டான். அவ்வளவு

பெரிய உடம்பை வைத்துக் கொண்டிருக்கிற இவன் ஒன்றுமே செய்ய வேண்டாம்; வந்து நின்றாலே போதும் பார்ப்பவர்கள் பயந்து நடுங்க. கும்பகர்ணன் கூட த்ருஷ்டாந்தம் ஆக முடியாத பெருத்த உடம்பனாம் ஹிரண்யன். *நரஸிம்ஹத்துக்கும் பிற்காலிக்க வேண்டும்படி இருப்பதான உடம்பு* என்று வர்ணிக்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. ஹிரண்யன் எதிரே வந்து நின்றால் நரசிங்கமும் ஓர் அடி முன்னே வைக்க முடியாது. நரசிங்கப் பெருமாளும்கூட ஓரடி பின்னே வைக்கும் படியான கோரமான பெருத்த உடம்பைக் கொண்டிருப்பவன் ஹிரண்யன் என்றபடி. மேலே, **திருவாழியாழ்வானுக்கும் பிற்காலிக்க வேண்டும் படியிறே *ஊன் மல்கிமோடு பருத்திருக் கிறபடி** என்றும் அருளிச்செய்திருக்கிறார் நாயனார்.

பரியனாகி வந்த அவுணன் என்பதில் *வந்த* என்னும் ஶப்தப்ரயோகத்தை ஆழ்வார் செய்திருப்பதற்கு அபிப்ராயமாவது யாது? என்று கேள்வி. இப்போதுதான் ஹிரண்யன் பகவானுக்கு ப்ரதிகூலனாய் நேரே வந்துவிட்டான் போலே தோற்றுகிறதாம் ஆழ்வாருக்கு. பகவத் தத்வத்துக்கு அநுகூல பாவத்தோடு வரவில்லை ஹிரண்யன். ப்ரதிகூலனாய் வந்தான் என்பதற்கு *தெய்வம் இல்லை* என்று சொல்லி மட்டும் வந்தான் என்பது அர்த்தமன்று. *தெய்வம் உண்டு* என்று சொல்பவனையும் அழிக்கிறவனாய் வந்தான் என்று அர்த்தம். *அநுகூலனாய் வருகையின்றிக்கே பகவத் தத்வமில்லை யென்றும், உண்டென்கின்றவனைநலிகைக்கென்றும் வந்த க்ரௌர்யத்தை நினைத்து பயப்படுகிறார்* என்று நாயனார் அருளிச்செய்துள்ளார். *ஹிரண்யன் பகவானுக்கு ப்ரதிகூலனாய் வந்துவிட்டானே! பகவானுக்கு ஆபத்து வந்து விட்டதே!* என்று வயிறு பிடிக்கிறாராம் ஆழ்வார். *வயிறு பிடிக்கிறார்* என்று அடிக்கடி வ்யாக்யாநங்களில் ஆழ்வார்களைப் பற்றி அருளிச் செய்கிறார்கள் நமதாசார்யர்கள். அர்த்தமென்ன? *வயிறு பிடிப்பது* என்பது எம்பெருமான் விஷயத்தில் உண்டான ப்ரேம பாரவஶ்யத்தாலே ஆழ்வாருக்கு ஏற்பட்ட அஸ்தாநே பய ஶங்கையைக் குறிப்பதாகும்.

நோவ ஆய்ச்சி உரலோடார்க்க இரங்கிற்றும் (திருவாய்மொழி 6-4-4) என்று ஆழ்வார் பாசுரம். என்றைக்கோ கண்ணனுடைய திருமேனியைத் தாம்பால் கட்டினாள் யசோதைப் பிராட்டி. அது இன்றைக்கு ஆழ்வார் திருமுன்னே நடப்பது போல் இருந்ததாம் ஆழ்வாருக்கு. அது மட்டுமன்று; எம்பெருமானைக் கட்டி

வைக்கிறாள் யசோதைப் பிராட்டி. அதனால் நோவு யாருக்கு? யசோதைப் பிராட்டி தன்னையே கட்டி வைக்கிறாப்போலே நோவுகிறதாம் ஆழ்வாருக்கு. பகவானுக்கு ஏற்பட்ட ஶ்ரமங்களைத் தமக்கு ஏற்பட்டதாகக் கொள்ளுதல் ஆழ்வார்களுடைய தன்மையாகும். என்றைக்கோ நடந்த ஸ்ரீராமசரித்ரத்தை ஒருவர் உபந்யாஸம் பண்ண, அதை அப்பொழுதுதான் நடக்கிறாப்போலே அநுபவித்தார் குலசேகரப் பெருமாள். எல்லா ஆழ்வார்களுக்குமே இந்த நிலைதான்.

அவுணன் - திருமங்கையாழ்வார் *ஏழை ஏதலன் கீழ்மகன் என்னாது இரங்கி* (பெரிய திருமொழி 5-8-1) என்று அருளிச் செய்திருக்கிறார். குஹப்பெருமாள் ஏழையாகவும் ஏதலனாகவும் இருப்பதற்குக் காரணம் கீழ்மகனாக இருப்பதனால் என்று அர்த்தம். ஏழை என்று ஜ்ஞாநக்குறைவைச் சொல்லுகிறார். ஏதலன் என்று ஆசார, அநுஷ்டானக் குறைவைச் சொல்லுகிறார். இதற்குக் காரணமாக *கீழ்மகன்* என்று தாழ்ந்த ஜாதியில் பிறந்ததைச் சொல்லுகிறார்.

*ராவணோ நாம து$_3$ர்வ்ருத்த: ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர:।
தஸ்யாஹமநுஜோ ப்$_4$ராதா விபீ$_4$ஷண இதி ஶ்ருத:॥*

என்று விபீஷணாழ்வான் வார்த்தை. *ராவண நாம* என்றால் ராவணன் என்னும் நாமத்துடன் கூடியவன் என்று அர்த்தம். *ராவணோ நாம* என்றால் அர்த்தமே வேறு. *ராவணோ நாம* என்றால் *ராவணன் என்று ஸுப்ரஸித்தன்* என்று அர்த்தம். அதாவது *உலகத்தை அழிக்கிறவன், அனைவரையும் அழச்செய்கிறவன், கொடுமை புரிகிறவன்* என்னும் அர்த்தத்திலே இங்கே *ராவணோ நாம* என்கிறார் ஸ்ரீவிபீஷணாழ்வான். *துர்வ்ருத்த:* - துராத்மாவாய் இருப்பவன். இதற்குக் காரணம் என்ன? *ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர:* அவன் ராக்ஷஸனாய், ராக்ஷஸேஶ்வரனாய் இருப்பவன். அவன் ஜாதி ராக்ஷஸ ஜாதியல்லவா? அவன் தான் மட்டும் ராக்ஷஸனாய் இருக்கவில்லை. மற்றவர்களையும் தன்னைப் போல் ஆக்குபவனாக (ராக்ஷஸர்களுக்கு ஈஶ்வரனாக, தலைவனாக) இருப்பவன். அதைப்போல் இங்கும் ஆழ்வார் ஹிரண்யனைப் பற்றிச் சொல்லும்போது அவுணன் – அஸுர யோநியில் பிறந்தவன் என்று குறிப்பிடுகிறார்.

உடல் கீண்ட - ஹிரண்யன் உடலைக் கிழித்தெறிந்தானாம் எம்பெருமான். பன்றியை புஜிப்பவர்கள் அதை அக்நியில் நன்றாகப் பொசுக்கி விட்டுத்தான்

புஜிப்பார்களாம். இதைப்போன்று நரசிங்கப் பெருமான் அக்நி பிழம்பாக ஆவிர்ப்பவிக்க, *பொன்பெயரோன் வாய்தகர்த்து மார்விடந்தான்* (பெரிய திருவந்தாதி 35) என்னும்படியே தங்கத்தைப் போன்ற ஹிரண்யனுடைய ஶரீரம் (ஹிரண்யம் = தங்கம்) அந்த அக்நியில் அப்படியே நல்ல பதமாக உருகிப்போய் எம்பெருமான் கிழிப்பதற்கேற்றபடி நல்ல பதமாய் இருந்ததாம்.

இதைப்போல்தான் க்ருஷ்ணாவதார சரித்ரம் ஒன்றும் பார்க்கப்படுகிறது. பெரியாழ்வார் பாசுரம் - *புள்ளிதுவென்று பொதுக்கோ வாய்கீண்ட* (2-5-4). *புள்ளிது* என்றானாம் பகவான் பகாஸுரனைப் பார்த்து. புள்ளிது = அற்பப் பக்ஷிதானே இது என்று ஒரு அர்த்தம். *புள்ளிது* - *உண்மையான புள் அன்று; மாயப்புள் இது* என்று மற்றொரு அர்த்தம். பகாஸுரன் கண்ணனை விழுங்க வேண்டும் என்று வாயிலே கொண்டு விட்டான். ஆனால் பகவானை அவனால் விழுங்க முடியவில்லை. அவன் வாய்க்குள்ளே அக்நிபிழம்பாய் இருந்தானாம் கண்ணன். அக்நிக்கும் அக்நியாக இருக்கும் பகவான் அவனுடைய வாய்க்குள்ளே அக்நி ரூபமாக நுழைந்து, அதைப் பதப்படுத்தி, பிறகு கிழித்தெறிந்தான் என்று ஸ்ரீமத் பாகவதத்திலே வர்ணிக்கப்பட்டுள்ளது. நரசிங்கப் பெருமான் ஹிரண்யனுடைய மார்பை இதைப்போன்று அக்நியால் பதப்படுத்திப் பிறகு கிழித்தெறிந்தான் என்று சரித்திரம்.

அவுணன் உடல் கீண்ட - *அவுணனைக் கீண்ட* என்று சொன்னாலே போதும். இங்கே ஆழ்வார் ஏன் நடுவே *உடல்* என்ற ஒரு ஶப்தத்தை அருளிச்செய்தார்? என்னும் கேள்வி எழுகிறது. ஆழ்வார்களுடைய திவ்யப்ரபந்தங்களில் இது போன்று பல இடங்களில் நாம் காணலாம். த்ருஷ்டாந்தத்திற்காக ஒரு சில இடங்களைக் காட்டுகிறேன். *இலங்கை பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு* (திருப்பல்லாண்டு 3) என்று அருளிச்செய்துள்ளார் பெரியாழ்வார். *இலங்கை பாழாக* என்றும் ஆழ்வார் அருளிச் செய்திருக்கலாம். ஆனால் அவர் அப்படி அருளிச்செய்யவில்லை. அர்த்தமென்ன? பெருமாள் லங்கா ராஜ்யத்தை ஒன்றும் பண்ணவில்லை. லங்கா ராஜ்யத்தில் இருக்கும் ராக்ஷஸர்களை மட்டும் அழித்தான் என்னும் அர்த்தத்தைக் காட்டுவதற்காகவே ஆழ்வார் இப்படி அருளிச்செய்துள்ளார் என்று வ்யாக்யாநம். *உத்தமன் பேர்பாடி* (திருப்பாவை 3) என்று அருளிச் செய்திருக்கிறாள் ஆண்டாள். உத்தமனைப் பாடுவது என்றாலும் அதே அர்த்தம்தான். *உத்தமனைப் பாடி*

என்றே ஆண்டாள் அருளிச் செய்திருக்கலாம். ஆனால் அப்படி அருளிச் செய்யாமல், *உத்தமன் பேர்பாடி* என்று அருளிச்செய்திருப்பதற்கு அபிப்ராயம் என்னவென்பதை அத்யாஶ்சர்யமாகக் காட்டியிருக்கிறார்கள் நமதாசார்யர்கள். உத்தமனைக் காட்டிலும் உத்தமனுடைய பெயருக்கு ஏற்றம் இருக்கிறபடியாலே என்கிறார்கள் நமதாசார்யர்கள். உத்தமன் பண்ணிய கார்யம் என்ன? கோபிகா வஸ்த்ராபஹரணம். உத்தமனுடைய பெயர் (கோவிந்த நாமம்) செய்தது த்ரௌபதிக்கு ஆபத்திலே புடவை சுரந்தது. நாமியான, பொருளான, வாச்யனான பரமாத்மாவை விட அவனைச் சொல்லும் அவன் திருநாமத்திற்கு அவ்வளவு ஏற்றம் என்கிறார்கள் பெரியோர்கள்.

மையிட்டெழுதோம் மலரிட்டு நாம்முடியோம் (திருப்பாவை 2) என்ற இடத்தில் *மலரிட்டு முடியோம்* என்று சொல்லியிருந்தாலே *மலரிட்டுநாம் முடியோம்* என்கிற அர்த்தம் கிடைக்கும். நடுவே *நாம்* என்று ஏன் ஸ்பஷ்டமாக அருளிச்செய்திருக்கிறாள் ஆண்டாள்? *நாமாக அலங்காரம் பண்ணிக் கொள்வதில்லை; ஆனால் அவனாக வந்து அலங்காரம் பண்ணினால் அதைத் தடுப்பதில்லை* என்று கோபியர்களுக்கு அபிப்ராயமாகப் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம். வ்ரதாநுஷ்டான காலமாக இருந்தாலும், மார்கழி நோன்பு நோற்கிற காலமாக இருந்தாலும், சில ஸமயங்களில் அவன் வந்து அலங்காரம் செய்தருளினால் அதை இல்லை செய்யோம் என்று கோபிமார்களுடைய திருவுள்ளம் இருந்தபடி அதைக்காட்ட நடுவில் *நாம்* என்கிற பதத்தைச் சேர்த்துச் சொல்கிறாள் ஆண்டாள் என்றதாயிற்று.

இதைப்போலவே இங்கும் *பகவான் அவுணன் உடலைத்தான் அழித்தானே தவிர அவன் ஆத்மாவை அழிக்கவில்லை* என்று ஆழ்வாருக்குத் திருவுள்ளமாகத் தெரிகிறது. *தன்னதான ஆத்ம வஸ்துவுக்கு அழிவு வராமல் *கிள்ளிக் களைந்தான் என்னுமாப்போலே, அஹங்கார ஹேதுவான தேஹத்தைக் கிழித்துப் பொகட்டான்* என்று நாயனாருடைய வ்யாக்யாநம். ஜீவாத்மாக்கள் அனைவருமே பகவானுக்குத் திருமார்பு கௌஸ்துப ஸ்தாநீயர்கள்தான். *அமரர்க்கரிய* - தேவர்களுக்கு எம்பெருமான் அருமைப்பட்டவன். அவர்கள் தன்னைக் காண்பதற்கும் அறிவதற்கும் பகவான் எளியவன் அல்லன். தன்னுடைய அடியவனான ப்ரஹ்லாதாழ்வானிடத்திலே அபசாரப்பட்டான் என்பதற்காக ஹிரண்யனைக் கிழித்துப் பொகட்டான் எம்பெருமான். *பரியனாகி

வந்த அவுணனுடல் கீண்ட அமரர்க்கரிய ஆதிப்பிரான்* என்பதாலே அமரர்க்கரிய எம்பெருமான் தன் அடியவனான ப்ரஹ்லாதாழ்வானுக்கு எளியவன் ஆனான் என்னும் அர்த்தம் காட்டப்பட்டது என்பதை நாம் அறிய வேண்டும். பகவான் அமரர்களுக்கு அருமைப் பட்டவனாய் இருக்கும் காலத்திலேயே ப்ரஹ்லாதாழ்வானுக்கு எளியவனாக இருக்கிறான் என்று பகவானுடைய இரண்டு தன்மைகளையும் சேர்த்து அநுபவிக்கிறார் ஆழ்வார். இதே அர்த்தத்தை ப்ரஹ்லாதாழ்வான் திருவாக்காலே காட்டும் ஸ்ரீமத்பாகவத ஶ்லோகம் ஒன்றை உதாஹரிக்கிறார்கள் நமதாசார்யர்கள்.

*க்வாஹம் ரஜ:ப்ரக்ருதிரீஶ தமோSதி$_4$கேSஸ்மிந்
ஜாதஸ்ஸுரேதரகுலே க்வ தவாநுகம்பா ।
ந ப்ரஹ்மணோ ந ச ப$_4$வஸ்ய ந வை ரமாயா யோமேர்பித:
ஶிரஸி பத்$_3$மகர ப்$_4$ ரஸாத:॥*

(ஸ்ரீமத்பாகவதம் 7-9-26) எம்பெருமான் என்ன பண்ணினான்? ஹிரண்யனை அழித்ததால் அவனது ரத்தத்தாலே நிரம்பிய தன் திருக்கையை ப்ரஹ்லாதாழ்வான் தலையில் வைத்தான். ப்ரஹ்மாதிகளுக்குக் கூடக் கிடைக்காத இந்த பாக்யம் தமோ குணம் மிகுந்த அஸுர குலத்தில் பிறந்த தனக்குக் கிடைத்ததே! என்று பகவானிடத்திலே சொல்லி அவனது கருணையைப் போற்றி மகிழ்கிறான் ப்ரஹ்லாதாழ்வான்.

ஸ்வஸாமர்த்யம் கொண்டு கிட்ட நினைப்பார்க்கு தயை பண்ணுமளவிலும் கிட்டவரிதாயிருக்கும்; அநந்யப்ரயோஜநர்க்குச் சீற்றத்திலும் கிட்டலாயிருக்கும் என்று இந்த ஸ்ரீஸூக்தியினால் ஸாரமாகத் தெரிவிக்கப்படும் அர்த்தத்தை ஸங்க்ரஹிக்கிறார் நாயனார். பகவானுடைய எளியவனாய் இருக்கும் தன்மை, அவன் சீற்றத்துடன் இருந்தாலும் ப்ரஹ்லாதாழ்வானுக்குக் கிட்டும்படியாய் இருக்கிறது. எத்தனை பக்கத்தில் இருந்தாலும் ப்ரஹ்மாதிகளுக்கு பகவாந் கிட்ட அரியவனாய் இருப்பவனாவான்.

ஆனால் ப்ரஹ்லாதாழ்வானுக்கு பகவான் கிட்ட எளியவனாய் இருப்பவன் என்னும் அர்த்தம் (பாகவத ஶ்லோகத்திலே காட்டப்பட்ட) ப்ரஹ்லாதாழ்வான் திருவாக்கிலே ஸ்பஷ்டமாகக் காட்டப்பட்டு இருந்தாலும், இங்கே ஆழ்வார்

பாசுரத்திலே அது வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கவில்லை என்பதால் இதே அர்த்தத்தை ஆழ்வார் தம் விஷயத்திலே காட்டுகிறார் என்று கொள்வதும் பொருத்தமே. அதாவது, ப்ரஹ்லாதாழ்வானிடத்தில் அபசாரப்பட்ட, ப்ரஹ்லாதாழ்வானுக்கு விரோதியான ஹிரண்யனை பகவான் கிழித்துப் பொகட்டாப் போலே, ஆழ்வாருக்கு விரோதியான அஜ்ஞாநத்தையும் பகவான் அழித்து, ப்ரஹ்லாதாழ்வானுக்கு எளியவனாய் அவனை பகவான் அநுக்ரஹித்தாப் போலே ஆழ்வாருக்கும் பகவான் எளியவனாய் அருள்புரிந்தான் என்று ஆழ்வார் பரமாகவும் அர்த்தம் கொள்ளலாம். ஆக ப்ரஹ்லாதாழ்வானைப் போலவே தம்மையும் பகவான் விஷயீகரித்து அருள் புரிந்தமையை ஆழ்வார் அநுஸந்தித்தாராயிற்று. ஆக ப்ரஹ்லாதாழ்வானுக்கு எளியவன், தேவர்களுக்கு அரியவன்* என்று ஒரு அர்த்தம். *திருப்பாணாழ்வாருக்கு எளியவன், தேவர்களுக்கு அருமைப்பட்டவன்*என்று மற்றொரு அர்த்தம். இந்த இரண்டு அர்த்தங்களுமே ஆழ்வாரால் இப்பாசுரத்தில் ஆஶ்சர்யமாகத் தெரிவிக்கப் பட்டிருக்கின்றன என்பதை நாம் அறியலாம்.

ஆதிப்பிரான் - இப்படி எம்பெருமான் ப்ரஹ்லாதாழ்வானுக்கும் ஆழ்வாருக்கும் எளியவனாய் இருந்ததுக்கும், விரோதி நிரஸந பூர்வகமாக அவர்களுக்கு அருள் புரிந்ததுக்கும் காரணம் என்னவென்பதை *ஆதிப்பிரான்* என்பதாலே ஆஶ்சர்யமாகத் தெரிவிக்கிறார் ஆழ்வார். *ஆதி* = காரணபூதன். பகவான் திருப்பாணாழ்வாரோடு தேவர்களோடு வாசியற அனைவருக்கும் காரணனாவான். அப்படியிருக்க பகவான் ஆழ்வாருக்கு மட்டும் அருள்புரிய் காரணம் என்ன? இங்கே ஒரு த்ருஷ்டாந்தம் காட்டுகிறார் நாயனார்.

தகப்பனான ஒருவன் தனக்குப் பல புத்ரர்கள் இருக்கச் செய்தேயும், அவர்களில் படுகரணர்களாக இருப்பவர்களைவிட (இந்த்ரிய ஸாமர்த்யம் படைத்தவர்களாய் இருப்பவர்களைவிட) விகலகரணனாய் (இந்த்ரிய ஸாமர்த்யம் குறைந்தவனாய்) இருக்கும் புத்ரன் இடத்திலேயே அதிக வாத்ஸல்யாதிகளைச் செய்து போருவன். அதுபோலவே இங்கு படுகரணர்களாய் இருப்பவர்கள் தேவர்கள். ஆழ்வார் தம்மை விகலகரணராக (அஜ்ஞாநம், அஶக்திகளைக் கொண்டிருப்பவராக)ச் சொல்லிக் கொள்கிறார் என்று வ்யாக்யாநம். இத்தால் ப்ரஹ்மாதிகளுக்கு அரியனான நிலையையும், ப்ரஹ்லாதாழ்வானுக்கு

எளியனான நிலையையும், பகவான் தமக்கு உபகாரகனாய் இருக்கும் தன்மையையும் ஆழ்வார் காட்டியருளுகிறார் என்று தேறுகிறது.

ஆதி என்பதற்கு *ஜகத்காரணபூதன்* என்று அர்த்தம் சொன்னதுக்கும் மேலே வேறொரு அர்த்தத்தையும் ஆழ்வார் இங்கே திருவுள்ளம் பற்றுகிறார் என்கிறார்கள் நமதாசார்யர்கள். *ஆதி – தான் முற்கோலி உபகரிக்குமவன்* என்று வ்யாக்யாநம். அதாவது, ஆழ்வார் தமக்கு ஆத்ம நன்மையைத் தாம் விரும்புவதற்கு முன்பே, பகவான் ஆழ்வாருக்கு ஆத்மக்ஷேமத்தைத் திருவுள்ளம் பற்றி அருளியிருக்கிறான் என்று ஆழ்வார் சொல்லுவதாக அபிப்ராயம். ஆக ஜகத்தை உண்டாக்கின காரணன் என்று மட்டும் அர்த்தமன்று. ஜகத்தை பகவான் உண்டாக்கியதும் ஸம்ஸாரி ஜீவாத்மாக்களினுடைய ஆத்ம க்ஷேமத்தைத் திருவுள்ளம் பற்றித்தானே! ஆக ஸம்ஸாரி ஜீவாத்மாக்களினுடைய ஆத்மக்ஷேமத்துக்கும் பகவான் முதல் காரணமாய் இருக்கிறான் என்றபடி.

பிரான் - காரணத்வத்தைக் காட்டின உபகாரகன். இது ஆழ்வார், பகவான் ப்ரஹ்லாதாழ்வானுக்குச் செய்தருளிய உபகாரத்தைத் திருவுள்ளம் பற்றிச் சொல்லும் வார்த்தையாகும். பரமபாகவதோத்தமனான ப்ரஹ்லாதாழ்வானுக்கு விரோதியாய் வந்து நின்ற ஹிரண்யனை அழித்ததும் பகவான் செய்தருளிய ஒரு உபகாரம். ஆனால், ப்ரஹ்லாதாழ்வான் *ஸர்வ காரணன்* என்று தன்னைப் பற்றிச் சொன்ன வாக்கை பகவான் ஸத்யமாக்கித் தன்னுடைய காரணத்வத்தையும், ஈஶ்வரத்வத்தையும் நிலைநிறுத்தியது அதைவிட முக்யமான உபகாரமாகும்.

பகவானைக் காரணன் என்று சொல்லுமிடமெல்லாம் அவன் ஸர்வாந்தராத்மா என்றும் சொல்ல வேண்டும். அவனுடைய ஸர்வாந்தராத்மத்வத்தைச் சொல்லாமற் போனால் அவனுடைய காரணத்வத்தை நிர்வஹிக்க முடியாது. *வேர் முதலாய் வித்தாய்* என்று ஜகத்துக்கு பகவான் த்ரிவித காரணமும் ஆவான் என்கிற உண்மையை ஆழ்வார் திருவாய்மொழி இரண்டாம் பத்திலே அருளிச் செய்திருக்கிறார். மண்ணால் செய்யப்பட்ட குடத்துக்கு மண் (உபாதாந) காரணம். பொன்னால் செய்யப்பட்ட நகைக்கு பொன் (உபாதாந) காரணம். மண் குடமாக விகாரத்தை அடைந்து தானே குடத்துக்கு (உபாதாந) காரணமாகிறது? மண் ஸவிகாரம். பொன் நகையாக விகாரத்தை அடைந்து தானே நகைக்கு (உபாதாந) காரணமாகிறது? பொன் ஸவிகாரம். அதைப்போல ஜகத்துக்கு பகவான் த்ரிவித காரணமும் ஆவான் என்று

சொல்லுகிறபொழுது, பகவானை ஸவிகாரன் (உபாதாந காரண ப்ரயுக்தமாக பகவானும் விகாரத்தை அடைகிறான்) என்று சொல்ல முடியுமா? என்றால் சொல்ல முடியாது. வேதாந்தம் பகவானை நிர்விகாரன் என்றே சொல்லுகிறது. பகவான் ஜகத்துக்கு உபாதாந காரணமும் ஆகிறான். ஆனால் ஜகத்துக்கு உபாதாந காரணமாகும்போது அவன் விகாரத்தை அடைவதில்லை என்று சொல்லுவது எப்படிப் பொருந்தும்? பகவானுக்குண்டான இத்தன்மையை எப்படி நிர்வஹிப்பது என்ற கேள்வி எழுகிறது.

மண், பொன் போன்று பகவான் ஸாக்ஷாத்தாக உபாதாந காரணமாகிறதில்லை. சேதந அசேதந விஶிஷ்ட வஸ்து உபாதாந காரணம் என்கிறார்கள் நம் பெரியோர்கள். சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களையும் தனக்கு ஶரீரமாகக் கொண்டு அவைகளுக்குத் தான் ஆத்மாவாய் இருக்கிறான் பகவான். இதுதான் பகவானுக்குண்டான ஸர்வாந்தராத்மத்வம். *ஶரீரத்துக்கு விகாரத்வம் உண்டு; ஆனால் ஆத்ம ஸ்வரூபத்துக்கு விகாரத்வம் இல்லை* என்பது போன்று பகவானுக்கு ஶரீரமான ஜகத்துக்கு விகாரத்வம் உண்டு. ஜகத்துக்கு ஆத்மாவான பகவான் நிர்விகாரனாகவே இருக்கிறான் என்று நிர்வஹிக்கிறார்கள் நமதாசார்யர்கள். திருவாய்மொழியிலே இரண்டாம் பத்திலே பகவானுடைய காரணத்வத்தை அருளிச்செய்த நம்மாழ்வார், மூன்றாம் பத்திலே காரணத்வ ஶங்கித தோஷ வ்யாவ்ருத்யர்த்தமாக பகவானுடைய ஸர்வவ்யாபகத்வத்தை நிரூபிக்கிறார்.

யாவையும்யவரும்தானாய் அவரவர்சமயந்தோறும்
தோய்விலன்புலனைந்துக்கும் சொலப்படான்உணர்வின்மூர்த்தி*
ஆவிசேருயிரினுள்ளான் ஆதுமோர்பற்றிலாத*
பாவனையதனைக்கூடில் அவனையும் கூடலாமே*

(திருவாய்மொழி 3-4-10)

என்பது ஆஶ்சர்யமான பாசுரம். ஆதலால் பகவானை *ஸர்வகாரணன்* என்று மட்டும் ப்ரஹ்லாதாழ்வான் வர்ணித்தால் போதாது. ஸர்வ வ்யாபகன்* என்றும் பகவானைப் பற்றிச் சொல்ல வேண்டும். *எங்குமுளன் கண்ணன்* என்று அதைத்தான் அருளிச்செய்தான் ப்ரஹ்லாதாழ்வான். *நீ சொல்லுகிற ஸர்வகாரணன் இங்கிருக்கிறானா?* என்று ஒரு தூணைத் தட்டினான் ஹிரண்யன். அங்கு அவன் வீயும்படி அப்பொழுதே தோன்றினான் எம்பெருமான்.

அளந்திட்டதூணை அவன்தட்ட* ஆங்கே
வளர்ந்திட்டு வாளுகிர்ச்சிங்கவுருவாய்*
உளந்தொட்டிரணியன் ஒண்மார்வகலம்*
பிளந்திட்டகைகளாற் சப்பாணி.....*

(பெரியாழ்வார் திருமொழி 1-6-9)

என்று பெரியாழ்வார் பாசுரம். ஆயிரக்கால் மண்டபத்திலே இருக்கிற ஒரு தூணைத் தட்டுகிறான் ஹிரண்யன். அந்தத் தூணில் அவன் தட்டிய இடத்திலிருந்தே ஆவிர்பவிக்கிறான் எம்பெருமான். ஆக இது ஹிரண்யனே அளந்திட்ட தூணாகும். ஏதோ ஒரு இடத்திலிருந்து பகவான் ஆவிர்பவித்திருந்தால், அந்த இடத்தில் யாராவது ஏற்கனவே நரஸிம்ஹத்தை வைத்துக் கட்டி இருப்பார்களோ என்ற ஸந்தேஹம் எழலாம். ஆனால் ஹிரண்யன் அளந்திட்ட தூணில் அவன் தட்டிய இடத்திலிருந்தே பகவான் ஆவிர்பவித்தான். ஹிரண்யன் தட்டாமல் வேறு யாராவது தூணைத் தட்டியிருந்தால், மாயா வைபவத்தாலே தட்டுகிறபோதே உள்ளுக்குள்ளே நரசிங்கத்தைப் புகுத்தி வைத்திருப்பார்களோ என்று ஸந்தேஹம் வரலாம். ஆனால் அப்படியன்று. நரசிங்கப் பெருமான் ஆவிர்பவித்தது ஹிரண்யனே அளந்திட்ட தூணாகும். ஆக, ஹிரண்யன் தான் அளந்திட்ட தூணைத் தானே தட்டினான். இதைக் காட்டத்தான் பெரியாழ்வார் *அளந்திட்ட தூணை அவன்தட்ட* என்று *அவன்* என்கிற ஶப்தத்தை *அளந்திட்டதூணை* என்பதற்கும் *தட்ட* என்பதற்கும் பொதுவாக இருக்கும்படி நடுவில் வைத்தார்.

ஆயிரக்கால் மண்டபத்திலே எம்பெருமான் ஆவிர்பவித்த தூணைத் தவிர்ந்த மற்ற தூண்களெல்லாம் இன்னும் ந்ருஸிம்ஹ கர்பமாகவே இருக்கின்றன என்கிறார் தேவாதிராஜனை நரஸிங்கப் பிரானாக அநுபவிக்கும் தேஶிகன். திருப்பாணாழ்வார் திருவரங்கனை ந்ருஸிம்ஹ மூர்த்தியாக அநுபவிப்பதைப் போலே தேவாதிராஜனை ந்ருஸிம்ஹ மூர்த்தியாய் தேஶிகன் அநுபவிக்கிறார். எந்த அர்ச்சாவதார எம்பெருமானாக இருந்தாலும் அவனை விபவாவதார ப்ரதிநிதியாக அநுபவிப்பது என்பது நமது ஆழ்வார்களும் ஆசார்யர்களும் கண்ட முறையாகும்.

ஆக எம்பெருமான் ஆவிர்பவித்தது எந்த ஒரு திவ்யதேஶத்திலும் அன்று. மஹா அஸுரனான ஹிரண்யனுடைய மாளிகையில் ஆயிரக்கால் மண்டபத்தில்

ஒரு தூணே எம்பெருமான் ஆவிர்பவித்த ஸ்தலமாகும். இதுவே ஒரு பெரிய ஆஶ்சர்யமான விஷயம். இதைவிட ஆஶ்சர்யமானது ஹிரண்யன் அளந்திட்ட தூணில் எம்பெருமான் ஆவிர்பவித்தது. ஹிரண்யன் தட்டினவாறே தோன்றியது இதைவிட ஆஶ்சர்யமான விஷயம். நரங்கலந்த ஸிம்ஹ உருவாய்த் தோன்றியது அதைவிட ஆஶ்சர்யமானது. சீற்றம், அருள் என்னும் இரண்டையும் ஒரே ஸமயத்தில் காட்டிக் கொண்டு ஆவிர்பவித்ததும் ஆஶ்சர்யமாகும். இப்படி எல்லாவிதத்திலும் மஹிமை பொருந்தியதான ஆஶ்சர்யமான அவதாரம் பரமனுடைய நரஸிம்ஹாவதாரமாகும் என்று அநுபவிக்கிறார்கள் அவனடியார்கள். பகவான் இப்படித் தோன்றாமலிருந்தால் எப்படி இருந்திருக்கும்? அதனால் தெய்வம் இல்லை என்று யாராலும் சொல்லியிருக்க முடியாது. ஆனால் பரமபாகவதோத்தமனான ப்ரஹ்லாதாழ்வான் வார்த்தை அஸத்யமாகி விட்டிருக்கும். தன்னுடைய காரணத்வத்தை, தன்னுடைய ஸர்வாந்தராத்மத்வத்தை, தன்னுடைய ஸர்வ வ்யாபகத்வத்தைத் தன்னுடைய அடியவனான ப்ரஹ்லாதாழ்வான் சொல்ல, தான் ஆவிர்பவித்து ஸத்யமாக்கிக் கொடுத்தான் எம்பெருமான். இதுவே ப்ரஹ்லாதாழ்வானுக்கு அவன் செய்தருளிய மஹோபகாரமாகும். இதுபற்றி அவனை ஆதி என்றும் பிரான் என்றும் ஆழ்வார் கொண்டாடி அநுபவிக்கிறார் என்று வ்யாக்யாநம் அநுக்ரஹித்திருக்கிறார்கள் நமதாசார்யர்கள்.

இப்படிப்பட்ட எம்பெருமான் இப்பொழுது எங்கிருக்கிறான்? அவன் தான் அரங்கத்து அமலன் என்கிறார் ஆழ்வார். திருவரங்கத்து எம்பெருமான் தன்னை ஆழ்வாருக்குக் காட்டியருள, அவன் காட்டியருளியபடியையும் அதைத் தான் அநுபவித்தபடியையும் *அமலனாதிபிரான்* என்னும் இந்த திவ்யப்ரபந்தத்திலே பரமகாருணிகரான ஆழ்வார் நமக்குக் காட்டியருளியிருக்கிறார். அதில் எட்டாவதான இப்பாசுரத்தில் இதுவரை திருவரங்கனை ந்ருஸிம்ஹ மூர்த்தியாகக் கொண்டாடி அநுபவித்து வந்த ஆழ்வார் ந்ருஸிம்ஹ மூர்த்தியையே இப்பாசுரத்தின் மேல்பகுதியில் திருவரங்கனாக அநுபவிக்கிறார் என்று சரித்திரம். இந்த சரித்திரத்தை *அரங்கத்து அமலன்* என்ற தலைப்பில் அநுபவிக்க ப்ராப்தம்.

நரஸிம்ஹாவதாரத்துக்குண்டான வைபவங்களில் ஒரு சிலவனவற்றையே இக்கட்டுரைகளில் அடியேன் விண்ணப்பிக்க முடிந்தது. ப்ரஹ்லாதாழ்வான் சரித்திரத்தை ஆழ்ந்து அநுபவித்த மஹர்ஷிகளுடைய

திருவாக்குகளிலும், ஆழ்வார்கள் ஆசார்யர்கள் ஸ்ரீஸூக்திகளிலும் நரஸிம்ஹாவதார வைபவபரமாகக் காணப்படும் இன்னும் பல உண்மைகளை நாம் விஶேஷமாக அநுபவத்தில் கொள்ள ப்ராப்தம். பரமபாகவதோத்தமனான ப்ரஹ்லாதாழ்வானுடைய சரித்திரம், அவனது பெருமைகள், சீரிய ஶாஸ்த்ரார்த்தங்களைக் கொண்டதாக ப்ரஹ்லாதாழ்வான் செய்தருளிய உபதேஶத்தின் உயர்வு, பரம்பொருளின் பெருமைகளையும் தன்மைகளையும் நன்கு வெளிப்படுத்தும்படியாய் அமைந்துள்ளதான ப்ரஹ்லாதாழ்வான் ஸ்துதி, ந்ருஸிம்ஹாவதார கட்டத்தை விஶேஷமாக வர்ணிக்கும் பாகவத ஶ்லோகங்கள், ந்ருஸிம்ஹாவதார வைபவபரமான நமது ஆழ்வார்கள் ஆசார்யர்களுடைய திவ்யஸூக்திகளுடைய அநுபவம், ந்ருஸிம்ஹாவதார வைபவத்தை அநுபவிக்கிறவர்களுடைய ஏற்றம் என்று இன்னும் நாம் விஶேஷமாக அநுபவத்தில் கொள்ள வேண்டிய அர்த்தங்களைத் தொகுத்து *ப்ரஹ்லாத சரித்திரம்* என்னும் தலைப்பில் *நரஸிம்ஹாவதார வைபவம்* - இரண்டாவது பாகத்தில் அடியேன் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

வேதங்களும் வேதமுதல்வனும்

வாகம்ருதவர்ஷீ

ஸ்ரீ உ வே வேளுக்குடிவரதாசார்ய ஸ்வாமி

(ஏடுபடுத்தப்பட்ட உபந்யாஸக் கட்டுரை)

நம்முடைய ஸம்ப்ரதாயத்திலே க்ருஷ்ண த்ரயம் என்று மூவரை நாம் ப்ரதாநமாகக் கொள்கிறோம். சேதந உஜ்ஜீவநார்த்தமாகப் பகவான் செய்தருளிய திருவவதாரங்களுள் மிக முக்யமாகப் பார்க்கப்படுகிறது க்ருஷ்ணாவதாரமாகும். கீதாசார்யனான க்ருஷ்ண பரமாத்மாதான் திருவவதார எம்பெருமான்களுக்குள்ளே நமக்குப் பரமாப்தனாவான்.

ஸர்வேபநிஷதோ$_3$ கா$_3$வ: தோ$_3$க்$_3$தா$_4$ கோ$_3$பாலநந்த$_3$ந:। பார்த்தோ$_2$ வத்ஸ: ஸுதீ$_4$ர் போ$_4$க்தா து$_3$க்$_3$த$_4$ம் கீ$_3$தாம்ருதம் மஹத்॥ (எல்லா உபநிஷத்துக்களுமே பசுக்களாகும். அவற்றைக் கறப்பவன் ஆய்ப்பிள்ளையான கண்ணன். அர்ஜுநன் கன்றாய் இருப்பவன். ஜ்ஞாநியே அப்பாலைப் பருகுபவன். மிகச்சிறந்த கீதையாகிற அமுதமே பாலாகும்) என்று சொல்லுகிறபடியே பரம வேதாந்த ஸாரபூத ஸாஸ்த்ரமான கீதாம்ருதத்தை நாம் ஆத்ம நன்மையை அடையும் பொருட்டு உபகரித்தருளியவன் பகவானான க்ருஷ்ணன். (வேதகர்மங்களை அழியமாறிப் பண்ணுவதற்கென்றே தான் எடுத்துக்கொண்ட புத்தாவதாரம் போல் அல்லாமல்) கீதையில் தான் தெரிவிக்கும் பரமார்த்தங்கள் எல்லாவற்றுக்கும் வேதாந்த வாதத்தையே ப்ரதாநமாகக் கொண்டவன். வேத ஸம்ரக்ஷணத்திற்காகவே – வேதக்கொள்கைகளை நிலைநாட்டுவதற்காகவே திருவவதரித்தவன்.

இவனுக்கு அடுத்ததாக இவனுடைய அம்ஶாவதாரபூதரான, க்ருஷ்ண த்வைபாயநரான வேதவ்யாஸரைக் கொள்ளலாம். *ஸ ஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:* (பராஶரருடைய புத்ரரான அந்த வ்யாஸர் சொன்னார்) என்று வேதமே இவரைக் கொண்டாடுகிறது. *பாராஶர்ய வசஸ்ஸுதா$_4$ம் உபநிஷத்$_3$ து$_3$க்$_3$தா$_4$ப்$_3$தி$_4$மத்$_4$யோத்$_3$த்$_4$ருதாம், ஸம்ஸாராக்$_3$நி விதீ$_3$பந வ்யபக$_3$த ப்ராணாத்ம ஸஞ்ஜீவநீம்। பூர்வாசார்ய ஸுரக்ஷிதாம் ப$_3$ஹுமதிவ்யாகா$_4$த தூ$_3$ரஸ்தி$_2$தாம், ஆநீதாம் து நிஜாக்ஷரை: ஸுமநஸோ பௌ$_4$மா: பிப$_3$ந்து அந்வஹம்॥*

[உபநிஷத்துக்களாகிற பாற்கடலின் மத்தியிலிருந்து எடுக்கப் பட்டதும், ஸம்ஸாரமாகிற அக்நியின் இடைவிடாத தாபத்தால் (ஆத்மாவான தங்களுக்கும் ஆத்மாவான) பரமாத்மாவைப் பெறாத ஜீவாத்மாக்களை உஜ்ஜீவிக்கச் செய்வதும், பூர்வாசார்யர்களால் நன்கு ரக்ஷிக்கப்பட்டதும், வெகு மதிவிகல்பங்களால் ஸமீசிநார்த்தங்களுக்கு வ்யாகாதம் நேர்ந்ததனால் அவகாஹிக்க அரிதாய் தூரத்திலேயே விலகி நின்ற நிலையில், ஸ்ரீபாஷ்யமாகிற அக்ஷரங்களால் தம்மால் ஸமீபத்தில் கொண்டு வரப்பட்டிருக்கிறதுமான வ்யாஸருடைய அம்ருதத்தை இவ்வுலகில் நுண் அறிவினர்கள் தினந்தோறும் பருகுவார்களாக] என்று எம்பெருமானார் இவரையும், வேதாந்தத்துக்கு வ்யாக்யாநமாக இவர் அருளிச்செய்துள்ள ப்ரஹ்ம ஸூத்ர ப்ரபந்தத்தையும் கொண்டாடியுள்ளார். மஹர்ஷிகளுக்குள்ளே நமக்குப் பரமாப்தராய் விளங்குபவர் இவரே ஆவார்.

ஆத்யஸ்ய ந: குலபதே என்று ப்ரபந்ந ஜந கூடஸ்தராகவும், *க்ருஷ்ண த்ருஷ்ணாதத்வம்* எனவும் குலாவப்படுபவருமான நம்மாழ்வாரும் இவர்கள் இருவருடனும் சேர்ந்து நமக்குப் பரமாப்தராகிறார். *வேதம் தமிழ் செய்த மாறன்* என்று இவருக்கு ப்ரஸித்தி உள்ளது. *மறைப்பாற் கடலைத் திருநாவின் மந்தரத்தால் கடைந்து, துறைப்பால் படுத்தித் தமிழ் ஆயிரத்தின் சுவை அமிர்தம், கறைப்பாம்பணைப் பள்ளியான் அன்பர் ஈட்டம் களித்தருந்த, நிறைப்பான் கழலன்றி சன்ம விடாய்க்கு நிழலில்லையே* என்று சொல்லுகிறபடியே வேதாந்தமாகிற க்ஷீரஸாகரத்தைக் கடைந்து திருவாய்மொழியான *பக்தாம்ருதத்தை நாம் உய்யும் பொருட்டு வழங்கியருளியுள்ளார். இவர் அருளிச் செய்துள்ள திருவாய்மொழி வேதமாகவும், வேதோபப்ரும்ஹணமாகவும் போற்றப் படுகிறது.

வேதவேத்யனான பகவானும், பரம வைதிகர்களான பாராஶர்யரும் பராங்குஶனும் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்யர்கள். பரமவேதாந்த ஸாரமான அர்த்தவிஶேஷங்களை லோகத்தில் ப்ரகாஶிப்பதற்கென்றே திருவவதரித்தவர்கள். தார்க்கிக மஹாத்மாக்களாக இருப்பினும் பரம வைதிகராய் வேதாந்த வாதத்தையே ப்ரதாநமாகக் கொண்டவர்கள். *க்ருஷ்ண த்ரயம்* எனப்படும் இம் மூவருடன் நாம் இன்னொரு மஹாசார்யரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவதார எம்பெருமான்களில் க்ருஷ்ணனைப் போலவும், மஹர்ஷிகளில் க்ருஷ்ண த்வைபாயநரைப் போலவும், ஆழ்வார்களில்

க்ருஷ்ணத்ருஷ்ணா தத்வத்தைப் போலவும், பூர்வாசார்யர்களில் க்ருஷ்ணனுடைய அவதார விஶேஷமாகவும் க்ருஷ்ணன் என்றே திருநாமம் பூண்டவருமான பெரியவாச்சான்பிள்ளை நமக்கு பரமாப்தராகிறார். பரமகாருணிர்களான இவர்கள் நால்வரும் சேர்ந்து தத்தம் ஸ்ரீஸூக்திகளால் பரமவேதாந்த ஸாரபூதமான அர்த்தவிஶேஷங்களை நம் பொருட்டு உபகரித்தருளியுள்ளனர். இத்தகைய ஸாரார்த்தங்களில் ஒன்றைப்பற்றி இப்பொழுது யதாமதி விண்ணப்பிக்கிறேன்.

*வேதை$_3$ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்$_3$யோ

வேதா$_3$ந்தக்ருத்$_3$வேத$_3$விதே$_3$வ சாஹம்* (15-15)

என்று கீதையிலே பகவானுடைய திருவாக்கு. இங்கே பகவான் *வேதாந்தக்ருத்* என்றும் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறான்; *வேதவித்* என்றும் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறான்; *வேதவேத்யன்* என்றும் தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறான்.

வேதவித் = வேதார்த்த வித் = *வேதார்த்தத்தை உள்ளபடி அறிந்தவன் நான்தான்* என்கிறான் பகவான். வேதார்த்தத்தை அறிந்தவர்கள் இன்னும் பலர் (ஆழ்வார் போல்வார்) உண்டே! என்றால், அவர்களுக்கும் அந்த ஜ்ஞாநத்தை அளித்தவன் பகவானேயாவான்.

வேதவேத்யன் = பகவான் வேதார்த்தத்தை அறிந்தவனாய் இருப்பவன் மட்டும் அல்லன்; வேதார்த்தம் தானேயாக இருப்பவன் பகவான்; வேதார்த்தமாக பகவானைத் தவிர வேறு யாரும் இருக்க முடியாது. வேதத்துக்கு அர்த்தமாகவும் வேதத்தினால் அறியப்படுபவனாகவும் இருப்பதனால் அவன் வேதவேத்யன் எனப்படுகிறான்.

வேதாந்த-க்ருத் = வேதாந்தமான (வேத விதிகளின்) ப$_2$லத்தைக் கொடுப்பவனாகவும் இருப்பவன். *வேதாந்தக்ருத்* என்பதிலுள்ள வேதாந்த ஶப்தம் வேதஶிரஸ்ஸான உபநிஷத்துக்களைக் குறிக்காது. வேதத்தில் விதி வாக்யங்களாக இருப்பவை ஒவ்வொன்றும் ஓரோர் ஸாதநத்தைச் சொல்லி அதனால் ஏற்படக்கூடிய ப$_2$லாம்ஶத்தைக் கூறுகின்றன. இங்கே வேதாந்தம்

என்பது வேதத்திலே சொல்லப்பட்டுள்ள யாக கர்மங்களுக்கு அந்தமாய் – முடிவாக இருக்கும் ப$_2$லன்களைக் குறிக்கும். ஆக வேதவிதிகளின் பலன்களைக் கொடுப்பவன் தான்தான் என்று தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்கிறான் பகவான். வேதாந்தமான ப$_2$லத்தை மற்ற யாரும் எவருக்கும் தரமுடியாது. அவன் ஒருவன்தான் ப$_2$லப்ரதன்.

இந்த உண்மையை வேதவ்யாஸர் ப்ரஹ்ம மீமாம்ஸா ஶாஸ்த்ரத்திலே ஸ்பஷ்டமாக அருளிச்செய்துள்ளார். *ப$_2$லமத உபபத்தே:* (3-2-37)(இந்தப் பரம புருஷனிடமிருந்தே போக, மோக்ஷ பலன்கள் கிடைக்கின்றன – அவனுக்கே பலத்தைக் கொடுப்பவனாய் இருக்கும் பெருமை பொருந்தியிருக்கையால்) என்று ஸூத்ரம். *ஸ வா ஏஷ மஹாந் அஜ ஆத்மாSந்நாதோ$_3$ வஸுதா$_3$ந:* (ப்ருஹ 6-4-24)(பிறப்பற்றவனான அந்தப் பரமாத்மா அந்நத்தையும் த$_3$நத்தையும் அளிப்பவன்) என்னும் வேதவாக்யம் பகவான் போக ப$_2$லன்களைக் கொடுப்பவன் என்பதற்கு ப்ரமாணம். *ஏஷ ஹ்யேவாநந்த$_3$யாதி (தை ஆந 7-1)(இப்பரமபுருஷனன்றோ மோக்ஷ ஆநந்தத்தை அளிக்கிறான்) என்னும் வாக்யம் பகவான் மோக்ஷப்ரதன் என்பதற்கு ப்ரமாணம். ஆக ஸகலப$_2$லப்ரதன் பகவான் என்றதாயிற்று. பரமாத்ம ப்ரஸாதமடியாகத்தான் அனைத்து ப$_2$லன்களும் ஸித்திக்க வேண்டும். ஏனென்றால் - *உபபத்தே:* = அவன் ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தனாய், ப்ராப்தனாய், உதாரனாய், காருணிகனாய், ஸத்யகாமனாய், ஸத்யஸங்கல்பனாய் இருக்கிறபடியாலே என்று காரணங்களை எல்லாம் சொல்லுகிறார் வ்யாஸர்.

பகவானைப் பற்றிய இம்மூன்று உண்மைகளுள் அவனை வேதவேத்யனாக அறிந்து அநுபவிப்பதே நமக்கு மிக முக்யமானதாகும். எனவே இவ்வுண்மையையே இக்கட்டுரைக்கு விஷயமாகக் கொண்டு யதாமதி விண்ணப்பிக்கிறேன்.

வேதை$_3$ஶ்ச ஸர்வைரஹமேவ வேத்$_3$ய: (எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே) என்னும் வாக்யத்திலே பகவான் திருவுள்ளம் பற்றியிருக்கும் அர்த்தத்தை இந்த வசநத்தில் உள்ள ஏவகாரத்தை (1) *அஹம் வேத்ய: ஏவ:* [நான் அறியப்படுபவனே] என்றும், (2) *ஸர்வை: வேதை: அஹம் ஏவ வேத்ய:* [எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுகிறேன்] என்றும், (3) *அஹம் ஏவ வேத்ய:* [நானே (ஜகத்காரணனாக) அறியப்படுபவன்] என்றும்

மூன்றுவிதமாக அந்வயம் கொண்டு அநுபவிக்க வேண்டும் என்கிறார்கள் நம் பெரியோர். இந்த அர்த்தங்களை ப்ரஹ்மஸூத்ர ப்ரபந்தத்திலே வேதவ்யாஸரும், திருவாய்மொழியிலே நம்மாழ்வாரும் எப்படிக் காட்டியருளி உள்ளார்கள் என்பதையும், இவற்றைத் திருவுள்ளம் பற்றி ஸ்ரீபராஶரபட்டர் அருளிச்செய்துள்ள ஒரு ப்ரஸித்த ஶ்லோகத்துக்கு அதியத்புதமாய், பரமவிபுலமாய் அமைந்துள்ள பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநத்திலிருந்து ஒருசில விஷயங்களையும் இப்பொழுது நாம் விவரமாக அநுபவத்தில் கொள்ளலாம்.

(1) ப்ரஹ்மஸூத்ர ப்ரபந்தத்திலே முதலதிகரணம் ஜிஜ்ஞாஸாதிகரணம் எனப்படும். *அதா$_2$தோ ப்$_3$ரஹ்ம ஜிஜ்ஞாஸா* [(கர்மவிசாரத்துக்குப் பிறகு) அக்காரணத்தினாலேயே ப்ரஹ்மத்தை அறிவதில் விருப்பம் உண்டாகிறது] என்று ஸூத்ரம். *வேதாந்தமானது ப்ரஹ்மத்தைப் பற்றிய ஆபாதப்ரதீதியை விளைவிக்காது - ஶப்த ஸாமாந்யம் ஸித்தார்த்தத்தைச் சொல்ல முடியாதாகையால்* என்பது இந்த அதிகரணத்துக்குண்டான பூர்வபக்ஷவாதம். ப்ராபாகர மீமாம்ஸகர்கள் இந்த பூர்வபக்ஷவாதத்தைச் செய்கிறார்கள். ஶப்தவஸ்து = வேதாந்தம். ஸித்தவஸ்து = ப்ரஹ்மம். *ப்ரஹ்மமான ஸித்தவஸ்துவை வேதாந்தமாகிற ஶப்தம் போதிக்காது – இதனால் ப்ரஹ்மவிசாரம் அநாரம்பணீயம்* என்று பூர்வபக்ஷம். *ஶப்தம் ஸித்தவஸ்துவுக்கு வாசகமாக இருக்க முடியும்; ஶப்தத்துக்கு ஸித்தவஸ்துவைத் தெரிவிப்பதிலே ஸாமர்த்யம் உண்டு* என்று நிரூபித்து இந்த பூர்வபக்ஷத்தைக் கண்டிக்கிறார் வேதவ்யாஸர். ஆக, *ப்ரஹ்மம் ஜிஜ்ஞாஸ்யம்* என்னும் அர்த்தத்தைத் தெரிவிக்குமாறு அமைந்துள்ளது ஜிஜ்ஞாஸாதிகரணம் என்றதாயிற்று. *அஹம் வேத்ய: ஏவ:* (நான் அறியப்படுபவனே) என்னும் பகவானுடைய திருவாக்கிலும் இந்த உண்மையை நாம் அறியலாம். நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் பகவானுடைய ஸ்வரூப ரூப குண விபூதி ஐஶ்வர்யாதிகளை பரக்க நிரூபிப்பதன் மூலம் *அவன் அறியப்படுபவனே* என்னும் அர்த்தத்தைக் காட்டியருளுகிறார். முதல் பாசுரத்தின் முதல் பாதத்திலேயே *உயர்வற உயர்நலம் உடையவன் யவனவன்* என்று அருளிச் செய்துள்ளது காணத் தக்கது. *யவன்* (= வேதாந்தத்தினால் அறியப்படும் ப்ரஸித்தியை உடையவன்) என்று குறிப்பிடுவதன் மூலம் அவன் (வேதாந்தத்தினால்) அறியப்படுபவனே என்னும் அர்த்தத்தை வெளிப்படையாகவும் வலியுறுத்திக் காட்டினாராயிற்று. *யவன் – ப்ரமாண

ப்ரஸித்தனானவன் யாவனொருவன்* என்று பன்னீராயிரப்படி வ்யாக்யாநம். *யவன் –இக்குணங்களுக்கு ஆஶ்ரயமான திவ்யாத்ம ஸ்வரூபத்தினுடைய ப்ரஸித்தியைச் சொல்லுகிறது* என்று இருபத்துநாலாயிரப்படி வ்யாக்யாநம்.

(2) *ப்ரஹ்ம விஷயத்தில் எது ப்ரமாணம்?* என்ற கேள்விக்கு *ப்ரஹ்ம விஷயத்தில் ப்ரத்யக்ஷமோ, அநுமானமோ ப்ரமாணம் அன்று, ஶாஸ்த்ரமே ப்ரமாணம்* என்னும் அர்த்தத்தைக் காட்ட வந்தது ஶாஸ்த்ரயோநித்வாதிகரணம். *ஶாஸ்த்ரயோநித்வாத்* என்று ஸூத்ரம். ஶாஸ்த்ரைக ப்ரமாணகத்வாத் = ஶாஸ்த்ரம் ஒன்றுதான் ப்ரமாணம். வேத வேதாந்தங்களை ப்ரமாணமாகக் கொண்ட உயர்ந்த தத்வம்தான் ப்ரஹ்மம். வேதைக ஸமதிகம்யமாய் இருப்பது ப்ரஹ்மத்துக்குண்டான பெருமை. ப்ரஹ்மத்தைப் பற்றித் தெரிவிப்பதில் மூல ப்ரமாணமாய், நித்ய நிர்தோஷ ப்ரமாணமாய் இருப்பது வேதத்துக்குண்டான பெருமை. இந்த அர்த்தத்தைத்தான் *ஸர்வை: வேதை: அஹமேவ வேத்ய:* (எல்லா வேதங்களாலும் அறியப்படுபவன் நானே) என்று பகவான் அருளிச் செய்துள்ளான்.

நம்மாழ்வார் *அயர்வறும் அமரர்கள் அதிபதி* என்கிறார். **அமரர்களுக்கு பதி என்று சொல்லுவதே போதுமாயிருக்க, இங்கு *அதிபதி* என்று ஏன் சொல்லுகிறார்?** என்று கேட்டுக்கொண்டு அதற்கு அத்யாஶ்சர்யமான விளக்கத்தை அநுக்ரஹித்திருக்கிறார்கள் நம் பெரியோர். *அதிபதி* என்றால் *அதிக: பதி:* (=மிகப்பெரியவன்) என்று அர்த்தம். மிகப்பெரியவன் என்றால் என்ன அர்த்தம்? மிகப்பெரியவன் என்றால் அபரிச்சேத்யனாய் இருக்குமவன் என்று அர்த்தம்; அபிந்ந நிமித்தோபாதந காரணமாய் இருக்குமவன் என்றும் அர்த்தம். ஆக நிமித்த காரணமாய் இருப்பதோடு அல்லாமல், அவன் உபாதாந காரணமாகவும் இருக்கிறான் என்பதால் அவனை அதிபதி என்கிறார் நம்மாழ்வார் என்றதாயிற்று. இந்த உண்மையை நாம் ஶாஸ்த்ரம் கொண்டே அறிய முடியும் என்பதால் ஶாஸ்த்ரயோநித்வாதி கரணத்தை இப்படி ஸூசநம் பண்ணுகிறார் நம்மாழ்வார் என்பதை நாம் அறியலாம்.

இந்த அர்த்தத்தைத் திருவுள்ளம் பற்றியே ஸ்ரீபராஶரபட்டரும் ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில் –

*ஆதெள$_3$ வேதா$_3$: ப்ரமாணம்
ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணை:
ந்யாயை: ஸார்த்த$_4$ம் த்வத$_3$ர்ச்சாவிதி$_4$முபரி
பரிக்ஷீயதே பூர்வபா$_4$க$_3$:।
ஊர்த்$_4$வோ பா$_4$க$_3$ஸ்த்வதீ$_3$ஹா
கு$_3$ணவிப$_4$வபரிஜ்ஞாபநைஸ்த்வதபதா$_3$ப்தெள
வேத்$_3$யோ வேதை$_3$ஶ்ச ஸர்வைரஹமிதி
ப$_4$க$_3$வந் ஸ்வேந ச வியாஸகர்த்த$_2$॥

(உத்தரஶதகம் - 19)

*வேதங்களே முதல் ப்ரமாணமாகின்றன. ஸ்ம்ருதிகளும், இதிஹாஸங்களுடன் கூடிய புராணங்களும், பூர்வ மீமாம்ஸா ந்யாயங்களும், உத்தர மீமாம்ஸா ந்யாயங்களும் இவ்வேத வாக்யங்களுக்குப் பொருள் அறுதியிடுவதில் உதவுகின்றன. கர்மகாண்டம் எனப்படும் வேதமானது (பூர்வபாகம்) தேவரீருடைய திருவாராதநங்களைப் பற்றித் தெரிவிக்கிறது. உத்தரபாகமாகிற ப்ரஹ்மகாண்டம் தேவரீருடைய குணங்களையும், சேஷ்டிதங்களையும், செல்வங்களையும் பற்றித் தெரிவிக்கிறது. கர்மகாண்டத்தில் சொல்லப்பட்டுள்ள தேவரீருடைய ஆராதந ரூபமான கர்மங்களும், ப்ரஹ்ம காண்டத்தில் சொல்லப்பட்டுள்ள தேவரீரைப் பற்றிய ஜ்ஞாநமும் (ஸம்ஸாரி சேதநரை) தேவரீரிடத்தில் அடைவிப்பதிலேயே ப்ரயோஜநம் உள்ளவையாய் இருக்கின்றன. *எல்லா வேதங்களாலும் நானே அறியப்படுபவன்* என்று தேவரீரும் அருளிச் செய்திருக்கிறீரன்றோ* என்று பகவானிடம் விண்ணப்பிக்கிறார் பட்டர். பாரதாதி தனிச்லோக வ்யாக்யாநத்திலே இந்த ஶ்லோகத்திலே தெரிவிக்கப்படும் அர்த்தங்களை அபாரமாக வர்ணித்திருக்கிறார் பெரியவாச்சான்பிள்ளை.

ஈஶ்வரன் அநுமான ப்ரமாண ஸித்தன் என்று சொல்லுகிற வாதிப்ரதிக்ஷேபத்தைப் பண்ணிக் கொண்டு ஸபரிகரமான க்ருத்ஸ்நவேதமே இவ்விஷயத்தில் ப்ரமாணம் என்றும், பூர்வோத்தர பாகங்கள் இரண்டிலும் அவனே ப்ரதிபாத்யன் என்றும் சொல்லி, இவ்வர்த்தத்தில் ஸ்ரீகீதோக்தமான பகவத் வசநத்தையும் மூதலிக்கிறார் என்று பட்டருடைய இந்த ஶ்லோகத்துக்கு வ்யாக்யாந அவதாரிகை இடுகிறார் பெரியவாச்சான் பிள்ளை.

இங்கே,(1) வேதம் பகவானை அறிவிக்கிறது. (2) வேதம் பகவானை எப்படி அறிவிக்கிறது?(3) வேதம் பகவானை அறிவிப்பதனால் ஏற்படும் ப்ரயோஜநமாவது என்ன? என்னும் மூன்று முக்யமான விஷயங்களைத் திருவுள்ளம் பற்றியிருக்கிறார் பராஶரபட்டர். வேதம் பகவானை அறிவிக்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? வேதஶிரஸ்ஸான வேதாந்தம் ப்ரஹ்மத்தைப் பற்றி அறிவிக்கிறது என்று வேண்டுமானால் சொல்ல முடியும். ஆனால் யாகாதி கர்மங்களைப் பற்றித் தெரிவிக்கும் பூர்வபாகம் ப்ரஹ்மத்தைப் பற்றித் தெரிவிக்கிறது என்பது எங்ஙனம்? என்பது இங்கே எழக்கூடிய ஆக்ஷேபம். இது பற்றி மேலே விவரிக்கிறேன். வேதம் பகவானை எப்படி அறிவிக்கிறது? வேதம் பகவானை ஜகத்காரணனாக, ஜகதேக காரணனாக, சிதசித் விலக்ஷண காரணனாக, அகில காரணனாக, அத்புத காரணனாக, நிஷ்காரணனாக அறிவிக்கிறது. ப்ரஹ்மத்தைப் பற்றிய இவ்வுண்மைகளை நாம் வேதவேதாந்தங்களைக் கொண்டே அறிய முடியும். இதுபற்றியும் மேலே விவரமாக விண்ணப்பிக்கிறேன். வேதவேதாந்தங்கள் இப்படிப் பகவானைப் பற்றித் தெரிவிப்பதற்குண்டான ப்ரயோஜநமாவது யாது? பூர்வபாகத்திலே சொல்லப்பட்டுள்ள கர்மங்களினால் ஸர்வகர்ம ஸமாராத்யனாய் ஸர்வதேவதாந்தராத்மாவாய் இருக்கும் பகவான் உகக்கிறான். உத்தரபாகத்தில் சொல்லப்படும் ஜ்ஞாநாநுகுணமாக அவன் அநுக்ரஹத்தைப் பொழிய ஸம்ஸாரி ஜீவாத்மாவானவன் மோக்ஷாநந்தத்தைப் பெறுகிறான். கர்மகாண்டம் ஜ்ஞாந காண்டம் என்று அமைந்திருக்கும் மோக்ஷ ஸாஸ்த்ரமான வேதத்துக்குண்டான ப்ரயோஜநம் இதுவேயாகும். இது பற்றியும் மேலே விவரமாக விண்ணப்பிக்கிறேன். இப்படி இந்த மூன்று உண்மைகளையும் நிரூபிக்கும் விதமாக இந்த ஶ்லோகம் அமைந்துள்ளது என்பது நாம் மிக முக்யமாக அறிய வேண்டி விஷயமாகும்.

ப்ரஹ்மவிஷயத்தில் வேதமே ப்ரமாணம் என்று ஶாஸ்த்ரயோநித்வாதிகர ணத்தில் வேதவ்யாஸரால் அறுதியிடப்பட்ட அர்த்தத்தையே நம்மாழ்வார் மற்றோரிடத்திலும் *அறிந்தன வேதம்* (9-3-3) என்று தெரிவிக்கிறார். இந்த அர்த்தத்தைத் திருவுள்ளம் பற்றியே பராஶர பட்டர் *ஆதௌ வேதா: ப்ரமாணம்* என்று அருளிச் செய்துள்ளார். பகவானை அறிவிப்பதில் (1) வேதம் ப்ரமாணம் என்றும், (2) வேதம் மூல ப்ரமாணம், த்ருட ப்ரமாணம், நித்ய நிர்தோஷ ப்ரமாணம் என்றும், (3) வேதம் முழுவதும் ப்ரமாணம் என்றும், (4)

வேதமே ப்ரமாணம் என்றும், (5) எனவே வேதப்ராமாண்யத்தை ஒப்புக்கொள்ளாத மதங்கள் நிரஸ்தம் என்றும் இத்தால் காட்டியருளுகிறார். அடுத்ததாக *ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணை: ந்யாயை: ஸார்த்த$_4$ம்* என்னும் ஸ்ரீஸூக்தியால் (6) ஸபரிகரமான (அங்காதி ஸஹிதமான) வேதமே ப்ரமாணம் என்றும் நிரூபிக்கிறார்.

பரமாத்ம விஷயத்தில் வேதம் ப்ரமாணம் என்றால் என்ன? வேதத்தைக் கொண்டு பரமாத்மாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று அர்த்தம். பரமாத்ம விஷயத்தில் வேதத்தையே ப்ரமாணமாக ஒத்துக் கொள்ள வேண்டும். நம்மாழ்வார் பகவானை *கரனே* (1-1-10) என்கிறார். *கரன்* என்றால் *த்ருட$_4$ன் – தா$_3$ர்ட்$_4$யம் உடையவன் * என்று அர்த்தம். ஆனால் பகவானுடைய தா$_3$ர்ட்$_4$யம் இங்கே சொல்லப்படவில்லை. ஸுத்$_3$ருட$_4$ப்ரமாண ஸித்$_3$த$_4$ன்* என்று வ்யாக்யாநம். அவனைத் தெரிவிக்கிற ப்ரமாணம் த்$_3$ருட$_4$மானது என்பதை ஆழ்வாருடைய திருவுள்ளக் கருத்தாக இங்கே கொள்கிறார்கள் நமதாசார்யர்கள். த்$_3$ருட$_4$ப்ரமாண ஸித்$_3$த$_4$னான எம்பெருமானுக்கு தா$_3$ர்ட்$_4$யத்தைச் சொல்லுவதும் பொருத்தமுடையதே.

ஆண்டாள் *ஊற்றமுடையாய்!* என்கிறாள். *ப்ரமாண தா$_3$ர்ட்$_4$யத்தால் வந்த ப்ரமேயத்தினுடைய ஸ்தை$_2$ர்யத்தைச் சொல்லுகிறது. புருஷபு$_3$த்$_3$தி$_4$ ப்ரப$_4$வங்களானவற்றாலன்றிக்கே, அபௌருஷேயமாய், நித்ய நிர்தோ$_3$ஷமான வேத$_3$த்தாலே ப்ரதிபாதி$_3$க்கப்படுகையாலே த்$_3$ருட$_4$ப்ரமாண ஸித்$_3$த$_4$னாயிருக்கை, அப்ரமாணமென்னுதல், அநுமாந ப்ரமாணமென்னுதல் செய்யவொண்ணாது;வசநாபா$_4$ஸங்களாலும் உக்த்யாபா$_4$ஸங்களாலும் அழிக்க வொண்ணாதிருக்கை* என்று நாயனார் வ்யாக்யாநம்.

பகவானைப் பற்றித் தெரிவிக்கிற வேதமானது த்$_3$ருட$_4$மான ப்ரமாணம். த்$_3$ருட$_4$ ப்ரமாணமான வேதங்களாலே கொண்டாடப்படும் பெருமையை உடைய பகவானை *ஊற்றமுடையாய்* என்று அழைக்கிறாள் ஆண்டாள். நையாயிகர்கள் வேதத்தைக் கொண்டு ஈஶ்வரனை ஸ்தாபிப்பதில்லை. அவர்கள் அநுமானத்தைக் கொண்டே ஈஶ்வர தத்வத்தை ஸ்தாபிக்கிறார்கள். சிலருக்கு அநுமானத்திலே விஶேஷமான ஈடுபாடு உண்டு. இவர்கள் எதையும் அநுமானத்தாலேயே ஸ்தாபிக்கலாம் என்று இருப்பவர்கள். மலையும் அதற்கு மேலே புகையும் கண்ணுக்குத் தெரிகின்றன. *மலையில் நெருப்பிருக்கிறது – புகை

தெரிகிறபடியால்* என்று கண்ணுக்குத் தெரியும் புகையைக் கொண்டு கண்ணுக்குத் தெரியாத நெருப்பை ஊஹித்தறிவது அநுமானமாகும். இதுபோன்று ஈஶ்வரனை அநுமானத்தாலே அறிபவர்கள் இவர்கள்.

குடத்துக்குக் காரணமாய்க் குயவன் இருக்கிறான். குயவனால் உண்டாக்கப் படாமல் குடம் உண்டாக முடியாது. இதுபோன்று ஜகத்துக்குக் காரணமாய் ஈஶ்வரன் இருக்கிறான் என்கிறார்கள் இவர்கள். *அநுமானத்தாலே ஈஶ்வரனை ஸ்தாபிக்க முடியாது* என்று இவர்கள் பக்ஷத்தைக் கண்டிக்கிறார் வ்யாஸர். குடத்துக்குக் குயவன் போலே ஜகத்துக்கு ஈஶ்வரன் என்றால், இப்படி அநுமானத்தாலே ஸ்தாபிக்கப்படும் வ்யக்தி விஶேஷம் ஈஶ்வரனாய் இருக்க முடியாது. குயவனைப் போலே அவனும் ஒரு ஜீவாத்மாவாகத்தான் ஸித்திப்பன். குயவனுக்குப் போலே அவனுக்கும் ஸம்ஸாரம், அஜ்ஞாநம், அஶக்தி, துக்கம் போன்றவைகளை ஒத்துக் கொள்ள வேண்டி வரும். வேதாந்தங்களிலே கொண்டாடப்பட்ட ப்ரஹ்மத்துக்கு உண்டான ஆனந்தம், பெருமைகள் எவையும் அநுமானத்தினால் ஸித்திக்க முடியாது. *அல்பமான குடத்துக்குக் காரணம் அல்ப ஜ்ஞாந ஶக்திகளைப் படைத்த குயவன். விசித்ரமான, மஹத்தான ஜகத்துக்கு, மஹத்தான ஜ்ஞாந ஶக்த்யாதிகளை உடைய ஈஶ்வரன் காரணம்* என்று மேலும் வாதிடுகிறார்கள் இவர்கள். ஆனால் இப்படியும் இவர்களால் சொல்ல முடியாது என்கிறார் வ்யாஸர்.

அநுமானத்தாலே ஒருவன் ஈஶ்வரனை ஸ்தாபிக்க முற்பட்டால், தர்க்க ஶாஸ்த்ரம் கைபுகுந்த மற்றொருவன் இந்த தர்க்கத்தைக் கொண்டே ஈஶ்வரனை இல்லை செய்து விடவும் கூடும். *தர்க்க அப்ரதிஷ்டாநாத்* என்கிறார் வ்யாஸர். அது மட்டுமல்லாமல் குடத்துக்குக் குயவன் நிமித்த காரணமாய் இருப்பது போன்று, ஜகத்துக்கும் பரமாத்மாவை நிமித்த காரணமாகத்தான் ஸ்தாபிக்க முடியும். வேதாந்தங்களைக் கொண்டே ஈஶ்வரனைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள முடியும். ஶாஸ்த்ரங்களைக் கொண்டே நாம் பரமாத்மாவை ஜகத்துக்கு த்ரிவித காரணமாகவும் அறிய முடியும்.

குடத்துக்குக் குயவன் போன்று ஜகத்துக்கு ஈஶ்வரன் என்பது மட்டுமன்று. குடத்துக்குக் குயவன் நிமித்த காரணம் மட்டும்தான். உபாதாந காரணமாக முடியாது. உபாதாந காரணம் என்றால் என்ன? எந்த த்ரவ்யமானது காரணமாய் இருந்து கார்யமாக மாறுகிறதோ அந்த த்ரவ்யம் உபாதாந காரணம் எனப்படும்.

மண்ணால் செய்யப்பட்டகுடத்துக்கு மண் உபாதாந காரணமாகும். இதுபோன்று ஜகத்துக்குப் பரமாத்மா உபாதாந காரணமாகிறான். ஜகத்துக்கு பரமாத்மா நிமித்த காரணமாயும், உபாதாந காரணமாயும், ஸஹகாரி காரணமாயும் இருக்கிறான் என்பது வேதாந்தத்தினுடைய பரமமான அபிப்ராயம் என்று காட்டியருளுகிறார் வேதவ்யாஸர். இந்த உண்மையை நாம் அநுமானத்தைக் கொண்டு அறிய முடியாது; ஶாஸ்த்ரத்தைக் கொண்டே அறிய இயலும்.

பகவான் ஜகத்துக்கு த்ரிவித காரணமாகவும் இருக்கிறான் என்பதை நம்மாழ்வார் திருவாய்மொழியில் *வேர் முதலாய் வித்தாய்* (2-8-10) என்றும், *முதல்தனி வித்தேதயோ* (10-10-9) என்றும் தெரிவிக்கிறார். ஜகத்துக்கு எண்பெருமான் வேரகவும், முதலாகவும், வித்தாகவும் இருக்கிறான். வேர் என்றாலும் காரணம்; முதல் என்றாலும் காரணம்; வித்து என்றாலும் காரணம். காரணம் என்கிற ஒரு அர்த்தத்துக்கு நம்மாழ்வார் மூன்று ஶப்தங்களைச் சொல்வது அவன் ஜகத்துக்கு த்ரிவித காரணமாயும் இருப்பதனால் தான் என்பதை நாம் அறியலாம்.

இது மட்டுமல்லாமல் தனக்கோர் காரணம் இல்லாமலும் இருக்கிறான் பகவான். நமக்கு நம்முடைய தகப்பனார் காரணம்; நம்முடைய தகப்பனாருக்குப் பாட்டனார் காரணம்; எல்லாருக்கும் ப்ரஹ்மா காரணம். ப்ரஹ்மாவுக்கும் பகவான் காரணம். பகவானுக்கு யார் காரணம் என்றால் அவனுக்கு அவனே காரணம். தனக்கு மற்றோர் காரணம் இல்லாமையினால் நிஷ்காரணன் என்று காட்டப்படுகிறான் பகவான். குலசேகரப் பெருமாளுடைய ஆஶ்சர்யமான அநுபவம் :-

முந்தைநன்முறையன்புடைமகளிர்
முறைமுறைதந்தம்குறங்கிடையிருத்தி
எந்தையே! என்தன்குலப்பெருஞ்சுடரே!
எழுமுகில்கணத்தெழில்கவரேறே!
உந்தையாவனென்றுரைப்ப நின்செங்கேழ்
விரலினும்கடைக்கண்ணிலும்காட்ட
நந்தன்பெற்றனன்நல்வினையில்லா
நங்கள்கோன்வசுதேவன்பெற்றிலனே

(பெருமாள் திருமொழி 7-3)

திருவாய்ப்பாடியில் கண்ணன் அவதரித்துள்ளான். ஒரு குழந்தை மிக அழகாக இருக்குமேயானால் அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் யாவரும் அக்குழந்தையை எடுத்துக் கொண்டு போய் லாலநம் செய்வர். கண்ணனுடைய ஸௌந்தர்யமென்ன, ஸௌகுமார்யமென்ன, லாவண்யமென்ன – அனைத்தும் திருவாய்ப்பாடியில் உள்ள எல்லா கோபிமார்களுக்கும் அநுபாவ்யம். ஒரு நிமிஷத்துக்கு ஒரு கோபிகையாக எல்லாரும் கண்ணனை தத்தம் மடியில் வைத்துக்கொண்டு லாலநம் செய்கிறார்கள். அவர்களுள் ஒரு கோபிகை கண்ணனை மடியில் வைத்துக் கொண்டு *உன் தகப்பனார் யார்* என்று கேட்கிறாள். பகவான் பார்த்தான். *எல்லாருக்கும் தந்தையாக என்னை வேதாந்தம் கொண்டாடுகிறது; இவளோ உன் தந்தை யார் என்று கேட்கிறாளே!* என்று நினைத்துக் கொள்கிறான். *எனக்குத் தந்தை யாரும் இல்லை* என்று சொல்ல முற்படுகிறான். இருப்பினும், *இந்த நந்தகோபரைத் தந்தையாக ஆசைப்பட்டுத் திருவாய்ப்பாடியில் கண்ணனாக வந்து பிறந்தோமே* என்று நினைத்துக் கொண்டு, *பெண்ணே! அதோ கம்பத்தின் அருகில் நிற்கிறாரே! அவர்தான் என் தந்தை* என்று சொல்ல ஆரம்பிக்கிறான். உடனே அவனுக்குத் தோன்றுகிறது - *நான் பிறந்து இன்னும் நான்கு மாதங்கள் கூட ஆகவில்லையே! எப்படிப் பேசுவது* - என்று. வார்த்தை சொல்லுவதற்காகத் திறந்த வாயை உடனே மூடிக்கொண்டு, தன் விரலாலேயும் கண்களாலேயும் சைகை செய்து நந்தகோபரைத் தன் தந்தையாகக் காட்டுகிறான். *இத்தனை நாள் கழித்துக் குழந்தை பிறந்தது ஆஶ்சர்யமில்லை; இந்த குழந்தை இதற்குள் என்னை தந்தையாகக் காட்டி விட்டதே!* என்று நந்தகோபருக்கு மிக ஸந்தோஷம். இதைப் பார்த்துச் சிரிக்கிறான் பகவான். அர்த்தமென்ன? ஸர்வலோக மஹேஶ்வரனாய், உலகத்துக்கோர் உயிராய், எல்லாருக்கும் தாய் தந்தையாய் இருக்கும் எம்பெருமானுக்கு நந்தகோபரா தந்தை? காரணங்களுக்கெல்லாம் காரணமாய், ஈஶ்வரர்களுக்கெல்லாம் ஈஶ்வரனாய், ஶேஷிகளுக்கெல்லாம் ஶேஷியாய் இருப்பவனன்றோ எம்பெருமான்?

வேண்டித் தேவர் இரக்க வந்து பிறந்தான் என்கிறார் ஆழ்வார். *தேவர்களுடைய குறை தீர்க்க மட்டும் வந்து பிறக்கவில்லை எம்பெருமான்; தனக்கோர் தாய் தந்தை இல்லையே என்னும் தன் துயரைத் தீர்த்துக் கொள்ளவும் வந்து பிறந்தான்* என்கிறார்கள் நமதாசார்யர்கள். ஆக அகில காரணனான, அத்புத காரணனான, நிஷ்காரணனான பகவான் தன் பிள்ளைகளுக்குள்ளேயே ஒரு

பிள்ளையைத் தந்தையாக வரிக்கிறான். பகவான் வஸுதேவர்க்குத் தந்தையா அல்லது வஸுதேவர் பகவானுக்குத் தந்தையா என்றால் - கண்ணன் வஸுதேவருக்குத் தந்தை என்கிறார்கள் வேதாந்திகள். *பிதா புத்ரேண பித்ருமாந் யோநியோநௌ* (யஜுர் – காடகம் 3-9-55)(ஸர்வலோக பிதாவானவன் தன் பிள்ளையொருவனைப் பிதாவாகக் கொண்டு யோநிகள் தோறும் பிறக்கிறான்) என்று ஶ்ருதி வாக்யம். வஸுதேவரை கண்ணனுக்குத் தகப்பனாராகச் சொல்லுகிறார்கள் பௌராணிகர்கள். எது உண்மை? அவனுடைய அவதாரங்கள் ஸத்யமானபடியால் இரண்டுமே உண்மைகள்தான்.

உளன் சுடர்மிகு சுருதியுள் (1-1-7) என்கிறார் ஆழ்வார். *---ஸ்ம்ருதி-இதிஹாஸ-புராண-உபப்ரும்ஹிதமாய், அபௌருஷேயமாகையாலே நிர்தோ$_3$ஷமாய் அபா$_3$தி$_4$தப்ராமாண்யரூபதேஜ: ப்ரசுரமாயிருந்த ஶ்ருதிகளிலே உளன் என்கிறார். ஆதலால் லோகாயத மாயாவாத$_3$ பா$_4$ஸ்கரீய யாத$_3$வப்ரகாஶாதி$_3$ வேத$_3$விருத்$_3$த$_4$ ஸமயங்களெல்லாம் நிரஸ்தமாயின* என்று ஆறாயிரப்படி வ்யாக்யாநம். *முதற்பாட்டுத் தொடங்கிச் சொன்ன அர்த்த$_2$ங்கள் எல்லாவற்றுக்கும் ப்ரமாணம் நிர்தோஷ ஶ்ருதி என்கிறது. சுடர் மிகுகையாவது – பௌருஷேயத்வ நிப$_3$ந்த$_4$நமான விப்ரலம்பா$_4$தி தோ$_3$ஷரஹிதமுமாய், ப்ரமாணாந்தரங்களைக் கொண்டு பா$_3$ஹ்யகுத்$_3$ருஷ்டிகளால் அவிசால்யமாகையாலே மிக்க தேஜஸ்ஸை உடைத்தாகை. ஒருத்தரால் பண்ணபட்டதன்றிக்கே என்றும் கேட்டே வருமதாகையாலே ஶ்ருதியென்கிறது. (உளன்) இப்படிப்பட்ட ஶ்ருதியிலே ப்ரதிபாத்$_3$யனாய்க் கொண்டு தோற்றினவன். தாம் அநுஸந்தித்த அர்த்தங்களுக்கு ஶ்ருதியை ஸாக்ஷியாகச் சொல்லுகையாலே, அதிற் சொல்லுகிற ஶ்ரிய: பதித்வமும் நாராயண ஶப்த வாச்யத்வமும் அநுஸந்தித்தாராக வேணும்; இவர்க்கு நிர்தோ$_3$ஷ ஶ்ருதியே ப்ரமாணமாகையாலே – பாஹ்யரும், ஜக$_3$தீஶ்வரர்களுக்கு அந்யதா$_2$ ஸம்பந்தம் சொல்லுகிற கு$_3$த்ருஷ்டிகளும் அர்த்தா$_2$த் ப்ரதிக்ஷிப்தரானார்கள்* என்று பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம்.

நாரணன்முழுவேழுலகுக்கும்நாதன்(2-7-2) என்கிறார் ஆழ்வார். *ஸர்வ லோகங்களுக்கும் ஸ்வாமி* என்று அர்த்தம். அஶேஷசிதசித் வஸ்து ஶேஷீ = நாராயண ஶப்தார்த்தம். இக்கருத்தை ஆழ்வார் தாமே சொல்லுகிறாரா என்றால் அதுதான் இல்லை. *நாரணன்முழுவேழுலகுக்கும்நாதன்* என்று சொன்ன உடனே சொல்லுகிறார் *வேதமயன்* - வேதப்ரதிபாத்$_3$யனானவன் – வேதத்தில்

ஸர்வஸ்வாமியாய் ப்ரதிபாதிக்கப்படுபவன் – என்று. ஆழ்வார் தாமாக எதையும் சொல்லுவதில்லை. பரம வைதிகரானபடியாலே வேதம் பரமாத்மாவைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறதோ அதைத்தான் தாமும் அநுஸந்தித்து நமக்கும் காட்டியருள்வர். வேதம் தமிழ் செய்த மாறனிறே ஆழ்வார்!

பகவானே புத்தனாகவும் கபிலராகவும் அவதாரம் செய்திருந்தாலும் இவர்களுக்குக் கோயில் கட்டி நாம் திருவாராதநங்களைச் செய்வதில்லை. பகவானுடைய அவதாரங்களாக இருந்தாலும்கூட வேதப்ராமாண்யத்தை ஒத்துக்கொள்ளாமல் வேதத்துக்கு விருத்தமாக வார்த்தை சொல்லுகிறபடியால், இந்த அவதாரங்களை வைதிகர்களான நாம் ஒத்துக் கொள்வதில்லை. *கள்ள வேடத்தைக் கொண்டு போய்ப் புரம் புக்கவாறும் கலந்து அசுரரை-----* (5-10-4) என்கிறார் ஆழ்வார்.

பகவத் ஸ்வரூப ரூப குண விபவ ஐஶ்வர்யாதிகள் எல்லாவற்றுக்கும் ப்ரமாணம் வேதமே. நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் ப்ரமாண உபந்யாஸம் பண்ணாமல் அர்த்த விந்யாஸம் பண்ணுவதில்லை. எந்த விஷயத்தைச் சொன்னாலும் உடனே அதற்குண்டான ப்ரமாண பலத்தை – வேதாந்த வாக்யங்களையோ, கீதா வாக்யங்களையோ, இதிஹாஸ புராண வாக்யங்களையோ, தர்மஶாஸ்த்ர வசநங்களையோ, அருளிச்செயல் ஸ்ரீஸூக்திகளையோ – காட்டுவதுதான் முறை. ப்ரமாண வசநங்களை உதாஹரித்துத்தான் வார்த்தை சொல்ல வேண்டும். இதுதான் பரம ப்ராமாணிகர்களான நமதாசார்யர்கள் கடைப்பிடிக்கும் வழி. *நான் சொல்லுகிறேன்* என்று யாரும் ஒரு அர்த்தமும் சொல்ல மாட்டார்கள். நம்மாழ்வார் இந்த முறையை அநுஸரித்துத்தான் *நாரணன் முழுவேழுலகுக்கும் நாதன்* என்று சொன்ன உடனே, *வேதமயன்* - ஸர்வ வேதவேத்யன் என்பதற்கு வேதமே ப்ரமாணம் என்று காட்டியருளுகிறார். ப்ரமாண பலத்தாலேதான் வார்த்தை சொல்ல வேண்டுமே தவிர கேவல தர்க்க பாண்ட்யத்தினால் அன்று. வேதவ்யாஸர் தர்க்க பாதத்தினுடைய தாத்பர்யார்த்தமாக இந்த அர்த்தத்தைத்தான் காட்டியருளுகிறார்.

குற்றமில்லாத நல்ல அறிவு (உண்மையறிவு – யதார்த்த ஜ்ஞாநம்) *ப்ரமா* அல்லது *ப்ரமிதி* எனப்படும். ஒரு வஸ்து எப்படி இருக்கிறதோ அதை அப்படியே உள்ளபடி அறிவதுதான் ப்ரமாத்மகமான ஜ்ஞாநமாகும். ப்ரமிதி உண்டாவதற்கு

எது ஸாதநமோ அது ப்ரமாணம் எனப்படும். ப்ரமாணத்தை ப்ரத்யக்ஷம் என்றும் அநுமானம் என்றும், ஶப்தம் (ஶாஸ்த்ரம்) என்றும் மூன்று வகையாகப் பிரித்துள்ளார்கள் நமதாசார்யர்கள். ப்ரஹ்மவிஷயத்தில் ப்ரத்யக்ஷ ப்ரமாணமோ, அநுமாந ப்ரமாணமோ ப்ரஸவியாது. ப்ரத்யக்ஷ ப்ரமாணத்தினாலோ, அநுமாந ப்ரமாணத்தினாலோ நாம் பரமாத்மாவை அறிந்துவிட முடியாது. ஶப்த ப்ரமாணத்தை - ஶாஸ்த்ரத்தைக் - கொண்டே பரமாத்மாவைப் பற்றி அறிய முடியும்.

ஶாஸ்த்ரயோநித்வாத் என்று வ்யாஸர் அருளிச் செய்துள்ளார். ஶாஸ்த்ரத்துக்கு பரமாத்மா யோநியா (காரணமா) அல்லது ஶாஸ்த்ரம் பரமாத்மாவுக்கு யோநியா என்றால் – பரமாத்மா ஶாஸ்த்ரத்துக்குக் காரணம் என்கிற பக்ஷத்தைக் கண்டிக்கிறார்கள் நமதாசார்யர்கள். *வேதத்துக்கு ப்ரஹ்மம் காரணம்* என்று சொன்னால், *வேதம் கார்யம்; ப்ரஹ்மம் காரணம்* என்று சொல்லுவதாகிறது. நித்யமான வேதத்தை ப்ரஹ்மம் உண்டாக்கியது என்று எப்படிச் சொல்ல முடியும்? ஆனால் வேதத்தை ப்ரஹ்மத்துக்குக் காரணமாகச் சொல்லலாம். இங்கும் ஓர் ஆக்ஷேபம் எழக்கூடும். *ப்ரஹ்மத்துக்கு ஶாஸ்த்ரம் காரணம்* என்று சொன்னால் *ப்ரஹ்மம் கார்யம், ஶாஸ்த்ரம் காரணம்* என்று சொல்லுவதாக ஆகி விடும்! நம்முடைய ஸம்ப்ரதாயப்படி நாம் *ப்ரஹ்மம் காரணம்* என்று சொல்லுவதால் இப்படியும் நாம் கொள்ள முடியாது.

இங்கு தான் நமதாசார்யர்கள் வ்யாக்யாநம் அநுக்ரஹிக்கின்றனர். காரணத்தை நாம் இரண்டு விதமாகச் சொல்லலாம். ஒன்று உத்பத்தி காரணம்; மற்றொன்று ஜ்ஞப்தி காரணம். குயவன் மண்ணைக் கொண்டு குடத்தை உண்டாக்குகிறான். குயவன் குடத்தை உண்டாக்குவதனாலே குடத்துக்கு உத்பத்தி காரணமாகிறான். ஓரிடத்தில் புத்தகம் ஒன்று இருப்பதை நாம் அறிகிறோம். இங்கு புத்தகத்தைப் பற்றிய அறிவுதான் நமக்கு ஏற்படுகிறது. இங்கே புத்தகமே நம்மால் உண்டாக்கப்படவில்லை. இதைப்போல் பரமாத்மாவைப் பற்றிய ஜ்ஞாநத்தை வேதம் நமக்கு உண்டாக்கித் தருகிறது. அதனால்தான் வேதத்துக்கு வேதம் என்றே பெயர். *வேதயதி இதி வேத:* (அறிவிக்கிறதினாலே வேதமாகிறது) என்னும்படி உறுதியான நல்ல அறிவை உண்டாக்குவதனாலே வேதம் ப்ரமாணம் எனப்படுகிறது. பரமாத்ம ஜ்ஞாநத்துக்கு வேதம் காரணம். வேதத்தை அத்யயநம் செய்வதன் மூலம் பரமாத்ம ஜ்ஞாநத்தை நாம் பெறுகிறோம். ப்ரஹ்மத்துக்கு

வேதம் ஜ்ஞாபக ஹேதுவாக இருக்கிறபடியாலே *ஶாஸ்த்ரயோநித்வாத்* என்று அருளிச் செய்துள்ளார் வேதவ்யாஸர்.

அடுத்தபடியாக வேதத்துக்குண்டான பெருமையையும் பரமாத்ம விஷயத்தில் வேதம் ப்ரமாணம் என்னும் உண்மையையும் திருவுள்ளம் பற்றிச் சில ப்ரமாண வசநங்களை உதாஹரிக்கிறார் பெரியவாச்சான் பிள்ளை. *வாசா விரூப நித்யயா* (யஜு கா 2-6-2-2)(அழகிய ரூபத்தை உடையவனே! நித்யமான வேதவாக்காலே நீ சொல்லப்படுகிறாய்!) என்று பரமாத்ம விஷயத்தில் வேதம் ப்ரமாணம் என்பதை வேதமே நமக்குக் காட்டிக் கொடுக்கிறது. *வேதவேத்யே பரே பும்ஸி---* என்னும் புராண வசநமும் பகவான் வேதவேத்யன் என்னும் உண்மையைக் காட்டுகிறது. *அநாதி$_3$ நித$_4$நா ஹ்யேஷா வாகு$_3$த் ஸ்ருஷ்டா ஸ்வயம்பு$_4$வா* (ஆதியந்தமற்ற இந்த வேதமாகிற வாக்கு தானேயுண்டான பரமாத்மாவினாலே வெளியிடப்பட்டது) என்று மஹாபாரத வசநம். (ஶாந்தி 231-5)

வேதத்துக்குண்டான பெருமையை, *அநாதிநிதந-அவிச்சிந்ந ஸம்ப்ரதாயமாய், நித்யநிர்தோஷமாய், ப்ரமவிப்ரலம்பாதி தோஷகந்தரஹிதமான வேதங்கள்* என்று அருளிச்செய்கிறார் பெரியவாச்சான்பிள்ளை. வேதம் நித்யமானது; ஆதியும் அந்தமும் இல்லாதது; அவிச்சிந்நமான (இடையறாததான) ஆசார்ய ஶிஷ்ய ஸம்ப்ரதாயத்தை உடையது; நித்ய நிர்தோஷமானது;(எப்போதும் குற்றமில்லாதது); அபௌருஷேயமானது (ஒரு புருஷனால் இயற்றப்படாதது) என்பவை வேதத்துக்குண்டான பெருமைகள்.

பௌருஷேய ப்ரபந்தமாக (ஒரு புருஷனுடைய புத்தியினாலே நிர்மிதமான க்ரந்தமாக) இருக்குமேயானால், அந்த புருஷனுக்குண்டான அஶக்தி, அஜ்ஞாநம், ப்ரமாதம், அநவதாநம், ப்ராந்தி, விப்ரலம்பம் முதலான தோஷங்கள் அனைத்தும் அவனால் உண்டாக்கப்பட்ட அந்த க்ரந்தத்துக்கும் அமைந்துவிடும். ஆக பௌருஷேய ப்ரபந்தத்துக்குண்டான இருள், துயக்கு, மயக்கம், மறப்பு போன்ற குற்றங்கள் எதுவுமே வேதத்துக்குக் கிடையாது. *அன்னமாய் முனிவரோடமரரேத்த அருமறையை வெளிப்படுத்த வம்மான்றன்னை* (திருநெடுந்தாண்டகம் - 30) என்கிறார் திருமங்கையாழ்வார். **ருஷிகளோடேகூட ப்ரஹ்மாதிகள் *வேதசக்ஷுஸ்ஸை இழந்தோம்* என்று தன்னை ஆஶ்ரயித்து ஏத்த, --------- அபௌருஷேயத்வம் குலையாதபடி ஹம்ஸரூபியாய்-----* என்று பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யாநம். பகவான் ஏன் புருஷனாக அவதாரம்

செய்து வேதங்களை எடுத்துக் கொடுக்கவில்லை? அபௌருஷேயத்வ ஸ்தாபநார்த்தமாக எம்பெருமான் புருஷரூபம் கொள்ளாமல் ஹம்ஸ ரூபம் கொண்டான். வேதம் அபௌருஷேயமாக இருக்கிறபடியால், (அதற்கு பௌருஷேயத்வம் என்கிற குற்றம் வந்துவிடப் போகிறதே என்று) பகவான் புருஷனாக திருவவதாரம் செய்யாமல் ஹம்ஸரூபியாய் திருவவதரித்து வேதத்தை எடுத்துக் கொடுத்தான் என்று வ்யாக்யாநம். வேதத்துக்குண்டான அபௌருஷேயத்வத்துக்கு அவ்வளவு ஏற்றம் என்கிறார்கள் நமதாசார்யர்கள்.

வேதம் பரமாத்மாவைப் பற்றி அறிவிக்கிறது என்பதற்கு ஓர் ஆக்ஷேபம் எழுகிறது. அதாவது, ப்ரஹ்மம் அபரிச்சிந்ந வஸ்துவாக இருப்பதனாலே வேதம் பரமாத்மாவை அறிவிக்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? வேதம் முதலில் பரமாத்மாவைப் பற்றி அறிந்தால்தானே அது அந்த அறிவை மற்றவர்களுக்கு அறிவிக்க முடியும்? வேதமே தன்னால் பரமாத்மாவை அறிய முடியவில்லை என்று சொல்லியிருக்கிறதே! என்று ஆக்ஷேபம். *நேதி நேதி* (ப்ருஹ 4-3-6)(இப்பரம்பொருள் இப்படிப்பட்டதன்று; இப்படிப்பட்டதன்று) என்றும், *யதோ வாசோ நிவர்த்தந்தே* (தை ஆ 9-1)(மனத்துடன் கூடிய வேதவாக்குகள் எந்தப் பரம்பொருளை அறியமுடியாமல் திரும்புகின்றனவோ) என்றும் வேதமே பரமாத்மாவைப் பற்றித் தன்னால் அறிய முடியவில்லை என்று ஸ்பஷ்டமாகச் சொல்லியிருக்கும்போது வேதம் பரமாத்மாவைப் பற்றி அறிவிக்கிறது என்று எப்படிச் சொல்ல முடியும்? என்று ஆக்ஷேபம். இதற்கு ஸமாதாநம் சொல்லுவதென்றால், வேதம் பரமாத்மாவை அறிவது எங்ஙனம் என்று பார்க்க வேண்டும். வேதம் பரமாத்மாவை எங்ஙனம் அறிந்து, அப்படித் தன்னால் அறியப்பட்ட அறிவை நமக்கு எப்படி அறிவிக்கிறது என்று பார்க்க வேண்டும். சுருக்கமாக ஒரு சில விஷயங்களையே இங்கு விண்ணப்பிக்கிறேன்.

வேதம் *அபரிச்சிந்ந வைபவஶாலி* என்றே பரமாத்மாவைப் பற்றி அறிந்து இப்படித் தன்னால் அறியப்பட்ட பரமாத்மாவினுடைய ப்ரபாவத்தை இப்படியே நமக்கும் அறிவிக்கிறது என்பதுதான் இங்கே நாம் ஸாரமாக அறிய வேண்டிய உண்மையாகும். *அறிந்தன வேத அரும்பொருள்* (9-3-3) என்று கீழே ஏற்கனவே குறிப்பிடப்பட்ட நம்மாழ்வார் திருவாக்கை முதலில் எடுத்துக் கொள்வோம். *அறிந்தன வேதம்* என்கிறார் முதலில். வேதம் அறிந்தபடி என்? என்ற கேள்வி எழ, அதற்கு வேதம் பரம்பொருளை அரும்பொருளாக (அளவிட்டு அறிய முடியாதவன் என்றே) அறிந்தபடியைச் சொல்லுகிறார். துர்ஜ்ஞேயார்த்தத்தை

(அறிவதற்கு அரிதாய் இருக்கும் அர்த்தத்தை) அறிந்தனவாய் இருக்கும் வேதம் என்று வ்யாக்யாநம். வேதம் எம்பெருமானை *துர்ஜ்ஞேயன்* (அறிவதற்கு அரிதாய் இருப்பவன்) என்றே அறிந்துள்ளது. அப்படியே அறிவிக்கவும் செய்கிறது.

ஒன்றை அறிகையாவது என்ன? வஸ்து இருக்கும்படியை அறிகையே அறிவதாகும். இங்கும் இப்படியே கொள்ள வேண்டும். வேதம் பரமாத்மாவை எப்படி அறிவிக்கிறது? வேதம் பரமாத்மா எப்படி இருக்கிறானோ அப்படியே அவனை அறிவிக்கிறது. *ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம* (தை ஆ 1)(விகாரமற்றதாகவும், ஜ்ஞாநமாகவும், அளவற்றதாகவும் இருப்பது ப்ரஹ்மம்) என்றே தான் அறிந்தபடியைச் சொல்லுகிறது. ப்ரஹ்மமானது ஸ்வரூப குணங்களால் அபரிச்சிந்நமாக இருக்கையாலே, ப்ரஹ்மத்தை அபரிச்சிந்நன் என்றே வேதம் அறிவிக்கிறது. *வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்* (புருஷ ஸூக்தம்)(நான் இந்த பரமபுருஷனை அறிகிறேன் – அளவிட முடியாதபடி பெரியவனாக இருப்பவனாக) என்றே வேதம் பகவானைப் பற்றி அறிவிக்கிறது. இதை அநுஸரித்தே விஸ்வாமித்ரரும், *அஹம் வேத்மி மஹாத்மாநம்* (ஸ்ரீராமாயணம் பால 19-14)(நான் ராமனைப் பெரியவன் என்று அறிகிறேன்) என்று சொல்கிறார். *யே ச வேத$_3$விதோ$_3$ விப்ரா யே சாத்$_4$யாத்மவிதோ$_3$ ஜநா:। தே வதந்தி மஹாத்மாநம்* (பாரதம் ஆர 71-123)(வேதவித்துக்களும் வேதாந்த வித்துக்களும் கண்ணனைப் பெரியோன் என்று கூறுகின்றனர்) என்ற வசநமும் காணத்தக்கது. ஆக அபரிச்சிந்ந வஸ்துவை பரிச்சிந்நமாக அறிவது அறிவாகாது. அது யதார்த்த ஜ்ஞாநமாகாது. அபரிச்சிந்ந வஸ்துவை அபரிச்சிந்ந வஸ்துவாக அறிவதே அறிவாகும்.

ஆனால் வேதமே *நேதி நேதி* என்று சொல்லுகிறதே என்றால், இந்த வாக்யத்துக்குண்டான அர்த்தத்தை வேதவ்யாஸரே ப்ரஹ்மஸூத்ர ப்ரபந்தத்தில் தெளிவு படுத்தியுள்ளார். இந்த வாக்யத்துக்குண்டான அர்த்தத்தை இதற்கு முன்பின் உள்ள ப்ரகரணங்களைக் கருத்தில் கொண்டு நிர்ணயிக்க வேண்டும். இந்த வாக்யத்துக்கு முன் ப்ரஹ்மத்துக்குண்டான சில ரூபங்கல் வர்ணிக்கப்படுகின்றன. இப்படி வர்ணிக்கப்பட்ட ரூபங்கள் மட்டும்தான் ப்ரஹ்மத்துக்கு உண்டு என்று யாரும் நினைத்துவிடக்கூடாது என்பதற்காக *இதி ந இதி ந* (இவ்வளவு மட்டுமன்று இவ்வளவு மட்டுமன்று) என்று வேதம் சொல்லுகிறது.

ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி ப்ரதிஷேத$_4$தி ததோ ப்$_3$ரவீதி ச பூ$_4$ய: (3-2-21) என்னும் ஸூத்ரத்தில் இக்கருத்து தெரிவிக்கப்படுகிறது. *ப்ரக்ருதைதாவத்த்வம் ஹி* = இப்படிச் சொல்லிக் கொண்டு வரும்போது – இவ்வளவுதான் என்று மனதில் தோன்றும் எண்ணத்தை, *ப்ரதிஷேத$_4$தி* = இதி ந இதி ந (இவ்வளவு மட்டுமன்று இவ்வளவு மட்டுமன்று) என்று உபநிஷத் தள்ளுகிறது. தத:= அதற்குப் பின்பும், பூ$_4$ய: ப்$_3$ரவீதி ச = மறுபடியும் ப்ரஹ்மத்தின் குணங்களை அபாரமாகச் சொல்லுகிறது என்கிறார் வ்யாஸர்.

ஆக வேதாந்தம் என்ன பண்ணுகிறது? முதலில் பகவானுடைய சில வைபவங்களைச் சொல்லுகிறது. அடுத்தபடியாக, *பகவானுடைய வைபவங்களை இவ்வளவுதான் என்று நினைத்து விடாதே* என்று சொல்லி அவனுடைய வைபவங்களை மேலும் வர்ணிக்கிறது. *ந ஹ்யேதஸ்மாதி$_3$தி நேத்யந்யத் பரமஸ்தி; அத$_2$ நாமதே$_4$யம் ஸத்யஸ்ய ஸத்யமிதி; ப்ராணா வை ஸத்யம் தேஷாமேஷ ஸத்யம்* (ப்ருஹ 4-3-6)[*இதி ந* என்று சொல்லப்படும் ப்ரஹ்மத்தைக் காட்டிலும் (ரூப குணங்களால்) உயர்ந்த பொருள் வேறொன்று இல்லை; ஸத்யத்திற்கும் ஸத்யம் என்பது இந்த ப்ரஹ்மத்திற்குப் பெயர்; ப்ராணன் எனப்படும் ஜீவனானவன், ஆகாஶம் முதலிய அசேதநப் பொருள்களைப் போல் ஸ்வரூப விகாரம் அற்றவனாகையாலே ஸத்யம் எனப்படுகிறான்;(ஜீவனைப் போலே ஜ்ஞாநத்தில் சுருக்கமில்லாமையாலே) ப்ரஹ்மம் அவனைக் காட்டிலும் ஸத்யம் எனப்படுகிறது]* என்று மேலே வாக்யம் அமைந்துள்ளது. ஆக அபரிச்சிந்ந வைபவஶாலி பரமாத்மா என்பதே இந்த வாக்யத்துக்கும் தாத்பர்யம் என்றதாயிற்று.

ஆண்டாளும் *ஊற்றமுடையாய்! பெரியாய்!* (திருப்பாவை - 21) என்கிறாள். பெரியன் = அபரிச்சிந்ந வைபவஶாலி என்று அர்த்தம். வேத வேதாந்தங்கள் எத்தனை எத்தனை காலம் கூடிக் கூடிப் பேசினாலும் அவனுடைய பெருமையை அளவிட முடியாது. ப்ரமாணத்தாலே அவனுடைய பெருமையை இவ்வளவு என்று பரிச்சேதிக்க முடியாது என்பது மட்டுமன்று. ப்ரமாதாக்களாலேயும் அவனுடைய பெருமையை இவ்வளவு என்று பரிச்சேதிக்க முடியாது. நித்யஸூரிகள் எல்லாரும் எத்தனை எத்தனை காலமாக எம்பெருமானை ஸ்தோத்ரம் பண்ணினாலும் கூட, அவன் அவர்களுடைய ஸ்தோத்ரங்களுக்கெல்லாம் அவ்வருகு பட்டவனேயாவான்! எல்லாவற்றையும்விட பகவான் தன்னாலும் தன்னுடைய பெருமையைப்

பரிச்சேதிக்க முடியாது. ஆக ப்ரமாண அபரிச்சிந்நனாய், ப்ரமாத்ரு அபரிச்சிந்நனாய், ப்ரமேய அபரிச்சிந்நனாய் இருக்கும் அவனுடைய வைபவம் அளவுகடந்து அமைந்துள்ளது என்பதுதான் உண்மை.

யதோ வாசோ நிவர்த்தந்தே (தை ஆ 9-1)(மனத்துடன் கூடிய வேத வாக்குகள் எந்தப் பரம்பொருளை அறியமுடியாமல் திரும்புகின்றனவோ) என்னும் வாக்யத்துக்கும் அபிப்ராயம் இதுவேயாகும். *இது மநுஷ்யாநந்தம்; இதைவிடப் பெருத்தது தேவர்களுடைய ஆனந்தம்; இதைவிடப் பெருத்தது இந்த்ரனுடைய ஆனந்தம்; அதைவிடப் பெருத்தது ப்ருஹஸ்பதியுடைய ஆநந்தம்; நான்முகனுடைய ஆநந்தம் அதைவிடப் பெருத்தது என்று சொல்லிக் கொண்டே வந்து கடைசியில் ப்ரஹ்மத்தினுடைய ஆநந்தத்தை அளவிட்டு அறியப் பார்த்தது வேதாந்தம். ஆனால் எவ்வளவு முயன்றும் அதற்கு ஓர் எல்லை காணமுடியாதபடியாலே *பரமாத்மாவினுடைய ஆநந்தம் அளவிட்டு அறிய முடியாதது* என்று சொல்லி மீண்டு விட்டது. ஆக பரமாத்மாவினுடைய ப்ரபாவத்தை அளவிட்டு அறிய முடியாது என்று வேதாந்தம் சொல்லுகிறதே தவிர, பரமாத்மாவினுடைய வைபவத்தை அறியவே முடியாது என்று அது சொல்லவில்லை என்பதை நாம் அறிய வேண்டும். இத்தால் வேதம் பரமாத்மாவை அறிவிப்பதில் ப்ரமாணம் என்று நிரூபிதமாயிற்று.

இனி, பரமாத்மாவை அறிவிப்பதில் வேதம் முழுவதும் ப்ரமாணம் என்பது எப்படி என்பதைப் பார்ப்போம். வேதம் கர்மகாண்டம் என்றும் ப்ரஹ்ம காண்டம் என்றும் இருவகைப்படும். மீமாம்ஸா என்பதற்கு பூஜ்ய விசாரம் – உயர்ந்த விஷயத்தைப் பற்றிய விசாரம் என்று அர்த்தம். கர்மகாண்டத்தைப் பற்றிய விசாரத்தை ஜைமிநி செய்து கர்மமீமாம்ஸா ஶாஸ்த்ரத்தை அருளிச் செய்துள்ளார். நான்கு அத்யாயங்களை உடையதும் காஶக்ருத்ஸ்ந ப்ரகாஸிதமாயும் உள்ள தேவதா காண்டத்தை உள்ளடக்கிய கர்மமீமாம்ஸா ஶாஸ்த்ரம் பதினாறு அத்யாயங்கள் கொண்டது. ப்ரஹ்மவிசார பரமான ப்ரஹ்மமீமாம்ஸா ஶாஸ்த்ரம் நான்கு அத்யாயங்கள் கொண்டது. இவை அனைத்தும் சேர்ந்து மீமாம்ஸா ஶாஸ்த்ரம் இருபது அத்யாயங்கள் கொண்டது ஒரே ஶாஸ்த்ரமாகக் கொள்ளப்படுகிறது. கர்மகாண்டம் பகவதாராதநரூபமான யாக கர்மங்களைப் பற்றியது. தேவதாகாண்டம் பகவானுக்கு ஶரீரபூதர்களான தேவதைகளைப் பற்றியது. ஸர்வகர்ம ஸமாராத்யனான, ஸர்வ தேவதாந்தராத்ம பூதனான பகவான் ப்ரஹ்மகாண்ட ப்ரதிபாத்யன், பூர்வபாகமான வேதபாகம்,

உத்தரபாகமான வேதாந்தம் இரண்டும் சேர்ந்து ஆராதந விஶிஷ்ட ஆராத்யமான பரமாத்மாவைப் பற்றிச் சொல்கின்றன. இப்படி பூர்வோத்தர பாகங்கள் இரண்டிலும் அவனே ப்ரதிபாத்யனாகிறான். ஆக வே தவேதாந்தங்கள் எல்லாம் பரமாத்ம விஷயத்தில் ப்ரமாணம் என்றதாயிற்று. வேதம் வேதாந்தம் இரண்டுமே பரமாத்மாவைப் பற்றி அறிவிக்கின்றன என்றும் கர்மகாண்ட ப்ரஹ்ம காண்ட விசாரபரமான மீமாம்ஸா ஶாஸ்த்ரம் ஏக ஶாஸ்த்ரம் என்றும் எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்திலே காட்டியருளியுள்ளார்.

இப்படிப்பட்ட வேதவேதாந்தங்களைக் கொண்டுதான் நாம் ப்ரஹ்மத்தைப் பற்றி அறிய முடியும் – அறிய வேண்டுமே தவிர அநுமாநத்தினாலேயோ அல்லது மற்ற ப்ரமாணத்தினாலேயோ நாம் ப்ரஹ்மத்தைப் பற்றி அறிய முடியாது. *ஆதௌ வேதா: ப்ரமாணம்* என்பதில் இந்த அர்த்தத்தையும் திருவுள்ளம் பற்றியிருக்கிறார் பராஶர பட்டர் என்கிற உண்மையை *---ஈஶ்வரன் அநுமாந ப்ரமாண ஸித்தன் என்று சொல்லுகிற வாதிப்ரதிக்ஷேபத்தைப் பண்ணிக் கொண்டு----* என்று நமக்குத் தெரிவிக்கிறார் பெரியவாச்சான் பிள்ளை. அதாவது *ஆதௌ வேதா: ப்ரமாணம்* என்னும் வாக்யம் பரபக்ஷ ப்ரதிக்ஷேபபரமாகவும் அமைந்துள்ளது என்று வ்யாக்யாநம். வேதம் ப்ரமாணம் என்று சொல்லுவதனால் வேத ப்ராமாண்யத்தை ஒத்துக் கொள்ளாத மதங்கள் நிரஸ்தமாகின்றன என்று கருத்து. பரம வைதிகமான தம்முடைய பக்ஷத்தைக் காட்டுவதனாலே இதற்கு விருத்தமான அவைதிக பக்ஷங்களெல்லாம் தள்ளப்பட்டவையாகின்றன என்று கருத்து.

திருவாய்மொழி முதல் பாசுரத்திலேயே நம்மாழ்வார் *நலமுடையவன்* *அருளினன்* *அமரர்கள் அதிபதி* *சுடரடி* என்று பகவானுக்கு குணங்கள், விபூதிகள், திவ்யமங்கள விக்ரஹம் எல்லாம் உண்டு என்கிறார். இப்படி அருளிச் செய்வதன் மூலம் இதற்கு விருத்தமாக *ப்ரஹ்மத்துக்கு விபூதி கிடையாது, குணங்கள் கிடையாது, விக்ரஹம் கிடையாது* என்று வார்த்தை சொல்லுபவர்களுடைய வாதங்கள் எல்லாம் அடிபட்டுப் போய்விடுகின்றன என்று வ்யாக்யாநம். *குணமில்லை, விக்ரஹமில்லை, விபூதியில்லை என்று சொல்லுகிறவர்கள் எல்லாரும் நிரஸ்தர் இப்பாட்டாலே. அவர்களை எதிரிகளாக்கிச் சொல்ல வேண்டாவிறே; ஸ்வபக்ஷத்தை ஸ்தாபிக்கவே பரபக்ஷம் நிரஸ்தமாமிறே; நெற்செய்யப் புல் தேயுமா போலே தன்னடையே

நிரஸ்தராவர்களிறே அவர்கள்* என்னும் ஈட்டு திவ்யஸூக்தி இங்கே அநுஸந்தேயம்.

இது மட்டுமன்று; பரமாத்ம விஷயத்திலே ஸபரிகரமான வேதமே ப்ரமாணம் என்று அடுத்தபடியாக அருளிச்செய்கிறார் பட்டர். வேதங்கள் ஸபரிகரமாக (பரிகரங்களோடு கூடியவையாய்) இருக்க வேண்டும் என்று சொல்லுவதற்கு அபிப்ராயமாவது என்ன? வேதங்களுக்குண்டான பரிகரங்கள் யாவை? *ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணை: ந்யாயை: ஸார்த்த$_4$ம்* - ஸ்ம்ருதிகள், இதிஹாஸங்கள், புராணங்கள், பூர்வமீமாம்ஸா ந்யாயங்கள் உத்தரமீமாம்ஸா ந்யாயங்கள் இத்யாதிகள் பரிகரங்களாகும்.

ஒரு விஷயத்தைப் பற்றிய விசாரத்தில் இழியும்போது ஆகாங்ஷை விளையும். ஆகாங்ஷைக்கு ஸமாதாநம் ஏற்படாமல் போனால் அர்த்தபூர்த்தி உண்டாகாது. பூர்வகாண்டத்தை அத்யயநம் பண்ணுகிறோம். இதில் வாஜபேயம் முதலான யாக கர்மங்களைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்கின்றன. யாகங்களைப் பற்றி அறியும் காலத்தில் இந்த யாக கர்மங்களுக்கு ஆராத்ய தேவதை யார் என்னும் கேள்வி எழுகிறது. இந்த கேள்விக்கு ஸமாதாநம் வேதாந்த பாகத்தை அத்யயநம் பண்ணினால்தான் புலப்படும். இதைப்போல ப்ரஹ்ம காண்டத்தில், ஆராத்யனான பகவானைப் பற்றிச் சொல்லும்போது இவனுக்குண்டான ஆராதநங்களைப் பற்றிய ஆகாங்ஷை விளைய இதற்கு ஸமாதாநத்தை பூர்வகாண்டத்திலிருந்துதான் க்ரஹிக்க வேண்டும். இப்படி இரண்டு பாகங்களையும் சேர்த்துப் பார்க்கிறவனுக்குத்தான் உண்மையான அர்த்தம் புலப்படும்.

மதாந்தரஸ்தர்களில் சிலர் பூர்வபாகத்தை மட்டும் கொள்கின்றனர்; உத்தர பாகத்தை விட்டுவிடுகின்றனர். சிலர் உத்தர பாகத்தை மட்டும் ஏற்றுக் கொள்கின்றனர்; பூர்வபாகத்தை விட்டுவிடுகிறார்கள். இவர்களுடைய இத்தகைய நிலைக்கு ஒரு த்ருஷ்டாந்தத்தை அருளிச்செய்கிறார் தேஶிகன். சிலர் உடல் மட்டும் போதும், தலை வேண்டாம் என்றும், வேறு சிலர் தலை மட்டும் போதும் உடல் வேண்டாம் என்றும் சொல்லுவதைப் போன்றதாகும் இது என்கிறார் தேஶிகன். உடலை (பூர்வபாகத்தை) மட்டும் பற்றுகிறவர்கள் கபந்த

மீமாம்ஸகர்கள் (பூர்வமீமாம்ஸகர்கள்). தலையை (வேதாந்தத்தை) மட்டும் பற்றுகிறவர்கள் ராஹு மீமாம்ஸகர்கள் (அத்வைதிகள்). கபந்த மீமாம்ஸகர்கள் தெய்வத்தை ஒத்துக் கொள்ளாமல் யாக கர்மங்களை மட்டும் ஒத்துக் கொள்கிறவர்கள். வேதாந்தமானது ஆத்மாவைப் பற்றிச் சொல்லுகிறது. இந்த ஆத்மா யார்? பூர்வகாண்டமான வேத பாகத்திலே சொல்லப்பட்ட வாஜபேயம், ஸோமயாகம் போன்ற யாக கர்மங்களுக்கு தீக்ஷிதனாக இருந்து (யஜ்வாவாக) யாகத்தை நடத்துகிற ஜீவாத்மாதான் வேதாந்தம் கொண்டாடும் ஆத்மா என்கிறார்கள் இவர்கள். *ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம* என்று இந்த யாக கர்ம கர்த்தாவைத்தான் வேதாந்தம் கொண்டாடுகிறது என்பது இவர்கள் பக்ஷம். இவர்கள் மதத்தில் யாகமும் யாக கர்த்தாவான ஜீவாத்மாவும்தான் உண்டு. ஆக இவர்கள் ஜீவாத்மாவான ஶரீரத்தைப் பற்றி பரமாத்மாவான தலையை (ஆத்மாவை) விட்டுவிட்டார்கள்.

அத்வைதிகளோ ப்ரஹ்மத்தை ஒத்துக்கொண்டு வேதத்திலே சொல்லப்பட்டுள்ள கர்மங்கள் அனைத்தும் த்யாஜ்யம் என்று சொல்கின்றனர். இவர்கள் தலையை மட்டும் பற்றி ஶரீரத்தை விட்டவர்களைப் போல் ஆவார்கள் என்கிறார் தேஶிகன். கர்மத்துக்கும் ஜ்ஞாநத்துக்கும் ஸமுச்சயம் கிடையாது என்று சொல்லுகிறார்கள் இவர்கள். ஆனால் நம்முடைய மதத்தில் நாம் இப்படிக் கொள்வதில்லை. பக்திமார்க்க நிஷ்டனோ, ப்ரபத்தி மார்க்க நிஷ்டனோ, ஸரணாகதி மார்க்க நிஷ்டனோ அல்லது ஆசார்ய அபிமானமே உத்தாரகம் என்ற நிஷ்டையில் இருப்பவனோ யாராக இருந்தாலும் (ஸந்யாஸியாக இருந்தாலும்கூட) அவனால் கர்மத்தை ஒருகாலும் விட்டுவிட முடியாது. பூர்வபாகத்திலே விதிக்கப் பட்டுள்ள கர்மங்கள் சேதநனை நல்வழிப்படுத்துகின்றன. உத்தர பாகமானது பகவானைப் பற்றிய ஜ்ஞாநத்தை விளைவிப்பதன் மூலம் சேதநனுக்கு பகவல்லாபத்தை உண்டாக்குகிறது.

இது மட்டுமன்று; அத்வைதிகளுக்கும் நமக்கும் வேறொரு முக்யமான வ்யத்யாஸம் உண்டு. ஓரிடத்தில் கடம் உள்ளது. *அயம் கட:* (இது கடம்) என்கிற வாக்யத்தை ஒருவன் கேட்டு கடத்தைப் பற்றிய ஜ்ஞாநத்தைப் பெறுகிறான். அதைப்போல் *தத்த்வமஸி* என்கிற சாந்தோக்ய உபநிஷத் வாக்யத்தைக் கேட்ட அடுத்த க்ஷணத்திலேயே ஒருவனுக்கு *நானே ப்ரஹ்மம்* என்கிற அத்வைத

ஜ்ஞாநம் (மோக்ஷம்) வந்து விடுகிறது. வாக்யார்த்த ஜ்ஞாநம் வந்தவாறே மோக்ஷம் வந்து விடுகிறது என்பது அத்வைத மதம். ஆனால் நம்முடைய ஸம்ப்ரதாயத்தில் நாம் இப்படிக் கொள்வதில்லை. பக்தி மார்க்கத்தில் அந்வயித்தாலும் அதனால் மோக்ஷம் கிடையாது; ப்ரபத்தி மார்க்கத்தில் அந்வயித்தாலும் அதனால் மோக்ஷம் கிடையாது; ஶரணாகதி மார்க்கத்திலே அந்வயித்தாலும் அதனால் மோக்ஷம் வந்து விடாது; ஆசார்யாபிமானமே உத்தாரகம் என்று இருப்பவனுக்கும் அதனால் மோக்ஷம் கிடைத்து விடாது. நம்முடைய ஸம்ப்ரதாயத்தின்படி பக்தி மார்க்கத்திலேயோ, ப்ரபத்தி மார்க்கத்திலேயோ, ஶரணாகதி மார்க்கத்திலேயோ, ஆசார்யாபிமானமே உத்தாரகம் என்று இருப்பவனுக்கோ மோக்ஷம் கிடைப்பது பகவத் ப்ரஸாதத்தினாலேதான். ஒருவன் எந்த மார்க்கத்தைப் பின்பற்றினாலும் மோக்ஷம் கிடைப்பதற்கு பகவானுடைய அருள் வேண்டும். அத்ருஷ்ட த்வாரகமான மோக்ஷத்தைத்தான் நம்முடைய மதத்தில் நாம் ஒப்புக்கொள்கிறோமே தவிர, த்ருஷ்ட த்வாரா மோக்ஷம் என்பது நம்முடைய மதத்தின்படி ஒருகாலும் கிடையாது.

ஈஶ்வர ப்ரஸாதத்தினால்தான் மோக்ஷம் என்னும் அர்த்தத்தைத்தான் நம்மாழ்வார் திருவாய்மொழி ஆரம்பப் பாசுரத்திலேயே காட்டியருளுகிறார். *மயர்வற (அஜ்ஞாநம் தொலையும்படியாய்) மதிநலம் (பக்திரூபாபந்ந ஜ்ஞாநம் விளையும்படியாய்) அருளினன்* என்கிறார் நம்மாழ்வார். கடைசியில் *வீடுபெற்ற* என்றும் அருளிச்செய்துள்ளார். ஆக, பகவத் ப்ரஸாதமே அவித்யா நிவர்த்தகம். பக்தி உண்டாவதும் அவன் அருளினாலேதான். மோக்ஷப்ரதமாய் இருப்பதும் பகவத் ப்ரஸாதம்தான். இத்தால்தான் அஜ்ஞாநம் தொலைவதோ, ஜ்ஞாநம் உண்டாவதோ, மோக்ஷம் கிடைப்பதோ எல்லாம்.

ஶரணாகதி பண்ணியாகி விட்டது. ஆனால் மோக்ஷம் உடனே கிடைக்கிறதோ என்றால் – இல்லை. ஶரணாகதிக்கும் மோக்ஷத்துக்கும் நடுவே பகவத்ப்ரஸாதம் அமையவேண்டும். பகவத் ப்ரஸாதத்தை நடுவில் வைத்துத்தான் ஶரணாகதியினாலே மோக்ஷம் என்று நாம் சொல்லுகிறோம். *அருள் கொண்டாடும் அடியவர்* என்று மதுரகவி ஆழ்வார் பாசுரம். *ஶக்தனுக்கும் க்ருபை வேணும்; அஶக்தனுக்கும் க்ருபை வேணும்* என்று

நாயனார் வ்யாக்யாநம் அநுக்ரஹித்துள்ளார். இதனால் ஶக்தனுக்கும் அஶக்தனுக்கும் க்ருபை வேண்டும் என்பது அர்த்தமாகாது. ஶக்தனைக் குறித்தும், அஶக்தனைக் குறித்தும் எம்பெருமானுடைய க்ருபை அமைய வேண்டும் என்று அர்த்தம். ஶக்தனோடும், அஶக்தனோடும் வாசியற எம்பெருமான் க்ருபை இருவருக்கும் அமைவது எங்ஙனம்? ஶக்தனான பக்தியோக நிஷ்டன் பரிஶ்ரமப்பட்டு எம்பெருமானைப் பெற வேண்டும் என்று பக்தியோகத்தில் இழிகிறான். மிகவும் கஷ்டப்பட்டு ஸாதநாநுஷ்டானம் பண்ணுகிற இவன் விஷயத்தில் இக்காரணத்தினாலேயே பகவான் அருளைப் பொழிகிறான்; அவனுக்கு மோக்ஷத்தைத் தந்தருளுகிறான். அஶக்தனோ ப்ரபத்தி மார்க்கத்தில் இழிகிறான். *இவன் அகிஞ்சநனாய் அநந்யகதியாய் நம்மிடத்தில் ஶரணாகதனாய் இருக்கிறானே* என்று இவனிடத்திலும் பரம காருணிகனான பகவானுக்கு க்ருபை உண்டாகிறது. *குருவான உபாயத்தை அநுஷ்டித்தவனிடத்தில், அநுஷ்டானத்தினுடைய பெருமையைக் கடாக்ஷித்து ஸர்வேஶ்வரன் க்ருபை பண்ணுவதைப்போல் லகுவான உபாயத்தை அநுஷ்டித்தவனிடத்தில் பாவஸுத்தியைப் பார்த்து க்ருபை பண்ணுவன்* என்று ஸ்ரீராமாநுஜ ஸித்தாந்த ப்ரகாஶிகையில் ஸ்ரீ உ வே காரப்பங்காடு சிங்கப் பெருமாள் ஸ்வாமி அருளிச்செய்துள்ளது இவ்விடத்தில் காணத்தக்கது. ஆக அத்ருஷ்ட த்வாரகமாக – பகவத் ப்ரஸாத த்வாரகமாக இருப்பதுதான் மோக்ஷம். ஸாக்ஷாத் பக்தியோ, ப்ரபத்தியோ, ஶரணாகதியோ, ஆசார்யாபிமானமோ மோக்ஷப்ரதமன்று. இதுதான் நம்முடைய ஸித்தாந்தத்தினுடைய பரம ஸாரமான அர்த்தமாகும்.

இப்படி ஶக்தனோடு அஶக்தனோடு வாசியற அனைவருமே எம்பெருமானைப் பற்றி நின்று அவன் மூலமாகவே அவனை அடைய வேண்டும் என்று இருப்பதால் அனைவருக்குமே அவனைப் பற்றிய ஜ்ஞாநம் அவஶ்யமாகிறது. அவனை எத்தால் நாம் தெரிந்து கொள்ள முடியும்? அவனை நாம் வேத வேதாந்தங்களைக் கொண்டுதான் தெரிந்து கொள்ள முடியும். இதற்கு உபயுக்தமாய் அமைந்துள்ளவைதான் இதிஹாஸ புராணங்களும், தர்ம ஶாஸ்த்ரங்களும், பூர்வோத்தர மீமாம்ஸா ந்யாயங்களும் என்கிறார் பராஶர பட்டர். இத்தனையும் சேர்ந்து பகவானைப் பற்றி நமக்கு அறிவிக்கின்றன.

இதுவே வேதாந்த வாதம். அதாவது, நமக்கு பகவானுடைய ஆராதநங்களைப் பற்றிச் சொல்லும் கர்ம பாகமும் பரமாவஶ்யகம்; பகவத் ஸ்வரூபம், ரூபம், விபூதிகள், குணங்கள் போன்றனவற்றை அறிவிக்கும் ஜ்ஞாந பாகமும் பரமாவஶ்யகம். கர்மத்தாலே பகவான் திருவுள்ளம் உகக்கிறான். நம்மிடத்தில் இருக்கக்கூடிய ப்ரஹ்ம ஜ்ஞாநாநுகுணமாக அவன் நமக்கு அநுக்ரஹத்தைப் பொழிகிறான். ஸம்ஸாரி ஜீவாத்மாக்களான நாம் மோக்ஷாநந்தத்தைப் பெறுகிறோம். இதுதான் வைதிக ஸித்தாந்தம். இதை நிரூபிக்கும்படியாய் அமைந்துள்ளதுதான் பட்டர் அருளிச்செய்துள்ள இந்த ஆஶ்சர்யமான ஶ்லோகம் என்கிறார் பெரியவாச்சான் பிள்ளை.

(3) இனி *அஹம் ஏவ வேத்ய:* [நானே (ஜக்தகாரணனாக) அறியப்படுகிறேன்] என்னும் பகவானுடைய திருவுள்ளக் கருத்தை வேதவ்யாஸர் எப்படிக் காட்டுகிறார் என்பதைப் பார்ப்போம். ஈஷத்யதிகரணம் முதற்கொண்டு முதலத்யாயம் முழுவதும், இரண்டாவது அத்யாயம் முதலிரண்டு பாதங்களும் இந்த அர்த்தத்தைக் காட்டுமாறுதான் அமைந்துள்ளன. ப்ரக்ருதி ஜகத்காரணம் என்றும், ஜீவன்தான் ஜகத்காரணம் என்றும், ஜீவவிஶேஷம்தான் ஜகத்காரணம் என்றும் உள்ள பூர்வபக்ஷங்களை எல்லாம் கண்டித்து ப்ரஹ்மமே ஜகத்துக்குக் காரணம் என்னும் பரம வேதாந்தார்த்தத்தை முதல் நான்கு பாதங்களிலே ஸ்தாபித்துள்ளார் வேதவ்யாஸர். *அஹம் ஏவ வேத்ய:* - *என்னைத் தவிர ப்ரக்ருதியோ, ஜீவனோ, ஜீவவிஶேஷமோ ஜகத்காரணமாக வேத்யமன்று; நானே ஜகத்காரணனாக வேதாந்தத்தினால் அறியப்படுபவன்* என்கிறான் பகவான். பகவானுடைய ஸர்வகாரணத்வத்தை வ்யாஸர் தர்க்கத்தைக் கொண்டு சொல்லவில்லை. பகவானுடைய ஜகத்காரணத்வத்தை வேதவேதாந்த வாக்யங்களைக் கொண்டே அறுதியிடுகிறார் வ்யாஸர். இப்படி அறுதியிடப்பட்ட அர்த்தத்தை இரணாடாவது அத்யாயம் முதலிரண்டு பாதங்களிலே ஸ்த்ரீகரணம் பண்ணுகிறார்.

ஜகத்காரணம் ப்ரஹ்ம, *சிதசித் விலக்ஷணம் ப்ரஹ்ம*, *அகிலகாரணம் ப்ரஹ்ம*, *அத்$_3$பு$_4$த (த்ரிவித) காரணம் ப்ரஹ்ம*, *நிஷ்காரணம் ப்ரஹ்ம* என்று ப்ரஹ்மத்தைப் பற்றி வேதாந்தங்கள் கோஷிக்கின்றன. ஆனால் ப்ரக்ருதி ஜகத்காரணம் என்கிறான் ஸாங்க்யன். மற்றவர்கள் (வைஶேஷிகர்கள், பௌத்த ஜைநர்கள், ஶைவர்கள்) பரமாணுக்கள் ஜகத்காரணம் என்கின்றனர். இரண்டாவது

அத்யாயத்தில் இரண்டாவது பாதமான தர்க்க பாதத்தில் ப்ரக்ருதி காரண வாதமோ, பரமாணு காரண வாதமோ செய்வது தவறு என்று இந்த ஐந்து மதங்களையும் கண்டித்து ப்ரஹ்மமே ஜகத்காரணம் என்று முதலத்யாயத்தில் வேதவேதாந்த வாக்யங்களைக் கொண்டு தாம் நிரூபித்த அர்த்தத்தை மேலும் ஸ்திரமாக்குகிறார் வ்யாஸர்.

கஜேந்த்ராழ்வான் பகவானிடத்தில் ஶரணாகதி பண்ணும் ப்ரகாரத்தை மிக அழகாக வர்ணிக்கிறார் வ்யாஸர். முதலில் *நமோஸ்துதே* என்கிறார் பகவானைப் பார்த்து கஜேந்த்ராழ்வன். இதுதான் பகவானிடத்தில் இவர் பண்ணும் ஶரணாகதி. *நமோஸ்துதே = நமஸ்கரிக்கிறேன்* என்கிறார். நமஸ்காரம் பண்ணுவதுதான் ஶரணாகதி. நமஸ்காரம் வேறு, ஶரணாகதி வேறு என்பதன்று. நமஸ்காரம் பண்ணுவது ஶரணாகதியையே குறிக்கும். இவ்விஷயம் நமதாசார்யர்களால் பலவிடங்களில் சொல்லப்பட்டுள்ளது. ஓரிடம் காட்டுகிறேன்.

தர்மபுத்ராதிகள் கானகத்திலே வாஸம் செய்து கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது மார்க்கண்டேயர் அவர்களைப் பார்க்க வருகிறார். அவர்களுக்கு பகவானுடைய பரத்வத்தைப் பற்றி அபாரமாக உபந்யாஸம் பண்ணுகிறார். பகவானுடைய பரத்வத்துக்கு சாட்சியாய் இருப்பவர் மார்க்கண்டேயர் என்று மார்க்கண்டேயரைக் கொண்டாடுகிறார் ஆழ்வார். *மறுத்துமவனோடே கண்டீர் மார்க்கண்டேயனும் கரியே* (5-2-7) என்று அவர் பாசுரம்.

ஸ்ரீமந்நாராயணனுடைய பரத்வத்தை தர்மபுத்ராதிகளுக்குச் சொல்லி அந்த எம்பெருமானை ஶரணம் பற்றுங்கள் என்கிறார் மார்க்கண்டேயர். *ஸர்வேஷாமேவ லோகாநாம் பிதா மாதா ச மாத$_3$வ:। க$_3$ச்ச$_2$த்$_4$வமேநம் ஶரணம் ஶரண்யம் புருஷர்ஷபா$_4$:॥* (எல்லா உலகங்களுக்கும் தாய் தந்தையாய் இருப்பவன் மாதவன். மனிதர் தலைவர்களே! அப்படிப்பட்ட இவனை ஶரணமடையுங்கள்) என்று மார்க்கண்டேயருடைய உபதேஶம். இந்த மாதவன் – நாராயணன் எங்கு இருக்கிறான்? என்று கேட்கிறார்கள் பாண்டவர்கள். *நாராயணன் எங்கு இருக்கிறான் என்று கேட்கிறீர்களே! உங்களோடு அத்தை பிள்ளை அம்மான் பிள்ளை என்று உறவு வைத்திருக்கிறானே கண்ணபிரான்! அவன்தான் நாராயணன்* என்கிறார் மார்க்கண்டேயர். *நம்முடைய கண்ணனா!* என்கிறார் தர்மபுத்ரர். கண்ணனுடைய ப்ரபாவமே தெரியவில்லை தர்மபுத்ரருக்கு. (ஸௌலப்ய பூர்ணனான) கண்ணனோடு கூடித்திரிகிற ஸ்வபாவம்

படைத்தவர்களுக்கே கண்ணனுடைய ப்ரபாவம் (பரத்வம்) நெஞ்சில் படாதே! தர்மபுத்ரருக்கு எப்படித் தெரியப்போகிறது! என்கிறார்கள் நம் பெரியவர்கள்.

கண்ணனிடத்திலே ஶரணாகதி பண்ணுவீர்களாக! என்று மார்க்கண்டேயர் சொல்ல, பாண்டவர்கள் என்ன செய்தார்கள் என்பதை வேதவ்யாஸர் அத்புதமாக வர்ணித்திருக்கிறார். *ஏவமுக்தாஶ்ச தே பார்த்தா$_2$: யமௌ ச புருஷர்ஷபௌ$_4$। த்$_3$ரௌபத்$_3$யா ஸஹிதா: ஸர்வே நமஶ்சக்ருர் ஜநார்த்த$_3$நம்॥* (பாரதம் ஆர 192-57)(இப்படிச் சொல்லப்பட்ட குந்தீபுத்ரர்களும் நகுலசகாதேவர்களும் த்ரௌபதியோடுகூட எல்லாரும் ஜநார்த்தனனை நமஸ்கரித்தனர்) என்கிறார் வ்யாஸர். இந்த இரண்டு வாக்யங்களையும் நாம் சேர்த்துப் பார்த்தால் நமஸ்காரம்தான் ஶரணாகதி என்பதை நாம் உணரலாம்.

நமஸ்காரம் பண்ண யார் அதிகாரிகள்? யார் வேண்டுமானாலும் நமஸ்காரம் பண்ணலாம். எவனும் ஶரணாகதி பண்ணலாம். ஆனால் ஶரணாகதி பண்ண வேண்டிய விஷயத்திலேதான் ஶரணாகதி பண்ண வேண்டுமே தவிர, யாரிடத்திலும் ஶரணாகதி பண்ணுவது என்பது கிடையாது. ஶரணாகதிக்கு விஷய நியமம் உண்டு ஆனால் அதிகாரி நியமம் கிடையாது. ப்ராஹ்மண அப்ராஹ்மண விபாகமற, ஸ்த்ரீ புருஷ விபாகமற, தேவமநுஷ்ய விபாகமற, வஶிஷ்ட சண்டாள விபாகமற யார் வேண்டுமானாலும் ஶரணாகதி பண்ணலாம். ஆனால் யாரிடத்தில் ஶரணாகதி பண்ண வேண்டும்? ப்ரஹ்மாவை ஜகத்துக்குக் காரணம் என்று ஶாஸ்த்ரம் சொல்லுகிறது. ஆனால் அந்த ப்ரஹ்மாவையும் படைத்தவனான – காரணத்துக்கும் காரணனான பகவானிடத்தில்தான் ஶரணாகதி பண்ண வேண்டும்.

ஆக ஶரணாகதி யாரிடத்தில்? *அகில காரணாய – அத்புத காரணாய – நிஷ்காரணாய* என்று ஶரண்யனான பகவானை காரணனாகப் பலவாறு வர்ணிக்கிறார் கஜேந்த்ராழ்வான். அகில காரணாய = ஒன்று விடாமல் எல்லாவற்றுக்கும் காரணனாய் இருக்கிறான் பகவான். அத்புத காரணாய =ஜகத்துக்கு நிமித்த காரணமாயும் இருக்கிறான்; ஜகத்துக்கு உபாதாந காரணமாயும் இருக்கிறான்; ஜகத்துக்கு ஸஹகாரி காரணமாயும் இருக்கிறான் பகவான். ஆக ஶரண்யத்வம் இருக்க வேண்டும் என்றால் காரணத்வம் இருக்க வேண்டும். ஜகத்காரணத்வம் இல்லையென்றால், ஶரண்யத்வமே கிடையாது. பகவான் ஜகத்துக்கு காரணமாயும் இருக்கிறான் ஸர்வலோக ஶரண்யனாயும்

இருக்கிறான். இப்படி பகவானுக்குண்டான ஶரண்யத்வத்தை வர்ணிக்கிற காலத்திலே அவனுடைய காரணத்வத்திலே ஈடுபடுகிறார் வ்யாஸர்.

ஶாரீரகத்திலே இந்த காரணத்வத்தை வர்ணிக்கிற காலத்திலேயும் காரணம் காரணம் காரணம் என்று முதல் பாதத்திலிருந்து ஆறாவது பாதம் வரையில் காரணத்வ விசாரத்திலேயே இழிகிறார் வ்யாஸர். அடுத்த இரண்டு பாதங்களில் *ஸர்வம் ப்ரஹ்ம கார்யம்* என்று நிரூபிக்கிறார். ஆக *ப்ரஹ்மம் ஜகத்காரணம் – ஜகத்து ப்ரஹ்ம கார்யம்* என்று ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் உண்டான கார்ய காரண பாவத்தை விவரிக்கிறார் வ்யாஸர் முதல் இரண்டு அத்யாயங்களிலே என்றதாயிற்று. இத்தனையும் அகாரத்திலே அடங்கி விடுகிறது. அகாரம் காரண வஸ்துவைக் குறிக்கிறது என்று சொல்லுவதிலே ஔசித்யம் உள்ளது என்கிறார்கள் நமதாசார்யர்கள். அகாரம் ஶப்தங்களுக்கெல்லாம் காரணமாய் இருக்கிறது. ஜகத்துக்குக் காரணமாய் இருக்கிறான் பகவான். அகாரமும் ஒரு காரணம்; பகவானும் ஒரு காரணம். அது வாசகமாய் இருக்கிறது; இவன் வாச்யமாய் இருக்கிறான். அது நாமமாய் இருக்கிறது; இவன் நாமியாய் இருக்கிறான். அது ஶப்தமாய் இருக்கிறது; இவன் பொருளாய் இருக்கிறான். *ஆவியும் ஆக்கையும்* என்கிறார் ஆழ்வார். ஆவி = உயிர்; ஆக்கை = உடல். ஶப்தத்தை உடலாகவும் அர்த்தத்தை உயிராகவும் சொல்லுவது மரபு. பகவான் ஆவியாய் இருக்கிறான்; ஶப்தங்கள் எல்லாம் ஆக்கையாய் இருக்கின்றன. அகார வாச்யனான பகவானுக்குண்டான காரணத்வ பூர்த்தியை வர்ணிப்பதற்கு இத்தனை பாதங்களை அருளிச்செய்திருக்கிறார் வேதவ்யாஸர்.

ஜகத்துக்குக் காரணம் ப்ரஹ்மம் என்று சொல்லுகிறபொழுது சாந்தோக்ய உபநிஷத்திலே ஸத்வித்யா ப்ரகரணத்திலே ஶ்வேதகேதுவான பிள்ளைக்கு தகப்பனாரான உத்தாலகர் ஆஶ்சர்யமாகப் பலவிஷயங்களைச் சொல்லிக் கொண்டு வருகிறார். இந்த ப்ரகரணத்தில்தான் *தத்த்வமஸி ஶ்வேதகேதோ* (ஶ்வேதகேதுவே! நீயே பரம்பொருளாகிறாய்!) என்ற வாக்யம் வருகிறது. தத்+த்வம்+அஸி = தத்த்வமஸி. தத் என்றால் என்ன? த்வம் என்றால் என்ன? அஸி என்றால் என்ன? தத்த்வமஸி என்றால் என்ன? அத்வைதம், விஶிஷ்டாத்வைதம், த்வைதம் என்று மதபேதங்கள் உண்டாவதற்கு மூலகாரணமாய் அமைந்துவிட்டது இந்த வாக்யம்.

நம்மாழ்வார் திருவாய்மொழி ஆரம்பத்திலேயே தத்த்வமஸி வாக்யார்த்தத்தை அருளிச்செய்கிறார். *நலமுடையவன்* = குணவிஶிஷ்டம் ப்ரஹ்ம; இதுதான் தச் சப்தார்த்தம். *ஆமவையாயவை* (1-1-4)= த்வம் ஶப்தார்த்தம் (சிதசித் விஶிஷ்டமான ப்ரஹ்மம்) ஆய் நின்ற = அஸி ஶப்தார்த்தம். குண விஶிஷ்டமான ப்ரஹ்மத்துக்கும் சிதசித் விஶிஷ்டமான ப்ரஹ்மத்துக்கும் அத்வைதம் சொல்லுவது நம்முடைய ஸம்ப்ரதாயம். சாந்தோக்யம் வேறு, திருவாய்மொழி வேறு என்பதன்று. திருவாய்மொழியை *சாந்தோக்ய ஸமம்* என்று கொண்டாடுகிறார்கள் நமதாசார்யர்கள். பத்தாம் பத்திலும் *தானே உலகெல்லாம்* என்று இவ்வர்த்தத்தைக் காட்டுகிறார் நம்மாழ்வார். திருவாய்மொழியின் நடுவிலும் *யானே நீ* என்று அவருடைய திருவாக்கு அவைந்துள்ளது.

ஸர்வம் க$_2$ல்வித$_3$ம் ப்$_3$ரஹ்ம – தஜ்ஜலாந் (எல்லாப் பொருள்களுமே ப்ரஹ்மம்தான் – அதனிடமிருந்துதான் தோன்றியும், வாழ்ந்தும், அதனிடத்திலேயே மறைந்தும் போவதால்) என்று வேதாந்த வாக்யம். தஜ்ஜ = அங்கிருந்து உண்டாகிறது; தல்ல = அங்கு லயிக்கிறது; ததந் = அதனாலே நியமிக்கப் படுகிறது. இம்மூன்றையும் சேர்த்து *தஜ்ஜலாந்* என்று சொல்லுகிறது வேதாந்தம். இதைத்தான் நம்மாழ்வாரும் *தானே உலகெல்லாம் தானே படைத்திடந்து தானே உண்டுமிழ்ந்து தானேயாள்வானே* (10-5-3) என்கிறார். தமிழ்ப்பாசுரமாய் இருந்தாலும் வேதாந்தார்த்தங்களை நம்மாழ்வார் விஶதீகரணம் பண்ணுவது போலே வேறு யாராலும் செய்ய முடியாது.

தத்த்வமஸி வாக்யார்த்தத்தை நிரூபணம் பண்ணும் போது நமதாசார்யர்கள் அத்புதார்த்தம் ஒன்றைக் காட்டியருளுகிறார்கள். *உததமாதே$_3$ஶமப்ராக்ஷ்ய: யேநாஶ்ருதம் ஸ்ருதம் ப$_4$வத்யமதம் மதம் அவிஜ்ஞாதம் விஜ்ஞாதம்* (சாந் 6-1-3)(எதைக் கேட்டால் கேட்கப்படாதது எல்லாம் கேட்கப்பட்டதாகவும், எதை நினைத்தால் நினைக்கப்படாதது எல்லாம் நினைக்கப்பட்டதாகவும், எதை அறிந்தால் அறியப்படாதது எல்லாம் அறியப்பட்டதாகவும் ஆகிறதோ, அந்தப் பரம்பொருளைக் கேட்டாயோ?) என்று ப்ரதிஜ்ஞா வாக்யம். ஒன்றை அறிந்தால் எல்லாவற்றையும் அறிந்து விடலாம். அதாவது காரண விஜ்ஞாநத்தாலே கார்ய விஜ்ஞாநம். இதற்கு த்ருஷ்டாந்தம் காட்டுகிறார் - *யதா$_3$ ஸோம்ய ஏகேந ம்ருத்பிண்டே$_3$ந ஸர்வம் ம்ருண்மயம் விஜ்ஞாதம் ஸ்யாத்* (சாந் –1-4) என்று. மண்ணை அறிந்தால் குடத்தை அறியலாம்.

பொன்னை அறிந்தால் பொன் ஆபரணங்களை அறியலாம். ஆக ஒன்று காரணம்; மற்றொன்று கார்யம். இங்கே சொல்லப்பட்டுள்ள ப்ரதிஜ்ஞா, த்ருஷ்டாந்தம் இரண்டையுமே ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் உண்டான கார்ய காரண பாவத்தைச் சொல்லாமல் போனால் சொல்ல முடியாது. இப்படி ப்ரதிஜ்ஞா த்ருஷ்டாந்தம் என்று சாந்தோக்யத்தில் இருக்கிற இரண்டு விஷயங்களை வைத்துக்கொண்டு ஸ்ரீபாஷ்யத்திலே ஆரம்பத்திலிருந்து கடைசி வரையிலும் வேதாந்தார்த்தங்களை நிரூபித்துக் கொண்டு வருகிறார் ஸ்வாமி எம்பெருமானார்.

எம்பெருமானார் தர்ஶநம் எனப்படும் நம்முடைய மதம் உபயவேதாந்த ஸம்ப்ரதாயமாகும். ஸம்ஸ்க்ருத வேதாந்தம் விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தைப் பற்றி இருக்கும். பகவானைப் பற்றி அறிவிப்பதிலே நோக்குடையது இது. த்ராவிட வேதாந்தம் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தைப் பற்றி இருக்கும். பகவானை அநுபவிப்பதிலே நோக்குடையது இது. அநாதியானதும் பரம வைதிகமானதுமான இந்த தர்ஶநத்தைச் சேர்ந்தவர்களான நமக்கு முதல்முன்னம் பகவானைப் பற்றிய ஜ்ஞாநம் ஓரளவாவது அமைய வேண்டியது அவஶ்யமாகும். பகவானைப் பற்றி அறிவிப்பதிலே நோக்குடைய வேதவேதாந்தங்களினுடைய உண்மையான தாத்பர்யங்களை பகவான் அருளிச்செய்துள்ள கீதா ஶாஸ்த்ரத்தைக் கொண்டும், ஸ்ரீவேதவ்யாஸர் அருளிச்செய்துள்ள ஶாரீரக மீமாம்ஸா ஶாஸ்த்ரத்தைக் கொண்டும், மஹர்ஷிகள் அருளிச்செய்துள்ள மற்றும் பல க்ரந்தங்களைக் கொண்டும் நாம் ஒருவாறு அறுதியிட்டுக் கொள்ள வேண்டும். பகவதநுபவத்துக்கு முற்பாடாக பகவானைப் பற்றிய ஜ்ஞாநம் அமைவது அவஶ்யம் என்பதால் இவை முதல்முன்னம் நமக்கு ஜ்ஞாதவ்யங்களாகின்றன. வேதமர்யாதையில் நிலைநின்று பரமவைதிகர்களாய் வேதவேத்யனான பகவானை அநுபவிப்பதிலே ஊற்றமுடையவர்கள் ஆழ்வார்கள். இவர்கள் அருளிச்செய்துள்ள திவ்யஸூக்திகள் எல்லாம் பகவதநுபவ பரீவாஹரூபமானவையாகும். மஹாசார்யர்களான நம் பெரியோர்கள் இவற்றுக்கு அநுக்ரஹித்துள்ள வ்யாக்யாநங்களை ஸேவித்து இவற்றினுடைய ரஸாநுபவத்தை நாமும் ஓரளவு பெற்று உஜ்ஜீவிக்கலாம்.

ஆக ஸ்ரீவைஷ்ணவர்களான நமக்கு வேதம் சிறந்த ப்ரமாணம். வைதிகர்களான மஹர்ஷிகள் அருளிச்செய்துள்ள க்ரந்தங்களும, பரமவைதிகர்களான ஆழ்வார்கள் அருளிச்செய்துள்ள திவ்யப்ரபந்தங்களும்,

வேதவேத்யனான பகவான் திருவாய் மலர்ந்தருளிய கீதா ஶாஸ்த்ரமும் சிறந்த ப்ரமாணங்கள். உபயவேதாந்தத்துக்கும் உபயவேதாந்த வேத்யனான பகவானுக்கும் உண்டான பெருமைகள் எல்லாம் வாசாமகோசரம். ஏதோ ஒரு சில விஷயங்களையே இக்கட்டுரையில் அடியேன் யதாமதி விண்ணப்பித்துள்ளேன். இன்னும் சொல்லப்பட வேண்டிய விஷயங்கள் பல உள்ளன. *ஸ்ம்ருதிருபகுருதே ஸேதிஹாஸை: புராணை: ந்யாயை: ஸார்த்த4ம்* என்னும் பட்டர் ஸ்ரீஸூக்தி இங்கே விவரிக்கப்படவில்லை. இதற்கு விவரணமாய் அமைந்துள்ள *வேதார்த்தம் அறுதியிடுவது ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களாலே* என்னும் ஸ்ரீவசநபூஷண சூர்ணிகைக்குண்டான வ்யாக்யாந அரும்பதங்களிலே நமதாசார்யர்கள் பல உண்மைகளைக் காட்டியருளி உள்ளார்கள். இவற்றையும் நாம் அவசியம் அறிய வேண்டும். வேதத்தைப் பற்றியும் வேதவேத்யனான பகவானைக் குறித்தும் ஆழ்வார்களும் ஆசார்யர்களும் அருளிச்செய்துள்ள மற்றுமுண்டான பல ஸ்ரீஸூக்திகளும் இங்கே விவரிக்கப்படவில்லை. இத்தகைய அர்த்தவிஶேஷங்களைத் தொகுத்து மற்றொரு ஸமயம் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

ஸ்ரீ:

வேதம்

ஸ்ரீ உவே ஜகத்குரு ப்ரதிவாதி பயங்கரம் காதி அநந்தாசார்ய ஸ்வாமி

ப்ரத்யக்ஷம், அநுமானம், ஶப்தம் என ப்ரமாணங்கள் மூன்று. அவற்றுள் ஶப்தமானது லௌகிகம் என்றும் வைதிகம் என்றும் இரண்டு வகைபடும். புதிது புதிதாக மனிதர் முதலியவைகளால் சொல்லப்படும் ஶப்தம் லௌகிகஶப்தம் எனப்படும். வைதிக ஶப்தங்களே வேதம் எனப்படுகின்றன.

வேதமாவது -எப்பொழுதும் ஒரே மாதிரியாய் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டு உச்சரிக்கப்படும் ஶப்தங்களின் கூட்டம். இவ்வேதமானது, ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் ஈஶவரனால் நான்முகனுக்கு உபதேஶிகப்பட்டு , அவனால் தமது ஶிஷ்யர்களுக்கு உபதேஶிகப்பட்டு ஶிஷ்ய-ப்ரஶிஷ்ய-பரம்பரையாய் நமக்கு கிடைத்திருக்கிறது.

வேதம் என்பது காரணப் பெயராகும். *வித$_3$ந்தி, அநேநேதிவேத$_3$:* என்றும், *வேத$_3$யதீதிவேத$_3$:* என்றும் இரண்டு விதமாக வேதத்தின் வ்த்பத்தி கூறப்படுகிறது. *வித$_3$-ஜ்ஞாநே* என்கிறதா$_4$துவிலிருந்து வேதஶப்தம் உண்டாகிறது. *வேத$_3$யதி* என்பதற்கு *அறிவிக்கிறது* என்பது அர்த்தமாகும். ஆகையால் *வேத$_3$:* என்பதற்கு அறிவிக்குமது - அதாவது ப்ரத்யக்ஷம், அநுமானம் என்கிற ப்ரமாணங்களால் அறியமுடியாதவற்றை அறிவிக்குமது என்று பொருளாகும். ப்ரத்யக்ஷம், அநுமானம் ஶப்தம் என மூன்று ப்ரமாணங்கள் - என்று முன்புகூறி இருப்பதால், ப்ரத்யக்ஷம், அநுமானம் இவற்றால் அறியக்கூடாதவற்றை அறிவிப்பது - எனவே தன்னை ஒழியமற்ற ப்ரமாணங்களால் அறியக்கூடாதவற்றை அறிவிப்பது - என்பது தேர்ந்த பொருளாம்.

வித$_3$ந்திஅநேந என்கிற வ்த்பத்தியில் ப்ரத்யக்ஷம், அநுமானம் இவற்றால் அறியமுடியாதவற்றை எதனால் அறிகிறார்களோ அது வேதம் என்று அர்த்தமாகும். வ்-த்பத்தி எதுவானாலும் , வேறு ப்ரமாணங்களால் அறியகூடாதவற்றை அறிவதற்கு ஸாதனமாயிருப்பது வேதம் என்பதே பொருளாகும். இந்த அர்தத்தை *ப்ரத்யக்ஷேணாநு மித்யாவாயஸ் தூபாயோநபுத்$_3$த்$_4$யதேயத்தம் வித$_3$ந்திவேத்தேனத ஸ்மாத்வேதஸ்ய வேத$_3$தா

என்று முன்னோர்கள் கூறினார்கள். ப்ரத்யக்ஷத்தாலும், அநுமானத்தாலும் அறியக்கூடாத உபாயத்தையறிவிக்குமது வேதம் என்பது இதற்கு அர்த்தமாகும்.

வேதம்அபௌருஷேயம்

அபௌருஷேயம் என்பதற்கு புருஷனால் செய்யப்படாதது என்று அர்த்தமாகும். ஶப்தம் என்றால் ஒலி. கண்டம், தாலு, பல், உதடு முதலிய முகத்திலுள்ள உறுப்புகளிலிருந்து வெளிப்படும் ஒலியே ஶப்தம் எனப்படுகிறது. ஒவ்வொரு ஶப்தமும் புருஷனால் செய்யப்பட்டுத்தான் வெளியாகிறது. இத்தகைய ஶப்தங்களின் கூட்டமே வேதமாகும். வேதம் என்னும் ஶப்தமும் புருஷனால் உண்டாக்கப்பட்டு வெளிவருவதால் அதுவும் பௌருஷேயமாகத் தானே கருதப்படவேண்டும்! உண்மை நிலை இப்படியிருக்க வேதத்தை அபௌருஷேயமாகச் சொல்வது எங்ஙனம்? என்னும் கேள்வி எழுகிறது.

இதற்கு ஸமாதானம் கூறுமுன் பௌருஷேயமும், அபௌருஷேயமுமான இரண்டு த்ருஷ்டாந்தங்களை எடுத்துக்கொண்டு விசாரணை செய்வோம். காளிதாஸனால் செய்ய்யப்பட்ட ரகுவம்சத்தில் * வாக$_3$ர்த்தா$_2$விவ ஸம்ப்ருக்தௌ* என்கிற ஶ்லோகத்தை எடுத்துக்கொள்வோம்; அதைப்போல் யஜுர்வேதத்தில் *இஷேத்வோர்ஜேத்வா* என்கிற மந்திரத்தையும் எடுத்துக்கொள்வோம். இவ்விரண்டுக்கும் உள்ள வ்யத்யாஸம் என்னவென்பதை ஆராய்வோம். ”வாக$_3$ர்த்தா$_2$விவ .... ” என்கிற ஶ்லோகத்தில் வாக்$_3$, அர்த்தௌ$_2$, இவ, ஸம்ப்ருக்தௌ என்கிற பதங்கள் வரிசையாக சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பதங்கள் காளிதாசனால் புதிதாய் உண்டாக்கப்பட்டவைகள் அல்ல என்பதை நாம் அறிவோம். ஆனால் காளிதாசன் செய்தது என்ன? தான் உத்தேஶித்த அர்த்தங்களை வெளிப்படுத்துவதற்கு வேண்டியபடி பதங்களை முன்பின்னாக சேர்த்துப்பிணைத்ததே காளிதாசர் செய்த காரியமாகும். இதைக்கொண்டே நாம் ரகுவம்சம் காளிதாசன் செய்தது என்று அறிகிரோம். இதைப்போன்று *இஷேத்வோர்ஜேத்வா* என்கிற மந்திரத்தில் உள்ள *இஷே*, , *த்வா*, *ஊர்ஜே*, *த்வா* என்கிற ஶப்தங்களை இப்பொழுது காணப்படும் வரிசைக்க்ரமமாகச் சேர்த்தது யார்? அப்படி சேர்த்து பிணைத்தவர் யாராவது

இருப்பாரேயானால் அவரே வேதங்களை செய்தவர் என்று சொல்லலாம். ஆனால் அப்படிப்பட்டவர் ஒருவரும் இல்லை என்று சொல்ல வேண்டியிருக்கிறது. ஏனென்றால் வேதத்தைச் செய்தவர் யாராவது இருப்பாரேயானால் மஹாபாரதம், ஸ்ரீ ராமாயணம் முதலான க்ரந்தங்களை செய்த வியாஸர் வால்மீகி முதலியவர்களுடைய திருநாமங்களைப் பரம்பரையாக நாம் எப்படி சொல்லுகிறோமோ அப்படியே வேதகர்த்தாவின் பெயரையும் சொல்லி வந்திருக்கவேணும். வேதகர்தாவின் பெயரை நாம் நம் முன்னோர்களின் எந்த க்ரந்தத்திலும் காண்கிறோமில்லை. கர்ண பரம்பரையாக கேள்விப்பட்டதும் இல்லை. சிறுசிறு க்ரந்தங்களின் கர்த்தாக்களின் பெயர்களையே நாம் பரம்பரையாக தெரிந்து கொண்டிருக்கும் போது மிகவும் பெரியதும் முக்யமானதுமான வேதத்தின் கர்த்தாவின் பெயரை நாம் கேட்கவும் கூடாமல் இருப்பதால் உண்மையில் வேதகர்த்தா என்று ஒருவரும் இல்லை என்றே நிஶ்சயிக்க வேண்டியிருக்கிறது. இதுவேகாளிதாசனுடைய க்ரந்தத்துக்கும்வேதத்துக்கும் உள்ள வித்தியாஸமாகும்.

காளிதாஸன் *வாக$_3$ர்த்தா$_2$விவ ஸம்ப்ருக்தௌ* என்றாதியாகவுள்ள ஶ்லோகங்களிலுள்ள பதங்களை வரிசைக்ரமமாக அமைத்து முதன் முதலாக சொன்னான். பிறகு அதையொட்டி அதே வரிசைக்க்ரமத்தில் பின்னுள்ளோர்களும் சொல்லி வருகிறார்கள்; ஆனாலும் முதலில் பதங்களின் வரிசைக் க்ரமத்தை அமைத்தவன் காளிதாஸனே என்பதால் அவனே ரகுவம்சத்தின் கர்த்தாவாக சொல்லப்படுகிறான். வேதத்தை நாம் எல்லோரும் படிக்கிறோமானாலும்காளிதாஸனை போன்று வேதத்திலுள்ள பதங்களின் வரிசைக் கிரமத்தை அமைத்தவர் ஒருவருமில்லை என்பதால் வேதகர்த்தாஒருவரும் இல்லை என்று கொள்ள வேண்டியதாயிருக்கிறது.

ஒவ்வொரு முறையும் ரகுவம்சத்தை படிக்கும்போது நாம் ஒலியை உண்டாக்குகிறோம். ஆனால் நாம் ரகுவம்ச கர்த்தாக்களாகக் கொள்ளப்படுகிறோமா? இல்லை; இதைப் போன்றே வேதத்தை படிக்கும் போதும் நாம் ஒலியை உண்டாக்கினாலும் வேதத்தில் அடங்கிய பதங்களின்வரிசைக் க்ரமத்தை அமைத்தவர்கள் நாம் அல்ல என்பதால் நாம் வேத கர்த்தாக்கள் அல்லர். ஆகவே வேதம் அபௌருஷேயம் எனப்படுவதில் தப்பு ஒன்றும் இல்லை.

வேதம் நித்யம்

ஸ்வரூப நித்தியம் என்றும் பிரவாஹ நித்யம் என்றும் நித்ய வஸ்துக்கள் இரண்டு வகைப்படுகின்றன. எந்த வஸ்துக்கள் முக்காலங்களிலும் ஒரே தன்மையை உடையனவாய்க் கொண்டு எப்பொழுதும் அழிவில்லாமல் இருக்கின்றனவோ அவை ஸ்வரூப நித்யமெனப்படும். மூலப்ரகிருதியும் ஜீவாத்மாக்களும் பரமாத்மாவும் ஸ்வரூப நித்யங்களாம். இந்த மூவகைப்பட்ட வஸ்துக்களின் ஸ்வரூபங்களும் எப்பொழுதும் ஒருபடிப்பட்டிருபனவையாய் என்றும் அழியாமல் இருக்கின்றன. ஈஶ்வரன் எந்த திருவவதாரம் எடுத்தாலும் அவனது ஸ்வரூபத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படுவது இல்லை. ஜீவாத்மாக்கள் கர்மாநுகுணமாக ஶ்ரீரங்கள் எடுத்தாலும் ஸ்வரூபத்தில் எந்தவித மாறுதலும் ஏற்படுவதில்லை.ஸ்வரூபத்தைப்பற்றியதும் ஸ்வபாவத்தைப் பற்றியதும் என மாறுதல் (விகாரம்) இரண்டு வகைப்படும். ஈஸ்வரனுக்கு இவ்விரண்டு விதமான விகாரங்களும் கிடையாது. ஜீவாத்மாவுக்கு ஸ்வரூபத்தில் விகாரமில்லை என்றாலும் ஸ்வபாவத்தில் அதாவது தர்ம பூதஜ்ஞானத்தில் விகாரம் உண்டு. மூலப்ரகிருதி ஸ்வரூபம் எப்போதும் விகாராஸ்பதமாகவே இருந்தாலும் அது என்றும் அழியாத நித்ய வஸ்து என்று ஶ்ருதி ஸ்மிருதிகளில் சொல்லப்பட்டிருப்பதால் அதுவும் ஸ்வரூப நித்யமேயாம்.ஆகவே இம்மூவகைப்பட்ட பொருள்களும் ஸ்வரூப நித்யங்களாம்.

பானை துணி முதலிய வஸ்துக்கள் பிரவாஹநித்யங்கள். இவை அழியாப் பொருள் அல்ல என்பது உண்மையே. ஆனாலும் ஒரு பானை உடைந்து போய் விட்டாலும் அதைப் போன்ற மற்றொரு பானை உலகத்தில் இருந்துகொண்டிருக்கும். எக்காலத்திலும் பானை இல்லை என்பது கிடையாது. துணியும் அப்படியே. உலகம் உள்ளவரை எந்த ஜாதிப் பொருள்களுள் ஒன்று அழிந்தாலும் மற்றொன்று இருந்து கொண்டே இருக்குமோ அந்த ஜாதி பொருள்கள் பிரவாஹநித்யங்கள் என்றதாகும். வேதமும் இந்த ப்ரவாஹ நித்யகோடியில் சேர்ந்ததாம். அநந்த கோடி பிரம்மாண்டங்களுக்குள் ஏதாவதொன்றில் எந்த மூலையிலாவது ஒருவன் வேதம் ஓதிக் கொண்டு தான் இருக்கிறான். வேதவொலி இல்லாத காலமே கிடையாது. எல்லாரும் ஒரே க்ரமத்தில் தான் வேதத்தை ஓதுகிறார்கள் ஆகவே வேதம் ப்ரவாஹநித்யம் எனப்படுகிறது.

வேதம் நிர்த்தோஷம்

வேதம் என்பது ஶப்தம் என்பதை முதல்முன்னம் அறிந்தோம். ஶப்தத்திற்கு தோஷமாவது என்ன? தப்பான அர்த்தத்தை தெரிவிப்பதே ஶப்தத்திற்கு தோஷமாம். தனிப்பட்ட ஒரு பதம் தப்பான அர்த்தத்தை தெரிவிக்காது பல பதங்கள் சேர்ந்த வாக்கியம் தப்பான அர்த்தத்தை தெரிவிக்கலாம்."இது""வெள்ளி" என்னும் இரண்டு பதங்களும் தனித்தனியே எவ்வித தப்பான அர்த்தத்தையும் தெரிவிக்கமாட்டா. ஆனால் இவ்விரண்டு பதங்களையும் ஒன்றுசேர்த்துஈயத்தைக் காட்டி "இது வெள்ளி" என்று சொல்லும்போது வெள்ளி அல்லாததை வெள்ளி என்று போதிப்பதால் இவ்வாக்கியம் தோஷம் உடையதென்று கொள்ளப்படும். இவ்வாக்கியம் இப்படி தப்பான அர்த்தத்தை போதிக்க காரணமென்ன? இரண்டு பதங்கள் உள்ள இவ்வாக்கியத்தில் என்ன தோஷம் இருக்கிறது? தனித்தனியாக பிரயோகிக்கப்பட்ட போது எப்படி இருந்தனவோ அப்படியேதானே கூட்டிச் சொன்னபோதும் இருக்கின்றன. ஶப்தத்தில் எவ்விதமான தோஷமும் காணமுடியாது. ஆனபின்பு இவ்வாக்கியம் தப்பான அர்த்தத்தை போதிப்பதேன்? இதை ப்ரயோகித்த மனிதன் இப்பதங்களைச் சரியாக உபயோகிக்காமல் தப்பாக உபயோகித்ததே இப்பதங்கள் தப்பான அர்த்தத்தைத் காட்டுவதற்கு காரணமாகும்.

ப்ரமம்,ப்ரமாதம், விப்ரலிப்ஸை என்று சில தோஷங்கள் மனிதனுக்கு உண்டு. ப்ரமம் இரண்டு விதம். ஒரு வஸ்துவை மற்றொரு வஸ்துவாக தெரிந்துகொள்வது ஒன்று. ஒரு வஸ்துவைத் தெரிந்து கொள்ளும் போது அதன் ஸ்பாவமான குணங்களை மாறாடி வேறு குணங்களோடு கூடியதாக தெரிந்துகொள்ளுதல் மற்றொன்று. இவற்றுள் முதலாவதற்கு விபரீதஜ்ஞானம் என்றும், இரண்டாவதற்கு அந்யதாஜ்ஞாநம் என்றும் பெயர். முத்துச்சிற்பியைப் பார்த்து வெள்ளியென்று ப்ரமிப்பது விபரீதஜ்ஞானமாம்.ஶங்கம் (சங்கு) மஞ்சள் வர்ணமுள்ளதாக ப்ரமிப்பது அந்யதா ஞானமாம். இந்த இரண்டுவிதமான ப்ரமமும் மனிதனுடைய தோஷமாம். மனிதன் வஸ்துவை உள்ளபடி அறிந்து கொள்ளாமற் போகையே ப்ரமிக்கை. ப்ரமாதமாவது பிசகிப்போகை. விப்ரலிப்ஸையாவது வஞ்சிக்கவேணுமென்கிற இச்சை. மனிதனிடத்தில்

உள்ள இப்படிப்பட்ட தோஷங்களானவை அவனால் ப்ரயோகிக்கப்படுகிற ஶப்தங்களை தோஷமுடையனவாக செய்கின்றன. ஒருவன் கயிற்றைப் பார்த்து பாம்பு என்று பிரமிக்கிறான். அவன் அப்பால் இருந்து கொண்டு "அதோ பாம்பு" என்று கயிற்றை காண்பிக்கிறான். இங்கு இவனால் பிரயோகிக்கப்பட்ட ஶப்தத்தினால் பிறர்க்கு உண்டாகும் ஞானம் யதார்த்த ஞானமல்லாததால் அந்த ஶப்தம் தோஷமுடையதாக கொள்ளப்பட்டு அப்ர்மாணமாகக் கருதப்படுகிறது. இங்கு மனிதனுடைய ப்ரமமே ஶப்தம் அப்ரமாணமாக ஆவதற்கு காரணமாயிற்று.

ஒருவன் கயிற்றை கயிறென்று தெரிந்துகொண்டு இருந்தும் அவசரத்தினால் வாய்தவறி "பாம்பு" என்று பிசகாக சொல்லுகிறான். அவனுடைய அச்சொல்லும்தப்பான அர்த்தத்தை காட்டுகிறது. அதற்குக் காரணம் அப்புருஷனுடைய ப்ரமாதமேயாம். ஒருவன் கயிற்றைகயிறு என்று தெரிந்து கொள்கிறான். ஆனால் விளையாட்டாகவோ, அல்லது கெட்ட எண்ணத்தினாலேயோ மற்றொருவனை பயப்படுத்த விரும்பி "அதோ பாம்பு" என்கிறான். இங்கும் ஶப்தமானது தப்பான அர்த்தத்தை காட்டுகிறது. அதற்கு காரணம் அந்த மனிதனுடையப்ரம்ம்ப்ரமாதம்விப்ரலிப்ஸை என்கிற தோஷங்களே.ஶப்தம் அப்ரமாணமாவதற்கு காரணமேயொழிய ஶப்தத்தில் இயற்கையான தோஷமில்லை என்றே ஏற்படுகிறது.

இப்படி புருஷனுடைய தோஷங்களால் அப்ரமாணமாகும்ஶப்தங்கள் எவையென்றால், அந்தப் புருஷன் ஒரு அர்த்தத்தை காட்டுவதற்காக பல பதங்களை வேண்டியபடி சேர்த்து வாக்யமாக ப்ரயோகிக்கும்ஶப்தங்களேயாம். வேதமென்கிற ஶப்தராசியானது எந்த புருஷனாலும் தன் இஷ்டப்படி முன்பின்னாக பிணைக்கப்பட்டவை அல்ல என்றும், அது நித்யம் என்றும் முன்னே சொன்னோமாகையால் புருஷனுடைய தோஷங்களால் துஷ்டமாகக்கூடிய நிலைமை வேதங்களுக்கு இல்லை என விளங்குகிறது. ஆகையால் வேதம் நிர்தோஷம் என்னத்தட்டில்லை

ஈஶ்வரன்வேதகர்த்தாஅல்லவா?

ஸ்ருஷ்டியின் ஆரம்பத்தில் ஈஶ்வரன் நான்முகனுக்கு வேதோபதேஶம் செய்வதாக சொல்லப்படுகின்றதே! ஸ்ருஷ்டிக்கு முன்பு வேதம் இருந்திருக்க முடியாதே! ஆகையால் ஈஶ்வரனால்தான் வேதம்முதலில் செய்யப்பட்டிருக்க வேண்டும் என்று ஏற்படுகிறதே! ஆனபின்பு வேதம் அபௌருஷேயமென்பது எப்படி? என கேள்வி பிறக்கலாம். உண்மை என்னவென்றால் வேதத்துக்கு நாம் எப்படி கர்த்தாக்களல்லவோ அப்படியே ஈஶ்வரனும் கர்த்தாவல்லன்; உலகத்தின் ஸ்ருஷ்டியானது ஒன்றன்பின் ஒன்றாக அநாதிகாலமாக நடந்து வருகிறது. ஒவ்வொரு கல்பத்தின் ஆரம்பத்திலுள்ள ஈஶ்வரன் நான்முகனுக்கு வேதத்தை உபதேசிக்கிறான். ஆனால் முன் கல்பத்தில் வேதம் எந்த மாதிரியாக (ஆநுபூர்வியோடு) இருந்ததோ, அதே மாதிரியாகவே மறுகல்பத்தின்ஆரம்பத்திலும் வேதத்தை உபதேசிக்கிறான். எந்தவிதமான மாறுதலும் செய்வதில்லை அநாதிகாலமாக இப்படியே செய்து வருகிறான். இவ்வளவுதான் ஈஶ்வரன் செய்கிறான். புதிதாக வேதத்தை உண்டாக்குவது இல்லை. எந்தவித மாறுபாடும் செய்வதில்லை ஆகையால் ஈஶ்வரனும்வேதகர்த்தாவல்லன்.

வேத$_3$ம்அவிச்சி$_2$ந்நபரம்பராக$_3$தம்

ஸ்மிருதிகள், இதிஹாசங்கள், புராணங்கள் மற்றும் பல விதமான ஶாஸ்திரக்ரந்தங்கள் இருக்கின்றன. ஆனால் வேதம் எப்படி அநாதிகாலமாய் ஶிஷ்யப்ரஶிஷ்ய பரம்பரையாக அத்யயநம் செய்யப்பட்டு வருகிறதோ, அப்படி மற்ற க்ரந்தங்கள் அத்தியயனம் செய்யப்படுவது இல்லை.ப்ராஹ்மணன், க்ஷத்ரியன், வைஶ்யன் என்கிற மூன்று வர்ணத்தவர்களும் கட்டாயம் செய்தே தீர வேண்டும் என்றும்,ஆசார்யமுகத்தாலேயே வேதாத்யயநம் செய்யப்படவேண்டும் என்றும் நியமங்கள் அமைந்து இவற்றை மீறினால் ப்ராயச்ஸித்தங்களும் விதிக்கப்பட்டிருப்பதனாலே புத்திக்கெட்டாத காலம் முதல் ஒரே மாதிரியாக வேதம் அத்யயநம் செய்யப்பட்டு வருகிறதோடு எந்தவிதமான ஸந்தேஹங்களுக்கும் இடமின்றியிருக்கிறது.

இப்படி வேதம் அபௌருஷேயமாய், நித்யமாய், நிர்தோஷமாய், அவிச்சிந்ந பரம்பராகதமாய் இருப்பதனாலே, இது ஆர்யர்களான நமக்கு பரமப்ரமாணமாம்.

வேதம் - 2

கனபாடி ஸ்ரீ உ வே சௌரிராஜ அய்யங்கார் ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.

வேதம் என்பதற்கு *அர்த்தலாபஸாதனம்* என்று வேதமே பொருள் கூறுகிறது. (கா.1 - ப்ர.6 -அ.5) வேதம், வேத்யம் என்று இரண்டு பதங்கள். வேதம் என்றால் கைவஶப்பட்ட பொருள், வேத்யம் என்றால் இனி கைவஶப்படத்தக்கதான பொருள் என்பதை வேதமே (கா.1-ப்ர. 7-அ. 4 அநுவாகத்தில்) கூறுகிறது. विद्यते वित्रं अनेन इति வேதம் என்று வேதபாஷ்யகாரர் நிர்வசநம்.ஸகல புருஷார்த்த ஸாதனம் வேதம் என்றபடி,லோகத்தின் ஸ்திரத்துக்குக் காரணம் தர்மம் என்கிறது தைத்ரீய உபநிஷத். धर्मो विश्वस्य जगत: प्रतिष्टा | எதனால் அப்யுதயஸித்தி நிஶ்ரேயஸஸித்திஉண்டாகிறதோ அதுதான் தர்மம். यतॉऽभ्युदय निश्रेयससिध्दि: என்றுவைஶேஷிகதர்ஶநம் (ஸூத்ரம் - 2). தர்மத்தைப் பற்றி சொல்வதால் வேதத்துக்கு ப்ராமாண்யம் ஸித்திக்கிறது. ❀त्द्वचनादाम्नायस्य प्रमाण्यं ❀ தர்ம விசேஷத்தால் உண்டான பதார்த்த தத்வஜ்ஞநத்தினால்மோக்ஷம்.வேதத்தில் கூறப்பட்டதை தெரிந்துகொண்டு அப்படியே அனுஷ்டிப்பதுதான் தர்மம் என்பது கணாதரின்தீர்மானம்.

प्रत्यक्षॅण अनुमित्यावा - ऍनं विदन्ति वॅदॅन त्स्माद्वॅदस्य वॅदता என்கிறார் ஆபஸ்தம்பர். வேதம் அலௌகிகபுருஷார்த்தத்தை அறிவிக்கிறது.

ஜைமிநியும் चॉदनालक्षणाऽर्थो धर्म: (வேதத்தில் சொல்லப்படுவது தர்மம்) என்கிறார். வித்யை விநயத்தைக் கொடுக்கிறது; வித்யைதான் விநயத்தைக் கொடுக்கிறது; வித்யை விநயத்தையே கொடுக்கிறது; வித்யை விநயத்தைக் கொடுத்தே தீரும் என்று विद्यैव विनयमेव ददात्येव என்று ஏவகாரத்தை மூன்று பதங்களிலும் அந்வயித்து எப்படிப் பொருள் கூறுகிறார்களோ அப்படியேचॉदनैव लक्षणं , चॉदना लक्षणमैव चॉदना लक्षणं भवत्यॅव என்று ஜைமினி மகர்ஷியின் அபிப்பிராயம். वेदॉखिलॉ धर्ममूलं (தர்மத்துக்கு மூலம் வேதமே) என்பது தர்ம ஸூத்திரகார்களுடைய முடிவு.

ஆதியில் வேதம் நான்கு பாதங்களுடன் நூறு ஆயிரம் ஶாகைகளுடன் கூடிய ஒரே விருக்ஷமாய் இருந்தது. இது துவாபர யுகத்தின் ஆதியில்

ஸ்ரீவேதவ்வியாஸரால் ருக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம் என்று நான்காகப் பிரிக்கப்பட்டது. ஸமஸ்தமான வேதத்தை வ்யஸ்தமாக்கிய தால்வ்யாஸர் என்று அவருக்கு திருநாமம் வாய்த்தது. பதரிகாஶ்ரமத்தில் ஸ்ரீவேதவ்யாஸர் வேதத்தை நான்காக வகுத்தார். அங்கேயே இதிஹாஸ புராணங்களையும் அவர் அருளிச்செய்தார். பத்ரிநாராயணன் ஸந்நிதிக்கு சுமார் மூன்று கிலோமீட்டர் தூரத்தில் மலையில் இருந்து நான்கைந்து இடங்களில் தாரைகள் (நீர்வீழ்ச்சி) விழுகின்றன. இங்கே ஸ்ரீவேதவ்யாஸருடைய குஹையும் அடுத்ததாக விக்நேஶ்வர குஹையும் உள்ளது. ஸத்ய ஸங்கல்பமுடைய ஸ்ரீமத்பரமஹம்ஸேத்யாதி த்ரிதண்டி ஸ்ரீமந்நாராயண ஜீயர் ஸ்வாமி பதரிகாஶ்ரமத்தில் பிரஹ்மயஜ்ஞம் நடத்தியபோது ருக்வேத தாரையில் ருக்வேதத்தின் தொடக்கம், யஜுர்வேத தாரையில் யஜுர்வேதத்தின் தொடக்கம்;ஸாம அதர்வண இதிஹாச புராணதாரைகளில் ஸாமவேத அதர்வணவேத இதிஹாச புராணங்களுடைய தொடக்கம் என்ற க்ரமத்தில் நடத்தப்பட்டன. இந்த இடங்களை கோஷ்டியுடன் சேர்ந்து அனுபவிக்கும் பாக்யம் அடியேனுக்கு வாய்த்தது.

`நான்கு பாதங்களோடு கூடியிருப்பதற்கு *ருக்* என்று பெயர். யஜுர்வேதத்தில் அனுஷ்டுப், த்ரிஷ்டுப் முதலான பல சந்தஸ்ஸுக்கள் உள்ளன.ருக்மயமான வேதம் என்பதால் ருக் வேதம் எனப்படுகிறது. இந்த ருக்குகளில்கீதி (गीति) விஶேஷத்தை அநுஸரித்து கானம் செய்வது ஸாம வேதம் ஆகும். गीतिषु सामाख्याஎன்றபடி. ஸாம வேதத்துக்கு உத்கர்ஷம் அது கீதியை அநுசரித்திருப்பதால் என்பதைवेदानां सामवेदोस्मिஎன்னும்ஸ்ரீகீதா வசனதாத்பர்ய சந்திரிகையில் தேஶிகன் காட்டியருளுகிறார். ப்ராமாண்ய விஷயத்தில் எல்லா வேதங்களும் ஸமம்.

இரண்டு பதங்கள் அல்லது பல பதங்களுடன் கூடிய வாக்யமே யஜுஸ் என்பதாகும். யஜந-சாதனமாய் இருப்பதால் யஜு: ப்ரசுரமாய் இருப்பதாலும் யஜுர்வேதம் எனப்படுகிறது. यच्छिष्टन्तु यजुर्वेदे तेन यज्ञमयुजत என்று ஸ்ரீ விஷ்ணுபுராண வ்யாக்யானமானவிஷ்ணுசித்தீயம் கூறுகிறது.ருக்வேதத்தை *பைலர்* க்ரஹித்து அதை பல சிஷ்யர்கள் மூலம் பரவ செய்தார். யஜுர்வேதத்தைவைசம்பாயனரும் ஸாமவேதத்தை ஜைமினியும், அதர்வண

வேதத்தை ஸுமந்துவும் இதிஹாச புராணங்களை மஹாபுத்திஶாலியான ரோமஹர்ஷணரும் (அவர் திருக்குமாரரான ஸ்ரீஸூதபௌராணிகரும்) ப்ரவர்த்தநம் செய்து வந்தார்கள்.

ऋचस्सामानि, छन्दांसि, यजुस्तस्मादजायत என்று புருஷஸூக்தத்தில் ருகாதிவேத உத்பத்தி க்ரமம் சொல்லப்பட்டது. ருக், யஜுஸ்,ஸாமம் என்ற மூன்றும் சேர்ந்துत्रयी என்று வழங்கப்படுகிறது. அதர்வண வேதத்தையும் சேர்த்து வேதங்களை நான்காகவும் சொல்வது உண்டு. இவ்விதமே பூ: புவ: ஸ்வ: வ்யாஹ்ருதித்ரயம்भूर्भुवस्सुवरिति वा एतास्तिस्नो व्याहृतय: என்றும் மஹ: என்பதை கூட்டி चतस्नश्चतस्नो व्याहृतय: என்று வியாஹ்ருதிநான்கு என்றும் வேதத்திலேயே சொல்லப்பட்டு இருக்கிறது.

வைஶம்பாயனர் யஜுர்வேதத்தை நான்காக பிரித்தார்- சாதுர்ஹோதம் என்றுअध्वर्यु, होता,उदाताब्रह्मा இவர்கள் யஜ்ஞத்தை அனுஷ்டித்தார்கள்.

27சாகைகளுடன் கூடியது யஜுர்வேதம். 27 பிரதான ஶாகைகள், பிரதிஶாகளைச் சேர்த்து 101 ஶாகைகள் என்னும் வ்யவஹாரமும் உண்டு. கிருஷ்ணாதி யஜுர்வேதங்களில் 86 சாகைகள். யாக்ஞவல்கியர் ஸூர்யனிடமிருந்து சுக்ல யஜுர்வேதத்தை பெற்று கண்வர் முதலிய ஶிஷ்யர்கள் மூலம் பரவச் செய்தார்.சுக்லயஜுர் வேதத்தின் 15 ஶாகைகளையும் மொத்தம் யஜுர்வேதம் 101 சாகைகள் என்று பிரஹ்மாண்ட புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

யஜுர்வேத மகிமை

ருக் யஜுஸ்ஸாம அதர்வண என்ற நான்கு வேதங்களிலும்யஜுர்வேதமே சிறந்தது என்கிறார் வேதபுருஷன். மும்மூர்த்திகளில் இரண்டாவதான விஷ்ணுதான்ப்ரதானன். இதைப்போன்று வேதங்களில் இரண்டாவதானயஜுர்வேதம்தான் பிரதானமாகும். பிரகாசிக்கிற ஒளியாகவும் ஆதித்யனின் நடுவில் வசிக்கும்புருஷனே யஜுர்வேதரூபி என்றும் ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பிரமாணங்களில் சிறந்தது வேதம். வேதவேத்யன் ஶ்ரிய: பதியான நாராயணன்.

வேதை$_3$ஶ்சஸர்வைரஹமேவவேத்$_3$யோ
வேதா$_3$ந்தக்ருத்$_3$வேத$_3$விதே$_3$வசாஹம்

என்று கீதையிலே (15-15) பகவானுடைய திருவாக்கு. வேதம் பூர்வபாகம் உத்தரபாகம் என்று பாக-த்வயமாக அமைந்துள்ளது. ஆராதந விதிகளை பற்றி பூர்வபாகமும், கல்யாண குணங்களை பற்றி உத்தரபாகமும் விவரிக்கின்றது. மயர்வறமதிநலம் அருளப்பெற்ற நம்மாழ்வார் *சுடர்மிகு சுருதி* என்று வேதத்தையும், திருமங்கை மன்னன் *நால்வேதங்கண்டானே* என்று அருளிச்செய்து இருப்பதால் சவுரிப்பெருமாளே நால்வேத வாச்யனாவான் .*நால்வேதம் கண்டானே* என்ற இடத்தில் நஞ்ஜீயருடைய ப்ரச்னத்துக்குபட்டர் *கர்த்தரி அன்று, கர்மணி கிடாய்* என்று அருளிச்செய்து இருப்பதனால் வேதங்களில் பிரதாநமாக சொல்லப்பட்டவன் ஸ்ரீய:பதியான நாராயணனே என்பது ஸ்பஷ்டம்.

பழந்தமிழ் இலக்கியங்களான பத்துப்பாட்டு, பரிபாடல் முதலியவை *க்ராமங்கள் தோறும் வேதவொலியைக் கேட்டே எல்லாரும் கண்விழித்து கார்யங்கள் செய்து வந்தனர்* என்று சொல்கின்றன. ஆண்டாளும் *வந்தெங்கும் கோழி அழைத்தன காண்* என்று சேரிக்கு அடையாளத்தை அருளிச்செய்தாள்.க்ராமநகரங்களில் வேதநாதத்தை கேட்டு விழிப்பது தான் மரபு.

வேதபாராயணத்தால் ஸர்வாபீஷ்டஸித்தி உண்டாகிறது. வேதபாராயணத்தால்ஸகல யாகங்களும் செய்த பலன் உண்டாகிறது.*வேதம், ஸ்ரீராமாயணம் இவைகளில் ஒவ்வொரு அக்ஷரமும் எம்பெருமானின் திருநாமங்கள். இவற்றின் பாராயணம் மஹா பாதகங்களையும் அழிக்க வல்லது* என்பது * वेदाक्षराणि - हरिनामानि कीर्तितानि न संशय: ऍकैकमक्षरम् मह पातक नाशनं * என்கிற ப்ரமாணத்தால் அறியப்படுகிறது. ஒரு எழுத்துக்குப் பதில் மற்றொரு எழுத்தை சொல்வதாலும், ஒரு ஸ்வரத்துக்கு (உதாத்தம் முதலியன)ப் பதில் வேறு ஸ்வரத்தை உச்சரிப்பதாலும் விபரீத பலன் உண்டாகும்.

(1)பலம்= மாம்சம், (2)ப$_2$லம் =பழம் (3) ப$_3$லம்= ஶரீரப$_3$லம் என்று அர்த்தபேதங்கள் உள்ளன. ஸ்வரபேதத்துக்கு வேதத்தில் ஓர் உபாக்யானம் சொல்லப்பட்டது. த்வஷ்டாஇந்திரனை கொல்லும் சக்தியை உடைய பிள்ளையை அடைவதற்காக அதற்குண்டான யாகத்தை செய்தான். தத்புருஷ,

பஹுவ்ரீஹிஸமாஸங்களுக்கு ஸ்வரபேதம் உண்டு. ஸ்வரபேதத்தால் இந்திரனால் கொல்லப்படதகுந்த பிள்ளை உண்டான். எம்பெருமான் எல்லா வேதங்களிலும் உள்ளான். அருளிச் செயலிலும்அப்படியே. ஆகையால் எம்பெருமான் திருமேனிக்கு களங்கம் கூடாது. நன்கு அலங்கரித்து ஸேவித்து மகிழ வேண்டும் என்றுதான் பதபாடம். கிரமபாடம், ஜடாபாடம் கனபாடம், வர்ன்க்ரமபாடம் இவைகள் ஏற்பட்டிருக்கின்றன. லக்ஷணக்ரந்தங்கள் ரக்ஷணத்துக்காக ஏற்பட்டன.

தைத்ரீயஶாகையில்தான் நன்குகனம் தெரிந்தவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். இதர ஶாகைகளில் தெரிந்தவர்கள் ஸ்வல்ப ஸங்கையிலேயே இருக்கிறார்கள். கௌண்டின்ய ஶிக்ஷையில் *ஒருவன் ஒரு தடவை கனபாராயணம் செய்தால் அவனே பிரஹ்மா, அவனே விஷ்ணு, அவனே ருத்ரன் என்று கொண்டாடப்படுகிறான். அவனுக்கு ஸகலயாகம் செய்த பலன் உண்டு. கோடிஜன்மக்ருதபாபம் அவனுக்கு க்ஷணத்தில் நசிக்கிறது* என்று சொல்லப்படுகிறது .

ஓம் ஶாந்தி: ஶாந்தி: ஶாந்தி:

அத்யயநத்தின் மகிமை

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் ஸ்தாபகர்

ஸ்ரீ உவே புத்தூர் ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமி

ஸ்ரீ வைஷ்ணவ சுதர்சனம் 37ஆவது இதழில் வெளிவந்தது

வேதாத்யயநம் பிராஹ்மணர்களுக்கு இன்றியமையாதது. மந்திரங்களின் முக்கியமான சிலவற்றை ஸந்தியாவந்தனத்தில் தினந்தோறும் படிக்க வேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஸந்தியாவந்தன முடிவில் *அபிவாதயே....* சொல்லும்பொழுது யஜு: ஶாகாத்யாயீ* என்று தத்தம் வேதத்தை அத்யயநம் பண்ணுகிறதாகச் சொல்லிக் கொள்கிறோம். *ஸ்வாத்யாயோऽத்யேதவ்ய: * என்று அவரவர்கள் வேதத்தை அவரவர்கள் அத்யயநம் செய்ய வேண்டும் என்பதை வேதமும் விதித்தது. வேதானதீத்யவேதௌவா வேதம் வாऽபிய்தாக்ரமம்* (வேதம் எல்லாவற்றையுமாவது இரண்டு அல்லது ஒரு வேதத்தையாவது முறைப்படி அத்யயநம் செய்து...) என்று ஸ்ம்ருதியும் நினைவூட்டியது.

இவ்வத்தியயநத்தின் மஹிமை யஜுர்வேதம் தைத்திரீய ஆரண்யகம் இரண்டாவது பிரஶ்நம் பதினைந்தாவது அனுவாகத்தில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தினம்தோறும் ஒரு பிரஶ்நம் வேதாத்யயநம் செய்வது ப்ரஹ்ம யஜ்ஞம் எனப்படுகிறது. இந்த யஜ்ஞத்திற்கு பொதுவாக அநத்யயநம் கிடையாது, ஆயினும் அஸுத்தமாய் இருக்கிற மனிதனாலும் அசுத்தமான இடத்திலும் வேதத்தை அத்யயனம் செய்யக்கூடாது. மற்ற யஜ்ஞங்களுக்கு த்ரவ்யம் முதலிய பலஸமக்ரிகள் வேண்டும். இந்த யஜ்ஞத்திற்கு பகவத் க்ருபையினால் புத்தியும், தேஹ சக்தியும் மட்டும் இருந்தால் போதும். இரவிலும், பகலிலும், நடந்தும், நின்றும், வீற்றிருந்தும், படுத்துக்கொண்டும், காட்டிலும், நாட்டிலும் யதாஶக்தி அத்யயநம் செய்ய வேண்டும். அப்படிச் செய்பவன் எல்லா லோகங்களையும் ஜயிக்கிறான். எல்லா லோகங்களிலும் தடங்கலில்லாமல் ஸஞ்சரிக்கிறான்.

*அத்யயனம் செய்வதின் மூலம் இவ்வுலகத்திலும் மேல் உலகங்களிலும் மூன்றாவது உலகமான பரமபதத்திலும் ருணமற்றவர்களாகக்

கடவோம். தேவயாநம் என்னும் அர்ச்சிராதி மார்க்கத்திலும் பித்ருயானம் எனும் ஸ்வர்காதி லோகங்களுக்குச் செல்லும் மார்க்கத்திலும் மற்ற எல்லா மார்க்கங்களையும் கடனற்றவர்களாக ஆகக்கடவோம்* என்று வேத மந்திரத்திலும் சொல்லப்பட்டது.

உடலுக்கு நோய் போல் ஆத்மாவுக்கு பாபம் ஆகிறது. வியாதி உள்ளவர்கள் உடன் சேர்ந்தால் அப்படி சேர்ந்தவர்களுக்கும் வியாதி பரவுவது ஸகஜம். இதைப் போன்று பாபமுள்ளவர்களுடன் சேர்ந்தால் பாபம் பிடிக்கிறது. இதற்கு ஓர் உபாக்யாநம் சொல்லப்படுகிறது. அது அத்யயநத்தின் மகிமையையும் தெரிவிக்கிறது.

பிறந்தவுடன் அக்னியை பாபம் பிடித்துக்கொண்டது. தேவர்கள் ஆஹுதிகளை கொண்டு அப்பாபத்தை போக்கடித்தார்கள். அப்பாபம் ஆஹுதிகளை பீடித்தது. ஆஹுதிகளின் பாபத்தைக் யஜ்ஞத்தைக் கொண்டு போக்கடித்தார்கள். யஜ்ஞத்தை பிடித்துக்கொண்ட அப்பாபத்தை யஜ்ஞத்தில் கொடுக்கப்படும் தக்ஷினைகளினால் போக்கடித்தார்கள். தக்ஷினைகளுக்கு ஏற்பட்ட பாபத்தைதக்ஷினை வாங்கும் பிராமணர்களால் போக்கடித்தார்கள். பிராஹ்மணர்களுக்கு ப்ரதிக்ரஹத்தால் ஏற்பட்ட தோஷத்தை காயத்திரி முதலிய சந்தஸ்ஸுகளின் மூலம் போக்கடித்தார்கள். சந்தஸ்ஸுக்கு ஏற்பட்ட தோஷம் வேதத்ய்யநத்தால் போக்கடிக்கப்பட்டது. வேதமோ எனில் அபஹதபாப்மா (பாபங்களை எல்லாம் போக்கடிப்பது) ஆகையால் பாபம்அதனிடம் ஒட்டவில்லை.

வேதத்ய்யநத்தை ஆரம்பித்து முடிக்காமல் விட்டு விடுபவர்களும், வேதத்ய்யநம் செய்து தினந்தோறும் அப்யஸிக்காமல் மறந்து விடுகிறார்களும் வாக்குப் படைத்த ப்ரயோஜனத்தைப் பெறவில்லை. வேதம் வேதாந்த விழுப்பொருளான வாஸுதேவனை வாழ்த்துவது. *வாயவனையல்லது வாழ்த்தாது* என்கிறபடியே வேதாத்யயனம் மூலம் அவனை வாழ்த்த வேண்டியது அவசியமாகும். வேதத்ய்ய நம் செய்யாதத் விஜனுக்கு * நாகம்* எனப்படும் வைகுந்தத்திலும் இடம் கிடையாது.

*எவனொருவன் வேதாத்யயநத்தை விட்டு விடுகிறானோ அவனுக்கு வாய் படைத்த பிரயோஜனம் இல்லை. வேதாத்யயநத்தை கேளாமல் வீண் வார்த்தைகளை கேட்டு பழுதேபலபகலும் போக்குகிறவன் நல்வழி செல்ல

மாட்டான்* என்றும் ஒரு மந்திரத்தில் சொல்லப்பட்டது. *தஸ்மாத் ஸ்வத்யாயோऽத்யேதவ்ய:*(ஆகையினால் அத்யயனம் செய்ய வேண்டும்) என்று வேதம் விதித்தது. வேதத்தில் சொல்லப்பட்ட யாகங்களை பற்றின மந்திரங்களை அத்யயனம் செய்வதாலேயே அந்தந்த யாகங்களை செய்வதால் ஏற்படும் பலன்களை அடைகிறார்கள். அக்னி வாயு ஆதித்யன் இவர்களுடைய ஸாஜ்யத்தையும் அடைகிறார்கள்.(வியாஸர் முதலிய) பிராசீநர்களோடு நவீநர்களோடு வாசியறயாராக இருந்த போதிலும் வேதவித்துக்களை தூஷிக்கக் கூடாது. தூஷித்தால் அக்னி, வாயு, ஸூர்யன் முதலிய ஸகல தேவதைகளையும் தூஷித்தவர்கள் ஆவார்கள். அவர்களை பூஜித்தால் எல்லா தேவதைகளையும் பூஜித்தவர்கள் ஆவார்கள்.

எல்லாதேவதைகளும் வேதவித்தான பிராஹ்மணர்களிடத்தில் வசிக்கிறார்கள். ஆகையால் வேதமறிந்த பிராஹ்மணர்களை தினம்தோறும் நமஸ்கரிக்க வேண்டும். அவர்களுடைய குற்றங்குறைகளை கூறலாகாது. இப்படி இருப்பவன் எல்லா தேவதைகளையும் ஸந்தோஷப்படுத்துகிறான். அத்தியயநம் அர்த்த- ஜ்ஞாநபர்யந்தம் இருக்க வேண்டும் என்று பட்டபாஸ்கர்ர் பாஷ்யம் செய்தார். இது வேதத்தில் சொல்லப்பட்டுள்ள அத்யயந வைபவம் ஆகும்.

ஶாஸ்த்ரம்

வாகம்ருதவர்ஷீ

ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாசர்ய ஸ்வாமி.

(ஸ்வாமியுடைய உபந்யாஸங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுக்கப்பட்டது)

ஶ்ரிய: பதியான ஸர்வேஶ்வரனுடைய திருநாமங்களிலே மிக முக்யமானது *பிரான்* என்பதாகும். பகவானை பிரான் என்று ஆழ்வார்களும் ஆசார்யர்களும் கொண்டாடுகிறார்கள். எக்காரணத்தினால் பகவானுக்கு பிரான் என்று பெயர்? அவன் நமக்கு பரம உபகாரகனாக இருக்கையினாலே அவனை நாம் *பிரான்* என்று கொண்டாடுகிறோம். நாம் உய்யும்பொருட்டு ஶாஸ்த்ர ப்ரதானம் பண்ணியிருப்பது அவன் நமக்குச் செய்தருளிய உபகாரங்களில் தலையானதாகும்.

ஶாஸ்த்ரம் எனப்படுவது ஒன்றா இரண்டா? முனிவரை இடுக்கியும், முந்நீர் வண்ணணாயும் அவன் நமக்கு உபகரித்துள்ள ஶாஸ்த்ரங்கள் பற்பல. முதலில் ஶாஸ்த்ரம் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். *ஶாஸநாத்ஶாஸ்த்ரம்* -- *கட்டளை இடுவது ஶாஸ்த்ரம்.* என்று ஶ்ருத ப்ரகாதஶிகா பட்டர் அருளிச்செய்துள்ளார். *ய: ஶாஸ்த்ர விதி$_4$ம் உத்ஸ்ருஜ்ய* (16-13) என்று பகவத் கீதாவசனம். * ஶாஸ்த்ரம்- வேதா$_3$: * (ஶாஸ்த்ரம் எனப்படுவது வேதம்) என்று எம்பெருமானார் அருளிச்செய்துள்ளார். *ஸ்ரவாவ்ஸ்த$_2$ ஸமஸ்த புருஷஹிதானுஶாஸநாத்ஶாஸ்த்ரஶப்$_3$த$_3$: வேதே$_3$ஷ்வே வப்ரத$_2$மம்ப்ராப்த: | த்த$_3$நுபந்தா$_4$த் அந்யேஷு* (அனைவருக்கும் அவரவர் நிலைகளுக்கேற்ப ஹிதத்தை விதிப்பதால் ஶாஸ்த்ர ஶப்தமானது முதலில் வேதத்துக் கேவாசகமாகிறது. வேதத்தை விளக்குவதால் ஸ்ம்ருதி இத்யாதிகளான நூல்களையும் ஶாஸ்த்ர ஶப்தம் குறிக்கிறது) என்று வேதாந்தாசார்யார் அருளிச் செய்துள்ளார்.

பகவானுடைய ஆஜ்ஞை நியமநமே ஶாஸ்த்ரமாகும். பகவான் ஒருவனே வியாப்தி நிறம் பெறத் தனிக்கோல் செலுத்தும் ஸர்வநியந்தா. அவனே *உததமாதேஶம் அப்ராக்ஷ்ய: * என்ற ஶ்ருதி வாக்கியத்தின்படி

ஆதேஶஶ ப்தார்த்தமான ஸர்வநியந்தா. * ஶாஸ்தா விஷ்ணுரஶேஷஸ்ய * என்று இவ்வர்த்தத்தை ஸ்ரீ பிரஹ்லாதாழ்வானும் நிரூபித்தான்.

ஶாஸ்திர பதத்துக்கு முக்கியார்த்தம் வேதமேயாகும். வேதம் ஒன்றுதானே ஶாஸ்திரமாய் இருக்க *மீமாம்ஸா ஶாஸ்த்ரம்*,*வ்யாகரண ஶாஸ்திரம்*, *ந்யாய ஶாஸ்திரம்* இத்யாதிகளானவற்றையும் ஶாஸ்திர ஶப்தத்தால் இட்டு வழங்கலாமோ? என்றால் - வேதத்துக்குண்டான உபாங்கங்களையும் ஶாஸ்த்ர பதத்தால் வ்யவஹரிப்பர் பெரியோர். இது ஔபசாரிக ப்ரயோகமாகும். இம்முறையில் நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், நான்கு உபாங்கங்கள் எனப்படும் பதினான்கு வித்யா ஸ்தாநங்களும் ஶாத்திரங்கள் ஆகின்றன.

ஶாஸ்திரங்களை இரண்டு விதமாகவும் பிரிக்கலாம். சில ஶாஸ்திரங்கள் ஶப்த விசாரம் பண்ணுபவை. ததர்த்த விசாரம் பண்ணுபவை மற்றும் சில. ஶப்த விசாரம் பண்ணுவதற்கென்றே ஶீக்ஷா, வ்யாகரணம் இத்யாதிகளான ஶாஸ்திரங்கள் அமைந்துள்ளன. மீமாம்ஸாந்யாய விஸ்தரம், புராணம்இத்யாதி ஶாஸ்திரங்கள் அனைத்தும் வேதார்த்த விசாரத்தில் இழிபவையாகும் என்று ஆழ்வார் திருவாக்கு. ஶப்தம்ஶரீரம் போன்றது. அர்த்தம் ஆத்மா போன்றது, எம்பெருமான் ஶப்தங்களுக்கு காரணமாயும் அர்த்தங்களுக்கு நிர்வாஹகனாகயும் இருப்பவன். நமக்கு இரண்டுமே முக்கியமாகும்.

வர்ணம், பதம், அக்ஷரங்களுக்குண்டானஸ்வர நிர்ணயம், பதங்களுக்கு உண்டான பிரக்ருதி-ப்ரத்யய விபாகம், பிரக்ருதிக்கு என்ன அர்த்தம், ப்ரத்யயதற்கு என்ன அர்த்தம், ப்ரக்ருதி ப்ரத்யயங்கள் எப்படி வினியோகபடுத்தப்பட வேண்டும். ஸாது ஶப்தம் என்றால் என்ன, அஸாது ஶப்தம் என்றால் என்ன,ஸாது ஶப்த பிரயோகம் பண்ணுவது எப்படி போன்றவைகளாலெல்லாம் ஶப்தவிசாரத்தில் அடங்கும்.ந்யாய ஶாஸ்திரம், மீமாம்ஸஶாஸ்திரம் ஸ்மிருதி இதிஹாஸ புராணங்கள் இத்யாதிகளைக் கொண்டு (ஆதி ஶப்தம்=பாஞ்சராத்ரம்) வேதவேதாந்தார்த்தங்களை அறுதியிடவேண்டும்.

வேதாந்தார்த்த ஶ்ரவணத்துக்கு முன்னோடியாக ந்யாயம், வ்யாகரணம், மீமாம்ஸை,ஸாஹித்யம் போன்றவற்றினுடைய அடிப்படை ஜ்ஞானமாவது

அமைவது முக்கியமாகும். இவற்றில் ஒவ்வொன்றிலாவது விசேஷ தேர்ச்சி பெற்றவர்கள்ந்யாய ஶிரோமணி, வியாகரண ஶிரோமணி போன்ற பட்டங்களை பெற்று ஶிரோமணி வித்வான்களாக ஆகிறார்கள். ஆனால் இத்துடன் ஶாஸ்திரப்யாஸத்தை முடித்துக் கொள்வதில் பயனில்லை .ந்யாய ஶாஸ்திரமோ, வ்யாகரண ஶாஸ்திரமோ முடிவான ஶாஸ்திரங்கள் அல்ல. அவை அனைத்திலும் சிறிதளவாவது தேர்ச்சிபெற்று முடிவான வேதாந்த ஶாஸ்திரத்தில் ஒருவன் இழிய வேண்டும். இந்த ஶாஸ்திரங்களை துணைகொண்டு உபநிஷத்துக்களின் அர்த்த விசேஷங்களை ஒருவன் அறியாமல் போவானேயானால் இவைகளை அப்யஸித்தும் பயனில்லை. *நஶப்$_3$த$_4$ ஶாஸ்த்ராபி$_4$ரதஸ்யமோக்ஷ: *(ஶப்த சாஸ்திரம் எனப்படும் வ்யாகரண்த்தில் மட்டும் ஈடுபட்டவனுக்கு மோக்ஷம் இல்லை) என்னும் வசனமும் இங்கு நினைக்கத்தக்கது.

அப்படியென்றால் வேதாந்த ஶாஸ்திரத்தை மட்டும் நேரிடையாக ஒருவன் அப்யஸித்து விடலாமே என்றால் அது முடியாது. ந்யாயம், வ்யாகரணம், மீமாம்ஸை போன்ற ஶாஸ்திரங்களில் பரிசயம் இல்லாதவனால் வேதாந்தத்தை புரிந்து கொள்ள முடியாது. கணாதர்ப்ரோக்தமான வைஶேஷிக (தர்க்க)ஶாஸ்திரத்தில் விஶேஷமாக பரிசயம் இருக்க வேண்டும். அது மட்டுமன்று; பாணினி ப்ரோக்தமான வ்யாகரண சாஸ்திரத்திலும் விசேஷமாக பரிசயம் இருக்க வேண்டும். இது இரண்டும் இருப்பவனுக்குத் தான் வேதாந்தம் கைபுகும். இதனால் வேதாந்த ஶாஸ்திராப்யாஸத்துக்கு அதிகாரிகள் கிடைப்பது துர்லபம். எழுனூறு ஆண்டுகளுக்கு முன்பு தேசிகன் எழுந்தருளி இருந்த காலத்திலேயே குறை இருந்தது என்றால் தற்கால நிலையை பற்றி நாம் எதுவும் சொல்ல வேண்டியது இல்லை. இக்குறையை போக்கிக் கொள்வதற்கு உண்டான வழியையும் தேசிகன் அதிகரணஸாரவளியிலே அருளிச்செய்துள்ளார் .வேதாந்த காலக்ஷேபம் ஸாதிக்கும் போதே ஆசாரியன் அவன் தன் சிஷ்யர்களுக்கு ந்யாயம், வ்யாகரணம், மீமாம்ஸை போன்ற சாஸ்திரங்களில் ஓரளவு பரிச்சயம் உண்டாகும்படி சில விஷயங்களையாவது சேர்த்துச் சொல்ல வேண்டும் என்கிறார் தேசிகன்.

பாணினி அருளிச்செய்த வ்யாகரண சாஸ்திரத்தை அதிகரித்தவனுக்குத் தான் அவன் சொல்லும் வார்த்தைகள் ஸுஶப்தங்களாக அமையும். கணாதர்

அருளிச்செய்துள்ள தர்க்க ஶாஸ்திரத்தை அதிகரித்தவன் சொல்லும் விஷயங்கள் தான் யதார்த்தமாக அமையும். இப்படிப்பட்டவனுக்குத் தான் தர்ம-தர்மிஜ்ஞான விபாகம் பூர்ணமாக அமையும்.

இன்று சர்க்கரைப் பொங்கல் எப்படி இருந்தது? என்று கேட்டால், *சர்க்கரைப் பொங்கல் பரமபோக்யமாக இருந்தது* என்று சொல்ல வேண்டும். *இன்றைய உபந்யாஸம் எப்படி இருந்தது?* என்று கேட்டால்,*பரமபோக்யமாக இருந்தது* என்று சொல்ல வேண்டும். சர்க்கரைப் பொங்கல் (அல்லது உபந்யாஸம்) பரமபோக்யதை என்று சொல்ல கூடாது. சர்க்கரைப் பொங்கலுக்கு என்று சொன்னால் போக்யதை என்று சொல்ல வேண்டும். சர்க்கரை பொங்கல் என்று சொன்னால் போக்யம் என்று சொல்ல வேண்டும். போக்யம், போக்யதை என்ற இரண்டிற்கும் உள்ள வித்தியாசம் தெரிய வேண்டும். போக்யம் என்பது தர்மிவாசகமான ஶப்தம். போக்யதை என்பது தர்ம வாசகமான ஶப்தம். இப்படி தர்ம-தர்மிகளுக்கு உண்டான விபாவத்தை உள்ளபடி அறியும் விவேகம் ந்யாய ஶாஸ்த்ரத்தை அத்யயனம் பண்ணியவனுக்குத் தான் அமையும்.

பெருமாளிடம் திருவடி வார்த்தை சொல்லுகிறார். ஸுஶப்த பிரயோகங்களாகவே அமைந்த திருவடியினுடைய வார்த்தைகளை நன்கு அனுபவித்த பெருமாள்:

நாந்ருக்$_3$வேத$_3$விநீதஸ்யநாயஜுர்வேத$_3$தா$_4$ரிண: |
நாஸாமவேத$_3$விது$_3$ஷ: ஶக்யமேவம்ப்ரபா$_4$ஷிதும் ||

நூநம்வ்யாகரணம்க்ருத்ஸ்நமநேநப$_3$ஹுதா$_4$ ஶ்ருதம் |
ப$_3$ஹுவ்யஹரதாநேநநகிஞ்சித$_3$ப ஶப்$_3$தி$_3$தம் ||

(கிஷ்கிந்தா காண்டம் 3-28,29) (ருக்வேதத்தை ஓதி அடக்கத்தைப் பெறாதவனுக்கும், யஜுர்வேதத்தை ஓதி தரிக்காதவனுக்கும், ஸாம வேதத்தை ஓதி அறிவு பெறாதவனுக்கும் இவ்வண்ணமாகப் பேச இயலாது. எல்லா இலக்கண நூல்களும் இவராலே பல முறை கேட்கப்பட்டுள்ளது என்பது தெளிவு -மிகுதியாகப் பேசும் இவரால் ஒரு சொல்லும் தவறாகக் கூறப்படவில்லையன்றோ) என்று இளைய பெருமாளிடம் திருவடியுடைய வாக்வைபவத்தை வியந்து கொண்டாடிப் பேசுகிறார்.

வேததாத்பர்ய நிர்ணயம்

ஸ்ரீ உவே புத்தூர் க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் ஸ்வாமி

(ஸ்வாமியுடைய கட்டுரைகளிலிருந்து தொகுக்கப்பட்டது)

நமது தேஶத்தில் அநாதி காலமாக வழங்கி வரும் மதத்திற்கு வைதிகமதம் என்று பெயராகும். வேதங்களை மூலப்ரமாணமாகக் கொண்டமதம் என்று இதற்குப் பொருள். மிகப் பழமையான இலக்கியங்களான சங்கநூல்களில் வேதத்தினுடைய பெருமைகள் பரக்கக் கொண்டாடப்பட்டிருக்கின்றன. சங்ககாலச் சான்றோர்கள் திருமாலையே வேதமுதல்வனாக முழுமுதற் கடவுளாகக் கொண்டிருந்தனர் என்பதும் சங்க நூல்களிலிருந்து தெரியவருகிறது.

வடமொழியில் வேதத்திற்கு *வேதம்*, * சந்தஸ்* , *ஆம்நாயம்* , *ஶ்ருதி* என்று நான்கு பெயர்கள் உண்டு. இந்த நான்கினுள் வேதம் என்ற பெயரே சங்கநூல்களில் அப்படியே கையாளப்பட்டிருக்கிறது. இந்த நான்கு பெயர்களும் முரையே *புலம்*, *மறை*, *வாய்மொழி*, * கேள்வி*, என்று அழகிய தமிழில் மொழி பெயர்க்கப்பட்டும் வழங்கப்படுகின்றன. இப்பெயர்களில் ஒவ்வொன்றாலும் வேதத்தைக் குறித்து அதில் முழுமுதல்வனாக முழங்கப்படுபவன் திருமாலே என்று சங்கநூல்கள் பல இடங்களில் காட்டப்பட்டுள்ளது.

வேத$_3$யதீதி வேத$_3$: என்னும் வ்யுத்பத்தியாலே (பிறருக்கு) அறிவை அளிப்பது என்னும் பொருளை உடையதாய் இருக்கிறது வேத ஶப்தம். *சா$_2$த$_3$யதீ$_3$திச$_2$ந்த$_3$:* என்னும் வ்யுத்பத்தியின்படி (பிறருக்கு) அறிவை மறைக்கையாலே சந்தஸ் எனப்படுகிறது வேதம். மேலெழப் பார்க்கும் போது இவ்விரண்டு பெயர்களுக்கிடையேயும் விரோதம் இருப்பதைப் போன்று தோன்றினாலும் உண்மையில் விரோதம் இல்லை என்பதை நாம் அறியலாம். அதாவது புண்ணியம் புரிந்த நல்லவர்களுக்கு வேதம் தன்னுடைய உண்மைப் பொருளைக் காட்டுவதன் மூலம் அறிவை அளிக்கிறது. பாபம் புரிந்த தீயவர்களுக்கு உண்மைப் பொருளை மறைப்பதனால் வேதம் சந்தஸ் - மறை

என்றும் வழங்கப்படுகிறது. ஒரு நாணயத்துக்கு இரு பக்கங்கள் போன்று வேதத்திற்கு இவ்விரு தன்மைகளும் உள்ளன. இக்காரணத்தினாலேயே வேதத்துக்கு தாத்பரியநிர்ணயம் செய்வதில் ஶ்ரமங்கள் இருந்து வந்தன.

வேதம் ஏட்டில் எழுதப் பட்டு பரவாமல் ஆசார்யர்களால் அநாதிகாலமாக வாய்மொழியாகவே ஓதப்பட்டுப் பரவி வருகையாலே ஆம் நாயம் - வாய்மொழி எனப்படுகிறது. ஆசாரியர்களுடைய வாய்மொழியாலே பரவுவது வேதம் என்னும் இவ்வர்த்தம். *ஆம்நாயதே- இதிஆம்நாய:* (வாயாலே ஓதப்படுகிறதாகையாலே ஆம்நாயம் எனப்படுகிறது) என்னும் வ்யுத்பத்தியாலே அறியப்படுகிறது. வேதம் ஶ்ருதி - கேள்வி என்றும் வழங்கப்படுகிறது. -. *ஶ்ரூயதஇதிஶ்ருதி: * (கேட்கப்படுவது ஆகையால் ஶ்ருதி எனப்படுகிறது) என்னும் வ்யுத்பத்தியாலே சிஷ்யனுடைய செவி வழியாகவே பரவுவது வேதம் என்பது அறியப்படுகிறது..

பண்டைக்காலத்தில் ஸாங்க்யர்கள் முதலான தத்வ வாதிகள் பலர் இருந்தனர். இவர்கள் *புருஷன் எனப்படும் ஜீவனோடு கூடிய மூலப்ரக்ருதியேஜகத் காரணம்* என்றும்,*பரப்ரஹ்மம் என்று தத்துவம் ஒன்றும் கிடையாது* என்றும் கூறி வந்தனர். கர்மங்களைப் பற்றிக் கூறுகையாலே கர்ம காண்டம் எனப்படும் வேதத்தின் பூர்வபாகத்துக்குப் பொருள் கூறுவதிலும் கருத்து வேற்றுமை இருந்து வந்தது.

ஜைமிநி மஹர்ஷியானவர் கர்மகாண்ட வாக்கியங்களுக்குத் தாத்பர்யம் நிர்ணயம் செய்யும் விதத்தை, தாம் இயற்றிய பூர்வமீமாம்ஸா ஶாஸ்திரத்தில் விளக்கியருளினார். ஸ்ரீ வேதவியாஸர் என்று புகழ்பெற்ற பாதராயணர் ப்ரஹ்ம ஸூத்ர பிரபந்தத்தை இயற்றி அதில் ஸாங்க்யர் முதலானோருடைய கொள்கைகளைக் கண்டித்து *பிரஹ்மமே ஜகத் காரணம்* என்னும் பரம வைதிக ஸித்தாந்தத்தை நிலை நாட்டினார். இருப்பினும் பல வேதாந்த வாக்யங்களுக்கு பொருள் கூறுவதில் இன்றளவும் கருத்து வேற்றுமை நிலவி வருகிறது.

ஆதிஶங்கரரும் அவருடைய ஶிஷ்ய பரம்பரையைச் சேர்ந்தவர்களும் பல உபநிஷத் வாக்கியங்களுக்கு ஒருவிதமாக பொருள் உரைத்து அத்வைத ஸித்தாந்தத்தைப் பரப்பினர். ஸ்ரீமத்வர் முதலான சில வைணவ ஆசார்யர்கள் பல வேதவாக்கியங்களுக்கு யுக்தி, மீமாம்ஸா நியாயங்கள்

முதலானவற்றைக் கொண்டு வேறு விதமாகப் பொருள் உரைத்தனர். வேததாத்பர்ய நிர்ணயத்தில் அநாதியானதும், பரம வைதிகமானதுமான விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தமே நல்ல தர்கங்களுக்கும் வேதாந்த விசார வழிகளுக்கும் விஞ்ஞான முறைகளுக்கும் மிகவும் பொருத்தமானதாகும்.

உபநிஷத் வாக்கியங்கள் பேத ஶ்ருதிகள் என்றும் அபேத ஶ்ருதிகள் என்றும் இருவகை பட்டிருக்கின்றன என்பது பிரஸித்தம். உலகமும் பிரஹ்மமும் வெவ்வேறு பட்டவை என்பவை பேத ஶ்ருதிகள். அவை ஒன்றே என்பவை அபேதஶ்ருதிகள். அபேத ஶ்ருதிகள் பேதஶ் ருதிகளைத் தள்ளி விடுகிறபடியால் ஜீவ - ப்ரஹ்ம- ஐக்யமே உண்மை என்கிறார்கள் அத்வைதிகள். *ஸர்வம்க$_2$ல்வித$_3$ம்ப$_3$ரஹ்ம (இவை எல்லாம் ப்ரஹ்மமே) முதலான அபேத ஶ்ருதிகள் சேதநம் அசேதநம் என்று இருவகைப்பட்டிருக்கும் பொருள்களை பிரஹ்மத்தோடு ஒன்றுபடுத்திக் கூறுகின்றன என்று வாதாடுகிறார்கள் அத்வைதிகள். *சேதநங்கள் மட்டும் ப்ரஹ்மத்தோடு ஒன்றாய் இருக்கின்றன* என்றும் *அசேதநப் பொருள்கள் பழுதையில் பாம்பைப் போலவும், கிளிஞ்சலில் வெள்ளியைப் போலவும் பொய்யாய் இருப்பவை* என்றும் இவர்கள் கூறுகிறார்கள். ஆக*ஸர்வம்* என்பதைப் பொருள் வழியாக (சேதநம் அசேதநம் என்று) இரண்டாகப் பிரித்து இரண்டுக்கும் அர்த்தநிர்ணயம் செய்வதில் இருவேறு வழிகளைக் கைக்கொள்கிறார்கள் இவர்கள்.

விசிஷ்டாத்வைதிகளான நமது ஆசார்யர்களோ கடக ஶ்ருதிகள் காட்டும் ஶரீர -ஶரீரி- பாவத்தையோ அல்லது ஸ்வதந்த்ர- பரதந்த்ர பாவத்தையோ கொண்டு பேதஶ்ருதிகளுக்கும் அபேத ஶ்ருதிகளுக்கும் மேலெழத் தோன்றும் விரோதத்தைத் தவிர்க்கலாம் என்று காட்டுவதன் மூலம் ஒரே வழியை கையாள்கிறார்கள். அத்வைதிகளுடைய வழியைக் காட்டிலும் நமது ஆசார்யர்கள் காட்டும் இவ்வழி தர்க்கரீதியாகப் பார்த்தால் சாலச் சிறந்தது என்பது தெளிவு.

மற்றும் பல உதாரணங்களையும் காணலாம். ஸகுண வாக்கியங்கள் எனப்படும் வேத வாக்கியங்கள் பரம்பொருள் திருக்கல்யாண குணங்களை உடையது என்று கோஷிக்கின்றன. நிர்குணவாக்கியங்கள் எனப்படும் வேதவாக்யங்கள் பரம்பொருள் குணங்கள் அற்றது என்று கூறுகின்றன.

நிர்குண வாக்யங்களால் தள்ளப்பட்டபடியாலே ஸகுணவாக்யங்கள் பொருளற்றவை என்று அத்வைதிகள் கூறுகிறார்கள். நமது ஆசார்யர்களோ இரண்டு மீமாம்ஸா ந்யாயங்களைக் கொண்டு ஸ குணநிர்குண வாக்கியங்களிடையே மேலெழத் தோன்றும் விரோதத்தைப் போக்கடிக்கிறார்கள்.

பூர்வமீமாம்ஸையில் உத்ஸர்க- அபவாத- ந்யாயம் என்னும் நியாயம் ஒன்று உண்டு. எந்த விதிக்கும் சில விதி விலக்குகள் உண்டு என்பதை நாம் அனைவரும் அறிவோம். இதுவே உத்ஸர்க- அபவாத- ந்யாயமாகும். * ந ஹிம்ஸ்யாத் ஸர்வா பூதாநி* என்பது எந்தப் பிராணியையும் கொல்லக் கூடாது என்று விதிக்கும் விதிவாக்யம். *அக்நீஷோமீயம்பஶுமாலபேத$_4$ * என்னும் வாக்கியம் யாகத்தில் பிராணியைக் கொல்ல வேண்டும் என்று கூறுகிறது. பூர்வமீமாம்ஸகர்கள் முதல் வாக்கியத்தில் காணப்படும் விதிக்கு இரண்டாவது வாக்கியம் விதிவிலக்கைத் தெரிவிக்கிறது என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். இதுவே உத்ஸர்க- அபவாத- ந்யாயம் எனப்படும்.

இந்த மீமாம்ஸா நியாயத்தைக் கொண்டு நமது ஆசார்யர்கள் நிர்குண வாக்கியங்களால் தெரிவிக்கப்படும் குணமின்மையாகிய பொது விதிக்கு ஸகுணவாக்யங்களால் விதிக்கப்படும் திருக்கல்யாண குணங்கள் விதிவிலக்குகள் ஆகும் என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். மேலும் வேதஶாஸ்திரங்களில் குணம் என்னும் பதம் மூலப்ரக்ருதியின் குணங்களான ஸத்வரஜஸ்தமஸுக்களையே பலவிடங்களில் குறிப்பதைக் காண்கிறோம். ஆகையால் * நிர்குண வாக்யங்கள் பிரகிருதியின் குணங்களான ஸத்வாதிகள் பரம்பொருளிடம் இல்லை* என்பதைத் தெரிவிக்கின்றன என்றும், *ஸகுண வாக்யங்கள் அப்ராக்ருதமான திருக்கல்யாண குணங்கள் அவனிடம் இருக்கின்றன* என்பதைத் தெரிவிக்கின்றன என்றும் கொண்டு, இவ்விரு வகைப்பட்ட வாக்கியங்களும் மேலெழுத்தோன்றும் விரோதத்தை பரிஹரிக்கலாம் என்பதைக் காட்டி அருள்கின்றனர்.

சா$_2$க$_3$பஶுந்யாயம் அல்லது ஸாமாந்ய-விசேஷ-ந்யாயம்* என்று அழைக்கப்படும் மற்றொரு பூர்வ மீமாம்ஸா நியாயமும் உண்டு. ஒரு வேத வாக்கியம் யாகத்தில் பஶுவை உபயோகிக்க வேண்டும் என்று விதிக்கிறது. பஶு என்பது பொதுவாக நான்கு கால்கள் கொண்ட பிராணியை குறிக்கும்.

இவ்வாக்கியத்தில் இருந்து இங்கு குறிக்கப்படும் நான்கு கால்கள் கொண்ட பிராணி எதுவென்று விளங்கவில்லை. மற்றொரு வேதவாக்கியம் அந்த யாகத்தில் சா$_2$க$_3$ம் எனப்படும் வெள்ளாட்டை உபயோகிக்க வேண்டும் என்று விதிக்கிறது. முதல் வாக்கியத்தில் காணப்படும் பசு என்னும் ஸாமான்யபதம் இரண்டாவது வாக்கியத்தில் காணப்படும் சா$_2$க$_3$ம் என்னும் விசேஷ பதத்தின் பொருளையே உடையது என்று பூர்வ மீமாம்ஸகர்கள் நிர்ணயித்து இருக்கிறார்கள். இதுவே சா$_2$க$_3$ பசுந்யாயம் அல்லது ஸாமான்ய விசேஷ நியாயம் எனப்படுகிறது.

நமது ஆசார்யர்கள் இந்த நியாயத்தை கொண்டு நிர்குண ஶ்ருதி வாக்கியங்களிலுள்ள *குணம்* என்னும் ஸாமான்ய சப்தம் அபஹதாப்மா விஜரோவிம்ருத்யுர்விஶோகோவிஜிக$_4$த்ஸோபிபாஸ* என்னும் வாக்கியத்தில் பரம்பொருளிடம் இல்லாதவையாக கோஷிக்கப்படும் குண விஶேஷங்களான தாழ்ந்த குணங்களையே குறிக்கிறது என்று நிர்ணயித்திருக்கிறார்கள். தாழ்ந்த குணங்களை தள்ளும் இந்த வாக்யம் அதே மூச்சிலேயே ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப: என்று பரம்பொருளானது திருக்கல்யாண குணங்கள் எல்லாவற்றுக்கும் கொள்கலமாக இருப்பது என்றுகோஷித்திருப்பதை நாம் காணலாம். ஒரு வேதவாக்கியமும் பரம்பொருளுக்கு நித்ய கல்யாண குணங்கள் இல்லை என்று கூறவில்லை என்பதும் நம்மால் குறிக்கொள்ளதக்கது. இப்படி இந்த ஸகுண நிர்குண வாக்கிய விசாரத்திலும் தர்க்க ரீதியாகவும், வேதாந்த விசார வழியிலும், விஜ்ஞான முறையிலும் ஆராய்வதில் பல வாக்கியங்களை பொருளற்றவை என்று தள்ளிவிடும் அத்வைதத்தைக் காட்டிலும் ஸகுண நிர்குண வாக்யங்களுக்கு விஷய விபாகம் செய்து ஸதர்த்த நிர்ணயம் செய்யும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே சிறந்தது என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது. ஸ்ரீ பராசர மகரிஷியும் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் *ஸமஸ்த கல்யாண குணாத்மக: * என்று பரம்பொருளை வர்ணித்து இருக்கிறார்.

*யஸ்யாத்மாஶரீரம் …… யஸ்ய ப்ருதி$_2$வீ ஶரீரம்முதலான பல வேத வாக்கியங்கள் பரம்பொருளுக்கு எல்லா உலகமும் சரீரம் என்று கோஷிக்கின்றன. *ஆதித்ய - வர்ணம்*, *நீலதோயத$_3$மத்$_4$யஸ்தா$_2$ வித்$_2$யுல்லேகே$_2$வபா$_4$ஸ்வரா*, *அந்தராதி$_3$த்யே ஹிரண்மய: புருஷ: *…..* தஸ்ய யதா$_3$கப்யாஸம் புண்டரீகம் ஏவமக்ஷிணீ* முதலான வேத வாக்கியங்கள்

பரம்பொருளுக்கு அபராக்ருதமாய் மிக அழகியதான ஒரு திருவுருவம் உண்டு என்று கோஷிக்கின்றன. பரம்பொருளுக்கு ஶரீரம் இல்லை என்று கூறும் அஶரீரம் ஶரிரேஷு* என்னும் வாக்கியம் மேற்கூறிய எல்லா வாக்யங்களையும் தள்ளி அவற்றை பொருள் அற்றவைகளாக ஆக்குகிறது என்கிறார்கள் அத்வைதிகள்.

நமது ஆசார்யர்கள் தர்க்கத்தையும், யுக்திகளையும், ஆராய்ச்சியையும் அடிப்படையாகக் கொண்ட முற்கூறிய பூர்வமீமாம் ஸாந்யாயங்களை கொண்டு *அஶரீரம் என்னும் வாக்கியமானது பரம்பொருளுக்கு நம்மைப் போன்று கர்மத்தால் ஏற்பட்ட ப்ராக்ருதமான ஶரீரம் கிடையாது என்றே கூறுகிறது என்று நிர்ணயிப்பதன் மூலம் உலகங்கள் அனைத்தும் அவனுக்கு ஶரீரம் என்றும், அவனுக்கு தானே தன்னுடைய இச்சையால் எடுத்துக்கொள்ளும் அப்ராக்ருத திவ்யமங்கள விக்கிரஹம் உண்டு என்றும் கூறும் நூற்றுக்கணக்கான வேத வாக்கியங்களை ரக்ஷிக்கிறார்கள். இதுவே வேதாந்த ஸித்தாந்தம் என்னும் கருத்தினாலே ஸ்ரீ பராசர மகரிஷி ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் இச்சா$_2$க்$_3$ருஹீதாபி$_4$மதோருதே$_3$ஹ: (தன் விருப்பத்தினாலே எடுத்துக் கொள்ளப்படும் மிக இனிய பெரிய உருவங்களை உடையவன்) என்று கோஷித்தார். இவ்விஷயத்திலும் தர்க்க ரீதியாகவும் ஆராய்ச்சி முறையிலும் அதைக் காட்டிலும் நாம் சார்ந்திருக்கும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே சிறந்தது என்பது தெளிவு.

- நேஹநாநாஸ்திகிஞ்சந* என்னும் வேத வாக்கியம் உலகமனைத்தும் பொய் என்று கூறுவதாக உரைக்கின்றனர் அத்வைதிகள்.

த்வாஸுபர்ணாஸஜாஸகாயாஸமாநம்வ்ருஷம்பரிஷஸ்வஜாதே |
தயோரந்ய: பிப்பலம்ஸ்வாத்வத்திஅநஶ்நந்நந்யோஅபிசாகஶீதி||
ஜ்ஞாஜ்ஞௌத்வாவஜாவீஶநீஶௌ
ப்ருதகாத்மாநம்ப்ரேரிதாரம்சமத்வா
போக்தாபோக்யம்ப்ரேரிதாரம்சமத்வா*
நித்யோநித்யானாம்சேதநஶ்சேதநாநாம்ஏகோபஹுநாம்யோவிததாதிகாமாந்

முதலான பல வேத வாக்கியங்கள் உலகம் முழுவதும் பரம்பொருளை போலவே உண்மையானது என்று முழங்குவதற்கு அத்வைதிகளுடைய 'உலகம் அனைத்தும் பொய்' என்னும் கூற்று முரண்படுகிறது. நமது

ஆசார்யர்களோவெனில்:- *ஸர்வம் தம்பராதாத் யோந்யத்ராத்மந: ஸர்வம் வேத * என்னும் வேத வாக்யத்தையும். நததஸ்தி விநாயத் ஸ்யாந்மயா பூதம் சராசரம்* என்னும் கீதாவாக்யத்தையும் முற்கூறிய உத்ஸர்க அபவாதஸாமாந்ய விஶேஷந்யாயங்களையும் கொண்டு * நேஹநாநாஸ்திகிஞ்சந * என்னும் வாக்கியம் ஸ்வதந்திரமான லோகத்தையே பொய் என்று கூறுகிறது என்றும், மற்ற வேத வாக்கியங்கள் பரதந்த்ரமான லோகமானது பரம்பொருளைப் போலவே ஸத்தியமானது என்று கூறுகின்றன என்றும் நிஶ்சயிக்கிறார்கள். வேதாந்த விசாரமுறையிலும் விஜ்ஞான வழியிலும் இவ்விஷயத்திலும் சிறப்புற்று விளங்குவது நம்முடைய விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமேயாகும்.

இனி ஶிவ-விஷ்ணு- விசாரத்தை எடுத்துக்கொள்வோம். * நாராயணாத் ப்ரஹ்மாஜாய தேநாராயணா த்ருத்ரோஜாயதே நாராயணாத் இந்த்ரோஜாயதே * என்னும் வேதவாக்கியம் ப்ரஹ்மா ருத்ரன் இந்திரன் முதலான தேவதைகளும் மற்ற பொருள்களும் நாராயணமிடமிருந்தே உண்டாயின என்று கோஷிக்கிறது. * ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மாநேஶாந:* என்னும் வேதவாக்கியம் ஶ்ருஷ்டிக்கு முன் நாராயணன் மட்டுமே இருந்தான் என்றும் பிரம்மா சிவன் முதலான எவரும் இல்லை என்றும் கோஷிக்கிறது. நாராயணன் ஒரு தெய்வத்திடம் இருந்து பிறந்தான் என்றோ அல்லது ஒரு தெய்வத்தினால் ஸம்ஹரிக்கப்பட்டான் என்று எந்த ஒரு வேத வாக்கியமும் கூறவில்லை.

பரம்பொருள் கணக்கற்ற பெயர்களை உடையதாய் இருக்கிறது என்பது உண்மையே! தன்னால் படைக்கப்பட்ட சேதனங்களுக்கும் அசேதனங்களுக்கும் தன்னுடைய சில பெயர்களையே பகவான் கொடுத்திருக்கிறான். அனைத்தும் அவனுடைய பெயர்களாக இருப்பதினாலேயே *அஸத்*, *ஸத்* *ப்ரஹ்ம*,*ஆத்மா**இந்திரன்*,*வாயு*,*ஆகாசம்**ப்ரஜாபதி*,*ஹிரண்யகர்பன்*, ஶிவன், ஈஶானன், ஶம்பு, ஹரி, அச்சுதன் அநந்தன் ,புருஷன், உத்தமபுருஷன், விஷ்ணு, வாசுதேவன், நாராயணன் என்று பல வேத வாக்யங்களில் பலவிதமாக அவன் குறிப்பிடப்படுகிறான்.

*தமீஶ் வராணாம் பரமம்மஹஶ்வரம் தம்தே3வதாநாம் பரமம்சதை3வதம் * எனும் வேத வாக்கியம் அவனை தேவர்களுக்கெல்லாம் தேவன் என்று கோஷிக்கிறது பல வேத வாக்யங்கள் அவன் ஒருவனே என்றும் இரண்டாவது அற்றவன் என்றும் கூறுகின்றன. ஆகையால் வேதத்தில் கூறப்பட்ட பல தேவர்களில் எந்த தேவன் பரம்பொருளாய் இருப்பவன் என்று நிர்ணயிக்க வேண்டிய பொறுப்பு வைதீகர்களான நமக்கு உள்ளது. நமது ஆசார்யர்கள்சாக-பஸு-ந்யாயம் எனப்படும் ஸாமாந்ய விசேஷந்யாயத்தை உபயோகித்து * ஸஆத்மா அங்கா3ந்யந்யாதே3வதா:* முதலான வேதவாக்யங்களில் ஸர்வாத்மாவாககோஷிக்கப்படும்பரம்பொருள் நாராயணனே என்றும் மற்ற தெய்வங்கள் அவனுக்கு அங்கங்களாய் வஶப்பட்டு இருப்பவர்களே என்றும் நிச்சயித்து இருக்கிறார்கள். *பூர்வபதா3த்ஸம்ஜ்ஞாயாமக3: * என்னும் பாணினி ஸூத்திரத்தின்படி ட-வர்க்க - ணகாரத்தைகடைசி எழுத்தாக கொண்ட நாராயணபதம்அப்பெயரால் ப்ரஸித்தி பெற்ற ஒருவனை மட்டுமே குறிக்கும்.*நாராயண:* என்னும் திருநாமத்தால்ப்ரஸித்தி பெற்று இருப்பவன் விஷ்ணுவே என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆகையால் *அஸத்*, *ப்ரஹ்ம*, *இந்திரன்*, *வாயு*, *ஆகாசம்* *ப்ரஜாபதி* ,*ஹிரண்யகர்பன்*, ஶிவன், ஈஶானன், ஶம்பு, ஹரி, அச்சுதன் அநந்தன் ,புருஷன், உத்தமபுருஷன், முதலான மற்ற எல்லா பெயர்களும் பஶு சப்தத்தை போலக் காட்டப்படும் தன்மையை உடைய எவரையும் குறிக்கும் ஸாமான்ய சப்தங்கள் என்றும் ட-வர்க்க - ணகாரத்தை கடைசி எழுத்தாக கொண்ட நாராயண சப்தம் சா2க3 பதத்தைப்போலஅப்பெயரால் ப்ரஸித்தி பெற்ற ஒருவனையே குறிக்கும் என்றும் விளங்குகிறது.*நாராயண:* என்கிற பதம் வேறு எவரையாவது குறிக்க வேண்டுமானால் அது த-வர்க்க- நகாரத்தைக் கடைசி எழுத்தாக கொண்டு *நாராயந:* என்று இருக்க வேண்டும். ஆனால் வேதத்தில் எங்கும் இப்படி பிரயோகிக்கப் படவில்லை. வேதவாக்கியங்கள் பரம்பொருளை இப்பெயரால் குறிக்கும் இடங்கள் எல்லாவற்றிலும் நாராயணா என்று கூறுகின்றனவே தவிர ஓரிடத்திலும் *நாராயண:* என்று குறிக்கின்றன வேதவிர ஓரிடத்திலும் * நாராயந:* என்று குறிக்கவில்லை. இதிலிருந்து நாராயணன் ஒருவனே பரம்பொருள் என்றும் மற்ற தெய்வங்கள் அனைத்தும் நம்மை போன்று ஜீவாத்மாக்கள் அவர் என்றும் தேறுகிறது.

வேத தாத்பர்ய நிர்ணயம் முற்றிற்று

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

விஶிஷ்டாத்வைதம்

வாகம்ருதவர்ஷீ

ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

(ஏடுபடுத்தப்பட்ட உபந்யாஸக் கட்டுரை)

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே।

ய: ஶ்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத்॥

[யாவரொருவர் ஶ்ருதி ஸ்ம்ருதி ஸூத்ரங்கள் ஆகியவற்றினுடைய (மேலெழத் தோன்றும்) முரண்பாடுகளாகிற உள்வெதுப்பைப் போக்கினாரோ, அத்தகைய பரம யோகியான ஸ்ரீராமாநுஜரை வணங்குகிறேன்]

என்று பெரியோர் எல்லோரும் கொண்டாடும்படியான வைபவம் பொருந்தியவர் நம் ஸ்வாமி எம்பெருமானார். அவர் வளர்த்த ஸித்தாந்தம் *விஶிஷ்டாத்வைதம்* எனப்படுகிறது. *விஶிஷ்டாத்வைதம்* என்றால் என்னவென்பதைப் பற்றியும், இந்த விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தமடியாக நம் ஸ்வாமி ஸாம்ப்ரதாயிகமான பல அர்த்தங்களை எப்படி வ்யக்தமாக நிரூபித்து நமக்கு அநுக்ரஹித்துள்ளார்கள் என்பதைப் பற்றியும் ஈண்டு விண்ணப்பிக்கிறேன்.

சோளஸிம்ஹபுரம் தொட்டாசார்யர் என்னும் மஹாசார்யர் ப்ரஹ்மஸூத்ர வ்யாக்யாநமாக *பாராஶர்ய விஜயம்* என்னும் அதியத்புதமான ஒரு க்ரந்தம் ஸாதித்துள்ளார். இந்த க்ரந்தத்திலே ஆரம்பத்திலே ஒரு வர்ணநம் பண்ணுகிறார்.

வேதாபஹாரிணம் தைத்யம் மீநரூபி நிராகரோத்।
ததர்த்தாபஹாரிணஸ் ஸர்வாந் வ்யாஸரூபீ மஹேஸ்வர:॥

என்னும் இந்த ஶ்லோகத்தின் கருத்தாவது:- எம்பெருமான் மத்ஸ்யாவதாரம் கொண்டான். அவனே வ்யாஸாவதாரமும் கொண்டான். அவனுடைய ஒரு திருவவதாரம் மீனாவதாரம். அவனுடைய மற்றொரு திருவவதாரம் வ்யாஸாவதாரம். வேதாபஹாரம் பண்ணினான் ஸோமுகன் என்னும் அஸுரன்.

அவனை அழித்துப் பரம ப்ரமாணமான வேதத்தை மீட்பதற்காக அமைந்தது மத்ஸ்யாவதாரம். வேதார்த்தங்களை மாற்றியும் விபரீதமாகவும் சொல்லுபவர்கள் வேத பாஹ்ய குத்ருஷ்டிகள். அவர்களுடைய மதங்களை நன்றாகக் கண்டித்து – இதுதான் வேதாந்தார்த்தம், இதுதான் வைதிகமான மதம், இதுதான் ஸத்வாதம் – என்று உண்மையான வேதாந்தார்த்தங்களை ஸித்தாந்தீகரணம் பண்ணுவதற்காக எம்பெருமான் கொண்டது வ்யாஸ அவதாரம். இந்த உண்மையை – அதாவது பகவானுடைய திருவவதாரம்தான் வ்யாஸாவதாரம் – என்பதை ஸ்ரீவேத வ்யாஸருடைய திருத்தகப்பனாராகிய ஸ்ரீபராஶர பகவானே வர்ணிக்கிறார்.

க்ருஷ்ணத்$_3$வைபாயநம் வ்யாஸம் வித்$_3$தி$_4$ நாராயணம் ப்ரபு$_4$ம்।
கோஹ்யந்யோ பு$_4$வி மைத்ரேய மஹாபா$_4$ரத க்ருத்$_3$ப$_4$வேத்॥

(ஸ்ரீவிஷ்ணுபுராணம் 3-4-5)(மைத்ரேயரே! க்ருஷ்ணத்வைபாயநரான வ்யாஸரை பரமாத்மாவான நாராயணன் என்றே அறிவீராக! வேறு யாரால் இவ்வுலகில் மஹாபாரதத்தை இயற்ற முடியும்?) என்னும் ஶ்லோகத்தைக் காண்க.

இப்படிப்பட்ட பெருமையை உடைய ஸ்ரீவேதவ்யாஸர் அருளிச்செய்துள்ள (ப்ரஹ்ம மீமாம்ஸா ஶாஸ்த்ரம்) என்னும் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு நம் ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களாலே வ்யாக்யாநம் அருளிச்செய்திருக்கிறார். இதைத்தவிர திருவேங்கடமுடையான் திருமுன்பே அவர் ஸாதித்த உபந்யாஸம் பட்டோலை கொள்ளப்பட்டு *வேதார்த்த ஸங்க்ரஹம்* என்னும் ப்ரஸித்தி பெற்ற க்ரந்தமாக விளங்குகிறது. இவற்றிலிருந்து *விஶிஷ்டாத்வைதம்* என்றால் என்னவென்பதைப் பற்றி நாம் மிகவும் விளக்கமாக அறியமுடியும். குறிப்பாக வேதார்த்த ஸங்க்ரஹத்திலே விஶிஷ்டாத்வைதம் என்பது பற்றி மிகவும் அத்புதமாக வர்ணநம் பண்ணியருளுகிறார் நம் ஸ்வாமி. விஶிஷ்டாத்வைதம் என்றால் என்ன? இதில் தத்வ பாகமாவது என்ன?ஹித பாகமாவது என்ன? புருஷார்த்த பாகமாவது என்ன? வேதாந்த ஸித்தமான தத்வ-ஹித-புருஷார்த்தங்களை நம் பூர்வர்கள் எப்படி நிர்வஹிக்கிறார்கள்? என்பதை நாம் இப்பொழுது விவரமாக அநுபவத்தில் கொள்வோம்.

மஹாசார்யரான சோளஸிம்ஹபுரம் தொட்டாசார்யர் *பாராஶர்ய விஜயம்* என்னும் க்ரந்தத்திலே ஆரம்பத்திலே ஒரு விஷயத்தை அருளிச்செய்திருக்கிறார். வேதாந்திகள் அனைவரும் விசாரம் பண்ணுவது இரண்டு விஷயங்களைப் பற்றியே! அதாவது, *அத்வைதம் வேதாந்தார்த்தமா? அல்லது த்வைதம் வேதாந்தார்த்தமா?* என்றுதான் வேதாந்திகள் விஷயவிசாரம் பண்ணுவார்கள். ஸகல வைதிக ஸம்மதம் வைஷ்ணவ மதமாக இருக்கிறபடியால் - *ஶைவம் வேதாந்தார்த்தமா? அல்லது வைஷ்ணவம் வேதாந்தார்த்தமா?* - என்று விசாரம் பண்ணுகிற வைதிகர்களே கிடையாது. அத்வைத மதாசார்யர்களும் வைஷ்ணவர்கள்தான். விஶிஷ்டாத்வைதிகளின் மதமும் ஸ்ரீவைஷ்ணவம்தான். த்வைதிகளுக்கும் மதம் வைஷ்ணவம்தான். விஷ்ணு பாரம்யம் சொல்லாத அவைஷ்ணவ மதம் என்பது வேதாந்தத்திலே சேர்ந்தது அன்று. அத்வைத மதாசார்யர்களோ, விஶிஷ்டாத்வைத மதாசார்யர்களோ, த்வைதாசார்யர்களோ எல்லாரும் வேதாந்திகளாக இருக்கிறபடியால் நாராயண பரத்வத்தை இசையாத வைதிகர்களே கிடையாது. அப்படி ஒருகால் விஷயவிசாரம் ஒருவன் பண்ணுவனேயானால், அவன் அவைதிகனாக இருப்பவனே தவிர, அவன் ஒருகாலும் வைதிகனாக ஆக முடியாது.

இந்த அர்த்தத்தைத்தான் பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தாரும் ஸித்தாந்தீகரணம் பண்ணியருளினார். *தேவரீருடைய ஸர்வேஶ்வரத்வத்தை ஒப்புக்கொள்ளாத வைதிகன் யார்?* என்று எம்பெருமானைப் பார்த்துக் கேட்கிறார் ஆளவந்தார். *அவைதிக க:?* என்று கேள்வி. பெரியவாச்சான்பிள்ளை அவைதிக ஶப்தத்துக்கு - *அப்ராஹ்மண இத்யர்த்த:* என்று அபிப்ராயம் காட்டியருளுகிரார். புருஷஸூக்தத்தையாவது அத்யயநம் பண்ணினால்தான் ப்ராஹ்மண்யம் ஸித்திக்கும். அது தொடக்கமாக ஸகல வேத வேதாந்தங்களிலே, ஸகல இதிஹாஸ புராணங்களிலே, ஸர்வ ஶாஸ்த்ரங்களிலே ஸம்மதமானது நாராயண பரத்வம். இந்த நாராயண பரத்வத்திலே வைதிகர்களுக்குள்ளே யாருக்கும் அபிப்ராயபேதம் கிடையாது. ஆக, வைதிகர்களெல்லாரும் விஷயவிசாரம் பண்ணுவது வேதாந்தார்த்தம் த்வைதமா?(பேதமா) அல்லது அத்வைதமா?(அபேதமா) என்பதைப் பற்றியே! நம் பெரியோர்கள் எல்லாரும் இந்த விஷய விசாரம் பண்ணுகிறவர்களாகவே அமைந்தார்கள்.

நம்முடைய பூர்வாசார்யர்களுக்குள்ளே ஸ்வாமி எம்பெருமானார்க்குத் திருக்கச்சி நம்பிகள் மூலமாகப் பேரருளாளப்பெருமாள் அருளிச்செய்த ஆறு

வார்த்தைகளிலே இரண்டாவதாக அமைந்தது *தர்ஶநம் பேத ஏவ ச* என்பது. தேவப்பெருமாள் அருளிச்செய்த ஆறு வார்த்தைகளிலே மிக முக்யமான அர்த்தம் இதுவே ஆகும். நம்முடைய தர்ஶநம் பேத தர்ஶநம்தான். இருந்தாலும் இதை விஶிஷ்டாத்வைத ஶப்தத்தால் வர்ணிக்கிறார்கள் நம் பெரியோர்கள். நம் ஸ்வாமி எம்பெருமானார் தம்முடைய க்ரந்தங்களிலே *விஶிஷ்டாத்வைதம்* என்னும் ஶப்தத்தை ப்ரயோகிக்கவில்லை. இருப்பினும் அவர் காலக்ஷேபம் ஸாதிக்கும் காலத்தில் இந்த ஶப்தத்தை ப்ரயோகித்திருக்க வேண்டும். வடுகநம்பி அருளிச்செய்திருக்கும் ஸ்ரீராமாநுஜ அஷ்டோத்தர ஶத நாமாவளியிலே இந்த ஶப்த ப்ரயோகத்தைக் காணலாம். எம்பெருமானார் திவ்யஸூக்திகளுக்கு வ்யாக்யாநம் பண்ணியருளியிருக்கும் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் நம்முடைய தர்ஶநம் *விஶிஷ்டாத்வைதம்* என்று அருளிச் செய்திருப்பதைக் காண்கிறோம். ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் ஸ்ரீபராஶர பட்டருடைய ஸந்ததியிலே திருவவதாரம் பண்ணி யருளியவர். இவர்தான் ஸ்ரீவேதவ்யாஸ ஸூதர்ஶந பட்டாரகர். இவருடைய திருவாக்குதான் -

தஸ்மை ராமாநுஜார்யாய நம: பரமயோகிநே।
ய: ஶ்ருதி ஸ்ம்ருதி ஸூத்ராணாம் அந்தர்ஜ்வரமஶீஶமத்॥

[யாவரொருவர் ஶ்ருதி ஸ்ம்ருதி ஸூத்ரங்கள் ஆகியவற்றினுடைய (மேலெழத் தோன்றும்) முரண்பாடுகளாகிற உள்வெதுப்பைப் போக்கினாரோ, அத்தகைய பரமயோகியான ஸ்ரீராமாநுஜரை வணங்குகிறேன்] என்னும் ஆஶ்சர்யமான ஶ்லோகம். ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் மேலும் ஒரு ஆஶ்சர்யமான விஷயம் அருளிச் செய்திருக்கிறார்.

ஆத்மா வா அரே த்$_3$ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதி$_3$த்$_4$யாஸிதவ்:

(ப்ருஹ 6-5-6) (கேட்கத்தக்கதும், நினைக்கத்தக்கதுமான ஆத்மா த்யாநிக்கத்தக்கது, பார்க்கத்தக்கது) என்று வேதாந்த வாக்யம். *ஆத்மா வா அரே த்$_3$ரஷ்டவ்ய:* என்று முதலிலேயே ஶப்தம் இருந்தாலும், நம் ஆசார்யர்கள் அதை மாற்றிக் கொண்டு விட்டனர். பாடக்ரமம் இப்படி இருந்தாலும் கூட நம் பெரியோர்கள் அர்த்த க்ரமத்தை அநுஸரித்து பாடக்ரமத்தை மாற்றிக் கொண்டு விட்டனர். இது பூர்வமீமாம்ஸா ந்யாய ஸித்தமான விஷயம். அர்த்தக்ரமத்தின்படி *ஶ்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய: த்ரஷ்டவ்ய:* என்று ஶ்ரவண, மநந, த்யாந, தர்ஶநங்களைச் சொல்லுமாறு அமைந்திருக்கிறது இந்த ப்ருஹதாரண்ய

உபநிஷத் வாக்யம். இந்த வசநார்த்தத்தைத் திருவுள்ளம் பற்றிய ஶ்ருதப்ரகாஶிகாசார்யர்,

ஶ்ருத்யந்தேஷு ஶ்ருதம் பாஷ்யே மதம் த்யாதம் ஹ்ருதம்புஜே।
லக்ஷ்மீதரம் ப்ரபத்யே தம் த்ருஷ்டம் ஸ்ரீரங்கதாமநி॥

என்று மிக ஆஶ்சர்யமான ஶ்லோகம் ஒன்றை அருளிச்செய்திருக்கிறார். அதாவது, எதைக் கொண்டு நாம் கேட்பதென்றால் – வேதாந்தங்களைக் கொண்டு. எதைக் கொண்டு நாம் மநநம் பண்ணுவதென்றால் – ஸ்ரீபாஷ்யத்தைக் கொண்டு. எங்கே த்யாநம் பண்ணுவதென்றால் – ஹ்ருதய கமலத்தில். கடைசியில் திருவரங்கத்தில் தான் தர்ஶநம் என்கிறார். திருவரங்கத்திலே தர்ஶநமா? அல்லது பரமபதத்திலே தர்ஶநமா? என்றால் பரமபதத்திலே அன்று, திருவரங்கத்தில்தான் தர்ஶநம். *அச்சுவை பெறினும் வேண்டேன்* என்கிற ஆழ்வார் வழி வந்தவர்கள் நம் பூர்வர்கள். பரமபதத்திலே எம்பெருமானை ஸேவிப்பது என்பது நித்யமான புருஷார்த்தம். ஆனால் இந்த பூ மண்டலத்திலே திருவரங்கத்திலேதான் தர்ஶநத்தை வைத்தார்கள் நம் பெரியோர்கள். இந்தத் திருவுள்ளக் கருத்தை அநுஸரித்து ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் இந்த ஆஶ்சர்யமான அபிப்ராயத்தைக் காட்டியருளுகிறார்.

உபநிஷத்துக்களிலே சாந்தோக்ய உபநிஷத்துக்கு மிக்க ஏற்றம் உண்டு. வேதங்களிலே உயர்ந்தது ஸாம வேதம். ஸாம வேதத்திலே அந்தரங்கமானது சாந்தோக்ய உபநிஷத். அதில் ஆறாவது ப்ரபாடகம் ஸத்வித்யா ப்ரகரணம். உபக்ரம உபஸம்ஹாரம் (முதலும் முடிவும் ஒருபடியாய் இருப்பது), அப்யாஸம் (திருப்பித் திருப்பிப் படிப்பது), அபூர்வதை (புதிதாகச் சொல்லுவது), ப$_2$லம் (பயனுடையதாக இருப்பது), அர்த்தவாதம் (புகழ்வது), உபபத்தி (பொருத்தமுடையதாய் இருப்பது) என்று ஆறுவிதமான தாத்பர்ய லிங்கங்களை வைத்துக் கொண்டுதான் சாந்தோக்ய உபநிஷத்திலே உள்ள ஸத்வித்யா ப்ரகரணத்துக்குண்டான தாத்பர்யம் என்னவென்பதை நாம் நிர்ணயித்துக் கொள்ள வேண்டும். ஆறுவிதமான தாத்பர்ய லிங்கங்களை வைத்து ஆராய்ந்து இந்த ப்ரகரணத்துக்கு அத்வைதமே விஷயம் என்கிறார்கள் அத்வைதிகள். இந்த ப்ரகரணத்திலே சொல்லப்பட்ட விஷயம் நிர்விஶேஷ அத்வைதம் என்பது ஆதிஶங்கரருடைய பக்ஷம்.

நிர்விஶேஷ அத்வைதம் அன்று; விஶிஷ்டாத்வைத பரமாகவே இந்த ப்ரகரணத்தைக் கொள்ள வேண்டும் என்று நிர்வஹிக்கிறார் ஸ்வாமி எம்பெருமானார். வேதார்த்த ஸங்க்ரஹத்துக்கு வ்யாக்யாநமான தாத்பர்யதீபிகையில், *ஆறுவிதமான தாத்பர்ய லிங்கங்களை வைத்துக்கொண்டு பார்க்கும்போது இந்த ப்ரகரணத்துக்கு விஷயம் அத்வைதம் என்பதை நாமும் ஒப்புக் கொள்கிறோம்* என்று ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் ஸாதிக்கிறார். ஆறு தாத்பர்யலிங்கங்களைக் கொண்டு அத்வைதம்தான் இந்த ப்ரகரணத்துக்கு ஸாரார்த்தம் என்ற விஷயத்தைப் பெரியோர்கள் சொல்லி இருக்கிறார்கள். *தத் அப்-பகதம்* - *அதை நாம் ஒப்புக்கொண்டு விட்டோம்* என்கிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். ஆனால் அதற்கு மேலே, *அந்த அத்வைதமானது எப்படிப்பட்டது?* என்றால், *அதை ஶுத்த-அத்வைதமாக நாம் கொள்ள முடியாது; விஶிஷ்டாத்வைதமாகத்தான் கொள்ள வேண்டும்* என்று ஸாதிக்கிறார். ஆக *அத்வைதம் என்கிற ஶப்தத்திலே நமக்கு அபிப்ராயபேதம் கிடையாது; அந்த அத்வைதம் நிர்விஶேஷ அத்வைதமா? அல்லது விஶிஷ்ட-அத்வைதமா? என்பதில்தான் அபிப்ராயபேதம்* என்று வர்ணநம் பண்ணியிருக்கிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். *விஶிஷ்டாத்வைதம்* என்கிற பதத்தை அவர் இந்த இடத்திலே ப்ரயோகம் பண்ணி இருக்கிறார். ஆக, இந்த ஶப்தத்திலே சொல்லப்பட்ட அர்த்தமானது ஸ்வாமி எம்பெருமானாரால் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களிலே பரக்க நிரூபிக்கப்பட்ட விஷயம்தான் என்பதை நாம் அறியலாம்.

அத்வைதம் வேதாந்தார்த்தம் என்று அத்வைத மதாசார்யர்கள் சொல்லவில்லை. வேதாந்தமே சொல்லுகிறது. ப்ருஹதாரண்யக, கடோபநிஷத்துக்களிலே –

ம்ருத்யோஸ்ஸ ம்ருத்-மாப்நோதி ய இஹ நாநேவ பஶ்யதி

என்னும் வாக்யம் காணப்படுகிறது. இத்தால், *பேதத்தைப் பார்க்கிறவனுக்கு மேன்மேலும் ஸம்ஸாரம்தான் கிடைக்குமே தவிர ஒருகாலும் ஸம்ஸாரத்திலிருந்து விடுதலை கிடைக்காது; அவனுக்கு மோக்ஷ ஸாம்ராஜ்யம் கிடையாது* என்பதை வேதாந்தத்தினுடைய பரமமான அபிப்ராயமாக அறியலாம். அத்வைதத்தைப் பார்க்கிறவனுக்குத்தான் மோக்ஷம், த்வைதம் பார்க்கிறவனுக்குக் கிடையாது என்பதை வேதாந்தம் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. இதை எல்லா வைதிகர்களும் சொல்ல வேண்டியவர்கள் தான்.

இந்த வேதாந்த வாக்யத்தை ப்ரமாணமாகக் கொண்டவர்கள் யாவராயிருந்தாலும் இந்த வாக்யத்துக்கு அர்த்தம் சொல்ல வேண்டியவர்கள் ஆகிறார்கள். வேதாந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிற அத்வைதம் இப்படிப்பட்டது என்று ஒருவர் சொல்கிறார். அன்று, அப்படிப்பட்டது என்று மற்றொருவர் சொல்லுகிறார் என்பதுதான் உண்மையே தவிர, அத்வைதம் வேதாந்தார்த்தமே அன்று என்று ஒரு வைதிகரும் சொல்லுவதில்லை; சொல்லவும் முடியாது.

ஆக வேதாந்தத்தில் சொல்லப்பட்ட அத்வைதம் எப்படிப்பட்டது என்பதில்தான் அபிப்ராய பேதம். அது நிர்விஶேஷ அத்வைதமா அல்லது ஸவிஶேஷ (விஶிஷ்ட) அத்வைதமா என்கிற விஷயவிசாரத்தைத்தான் நம் பூர்வாசார்யர்கள் பண்ணியிருக்கிறார்கள் என்பதை நாம் அறியலாம். *தர்ஶநம் பேத ஏவச* என்பதை ஸித்தாந்தமாகத் திருக்கச்சி நம்பிகள் மூலம் தேவப்பெருமாள் அருளிச்செய்ய, அதை நம் ஸ்வாமி எம்பெருமானார் விஶிஷ்டாத்வைத பரமாக நிர்வாஹம் பண்ணுவது ஆஶ்சர்யமான விஷயம்.

ஸ்ரீபாஷ்யத்திலே லகு ஸித்தாந்த ப்ரகரணத்திலே மற்றொரு அபிப்ராயம் காட்டியருளுகிறார் ஸ்வாமி எம்பெருமானார். ப்ரஸங்காத் அதையும் சேர்த்து விண்ணப்பிக்கிறேன். *தத்வஜ்ஞாநாந் மோக்ஷ லாப:* இதை வைதிகர்கள் அனைவருமே சொல்லுகின்றனர். வைதிகர் என்ன, வேதாந்தமே சொல்லுகிறது.

தமேவம் வித்$_3$வாந்-அம்ருத இஹ ப$_4$வதி

(புருஷஸூக்தம்)(இந்த பகவானை இப்படி அறிந்து கொண்ட ஜ்ஞாநி இவ்வுலகில் முக்தனுக்கு ஸமமாநவனாக ஆகிறான்) என்றும்,

தமேவ விதி$_3$த்வா அதிம்ருத்யுமேதி

(ஶ்வே 3-8)(அந்த பரமபுருஷனை அறிந்தே ஸம்ஸாரத்தைத் தாண்டுகிறான்)

என்றும் வேத வாக்யங்கள். பகவானைப் பற்றி நாம் அறிய வேண்டும். பகவத் விஷய ஜ்ஞாநத்தை நாம் பெற வேண்டும். பரமாத்ம ஜ்ஞாநத்தாலேயே மோக்ஷம். அம்ருதத்வ ப்ராப்தி ஹேது ப்ரஹ்ம ஜ்ஞாநம். (ம்ருத்யும் அத்யேதி) என்று வேதாந்தம் சொல்கிறது. அநிஷ்ட நிவ்ருத்தி, இஷ்ட ப்ராப்தி இரண்டுக்கும் தப்பாத உபாயம் ப்ரஹ்ம ஜ்ஞாநம். ஸ்வாமி எம்பெருமானார் ஆதிஶங்கரருடைய வ்யாக்யாநத்தைப் பார்த்தார். ஸ்ரீபாஷ்யத்திலே,

யதுக்தம் அவித்யா நிவ்ருத்திரேவ மோக்ஷ: ஸா ச ப்ரஹ்மவிஜ்ஞாநா-தேவ பவதி இதி- தத் அப்-பகம்யதே

என்று அருளிச்செய்கிறார். *அவித்யை நீங்குவதுதான் மோக்ஷம்* என்கிறார் ஆதிஶங்கரர் வேதாந்தார்த்தமாக. அதை ஸ்வாமி எம்பெருமானாரும் ஒப்புக் கொள்கிறார். ஆனால் தத்வஜ்ஞாநம் கிம் ரூபம்? ப்ரஹ்மஜ்ஞாநம் உபாயம் என்று சொல்லப்படுகிறதே! அந்த ப்ரஹ்ம ஜ்ஞாநம் – ஸாதநமாகிற உபாயஜ்ஞாநம் எப்படிப்பட்டது? *வாக்யஜந்ய வாக்யார்த்த ஜ்ஞாநம்* என்பது ஶங்கரருடைய பக்ஷம். *உபாஸநாத்மகமான ஜ்ஞாநம்* என்று நிர்வஹிக்கிறார் நம் ஸ்வாமி எம்பெருமானார்.

நிர்விஶேஷ அத்வைத வாதிகள் வாக்யார்த்த ஜ்ஞாநம் உபாயம் என்கின்றனர். அது உபாயமன்று; உபாஸநாத்மகமான ஜ்ஞாநம்தான் உபாயம் என்கின்றனர் விஶிஷ்டாத்வைதிகள். கொஞ்சம் விஶிஷ்டமாகச் சொன்னால் ப்ரபத்தி என்கின்றனர். இன்னும் கொஞ்சம் விஶிஷ்டமாகச் சொன்னால் ஶரணாகதி என்கின்றனர். இன்னும் கொஞ்சம் விஶிஷ்டமாகச் சொன்னால் ஆசார்யாபிமாநம் என்கின்றனர். எப்படிச் சொன்னாலும் ஒரே ஜ்ஞாநம்தான். அந்த ஜ்ஞாநத்தை விஶேஷமாக வர்ணிக்கும் பொழுது உபாஸநாத்மகமான ஜ்ஞாநம், ப்ரபத்திரூப ஜ்ஞாநம், ஶரணாகதிரூப ஜ்ஞாநம், ஆசார்யாபிமாந ஜ்ஞாநம் என்று அதை விவரிக்கிறார்கள். இதைப்போன்று தத்வவிசாரம் பண்ணும்போது அத்வைதம் என்னும் அர்த்தத்தையும் நாம் இல்லை என்று சொல்லுபவர்கள் அல்லோம். ஆனால் விஶிஷ்ட ப்ரஹ்மமே வேதாந்த தாத்பர்யம் (நிர்விஶேஷ ப்ரஹ்மம் அன்று) என்று ஸித்தாந்த ஸ்தாபநம் செய்தருளுகிறார் ஸ்வாமி எம்பெருமானார்.

ம்ருத்யோஸ் ஸம்ருத்-மாப்நோதி ய இஹ நாநேவ பஶ்யதி என்னும் ஶ்ருதி வாக்யமானது, *எவன் நாநாத்வம் பார்க்கிறானோ, எவன் பேதம் பார்க்கிறானோ அவனுக்கு ம்ருத்-தான் கிடைக்கும், ம்ருத்-தரணம் கிடைக்காது, ஸம்ஸாரம்தான் கிடைக்கும், மோக்ஷம் கிடைக்காது* என்று ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. இதற்குத் தாத்பர்யம் அருளிச்செய்யப்புகா நின்ற நம் ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யத்திலே

***ஜகத: ப்ரஹ்ம கார்யதயா ப்ரஹ்மாந்தர்யாமிக தயா ச .....**
ததாத்மகத்வேந ஐக்யாத் ..... தத் ப்ரத்யநீகநாநாத்வம் ப்ரதிஶிஷ்யதே.....*

என்று அருளிச்செய்துள்ளார். ஸ்ரீபாஷ்ய ஸ்ரீஸூக்திகளுக்குள்ளே இந்த வாக்யத்துக்குண்டான தனிச்சிறப்பு மற்ற எந்த ஒரு வாக்யத்திற்கும் இல்லை என்று மஹாவித்வான்களான பெரியோர்கள் எல்லாரும் கொண்டாடுகின்றனர். இந்த வாக்யம்தான் நம் விஸிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு நிர்த்தாரணமான, நிர்ணாயகமான வாக்யம். இதற்குண்டான அர்த்தமாவது என்ன?

த்வைதத்தைக் கண்டிக்கும் இந்த வேதவாக்யம் எப்படிப்பட்ட த்வைதத்தைக் கண்டிக்கிறது என்பதற்கு நம் ஸ்வாமி இரண்டு விஷயங்கள் ஸாதித்திருக்கிறார் - (1) ஜகத: ப்ரஹ்ம கார்யதயா (2) தத் அந்தர்யாமிகதயா ச ததாத்மகத்வேந – என்று. இதற்கு ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் அத்புதார்த்தம் காட்டியருளுகிறார். அதாவது, *ததாத்மகத்வேந ச* என்று எம்பெருமானார் சகாரத்தை ப்ரயோகம் பண்ணாமல் , *தத் அந்தர்யாமிகதயா ச ததாத்மகத்வேந* என்று சகாரத்தை ப்ரயோகித்திருப்பதற்கு அபிப்ராயம் என்னவென்றால் – ஹேதுக்கள் இரண்டு; அந்த இரண்டு விதமான ஹேதுக்களாலே நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்ன? ஜகத்து ப்ரஹ்மாத்மகம் என்று அத்வைதிகள் வ்யாக்யாநம் பண்ணுகின்றனர். நம் ஸ்வாமியும் ஜகத்து ப்ரஹ்மாத்மகம் என்று வ்யாக்யாநம் பண்ணுகிறார். ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லுகிறபொழுது ப்ரஹ்மத்தையும் ஜகத்தையும் ஒன்றாக வைத்து ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லுவதா? அல்லது ஜகத்து, ப்ரஹ்மம் என்று இரண்டாக வைத்து ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லுவதா? என்று விசாரம் செய்ய வேண்டி வருகிறது. இரண்டாக வைத்தும் ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லலாம்; ஒன்றாக வைத்தும் ப்ரஹ்மாத்மகம் என்று சொல்லலாம் என்று இரண்டுவித அபிப்ராயங்களையும் கொண்டு, இவற்றுள் வேதாந்தத்தினுடைய பரமமான அர்த்தம் என்னவென்பதை நம் ஸ்வாமி ஸாதித்திருக்கிறார் (ப்ரஹ்ம கார்யதயா – தத் அந்தர்யாமி கதயாச ததாத்மகத்வேந ..... என்று)

ஜகத்து ப்ரஹ்மாத்மகம் தான். அந்த ப்ரஹ்மத்தைத் தவிர ஜகத்து தனியாகக் கிடையாது என்ற அபிப்ராயத்திலே ஜகத்து ப்ரஹ்மாத்மகம் என்று சொல்பவர்கள் அத்வைதிகள். இது நம்முடைய ஸம்ப்ரதாயமன்று. ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் கார்ய காரண பாவம், ஜகத்துக்கும் பரஹ்மத்துக்கும் ப்ரகார ப்ரகாரி பாவம் என்று இந்த இரண்டு விதமான காரணங்களைக் கொண்டு ஜகத்து ப்ரஹ்மாத்மகம் என்று விஶிஷ்டாத்வைதிகளான நாம் சொல்கிறோம். இந்த விஷயத்தை நம் பூர்வர்கள் காட்டியருளியபடி சிறிது விவரிக்கிறேன்.

வேதாந்தங்களிலே சொல்லப்படுகிற அத்வைதம் ஶங்கரருடைய பாஷ்யத்திலே சொல்லப்பட்டிருப்பதுபோல் ஶுத்த அத்வைதம் அன்று. வேதாந்தங்களிலே சொல்லப்பட்டிருப்பது விஶிஷ்ட-அத்வைதம். இந்த ஶுத்தாத்வைதம் என்பதற்கு எதிர்த்தட்டான ஶப்தம் விஶிஷ்டாத்வைதம். ஶங்கரருடைய மதாநுகுணமாய் நிர்விஶேஷ ப்ரஹ்மாத்வைதம். இவருடைய மதாநுகுணமாய் ஸவிஶேஷ ப்ரஹ்மாத்வைதம். அவர் சொல்வது நிர்விஶேஷ ப்ரஹ்மம். இவர் சொல்வது ஸவிஶேஷ ப்ரஹ்மம். அவர் நிர்விஶேஷ ப்ரஹ்மாத்வைதம் சொல்கிறார். இவர் ஸவிஶேஷ ப்ரஹ்மாத்வைதம் சொல்கிறார். இருவருமே அத்வைதம் சொன்னாலும், அவர் சொல்கிற அத்வைதம், அதற்கு எதிர்த்தட்டான த்வைதம் என்பது வேறு; இவர் சொல்கிற விஶிஷ்டாத்வைதம், அதற்கு எதிர்த்தட்டான த்வைதம் என்பது வேறு. இரண்டாவது கிடையாது என்று வேதாந்தம் சொல்லி இருக்கிறபடியால், வேதாந்தத்தில் அத்வைதம் (ஒருமை) சொல்லப்பட்டிருக்கிறபடியால், இரண்டு மதாசார்யர்களும் அத்வைதத்தை ஒப்புக் கொண்டார்கள். வேதாந்தத்தில் அத்வைதம் சொல்லப்பட்டிருக்கிறபடியால், *த்வைதம் பார்க்காதே – பேதம் பார்க்காதே* என்று ஸ்பஷ்டமாக வேதாந்தம் சொல்லி இருக்கிறபடியால், இந்த வேதாந்தத்தை நிர்ணயம் பண்ணக்கடவரான வைதிகர் *த்வைதம் பார்க்கக்கூடாது – அத்வைதம்தான் பார்க்க வேண்டும்* என்பதால் - *ஒருமையை நினைப்பாய்* என்று சொல்லுவதிலே இருவருக்கும் அபிப்ராயபேதம் கிடையாது. ஆனால் இப்படி வேதாந்தத்தில் சொல்லப்பட்ட ஒருமை எப்படிப்பட்ட ஒருமை என்று விவரிக்கும் காலத்தில், ஆதிஶங்கரர் சொல்லும் அர்த்தம் வேறு, நம் ஸ்வாமி அருளிச்செய்யும் அர்த்தம் வேறு.

ஸதேவ, ஏகமேவ, அத்விதீயம்

இந்த சர்ச்சைகள் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாக ஒரு ஶ்ருதி வாக்யம் இருக்கிறது. அந்த ஒரு வாக்யத்திற்கு அர்த்த நிர்ணயம் பண்ணும் விதத்தில்தான் இந்த மத பேதங்கள் வந்து விட்டன. தகப்பனார் உத்தாலகர், பிள்ளை ஶ்வேதகேது. தகப்பனாரான உத்தாலகர் தம் புத்ரனான ஶ்வேதகேதுவிற்கு உபதேஶம் செய்யும் ப்ரகரணம் – சாந்தோக்ய உபநிஷத்தில் ஸத்வித்யா ப்ரகரணம். சாந்தோக்ய உபநிஷத்திலே ஆறாவது ப்ரபாடகத்திலே ஸத்வித்யா ப்ரகரணத்தில் ஜகத்துக்கெல்லாம் காரணமான ப்ரஹ்மத்தைப் பற்றி நிரூபணம் பண்ணுகிறார்

தகப்பனாரான உத்தாலகர். இதில் ஒரு வாக்யம் *ஸதேவஸோம்ய இதமக்ர ஆஸீத் ஏகமேவ – அத்விதீயம்* என்று.

இதம் = கண்ணாலே காணப்படும் இந்த வஸ்துக்கள் எல்லாம். அதாவது இப்பொழுது நாநாவாக – பலவாக – தேவ மநுஷ்ய திர்யக் ஸ்தாவரமாய் - இருக்கும் பதார்த்தங்களுக்கு ஆஶ்ரயமாக இருக்கும் இந்த ஜகத்தானது, அக்ரே = அந்தக்காலத்தில் (அதாவது ஸ்ருஷ்டிக்கு முன்பான ப்ரளய காலத்தில்) ஸதேவ = ஸத் தாகவே இருந்தது. அதாவது இருக்கும் பொருளாகவே இருந்தது. ஏகமேவ ஆஸீத் = ஒன்றாகவே இருந்தது. இப்பொழுது பல பதார்த்தங்களாய் பெயர் உருவங்களுடன் காணப்படும் இந்த ஜகத்தானது நாம ரூப விபாகம் அற்று ஒன்றாகவே இருந்தது. ஏகத்வம் என்பது நாம ரூப விபாகங்கள் இல்லாமல் ஒன்றாய் இருத்தலைக் குறிக்கும். அத்விதீயம் ஆஸீத் = இரண்டாவது அற்றதாக இருந்தது.

ஆக ஸதேவ என்னுமிடத்தில் ஒரு ஏவகாரம், ஏகமேவ என்னுமிடத்தில் ஒரு ஏவகாரம் என்று ஏவகார- த்வயம். இந்த ஏவகார-த்வயத்துடன் கூடியது அத்விதீய ஶ்ருதி. அத்விதீயம் – இரண்டாவது கிடையாது – என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக இந்த ஶ்ருதி *ஸத்* என்றும் சொல்கிறது; *ஒன்று* என்றும் சொல்கிறது; *இரண்டாவது கிடையாது* என்றும் சொல்கிறது. இதைத்தான் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர், *ஏவகாரத்வயம் அவதாரணத்வய ஸசிவ அத்விதீய ஶ்ருதி:* என்று அருளிச் செய்திருக்கிறார்.

அவதாரணத்வய ஸசிவ அத்விதீய ஶ்ருதி: - இரண்டு அவதாரணம். அவதாரணம் என்றால் ஏவகாரம். என்ன அவதாரணம்?(1) ஸத்தாகவே இருந்தது – அப்படி என்றால் என்ன?(2) ஒன்றாகவே இருந்தது – அப்படி என்றால் என்ன?(3) இரண்டாவது இல்லாமல் இருந்தது – அப்படி என்றால் என்ன? ஏகமேவ என்பதனாலேயே இரண்டாவது கிடையாது, ஒன்றுதான் என்று தெரிந்து விட்டது. பிறகு அத்விதீயம் (ஒன்றுதான், இரண்டாவது கிடையாது) என்றும் சொல்லி இருக்கிறது.

இதைவிட அத்வைதம் எப்படிச் சொல்ல முடியும்? வேதாந்தம் சொல்வது அத்வைதத்தையே என்கிறார் ஶங்கரர். இந்த வாக்யத்துக்கு ஶங்கரர் சொல்லும் அர்த்தமாவது - *ஸதேவ ஆஸீத்* = *ஸத்* என்பது ப்ரஹ்மத்தைக் குறிக்கிறது. ஸத்துக்கு விஜாதீயமான – பிந்நமான – பதார்த்தங்கள் எதுவும் கிடையாது.

ஏகமேவ ஆஸீத் = ஸத்துக்கு ஸஜாதீயமான வஸ்துக்கள் எவையும் கிடையாது. *அத்விதீயம் ஆஸீத்* = ஸத்துக்கு ஸ்வகத பேதம் கிடையாது. லோகத்திலே நாம் எந்த வஸ்து விஷயமாகவும் விஜாதீய பேதம், ஸ்வஜாதீய பேதம், ஸ்வகத பேதம் இவற்றைக் காண முடியும். ஆனால் *ஸத்* எனப்படும் ப்ரஹ்மத்துக்கு இத்தகைய பேதங்கள் எதுவும் கிடையாது என்கிறார்கள் அத்வைதிகள்.

ஆக, *ஸஜாதீய, விஜாதீய, ஸ்வகத பேத ரஹித நிர்விஶேஷ சிந்மாத்ரம் ப்ரஹ்ம ஏகமேவ பரமார்த்த:* என்பது அத்வைதிகளுடைய பக்ஷம். *ஸத்* ஒன்றுதான் பரமாத்ம தத்வம் – தத் பிந்ந மான ஸகல பதார்த்தங்களும் – ஜகத்தெல்லாம் – மித்யா பதார்த்தங்கள். (ப்ரஹ்ம – ஸத்யம், ஜகத் – மித்யா – இதி வேதாந்த டிண்டிம:) வேதாந்தம் ப்ரஹ்மத்தை ஸத்யம் என்று மட்டும் சொல்லவில்லை. ஜகத்தை மித்யா என்றும் சொல்லுகிறது. *ப்ரஹ்ம ஸத்யத்வம் – ப்ரபஞ்ச மித்யாத்வம்* என்று ப்ரஹ்மத்துக்கு ஸத்யத்வமும் சொல்ல வேண்டும்; ப்ரபஞ்சத்துக்கு மித்யாத்வமும் சொல்ல வேண்டும். ப்ரஹ்மத்துக்கு அதைவிட இரண்டாவது கிடையாது.

ஸஜாதீய பேத, விஜாதீய பேத, ஸ்வகத பேத ரூப விஶேஷ விஶிஷ்டம் என்றால் ஸவிஶேஷமாகும். ஆனால் ப்ரஹ்மம் இப்படி இல்லை. அதற்கு ஸமாநமான மற்றொன்று கிடையாது. அதாவது ப்ரஹ்மத்துக்கு ஸஜாதீயமான ஜீவனும் கிடையாது; ப்ரஹ்மத்துக்கு விஜாதீயமான ப்ரக்ருதியும் கிடையாது; ப்ரஹ்மத்துக்கு ஸ்வகதமான கல்யாண குணங்களும் கிடையாது. ஆக, ஸதேவ, ஏகமேவ அத்விதீயம், ஸஜாதீய பேதமில்லாமல், விஜாதீய பேதமில்லாமல், ஸ்வகத பேதமில்லாமல், எந்தவிதமான பேதமும் இல்லாமல், நிர்விஶேஷ சிந்மாத்ரம் ப்ரஹ்மம். அது ஜ்ஞாநமாத்ர ஸ்வரூபமாகவே இருக்கும். ஆநந்த ஜ்ஞாநமாத்ர ஸ்வரூபமாய் இருக்கும். ப்ரஹ்மத்துக்கு மற்றொரு ஜ்ஞாநமாத்ர ஸ்வரூபமாயிருக்கும் ஸஜாதீயம் கிடையாது. அஜ்ஞாந ஸ்வரூபமான மற்றொன்று கிடையாது. அந்த ஜ்ஞாநத்துக்கும் ஜ்ஞாநம் கிடையாது. இதுதான் ஆதிஶங்கரருடைய மதம்.

அத்வைதிகளுடைய இந்தக் கருத்து இந்த வேத வாக்யத்துக்குப் பொருந்தாது. இந்த வேதவாக்யத்திலே நிர்விஶேஷ அத்வைதம் சொல்லப்படவில்லை. விஶிஷ்டாத்வைதம்தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஸவிஶேஷ ப்ரஹ்மம்தான் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வாக்யமானது

அத்வைதிகளுடைய ஸித்தாந்தத்துக்குப் பாதகம், விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்துக்கு ஸாதகம் என்பதை எம்பெருமானார் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தங்களிலே பரக்க நிரூபித்துள்ளார். இந்த வேதாந்த வாக்யத்தினுடைய அர்த்தத்தை நாம் அநுபவத்திலே கொள்ளுவோமேயானால் விஶிஷ்டாத்வைதம் என்றால் என்னவென்பதை நாம் ஒருவாறு புரிந்து கொள்ள முடியும்.

முதலில் இந்த ஶ்ருதி வாக்யத்துக்கு ஶங்கரர் காட்டும் அர்த்தம் முற்றிலும் பொருந்தாது. அது ப்ரத்யக்ஷ ப்ரமாண விருத்தம், ஶ்ருதி ப்ரமாண விருத்தம் என்கிறார் ஸ்வாமி எம்பெருமானார். ஸத்(ப்ரஹ்மத்)துக்கு புறம்பான விஜாதீய வஸ்துக்கள் இல்லை என்றால் – ப்ரத்யக்ஷத்தாலே (கண்ணாலே) காணப்படக்கூடிய பொருள்களை எப்படி நிர்வஹிப்பது? விஜாதீயமான அசித் வஸ்துக்கள் ப்ரத்யக்ஷ ஸித்தமாய் இருக்கின்றனவே! ஆக ஶங்கரருடைய பக்ஷத்தில் ப்ரத்யக்ஷத்துக்கு விரோதம் வருகிறது. மேலும் ஸத்தான ப்ரஹ்மத்துக்கு விஜாதீயமான மஹத், அஹங்காரம் போன்ற தத்வங்களைப் பற்றி ஶ்ருதி ஸ்பஷ்டமாகச் சொல்லி இருப்பதால் ஶ்ருதி விரோதமும் வருகிறது. பரமாத்மா ஜ்ஞாந ஸ்வரூபனாகவும் ஜ்ஞாந குணகனாகவும் இருப்பவன். ஜீவாத்மாவும் ஜ்ஞாந ஸ்வரூபனாகவும் ஜ்ஞாந குணகனாகவும் இருப்பவன் என்பதால் ப்ரஹ்மத்துக்கு ஸஜாதீயமான பேதமும் உண்டு. ஸத்துக்கு ஸ்வகத பேதம் இல்லை என்றால் – அத்வைதிகளே ப்ரஹ்மம் ஏகம், ப்ரஹ்மம் நித்யம், ப்ரஹ்மம் ஸ்வயம்ப்ரகாஶம் என்று சொல்கிறார்கள். இந்த குணங்கள் ப்ரஹ்மத்துக்கு இல்லையென்றால் அது கடபடாதி வஸ்துக்களைப் போல் ஆகிவிடும். ப்ரஹ்மத்துக்குண்டான ஏகத்வம் – அதற்கு ஜாதி பேதம் கிடையாது என்பதும் ஒரு குணமாகிறது. ப்ரஹ்மத்துக்கு அத்வைதிகளால் ஒப்புக் கொள்ளப்பட்ட நித்யத்வமும் ஒரு குணமாகிறது. ஆக ப்ரஹ்மத்துக்கு ஸ்வகத பேதமானது அதற்கு அத்வைதிகள் ஒப்புக்கொள்கிற தன்மைகளாலேயே ஸித்தித்து விடுகிறது. ஶ்ருதி ஸ்ம்ருதிகளும் பரமாத்மாவினுடைய திருக்கல்யாண குணங்களை அபாரமாக வர்ணிக்கின்றன. இப்படி விஜாதீய, ஸஜாதீய, ஸ்வகத பேதங்கள் ப்ரஹ்மத்துக்கு உண்டு என்பது ப்ரத்யக்ஷ ஸித்தமாய் இருப்பதனால், இந்த ஶ்ருதி வாக்யத்துக்கு அத்வைதிகள் சொல்கிற அர்த்தம் அநுபபந்நம் (பொருத்தமற்றது) என்று காட்டியருளுகிறார் எம்பெருமானார்.

இதம் என்றால் நாநாத்வம். *ஏகம்* என்றால் நாநாத்வத்துக்கு எதிர்த்தட்டான ஸூக்ஷ்மதஶை என்கிறார்கள் நம் பூர்வர்கள். இன்றைக்குப் பார்த்தால், ஆயிரம் சட்டி, ஆயிரம் பானை, ஆயிரம் மடக்கு என்று இருக்கின்றன. நேற்று என்ன இருந்தது என்றால், எல்லாம் ஒரே ம்ருத்பிண்டம்தான். அதேபோல இன்றைக்குப் பார்த்தால் தேவ திர்யக் மநுஷ்ய ஸ்தாவரங்களாக – எத்தனை விசித்திர ஆகாரங்களோடு இந்த ஜகத்தானது இருக்கிறது. ஆனால் நேற்று எப்படி இருந்தது என்றால், அதாவது ப்ரளய காலத்திலே – ஒரே ப்ரக்ருத்யவஸ்தமாகக் கிடந்தது. அந்த ப்ரக்ருதி *தம: பரே தேவ ஏகீ பவதி* என்று பரமாத்மாவினிடத்திலே ஒன்றிக் கிடந்தது. அதைத்தான் பரமாசார்யரான நம்மாழ்வாரும் *ஒன்றும்தேவும் என்று பாசுரம் பாடினார். அதாவது பரமாத்மாவினிடத்திலே ஒன்றிக்கிடக்கிற ப்ரக்ருதி. அந்த ப்ரக்ருதியை ப்ராக்ருதமாக பகவான் ஸங்கல்பித்து ஜகதாகாரமாக ஆக்கினான் என்று மேலே விஷயம். அதைத்தான் இங்கு சொல்லுகிறது. *ஸதேவ* ஸூக்ஷ்மாவஸ்தமாகக் கிடந்த ஜகத்து, *ஏகமேவ* - நாம ரூபவிபாக அநர்ஹமாகக் கிடந்தது. நாமரூப விபாக அர்ஹமாக என்றால் என்ன? எல்லாவற்றிற்கும் ரூபம் இருக்கிறது. இந்த நாமரூபங்கள் எல்லாம் ஸ்ருஷ்டி காலத்தில் இருக்கின்றன.

ப்ரளய காலத்திலே இவை நாமரூபங்களை இழந்து ஸர்வஸ்தமாய் இருக்கின்றன. இந்த விஷயம் – அதாவது நாமரூபங்களை இழந்து ஸர்வஸ்தமாய் இருக்கின்றன என்பது ஈடு வ்யாக்யாநத்தில் பல இடங்களில் குறிப்பிடப் பட்டிருப்பதைக் காணலாம். ஆழ்வார் எம்பெருமானுடைய காரணத்வத்தை எவ்வளவு விஶிஷ்டமாகப் பல இடங்களிலும் பாடியிருக்கிறார். அவ்விடங்களில் எல்லாம் நம்பிள்ளை ஈட்டிலே ப்ரளய காலத்தில் ப்ரக்ருதியானது நாம ரூப விபாகங்களை இழந்து ஸர்வஸ்தமாய் இருக்கும் விஷயம் அருளிச் செய்யப்பட்டிருப்பதை காணலாம். *ஏகமேவ* - ஆக ப்ரளய காலத்தில் ஏகத்வம். ஸ்ருஷ்டி காலத்தில் நாநாத்வம். ஏகத்வம் என்றால் என்ன? நாநாத்வம் என்றால் என்ன? ஏகத்வம் என்றாலும் இந்த ஜகத்துதான். நாநாத்வம் என்றாலும் இந்த ஜகத்துதான். இந்த ஜகத்துதான் ப்ரளய காலத்தில் ஏகமாகவும், ஸ்ருஷ்டி காலத்தில் நாநாவாகவும் (பலவிதமாகவும்) இருக்கிறது. ஆக ஸ்ருஷ்டி காலத்திலும் ஜகத்து உண்டு. ப்ரளய காலத்திலும் ஜகத்து உண்டு. ஆனால் ப்ரளய காலத்தில் ஜகத்து ஏகாகாரமாய் இருக்கிறது. ப்ரக்ருதி என்று சொல்லலாம்படி இருக்கிறதே தவிர, விசித்ராகாரம் கிடையாது. ஸ்ருஷ்டி காலத்திலேயோ இந்த

ஜகத்தானது நாநாகார விஶிஷ்டமாய் இருக்கிறது. ஆக விசித்ராகாரம் இருக்கிறபடியால் நாநாத்வம். இது ப்ரளய காலத்தில் இல்லாமல் போனபடியால் ஏகத்வம். ஆக, ஏகத்வேஸதி நாநாத்வம்..... நாநாத்வேஸதிச ஏகதா..... இந்த வசநத்தை உதாஹரித்து இந்த வேதாந்த வாக்யத்துக்கு இப்படித்தான் அர்த்தம் கொள்ள வேண்டும், வேறுவிதமாக அர்த்தம் கொள்ளக்கூடாது என்று நம் ஸ்வாமி எம்பெருமானார் அத்புதார்த்தம் காட்டியருளி இருக்கிறார் வேதார்த்த ஸங்க்ரஹத்திலே. காரணமாய் இருப்பதுவும் ப்ரஹ்மம்தான். காரியமாய் இருப்பதுவும் ப்ரஹ்மம்தான். காரணமும் ப்ரஹ்மம்தான். காரியமும் ப்ரஹ்மம்தான். காரண ப்ரஹ்மமும் விஶிஷ்ட ப்ரஹ்மம். கார்ய ப்ரஹ்மமும் விஶிஷ்ட ப்ரஹ்மம். இந்த இரண்டு விஶிஷ்ட ப்ரஹ்மங்களுக்கும் அத்வைதம் சொல்லக்கூடிய ஸம்ப்ரதாயமாக இருக்கிறபடியால், *விஶிஷ்டயோ: அத்வைதம் – விஶிஷ்டாத்வைதம்* என்கிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். இது மிகவும் முக்யமாக அறியப்பட வேண்டிய விஷயம்.

இந்த உபநிஷத் வாக்யம் முதலில் *ஏகமேவ* என்றும் *அத்விதீயம்* என்றும் சொல்லுகிறது. இதற்கு என்ன அர்த்தம் என்பதை நம் ஸ்வாமி எம்பெருமானார் தம்முடைய க்ரந்தங்களில் பல இடங்களில் காட்டியுள்ளார். அவருடைய திருவுள்ளக் கருத்தை ஶ்ருதப்ரகாஶிகாசார்யரும் அப்படியே விவரித்துக் காட்டியுள்ளார். மிகவும் ஆழ்ந்து அனுபவிக்க வேண்டிய விஷயம் இது. *ஏகமேவ* என்பதற்கு அபிப்ராயம் என்ன? இப்பொழுது நாநாத்வம். ஏகமேவ என்பதால் அப்பொழுது ஸூக்ஷ்மாகாரம். இப்பொழுது ஸ்தூலாகாரம். இப்பொழுது கடஶராவாதிகளாய் இருக்கும் வஸ்துக்கள் அப்பொழுது ம்ருத் பிண்டமாய் இருந்தன என்பது போலவாம். இன்றைய தினம் (அதாவது, ஸ்ருஷ்டி காலத்தில்) ப்ரக்ருதி ப்ராக்ருதங்களாய் இருக்கிறது. அன்றைய காலத்தில் (அதாவது, ப்ரளய காலத்தில்) ப்ரக்ருதி ப்ரக்ருதியாய் இருந்தது. ஆக இவ்வாறு இதுக்கும் அதுக்கும் உண்டான வஸ்து ஐக்யம் – இதுதான் முக்யம். அதாவது, இப்பொழுது இருப்பதுவும் ப்ரக்ருதிதான். அப்பொழுது இருந்ததுவும் ப்ரக்ருதிதான். இப்பொழுது இருப்பதுவும் ப்ரஹ்மம்தான். அப்பொழுது இருந்ததுவும் ப்ரஹ்மம்தான். இப்பொழுது ப்ராக்ருத விஶிஷ்டமான ப்ரஹ்மம். அப்பொழுதும் ப்ரக்ருதி விஶிஷ்டமான ப்ரஹ்மம்தான். ப்ரக்ருதி ப்ரக்ருதியாய் இருந்தது ப்ரளய காலத்திலே. அதே ப்ரக்ருதி ப்ராக்ருதமான தஶாவிஶேஷத்தை அடைந்தது ஸ்ருஷ்டி காலத்திலே. ஆக எம்பெருமான் இப்பொழுது எப்படி இருக்கிறான்?

ப்ராக்ருத விஶிஷ்டமாய் இருக்கிறான். ப்ரளய காலத்தில் எப்படி இருந்தான்? ப்ரக்ருதி விஶிஷ்டமாய் இருந்தான். ப்ரக்ருதியும் ப்ரக்ருதிதான். ப்ராக்ருதமும் ப்ரக்ருதிதான். அதுவும் அசித்துதான். இதுவும் அசித்துதான். அது ஸூக்ஷ்மமான நிலை. இது ஸ்தூலமான நிலை. ஆக, ஸூக்ஷ்ம சிதசித் விஶிஷ்ட ப்ரஹ்மமானது – காரண ப்ரஹ்மம். ஸ்தூல சிதசித் விஶிஷ்ட ப்ரஹ்மமானது கார்ய ப்ரஹ்மம். இவ்வாறு காரண ப்ரஹ்மத்துக்கும் கார்ய ப்ரஹ்மத்துக்கும் அத்வைதம் சொல்லும் ஸம்ப்ரதாயம்தான் *விஶிஷ்டயோ: அத்வைதம் – விஶிஷ்டாத்வைதம்* என்பது.

இங்கு இன்னும் விஶேஷமாய் அறிய வேண்டிய உண்மை ஒன்று உண்டு. நம்மாழ்வார் இதை ஸ்பஷ்டமாக நமக்குக் காட்டியருளுகிறார். நம்மாழ்வாருக்கு நாயிகா பாவம். உபதேஶ முத்திரையை வைத்துக் கொண்டு விட்டார். திருத்தாயார் பார்க்கிறாள். தாம்பெற்ற பெண்பிள்ளை பாடசாலைக்குப் போனது கிடையாது. ஒரு அக்ஷரமும் படித்தது கிடையாது. ஜ்ஞாந முத்திரையை வைத்துக் கொண்டிருக்கிறாளே! வைத்துக் கொண்டு விட்டால் மட்டும் போதுமா? வாயைத் திறந்து ஏதாவது பேசுவாளோ என்று பார்த்தாள். உடனே நம்மாழ்வார் பாசுரம் பாடினார். *கடல் ஞாலம் செய்தேனும் யானே என்னும்* என்கிறார். அதாவது கடல் சூழ்ந்த இந்த பூ மண்டலத்தை நானே தான் செய்தேன் என்கிறார். அடுத்ததாகப் பாடுகிறார். *கடல் ஞாலம் ஆவேனும் யானே* என்று. ஆழ்வார் பரமவைதிக ஸார்வபௌமர். நம்மாழ்வாரைக் காட்டிலும் வைதிகர் மற்றொருவர் உண்டோ? பரம வைதிகரான நம்மாழ்வார் ஶ்ருதி சாயையிலே, வேதாந்த சாயையிலே வேதாந்தார்த்தத்தை விஸ்தீகரணம் பண்ணவல்ல திருவாய்மொழியில் பாடின இப்பாசுரம் மிகுந்த அர்த்தபுஷ்டி வாய்ந்தது. முதலடியில் தான்தான் ஜகத்தை உண்டாக்கினேன் என்றார். அடுத்த அடியில் தான்தான் ஜகத்தாக ஆகிவிட்டேன் என்று சொல்லிவிட்டார். *கடல் ஞாலம் ஆவேனும் யானே* என்ற அடியில் *ஆவேனும்* என்னும் ஶப்தத்தில்தான் நம் விஶிஷ்டாத்வைத ஸம்ப்ரதாயத்தினுடைய உயிர்நாடியே இருக்கிறது. *கடல் ஞாலம் செய்தேனும் யானே* என்று சொல்வதில் விஶேஷம் இல்லை. *கடல் ஞாலம் ஆவேனும் யானே* என்பதுதான் பரம விஶேஷம்.

இந்த உண்மையைச் சிறிது விளக்கிக் காட்டுகிறேன். குயவன் இருக்கிறான். மண்ணைப் பார்க்கிறான். மண் நிறைய இருக்கிறது. இந்த மண்ணைக் கொண்டு நிறைய சட்டி பானைகள் பண்ணி விற்று ஸம்பாதிக்கலாம் என்று நினைக்கிறான். இங்கு நிறைய சட்டி பானைகள் பண்ணுவேன் என்றுதான் குயவன்

ஸங்கல்பிக்கலாமே தவிர, சட்டி பானைகளாக ஆகிவிடுவேன் என்று ஸங்கல்பிக்க முடியாது. ஏன் என்றால் குயவன் சட்டி பானைகள் பண்ணுவதற்கு நிமித்த காரணம் மட்டும்தான். சட்டி பானைகளாக ஆவது மண்தானே தவிர, குயவன் அப்படி ஆக முடியாது. ஆக மண்ணால் செய்யப்பட்ட குடத்திற்கு மண் ஒரு காரணம். அது உபாதாந காரணம். குயவன் ஒரு காரணம். அவன் நிமித்த காரணம். ஆக குடம் உண்டாவதற்கு மண்ணும் ஒரு காரணம். குயவனும் ஒரு காரணம். மண் இல்லாமல் குடம் உண்டாகாது. குயவன் இல்லாமலும் குடம் உண்டாகாது. ஆனால் ஜகத்துக்கு எம்பெருமான் எப்படி இருக்கிறான் என்றால், அவனே உபாதாநகாரணமாயும் இருக்கிறான். அவனே நிமித்த காரணமாயும் இருக்கிறான். அந்த உபாதாந காரணத்வத்தைச் சொல்லும் ஶப்தம்தான் *ஏகமேவ* என்பது. அவனைத்தவிர வேறு ஒரு நிமித்த காரணம் இல்லை என்று சொல்ல வந்தது *அத்விதீயம்* என்னும் பதம். இவ்வாறு தாத்பர்யார்த்தம் அருளிச் செய்கிறார் ஸ்வாமி எம்பெருமானார். இதுதான் நம்முடைய ஸித்தாந்தம். அபிந்ந நிமித்தோபாதாந காரணம் ப்ரஹ்மம். இது வேதாந்தத்தினுடைய பரமார்த்தம் என்கிறார் எம்பெருமானார்.

ஆக லோகரீதியில் பார்க்கிறபொழுது குடத்துக்குக் காரணங்கள் பலப்பல. ஆனால் ஜகத்துக்குப் பரமாத்மா காரணம் என்றால் அவன் ஒருவனே காரணம். அவனே நிமித்த காரணமாய் இருக்கிறான். அவனே உபாதாந காரணமாயும் இருக்கிறான். அவனே ஸஹகாரி காரணமாயும் இருக்கிறான். எம்பெருமானுடைய காரணத்வத்தை நிரூபிக்கும் இரண்டாம் பத்தில் நம்மாழ்வார் இந்த உண்மையை மிக ஆஶ்சர்யமாக அருளிச் செய்திருக்கிறார். *வேர் முதலாய் வித்தாய் (2-8) மிகவும் ஆஶ்சர்யமான பாசுரம். வேர் என்றால் காரணம். செடிக்கு வேர் காரணம் என்று நாம் அறிவோம். முதல் என்றால் என்ன? காரணம். வித்து என்றாலும் காரணம். வேர் என்றாலும் காரணம்தான். முதல் என்றாலும் காரணம்தான். வித்து என்றாலும் காரணம்தான். நம்மாழ்வார் காரணத்வத்துக்கு வாசகமான ஶப்தத்தை மூன்று விதமாக ஏன் ப்ரயோகம் பண்ணினார் என்றால், த்ரிவித சிதசித்துக்களுக்கும் த்ரிவித காரணமும் தானேயாக இருப்பதனால் என்கிறார் அழகிய மணவாளப் பெருமாள் நாயனார். ஆசார்ய ஹ்ருதயத்திலே நான்காவது ப்ரகரணம் இரண்டாம் பத்தினுடைய அர்த்தம் காட்டும் இரண்டாவது சூர்ணிகையினுடைய பரம ரஹஸ்யார்த்தம் இது. இந்த இடத்திலே *லீலா விபூதியில் ஸங்கல்ப விஶிஷ்டவேஷத்தாலே நிமித்தமாயும், ஸூக்ஷ்ம சிதசித்

விஶிஷ்ட வேஷத்தாலே உபாதாநமாயும், ஜ்ஞாநஶக்த்யாதி குண விஶிஷ்ட வேஷத்தாலே ஸஹகாரியாயும் நித்ய விபூதியில் இச்சா விஶிஷ்ட வேஷத்தாலே நிமித்தமாயும், அப்ராக்ருதாசிஜ்ஜீவ விஶிஷ்ட வேஷத்தாலே உபாதாநமாயும், விநியோகோபயோகி ஜ்ஞாநாதி விஶிஷ்ட வேஷத்தாலே ஸஹகாரியாயும் இப்படி பத்தமுக்த நித்யரூபமான சித் த்ரயத்துக்கும் ப்ராக்ருதாப்ராக்ருத காலரூபமான அசித் த்ரயத்துக்கும் த்ரிவித காரணமும் தானேயான ஸர்வேஸ்வரன்.....* என்று மணவாளமாமுநிகள் அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் அநுஸந்தேயம்.

பகவான் ஜகத்துக்கு உபாதாந காரணமாய் இருக்கிறான், நிமித்த காரணமாய் இருக்கிறான், ஸஹகாரி காரணமாய் இருக்கிறான் என்று பரம வேதாந்தார்த்தம். இதற்கென்று ஸ்ரீவேதவ்யாஸர் ஒரு அதிகரணமே அருளிச் செய்திருக்கிறார்.

முதல் அத்யாயத்திலே 35 அதிகரணங்கள். முப்பத்து நாலாவது அதிகரணம் ப்ரக்ருத்யதிகரணம் (1-4-7) எனப்படுவது. இதில் முதல் ஸூத்ரம் – ப்ரக்ருதிஶ்ச ப்ரதிஜ்ஞாத்ருஷ்டாந்தாநுபரோதாத்* என்பதாகும். ப்ரஹ்மம் உபாதாந காரணமாகவும் ஆகிறது. இப்படிக் கொண்டால்தான் ப்ரதிஜ்ஞையும் த்ருஷ்டாந்தமும் விரோதிக்காமல் இருக்குமாகையால் – என்று அதற்கு அர்த்தம். இந்த ஸூத்ரத்துக்குப் பூர்வபக்ஷமாவது – பரமாத்மா ஜகத்துக்கு நிமித்த காரணமாக முடியுமே தவிர உபாதாந காரணமாக முடியாது என்பது.

ஶைவர்கள் இருக்கிறார்கள். வேதாந்தார்த்தங்களையெல்லாம் கூற முற்படுபவர்கள். அவர்கள் என்ன சொல்லுகிரார்கள் என்றால், ஜகத்துக்குப் பரமாத்மா – பரமஶிவன். அவன் உபாதாந காரணம் அல்ல. நிமித்த காரணம் மட்டும்தான். ஆனால் உபாதாந காரணம் ஶிவன் அல்லன். அது ப்ரக்ருதி என்கிறார்கள். பரமாணுக்கள் உபாதாந காரணம் என்றும் சொல்வர் சிலர். எப்படி வைத்துக் கொண்டாலும் இந்த விஷயத்தில் மதபேதம் இருக்கிறது. நிமித்தோபாதாந காரணங்களுக்கு ஐக்யத்தை ஒத்துக் கொள்ளவில்லை ஶைவ மதத்திலே. ஆனால் நம்முடைய ஸம்ப்ரதாயத்திலே ஜகத்துக்கு நாராயணன் நிமித்த காரணமாயும் இருக்கிறான். உபாதாந காரணமாயும் இருக்கிறான். ஸஹகாரி காரணமாயும் இருக்கிறான். இவையெல்லாம் ஸ்ருஷ்டிக்கு முன்பு ப்ரளய காலத்தில் ஒன்றாகவே இருந்தது. இதற்கு ஏகத்வம் என்று பெயர்.

ஸ்ருஷ்டி காலத்தில் இன்று பலவாக இந்த ஜகத்து காட்சியளிக்கிறது. இதற்கு நாநாத்வம் என்று பெயர். அது காரண காலம். இது கார்ய காலம். அது காரணாவஸ்தை. இது கார்யாவஸ்தை. அது ஸூக்ஷ்மாவஸ்தை. இது ஸ்தூலாவஸ்தை. அபிந்ந நிமித்தோபாதாந காரணம் ப்ரஹ்மம் என்று சொல்லும் வேதாந்தம் என்ன பண்ணிற்று என்றால், ப்ரஹ்மம் உபாதாந காரணம் என்னும் அர்த்தத்தைக் காட்டிற்று ஏகமேவ என்னும் ஶப்தத்தாலே. அதைத்தவிர நிமித்த காரணம் உண்டோ என்ற விசாரம் வர இரண்டாவதாக நிமித்த காரணம் தனித்துக் கிடையாது. அதுவே நிமித்த காரணம் என்று சொல்லுவதாக அமைந்துள்ளது *அத்விதீயம்* என்னும் பதம்.

அத்விதீயம் என்னும் பதத்தாலே சொல்லப்பட்ட விஷயம் நிமித்தாந்தர நிஷேதம் என்று நம் ஸ்வாமி எம்பெருமானார் வ்யாக்யாநித்தருளினார். இந்த உபாதாந காரணத்தைச் சொல்லும் பொழுதுதான் கார்யகாரணயோ: அபேதம் - கார்யகாரணயோ: அத்வைதம், அதாவது காரணம் ப்ரஹ்ம, கார்யம் ப்ரஹ்ம என்று இந்த இரண்டு விஶிஷ்ட ப்ரஹ்மங்களுக்கும் அத்வைதம் சொல்லும் ஸம்ப்ரதாயம்தான் விஶிஷ்டாத்வைதம். இதில் முக்கியமாக, மிகவும் ஸூக்ஷ்மமாக அறிய வேண்டிய உண்மை ஒன்று உள்ளது. அதை ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் ஒரு ஆஶ்சர்யமான த்ருஷ்டாந்தம் மூலமாக விளக்கிக் காட்டியருளியிருக்கிறார். இருபது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு குழந்தையை கல்கத்தாவில் பார்த்தோம். இன்று சென்னையில் இருபது ஆண்டுகள் கழித்து அதே குழந்தையைக் காளைப் பருவத்தில் பார்க்கிறோம். ஆக அந்தக் குழந்தைதான் இன்று யுவாவாக இருக்கிறான். அவனே இவன். அன்று பார்த்தபோது இரண்டு வயது. இன்று பார்க்கும்போது இருபத்து இரண்டு வயது யுவா. இங்குதான் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் வ்யாக்யாநம் பண்ணுகிறார். ஒருவனுக்கே இந்த பால்யமும் யௌவனமும் சொல்லப் பட்டாலும் இவை இரண்டும் ஒரே காலத்தில் உண்டா என்றால் அதுதான் இல்லை. இந்த த்ருஷ்டாந்தத்தின் மூலம் அறியப்படும் அர்த்தம் என்னவென்றால், ஸூக்ஷ்மாவஸ்தை, ஸ்தூலாவஸ்தை இரண்டையும் ஒன்றுக்குப்பின் ஒன்றாக காலாதீநமாகச் சொல்லலாமே தவிர ஏககாலோபபந்நமாகச் சொல்ல முடியாது. பகவானுக்கு ஏகத்வம், நாநாத்வம் இரண்டும் ஒரேகாலத்தில் இல்லை. எந்தக் காலத்தில் ஏகத்வமோ அந்தக் காலத்தில் நாநாத்வம் கிடையாது. எந்தக் காலத்தில் நாநாத்வமோ அந்தக் காலத்தில் ஏகத்வம் கிடையாது. காரண

காலத்தில் கார்யாவஸ்தை கிடையாது. கார்ய காலத்தில் காரணாவஸ்தை கிடையாது. *அக்ரே* என்னும் காலத்தில் அதாவது ப்ரளய காலத்திலே பரமாத்மா ஸூக்ஷ்மமான சேதநாசேதநங்களை ஶரீரமாகக் கொண்டு தான் விஶிஷ்ட தத்வமாக இருந்தான். இன்றைய தினம், அதாவது, ஸ்ருஷ்டி காலத்தில் அதே பரமாத்மா ஸ்தூல சேதநாசேதநங்களை ஶரீரமாகக் கொண்டு விஶிஷ்ட ப்ரஹ்மமாக இருக்கிறான். காரண ப்ரஹ்மமாய் இருந்த போது இருந்த விஶேஷணம் கார்யப்ரஹ்மமாய் இப்பொழுது இருக்கும்போது இல்லை. அதேபோல் கார்யப்ரஹ்மமாய் இப்போது இருக்கும் விஶேஷணம் காரணப்ரஹ்மமாய் அப்பொழுது இருந்த நிலையில் இல்லை. இது நாம் அறிய வேண்டிய மிக முக்யமான உண்மையாகும். திருமழிசை ஆழ்வார் இதற்கு த்ருஷ்டாந்தம் அருளிச்செய்துள்ளார் திருச்சந்தவிருத்தத்தில். முதல் பாசுரத்திலே பாடியருளுகிறார் –

பூநிலாய வைந்துமாய்ப் புனற்கணின்ற நான்குமாய்த்
தீநிலாய மூன்றுமாய்ச் சிறந்தகா லிரண்டுமாய்
மீநிலாய தொன்றுமாகி வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ண(ம்) நின்னை யார்நினைக்க வல்லரே?

என்று. அடுத்ததாகப் பத்தாவது பாசுரத்திலே இதை விவரிக்கிறார். திருச்சந்தவிருத்தத்திலே முதல் பாசுரத்திலே சொல்லப்பட்ட ஸாமாநாதிகரண்யத்துக்கு கார்யகாரண பாவத்தினுடைய அர்த்தத்தை நிர்வஹிக்கும்படியான ப்ரகரணம் அடுத்தாற்போல் பத்தாவது பாசுரம்.

தன்னுளே திரைத்தெழுந் தரங்கவெண் டடங்கடல்
தன்னுளே திரைத்தெழுந் தடங்குகின்ற தன்மைபோல்
நின்னுளே பிறந்திறந்து நிற்பவும் திரிபவும்
நின்னுளே யடங்குகின்ற நீர்மைநின்க ணின்றதே

என்னும் இப்பாசுரத்திலே உபாதாந காரணமான பகவானுக்கு ஒரு வகையிலே ஸமுத்ரத்தை த்ருஷ்டாந்தமாக அருளிச் செய்கிறார். காற்றினால் ஸமுத்ரமானது கொந்தளித்து அலைகள் எழும்புகின்றன. பிறகு அந்த அலைகள் ஸமுத்ரத்திலேயே அடங்கி விடுகின்றன. எம்பெருமானுக்கும் ஜலதி என்று பெயர். கருணா ஜலதி என்றாலும் சரி. வாத்ஸல்ய ஸாகரம் என்றாலும் சரி. ஸௌஶீல்ய ஸாகரம் என்று வைத்துக் கொண்டாலும் சரி. ஸமுத்ரத்திலே

வீசப்படும் காற்றினாலே கொந்தளித்து எழும் அலைகள் பிறகு அந்த ஸமுத்ரத்திலேயே அடங்குவது போல, பகவானுக்கு ஶரீரமாக இருக்கும் சேதநாசேதநங்களும், இவற்றினுடைய ஸ்ருஷ்டி முதலானவையெல்லாம் பகவத் ஸ்வரூபத்திலே அடங்கி உள்ளன என்று அருளிச்செய்கிறார் திருமழிசைப்பிரான். சேதநாசேதநங்கள் விகாஸத்தை அடையுமானால் ஸ்ருஷ்டி என்றும் அவை ஸங்கோசத்தை அடையுமானால் ஸம்ஹாரம் என்றும் சொல்லப் படுகின்றன. இந்த த்ருஷ்டாந்தத்திலே ஸமுத்ரத்தின் ஸ்தானத்தில் பகவானும், காற்றின் ஸ்தாநத்திலே அவனுடைய ஸ்ருஷ்டி ஸம்ஹார ஸங்கல்ப விஶேஷங்களும், அலைகள் ஸ்தாநத்திலே இந்த ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களும் அருளிச் செய்யப்பட்டுள்ளன.

முதற்பாட்டில் சொன்ன உபாதாந காரணத்வத்தைப் பத்தாம் பாட்டிலே த்ருஷ்டாந்த ஸஹிதமாய்ச் சொல்லி முடித்தாராய் விட்டது என்னும் ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளை ஸ்ரீஸூக்தி அநுபவிக்கத்தக்கது.

ஆக ப்ரஹ்மம் என்றைக்குமே விஶிஷ்டப்ரஹ்மம்தான். நாம் எப்பொழுதும் அவனுடன் கூடியவர்களாகவே இருக்கிறோம். ஸ்ருஷ்டி காலத்தோடு ப்ரளய காலத்தோடு வாசியற பரமாத்ம ஸம்பந்தம் இல்லாத காலமே கிடையாது என்னும் இவ்வுண்மை தான் நம்முடைய விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் பரமமான அபிப்ராயமாகும். இது *விஶிஷ்டயோ: அத்வைதம் – விஶிஷ்டாத்வைதம்* என்பதை அநுஸரித்த அர்த்தமாகும்.

இதற்கு மேலே *விஶிஷ்டஸ்ய அத்வைதம் விஶிஷ்டாத்வைதம்* என்பதற்குச் சேர அநுபவிக்கப்பட வேண்டிய அர்த்தவிஶேஷம் ஒன்று உண்டு. அது *சேதநாசேதந ப்ரகாரம் ஏகமேவ தத்வம்* என்பதாகும். ஸ்ரீதேஶிகன் ந்யாய ஸித்தாஞ்ஜநத்திலே ஆரம்பத்திலே அருளிச் செய்திருக்கிறார் *அஶேஷ சிதசித் ப்ரகாரம் ப்ரஹ்ம ஏகமேவ தத்வம்* என்று. ஆக நாமும் நம்முடைய ஸம்ப்ரதாயத்தின்படியும் தத்வம் ஒன்றுதான் என்று சொல்லலாம். இதனால் அறியப்படுகிற கருத்து இப்படிப்பட்ட சேதநாசேதந விஶிஷ்டமான, திவ்யமங்களவிக்ரஹ விஶிஷ்டமான, திருக்கல்யாண குண விஶிஷ்டமான ப்ரஹ்மத்தைப் போலவே இரண்டாவது கிடையாது என்பதாகும். அதாவது சேதந அசேதந விஶிஷ்டமான ப்ரஹ்மத்தைப் போலே இருக்கும் இரண்டாவது (சிதசித் விஶிஷ்ட) ப்ரஹ்மம் கிடையாது.

அத்விதீயம் என்று ப்ரஹ்மத்தைப் பற்றி வேதாந்தம் சொல்லிற்று. இந்த அத்விதீய ஶப்தத்திற்கு அர்த்தம் என்ன என்று கேட்டுக்கொண்டு ஆஶ்சர்யமான அபிப்ராயம் அருளிச் செய்கிறார் பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் தாம் அருளிச்செய்துள்ள திவ்ய க்ரந்தமான ஸித்தித்ரயத்திலே. அத்விதீயம் என்றால் இரண்டாவது கிடையாது என்றுதான் அர்த்தம். ஆனால் இரண்டாவது கிடையாது என்பதற்கு *ப்ரஹ்மம் ஒன்றுதான் ஸத்யம், அதற்கு வேற்றுப் பொருளான இரண்டாவது கிடையாது* என்றெல்லாம் அத்வைதிகள் கூறுவது போல அர்த்தம் இல்லை. இந்த விஷயத்தை மிக ஆஶ்சர்யமாக விவரித்துக் காட்டியருளுகிறார் ஸ்ரீஆளவந்தார். ஸ்ரீநாதமுநிகள் வடநாட்டிலே யமுனைத்துறையிலேயும், யமுனைத்துறைவனிடத்திலும் ஆழங்கால் பட்டவராகையாலே, அவரது நியமநாநுகுணமாக *யமுனைத்துறைவர்* என்று நாமகரணம் பண்ணப்பட்டவர் பின்பு சோழதேஶத்து ராஜாவினுடைய ஆஸ்தாநத்திலே வாதப் போரில் ஜயித்து அப்பொழுது ஏற்பட்ட *ஆளவந்தார்* என்னும் திருநாமத்தை உடையவராய் இருப்பவராகையாலே, அவர் அந்தச் சோழ மன்னனைத் திருவுள்ளத்திலே கொண்டு ஆஶ்சர்யமாக அருளிச் செய்துள்ளார். அதாவது, சோழ தேஶத்து மன்னவனை ஒரு வித்வான் *அத்விதீயன்* என்று கொண்டாடிப் பரிசுகளைப் பெற்றுச் செல்கிறான். இதைக் கண்ட சிலர் ராஜாவிடம் *உமக்கு பத்நி, புத்ரன், ராஜ்யம், குணங்கள், பெருமை, புகழ் எல்லாம் இருக்க, உம்மைப் பார்த்து இரண்டாவது இல்லாதவன் – அத்விதீயன் என்று சொல்லிச் செல்கிறானே* என்று ஆக்ஷேபிக்க, மன்னவனும் அந்த வித்வானைப் பார்த்து *அத்விதீயன் என்றால் என்ன?* என்று கேட்கிறான். அதற்கு அந்த வித்வானும் *அத்விதீயன் என்றால் பத்நி, புத்ரன், ராஜ்யம், பொருள், புகழ் எதுவுமே இல்லாதவன் என்று அர்த்தமில்லை. உம்மைப் போல் பத்நி புத்ர ஸம்பத்துக்களைப் பெற்றவன், ஐஶ்வர்யத்தைப் பெற்றவன், குண ஸாம்ராஜ்யம் பெற்றவன் மற்றொருத்தன் கிடையாது என்றுதான் அர்த்தம்* என்று விளக்குகிறான்.

அதேபோல நம்முடைய ஸம்ப்ரதாயத்திலேயும் கூட *அஶேஷ சிதசித் ப்ரகாரம் ப்ரஹ்ம ஏகமேவ தத்வம்* - அதாவது அவனைப் போல மற்றொரு ப்ரகாரி தத்வம் கிடையாது. இதை *ப்ரகாரி அத்வைதம்* என்கிறார்கள் நம்முடைய பெரியோர்கள். அஶேஷ சிதசித் ப்ரகாரம் – எல்லா சேதநாசேதநங்களையும் தனக்கு ப்ரகாரமாகக் கொண்டிருக்கிறான் எம்பெருமான். அது மட்டுமல்லாமல் ஸமஸ்த கல்யாண குணாத்மகனாயும் இருக்கிறான். அது மட்டுமல்லாமல்

திவ்யமங்கள விக்ரஹ விஶிஷ்டனாயும் இருக்கிறான். ஸ்ரீபூமிநீளா நாயகனாயும் இருக்கிறான். இப்படி விஶிஷ்டமாயுள்ள தத்வத்திற்கு அத்வைதம் – அதாவது இவையெல்லாவற்றையும் கொண்டுள்ள இந்த பரமாத்மாவைப் போன்று ப்ரகாரி தத்வம் வேறு ஒன்றும் இல்லை என்பதுதான் நம்முடைய ஸித்தாந்தத்தின் பரமார்த்தம் என்கிறார்கள் நம் பூர்வாசார்யர்கள்.

ஆக *விஶிஷ்டயோ: அத்வைதம் – விஶிஷ்டாத்வைதம்* என்று சொன்னால் அது கார்ய காரண பாவம். *விஶிஷ்டஸ்ய அத்வைதம் – விஶிஷ்டாத்வைதம்* என்று சொன்னால் ப்ரகாரப்ரகாரி பாவம். வேதாந்தங்களில் சொல்லப்பட்டுள்ள அத்வைதம், த்வைதம் போன்ற ஶப்தத்திற்கெல்லாம் மேற்கூறியபடியே விஶிஷ்டாத்வைதபரமாகவே நிர்வஹித்து உண்மையான தாத்பர்யார்த்தத்தை அறிந்து கொள்ள வேண்டும் நாம் என்பதுதான் நம் பூர்வாசார்யர்கள், குறிப்பாக நம் ஸ்வாமி எம்பெருமானார், நமக்குக் காட்டியருளியிருக்கும் வழியாகும். ஆக, இதுதான் *அத்வைதம்* *த்வைதம்* என்னும் பெயர்களால் ப்ரஸித்தமாயுள்ள இரண்டு மதங்களையும் கண்டிப்பதாய் அமைந்துள்ள நமது ஸித்தாந்தமாகும்.

யானுந்தானாயொழிந்தானை (திருவாய்மொழி 8-8-4) என்று அருளிச் செய்கிறார் நம்மாழ்வார். இப்பாசுர ஈடு வ்யாயாநத்திலே நம்பிள்ளை அருளிச் செய்யும்படி என்னவென்றால் – ஐக்யம் என்பதற்கு அத்வைதிகள் சொல்லும் படி ஸ்வரூபைக்யமன்று பொருள். ஐக்யம் என்பதற்கு ஶரீரஶரீரிபாவ நிபந்த-நைக்யம் என்று பொருள். அதுபோல் பேதம் என்றால் பேதவாதிகள் சொல்லும் ஶுத்த பேதமன்று பொருள். பேதம் என்பது ஸ்வதந்த்ரமான பேதத்தைக் குறிக்காது. நம்முடைய ஸித்தாந்தத்தின்படி பேதம் என்பதற்கு ஶேஷ ஶேஷி பாவ நிபந்தநமான பேதம் என்பதுதான் பொருள். ஶ்ருதப்ரகாஶிகாபட்டரும் இந்த உண்மையை விவரித்துக் காட்டுகிறார். காரணம் வேறு, கார்யம் வேறு என்று சிலர் (வைஶேஷிகர்கள்) வாதிக்கிறார்கள். *காரணகார்யயோ: பேத ஏவ* என்பது அவர்கள் ஸித்தாந்தம். காரண கார்யங்களுக்கு அத்வைதம் – அநந்யத்வம் கிடையாது என்பது அவர்கள் செய்யும் வாதம். இவர்கள் சொல்லும் இந்த பேதத்தை குதர்க்க ப்ராந்திரூபமான பேதம் என்று கண்டிக்கிறார் ஸ்ரீவேதவ்யாஸர் தம்முடைய ஶாரீரக மீமாம்ஸா ஶாஸ்த்ரத்திலே.

அதாவது கார்யம் வேறு, காரணம் வேறு என்பதல்ல. காரணமும் ப்ரஹ்மம்தான். கார்யமும் ப்ரஹ்மம்தான். காரணமும் ம்ருத் பிண்டம்தான். கார்யமும் ம்ருத் பிண்டம்தான். அவஸ்தா பேதத்தைச் சொல்லலாமே தவிர வஸ்து பேதத்தைச் சொல்லக்கூடாது என்பது நம்முடைய ஸித்தாந்தத்தின் உயிர்நாடியான அர்த்தம்.

த்வைத ஸம்ப்ரதாயத்திலேயும் பேதத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்கள். அது போன்ற பேதத்தை நாம் ஒப்புக்கொள்வதில்லை. ஸ்வநிஷ்ட பேதம் நம்முடைய ஸித்தாந்தத்திலே கிடையாது. ஸ்வநிஷ்டம் என்றால் ஸ்வத்ந்த்ரம் என்று பொருள். ஸ்வதந்த்ரமான பேதம் நம்முடைய ஸித்தாந்தத்திலே கிடையாது. ப்ரக்ருதி வேறுபட்டதுதான். ஜீவன் வேறுபட்டவன்தான். பரப்ரஹ்மம் வேறுபட்டதுதான். தத்வத்ரயமும் தனித்தனி தத்வங்களாக இருந்தாலும் கூட அவை தனித்து இருக்குமா என்று கேட்டால், பரமாத்மாவுக்கு அடங்காமல் ஜீவாத்மா கிடையாது. பரமாத்மாவுக்கு அடங்காமல் அசித் தத்வம் கிடையாது. ப்ரக்ருதியோ, ஜீவனோ எந்த தத்வமானாலும் கூட அது ஸ்வதந்த்ர தத்வமன்று. பரமாத்மாவுக்கு அத்யந்த பரதந்த்ர தத்வமாக இருக்கிறபடியால் இத்தத்வங்கள் தனியான வஸ்துவாக இருந்தாலும்கூட அவை ஒருபோதும் தனித்து இருக்க முடியாது என்பது நம்முடைய ஸம்ப்ரதாயம். இவை எப்பொழுதும் சேர்ந்த தத்வங்களாகவே இருக்கும். ப்ரஹ்மத்துக்கும் ஜகத்துக்கும் உண்டான ஸம்பந்தம் நித்யஸித்தமான ஸம்பந்தமேதவிர ஒருநாள் உண்டாகி ஒருநாள் போகிற ஸம்பந்தமன்று. *அத்வைதம் என்றால் கார்ய காரண யோ: அநந்யத்வம்* என்னும் உண்மையை ஸ்ரீவேதவ்யாஸர் ஸ்பஷ்டமாகவே காட்டியருளுகிறார். பரம வேதாந்தார்த்தமாகும் இது. *வாசாரம்பணம் விகாரோ நாமதேயம்.....ம்ருத்திகேத்யேவ ஸத்யம்..* என்னும் வேதாந்த வாக்யத்திலே ஸ்பஷ்டமாகச் சொல்லப்பட்ட அர்த்தம் இது. ஸதேவ, ஏகமேவ என்கிற இடத்தில் சொல்லப்பட்டிருக்கும் விஷயம் இதுதான் என்கிறார் நம் ஸ்வாமி எம்பெருமானார். ஆக *சேதநாசேதந விஶிஷ்டஸ்ய ப்ரஹ்மண: அத்வைதம் = விஶிஷ்டாத்வைதம்* என்பது நம்முடைய ஸித்தாந்தத்தின் பரமார்த்தம்.

இங்கு அவசியம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மை ஒன்று உண்டு. மண்ணுக்கு விகாரம் உண்டு. அது குடமாகப் பரிணமிக்கிறது. ஆனால் ப்ரஹ்மத்துக்கு விகாரத்தை ஒத்துக் கொண்டு ஜகத்தாக ப்ரஹ்மம் பரிணமிக்கிறதாகச் சொன்னால் *நிர்விகாரம் ப்ரஹ்ம* என்று வேதாந்தம்

சொல்லுவது தடைபட்டுப் போய்விடும். அதனால் உபாதாந உபாதேய பாவம் சொல்லுகிற பொழுது ஶரீராத்மபாவம் சொல்லியேயாக வேண்டும். ஶரீராத்ம பாவம் சொல்லாமல் உபாதாந காரணத்வத்தை நிர்வஹிக்க முடியாது. *அவித்யா விஶிஷ்ட ப்ரஹ்மம் ஜகதுபாதாந காரணம்* என்கிறார்கள் அத்வைதிகள். *சேதநாசேதந விஶிஷ்ட ப்ரஹ்மம் உபாதாந காரணம்* என்பது நம்முடைய ஸித்தாந்தம்.

ஆக விஶிஷ்டமான ப்ரஹ்மத்துக்கே உபாதாந காரணத்வத்தைச் சொல்ல முடியும். ஶுத்த ப்ரஹ்மத்துக்கு உபாதாந காரணத்வத்தை யாருமே சொல்லிவிட முடியாது. ஏனென்றால் அப்படிச் சொன்னால் நிர்விகாரம் ப்ரஹ்ம என்னும் பேத வாக்யம் தடைபட்டுப் போய்விடும்.

ஆக நம்முடைய ஸித்தாந்தத்தின்படி நாம் எப்பொழுதும் பரமாத்மாவுடன் கூடியவர்களாகவே இருக்கிறோம். ஆனால் *இத்தையொழிய பகவத் ஸம்பந்தம் துர்லபம்* என்று ஸ்ரீவசநபூஷணத்திலே ஸ்ரீபிள்ளைலோகாசார்யர் (ஸூ 440) அருளிச் செய்திருக்கிறார். அதாவது, ஆசார்ய ஸம்பந்தம் இல்லையென்றால் பகவத் ஸம்பந்தம் இல்லையென்றபடி. *எப்பொழுதும் ஜீவாத்ம பரமாத்ம நித்யயோகம் இருக்கிறபடியாலே அதாவது, அநாதிஸித்தமாக பகவத் ஸம்பந்தம் இருக்கிறபோது ஆசார்ய ஸம்பந்தம் இல்லாவிட்டால் பகவத் ஸம்பந்தம் கிடையாது என்று ஸூத்ரகாரர் வர்ணநம் பண்ணுவதற்கு அபிப்ராயமாவது யாது என்று கேட்டுக்கொண்டு இந்த ஸூத்ர வ்யாக்யாநத்திலே இதற்கு ஸ்வாமி மணவாள மாமுநிகள் அத்யாஶ்சர்யமாக விளக்கம் அருளிச்செய்துள்ளார். அதாவது பகவானுக்கும் ஜீவனுக்கும் உண்டான ஸம்பந்தம் அநாதி ஸித்தம். இந்த ஸம்பந்தத்தை இனிமேல் புதிதாக உண்டாக்கப் போகிறவர் யாருமில்லை. ஆனால் அவனுக்கும் நமக்கும் இருக்கும் நிருபாதிகமான, என்றும் விட்டுப் பிரியவோ, பிரிக்கவோ முடியாத ஸம்பந்தத்தை நாம் அறிய வேண்டுமே! இதுதான் முக்கியம். *உன்தன்னோடு உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது* என்று ஆண்டாள் அருளிச்செய்தபடி இந்த ஜீவாத்ம பரமாத்ம ஸம்பந்தத்தை அவன் நினைத்தாலும் ஒழிக்க முடியாது. நாம் நினைத்தாலும் ஒழிக்க முடியாது. அவனும் நாமும் சேர்ந்தும் ஒழிக்க முடியாது. இப்படிப்பட்ட பகவத் ஸம்பந்தம் நமக்குப் பலபடிகளாலும் அமைந்துள்ளது என்பதை ஸ்ரீபிள்ளைலோகாசார்யரே அருளிச் செய்துள்ளார். தாம் அருளிச் செய்துள்ள பதினெட்டு ரஹஸ்ய க்ரந்தங்களில் ஒன்றான *நவவித ஸம்பந்தம்* என்னும் ப்ரபந்தத்தில் நமக்கும்

பகவானுக்குமுள்ள ஒன்பது விதமான உறவு முறைகளை அத்யாஶ்சர்யமாக விவரித்துக் காட்டியருளியுள்ளார்.

*பிதா ச ரக்ஷகஶ் ஶேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:। ஸ்வாம்யாதாரோமமாத்மா ச போக்தா சாத்யமநூதித:॥ என்கிறபடி நமக்கும் எம்பெருமானுக்கும் (1) விஶேஷணவிஶேஷ்ய ஸம்பந்தம் (2) ரக்ஷ்யரக்ஷக ஸம்பந்தம் (3) ஶேஷ ஶேஷி ஸம்பந்தம் (4) பர்த்ருபார்யா ஸம்பந்தம், (5) ஜ்ஞாத்ருஜ்ஞேய ஸம்பந்தம், (6) ஸ்வஸ்வாமி ஸம்பந்தம், (7) ஶரீரஶரீரி ஸம்பந்தம், (8) தார்யதாரக ஸம்பந்தம், (9) போக்த்ருபோக்ய ஸம்பந்தம் ஆகிற ஒன்பது உறவுமுறைகள் உள்ளன. ஆக நாம் என்றைக்கும், எப்பொழுதும் பகவானுடன் கூடியவர்களாகவே இருப்பினும், அவனுக்கும் நமக்கும் இருக்கும் ஸம்பந்தத்தை ஒரு ஆசார்யன் அறிவித்து நாம் அறியலாமே தவிர நாமாக அறிந்துவிட முடியாது. ஆசார்யன் அறிவிப்பதற்குமுன் ஸம்பந்தம் இருந்தாலும் ஸம்பந்த ஜ்ஞாநம் கிடையாது. ஆக பகவானுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்தத்தைப் பற்றிய ஜ்ஞாநத்தைக் கொடுப்பவன் ஆசார்யன் ஆவான். ஆசார்யன் மூலமாக இவ்வர்த்தங்களை அறிந்து உஜ்ஜீவிக்க வேண்டும். இதற்காகத்தான் பஞ்ச ஸம்ஸ்காரம் என்னும் ஒரு முறையை அநுஷ்டாநத்திலே கொண்டிருக்கிறோம் நாம். ஆசார்யன் மூலமாக இந்த பஞ்ச ஸம்ஸ்காரங்களைப் பெற்றுக் கொண்டு பகவச் சரணாரவிந்தங்களிலே ஶரணாகதியைப் பண்ணி உஜ்ஜீவிக்க வேண்டும். இதுவே எம்பெருமானார் தர்ஶநம் எனப்படும் நம்முடைய விஶிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய ஸாரமாகும் என்பது பெரியோர்கள் நமக்குச் செய்தருளும் உபதேஶமாகும்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

விஶிஷ்டாத்வைதம் – 2

[தத்வத்ரய பாரமார்த்திக பேத வாத ஸமர்த்தநம்]

வாகம்ருதவர்ஷீ

ஸ்ரீ உ வே வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

(ஸ்வாமியுடைய உபந்யாஸங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுக்கப்பட்ட குறிப்புகளை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்டது)

ஶ்ரிய: பதியான ஸர்வேஶ்வரன் ஸகல சேதந உஜ்ஜீவநார்த்தமாகச் செய்தருளிய அவதாரங்கள் எண்ணிறந்தவை. இந்த உண்மையை, *அஜாயமாந: ப$_3$ஹுதா$_4$ விஜாயதே* (புருஷ ஸூக்தம்) என்று வேதபுருஷனும், *ப$_3$ஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவசார்ஜுந* (கீதை 4-5) என்று வேதவேத்யனான பகவான் தானும், *சன்மம் பல பல செய்து* (3-10-1), *பலபிறப்பாய்* (1-3-2), *பிறப்பில் பல்பிறவிப் பெருமான்* (2-9-5), *எந்நின்ற யோனியுமாய்ப் பிறந்தாய்* (திருவிருத்தம்-1) என்று பரமவைதிக ஸார்வபௌமரான நம்மாழ்வாரும் நமக்குக் காட்டியருளுகின்றனர். இத்தகைய அவதாரங்களுள் ஒரு பத்து அவதாரங்கள் முக்யமாகக் கொள்ளப்படுகின்றன.

தேவுடையமீனமாய்ஆமையாய்ஏனமாய் அரியாய்க்குறளாய்*
மூவுருவினிராமனாய்க் கண்ணனாய்க்கற்கியாய்முடிப்பான்கோயில்*
சேவலொடுபெடையன்னம் செங்கமலமலரேறிஊசலாடி*
பூவணைமேல்துதைந்தெழு செம்பொடியாடிவிளையாடும்புனலரங்கமே*
(பெரியாழ்வார் திருமொழி – 4-9-9)

மீனோடுஆமைகேழல்அரிகுறளாய் முன்னும்இராமனாய்த்
தானாய்* பின்னும்இராமனாய்த் தாமோதரனாய்கற்கியும்
ஆனான்தன்னை* கண்ணபுரத்துஅடியன் கலியனொலிசெய்த*
தேனாரின்சொல்தமிழ்மாலை செப்பப்பாவம்நில்லாவே*
(பெரியதிருமொழி – 8-8-10)

என்று பெரியாழ்வாரும், திருமங்கையாழ்வாரும் அருளிச் செய்துள்ளனர். அவற்றினுள்ளும் ஸ்ரீராமக்ருஷ்ண ரூபேண அவதரித்த பகவத் விக்ரஹங்களை

ஸர்வேஶ்வரனால் மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்களும் அவர்களைப் பின்செல்லுமவராய் அத ஏவ அபியுக்தாக்ரேஸரருமான பூர்வாசார்யர்களும் போர விரும்பி அநுபவித்துள்ளார்கள். அவற்றினுள்ளும் ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்துக்குள்ள பெருமை ஸ்ரீராமாவதாரத்துக்கும் இல்லை என்றால் அது மிகையாகாது. ஸ்ரீக்ருஷ்ணாவதாரத்துக்கு எண்ணிறந்த வைபவங்கள் உள்ளன. அவற்றுள் கீதையாகிற பரம ஶாஸ்த்ரத்தை அருளிச்செய்து உலகத்துக்கு உபகரித்தது தலையானதொன்றாகும். ஸ்ரீராமாவதாரத்தில் அவனருளிச் செய்த திருவாக்காக,

மித்ரபாவேந ஸம்ப்ராப்தம்

ந த்யஜேயம் கதஞ்சந

தோஷோ யத்யபிதஸ்யஸ்யாத்

ஸதாமேத தகர்ஹிதம்

பிசாஶாந் தாநவாந்யக்ஷாந்

ப்ருதிவ்யாஞ்சைவ ராக்ஷஸாந்

அங்குள்யக்ரேண தாந்

ஹந்யாம் இச்சந்ஹரிகமேஶ்வர

ஸக்ருதேவ ப்ரபந்நாய

தவாஸ்மீதிச யாசதே

அபயம் ஸர்வபூதேப்யோ

ததாமி ஏதத் வ்ரதம் மம

என்னும் ஒரு ஶ்லோக த்ரயத்தை அடிக்கடி நம் பெரியோர்கள் எடுத்து உதாஹரிப்பதுண்டு. இத்தகையதோர் ஶ்லோகத்ரயத்தை அருளிச் செய்தவளவே சக்ரவர்த்தி திருமகன் பண்ணிய உபகாரமாகும். ஓர் அரிய பெரிய ஶாஸ்த்ரமான கீதையை அருளிச்செய்த ஏற்றம் ஸ்ரீக்ருஷ்ணனுக்கு அநிதரஸாதாரண வைபவமாகும்.

கீ$_3$தா ஸுகீ$_3$தா கர்தவ்யா:
கிமந்யை ஶாஸ்த்ரஸங்க்$_3$ரஹை:।
யா ஸ்வயம் பத்$_3$மநாப$_4$ஸ்ய
முக$_2$பத்$_3$மாத்$_3$ விநிஸ்ருதா:॥

(மஹாபாரதம் – பீஷ்ம பர்வம்– கீதா மாஹாத்ம்யம் 43-1,2)

என்கிறபடியே கீதா ஶாஸ்த்ரம் ஸகல வேதாந்த ஸாரமாகும்.

ஸர்வோப நிஷதோ காவ:
தோக்தா கோபால நந்தந:।
பார்த்தோ வத்ஸ: ஸுதீர் போக்தா
துக்தம் கீதாம்ருதம் மஹத்॥

என்னக்கடவதிறே. இப்படிப் பெருமை வாய்ந்த கீதையின் பரம ஸாரார்த்தமொன்று இங்கு கீதா ஸாரமாக எழுதப்படுகிறது.

கீதை உபநிஷத்ஸமாதியாலே *கீதா* என்று ஸ்த்ரீலிங்க பதத்தாலும், பகவானுடைய ஶாஸநமாகையாலே *ஶாஸ்த்ரம்* என்று நபும்ஸக லிங்க ஶப்தத்தாலும் குலாவப்படுகிறது. *கீதாஸுகீதா கர்த்தவ்யா*, *கீதா ஶாஸ்த்ரே ஸமரீதம்* இத்யாதி வசநங்களைக் கண்டு கொள்வது. *நத்வேவாஹம் ஜாது நாஸம்* (2-12) தொடங்கி *ஸர்வதர்மாந் பரித்யஜ்ய* (18-66) ஈறாக உள்ளது பகவத்கீதா ஶாஸ்த்ரமாகும். முதல் அத்யாயம் முழுதும் இரண்டாம் அத்யாயத்தில் முதற்கண் பதினோரு ஶ்லோகங்கள் அமைந்த பாகமும் கீதா ஶாஸ்த்ர அவதாரிகை என்பது ஆளவந்தார் திருவுள்ளக் கருத்தாகும்.

அர்ஜுநனுடைய ஶோகமும் ஶோக நிவ்ருத்தியுமாகிற அர்த்தபேதத்தைக் குறித்து ஸ்ரீவேதவ்யாஸ பகவான் முதல் அத்யாயம் இரண்டாம் அத்யாயம் என்று பிரித்துள்ளார். ஆயினும் முதலத்யாயம் மட்டும் கீதையின் அவதாரிகை அன்று. இரண்டாம் அத்யாயத்தின் ஏகதேஶமும் சேர்ந்தே அவதாரிகை என்பர் ஆளவந்தார். இது பற்றியே கீதார்த்த ஸங்க்ரஹத்தில் முதலத்யாயத்தின் அர்த்தத்தை ஸங்க்ரஹித்தருளும் ஆளவந்தார்

***அஸ்தாந ஸ்நேஹ காருண்ய**
தர்மாதர்ம தியாகுலம்

பார்த்தம் ப்ரபந்ந முத்திஶ்ய
ஶாஸ்த்ராவதரணம் க்ருதம்*

என்னும் ஶ்லோகத்திலே ப்ரதமாத்யாய நாமநிர்தேஶம் செய்திலர். த்விதீயாதி அத்யாயார்த்த ஸங்க்ரஹ ஶ்லோகங்களில் நியமேந த்விதீயாதி அத்யாய நாமநிர்தேஶம் செய்தருளும் ஆளவந்தார், ப்ரதம ஶ்லோகத்தில் ப்ரதமாத்யாய நாம நிர்தேஶம் செய்யாமைக்குக் காரணம் என்னவென்றால், முதலத்யாயமும் இரண்டாம் அத்யாயத்தின் ஏகதேஶமும் கீதாஶாஸ்த்ரத்திற்கு அவதாரிகையாக அமைந்துள்ளமையேயாகும். ஆக, *நத்வேவாஹம் ஜாதுநாஸம்* என்ற ஶ்லோகமே கீதா ஶாஸ்த்ர ஆதி ஶ்லோகம் என்றதாயிற்று. கேஶவன், கோவிந்தன் சோதிவாய் திறந்து அருளிச்செய்யத் தொடங்கின முதல் இரண்டு ஶ்லோகங்களில் வேதாந்தார்த்தங்களிலே எந்த அர்த்தத்தை வெளியிடுகிறான் என்பதனை சற்றே விளக்குகிறேன்.

வேதம் முதலான ஶாஸ்த்ரங்களை பரம ப்ரமாணமாகக் கொண்டவர்கள் வைதிகர்கள். அவர்கள் மதம் வைதிக மதமாகும். அவை த்வைதம் என்றும், அத்வைதம் என்றும், விஶிஷ்டாத்வைதம் என்றும் மூன்றாக ஸுப்ரஸித்தங்களாக உள்ளன. அவற்றுள் அத்வைத வாதிகள், *ப்ரஹ்ம ஸத்யம் ஜகந்மித்யா இதி வேதாந்த டிண்டிம:* என்று கோஷிக்கிறார்கள். அதாவது ப்ரஹ்மம் ஒன்றே பாரமார்த்திக ஸத்யம் என்றும், தத்பிந்நங்களான சேதநாசேதந ஸமஸ்த பதார்த்தங்களும் அவித்யா கல்பிதங்கள், மித்யா, பொய் என்றபடி என்கிறார்கள்.

விஶிஷ்டாத்வைதிகளான நம் பெரியோர்கள் கொள்கையாவது :- *சிதசிதீஶ்வர தத்வத்ரயமும் ஸத்யமாயும் நித்யமாயும் பரஸ்பர பிந்நங்களாயும் உள்ளன். ஈஶ்வரனே பரப்ரஹ்மம். அவன் சேதந அசேதந விஶிஷ்டனாகவே எப்பொழுதும் உளன்* என்று. இந்த இரண்டு மதங்களுள் கீதாசார்ய ஸம்மதம் ஏக தத்வ வாதமா, தத்வத்ரய வாதமா என்பதனை ஈண்டு அநுபவிக்கலாம். கீதைக்கும் மூலபூதமான வேதாந்த ஸித்தாந்தமாவது யாது என்பதனை முதல் முன்னமே கூறுகிறேன்.

உபநிஷத்துக்களில் ஶ்வேதாஶ்வதரோபநிஷத்து ஸுஸ்பஷ்டமாக தத்வத்ரயத்தையும், அவற்றுள் பரஸ்பரம் ஸ்வரூப பேதத்தையும் சேதந-அசேதந-

விலக்ஷணம் பரமாத்ம தத்வம் என்பதையும், பரமன் அருளாலே சேதநனுக்கு புருஷார்த்த லாபம் என்பதையும் கூறுகிறது.

ஸம்யுக்த மேதத் க்ஷரமக்ஷரஞ்ச வ்யக்தாவ்யக்தம் பரதே விஶ்வமீஶ:

க்ஷரம் ப்ரதாநம் அம்ருதாக்ஷரம் ஹர: க்ஷராத்மாநௌ ஈஶதே தேவ ஏக:

ஜ்ஞாநௌ த்வௌ அஜௌ ஈஶநீஶௌ

அஜாமேகாம் லோஹித ஶுக்ல க்ருஷ்ணாம் பஹ்வீ: ப்ரஜா: ஸ்ருஜமாநாம் ஸரூபா:

***அஜோஹ்யேகோ ஜுஷமாணோநுஶேதே**
ஜஹாத்யேநாம் புக்தபோகா மஜோந்ய:*

***நித்யோ நித்யாநாம் சேநதஶ் சேதநாநாம்**

ஏகோபஹூநாம் யோ விததாதி காமாந்*

போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா

இத்யாதி ஶ்வேதாஶ்வதர வாக்யங்களை உற்று நோக்கினால் தத்வத்ரய பாரமார்த்திக பேதவாதம் வேதாந்த ஸம்மதம் என்பது புலப்படும். வேதாந்தத்தை விஶதீகரணம் பண்ண வந்த கீதா ஶாஸ்த்ரத்தில் உபக்ரம ப்ரகரணத்தை இனி நாம் காண்போம்.

ஶோகா விஶிஷ்டனாயும் கலங்கியவனாயும் உள்ள அர்ஜுநன், *அடியேனுக்குக் கலக்கத்தைப் போக்கித் தெளிவைப் பிறப்பிக்க வேணும்* என்று கண்ணனிடத்தில் ஶரணாகதி செய்து ப்ரார்த்தித்தான். இவ்விஷயம்

***யத் ஶ்ரேயஸ் ஸ்யாந்**
நிஶ்சிதம் ப்ரூஹி தந்மே
ஶிஷ்யஸ் தேஹம்
ஶாதிமாம் ப்ரபந்நம்*

என்கிற ஶ்லோகத்திலே வ்யக்தம். ஸர்வஜ்ஞனாய், பரமாத்மாவாய், ஶரண்யனாய், ஆசார்யனாய் உள்ள ஸ்ரீக்ருஷ்ணன் பக்தனாய், ப்ரியனாய்,

ஸகாவாய், பந்துவாய் உள்ள அர்ஜுநனுக்கு உபதேஶித்த இடத்தில், ஆதியில் *நத்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே* என்ற ஶ்லோகத்திலே *அஹம்* என்றும், *த்வம்* என்றும், *இமே* என்றும் ஜீவபர பேதத்தையும், ஜீவாத்மாக்களுக்குள் பரஸ்பரம் ஸ்வரூப பேதத்தையும் உபதேஶிக்கிறான். *தேஹிநோஸ்மிந்* என்ற அநந்தர ஶ்லோகத்திலே சிதசித் பேதத்தையும் உபதேஶிக்கிறான். ஆகையால் கீதாசார்ய ஸம்மதம் தத்வத்ரயவாதம் என்று தெளிவாகிறது.

தத்வத்ரயபேதம் அபாரமார்த்திகம், பேத தர்ஶநமே அஜ்ஞாந கார்யம் என்பது வேதாந்த ஸித்தாந்தமேயானால், வேதாந்த ஸித்தாந்த நிர்தாரணம் பண்ண வந்த ஸ்ரீக்ருஷ்ணன், கலங்கியுள்ள அர்ஜுநனுக்குக் கலக்கத்தைப் போக்கித் தெளிவைப் பிறப்பிக்க வேண்டியது ப்ராப்தமாய் இருக்க, உபக்ரமத்திலேயே தத்வத்ரய பேதத்தை உபதேஶித்து கலங்கியவனை மேலும் கலக்கமுடையவனாக ஆக்குவது யுக்தமாகுமா என்பதனை நாம் ஆராய வேண்டும். இங்கு சொல்லப்படும் தத்வத்ரய பேதம் அவித்யா கல்விதம், வ்யாவஹாரிகம், பாரமார்த்திகம் அன்று என்று சொல்ல முடியாது.

***ஜ்ஞாநேநது ததஜ்ஞாநம்**
யேஷாம் நாஶிதம் ஆத்மந:।
தேஷாமாதித்ய வத்ஜ்ஞாநம்
ப்ரகாஶயதிதத்பரம் ॥*

(5-16) என்று அஜ்ஞாநம் நசிந்த பிறகு ஜீவர்களுக்குள் *பன்மை* கீதாசார்யனாலேயே கூறப்படுவதைக் காண்போமானால், *பேதம் அவித்யா கல்பிதமன்று, பாரமார்த்திகம்* என்று தேறும். ஆகையால் *தத்வத்ரய பேதம் பாரமார்த்திகம் என்றும் தத்வத்ரய பேத தர்ஶநம் ஜ்ஞாந கார்யம்* என்றும் தேறுகிறது. இதுவே வேதாந்த ஸித்தம், வேத்யனுடைய மதம், வைதிக தர்ஶநம் என்பது தெளிவு.

பிள்ளைலோகாசார்யர் தத்வத்ரய க்ரந்தாரம்பத்தில்

முமுக்ஷுவான சேதநனுக்கு மோக்ஷமுண்டாகும்போது தத்வத்ரய ஜ்ஞாநம் உண்டாக வேணும்

என்று அருளிச்செய்துள்ளார். விஶதவாக் ஶிகாமணிகளான மணவாளமாமுநிகள் தேனும் பாலும் கன்னலுமாய் அருளிச்செய்துள்ள தத்வத்ரய வ்யாக்யாநத்தில்

தத்வஜ்ஞாநாத் மோக்ஷம்* என்கிறவிது ஸகல ஸித்தாந்த ஸாதாரணமிறே. மோக்ஷத்திலும் தத்வத்திலுமிறே விப்ரதிபத்தி உள்ளது. *தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே* என்று வேதாந்தங்கள் பகவத் தத்வஜ்ஞாநம் ஒன்றுமே மோக்ஷ ஸாதநம் என்னாநிற்க, தத்வாந்தர பரிஜ்ஞாநத்தையும் இவர் மோக்ஷஸாதநமாக அருளிச்செய்வான் என்னென்னில், பகவத் தத்வத்தை அறியும்போது ஸகல சேதநாசேதந விலக்ஷணமாகவும் இவற்றுக்குக் காரணமாகவும் வ்யாபகமாகவும் தாரமாகவும் நியாமகமாகவும் ஶேஷியாகவும் அறிய வேண்டுகையாலும், தத்வாந்தரங்களை அறியாத போது இப்படியறிய விரகில்லாமையாலும், தத்வத்ரய ஜ்ஞாநம் உண்டாக வேண்டும் எனக் குறையில்லை. *போக்தா போக்யம் ப்ரேரிதாரஞ்ச மத்வா*, *ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரஞ்சமத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேந அம்ருதத்வமேதி* என்னும் ஶ்ருதிக்கும் ஹ்ருதயமிதுவிறே என்று அருளிச்செய்துள்ள ஸ்ரீஸூக்திகள் நித்யாநுஸந்தேயங்கள். தேஶிகனும் ரஹஸ்யத்ரயஸார தத்வத்ரய சிந்தனாதிகார ஆரம்பத்தில்,

ப்ரக்ருத்யாத்மப்ராந்தி: கலதி சிதசில்லக்ஷணதியா
ததா ஜீவேஶைக்யப்ரப்ருதி கலஹ: தத்விபஜநாத் ।
அதோ போக்தா போக்யம் ததுபய நியந்தேதி நிகமை:
விபக்தம் ந: தத்வத்ரய முபதிஶந்தி அக்ஷததிய:॥

என்று அருளிச்செய்துள்ளார். *நிகமை:* என்று ப்ரமாணமும், *அக்ஷததிய: உபதிசந்தி* என்று ஸம்ப்ரதாயமும் கூறப்பட்டது. சொல்லப்படும் அர்த்தம் ப்ராமாணிகமாயும் ஸாம்ப்ரதாயிகமாயும் அமைய வேணுமிறே. ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் பராஶர பகவானும் தத்வத்ரய ஸ்வரூப ஸ்வபாவங்களை மிகவும் தெளிவாக வழங்கியுள்ளார் என்று அன்னார் திறத்தில் பரமாசார்யரான ஆளவந்தார் க்ருதஜ்ஞதா பூர்வக ப்ரணாம ஸமர்ப்பணம் செய்திருப்பது

தத்வேநய: சிதசிதீஶ்வர தத்ஸ்வபாவ போகாபவர்க்க ததுபாயகதீருதார: ஸந்தர்ஶயந் நிரமிமீத புராணரத்நம் தஸ்மை நமோ முநிவராய பராஶராய

என்னும் ஶ்லோகத்தில் வ்யக்தம்.

கீதாசார்யனுடைய அருள் ஒருவனுக்கு அமைவது என்றால், முதலிலே தத்வவிவேகம் அமையும். *அசித்விலக்ஷணன் ஜீவாத்மா* என்னும் ப்ரக்ருத்யாத்மாப்ராந்தி விலகும். *ஜீவ விலக்ஷணன் பரமாத்மா* என்கிற ஜீவபர விவேகத்தாலே ஜீவேஶ்வர ஐக்ய கலக்கம் நிவ்ருத்தமாகும். ஜீவன் ஜ்ஞாதா என்பதால் அசித்விலக்ஷணன் ஆவான்; பகவத்-ஶேஷபூதனாகையால் ஶேஷியான பகவானைக் காட்டிலும் வேறுபட்டவன் ஆவான். நம்மாழ்வார் *அடியேனுள்ளான்* (8-8-2) என்று ஜீவபர பேதத்தையும் *சென்று சென்று பரம்பரமாய்* (8-8-5) என்று தேஹாத்ம பேதத்தையும் ஸ்பஷ்டமாக அருளிச்செய்தாரிறே.

ஜீவாத்ம ஸ்வபாவங்களான ஜ்ஞாத்ருத்வ ஶேஷத்வங்கள் இரண்டினுள் ஶேஷத்வமே ப்ரபலம். ஶேஷத்வம் இல்லாதபோது ஸ்வரூபம் இல்லை. அதுதோன்ற முந்துற முன்னம் அகாரத்தின் மேல் வந்து மறைந்த சதுர்த்தி ஶேஷத்வத்தைக் காட்டுகிறது. பின்னே மகாரம் ஜ்ஞாத்ருத்வத்தைக் கூறுகிறது. ஸ்ரீவேதவ்யாஸரும் ஶாரீரக ஶாஸ்த்ரத்திலே முதலத்யாயத்தில் ஜீவாத்ம ஸ்வரூபம் பகவத் ஶேஷத்வம் என்று கூறுகிறார். அதன் பிறகே இரண்டாவது அத்யாயத்தில் *ஜ்ஞோதஏவ* என்று ஜ்ஞாத்ருத்வத்தை அருளிச் செய்தார். *நஹிமே ஜீவிதேநார்த்த:* என்று பிராட்டியும் *ஏறாளுமிறையோனும்* என்று நம்மாழ்வாரும், *ந தேஹம் ந ப்ராணாந்* என்று ஆளவந்தாரும், பகவத் ஶேஷத்வம் இல்லாதபோது ஆத்மாத்மீயங்கள் த்யாஜ்யம் என்று கூறி ஶேஷத்வ ப்ராதாந்யத்தை வலியுறுத்துகின்றனர். திருக்கோஷ்டியூர் நம்பி ஸ்ரீபாதத்திலே ஆறு மாதம் ஸேவித்து நின்று ஆழ்வான் நிதியாகப் பெற்ற அர்த்தமிறே இது. இந்த தத்வத்ரய பேதத்தையே கீதாசார்யன் *நத்வேவாஹம்*, *தேஹிநோஸ்மிந்* என்னும் இரண்டு ஶ்லோகங்களாலே அறுதியிடுகிறான். *தர்ஶநம் பேத ஏவ ச* என்றிறே தேவப்பெருமாள் ஸித்தாந்தம் இருந்தபடி.

அஹங்காரம் ஓர் சண்டாளன். *மமதை* அவன் பார்யை. *ராகத்வேஷங்கள்* அவர்கள் பெற்ற புத்ரர்கள். அஹங்காரம் ஒன்றினை ஒழித்தால், மமதையும் ராகத்வேஷங்களும் அழியும். அஹங்காரமாகிற பர்த்தா அழிந்தால், அவன் பார்வையான மமதை பதிவ்ரதையாகையால், அநுமரணம் செய்து அழியும். மமதையான தாயார் அழிந்தால், முலைப்பால் கொடுப்பார் இல்லாமையாலே குழந்தைகளான ராக த்வேஷங்கள் நாக்கு வற்றி அழியும். ஆகையால் ஸர்வாநர்த்த மூலமான அஹங்காரத்தை ஒழிக்க வேண்டுவது

பரமாவஶ்யகம். ஆநாத்மாவான தேஹத்தை ஆத்மாவாக அபிமாநிப்பதும் அஹங்காரமே. அநீஶ்வரனான தன்னை ஈஶ்வரனாக அபிமாநிப்பதும் அஹங்காரமே. இவ்விரண்டும் தேஹாத்மாபிமாநம் ஆகும். இவ்விரண்டும் ஒழிந்திட – தத்வத்ரய விவேகம் விளைந்திட – கண்ணன் கீதோபதேஶம் செய்தருளுகிறான்.

அழகியமணவாளப்பெருமாள் நாயனார் ஆசார்யஹ்ருதயத்தில் கீதார்த்தங்களான பதினெட்டில் தத்வவிவேகத்தை முதல்முன்னமே அருளிச் செய்துள்ளார். மயர்வற மதிநலம் அருளப்பெற்ற ஆழ்வார்கள் ஸர்வேஶ்வரன் தங்களுக்கு தத்வவிவேகம் பிறப்பித்தமையை மஹோபகாரமாக அநுஸந்தித்து இனியராகிறார்கள்.

தத்வத்ரய பாரமார்த்திக பேதம் கீதா ஶாஸ்த்ரத்திலே உபக்ரம ப்ரகரணத்தில் மட்டுமின்றிக்கே ஶாஸ்த்ரம் முழுவதிலும் ஆம்ரேடிதமாயிருக்கும். கீதாசரமஶ்லோகத்திலும் *அஹம்* என்றும் *த்வா* என்றும், *மோக்ஷயிஷ்யாமி* என்றும் அருளிச்செய்தான். பத்தனாய், அஜ்ஞனாய், அஶக்தனாய், அபூர்ணனாய், அப்ராப்தனாய் உள்ள அபிமுகசேதநனை *த்வா* ஶப்தத்தாலும் முகுந்தனாய், ஸர்வஜ்ஞனாய், ஸர்வஶக்தனாய், பூர்ணனாய், ப்ராப்தனாய் உள்ள ஸர்வேஶ்வரனான தன்னை *அஹம்* ஶப்தத்தாலும், பந்தகமான விரோதியையும், தந்நிவ்ருத்தியையும் *ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி* என்ற வாக்யத்தாலும் கூறுகிறானாகையாலே தத்வ-த்ரய பேதத்தை விளக்குகிறானிறே. ஆக, *சேதநாசேதநங்கள் ஶேஷமாய், வ்யாப்தமாய், தார்யமாய், நியாம்யமாய் இருக்கும் ஈஶ்வரன் ஶேஷியாய், வ்யாபகனாய், தாரகனாய், நியந்தாவாய் இருக்கும்* என்னும் ஜ்ஞாநமே யதார்த்த ஜ்ஞாநமாகும்.

இதுவே கீதா ஸாரம். தர்மக்ஷேத்ரமான குருக்ஷேத்ரத்திலே பாண்டவ கௌரவ ஸேநா மத்யத்திலே திருத்தேர்த்தட்டிலே கீதாசார்யனாய் எழுந்தருளியிருந்து உபதேஶித்தருளிய தத்வத்ரய பாரமார்த்திக பேதவாதத்தையே திருவத்திகிரியான் தேவப்பெருமாள் *தர்ஶநம் பேத ஏவச* என்றருளிச் செய்தான்.

விபவாவதாரமான ஸ்ரீக்ருஷ்ணனுக்கு ப்ரதிநிதியாய் திருவல்லிக்கேணியாம் திவ்ஸதேஶத்தில் ஸ்ரீபார்த்தஸாரதியாம் அர்ச்சாவதாரமாக ஸேவை ஸாதிக்கும் எம்பெருமானே ஶேஷி, ஶரண்யன்,

ப்ராப்யன் என்றும், நாம் அவனுக்கு ஶேஷபூதர்கள் என்றும், அவனையே உபாயோபேயங்களாய் கொண்டுள்ளவர்கள் என்றும் தெளிந்து அதற்கநுகுணமான அநுஷ்டாநத்தோடு வர்த்திப்போமாக. ப்ரமாணமான கீதையும், ப்ரமேயமான ஸ்ரீபார்த்தஸாரதியும், ப்ரமாதாக்களான ஆழ்வார்களும் வாழி வாழி வாழி என்று பல்லாண்டு பாடி நிற்கிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்

ஸ்ரீபாஷ்யமங்கள ஶ்லோக விவரணம்

வாகம்ருதவர்ஷீ

ஸ்ரீ உ.வே. வேளுக்குடி வரதாசார்ய ஸ்வாமி

அகிலபுவநஜந்மஸ்தேமபங்காதிலீலே
விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே।
ஶ்ருதிஶிரஸிவிதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே
பவதுமம பரஸ்மிந் ஶுமுஷீ பக்திரூபா||

என்பது ஸ்ரீபாஷ்ய மங்கள ஶ்லோகமாகும். இதற்கு ஶ்ருதப்ரகாஶிகா பட்டர் அருளிச்செய்துள்ள விவரணத்தை அடியொற்றி ஒரு சில அர்த்த விஶேஷங்களை இப்பொழுது அநுபவத்தில் கொள்ளலாம்.

முதலில் இந்த ஶ்லோகத்தினுடைய ஶப்தார்த்தத்தை அநுபவிப்போம். *அகிலபுவநஜந்மஸ்தேமபங்காதிலீலே* - ஸமஸ்த லோகங்களுடைய உத்பத்தி, ஸ்திதி, லயம், (ஆதி ஶப்தத்தினால்) இவற்றுக்கு யோக்யமான அந்த: ப்ரவேஶம், நியமநம் இவைகளை லீலையாகக் கொண்டவனாய், *விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே* - பலவிதமான பூதங்கள் - அதாவது, ப்ரஹ்ம ஜ்ஞாநமாகிய ஸத்தையை உடையவர்களாய் பலவித மார்க்கங்களாலே (பக்தர்களாகவும் ப்ரபந்நர்களாகவும் இருந்து) எம்பெருமானை வணங்கும் ப்ரஹ்மஜ்ஞாநிகளையும், அவர்களோடு ஸம்பந்தப்பட்டவர்களையும் ரக்ஷிப்பதையே தீக்ஷையாக (வ்ரதமாக) உடையவனாய் *ஶ்ருதிஶிரஸிவிதீப்தே* - வேதாந்தத்திலே மிகுந்து விளங்குபவனாய் இருக்கும் *பரஸ்மிந் ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே* - ஸ்ரீநிவாஸனாகிற பரப்ரஹ்மத்தினிடத்திலே, *பக்திரூபா ஶுமுஷீ மம பவது* - பக்தி ரூபாபந்நமாகிற ஜ்ஞாநம் எனக்கு உண்டாகட்டும்.

பரமாசார்யரான ஸ்ரீஆளவந்தார் திருவுள்ளத்தை அநுஸரித்து ப்ரஹ்மஸூத்ர ப்ரபந்தத்துக்கு வ்யாக்யானமாய் ஸ்ரீபாஷ்யத்தை அருளிச் செய்யப் புகாநின்ற எம்பெருமானார் முதல்முன்னம் இஷ்டதேவதா நமஸ்காரரூபமான மங்கள ஶ்லோகத்தை அருளிச்செய்கிறார். தொடங்கப்பட்ட இந்த வ்யாகயானமானது (1) விக்நங்கள் இல்லாமல் பரிஸமாப்தியை

அடைவதற்காகவும் (2)அபிவிருத்தியை அடைவதற்காகவும், (3) இஷ்டதேவதா உபாஸநரூபமான மங்களாசரணம் ஸ்ம்ருதி ஆசார ஸித்தமாய் இருப்பதாலும் மங்கள ஶ்லோகத்தை இங்கே எம்பெருமானார் அருளிச்செய்கிறார் என்கிறார் ஶ்ருதப்ரகாஶிகா பட்டர்.

மங்களாசார யுக்தாநாம் நித்யஞ்ச ப்ரயதாத்மநாம் | ஜபதாம் ஜுஹ்வதாஞ்சைவ விநிபாதோ ந வித்யதே ॥ என்னும் ஸ்ம்ருதி வசநமானது - மங்கள ஆசாரத்தோடு கூடியவர்களும், எப்பொழுதும் பரிஶுத்தமான சித்தவ்ருத்தி உள்ளவர்களும், மந்த்ரங்களை ஜபிக்கிறவர்களும், ஶாந்திக பௌஷ்டிக ஹோமங்களைச் செய்பவர் களுமான பெரியோர்களுக்கு அவர்கள் தொடங்கிய எக்கார்யமும் எந்தவிதத் தடையும், அநர்த்தமும் இல்லாமல் ப2லஸித்தியுடன் முடியும் - என்னும் உண்மையைத் தெரிவிக்கிறது. இந்த ப்ரமாண வசநத்தில் சொல்லப்பட்டுள்ள மங்களத்தைத்தான் எம்பெருமானார் இங்கு ஶாப்தமாக அருளிச் செய்திருக்கிறார் என்பதை நாம் அறியலாம்.

ஸாதாரணமாக மங்களமானது மூன்று வகைப்படும். மங்கள ஶ்லோகமானது இந்த மூன்று விதமான மங்களத்தில் ஏதாவது ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவைகளையோ தெரிவிப்பதாய் அமையலாம். ஆஶீர்வாத ரூபமாகவோ அல்லது வஸ்துநிர்தேஶ ரூபமாகவோ அல்லது இஷ்டதேவதா நமஸ்கார ரூபமாகவோ மங்கள ஶ்லோகம் அமைவது விஶேஷம். ஸ்ரீபாஷ்ய மங்கள ஶ்லோகத்தில் இம்மூன்றையுமே சேர்த்து அருளிச் செய்துள்ளார் எம்பெருமானார் என்பதை நாம் காணலாம்.

பரஸ்மிந் ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே - பக்திரூபா ஶுமுஷீ மம பவது - பரப்ரஹ்மமாகிய ஸ்ரீநிவாஸனிடத்தில் பக்தி ரூபாபந்நமாகிற ஜ்ஞாநமானது உண்டாகட்டும் - என்று எம்பெருமானார் ப்ரார்த்திக்கிறார். *பவது* என்னும் சொல் *ஆஶீ:* = விருப்பம் (ஆஶீர்வாதம் என்பது விருப்பத்தைத் தெரிவிக்கும் சொல்லாகும்) என்பதைக் குறிக்கிறது.

ஶாஸ்த்ரார்த்த ஸங்க்ஷேபத்தை - வஸ்து நிர்தேஶத்தை, *அகிலபுவந ஜந்ம ஸ்தேமபங்காதி லீலே* *விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே* என்னும் முதல் இரண்டு பாதங்களில் எம்பெருமானார் அருளிச்செய்திருக்கிறார். ஒரு க்ரந்தத்தை அருளிச்செய்யும் பொழுது அந்த க்ரந்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள ஶாஸ்த்ரார்த்தத்தினுடைய ஸங்க்ஷேபத்தை மங்கள

ஶ்லோகத்தில் அருளிச்செய்வது என்பது ஒரு முறை. க்ரந்தத்திலே சொல்லப்பட்டிருக்கிற விஷயம் - இதைத்தான் வஸ்துநிர்தேஶம் என்பர் - இன்னதென்று அறிந்து கொள்ளும் ஆவல் பலருக்கு இருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்களுடைய புத்தியானது - ஆவலானது - ஸமாதாநத்தை அடையும் பொருட்டு மேலே க்ரந்தத்திலே சொல்லப்பட்டுள்ள விஷயத்தை ஸங்க்ரஹமாக மங்களஶ்லோகத்தில் அருளிச்செய்வது என்னும் முறையை அநுஸரித்து இங்கே ஸ்வாமி எம்பெருமானாரால் மங்கள ஶ்லோகம் அருளிச் செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கு ஶிஷ்டாசாரம் உண்டா என்றால் மஹர்ஷிகளே இந்த முறையை அநுஸரித்திருக்கிறார்கள் என்பதை நாம் காணலாம். ஸ்ரீராமாயணத்திலே முதல் ஸர்க்கம் ஸங்க்ஷேப ராமாயணமாய் அமைந்துள்ளது. ஸங்க்ஷேப ராமாயணம், விஸ்தர ராமாயணம் என்று வால்மீகி க்ருதமான ஸ்ரீராமாயணம் இரு வகையாய் அமைந்துள்ளதைக் காணலாம். வ்யாஸரும் மஹாபாரதத்தை ஸங்க்ஷேபமாகவும் விஸ்தரமாகவும் அருளிச் செய்துள்ளார். ஸ்ரீவிஷ்ணு புராணத்திலேயும் இந்த முறையை அநுஸரித்துள்ளார் ஸ்ரீபராஶர மஹரிஷி. வேதாந்தார்த்தங்களை சுருக்கமாகவும் விரிவாகவும் மனத்தில் தரிப்பது என்பது வித்வான்களான பெரியோர்கள் கைக்கொள்ளும் முறையாகும். இந்த முறையைப் பின்பற்றி நம் ஸ்வாமியும் ஶாரீரக ஶாஸ்த்ரத்திலே நான்கு அத்தியாயங்களிலே சொல்லப்பட்டிருக்கும் அர்த்தவிஶேஷங்களைத் தாம் ஸ்ரீபாஷ்யத்திலே விவரித்திருக்கும் விதத்தில் சுருக்கமாக மங்கள ஶ்லோகத்திலே காட்டியருளுகிறார்.

இந்த மங்கள ஶ்லோகத்தில் ஶாஸ்த்ரார்த்த ஸங்க்ஷேபமானது ஶாப்தமாகவும், அர்த்தத்தினாலேயும் காட்டப்பட்டுள்ளது என்பதை நாம் விவரமாக மேலே அனுபவிக்கலாம். இப்படி இந்த மங்கள ஶ்லோகத்திலே ஶாப்தமாகவும், அர்த்த ப$_3$லத்தினாலும் ஶாஸ்த்ரார்த்தங்கள் எம்பெருமானாரால் காட்டப்பட்டுள்ளன என்பதற்கு த்ருஷ்டாந்தபரமான ஒரு விளக்கத்தை ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் அருளிச்செய்துள்ளார். ஜைமிநியால் அருளிச்செய்யப்பட்டுள்ள பூர்வமீமாம்ஸா ஶாஸ்த்ரத்தில் இரண்டாவது ஸூத்ரம் *சோதநா லக்ஷணோர்த்தோதர்ம: * என்பது. இந்த ஸூத்ரத்திலே ஶாப்தமாகவும், அர்த்தப$_3$லத்தாலும் இரண்டு விஷயங்கள் நிரூபிக்கப்

பட்டிருக்கின்றன. தர்மஸ்வரூபம் ஶப்தத்தினால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அதற்குண்டான ப்ரமாணம் அர்த்தத்தாலே நிரூபிக்கப்பட்டிருக்கிறது. *சோதநா* என்றால் கட்டளை. விதி வாக்யங்கள் வேதத்திலே காணப் படுகின்றன. *இந்த விதி வாக்யங்களாலே எந்த அர்த்தம் சொல்லப்படு கிறதோ அதுதான் தர்மம்* என்பது இந்த ஸூத்ரத்தினுடைய அர்த்தமாகும்.

சோதநா லக்ஷணமாய் இருப்பது - கட்டளை வாக்யத்துக்கு விஷயமாய் இருப்பது எதுவோ அது தர்மம் எனப்படும். ஆக, இங்கு தர்மஸ்வரூபத்தை ஶப்தத்தாலே சொன்னார் ஜைமிநி. அதற்கு ப்ரமாணம் வேதத்திலுள்ள கட்டளை வாக்யங்கள் என்று அர்த்தத்தாலே காட்டினார். *தர்ம விஷயத்திலே ப்ரமாணமாவது வேதத்தில் காணப்படும் கட்டளை வாக்யங்கள்* என்று சொல்லி இருந்தால் இந்த உண்மையை ஶப்தத்தாலேயே சொன்னதாக ஆகிவிடும். ஆனால் ஜைமிநி அப்படிச் சொல்லவில்லை. அவர் *ப்ரமாணம்* என்ற சொல்லை ப்ரயோகிக்காமல் * கட்டளை வாக்யங்களாலே சொல்லப்படுகிற அர்த்தம் தர்மம்* என்று சொல்லி இருப்பதினால், *தர்மத்தை இந்தக் கட்டளை வாக்யங்கள் தெரிவிக்கின்றன; இப்படித் தெரிவிப்பது எதுவோ அதுதான் ப்ரமாணம்* என்னும் உண்மையை ஶாப்தமாக இல்லாமல் அர்த்தப$_3$லத்தாலே காட்டியிருக்கிறார் என்று தேறுகிறது. ஸ்ரீபாஷ்ய மங்களஶ்லோகத்திலே எம்பெருமானாரும் ஶாப்தமாகவும், அர்த்தப$_3$லத்தாலும் ஸ்வபக்ஷ ஸ்தாபநம், பரபக்ஷ நிராஸநம் இவற்றை உட்கொண்ட வஸ்து நிர்தேஶத்தைச் செய்தருளியிருக்கிறார்.

விநத *பக்திரூபா* என்னும் இரண்டு சொற்களும் இஷ்டதேவதா நமஸ்கார ரூபமான மங்களத்தைத் தெரிவிப்பதாய் அமைந்துள்ளன. *விநத* என்னும் சொல் வணக்கத்தைத் தெரிவிக்கும். *பக்தி* என்னும் சொல் உயர்ந்தவன் விஷயத்தில் தாழ்ந்தவன் செய்யும் ப்ரீதிவிஶேஷத்தைக் குறிக்கும். ஆக இந்த ஶ்லோகத்தில் மூன்று விதமான மங்களங்களும் எம்பெருமானாரால் ஆசரிக்கப்பட்டன என்றதாயிற்று.

முதல் இரண்டு அத்யாயங்களில் ப்ரதிபாதிக்கப் பட்டிருக்கும் அர்த்தத்தினுடைய சுருக்கம் *அகிலபுவநஜந்மஸ்தேமபங்காதிலீலே* என்னும் முதல் பாதத்தினால் தெரிவிக்கப்படுகிறது. இரண்டாவது இரண்டு அத்யாயங்களுடைய ஸாரார்த்தம் *விநதவிவிதபூத வ்ராதரக்ஷைகதீக்ஷே*

என்னும் இரண்டாவது பாதத்தாலே காட்டப்படுகிறது. கர்ம மீமாம்ஸா ஶாஸ்த்ரமானது அத்தால் ப்ரதிபாதிக்கப்படுகிற அர்த்தங்களின் பேதத்தினால் எப்படி இரண்டு ஷட்கங்களாகப் (ஆறு அத்யாயங்கள் கொண்டது ஷட்கம் எனப்படும்) பிரிக்கப்பட்டு இருக்கிறதோ, அதுபோல நான்கு அத்யாயங்கள் கொண்ட ப்ரஹ்ம மீமாம்ஸா ஶாஸ்த்ரமும் ப்ரதிபாத்யபேதத்தால் இரண்டு த்விகங்களாக(இரண்டு அத்யாயங்கள் கொண்டது த்விகம்) பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு விஷய விஷயீ பேதமானது ப்ரதிபாத்ய பேதமாகிறது. விஷயத்தைத் தெரிவிப்பன முதல் இரண்டு அத்யாயங்கள். விஷயீயைத் தெரிவிப்பன இரண்டாவது இரண்டு அத்யாயங்கள். விஷயம் என்றால் ப்ரஹ்மம். ப்ரஹ்மமாகிற விஷயத்தைத்தான் முதல் இரண்டு அத்யாயங்களும் தெரிவிக்கின்றன. ப்ரஹ்மத்தினுடைய ஜகத்காரணத்வம் முதல் அத்யாயத்தில் ப்ரதிபாதிக்கப்படுகிறது. அதனுடைய ஸமர்த்தநம் இரண்டாவது அத்யாயத்திலே செய்யப்படுகிறது. ஆக இரண்டாவது அத்யாயத்திலேயும் ப்ரஹ்மகாரணத்வம்தான் விஷயமாகிறது.

மூன்றாவது நான்காவது அத்யாயங்கள் விஷயீத்விகம் எனப்படுகின்றன. விஷயீகரிக்கக்கூடியது - விஷயத்தை க்ரஹிக்கக்கூடியது எதுவோ அது விஷயீ எனப்படும். அதுதான் ஜ்ஞாநம். மூன்றாவது அத்யாயம் பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தைத் தெரிவிக்கிறது. நான்காவது அத்யாயம் ப்ரஹ்மாநுபவ ரூபமான ஜ்ஞாநத்தைத் தெரிவிக்கிறது. ப்ரஹ்மத்தினிடத்தில் செய்யப்படும் பக்தி ரூபாபந்நமான ஜ்ஞாநத்தினால் ப்ரஹ்மாநுபவரூபமான ஜ்ஞாநம் ஏற்படும். இதைத்தான் நான்காவது அத்தியாயம் தெரிவிக்கிறது. ஆக பக்திரூபாபந்ந ஜ்ஞாநம், ப்ரஹ்மாநுபவ ஜ்ஞாநம் என்று ஜ்ஞாந-த்வயமாகிய விஷயீகளைக் கொண்டதாக அமைந்திருக்கிறபடியாலே மூன்றாவது நான்காவது அத்யாயங்கள் விஷயீ-த்விகம் எனப்படுகின்றன.

இந்த ஶாரீரக ஶாஸ்த்ரத்தாலே ப்ரதிபாதிக்கப்படுகிற விஷயமாவது உபாயரூபமாயும் உபேயரூபமாயும் இருக்கிறது. உபாயம் - ஸித்தோபாயம் ப்ரஹ்மம்தான். ஸாத்யோபாயமாக இருப்பது பக்தி. ஆகையால் ஸித்தோபாயம், ஸாத்யோபாயம் என்னும் இரண்டையுமே இந்த ஶாஸ்த்ரம் தெரிவிக்கிறதாகக் கொள்ளலாம். உபேயம் என்பதும் ப்ரஹ்மம்தான். அதனால் உபாயமாகவும் உபேயமாகவும் இருப்பது ப்ரஹ்மமே என்பதை இந்த ஶாஸ்த்ரம் தெரிவிக்கிறது என்றதாயிற்று. ஸித்தோபாயமாகிற ப்ரஹ்மத்தை

முதல் இரண்டு அத்யாயங்கள் தெரிவிக்கின்றன. ஸாத்யோபாயமான பக்தியை மூன்றாம் அத்யாயம் தெரிவிக்கிறது. உபேயமான ப்ரஹ்மத்தை நான்காம் அத்யாயம் தெரிவிக்கிறது. *அகிலபுவநஜந்மஸ்தேமபங்காதிலீலே* *விநதவிவித பூதவ்ராதரக்ஷைகதீக்ஷே* *ஶ்ருதிஶிரஸிவிதீப்தே* *ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே* என்று இந்த ஶ்லோகத்திலுள்ள ஏழாவது வேற்றுமை உருபு பதங்களாலே ஸித்தோபாயமாகவும், உபேயமாகவும் உள்ள ப்ரஹ்மம் சொல்லப்படுகிறது.

இந்த ஶ்லோகத்திலுள்ள *புவந* ஶப்தம் எந்த அர்த்தத்தைத் தெரிவிக்கிறது என்பது இனி அடுத்தபடியாக நாம் அறிய வேண்டிய விஷயமாகும். புவந ஶப்தத்துக்கு ஸமஸ்த லோகங்களும் எப்படி அர்த்தமாகின்றன என்று பார்க்க வேண்டும். புவந ஶப்தத்தினுடைய அவயவஶக்தியானது - உண்டாகிறது எதுவோ, இருப்பது எதுவோ - அவற்றைக் குறிக்கும். இதன்படிப் பார்த்தால் எங்கும் காணப்படும் சட்டி, பானைகள் போன்ற அற்ப பதார்த்தங்களையும் இந்த புவந ஶப்தம் குறிக்கும். இது இந்த இடத்தில் விவக்ஷிதமன்று. ஏனென்றால், அற்ப பதார்த்தங்களை, கார்யவர்க்கங்களாக இங்கே குறிப்பிடுவதில் எந்த ஒரு ரஸமுமில்லை; ப்ரயோஜநமும் இல்லை. அற்பமான பதார்த்தங்கள் உண்டாவதற்குக் காரணமான குயவன், நெசவன் முதலாக (ப்ரஹ்மா பர்யந்தமாக) அனைவரையும் வ்யாவர்தித்து, ஸமஸ்த லோகங்களுக்கும் காரணபூதமான பரப்ரஹ்மத்தைக் குறிப்பிடுவதற்கு புவந ஶப்தத்தினுடைய அவயவ ஶக்தி உதவாது. ஆனால், புவந ஶப்தத்தினுடைய ரூடி (ஸமுதாய) ஶக்தியைக் கொண்டு பார்க்கிறபொழுது, சிறிய அற்பவஸ்துக்களைப் போல் அன்றிக்கே ஸமஸ்த லோகங்களை - மஹத்தான கார்ய வர்க்கங்களை - இந்த புவந ஶப்தம் குறிப்பிடுவதாகக் கொண்டு, அவற்றுக்குக் காரணபூதனான பரமாத்மாவை நேரடியாக இந்த ஶ்லோகத்தில் ப்ரதிபாதிப்பதற்கு வழியுண்டு. ஆக இதுவே இங்கே விவக்ஷிதம் என்றதாயிற்று.

ஸமஸ்த லோகங்களையும் - ஒன்றுவிடாமல் எல்லா லோகங்களையும் - குறிப்பதாய் *அகிலபுவந* என்னும் ஶப்த ப்ரயோகத்தைச் செய்தருளியிருக்கிறார் ஸ்வாமி எம்பெருமானார். *அகில* என்னும் ஶப்தம் (பெரும்பாலும் எல்லாம் என்று சொல்லுவதறகு இடம் கொடுக்காமல்) *ஒன்றுவிடாமல் எல்லாம்* என்ற அர்த்தத்தைக் காட்டும்.

ஸர்வதேஶத்திலேயும் ஸர்வகாலத்திலேயும் இருக்கக்கூடிய அண்ட ஜாதங்களிலுள்ள (அண்டக்கூட்டங்களிலுள்ள) சேதநாசேதநங்கள் *அகிலபுவந* என்பதனால் விவக்ஷிக்கப்படுகிறார்கள். *ஸர்வதேஶ ஸர்வகாலவர்த்தி அண்டஜாதங்கள்* என்பதனால் இங்கே விவக்ஷிக்கப்படும் கார்யவர்க்கங்களானவை யாவை என்று பார்க்க வேண்டும்.

அண்டா$_3$நாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநி ச| ஈத்$_3$ருஶாநாம் ததா$_2$ தத்ர கோடிகோடிஶதாநி ச|| (2-7-27) என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலே பராஶர மஹர்ஷி அருளிச் செய்துள்ளார். ஆயிரத்தை ஆயிரத்தால் பெருக்கி, அதைப் பத்தாயிரத்தால் பெருக்கி வரும் தொகையை, கோடியைக் கோடியால் பெருக்கி அதை நூறால் பெருக்கி வரும் தொகையுடன் பெருக்கினால் என்ன தொகை வருமோ அதைவிட அளவிட முடியாதவை அண்டஜாதங்கள். இந்த ஶ்லோகத்திலே அண்டங்கள் அநந்தங்கள் என்பதை இப்படி ஒரு பெரிய எண்ணிக்கையாகச் சொல்லிக் காட்டுகிறார் ஸ்ரீபராஶர மஹர்ஷி. இப்படிக் குறிப்பிட்ட அண்டங்கள் ஒரே காலத்தில் உள்ளவை. ஒவ்வொரு அண்டத்திலும் மேலே ஏழு லோகங்களும் கீழே ஏழு லோகங்களுமாக மொத்தம் பதிநான்கு லோகங்கள் உள்ளன. இந்தப் பதிநான்கு லோகங்களையும் சுற்றி ஓர் சுவர் உள்ளது. ஒவ்வொரு அண்டத்துக்கும் ஒரு ப்ரஹ்மா உண்டு. இதைப்போல் உள்ள அண்டங்கள்தான் கணக்கில் அடங்காதவை என்பதை நாம் அறிதல் வேண்டும். ஸ்ருஷ்டிகாலத்தில் இவ்வளவு அண்டங்கள் உள்ளன. மஹாப்ரளய காலத்தில் இந்த அண்டங்கள் அனைத்தும் அழிந்து விடுகின்றன. மஹாஸ்ருஷ்டி காலத்தில் இவையனைத்தும் மறுபடியும் உண்டாக்கப்படுகின்றன. ஆக ஸர்வதேஶத்தில் இருக்கும் அண்டங்கள் மட்டும் இங்கே *அகில* ஶப்தத்தினால் விவக்ஷிக்கப்படவில்லை; கழிந்த காலத்திலேயும் (இதுவரை எத்தனையோ மஹாப்ரளய மஹாஸ்ருஷ்டிகள் கழிந்திருக்கின்றன) வரும் காலத்திலேயும் (மேலும் எத்தனையோ மஹாப்ரளய மஹாஸ்ருஷ்டிகள் வரப்போகின்றன) உள்ள அண்டங்கள் எல்லாம் இங்கே விவக்ஷிக்கப்படுகின்றன. இவையனைத்துக்கும் காரணபூதனான பகவான் ஒருவனே. *அண்டக்குலத்துக்கு அதிபதியாகி* (திருப்பல்லாண்டு-5) என்று பெரியாழ்வாரும் அருளிச் செய்துள்ளார். இதனால் ப்ரஹ்மா ப்ரஜாபதிகளுடைய வ்யாவ்ருத்தி ஸித்திக்கிறது. ஆனால், **இந்த அர்த்தத்தைக்

காட்ட *அகில* என்கிற ஶப்த ப்ரயோகம்தான் செய்யப்பட வேண்டுமோ? *ஸர்வ* *நிகில* போன்ற ஶப்த ப்ரயோகங்களை எம்பெருமானார் செய்திருக்கலாமே! ஸ்வாமி குறிப்பாக இங்கே *அகில* ஶப்தப்ரயோகம் செய்திருப்பதற்கு அபிப்ராயம் யாது?** என்னும் கேள்வி இங்கே எழுகிறது. இதற்கு அத்யாஶ்சர்யமாக ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் விளக்கம் அநுக்ரஹித்திருக்கிறார்.

அகில ஶப்தத்துக்கு அவயவ வ்யுத்பத்தி *கிலம் நாஸ்தீதி அகிலம்* என்பதாகும். சிதறின பாகத்தை கிலம் என்பர். இது அல்லாதிருப்பது அகிலம் எனப்படும். அதாவது ஒன்றுவிடாமல் எல்லாம் என்று அர்த்தம். ஆக, கார்ய வஸ்துக்களிலே பரப்ரஹ்மத்தினுடைய ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களுக்கு விஷயமாகாதது ஒன்றுமே இல்லை என்னும் உண்மையை *அகில* ஶப்தம் வ்யதிரேகமுகத்தாலே (ஒன்றுவிடாமல் எல்லாம் என்பதாலே) காட்டுகிறது என்பதை நாம் இங்கே அறியவேண்டும்.

ஆனால் **நிகிலபுவந* என்று சொன்னாலும் கூட இந்த அர்த்தம் கிடைத்து விடுமே! ஏன் எம்பெருமானார் *நிகிலபுவந* என்று ஆரம்பிக்கவில்லை?** என்று ஆக்ஷேபம் எழுகிறது. அகார உபக்ரமத்தில் க்ரந்தம் அமைய வேணும் - க்ரந்தத்தை *அகில* என்று அகாரத்தில் ஆரம்பிக்க வேணும் என்று எம்பெருமானாருக்குத் திருவுள்ளமாகத் தெரிகிறது. க்ரந்தத்தை அகாரத்தில் ஆரம்பிப்பதில் என்ன விஶேஷமென்றால் - அகாரம் பகவத்வாசகமாய் இருப்பதால் பரம மங்களகரமானது.

அத$_2$ ஶப்$_4$தா$_3$நுஶாஸநம் என்று மஹாபாஷ்யம் ஆரம்பம். இங்கு *மங்கள ஶ்லோகம் என்று தனியாக அருளிச் செய்யப்படாமல் க்ரந்தம் ஆரம்பிக்கப்பட்டு விட்டதே!* என்று ஆக்ஷேபம் வர *அத இதி ப$_4$க$_3$வதோ நாராயணஸ்ய ப்ரத$_2$மாபி$_4$தா$_4$நம் அபி$_4$த$_3$த$_4$தா கிம் நாம மங்க$_3$ளம் ந க்ருதம்?* என்று ஸமாதாநம் அருளிச் செய்யப்பட்டுள்ளது. இஷ்டதேவதா உபாஸாநம்தானே மங்களாசரணம்! இங்கு அத$_2$என்று அகாரத்தில் க்ரந்தாரம்பம் அமைந்திருப்பதால்- அகாரம் பகவான் நாராயணனுடைய முதல் திருநாமம் - என்பதால் (பகவத்வாசகமான அகாரத்தில் க்ரந்தம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதனாலே) க்ரந்தகர்த்தாவினால் எந்த மங்களம்தான்

அநுஷ்டிக்கப்படவில்லை? அவர் எல்லா மங்களங்களையும் அநுஷ்டித்த வராகிறார் - என்று காட்டப்பட்டுள்ளது.

இங்கே மேலும் ஓர் ஆக்ஷேபம் எழுகிறது. அதாவது, *அத$_2$ ஶப்$_3$தா$_3$நுஶாஸநம்* என்பதில் *அத$_2$* என்பது ஒரு பதம். இதிலிருந்து அகாரத்தைத் தனியாகப் பிரிக்க முடியாது. அத$_2$ என்றால் *ஆரம்ப:* என்று அர்த்தம். ஆரம்பார்த்த$_2$மான *அத$_2$* ஶப்தத்திலிருந்து *அ* என்னும் அக்ஷரத்தைப் பிரித்து அதற்கு *பகவத்வாசகம்* என்று பொருள் கொள்ள முடியாது. ஆக இங்கு அகாரமானது பகவத்வாசகம் என்னும் அர்த்தத்தில் வரவில்லை; வந்தாலன்றோ அது மங்களகரமான உபக்ரமம் என்ற ரீதியில் அமையும்; இங்கு *அத$_2$* ஶப்தப்ரயோகத்தை அகார உபக்ரமமாகச் சொல்வது எப்படிப் பொருந்தும்? என்று ஆக்ஷேபம். இதற்கு ஸமாதாநம் என்னவென்றால் - அகாரம் பகவத் வாசகம் என்னும் அர்த்தத்தில் இங்கு க்ரந்தகர்த்தா அகாரத்தை ப்ரயோகிக்காமல் போனாலும் கூட, பகவானைக் குறிக்கக்கூடிய ஶக்தி அகாரத்துக்கு இருப்பதை யாராலும் இல்லை செய்துவிட முடியாது. இந்த ஶக்தியானது அகாரமாகிற இந்த அக்ஷரத்துக்கு எப்பொழுதும் இருப்பதனால் அகார உபக்ரமத்தில் பதங்கள் எப்படி அமைந்து எந்த அர்த்தத்தை உணர்த்தினாலும், அகாரம் போலே அகார உபக்ரமும் மங்களகரமானது என்ற நிலைக்கு பங்கம் வந்துவிடாது. ஆக இங்கு *அத$_2$* ஶப்தம் பகவானைக் குறிக்கிறது என்று யாரும் சொல்லவில்லை. ஆனால் அகாரத்துக்கு பகவத்வாசகத்வம் என்பது எப்பொழுதும் உள்ளதொரு தன்மையாகையாலே அகார உபக்ரமம் இங்கு மங்களகரமாகவே அமைகிறது உண்மை நிலை.

அதைப் போலவே இங்கும் கொள்ள வேண்டும். அதாவது, *அகில* என்னும் ஶப்தம் *ஒன்றுவிடாமல் எல்லாம்* என்னும் அர்த்தத்திலேயே வந்துள்ள தாயினும் இந்த பதத்தினுடைய முதல் அக்ஷரமான அகாரத்துக்கு பகவத் வாசகத்வமாகிற தன்மை இருப்பதனாலே பரம மங்களகரமான இந்த அக்ஷரத்தில் க்ரந்தத்தை உபக்ரமிக்க வேண்டும் என்று எம்பெருமானாருக்குத் திருவுள்ளம் என்பதை நாம் அறியலாம்.

இங்கு மேலும் ஓர் ஆக்ஷேபம் வருகிறது. **கிலம் நாஸ்தி இதி அகிலம்* என்றிருப்பதால் நாஸ்தி என்று முதலிலேயே நிஷேதத்துக்கு

வாசகமான *ந* என்பது ப்ரயோகிக்கப்பட்டுள்ளதே! இது அமங்களமாக அமைய வில்லையா?** என்பது இந்த ஆக்ஷேபம். இங்கே நாம் அறிய வேண்டிய உண்மை என்னவென்றால் -நிஷேதிக்கப்படுகிற வஸ்து எதுவோ அதையிட்டு *நஞ்* க4டிதமான ஶப்தத்துக்கு ஶுபத்வமோ அஶுபத்வமோ வந்துவிடாது. நிஷேதிக்கப்படுகிற வஸ்து ஶுபமாக இருக்குமானால், *நஞ்* சுடன் சேர்ந்த பதத்துக்கு அஶுபத்வம் வந்துவிடும். ஆனால் இங்கு அப்படியில்லை. இங்கு சிதறிப்போகிற தன்மையான கிலத்வம் நிஷேதிக்கப்படுவதால் *அகில* ஶப்தத்துக்கு ஶுபத்வமே வந்து சேருகிறது. *கிலம்* என்னும் பதம் (அர்த்தத்தில்) வைகல்யத்தை (குறையை)க் காட்டுகிறது. அதை நிஷேதிப்பதின் மூலமாக அகில ஶப்தமானது அர்த்தபௌஷ்கல்ய பரமாக ஆகிறது என்பதுதான் உண்மை.

ஜந்ம என்பது (உத்பத்தி) என்னும் ஸ்ருஷ்டியைக் குறிக்கும். இது நித்யம், நைமித்திகம், ப்ராக்ருதம் என்று மூன்று விதமாயுள்ளது. நமக்கு தினந்தோறும் உண்டாகும் பிறப்பு நித்யஸ்ருஷ்டி எனப்படும். மஹாப்ரளய காலம் முடிந்து மஹாஸ்ருஷ்டியை பகவான் செய்தருள்வது ப்ராக்ருத ஸ்ருஷ்டி எனப்படும். ப்ராக்ருத ஸ்ருஷ்டிக்குப் பிறகு ப்ரஹ்மாவினுடைய ஒவ்வொரு பகற்காலத் தொடக்கத்திலும் பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் எனப்படும் மூன்று லோகங்களும் உண்டாக்கப்படும். இது நைமித்திக ஸ்ருஷ்டி எனப்படும். இப்படி மூன்று விதமாய் இருக்கும் ஸ்ருஷ்டிக்கும் பகவான்தான் காரணம்.

ஸ்தேம - இது ஸ்திதி, ரக்ஷணம் எனப்படும். ஸாதாரணமாக ரக்ஷிக்கப்படும் தன்மை ஸ்திதி எனப்படும். ஆனால் ப்ரஹ்மத்துக்கு லீலை என்று சொல்லும் பொழுது *ஸ்தேம* பதத்துக்கு ப்ரஹ்மத்தினுடைய ரக்ஷண ஸ்வபாவத்தை அர்த்தமாகக் கொள்ள வேணும். பகவான் செய்தருளும் ரக்ஷணம்தான் *ஸ்தேம* பதத்தாலே லக்ஷணையாகக் கருதப்படுகிறது. ப்ரஹ்மத்தினுடைய ரக்ஷணம் எப்படி அமைகிறது என்று பார்க்க வேணும். *ஜந்ம* என்று சொல்லும் பொழுது நித்ய, நைமித்திக, ப்ராக்ருத ஸ்ருஷ்டி என்று ஸ்ருஷ்டியை மூன்று விதமாகச் சொல்லுவதைப் போல பகவான் செய்தருளும் ரக்ஷணமும் மூன்று விதமாய் அமைந்துள்ளது. மஹாஸ்ருஷ்டி காலங்களில் பகவான் ஸமஷ்டி தத்வங்களை ஸ்ருஷ்டிக்கிறான். பிறகு அந்தர்யாமியாய் இருந்து கொண்டு ஸமஷ்டி தத்வங்களை ரக்ஷித்துக்

கொடுக்கிறான். இவற்றினுடைய ஸ்திதிக்கு அந்தர்யாமியாக இருந்துகொண்டு காரணமாகிறான். ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், பஞ்ச தந்மாத்ரைகள், பஞ்ச பூதங்கள், பதினோரு இந்த்ரியங்கள் வரை ஸமஷ்டி தத்வங்கள். இவைகளை ஸ்ருஷ்டித்த பிறகு அண்டத்தை உண்டாக்கி அண்டத்துக்குள்ளே விஷ்ணுவாக அவதரிக்கிறான். இப்படி விஷ்ணுவாக இருந்து பல பதார்த்தங்களை ரக்ஷித்துக்கொண்டு வருகிறான். இது வ்யஷ்டி தத்வங்களுடைய ரக்ஷணம். அந்தர்யாமியாக இருந்துகொண்டு ரக்ஷிப்பது என்பதைப் பொதுவாக எல்லா விஷயத்திலுமே கொள்ளலாம். அடுத்தபடியாக லோகபாலர்கள். கிழக்கு திசைக்கு இந்த்ரன், தெற்கு திசைக்கு யமன், மேற்கு திசைக்கு வருணன், வடக்கு திசைக்கு குபேரன் என்று நான்கு திக்குக்களுக்கும் நான்கு லோகபாலர்கள். லோகத்தை ரக்ஷிப்பவர்கள் லோகபாலர்கள். இவர்கள் மூலமாக லோகத்தை ரக்ஷிப்பவன் பகவானே. இதுவும் வ்யஷ்டி தத்வங்களுடைய ரக்ஷணம். இவையெல்லாம் நைமித்திக ரக்ஷணத்தில் அடங்குபவை. நைமித்திக ஸ்ருஷ்டிக்குப் பின் நைமித்திக ரக்ஷணம். நித்ய ஜந்மாவாலே உண்டாகிற பதார்த்தங்களையெல்லாம் மந்வாதிகள், அரசர்கள், மாதா, பிதா, பந்துக்கள், மித்ரர்கள் மூலமாக ரக்ஷிக்கிறான். ஆக இப்படி ப்ராக்ருத, நைமித்திக, நித்ய ஸ்திதி என்று பகவான் செய்தருளும் ரக்ஷணமும் மூன்று விதமாய் அமைந்துள்ளது.

பங்க என்றால் லயம், அழிவு என்று அர்த்தம். இதுவும் நித்யம், நைமித்திகம், ப்ராக்ருதம் என்று மூன்று விதம். நாள்தோறும் தூக்க ஸமயத்தில் ஜீவன் எம்பெருமானிடம் லயிப்பது நித்ய ப்ரளயம். ப்ரஹ்மாவினுடைய இரவை நிமித்தமாகக் கொண்டு ஏற்படுவது நைமித்திக ப்ரளயம். நைமித்திக ஸ்ருஷ்டி காலத்தில் ப்ரஹ்மாவினால் உண்டாக்கப்பட்ட பூலோகம், புவர்லோகம், ஸுவர்லோகம் என்னும் மூன்று லோகங்களும் நைமித்திக ப்ரளயத்தில் அழிந்துவிடும்.

ஆறு மாதங்கள் கொண்டது ஒரு அயநம் எனப்படும். உத்தராயணம், தக்ஷிணாயநம் என்று அயநம் இரண்டு வகைப்படும். தக்ஷிணாயநம் என்பது தேவர்களுக்கு இரவாகவும், உத்தராயணம் தேவர்களுக்குப் பகலாகவும் கருதப்படுகிறது. ஆக மநுஷ்ய மாதத்தால் ஆன ஒரு வருஷம் தேவர்களுக்கு ஒரு நாள் ஆகும். இப்படி 360 நாட்கள் கொண்டது ஒரு தேவ வருஷம் ஆகும். இப்படி 12000 தேவ வருஷங்கள் கொண்டது ஒரு சதுர்யுகம். இப்படிப்பட்ட

ஆயிரம் சதுர்யுகங்கள் ப்ரஹ்மாவுக்கு ஒரு பகல் ஆகும். மேலும் ஆயிரம் சதுர்யுகங்கள் ப்ரஹ்மாவுக்கு ஓர் இரவு ஆகும். இப்படி நூறு ஆண்டுகள் கொண்டது ப்ரஹ்மாவுடைய ஆயுட்காலமாகும். இதற்குப் பரம் என்று பெயர். ப்ரஹ்மாவுடைய ஆயுட்கால முடிவில் மஹாப்ரளயமான ப்ராக்ருத லயம் ஏற்படும். ப்ரபஞ்சம் முழுவதும் ப்ரக்ருதியில் லயித்து அந்த ப்ரக்ருதியானது பரமாத்மாவினிடத்தில் ஏகீபாவத்துடன் ஒடுங்கி விடுவதால் இந்த மஹாப்ரளயம் ப்ராக்ருத லயம் எனப்படுகிறது. மஹாப்ரளய காலத்தில் ஜீவாத்மாக்களுக்கு ஶரீரம் அழிந்து விடுகிறது. மறுபடியும் ஸ்ருஷ்டி காலத்தில்தான் பகவான் களேபரத்தை (கர்ம நிபந்தநமாக)க் கொடுக்கிறான்.

ஒரு ஜீவனுக்கு கர்ம நிபந்தநமாக ஏற்படும் ப்ராக்ருத ஶரீர ஸம்பந்தம் அழிவது மோக்ஷ காலத்திலே. ஆக இதுவும் லயம்தான். ஆனால் இத்தகைய லயம் *அகிலபுவந ஜந்மஸ்தேமபங்காதிலீலே* என்னுமிடத்தில் பங்க ஶப்தத்தினாலோ அல்லது ஆதி ஶப்தத்தினாலோ நிர்தேஶிக்கப் படவில்லை. ஏனென்றால் மோக்ஷம் என்பது பரம புருஷார்த்தம். இந்த ஶாரீரக மீமாம்ஸா ஶாஸ்த்ரத்துக்கே மோக்ஷம் என்பது பரம ப்ரயோஜநமாகக் கருதப்படுகிறது. அதனால் இதை *பங்க* ஶப்தத்திலேயோ அல்லது *ஆதி* ஶப்தத்திலேயோ அந்தர்பூதமாக - அடங்கியதாகக் - கொள்ள முடியாது. ஆதி ஶப்தமானது பொதுவாக இருப்பது. மோக்ஷம் என்பதை அது விஶேஷமாகவோ, ஸ்பஷ்டமாகவோ (தெளிவாகவோ) காட்டாது. மோக்ஷம் என்பது பரமப்ரயோஜநம் என்பதால் இது தனித்து ஸ்பஷ்டமாகக் காட்டப்பட வேண்டும்.

இது நம்முடைய பூர்வாசார்யர்களால் தனித்தே ஸ்பஷ்டமாக நிர்தேஶிக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காணலாம். *ஜகதுத்பவஸ்திதி ப்ரணாஶஸம்ஸார விமோசநாதய:* (ஸ்தோத்ர ரத்நம் - 20) என்று ஸ்ரீஆளவந்தாருடைய திருவாக்கு. இங்கே *ஸம்ஸார விமோசநம்* என்று மோக்ஷத்தைத் தனித்து (ப்ரஹ்ம கார்யமாக) ஸ்பஷ்டமாக அருளிச் செய்திருக்கிறார். ஸித்தித்ரயத்திலும் *ஜகஜ்ஜந்மஸ்திதித்வம்ஸ மஹாநந்தைகஹேதவ:* என்னும் ஸ்ரீஸூக்தியில் *மஹாநந்த* ஶப்தத்தால் மோக்ஷத்தை நிர்தேஶித்துள்ளார். ஸ்வாமி எம்பெருமானாரும் வேதார்த்த ஸங்க்ரஹத்தில் *உத்பவஸ்திதிப்ரளய ஸம்ஸார நிவர்த்தநைக ஹேதுபூத:* என்றும், ஸ்ரீபாஷ்யத்தில் ஸர்வத்ரப்ரஸித்$_3$த்$_4$யதி$_4$கரணத்தின்(1-2-1)

அவதாரிகையில் *நிகிலஜகதுதயவிபவமஹாநந்தைக காரணம்* என்றும் மோக்ஷத்தைத் தனியாகவே குறிப்பிடுகிறார்.

ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தைப் போலவே மோக்ஷ காரணத்வமும் ப்ரஹ்ம லக்ஷணமாகும். நம்மாழ்வார் *உயர்வற உயர்நலம் உடையவன்* என்று ப்ரஹ்ம ஶப்தத்துக்கு ப்ரவ்ருத்தி நிமித்தமான நிரதிஶய ப்ருஹத்வத்தை அருளிச்செய்த உடனேயே *மயர்வற மதிநலம் அருளினன்* என்று ப்ரஹ்ம லக்ஷணமான மோக்ஷ காரணத்வத்தை அருளிச்செய்திருக்கிறார். *மயர்வற மதிநலம் அருளினன்* - அதாவது, *அவித்யா நிவ்ருத்திரேவ ஹி மோக்ஷ: என்னும்படியான (அஜ்ஞாத நிவ்ருத்தியாகிற) ஸம்ஸார விமோசந (மோக்ஷ) காரணத்வத்தைக் கொண்டே (ப்ரஹ்ம லக்ஷணமாகிற ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தை ஸ்தாபிக்கும்) ஜந்மாத்யதிகரணத்தினுடைய ப்ரமேயத்தை நம்மாழ்வார் ஶூசிப்பித்தருளினார் என்பதை நம் பெரியோர்கள் காட்டியிருக்கின்றனர். *யத$_3$யபி$_4$ ஸம்விஶந்தி* என்று வேதாந்தமும் ஜகத்ப்ரளய காரணத்வத்தையும் ஸம்ஸார விமோசந காரணத்வத்தையும் ஸ்பஷ்டமாகச் சொல்லுகிறது. இதிலிருந்து மோக்ஷ காரணத்வத்தை பங்க ஶப்தத்திலோ அல்லது ஆதி ஶப்தத்திலோ அந்தர்பாவம் பண்ணக்கூடாது என்பது நமதாசார்யர்களுடைய திருவுள்ளமாகத் தெரிகிறது.

விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே என்னும் இரண்டாவது பாதத்தில் குறிப்பிடப்படும் ரக்ஷணம்தான் மோக்ஷப்ரதாநம். இந்த ரக்ஷணம் ப்ரத்யேகமாக எம்பெருமானுடைய மோக்ஷப்ரதத்வத்தையே காட்டுகிறது. ஸ்வர்காதிகளான ஸாம்ஸாரிக பலப்ரதத்வம் என்பது முதல் பாதத்திலுள்ள *ஸ்தேம* பதத்தினாலேயே சொல்லப்பட்டு விடுவதால் இரண்டாவது பாதத்திலே *வணங்கினவர்களை ரக்ஷிப்பவன்* என்று சொல்லுகிற இடத்திலே ஸாம்ஸாரிக பலன்களைக் கொடுத்தல் என்கிற ரக்ஷணமானது குறிப்பிடப்பட வேண்டியது இல்லை. இந்த ஶாரீரக ஶாஸ்த்ரத்திலே பரமப்ரயோஜநமாகவும் அஸாதாரணமாகவும் சொல்லப்படுகிற மோக்ஷத்தைப் பற்றித்தான் தனித்து முக்யத்வம் கொடுத்து வார்த்தை சொல்ல வேண்டியது அவசியம்.

மோக்ஷப்ரதத்வமானது தனித்து இரண்டாவது பாதத்தில் குறிப்பிடப் படுகிறது என்றால் முதல் பாதத்திலுள்ள ஆதி ஶப்தத்தினால் நிர்தேஶிக்கப் படுவதுதான் என்ன? என்னும் கேள்வி அடுத்தபடியாக எழுகிறது.

ஜகஜ்ஜந்மஸ்தேமபங்க வ்யாபாரங்களுக்கு உபயோகப்படக்கூடிய அந்த: ப்ரவேஶ நியமநம் ஆதி ஶப்தத்தினால் சொல்லப்படுகிறது. இதை எம்பெருமானாரே ஸ்ரீபாஷ்யத்தில் தாம் அருளிச்செய்துள்ள *ஜகதுத்பத்தி ஸ்திதி ஸம்ஹார அந்த: ப்ரவேஶ நியமநாதி லீலம்* என்னும் ஸ்ரீஸூக்தி மூலம் தெளிவுபடுத்தி உள்ளார் என்று காட்டுகிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். பரமாத்மா அனைத்தினுள்ளும் நுழைந்து நியமிப்பவன் என்று காட்டும் *அந்தர் ப$_3$ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி$_2$த:(தை - நாரா), *அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம்* (தை - ஆரண்யகம் 3-11), *அஹமாத்மா* (கீதை 10-20) என்னும் ப்ரமாணங்கள் இங்கே அநுஸந்தேயங்கள்.

இங்கே ஒரு ஆக்ஷேபம் எழுகிறது. ஜகதுத்பத்தி ஏற்பட வேண்டு மென்றால் அதற்கு பகவான் உள்புகுந்து நியமிக்க வேண்டும். ஜகத் ரக்ஷணத்துக்காகவும் அந்த: ப்ரவேஶ நியமநாதிகள் அவஶ்யம். ஸம்ஹாரத்துக்கும் அந்த: ப்ரவேஶ நியமநாதிகள் வேண்டும். இப்படி ஜகஜ்ஜந்மஸ்தேமபங்க வ்யாபாரங்கள் மூன்றுக்குமே அந்த: ப்ரவேஶ நியமநாதிகள் அவஶ்யமாய் இருப்பதனால் *அகிலபுவநஸ்தேமபங்க வ்யாபாரங்களை லீலையாக உடையவன்* என்று சொல்வதனாலேயே அந்த: ப்ரவேஶ நியமநாதிகள் அர்த்த பலத்தால் ஸித்தித்து விடுமே! இப்படியிருக்க இவற்றைத் தனித்து ஆதி ஶப்தத்தினால் சொல்ல வேண்டிய அவசியம் என்ன? என்பதுதான் இந்த ஆக்ஷேபம். இப்படி ஜகஜ் ஜந்மஸ்தேம பங்கங்களில் அந்த: ப்ரவேஶ நியமநத்தை அர்த்தாத் உள்ளடக்கிச் சொல்லுவது என்பது அயுக்தம் என்பதற்கும், இவைகளை இங்கே தனித்து *ஆதி* ஶப்தத்தால் எம்பெருமானார் குறிப்பிடுவதற்கும் மூன்று காரணங்களைக் காட்டியருளுகிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர்.

1. அத்யாஸ பரிணாம பக்ஷங்கள் என்று இரண்டு மதங்கள். அத்வைதிகளுடையது அத்யாஸ பக்ஷம். யாதவப்ரகாஶனுடைய மதம் பரிணாம பக்ஷம். அத்யாஸம் என்றால் ப்ரமம். *இந்த உலகம் உண்டாகிறது என்பதன்று. ப்ரபஞ்சம் என்பது ப்ரஹ்மத்தினிடத்தில் அறியாமையினாலே கல்பிக்கப்பட்ட ஒரு பொய்த்தோற்றம். ஒரு கிளிஞ்சல் எப்படி அறியாமையினால் வெள்ளி என்கிற ஒரு பொய்த்தோற்றத்தை அளிக்கிறதோ, அப்படியே ப்ரஹ்ம ஸ்வரூபத்தை அறியாத காரணத்தால் அது ப்ரபஞ்சம்

என்னும் ப்ரமத்தை - ஒரு பொய்த்தோற்றத்தை உண்டாக்குகிறது* என்பர் அத்வைதிகள். ஆக இவர்கள் பக்ஷத்தில் அந்த: ப்ரவேஶ நியமநாதிகளுக்கு ப்ரஸக்தியே இல்லை. யாதவ ப்ரகாஶனுடைய மதத்தில் ப்ரஹ்மமே சேதநாசேதநங்களாகப் பரிணமிக்கிறது என்று கொள்வதால் இங்கும் ப்ரஹ்மத்துக்கு அந்த: ப்ரவேஶ நியமநாதிகளைக் கொள்ளமுடியாது. ஆக இந்த இரண்டு மதங்களையும் வ்யாவர்த்திப்பதற்காக எம்பெருமானாருக்கு, தம் மதாநுஸாரேண இங்கே இவற்றை ஆதி ஶப்தத்தினால் தனித்துச் சொல்ல வேண்டியது அவஶ்யமாகிறது

2. இங்கே *ஆதி* ஶப்தத்தாலே அந்த: ப்ரவேஶ நியமநாதிகளைத் தனித்துக் குறிப்பிட இடமிருக்க, அப்படி ஶாப்தமாகக் குறிப்பிடாமல் ஜகஜ்ஜந்மஸ்தேமபங்க ஶப்தங்களில் அர்த்தப$_3$லத்தால் இவற்றை உள்ளடக்கி ஶூசகமாகக் காட்டுவது என்பது உசிதம் அன்று. ஶாப்தமாக (ஶப்தத்தாலே) விளக்கக் கூடியதாக இருக்கிற ஒரு விஷயத்துக்கு ஶாப்தமாக அல்லாமல் அர்த்தத்தினால் ஸித்தியைக் கல்பிப்பது என்பது யுக்தமன்று.

3. மேலே அந்தர்யாம்யதிகரண ஸ்ரீபாஷ்யத்தில் அந்த: ப்ரவேஶ நியமநாதிகளைப் பற்றி விஸ்தரமாக அருளிச் செய்யப்போகிறார் எம்பெருமானார். அங்கு விஸ்தரமாகக் காட்டப்பட்டுள்ள அர்த்தங்களை ஶாஸ்த்ரார்த்த ஸங்க்ஷேபத்தைக் காட்டுமாறு அமைந்துள்ள மங்கள ஶ்லோகத்தில் தனித்துக் காட்டுவது என்பது பொருத்தமே. ஆக இப்படி மூன்று காரணங்களாலே *ஆதி* ஶப்தார்த்தமாக அந்த: ப்ரவேஶ நியமநாதிகளைத் தனித்துக் குறிப்பிடுகிறார் எம்பெருமானார் என்று காட்டியருளுகிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர்.

லீலே - *லீலா* ஶப்தத்தினால் தெரிவிக்கப்படுவது என்ன? பகவான் ஜகஜ் ஜந்மஸ்தேமபங்காதி வ்யாபாரங்களை - பரிபூர்ணனாய், எவராலும் நியமிக்கப்படாதவனாய், அநந்ய ப்ரயோஜநமாய், கேவல லீலையாகக் - கொண்டிருப்பவன் என்னும் அர்த்தத்தைத் தெரிவிக்கிறது இந்த *லீலா* ஶப்தம் என்று வ்யாக்யாநம்.

அப்ரமேயோऽநியோஜ்யஶ்ச யத்ர காமககோ வஶீ | மோததே பகவாந் பூதைர்பால: க்ரீடநகைரிவ ॥ என்னும் மஹாபாரத ஶ்லோகம் இதற்கு

ப்ரமாணம். எம்பெருமான் அப்ரமேயனாய் - பரிபூர்ணனாய் - இருக்கிறான். பிறரால் நியமிக்கத்தகாதவனாக இருக்கும் தன்மை அநியோஜ்யத்வம் எனப்படும். தன் விருப்பப்படி செய்யும் தடையற்ற ப்ரவ்ருத்திகளை உடையவனாய் இருக்கிறான் பகவான். ஸ்வாதீநமான லீலோபகரணங்களைக் கொண்டிருப்பவன் - அதாவது லோகங்கள் அனைத்தையும் லீலோபகரணங்களாகத் தன் வஶத்தில் கொண்டிருப்பவன் பகவான். *விஶ்வம் வஶே யஸ்ய ஸ: வஶீ * என்கிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். இந்த ஜகத்து எவனுக்கு வஶப்பட்டிருக்கிறதோ அவன் *வஶீ * எனப்படுகிறான். *இந்த்ரிய பராதீந சேஷ்டா வ்யாவ்ருத்தர்த்தம்தான் வஶீ ஶப்தார்த்தம் * என்கிறார் வ்யாக்யாதா. அதாவது இந்த்ரியங்களுக்கு வஶப்படாமல், ஸ்வாதீநமான வ்யாபார விஶேஷங்களை உடையவன். ஒரு சிறுவன் மரப்பொம்மைகளை வைத்துக்கொண்டு விளையாடுவதைப் போலத்தான் இவனும் இத்தகைய வ்யாபாரங்களை அநந்ய ப்ரயோஜநமாய், லீலையாகவே கொண்டிருப்பவன். பகவானுடைய மஹிமையினுடைய விபுலதரத்வத்தையே இந்த ஶ்லோகத்திலுள்ள *க்ரீடநகை: * என்கிற பதம் காட்டுகிறது. அதாவது கார்யவர்க்கங்களான இத்தனை பூதங்களும் எம்பெருமானுக்கு மரப்பாவையைப் போல் என்றால் அவன் எவ்வளவு மஹிமை வாய்ந்தவனாக இருக்க வேண்டும் !

ஆக, ஜகத்தினுடைய உத்பத்தியும் பகவானுக்கு லீலை; ஜகத்தினுடைய ஸ்திதியும் பகவானுக்கு லீலை; ஜகத்தினுடைய பங்கமும் பகவானுக்கு லீலை -ஜகஜ்ஜந்மஸ்தேமபங்க வ்யாபாரங்களுடைய லீலா ரஸம் அநுபவிப்பவன் பகவான் - என்பது முதல் பாதத்தினுடைய அர்த்தமாகத் தேறுகிறது. இவற்றுள் ஜகத்தினுடைய உத்பத்தி, ஸ்திதி வ்யாபாரங்கள் பகவானைப் பற்றியல்லாமல் ஜகத்தைப் பற்றியதாக இருப்பதாலே இவை எப்படி அவனுக்கு லீலையாக முடியும் என்று ஶங்கித்துக் கொண்டு அதற்குண்டான ஸமாதாநத்தை அத்யாஶ்சர்யமாக அருளிச் செய்திருக்கிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். இவ்விஷயம் பற்றிச் சிறிது விவரிக்கிறேன்.

ஆக்ஷேபம் :- லீலை என்பது என்ன? லீலை என்பது நியந்தாவாய் இருப்பவனுடைய வ்யாபாரம். நியமிக்கிறவன் ப்ரயோஜகன். ப்ரயோஜக வ்யாபாரம் லீலை. ப்ரயோஜகனுடைய செயல்தான் லீலை.

நியமிக்கப்படும் பொருள்களிடத்தில் இருக்கும் வ்யாபாரம் ப்ரயோஜ்ய வ்யாபாரம். ஏவப்படுபவன் - ஏவலைச் செய்யும் கிங்கரன் - நியமிக்கப்படுபவன் ப்ரயோஜ்யன் எனப்படுகிறான். இவனிடத்திலே இருக்கும் வ்யாபாரம் ப்ரயோஜ்ய வ்யாபாரம்.

இதன்படிப் பார்த்தால், ஜகத்தினுடைய பங்கமாவது (காரணபூதனான ப்ரஹ்மத்தினிடத்தில் கார்யவர்க்கங்கள் அதிஸூக்ஷ்மமான ஸ்வரூபத்துடன் ஒடுங்குதல் என்னும் நிலை) பகவானிடத்தில் லயம் என்று பார்க்கப்படுவதால் இந்த வ்யாபாரத்தை ப்ரயோஜக வ்யாபாரமாகவும், பகவானை ப்ரயோஜகனாகவும் சொல்லக் குறையில்லை. இக் காரணத்தினாலே பங்கமாகிற வ்யாபாரத்தை பகவானுக்கு லீலையாகக் கொள்ள முடியும்.

ஆனால் ஜகத்தினுடைய உத்பத்தி ஸ்திதி வ்யாபாரங்கள் பகவானால் ஏவப்படுகிற ஜகத்தைப் பற்றியவையாகையாலே இவைகள் ப்ரயோஜ்ய வ்யாபாரங்கள். ப்ரயோஜக வ்யாபாரங்களாக இருந்தாலன்றோ இவைகள் பகவானுக்கு லீலையாக முடியும்! ப்ரயோஜ்ய வ்யாபாரங்களைப் பகவானுக்கு எப்படி லீலையாகச் சொல்ல முடியும்?

ஸமாதாநம்:- *பஹுஸ்யாம் ப்ரஜாயேய* என்ற சாந்தோக்ய உபநிஷத் வாக்யம் *நான் பலவாக ஆகக்கடவேன்* என்னும் எம்பெருமானுடைய ஸ்ருஷ்டி ஸங்கல்பத்தைத் தெரிவிக்கிறது. பகவான் முதலில் *நான் பலவாக (வ்யஷ்டி தத்வங்களாக) ஆகக்கடவேன்* என்றும் பிறகு *நான் பலவாக (ஸமஷ்டி தத்வங்களாக ஆகக்கடவேன்* என்றும் ஸங்கல்பித்துக் கொள்கிறான். ஸங்கல்ப காலத்தில் ஸங்கல்பம் இப்படி அமைந்தாலும் ஸ்ருஷ்டி காலத்தில் முதலில் ப்ரக்ருதி, மஹத், அஹங்காரம், பஞ்ச தந்மாத்ரைகள், பஞ்ச பூதங்கள், பதினோரு இந்த்ரியங்கள் என்று ஸமஷ்டி தத்வங்களை முதலில் உண்டாக்கிப் பிறகு வ்யஷ்டி தத்வங்களை உண்டாக்குகிறான். ஸமஷ்டி தத்வங்கள் உண்டான பிறகே வ்யஷ்டி தத்வங்கள் உண்டாக முடியும். ஆக இவனே பலவாக (சேதநா சேதநங்களாக) ஆகிறான் என்பதால் ஜகத்துக்கு உபாதாந காரணமாக இவனே ஆகிறான் என்னும் உண்மையை இந்த உபநிஷத் வாக்யம் நமக்குக் காட்டிக் கொடுக்கிறது. ஜகத் உத்பத்திக்குப் பிறகு எந்த நிலை ஏற்படுமோ அந்த நிலை பகவானுக்கேதான் இருக்கிறதாக ஆகும் என்பதால் ஜகஜ்ஜந்மஸ்திதிகள்

பகவானுடன் சேர்ந்த வ்யாபாரமாகப் பார்க்கப்படுகின்றன. இதனால் ப்ரயோஜகத்வமும் இவனுக்கே ஸித்தித்து விடுகிறது. இப்படி ப்ரயோஜக வ்யாபாரமும் பகவானிடத்தில் இருப்பதால் இவைகளையும் இவனுக்கு லீலையாகக் கொள்ளக் குறையில்லை. எந்த வஸ்து பூர்வாவஸ்தை உத்தராவஸ்தைகளை உடையதாகக் காணப்படுகிறதோ அதுதான் உபாதாந காரணம்.இங்கே சேதநாசேதநங்களாக பகவானே ஆகிறதாலே அவனே உபாதாந காரணம் என்கிற அர்த்தம் ஸித்திக்கிறது. ஆக ஜகஜ்ஜந்மஸ்தேம வ்யாபாரங்களினுடைய லீலாத்வம் பகவானுக்கே என்னும் உண்மை லீலா ஶப்தத்தினால் போதிக்கப்படுகிறது. பகவானுடைய உபாதாந காரணத்வம் அர்த்தத்தினால் ஸித்திக்கிறது. லீலாரஸம் என்பது ஜ்ஞாநத்தை உடையவனுக்கு ஏற்படக் கூடியதாகையாலே, அர்த்தப$_3$லத்தால் எம்பெருமானுடைய நிமித்த காரணத்வமும் ப$_2$லிக்கிறது என்கிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர்.

ஶாரீரக மீமாம்ஸா ஶாஸ்த்ரத்தினுடைய இரண்டாவது அத்யாயத்துக்கு *அவிரோதாத்யாயம்* என்று பெயர். இந்த அத்யாயம் முழுவதுமே விரோதபரிஹாரபரம். அதாவது முதல் அத்யாயத்திலே சொல்லப்பட்டுள்ள அர்த்தத்தை (அதன் மேல் எழும் விரோத ஶங்கைகளைப் பரிஹரிப்பதன் மூலம்) ஸ்திரீகரணம் பண்ணுவது இரண்டாவது அத்யாயம். முதல் அத்யாயத்திலே ப்ரஹ்மத்துக்குச் சொல்லப்பட்டுள்ள ஜகஜ்ஜந்மாதி காரணத்வமும், ஜகத்துக்குச் சொல்லப்பட்டுள்ள ப்ரஹ்மகார்யத்வமும் இவ்வத்யாயத்தில் ஸ்திரீகரணம் செய்யப்படுகின்றன. அதாவது, இந்த அர்த்தங்களின் மேல் எழும் ஆக்ஷேபங்களும், விரோத ஶங்கைகளும் பரிஹரிக்கப்படுகின்றன.

இந்த அத்யாயத்திலே ப்ரயோஜநவத்வாதிகரணம் (2-1-10) என்று ஒரு அதிகரணம். இவ்வதிகரணத்திலே பகவான் அவாப்தஸமஸ்தகாமனாய் (பெற வேண்டிய எல்லாப் பயன்களையும் பெற்று) இருப்பவனாகையாலே, ஜகத் ஸ்ருஷ்டி முதலான வ்யாபாரங்களினால் அவன் பெற வேண்டிய பயன் ஏதும் இல்லை. ஜகஜ்ஜந்மாதி வ்யாபாரங்களுக்கு ஒரு பயன் இருக்க வேண்டுமாகையாலும், இவன் எல்லாப் பயன்களையும் ஏற்கனவே பெற்றிருப்பவனாகையாலும் இவன் ஜகஜ்ஜந்மாதிகளுக்குக் காரணனாக ஆக முடியாது என்று பூர்வபக்ஷம். இதன்மேல் *லோகவத் து லீலா கைவல்யம்*

(கேவல லீலையே ஜகத் ஸ்ருஷ்டி முதலானவற்றுக்குப் பயனாகும்) என்று ஸித்தாந்த ஸூத்ரம் அமைந்துள்ளது. *பகவான் ஜகஜ்ஜந்மாதி வ்யாபாரங்களால் லீலா ரஸத்தை அடைகிறான். இதுவே இவற்றுக்கு ப்ரயோஜநம்* என்பது இங்கே ஸித்தாந்தீகரிக்கப் பட்டுள்ள அர்த்தம். ஆக இந்த அதிகரணத்திலே பகவானுடைய அவாப்த ஸமஸ்தகாமத்வத்தினால் ஜகஜ்ஜந்மாதி வ்யாபார காரணத்வத்துக்கு வரும் விரோதத்தை - ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரத்துக்கு வரும் அநுபபத்தியை - இந்த லீலையாகிற ப்ரயோஜநம் பரிஹரிக்கிறது என்பது காட்டப்பட்டுள்ளது.

இந்த அதிகரணத்திலே ஸ்தாபிக்கப்பட்டுள்ள இந்த அர்த்தத்தை *அகிலபுவந ஜந்ம ஸ்தேமபங்காதிலீலே* என்னும் முதல் பாதத்திலே உள்ள *லீலா* ஶப்தமானது காட்டுமாறு அமைந்துள்ளது. இத்தால் இது போன்ற விரோத ஶங்கா பரிஹாரபரமாய் உள்ள இரண்டாவது அத்யாயம் முழுவதும் இந்த *லீலா* ஶப்தத்தினால் ஸூசிப்பிக்கப்படுகிறது என்று நாம் கொள்ளலாம். இப்படி இரண்டாவது அத்யாயத்தின் சுருக்கமாக அமைந்து இவ்விரண்டு அத்யாயங்களின் பரமார்த்தமான ப்ரஹ்மத்துக்குண்டான ஜகஜ்ஜந்மாதி காரணத்வரூபமான பரத்வத்தைக் காட்டுகின்றன என்பதை நாம் அறியலாம்.

நம்மாழ்வார் பகவான் பராத்பரன் என்னும் அர்த்தத்தைத் திருவாய் மொழியில் முதல் பதிகத்தில் அருளிச் செய்தார். அவன் பஜநீயன் என்னும் அர்த்தத்தை இரண்டாவது பதிகத்தில் நமக்குக் காட்டியருளுகிறார். இந்த முறையிலே இங்கும் அமைந்துள்ளதைக் காணலாம். முதல் பாதத்தினால் பகவானுடைய ஜகஜ்ஜந்மாதி காரணத்வரூபமான பரத்வம் காட்டப்பட்டது என்பதைக் கண்டோம். *விநதவிவிதபூதவ்ராதரக்ஷைகதீக்ஷே* என்னும் இரண்டாவது பாதமானது அவன் எல்லாராலும் ஆஶ்ரயிக்கத்தக்கவன் என்னும் அர்த்தத்தைக் காட்டுவதற்காக அவனுடைய அபிகம்யத் வத்தையும், மோக்ஷப்ரதத்வ உபயோகியான ஸௌலப்யத்தையும் நமக்குத் தெரிவிக்குமாறு அமைந்துள்ளது. அபிகம்யத்வமும், ஸௌலப்யமும் மோக்ஷப்ரதத்வ லக்ஷணங்கள். ஸுலபமாக எல்லாராலும் நாடத்தக்க தன்மை அபிகம்யத்வம் எனப்படும். வெறும் பரத்வம் யாருக்கும் பயன்படாது. பரத்வமில்லாமல் ஸௌலப்யம் மட்டும் இருந்தால் அதனாலும் யாருக்கும் எந்தவொரு பயனும் ஏற்படாது. பரத்வமும் ஸௌலப்யமும் சேர்ந்து

இருந்தால்தான் இக்குணங்கள் நம்போல்வார் விஷயத்தில் கார்யகரமாக முடியும்.

முதல் இரண்டு பாதங்களும் விஶேஷணங்களாக அமைந்து பகவானுடைய இவ்விரண்டு திருக்கல்யாண குணங்களையும் நமக்குக் காட்டுகின்றன. திருவாய்மொழியின் முதல் இரண்டு பதிகங்கள் (+மூன்றாவது பதிகத்தின் முதல் பாசுரம்) ஶாரீரக ஶாஸ்த்ரத்தினுடைய ஸாரபூதமான அர்த்தவிஶேஷங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளன என்னும் உண்மையை *உபய வேதாந்த ஐக கண்ட்யம்* என்று நமது முன்னோர்கள் அநுபவித்து விவரித்தருளி இருக்கிறார்கள். இப்படி ஶாரீரக ஶாஸ்த்ர ஸாரமாக, திருவாய்மொழியின் ஆரம்பத்தில் காட்டப்பட்டுள்ள அர்த்தங்களே இங்கு ஸ்ரீபாஷ்யஸாரமாக முதல் இரண்டு பாதங்களால் காட்டப்பட்டுள்ளன என்பதை நாம் காணலாம். *பாஷ்யகாரர் இது (திருவாய்மொழி) கொண்டு ஸூத்ர வாக்யங்கள் ஒருங்கவிடுவர்* என்று ஆசார்ய ஹ்ருதயத்திலே (65) நாயனார் அருளிச்செய்திருக்கிறார்.

விநத - வணங்கின. விஶேஷமாக வணங்குபவர்கள் விநதர்கள். ந்யாஸம், உபாஸநம் போன்ற எல்லா வித்யா விஶேஷங்களிலும் நிஷ்டர்களாய் ஈடுபடுபவர்கள்.

விவித - *பலவகைப்பட்ட* என்று அர்த்தம். முதல் அத்யாயத்திலே தேவதாதிகரணம் (1-3-7) என்று ஒரு அதிகரணம். அதில் முதல் ஸூத்ரம் *தது$_3$பர்யபி பா$_3$த$_3$ராயண: ஸம்ப$_4$வாத்* (1-3-25) என்பது.*ப்ரஹ்மோபாஸநம் மநுஷ்யர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களான தேவர்கள், கந்தர்வர்கள் முதலானார்க்கும் ஸம்பவிக்கும் - ஏனென்றால் அவர்களுக்கும் அர்த்தி$_2$த்வம் (ப்ரஹ்மோபாஸநத்தில் விருப்பம்) ஸாமர்த்யம் (தேஹம், இந்த்ரியங்கள் முதலியவை) இருப்பதனாலே* என்று ஸித்தாந்தீகரித் திருக்கிறார் ஸ்ரீவேத வ்யாஸர். இதிலிருந்து தேவர்கள், கந்தர்வர்கள் முதலானோரும் எம்பெருமானை வணங்குகிறார்கள் என்று தெரிகிறது.

ஊர்த்$_4$வரேதஸ்ஸு ச ஶப்$_3$தே$_3$ஹி(3-4-17) என்று மூன்றாவது அத்யாயத்தில் புருஷார்த்தாதிகரணத்திலே (3-4-1) ஒரு ஸூத்ரம். இதில் ஸந்யாஸ ஆஶ்ரமத்தை உடையவர்களிடமும் ப்ரஹ்மவித்யை காணப்படுகிறது என்று சொல்லப்பட்டுள்ளது. *ப்ரஹ்மோபாஸநத்துக்கு அக்நி

ஹோத்ரம் போன்ற கர்மங்கள் அவசியமாகையாலும், க்ருஹஸ்தர்கள்தான் அவற்றைச் செய்வதற்கு அதிகாரம் உள்ளவர்கள் என்பதாலேயும் அவர்களுக்குத்தான் ப்ரஹ்ம உபாஸநத்துக்கு அதிகாரம் உண்டு* என்கிறார் ஜைமிநி. இதை மறுத்து *ஊர்த்வரேதஸ்ஸுக்களுக்கும் (ப்ரஹ்மசாரிகள், வாநப்ரஸ்தர்கள், ஸந்யாசிகள்) ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டு* என்று ஸித்தாந்தீகரணம் பண்ணியருளுகிறார் ஸ்ரீவேதவ்யாஸர்.

ஆக ஜந்மத்தினால் பேதம் மநுஷ்யர்களுக்கும் தேவர் முதலானோர்க்கும் இருந்தாலும் ப்ரஹ்மோபாஸந விஷயத்தில்அனைவருக்கும் அதிகாரம் உண்டு என்று சொல்லப்படுகிறது. ஆஶ்ரமத்தினால் பேதம் சொல்லப்பட்டாலும் நான்குவித ஆஶ்ரமத்தைச் சேர்ந்தவர்களுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டு. இதைப்போல் ப்ராஹ்மண, க்ஷத்ரிய, வைஶ்ய வர்ணங்களைச் சேர்ந்தவர்களுக்குள் ஆசார அநுஷ்டான பேதங்கள் இருந்தாலும் இவர்களுக்கும் ப்ரஹ்மவித்யையில் அதிகாரம் உண்டு. ப்ரஹ்மோபாஸநத்துக்குண்டான இந்த அதிகாரிகள் த்ரிவித குண பேதத்தால் பலவிதமாய் இருக்கிறார்கள் என்பதும் உண்மை. உதாரணமாக, தேவர்களுக்கு மநுஷ்யர்களை விட ஸத்வ குணம் மிகுந்து இருக்கும். இப்படி ஜந்மத்தினாலும், வர்ணாஶ்ரம பேதத்தினால் வரும் ஆசாரத்தினாலும், த்ரிவித குணபேதத்தாலும் ப்ரஹ்மோபாஸநத்துக்கு அதிகாரிகள் பலவிதமாய் இருக்கிறார்கள். இப்படி ஜந்மபேதத்தாலே வணங்குபவர்கள், வர்ணாஶ்ரமபேதத்தாலே வணங்குபவர்கள், த்ரிவித குணபேதத்தாலே வணங்குபவர்கள் என்று லோகத்திலே இருக்கும் பலவிதமான அதிகாரிகளால் ந்யாஸம், உபாஸநம் போன்ற பலவித மார்க்கங்களால் விஶேஷமாக வணங்கப்படுகிறான் எம்பெருமான் என்னும் அபிப்பிராயம் தோற்ற இங்கே இந்த அதிகாரிகளைக் குறித்து *விவித* ஶப்த ப்ரயோகம் செய்தருளியிருக்கிறார் எம்பெருமானார் என்றதாயிற்று.

பூதவ்ராத பகவத்ஜ்ஞாநத்தை, பகவத்ஜ்ஞாநத்தாலே பெறப்பட்ட ஸத்தையை உடையவர்கள் இங்கே பூத ஶப்தத்தினால் குறிக்கப் படுகிறார்கள். *அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத, ஸந்தமேநம் ததோ விது:* (ப்ரஹ்மஜ்ஞாநம் ஒருவனுக்கு இருந்தால் அவனை *ஸத்* என்று ஜ்ஞாநிகள் கொண்டாடுகிறார்கள்) என்று ஶ்ருதியிலே சொல்லப்பட்டுள்ளது. இத்தகைய

ஜ்ஞாநிகளுடைய பெருமையாவது என்ன? என்பதை கீதையிலே பரக்க நிரூபித்தருளியிருக்கிறான் பகவான்.

(1) *தேஷாமேவாநுகம்பார்த்த$_2$ம் அஹமஜ்ஞாநஜம் தம:| நாஶயாம்யாத்ம பா$_4$வஸ்த$_2$: ஜ்ஞாநதீ$_3$பேந பா$_4$ஸ்வதா ॥*(கீதை 10-11)(ஸ்வயம்ப்ரயோஜந பக்தி நிஷ்டர்களிடம் எனக்கு உள்ள அருளினாலே நான் அவர்களுடைய நெஞ்சுக்கு விஷயமானவனாய், என்னைப் பற்றிய ஜ்ஞாநம் என்னும் ஒளிமிக்க விளக்காலே, அவர்களுடைய ஜ்ஞாநத்துக்கு விரோதியான ஶப்தா$_3$தி$_3$ விஷயப்ராவண்யமாகிற இருளை அழிக்கிறேன்) என்றும் -

(2) *தேஷாம் ஸததயுக்தாநாம் ப$_4$ஜதாம் ப்ரீதிபூர்வகம் | த$_3$தா$_3$மி பு$_3$த்$_3$தி$_4$ யோக$_3$ம் தம் யேந மாமுபயாந்தி தே ॥* (கீதை 10-10)(என்னிடம் எப்பொழுதும் சேர்ந்து இருக்க வேண்டும் என்று விரும்புமவர்களாய், என்னிடம் ஸ்வயம்ப்ரயோஜநமான பக்தியைச் செலுத்துபவர்களாய் இருப்பவர்களுக்கு, அவர்கள் என்னை அடைவதற்கு உறுப்பான பக்தியோகத்தை மிக உகப்புடன் அளிக்கிறேன்) என்றும் -

(3) *அஹம் ஸ்மராமி மத்$_3$ப$_4$க்தம் நயாமி பரமாம் க$_3$திம்* (வராஹ சரம ஶ்லோகம்)(ப்ரபந்நனான என்னுடைய பக்தனை அவன் மரணமடையும் ஸமயத்தில் நான் நினைக்கிறேன். அவனை நான் மேலான கதிக்கு அழைத்துச் செல்கிறேன்) என்றும் -

பகவான் தானே அருளிச் செய்துள்ளபடியே பகவத்ஸாக்ஷாத்காரத்துக்கு உண்டான விரோதிவர்க்கத்தை நிரஸநம் பண்ணுவது என்பது பகவத் க்ருத்யமாக ஆகிவிடுவதாலே இத்தகைய ஜ்ஞாநிகளுக்கு பகவத் சே$_2$ஷத்வமாகிற ஸ்வரூபத்திலிருந்து நழுவுதல் என்பது இல்லை. ஆக பகவச்சே$_2$ஷத்வமாகிற ஸ்வரூபஜ்ஞாநத்தைப் பெற்ற இவர்கள் மறுபடியும் அஜ்ஞானத்தை அடைய மாட்டார்கள் என்று அர்த்தம். இத்தகைய அதிகாரிகளைப் போலவே இந்த அதிகாரிகளுடன் ஸம்பந்தம் பெற்றவர்கள் கூட இப்படி பகவானாலே ரக்ஷிக்கத்தக்கவர்கள் ஆகிறார்கள் என்று காட்டுவதற்காக *பூதவ்ராத* என்று அருளிச் செய்துள்ளார் எம்பெருமானார். *பூத ஸம்பந்தீ வ்ராத: பூதவ்ராத:* - பூதங்களுடைய வ்ராதம் பூதவ்ராதம் என்றபடி. பூதங்கள் = ப்ரஹ்மஜ்ஞாநிகள். அவர்களோடு ஸம்பந்தம்

பெற்றவர்கள் பூதவ்ராதர்கள். பூதவ்ராதம் என்பது பூத ஸம்பந்திகளான கூட்டம்.

ஆஸ்போடயந்தி பிதர: ப்ரந்ருத்யந்தி பிதாமஹா:| வைஷ்ணவோ ந: குலே ஜாத: ஸ ந: ஸந்தாரயிஷ்யதி ॥ என்றும் *பஶுர் மநுஷ்ய: பக்ஷீ வாயே ச வைஷ்ணவ ஸம்ஶ்ரயா:| தேநைவ தே ப்ரயாஸ்யந்தி தத்விஷ்ணோ: பரமம் பதம்॥* என்றும் ஶாஸ்த்ர வசநங்கள். ஒரு குலத்தில் ஓர் வைஷ்ணவன் பிறந்து விட்டான் என்றால், *இவன் நம்மை உத்தாரணம் பண்ணப் போகிறான்* என்று அவனுடைய பித்ருக்கள் கை கொட்டுகிறார்கள்; பிதாமஹர்கள் ஆனந்தக் கூத்தாடுகிறார்கள். இவனோடு ஸம்பந்தம் பெற்ற 21 தலைமுறைகள் (இவன், இவனுக்குத் தகப்பன், பாட்டன், கொள்பாட்டன், இவனுடைய பிள்ளை, பௌத்ரன், ப்ரபௌத்ரன் என்று ஏழு தலை முறைகள். இவனுடைய கொள்பாட்டனுக்கு மேலே ஏழு தலைமுறையும், இவனுடைய ப்ரபௌத்ரனுக்கு அடுத்த ஏழு தலைமுறையும்) வாழ்ந்து போகிறார்கள். இவனோடு ஸம்பந்தம் பெற்றவர்கள் ஒன்றும் செய்வதில்லை. இவனுடைய ஸம்பந்தத்தை இட்டு இவனுடைய ஸம்பந்திகளுக்கு வாழ்ச்சி பார்க்கப்படுகிறது. பசுவோ மநுஷ்யனோ பக்ஷியோ வைஷ்ணவர்களை அடைந்தவைகள் அப்படி அடைந்த அந்த ஸ்ரீவைஷ்ணவனுடைய ஸம்பந்தத்தாலேயே விஷ்ணுவினுடைய லோகமான பரமபதத்தைச் சென்று அடைகின்றனர். இவனுக்கு மோக்ஷம் ஸித்திப்பது போல், இவனோடு ஸம்பந்தம் பெற்ற ஜ்ஞாந யோக்யதை இல்லாத திர்யக் ஸ்தாவரங்களுக்கும், யோக்யதை இருக்கச் செய்தேயும் ஜ்ஞாநமின்றிக்கே இருக்கும் ஸம்பந்திகளுக்கும் இவன் ஸம்பந்தமே ஹேதுவாக மோக்ஷம் ஸித்திக்கிறது என்பது இந்த ப்ரமாண வசநங்களினுடைய ஸாரமான அர்த்தமாகும். இதையே *ஸம்ஸ்ரித ஸம்பந்திநோऽபி தத ஏவ காரணாத் பகவதா ரக்ஷ்யா இத்யபிப்ராய:* என்று ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் ஸ்பஷ்டமாக அருளிச் செய்துள்ளார்.

ஸ்ரீவைஷ்ணவர்களுடைய பெருமையையும், அவர்கள் திறத்தும், அவர்கள் ஸம்பந்தம் உள்ளவர்கள் திறத்தும் விஶேஷித்து அருள் செய்யும் எம்பெருமான் தன்மையையும் ஒருசேர இங்கே எம்பெருமானார்

பூதவ்ராதரக்ஷைகதீக்ஷை என்று காட்டியருளியுள்ளார் என்பதை நாம் கண்டோம். இனி நம்மாழ்வார் அநுபவத்தைக் காண்போம்.

நம்மாழ்வார் *எமர்கீழ்மேலெழுபிறப்பும் விடியாவெந்நரகத்து என்றும் சேர்தல் மாறினரே* (திருவாய்மொழி 2-6-7) என்று அருளிச்செய்துள்ளார். *கீழும் மேலும் என்னைச் சேர்ந்தவர்கள், பெருங்காடாகப் பரப்பின நோய்கள் எல்லாம் தொலையப்பட்டு ஒரு நாளும் ஓய்வில்லாத கொடிய ஸம்ஸார நரகத்தில் சேராமலிருக்கும்படி பெற்றார்கள்* என்கிறார் நம்மாழ்வார். இக்கருத்தையே அடுத்ததான *கேசவன்தமர் (2-7) பதிகத்தின் முதல் பாசுரத்தில் *கேசவன்தமர் கீழ்மேல் எமரேழ் எழுபிறப்பும் மாசதிர் இதுபெற்று நம்முடை வாழ்வு வாய்க்கின்றவா* என்று விவரித்தருளுகிறார். **ஸம்பந்தி ஸம்பந்திகள் பக்கலிலும் எம்பெருமான் அபிநிவிஷ்டனான படியைக் கண்டு, *இதெல்லாம் என்பக்கலுண்டான விஷயீகாராதிஶயமிறே* என்று ஹ்ருஷ்டராகிறார்** என்னும் ஈட்டு ஸ்ரீஸூக்தி இங்கே அநுபவிக்கத் தக்கது. *ஆழ்வாரைப் போலே அவர் ஸம்பந்தமடியாக அவரைச் சேர்ந்தவர்கள் கீழும் மேலும் உள்ள ஏழ் ஏழ் பிறப்புகளிலும் கேசவன்தமர் (அவனுடைய அவயவஸௌந்தர்யத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள்) ஆனார்கள் என்பது இப்பாசுரத்தின் கருத்தாகும். **அழகு நிறைந்த திவ்யமங்களவிக்ரஹ விஶிஷ்டனாய், நித்யஸூரிநாதனாய், எனக்கு ஸ்வாமியாய் இருக்கிற நாராயணனாலே, என்னோடு ஏதேனுமொருபடி ஸம்பந்தம் உடையவர்கள் எல்லோரும் கேசவன்தமர் என்னும் படியான சிறப்பைப் பெற்றார்கள். அதனாலே நம்முடைய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ விலக்ஷணமாகவுள்ளது* என்கிறார்** என்று ஸ்ரீ உ வே மஹாவித்வான் காஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி அதியத்புதமாக இப்பாசுரக் கருத்தை வர்ணித்துள்ளதும் இங்கு அனுபவிக்கத்தக்கது. ஜ்ஞாநாநுஷ்டாநங்களை யொழிந்தாலும் பேற்றுக்கு அவர்கள்பக்கல் ஸம்பந்தமே அமைகிறாப்போலே.....* என்று ஸ்ரீவசநபூஷண ஸூத்ரம் (204). **அதாவது - உபாப்யாமேவ பக்ஷாப்யா மாகாஶே பக்ஷிணாம் கதி:| ததைவ ஜ்ஞாந கர்மப்யாம் ப்ராப்யதே பகவாந் ஹரி:॥ என்றும், *வீசுஞ்சிறகால் பறத்திர் விண்ணாடு நுங்கட்கெளிது* என்றும் சொல்லுகிறபடியே - பகவல்லாப ஹேதுவான தத்வஜ்ஞாநமும் ததநுரூபாநுஷ்டாநமுமின்றிக்கே யொழிந்தாலும்; பகவல்லாபத்துக்கு, **பஶுர் மநுஷ்ய: பக்ஷீ வா யே ச வைஷ்ணவ ஸம்ஶ்ரயா:| தேநைவ தே

ப்ரயாஸ்யந்தி தத் விஷ்ணோ: பரமம் பதம்॥** என்றும், *யம் யம் ஸ்ப்ருஶதி பாணிப்யாம் யம்யம் பஶ்யதி சக்ஷுஷா | ஸ்தாவராண்யபி முச்யந்தே கிம் புநர் பாந்தவா ஜநா:* (யாரையெல்லாம் ஸ்ரீவைஷ்ணவனான ஒருவன் தன் திருக்கையால் தொடுகிறானோ, யாரையெல்லாம் அவன் பார்க்கிறானோ, அப்படிப் பார்க்கப்பட்ட ஸ்தாவரங்களும் முக்தியை அடைகின்றன; பந்து ஜநங்களைப் பற்றி என்ன கேள்வி?) என்றும் சொல்லுகிறபடியே - பாகவத ஸம்பந்தமே நிரபேக்ஷ ஸாதநமாகிறாப் போலே....** என்று இங்கே மணவாள மாமுநிகளுடைய வ்யாக்யாநம் அமைந்துள்ளது. *பாகவதோத்தமர்களான ஸ்ரீவைஷ்ணவர்களோடு ஸம்பந்தப்பட்டவர்களை பகவான் ரக்ஷிக்கிறான்* என்று *பூதவ்ராத ரக்ஷைகதீக்ஷை* என்னுமிடத்தில் எம்பெருமானார் காட்டியருளிய அர்த்தமே இந்த ஸூத்ரத்துக்கு மூலபூதமாகவும், அதன் தாத்பர்யார்த்தமாகவும் அமைந்துள்ளது என்பதை இங்கு நாம் தெளிவாகக் காணலாம்.

பூதவ்ராத என்பதில் *வ்ராத* ஶப்தம் எந்த அர்த்தத்தைக் காட்டுகிறது என்பதில் ஒரு சர்ச்சை உள்ளது. *ப்ராஹ்மண ஸமாஜம்* என்றால் ப்ராஹ்மணர்களுடைய ஸமாஜம் என்றுதானே அர்த்தம் கொள்கிறோம். அதைப்போல *பூதவ்ராத* என்றால் - பூதாநாம் வ்ராத: பூதவ்ராத:* என்று விக்ரஹம் கொண்டு பூதங்களுடைய (ப்ரஹ்ம ஜ்ஞாநிகளுடைய) கூட்டம் என்று அர்த்தம் கொள்ளுவதுதானே பொருத்தமானது?

இந்த வாதம் அயுக்தம் என்று காட்டியருளுகிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். *ப்ராஹ்மண ஸமாஜம்* என்னும் வ்யவஹாரத்தை இங்கே உதாரணமாகக் காட்டுவது யுக்தமன்று. ஏனென்றால் *ப்ராஹ்மண ஸமாஜம்* என்பதில் ஸமுதாயியைவிட ஸமுதாயத்துக்கு பேதமின்மை உள்ளது. இப்பொழுது *ராஜபரிஷத்* என்னும் வ்யவஹாரத்தை எடுத்துக் கொள்வோம். *ராஜபரிஷத்* என்பதில், *ப்ராஹ்மண ஸமாஜம்* என்பதைப் போல *ராஜாக்களுடைய பரிஷத்* என்று நாம் அர்த்தம் கொள்வதில்லை. *ராஜாவினுடைய பரிஷத்* என்னும் அர்த்தத்தைத்தான் கொள்கிறோம். இங்கு ராஜாவாக இருப்பவன் ஒருவன்தான். அவனைத் தவிர்ந்த, ஆனால் அவனுடன் ஸம்பந்தம் பெற்ற மந்திரிகள், அதிகாரிகள், ப்ரஜைகள் போன்றவர்களைத்தானே இந்த *பரிஷத்* ஶப்தம் குறிக்கிறது! *ராஜபரிஷத்*

என்பதில் ஸமுதாயியைக் காட்டிலும் ஸமுதாயத்துக்கு வேற்றுமை காணப்படுகிறது. ஆக, லோகத்திலே சில வ்யவஹாரங்கள் (வழக்குகள்) *ப்ராஹ்மண ஸமாஜம்* என்னும் ரீதியிலே அமைந்தவை.வேறு சில வ்யவஹாரங்கள் *ராஜபரிஷத்* என்னும் ரீதியிலே வழங்கப்படுகின்றன. இதுபோன்று எந்த இடங்களில் எந்த அர்த்தம் ஸம்பவிக்கும் - நாம் எப்படி அர்த்தம் கொள்ள வேணும் என்பதற்கு உரைகல் *ஸமுதாயியைவிட ஸமுதாயம் வேறுபட்டிருக்கிறதா, இல்லையா* என்பதே. இந்த இடத்தில் *பூதவ்ராத* என்பதற்கு *பூதங்களின் ஸம்பந்திகளுடைய கூட்டம்* என்று பொருள் கொள்வதுதான் உசிதம்.

இப்படி அர்த்தத்தைக் கொண்டால்தான், இங்கு செய்யப்பட்டுள்ள *வ்ராத* ஶப்த ப்ரயோகத்துக்கே ப்ரயோஜகத்வம் ஸித்திக்கும். பூதங்களை மட்டும்தான் பகவான் ரக்ஷிக்கிறான் என்றால், இந்த இடத்தில் *வ்ராத* ஶப்த ப்ரயோகத்துக்கு அவசியமே இல்லை. பூத ஶப்தத்தையே ஜாத்யேக வசநமாகக் கொண்டு பகவான் பூதங்களை ரக்ஷிக்கிறான் என்று அர்த்தம் சொல்லி விடலாம். இங்கு *வ்ராத* ஶப்த ப்ரயோகம் இருப்பதால், *வ்ராத* ஶப்தத்துக்கு ப்ராமாணிகமாக எவ்வளவு அர்த்தம் கொள்ள வேண்டுமோ அவ்வளவு அர்த்தம் கொண்டால்தான், *வ்ராத* ஶப்த ப்ரயோகத்துக்குண்டான ப்ரயோஜகத்வம் பூர்ணமாக ஸித்திக்கும். எம்பெருமானுடைய உண்மை வைபவமும் நன்கு விளங்கும்.

இனி அடுத்தபடியாக *ரக்ஷகதீக்ஷே* என்பதிலுள்ள *ரக்ஷா* என்னும் ஶப்தம் எந்த அர்த்தத்தைக் காட்டுகிறது என்பதைக் காண்போம். இஷ்டத்தை அடைவித்தல் பர்யந்தமாக அநிஷ்டத்தைப் போக்கடித்தல் என்பதைத்தான் இந்த ஶப்தம் காட்டும். இப்படிப்பட்ட ரக்ஷையில் ப்ரதாந தீக்ஷிதனாக பகவான் இருக்கிறான். இந்த ரக்ஷாஸங்கல்பத்தை நடத்துவதில் அத்யந்த அபிமதத்வம் (அதிகமான ஈடுபாடு) அவனுக்கு இருப்பதாகப் பார்க்கப்படுகிறது. தன் ஸத்தையைக் காட்டிலும் தன் அடியார்களான இந்த ஜ்ஞாநிகளுடைய ரக்ஷணத்தைச் செய்வதிலேயே இவனுக்கு அதிகமான ஈடுபாடு. *அப்யஹம் ஜீவிதம் ஜஹ்யாம்* என்று ஸ்ரீராமாயணத்திலே பெருமாளுடைய திருவாக்கு. *இந்த ரிஷிகளுக்காக என் ப்ராணனையும் கூட விடுவேன்* என்கிறான் பகவான். இத்தால் அடியார்களுடைய அநிஷ்டத்தைத் தொலைத்து

அபீஷ்டத்தைக் கொடுப் பதற்காகத்தான் தன் ஸத்தையே கொண்டிருக்கிறான் பகவான் என்னும் அவனுடைய வைபவம் பார்க்கப்படுகிறது.

இங்கே பகவானைப் பற்றிய இரண்டு உண்மைகளை நாம் நன்றாக அறிந்து அநுபவிக்க வேண்டும். பகவான் தன் ஸத்தையைவிடத் தன் அடியார்களுடைய ரக்ஷணத்தைத்தான் முக்யமாக (ப்ரதாந தீக்ஷையாக)க் கொண்டிருக்கிறான். இதனால் அவன் தீக்ஷையினுடைய ப்ராதாந்யம் வெளிப்படுகிறது. தன் ஸத்தையையே தன் அடியார்களுடைய ரக்ஷணத்துக்காகக் கொண்டிருக்கிறான் என்பதால் ரக்ஷையினுடைய ப்ராதாந்யம் அறியப்படுகிறது. ஆக தீக்ஷா ப்ராதாந்யத்தால் ரக்ஷா ப்ராதாந்யம் ப$_2$லிக்கிறது.

காமம் ஆத்மாநம் பார்யாம் புத்ரம் வா உபருந்த்யாத் ந த்வேவ தாஸகர்மகரம் என்று ஆபஸ்தம்பருடைய ஸூத்ரம். ஒருவன் தன்னையோ, தன் மனைவி மக்களையோ அந்ந பாநாதிகளுடைய குறைவினால் ஏற்படக்கூடிய வருத்தத்துக்கு ஆட்படுத்தலாம். ஆனால் தாஸகர்மகரன் (தனக்காக எவன் ஊழியம் செய்கிறானோ அவன்) பசியால் வருந்தும்படி செய்யக்கூடாது. தன்னுடைய ஆஜ்ஞாரூபமான இந்த ஸ்ம்ருதி வசநத்தை, அவனுடைய தாஸர்களான நம் பொருட்டு, பகவானே ஊற்றத்துடன் அநுஷ்டிக்கிறான் என்பதால் அவன் தன் திருவுள்ளத்திலே தன் அடியார்களுடைய ரக்ஷணத்தை எவ்வளவு முக்கியமாகக் கொண்டிருக்கிறான் என்பது தெரிகிறது.

இந்த *தீக்ஷா* ஶப்தம் மற்றும் ஓர் முக்யமான அர்த்தத்தைக் காட்டுகிறது. ஜீவன் பகவானுடைய ரக்ஷணத்தை அபேக்ஷிக்கிறான், அவனிடம் ப்ரார்த்திக்கிறான் என்பதால் அவனை பகவான் ரக்ஷிக்கிறான் என்பதன்று. ஜீவனுடைய உபாயாந்தர அநுஷ்டாநத்தைப் பார்த்துத்தான் பகவான் அவனை ரக்ஷிக்கிறான் என்பதன்று. இந்த ரக்ஷணமானது பகவானுக்கே ஸ்வயம்ப்ரயோஜநமாக இருக்கிறது. பகவானுடைய ரக்ஷணத்துக்கு இவனிடம் அதிகாரம் இருந்தாலே போதும். அதிகாரமாவது யாது? *அவன் ரக்ஷணத்தை இவன் தடுக்காமல் இருந்தாலே போதும்* என்று நமதாசார்யர்கள் அருளிச் செய்திருக்கின்றனர். பகவானுடைய க்ருபை நிர்ஹேதுகம் என்பது இந்த இடத்தில் (ஶ்ருதப்ரகாஶிகாசார்யருடைய

ஸ்ரீஸூக்தியினால்) தெளிவாக விளங்குகிறது. பகவானுடைய ரக்ஷணம் ஔபாதிகம் என்றால், (இந்த இடத்தில் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர் காட்டியருளியபடி) ரக்ஷணம் என்பது எப்படி அவனுக்கு ஸ்வயம் ப்ரயோஜநமாக இருக்க முடியும்? சேதநர்களிடத்தில் பகவான் செய்தருளும் ரக்ஷணம் ஸ்வயம்ப்ரயோஜநம் - பகவான் தன் பேறாகவே சேதநனை ரக்ஷிக்கிறான் - என்பதால் *சேதநலாபம் ஈஶ்வரனுக்கு* என்னும் உண்மையும் இங்கே அர்த்தப$_3$லத்தால் ஸித்திக்கிறது.

இந்த உண்மையை இன்னும் தெளிவாகவே நாம் அறியலாம். பூதவ்ராத ரக்ஷணமாகிற தீக்ஷையை ப்ரதாந வ்ரதமாகக் கொண்டவன் பகவான் என்பதால் நமக்கு ரக்ஷணம் நேர்ந்ததென்றால் அது வ்ரத ஸமாப்தியாகும். நமக்கு ரக்ஷணம் நடைபெறவில்லை என்றால் - நமக்கு மோக்ஷம் கிடைக்கவில்லை என்றால் - அது வ்ரதத்தினுடைய ப்ரம்ஶம் ஆகும். இவை இரண்டுமே வ்ரதியான பகவானுக்கே போய்ச் சேரும். சேதநனுடைய ஸம்ரக்ஷணம் ஈஶ்வரனுக்கு ப$_2$லம் என்பது இதிலிருந்தும் தேறுகிறது.

இந்த உண்மையை நமதாசார்யர்களான ஶ்ருதப்ரகாஶிகாசார்யர், பிள்ளை லோகாசார்யர் போல்வார் நமக்குக் காட்டியருளுவது ஆஶ்சர்யமில்லை. பகவானே இந்த உண்மையைத் தன் திருவாக்கால் வெளிப்படுத்தி யிருக்கிறான். *ததாம்யேதத் வ்ரதம் மம* (ஸ்ரீராம சரமஶ்லோகம்) என்று பகவான் சொல்லி இருப்பதால் ஆஶ்ரித ரக்ஷணம் அவனுடைய வ்ரதம் என்பதும், இதனுடைய ப$_2$லமும்அவனுடையது என்பதும் அவன் திருவாக்காலேயே ஸ்பஷ்டமாக அருளிச் செய்யப்பட்டிருக்கிறதுஎன்பதை நாம் காணலாம்.

விநத என்னும் ஶப்தம் ஶாரீரக ஶாஸ்த்ரத்தின் மூன்றாவது அத்யாயத்தினுடைய அர்த்தத்தைக் காட்டுகிறது. *ரக்ஷா* என்னும் ஶப்தம் நான்காவது அத்யாயத்தினுடைய அர்த்தத்தைக் காட்டுகிறது. *விநத* - வணங்கிய - வணக்கத்தைப் பற்றிய முறைகள் - பக்தி மார்க்கங்கள்தான் - மூன்றாவது அத்யாயத்தில் சொல்லப்படுகின்றன. நான்காவது அத்யாயம் பக்தியுடைய ப$_2$லமான மோக்ஷத்தைப் பற்றியது. இந்த மோக்ஷத்தைத்தான் *ரக்ஷா* ஶப்தம் குறிக்கிறது. மோக்ஷப்ரதாநம்தான் ரக்ஷணம். ஆக இப்படி

முதல் இரண்டு பாதங்களாலே க்ரந்தத்தினுடைய வஸ்து நிர்தேஶம் பண்ணப்படுகிறது.

முதல் பாதத்தாலே காட்டப்படும் ஜகத்காரணத்வம், இரண்டாவது பாதத்தாலே காட்டப்படும் மோக்ஷப்ரதத்வம் இவை இரண்டும், ராஜாவுக்குக் குடை சாமரங்கள் போலே, ப்ரஹ்மத்துக்குண்டான அஸாதாரணமான அடையாளங்களாகும். இவையிரண்டும் பகவானுடைய பரத்வத்தையும், ஸௌலப்யத்தையும் காட்டுகின்றன. பகவானை நாம் ஆஶ்ரயிப்பதற்குக் காரணமாக இருக்கின்றன அவனுடைய பரத்வமும் ஸௌலப்யமும். பகவான் நம்மால் ஆஶ்ரயிக்கப்படும் தன்மையை உடையவனாய் இருக்கிறான். இப்படி நம்மால் ஆஶ்ரயிக்கப்படும் தன்மைக்கு நிமித்தங்களாய் பரத்வ ஸௌலப்யங்கள் அறியப்படுகின்றன. அவனுக்குப் பரத்வம் மட்டும் இருந்தால் நாம் அவனைக் கிட்டி நெருங்கவே முடியாது. அவனிடம் ஸௌலப்யம் மட்டும் இருந்தால் நாம் அவனை ஆஶ்ரயித்தும் பயனில்லை. இந்த இரண்டு குணங்களும் அவனிடம் சேர்ந்திருப்ப தனால்தான் அவனுக்கு ஆஶ்ரயணீயத்வம் வருகிறது.

இந்த உண்மையை ப்ரமாணங்கள் எப்படித் தெரிவிக்கின்றன என்று பார்க்க வேண்டும். *ய ஏநம் விதுர ம்ருதாஸ்தே பவந்தி* (இப்படி எவர்கள் இவனை அறிந்து உபாஸிக்கிறார்களோ, அவர்கள் முக்தர்களாக ஆகி விடுகிறார்கள்) என்று தைத்திரீய உபநிஷத் நாராயணவல்லியிலே படிக்கப்பட்டிருக்கிறது. இங்கு சொல்லப்படும் மோக்ஷப்ரதத்வம் ஸௌலப்யத்தைக் காட்டுகிறது. ப$_2$லப்ரதத்வம் எப்படி ஸௌலப்யமாகும்? என்றால் - ப$_2$லப்ரதத்வத்தால் அபிகம்யத்வம் (நெருங்கப்படும் தன்மை) அறியப்படுகிறது. அதனால்தானே அவன் மோக்ஷப்ரதனாக ஆகிறான். அபிகம்யத்வம் என்னும் குணம் அவனிடத்திலே பார்க்கப்படுகிறதாலே, இக்குணம் ஸௌலப்யமாகப் பரிணமிக்கிறது என்பதை நாம் அறியலாம்.

ஸம் பா$_3$ஹுப்$_4$யாம் நமதி ஸம் பதத்ரைர்த்$_3$யாவாப்ருதி$_2$வீ ஜநயந் தே$_3$வ ஏக: என்னும் ஶ்ருதி வாக்யத்தின் ப்ரமேயத்தையும் நாம் அறிய வேண்டும். *தன்னுடைய நைச்யத்தைக் காட்டிக் கொண்டு பரனானவன் நீசனிடத்தில் வணக்கத்தைச் செய்பவனாக ஆகிறான்* என்று அர்த்தமுள்ள ஒரு ஸ்ம்ருதி வசநத்தை ஆதாரமாகக் கொண்டு, *பரமாத்மா தன்னுடைய

ஆஶ்ரிதர் விஷயத்தில் தான் வணங்குபவனாக ஆகிறான்* என்று பாவ ப்ரகாஶிகையில் இந்த ஶ்ருதி வாக்யத்துக்கு அர்த்தம் அருளிச் செய்யப்பட்டுள்ளது.

ஸர்வலோகமஹேஶ்வரம் ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம்.... என்னும் கீதா வசநம் (5-29) *பகவான் ஸர்வலோகங்களுக்கும் மஹேஶ்வரனாக இருக்கிறான்; எல்லா ப்ராணிகளிடத்திலும் மித்ரபாவத்தோடு விளங்குகிறான். இவனை இப்படித் தெரிந்து கொண்டு இவனுக்கு ஆராதநரூபமான கர்மயோகத்தைச் செய்து இவனை அடைகிறான் ஜீவன்* என்னும் உண்மையைத் தெரிவிக்கிறது. ப$_2$லப்ரதனானவன்ஸுஹ்ருத்தாக இருக்கிறான் என்பதனாலே ப$_2$லப்ரதனுக்குஇருக்கக்கூடிய ஸௌலப்யம் காட்டப்படுகிறது. ஆக ஶ்ருதி, ஸ்ம்ருதி வசநங்களை ஆதாரமாகக் கொண்டு *விநத* என்னும் ஶப்தம் பகவானுடைய ஸௌலப்யத்தைக் காட்டுகிறது என்பதை நாம் அறியலாம்.

இவ்வாறாக, ஶாரீரக ஶாஸ்த்ரத்தினுடைய தேறின அர்த்தவிஶேஷங்களை முதல் இரண்டு பாதங்கள் எப்படி ஸங்க்ரஹித்துக் காட்டுகின்றன என்பதை ஒருவாறு அநுபவத்தில் கொண்டோம். எம்பெருமான் அகிலஜகத்காரணன். ஸாத்யமான பக்தியால் அவனை வஶீகரித்தால் அவனே மோக்ஷோபாயமாக ஆகிறான். மோக்ஷ ஆநந்தத்தைத் தன்னை ஆஶ்ரயித்தவர்களுக்குக் கொடுத்தருள்கிறான் என்னும் அர்த்தங்களை யெல்லாம் உள்ளடக்கிய இரண்டு பாதங்களுடைய ப்ரமேய ஶரீரம் நன்றாகத்தான் அமைந்துள்ளது; ஆனால் இவற்றுக்கெல்லாம் ப்ரமாணம் காட்டப்பட வேண்டுமே? என்னும் கேள்வி அடுத்தபடியாக எழுகிறது. இப்படி அபேக்ஷிதமான ப்ரமேயாநுகுணமான ப்ரமாணத்தைக் காட்டுமாறு அமைந்துள்ளதுதான் *ஶ்ருதிஸிரஸிவிதீப்தே ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே* என்னும் மூன்றாவது பாதம்.

ஶ்ருதிஸிரஸிவிதீப்தே என்று அருளிச்செய்துள்ளார் ஸ்வாமி எம்பெருமானார். வேதம் ஶ்ருதி எனப்படுகிறது. *ஶ்ருதி* என்றால் என்ன? *ஶ்ரூயதே இதி ஶ்ருதி:* ஒருவராலும் இயற்றப்படாமல் நித்யமாகக் கேட்கப்பட்டே வருகிறது ஶ்ருதி எனப்படும். இதிஹாஸபுராணாதிகள் ரிஷிகளால் இயற்றப்பட்ட பிறகே ஆசார்ய ஶிஷ்ய க்ரமமடியாக நித்யமாகக்

கேட்கப்பட்டு வருகின்றன. *நித்ய ஶ்ரவணம்* என்பது இதிஹாஸ புராணாதிகளுக்கு இல்லை. வேதம் ஒன்றுக்குத்தான் *ஶ்ரூயதே நித்யம்* என்னும்படியான வ்யவஹாரம் பொருந்தும். ஒரு புருஷனாலே இயற்றப்படாததாலே, அபௌருஷேயத்வம் என்னும் பெருமை வேதம் ஒன்றுக்கே உண்டு. புருஷ ஸம்பந்தமில்லாமையாலே, (நித்ய) நிர்தோஷத்வம் என்னும் பெருமை வேதத்துக்குண்டு. *ஶ்ருதி* என்றதாலே வேதத்துக்குண்டான இந்தப் பெருமையானது இங்கே விவக்ஷிதம்.

ஶ்ருதிஶிரஸிவிதீப்தே - *நித்ய நிர்துஷ்ட ப்ரமாணமான வேதாந்தத்திலே நன்றாக விளங்குபவன்* என்பதாக அர்த்தம். ஆக கீழே காட்டப்பட்ட அர்த்தங்களெல்லாம் அபௌருஷேயமான ஶ்ருதியிலே காட்டப்பட்டுள்ள அர்த்தங்களேயாதலால் இவற்றை யாரும் இல்லை செய்துவிட முடியாது.

பூர்வமீமாம்ஸா ந்யாயங்கள் வேதத்தினுடைய பூர்வபாகத்தினுடைய அர்த்தத்தை நிர்ணயம் பண்ணுகின்றன. *ஶ்ருதிஶிரஸ்* என்பதினாலே நிர்தோஷ ப்ரமாணமான வேதத்தினுடைய அர்த்தநிர்ணாயகங்களான இந்த ந்யாயங்கள் உபஜீவ்யங்கள் என்பதும் காட்டப்பட்டதாகிறது என்கிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர்.

ஶ்ருதிஸிரஸ் என்று வேதாந்தம் சொல்லப்படுகிறது. *ஶ்ருதிஸிரஸ்* என்பதாலே வேதாந்தத்தினுடைய அநந்யபரத்வமும், பூர்வபாகத்தினுடைய அந்யபரத்வமும் விவக்ஷிதங்கள். இப்படிச் சிறப்புற்று விளங்கும் வேதாந்தத்தினுடைய ஸ்வரூபம் எப்படி உள்ளது என்றால் - வேதாந்தமானது மந்த்ரம், ப்ராஹ்மணம் என இரு கூறுகளாக அமைந்து பரதத்வமான ப்ரஹ்மத்தைப் பற்றிய எல்லா உண்மைகளையும் நமக்குத் தெரிவிக்கிறது. இதில் *ப்ராஹ்மணம்* என்னும் பாகத்தை விவரிக்குமாறு அமைந்துள்ளது *மந்த்ரம்* என்னும் பாகம். *ப்ராஹ்மணம்* என்பது விவரணி (விவரிக்கப்படுவது). *மந்த்ரம்* என்பது விவரணம் (விவரிப்பது). ஆக இப்படி விவரணி விவரண ரூபமாக இருக்கக் கூடியவைகள் உபநிஷத்துக்கள். இவை பரதத்வத்திலேயே நோக்காக இருக்கின்றன; பரதத்வத்தையே ப்ரதாநமாகக் காட்டுகின்றன. அதாவது பரதத்வத்தைக் குறித்து விவரணியாகவும் விவரணமாகவும் இருக்கக் கூடியவைகள் இந்த உபநிஷத்துக்கள். ஆக

பரதத்வம் என்பது ப்ரமேயம். அதற்குண்டான ப்ரமாணங்கள் மந்த்ர ப்ராஹ்மண ரூபமாய் இருக்கும் உபநிஷத்துக்கள்.

ஶ்ருதிஸிரஸி விதீப்தே என்பதால் ஶ்ருதி ஸிரஸ்ஸான வேதாந்தத்திலே மிகுந்து விளங்குகிறான் என்றதாயிற்று. *ஶ்ருதௌ தீப்தே - ஶ்ருதிஸிரஸி விதீப்தே* என்று அர்த்தம். அதாவது இரண்டு பாகமாக அமைந்துள்ள வேதத்தினால் தெரிவிக்கப்படும் பகவான் வேதத்தினுடைய பூர்வபாகத்தில் விளங்குகிறான்; வேதத்தினுடைய உத்தர பாகமான வேதாந்தத்தில் மிகுந்து விளங்குகிறான் என்று அர்த்தம். பூர்வபாகத்திலே அக்நீந்த்ராதி ரூபமாக ப்ரஹ்மத்துக்கே ப்ரதிபாத்யத்வம் உள்ளது. அவன் எல்லாரிடத்திலும் அந்தர்யாமியாய் உட்புகுந்து நியமிப்பவனாகையாலே, எல்லாரும் அவனுக்கு ஶரீரங்களாய் அவன் எல்லாருக்கும் ஆத்மாவாய் இருப்பவனாகையாலே அவனுக்கு ஶரீரங்களான தேவதா வாசக ஶப்தங்கள் எல்லாம் அவனையே உணர்த்துகின்றன. இப்படி அவனுக்கு ஶரீரங்களான தேவதைகளைக் காட்டி அவர்கள் மூலமாக ஸர்வாத்மாவான பரமாத்மாவைக் காட்டுகிறது பூர்வபாகம். இதனால் பூர்வபாகத்தில் விளங்குபவன் அவனே என்றதாயிற்று. ஶ்ருதிஸிரஸ்ஸான வேதாந்தத்தில் அவன் இதுபோல் அல்லாமல் நேரடியாகவே சொல்லப்படுவதால் அவனை வேதாந்தத்தில் மிகுந்து விளங்குபவனாகக் காட்டியருளுகிறார் எம்பெருமானார்.

வேதத்தினுடைய இரண்டு பாகத்தினாலேயும் ப்ரதிபாத்யனாக விளங்குபவன் பரமாத்மாவே. பூர்வபாகத்திலே ஶரீரங்களான இந்த்ராதி தேவதா வாசக ஶப்தங்கள் மூலமாக விளங்குகிறான். நேரிடையாக ஸ்வரூப ஸ்வபாவங்கள் ப்ரதிபாதிக்கப்பட்டு அவன் நன்றாக விஶேஷித்து விளங்குவது ப்ரஹ்மபாகமாகிற உபநிஷத்துக்களிலேயே என்ற அர்த்தம் தொனிக்க *ஶ்ருதிஸிரஸிவிதீப்தே* என்று அருளிச்செய்துள்ளார் எம்பெருமானார் என்று கீழே அநுபவித்தோம். இனி *ஶ்ருதிஸிரஸிவிதீப்தே* என்பதற்கு - பூர்வ பாகத்தைக் கொண்டு ஒரு அர்த்தமும் உத்தரபாகத்தில் வேறொரு அர்த்தமுமாகக் கொண்டு மேலும் ஒரு அர்த்தத்தையும் காட்டியருளுகிறார் வ்யாக்யாதா.

பூர்வபாகத்தில் ஸ்வர்காதி ஸுகங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம் க்ஷுத்ர ப$_2$லங்கள். இவற்றுக்கு ஸாதநங்களாய் இருப்பவை

துக்காத்மகங்களான, ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமான ப்ரயோஜநங்கள். மீமாம்ஸகர்கள் ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளையே ப்ரயோஜநங்களாகக் கொள்கின்றனர். ஆனால் உத்தரபாகமான வேதாந்தத்தில் சொல்லப்படுவதோ பரமபுருஷார்த்தமான மோக்ஷம். ப்ரஹ்மமானது தானே நிரதிஶய ஆனந்தரூபமாய் - ஆனந்தமயமாய் உள்ளது. இதுவே பரமபுருஷார்த்தம். இப்படி நிரதிஶயாநந்த ஸ்வரூபனான, பரமபுருஷார்த்தமான பகவான் வேதாந்தத்தில் மிகுந்து விளங்குகிறான் என்பதால் பூர்வபாகத்தில் போலல்லாமல் இந்த உத்தர பாகத்தில் மிக உயர்ந்த புருஷார்த்தம் காட்டப்பட்டுள்ளது என்றதாயிற்று. பூர்வபாகத்திலே ஸாதிஶய (அளவுள்ள) புருஷார்த்தம் காட்டப்படுகிறது. உத்தரபாகமான வேதாந்தத்தில் நிரதிஶய ஆனந்த ரூபமான பரமபுருஷார்த்தம் காட்டப்படுகிறது என்பதை நாம் அறியலாம்.

ஶ்ருதிஸிரஸிவிதீப்தே - இந்த இடத்திலே ஸமந்வயாதிகரணம் (1-1-4) ஸூசிதம் என்கிறார் வ்யாக்யாதா. *தத்து ஸமந்வயாத்* என்று ஸூத்ரம். தத் என்பது ஸர்வநாம ஶப்தம். ஶாஸ்த்ரயோநித்வாதிகரணத்தில் (1-1-3) *ஶாஸ்த்ரயோநித்வாத்* என்னும் ஸூத்ரத்தில் சொல்லப்பட்ட அர்த்தத்தை இங்கேயுள்ள *தத்* ஶப்தம் பராமர்ஶிக்கிறது. ஶாஸ்த்ரம் ஒன்றினாலேயேதான் ப்ரஹ்மத்தைப் பற்றி நாம் அறிய முடியும். ப்ரஹ்மம் ஶாஸ்த்ரத்தினால் மட்டுமே அறியத்தக்கது என்னும் அர்த்தத்தைக் காட்டுவது ஶாஸ்த்ரயோநித்வாதிகரணம். *ஸமந்வயாத்* - புருஷார்த்தத்வேந வேதாந்த வாக்யாநாம் ப்ரஹ்மணி அந்வயாத்* என்று அர்த்தம். ப்ரஹ்மமானது பரமபுருஷார்த்தமாக ஶாஸ்த்ரத்தினால் நன்றாக ப்ரதிபாதிக்கப்படுவதால், தத்விஷயத்தில் ஶாஸ்த்ரம் ப்ரமாணமே. ப்ரஹ்மத்துக்குண்டான ஶாஸ்த்ர ப்ரமாணகத்வம், ஶாஸ்த்ர வேத்யத்வம் இங்கே நம்மால் அறியப்படுகிறது. பரமபுருஷார்த்தமாக ப்ரஹ்மத்தை வேதாந்தம் ப்ரதிபாதிப்பதனால் ப்ரஹ்மத்தினிடத்தில் அது (வேதாந்தம்) நன்றாக அந்வயிக்கிறது. அதனால் ப்ரஹ்மத்துக்கு ஶாஸ்த்ர ப்ரமாணகத்வம் (ஶாஸ்த்ரத்தால் அறியப்படும் தன்மை) ஸித்திக்கிறது.

பரமபுருஷார்த்தமாக வேதாந்தம் ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்கிறது என்றால், இங்கே ஏதோ ஒரு ஆக்ஷேபம் தள்ளப்படுவதாகத் தோன்றுகிறது.

இந்த அதிகரணத்திலே சொல்லப்படும் பூர்வபக்ஷமாவது என்னவென்று பார்க்க வேண்டும். இங்கே மீமாம்ஸகர்கள் பூர்வபக்ஷிகள்.

பூர்வபக்ஷம்:- புருஷார்த்தங்களைச் சொல்ல வந்தது ஶாஸ்த்ரம். ப்ரஹ்மம் ஶாஸ்த்ரத்தினாலேயே அறியப்படுவதாக இருந்தாலும், அதைப்பற்றிய விசாரத்தைச் செய்து அதை அறிவதால் ஒரு ப்ரயோஜநமும் இல்லை. ப்ரஹ்மம் ஒரு ஸித்தவஸ்து என்பதால் அது நிஷ்ப்ரயோஜநமானதொரு தத்வம். ஸித்தவஸ்து என்பது ப்ரயோஜநரூபமாய் இருக்காது. ப்ரவ்ருத்தியோ நிவ்ருத்தியோதான் ப்ரயோஜநத்துக்கு ஸாதநமாய் இருக்கக்கூடும். அதனாலே புருஷார்த்தத்துக்கு ஸாதநமாய் இருக்கக்கூடிய ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகளை போதிக்கிற வாக்யங்கள்தான் நமக்கு ப்ரயோஜந பர்யவஸாயிகள் (ப்ரயோஜநத்தாலே முடிவடையக் கூடியவைகள்). இந்த ப்ரவ்ருத்தி நிவ்ருத்திகள் ப்ரயோஜநங்கள். அதைத் தெரிவிக்கிற வாக்யங்கள் ப்ரயோஜந பர்யவஸாயிகள். இப்படியல்லாமல் உபநிஷத்துக்கள் எல்லாம் ஸித்தவஸ்துவான ப்ரஹ்மத்தைப் பற்றிப் போதிக்கின்றன. ஸித்தவஸ்து என்பது ப்ரவ்ருத்தியுமன்று; நிவ்ருத்தியுமன்று. ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபத்வம் இல்லையென்பதால் ஸித்தவஸ்துவான ப்ரஹ்மத்துக்கு ப்ரயோஜநத்வம் இல்லை. அதனால் அதைப்பற்றித் தெரிவிக்கிற உபநிஷத் வாக்யங்களுக்கு ப்ரயோஜந பர்யவஸாயித்வம் இல்லை. எத்தனையோ காலம் கஷ்டப்பட்டு அத்யயநம் செய்து, பிறகு அர்த்தவிசாரம் பண்ணியும் அது ஒரு ப்ரயோஜநமாகத் தேறாது என்றால் அதைப்பற்றி விசாரிப்பதால் என்ன லாபம்? ஒரு லாபமும் இல்லாததால் ப்ரஹ்மத்தைப் பற்றிய விசாரம் அவசியமன்று என்று பூர்வபக்ஷம்.

ஸித்தாந்தம்:- ப்ரஹ்மம் என்பது ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபமன்று என்பது உண்மைதான். ஆனால் ப்ரஹ்மமானது எல்லையற்ற ஆனந்த ஸ்வரூபமாய் இருப்பதனால் அதுவே ஸ்வயம்புருஷார்த்தமாகிறது. ஆக ப்ரவ்ருத்தி நிவ்ருத்தி ரூபத்வம் இல்லை என்றாலும், அதற்கு புருஷார்த்தத்வம் இல்லை என்பதாகாது. ப்ரஹ்மமே ஸ்வயம்புருஷார்த்தம் என்பதால் ப்ரஹ்மத்தைப் பற்றித் தெரிவிக்கிற வேதாந்த வாக்யங்கள்தான் நன்றாக ப்ரயோஜந பர்யவஸாயிகளாகின்றன. அதனால் இந்த வேதாந்த வாக்யங்கள் ப்ரஹ்மத்தினிடத்தில் நன்றாக அந்வயிக்கின்றன.

நிதி$_4$போலே ப்$_3$ரஹ்மமே ஸ்வயம்ப்ரயோஜநரூபம்; தத்ப்ரதிபாத$_3$க வேதா$_3$ந்த வாக்யங்களே ஸாக்ஷாத் ப்ரயோஜந பர்யவஸாயிகள்; இஷ்ட - அநிஷ்ட ப்ராப்தி பரிஹார ஸாத$_3$ந போ$_3$த$_4$ த்$_3$வாரா ப்ரவ்ருத்தி நிவ்ருத்திபர வாக்யங்களுக்கு ப்ரயோஜந பர்யவஸாயித்வமேயொழிய நேரே ப்ரயோஜந பர்யவஸாயித்வ மில்லை. ஆகையால் அந்தந்த கல்யாணகு$_3$ண பரிபூர்ணமான ப்$_3$ரஹ்மமே ப்ரயோஜநமாய், தத்ப்ரதிபாத$_3$கமான ஶாஸ்த்ரம் ப்ரமாணமாய் ஸித்$_3$தி$_4$க்கையாலே, ஸித்$_3$த$_4$ப்$_3$ரஹ்ம ப்ரதிபாத$_3$கமான ஶாஸ்த்ரம் ஆரம்ப$_4$ணீயம் என்றிறே ஸமந்வயாதிகரணத்தின் பொருள்.

என்று ஒரு பெரியவர் ஸமந்வயாதிகரணத்தின் ப்ரமேயத்தை ஸங்க்ரஹிக்கிறார்.

ப்ரஹ்மம் பரம புருஷார்த்தமாக இருப்பதனாலே வேதாந்த வாக்யங்கள் ப்ரமாண பாவத்தை அடைகின்றன என்னும் இவ்வர்த்தம் *ஶ்ருதிஸிரஸிவிதீப்தே* என்பதினால் ஸூசிப்பிக்கப்படுகிறது என்பதை நாம் இவ்வாறு அறியலாம் என்று காட்டுகிறார் வ்யாக்யாதா. *விதீப்தே* என்பதற்கு *ப்ரஹ்மம் நிரதிஶய ஆனந்தரூபமாய் இருக்கிற படியாலே பரமபுருஷார்த்தமாக விளங்குகிறது* என்று அர்த்தமாகிறது. ஸமந்வயாதிகரணத்தைப் போலவே அதற்கு முன்புள்ள மூன்று அதிகரணார்த்தங்களும் *ஶ்ருதிஸிரஸிவிதீப்தே* என்பதனால் ஸூசிப்பிக்கப்படுகின்றனஎன்னும் விஷயத்தையும் இனி நாம் காணலாம்.

முதல் அதிகரணம் ஜிஜ்ஞாஸாதிகரணம். இந்த அதிகரணத்தில் *அதாதோ ப்ரஹ்மஜிஜ்ஞாஸா* என்பது ஸூத்ரம். *கர்மத்தைப் பற்றிய நிச்சய புத்தியும், ப்ரஹ்மத்தைப் பற்றிய ஆபாதப்ரதீதியும் ஏற்பட்டவன் ப்ரஹ்மத்தைப் பற்றி விசாரிக்கக்கடவன்* என்பது இந்த ஸூத்ரத்தில் தெரிவிக்கப்படும் அர்த்தம்.

<u>பூர்வபக்ஷம்</u>:- கர்மம் ஸித்தவஸ்து அல்லாததால் அது நம்முடைய ப்ரயத்ந ஸாத்யம். அதைப் பற்றி வேண்டுமானால் நிஶ்சய புத்தி வரலாம். அதைப் பற்றி வேதம் தெரிவிக்கிறது என்றால் அதற்கு ப்ரமாண பாவம் உண்டு. *ப்ரஹ்மம் என்பது ஸித்தவஸ்துவாய் இருக்கிறபடியாலே அத்தைப் பற்றி விசாரிக்கவே முடியாது* என்று பூர்வபக்ஷம். ஏனென்றால்

ஸித்தவஸ்துவினிடத்தில் (முதல்) அறிவே ஏற்படாது. ப்ரஹ்மத்தைப் பற்றி ஆபாதப்ரதீதி வந்தால்தானே அதைப் பற்றி விசாரிக்க முடியும்?

இந்த வாதத்தைச் சிறிது விளக்கமாகக் காண்போம். ஆடு, மாடு, புத்தகம், கட்டில் போன்றவை ஸித்தவஸ்துக்கள். இத்தகைய ஸித்தவஸ்துக்களைக் குறித்துச் சொல்லப்படும் ஶப்தங்கள் எதைச் சொல்லுகின்றன என்ற நிர்ணயமே ஏற்படாது. இந்த வஸ்துக்கள் கார்யத்திலே உபயோகப்பட்டால் அதைக் குறித்து வேண்டுமானால் அறிவு ஏற்படலாம். ஆனால் வெறும் ஸித்தவஸ்துவைப் பற்றிச் சொல்லுகிற அளவில் முதல் அறிவு ஏற்படாது. ஸித்தவஸ்துவைப் பற்றிய அறிவே ஏற்படாது என்று சொல்லவில்லை. ஆனால் அவை கார்யத்தில் உபயோகப்பட்ட பின்புதான் அறிவு ஏற்படும். உதாரணமாக கட்டில் என்னும் ஒரு பதார்த்தத்தை எடுத்துக் கொள்வோம். இது நமக்குத் தெரிந்த வஸ்துதான். ஆனால் இதை நாம் கட்டில் என்றுதான் அறிவோம். இதற்கே சீன மொழியில் ஒரு பெயர் உண்டு. அதை நாம் அறியோம். சீன மொழியில் கட்டிலைப் பற்றி ஒருவன் சொன்னால், அவன் சொன்னதே காரணமாக அவன் சொன்னது கட்டிலைத்தான் குறிக்கிறது என்ற அறிவு நமக்கு ஏற்படாது. இதுவே கட்டிலைப் பற்றி சீன மொழியில் ஒருவன் ஒரு கட்டளை வாக்யத்தைச் சொல்ல அதற்கு அநுகுணமாய் மற்றொருவன் கட்டிலை உபயோகப் படுத்தினால் அதைப் பார்த்து *இந்த கட்டிலைத்தான் அந்த சீன மொழிச் சொல் குறிக்கிறது* என்று நாம் அறிந்து கொள்ளலாம். இதிலிருந்து, ஒரு கார்யத்திலே விநியோகிக்கப்படும் பொழுதுதான் அந்தந்த ஸித்தவஸ்து போதக ஶப்தங்கள் நிர்ணீதமாய் ஆகின்றன என்று தெரிகிறது. நிர்ணீதமானால்தான் ஜ்ஞாநம் ஏற்பட முடியும். கார்யத்திலே உபயோகப்படாத ஸித்தவஸ்துவைக் குறித்து முதல் அறிவு ஏற்படாது. ஆக ஸித்தவஸ்துவான ப்ரஹ்மத்தைக் குறித்து ஶப்தம் போதிக்காது என்று பூர்வபக்ஷம்.

<u>ஸித்தாந்தம்</u>:- கார்யத்திலே உபயோகப் படுத்தாமலே கூட ஸித்தவஸ்துவைக் குறித்த அறிவை உண்டாக்க முடியும். உதாரணமாக நாம் குழந்தைக்குப் பல ஸித்தவஸ்துக்களைக் காண்பித்து, *இதுதான் சந்த்ரன், இது புத்தகம்* என்றெல்லாம் சொல்லி அவற்றைப் பற்றின அறிவை உண்டாக்குகிறோம். இதனால் அங்குளி நிர்தேஶம் பண்ணுவதன் மூலமாகவும், ஸித்தவஸ்துவைப் பற்றித் தெரிவிக்கும் வாக்யங்களினாலும்

ஸித்தவஸ்துக்களைப் பற்றிய ஜ்ஞாநம் உண்டாகிறது என்பது ஸ்பஷ்டம். இதைப் போலவே வேதாந்த வாக்யங்களும் ஸித்தவஸ்துவான ப்ரஹ்மத்தைப் பற்றிய உண்மைகளைப் பலவாறாகச் சொல்லி அதைப்பற்றிய ஜ்ஞாநத்தை நமக்கு உண்டாக்க முடியும். ப்ரஹ்ம விஷயமாக வ்யுத்பத்தி ஏற்பட முடியுமாதலால் அதைப் பற்றிய விசாரம் செய்யத்தக்கதே.

இதற்கு அடுத்ததான ஜந்மாத்யதிகரணத்தில் ப்ரஹ்ம விசாரத்தை ஆக்ஷேபிக்கும் மற்றொரு பூர்வபக்ஷம் தள்ளப்படுகிறது. ப்ரஹ்மத்தைப் பற்றி வ்யுத்பத்தி வந்தாலும்கூட அதற்கு லக்ஷணபூர்வமாக வ்யுத்பத்தி வர வேண்டும். ஒரு வஸ்துவைப் பற்றிப் புதிதாகத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதனுடைய லக்ஷணத்தை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். ப்ரஹ்மத்துக்கு லக்ஷணத்தைச் சொல்ல முடியாது. லக்ஷணத்தாலே அறியப்பட வேண்டிய ஜ்ஞாநமானது ப்ரஹ்மத்தினிடத்திலே ஸித்திக்காது. இவ்வாறு ஆக்ஷேபம் வர , அதற்கு ப்ரஹ்மலக்ஷணத்தை உணர்த்துவதாக *யதோ வா இமாநி பூ4தாநி ஜாயந்தே| யேந ஜாதாநி ஜீவந்தி| யத் ப்ரயந்த்யபி4ஸம்விஶந்தி| தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத்3ப்ரஹ்மேதி ॥* (தை- ப்ருகு4வல்லீ) (எதனிடமிருந்து இவ்வுலகங்கள் உண்டாகின்றனவோ, பிறந்தவை எதனால் வாழ்கின்றனவோ, வாழ்ந்தவை ப்ரளயத்தில் எதை அடைகின்றனவோ அதை அறிவாயாக; அதுவே ப்ரஹ்மம்.) என்னும் வேதவாக்யம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த அதிகரணத்துக்கு இதுதான் விஷயவாக்யம். இந்த வாக்யத்தில் சொல்லப்பட்டுள்ள ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாக ஆக மாட்டாது என்பது பூர்வபக்ஷம்.

உபலக்ஷண ஆகாரம், உபலக்ஷ்ய ஆகாரம், பூர்வப்ரதிபந்த ஆகாரம் என்று மூன்று விஷயங்கள் முதலில் தெரிய வேணும். ப்ரஹ்மம் இங்கே உபலக்ஷ்யம் - அதாவது அறிவிக்கப்படுவது. அறிவிக்கப்படுகிற வஸ்து எதுவோ அதற்கு வெளியே இருந்து கொண்டு அதை அறிவிப்பதற்கு உபாயமாக இருப்பது உபலக்ஷணம். ஒரு லக்ஷணத்தில் லக்ஷ்யத்தைப் பற்றி ஏற்படும் அறிவில் இந்த லக்ஷணமும் தவறாமல் விஷயமாகும் என்றில்லாமல் இருப்பது உபலக்ஷணம். விஶேஷ்யத்திலேயே (அறிவிக்கப்படும் பொருளிலேயே) இருந்து கொண்டு அதை அறிவிக்கக்கூடிய உபாயமாய் இருப்பது விஶேஷணம். ஒரு பதார்த்தத்திலேயே எப்பொழுதும்

இருந்து கொண்டு அந்த பதார்த்தத்தைக் காட்டிக் கொடுப்பது விஶேஷணம் எனப்படும். ஜ்ஞாப்ய அந்தர்பூதமாய் இருந்து கொண்டு ஜ்ஞாப்ய ப்ரதீதி உபாயமாய் இருப்பது விஶேஷணம். இரண்டு மரக்கிளைகளுக்கு நடுவில் தெரியும் சந்த்ரனைக் குழந்தைக்குக் காட்டுகிறோம். இங்கே சந்த்ரனைக் காட்டித்தரும் மரக்கிளைகள் உபலக்ஷணங்கள். தொங்குசதை மாட்டுக்கு விஶேஷணம்.

லக்ஷணம் என்பது உபலக்ஷணமாகவாவது இருக்க வேண்டும். அல்லது விஶேஷணமாகவாவது இருக்க வேண்டும். ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் என்பது உபலக்ஷணமாய் (ஜ்ஞாப்ய பஹிர்பூதமாய்) இருக்க வேண்டும் அல்லது விஶேஷணமாய் (ஜ்ஞாப்ய அந்தர்பூதமாய்) இருக்க வேண்டும். ஆனால் இந்த இரண்டு வகையிலும் சேராததாகையாலே இது (ஜகஜ்ஜந்மாதி காரணத்வம்) ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாக ஆகமாட்டாது என்று ஆக்ஷேபம்.

<u>பூர்வபக்ஷம்</u>:- ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் ப்ரஹ்மத்துக்கு விஶேஷணமாக ஆகமுடியாது என்னும் வாதத்தைமுதலில் காண்போம். ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் ப்ரஹ்ம லக்ஷணம் என்று கொண்டால் ஜகதுத்பத்திகாரணத்வம், ஸ்திதிகாரணத்வம், லயகாரணத்வம் என்று ப்ரஹ்மத்துக்கு மூன்று விஶேஷணங்கள் ஸித்திக்கின்றன. *விஶேஷண பேதாத் விஶேஷ்ய பேத:* என்னும் ந்யாயத்தாலே விஶேஷணங்கள் பலவாக இருந்தால் விஶேஷ்யமும் பலவாகி விடும் (நமக்கு ஒரு விஶேஷ்யம்தான் விவக்ஷிதம்) என்பதனாலே ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தை இங்கே ப்ரஹ்மத்துக்கு விஶேஷணமாகச் சொல்லமுடியாது.

ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் உபலக்ஷணமாக இருக்க வேண்டும் என்றால் மூன்றாவது ஆகாரமான பூர்வப்ரதிபந்த ஆகாரம் (ஏற்கனவே தெரிந்திருக்கும் ஒரு அம்ஶம்) இருக்க வேண்டும். இங்கே உபலக்ஷ்யம் ப்ரஹ்மம். உபலக்ஷணம் ஜகஜ்ஜந்மாதி காரணத்வம். உபலக்ஷணமாக இருக்கிறது என்று கொள்ளலாம். ஆனால் ஸ்தூல ப்ரதிபந்த ஆகாரம் ஒன்றுமே இல்லை ப்ரஹ்மத்துக்கு. ப்ரஹ்மம் ப்ரத்யக்ஷ வேத்யமல்ல. ப்ரஹ்மம் ஶாஸ்த்ரைக ஸமதிகம்யம். *ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம* என்னும் வாக்யத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி ஸத்யத்வ ஜ்ஞாநத்வ அநந்தத்வங்களை பூர்வப்ரதிபந்த ஆகாரங்களாகக் கொள்ள முடியாது. ஏன்

என்றால் - இந்த ஸத்யத்வ ஜ்ஞாநத்வ அநந்தத்வ ஆகாரங்கள் உபலக்ஷணங்களா அல்லது விஶேஷணங்களா என்ற கேள்வி வரும். இப்படி ஒன்றுக்கு மேல் ஒன்றாக முடிவில்லாமல் சொல்லிக் கொண்டே போக வேண்டிவரும். இதனால் அநவஸ்தா தோஷம் ப்ரஸங்கிக்கிறது. ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தையே இங்கே பூர்வப்ரதிபந்நமாகக் கொண்டால் அந்யோந்யாஶ்ரயத்வ தோஷம் வரும். இவற்றை விஶேஷணங்களாகக் கொண்டால் *விஶேஷண பேதாத் விஶேஷ்ய பேத:* என்னும் ந்யாயத்தை இங்கேயும் கொள்ள வேண்டி வரும். ஆக ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தை உபலக்ஷண மாகவும் கொள்ள முடியாது; விஶேஷணமாகவும் கொள்ள முடியாது.

இதற்கு மேல், இந்த மூன்று விஶேஷணங்களும் சேர்ந்து ஒரு ப்ரஹ்மத்தைக் காட்டுவதாகக் கொள்ளலாமே என்றால் அதுவும் முடியாது. ப்ரஹ்மமானது ப்ரத்யக்ஷத்தினாலோ அல்லது வேறு ஒரு ப்ரமாணத்தினாலோ *ஒன்றுதான்* என்று அறிந்திருக்கப்படவில்லை. மேலும் விஶேஷணம் என்றால் என்ன? விஶேஷணம் என்றால் வ்யாவர்த்தகம் என்று அர்த்தம். இதர விஶேஷண யுக்தமான தர்மியிலிருந்து தன்னுடைய (தான் எந்த தர்மிக்கு விஶேஷணமாய் இருக்கிறதோ அந்த) தர்மியை வேறுபடுத்துவதுதான் விஶேஷணம் எனப்படும். லௌகிக வ்யவஹாரங்கள் ப்ரத்யக்ஷ ப்ரமாண ஸித்தங்களாகையால் பல விஶேஷணங்கள் சேர்ந்து ஒரு விஶேஷ்யத்தைக் குறிக்க முடியும் -அதாவது ப்ரத்யக்ஷத்தினால் அந்த விஶேஷ்யம் ஒன்றாக அறியப்பட்டால். ப்ரஹ்மம் ப்ரத்யக்ஷ வேத்யமன்று. ப்ரஹ்மத்தைப் பற்றி ஶப்தம் ஒன்றினாலேயே தான் தெரிந்து கொள்ள வேணும். ப்ரஹ்மத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேறு ப்ரமாணங்கள் இல்லை. ஶப்தம் ஜகஜ்ஜந்மாதி காரணத்வ ரூபேண அநேக விஶேஷண யுக்தமான ப்ரஹ்மத்தைக் காட்டுகிறது என்றால் அநேக ப்ரஹ்மங்கள் ஸித்தித்து விடும். விஶேஷண பேத ப்ரயுக்தமான விஶேஷ்ய பேதத்தை நம்மால் இல்லை செய்துவிட முடியாது. ஆக ஜகஜ்ஜந்மாதி காரணத்வமான மூன்று விஶேஷணங் களால் நமக்கு விவக்ஷிதமான ஒரு ப்ரஹ்மம் ஸித்தித்து விடாது. ஆகவே ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தை ப்ரஹ்மத்துக்கு உபலக்ஷணத்வ முறையிலேயோ அல்லது விஶேஷணத்வ முறையிலேயோ லக்ஷணமாகச் சொல்ல முடியாது. இக்காரணத்தினால் லக்ஷண அறிவு

என்பது ப்ரஹ்ம விஷயத்தில் ஏற்படாது. இத்தால் ப்ரஹ்ம விசாரம் ஆரம்பணீயமன்று என்று தேறுகிறது.

ஸித்தாந்தம்:- *ப்ரஹ்மத்துக்கு ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தை உபலக்ஷணத்வ முறையிலும் கொள்ளலாம்; விஶேஷணத்வ முறையிலும் கொள்ளலாம்* என்று ஸித்தாந்தம். முதலில் ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் ப்ரஹ்மத்துக்கு எப்படி உபலக்ஷணமாகிறது என்பதை நிரூபிப்போம். ப்ரஹ்மத்துக்கு பூர்வப்ரதிபந்ந ஆகாரமே கிடையாது என்னும் பக்ஷம் பொருந்தாது. ப்ரஹ்மத்துக்குப் பூர்வப்ரதிபந்ந ஆகாரம் உண்டு. *ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம* என்னும் வாக்யத்தை இங்கே எடுக்கக்கூடாது. ஏனென்றால் இங்கே ப்ரஹ்மம் என்பது உபலக்ஷ்யமன்று. நிரதிஶய ப்ருஹத்வ யுக்தமான தத்வம்தான் உபலக்ஷ்யம். *யதோ வா இமாநி பூ$_4$தாநி ஜாயந்தே| யேந ஜாதாநி ஜீவந்தி| யத் ப்ரயந்த்யபி$_4$ஸம்விஶந்தி| தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத்$_3$ ப்ரஹ்மேதி ||* என்னும் வாக்யத்திலுள்ள *யத்* ஶப்தம் ப்ரஸித்தியைக் காட்டுகிறது. பூர்வம் (ஏற்கனவே) அறியப்பட்டதை இந்த *யத்* ஶப்தம் நிர்தேஶம் பண்ணுகிறது. ஆகையால் இந்த வாக்யம்தான் முதன்முதலில் நமக்கு ப்ரஹ்மத்தை அறிவிக்கிறது என்பது இல்லை. வேறொரு வாக்யம் ப்ரஹ்மத்தை, பூர்வம் அறிவித்துள்ளது என்பதை இந்த *யத்* ஶப்தம் காட்டுகிறது. *யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே* - (எதனிடத்திலிருந்து இந்த பூதங்கள் உண்டாகின்றனவோ) என்று ஏற்கனவே அறியப்பட்ட ப்ரஹ்ம விஷயமாக இந்த பூதங்களினுடைய உத்பத்தியைச் சொல்லுகிறது இந்த வாக்யம். இந்த இடத்திலே ப்ரஹ்மத்தினுடைய உபாதாந காரணத்வத்தையும் அநுவாதம் பண்ணுகிறது. இதனால் ப்ரஹ்மம் ஜகத்துக்கு நிமித்த, உபாதாந காரணம் என்று ஏற்கனவே ஒரு வாக்யத்தினால் அறியப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அந்த வாக்யம்தான் ப்ரஹ்மத்தைப் பற்றி முதலில் தெரிவிக்கும் வாக்யம். அதுதான் விஶேஷ்யமான ப்ரஹ்மத்தினுடைய பூர்வப்ரதிபந்ந ஆகாரத்தைத் தெரிவிக்கிறது. *ஸதே$_3$வ ஸோம்ய இத$_3$மக்$_3$ர ஆஸீத்* (சா$_2$ந் 6-2-1)இத்யாதி வாக்யங்கள்தான் இப்படி ப்ரஹ்மத்தினுடைய ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தை ஏற்கனவே தெரிவித்திருக்கும் வாக்யங்கள். இப்படி ஏற்கனவே தெரிவிக்கப்பட்ட ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தை அநுவாதம் பண்ணுவதுதான் *யதோ வா இமாநி பூ$_4$தாநி ஜாயந்தே| யேந ஜாதாநி ஜீவந்தி| யத் ப்ரயந்த்யபி$_4$ஸம்விஶந்தி| தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத்$_3$ ப்ரஹ்மேதி ||* என்னும்

வாக்யம். *ஸதே3வ ஸோம்ய இத3மக்3ர ஆஸீத்* (சா2ந் 6-2-1) என்னும் வாக்யம் உபாதாந காரணத்வத்துக்குண்டான ஸர்வஶக்தி யோகத்தையும், நிமித்த காரணத்வத்துக்கு உபயுக்தமான ஸர்வஜ்ஞத்வத்தையும் நமக்குக் காட்டுகிறது. இந்த வாக்யத்தாலே ஸர்வஜ்ஞனாயும் ஸர்வஶக்தனாயும் ஏற்கனவே அறிவிக்கப் பட்டுள்ளது ப்ரஹ்மம். இதுதான் பூர்வப்ரதிபந்ந ஆகாரம். ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் என்பது உபலக்ஷண ஆகாரம். நிரதிஶய ப்ருஹத்வம் என்பது உபலக்ஷ்யம். *யதோ வா இமாநி பூ4தாநி ஜாயந்தே| யேந ஜாதாநி ஜீவந்தி| யத் ப்ரயந்த்யபி4ஸம்விஶந்தி| தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத்3 ப்ரஹ்மேதி ||* என்னும் வாக்யத்திலே ப்ரஹ்ம ஶப்தமில்லை. ப்ரஹ்ம ஶப்தத்துக்கு ப்ரவ்ருத்தி நிமித்தம் ப்ருஹத்வம். *நிரதிஶய ப்ருஹத்தான தத்வம் இது* என்று *யதோ வா இமாநி பூ4தாநி ஜாயந்தே| யேந ஜாதாநி ஜீவந்தி| யத் ப்ரயந்த்யபி4ஸம்விஶந்தி| தத் விஜிஜ்ஞாஸஸ்வ தத்3 ப்ரஹ்மேதி ||* என்னும் இந்த வேதவாக்யம் நமக்குக் காட்டிக் கொடுக்கிறது என்பதை நாம் அறிய வேண்டும்.

இனி அடுத்தபடியாக ஜகஜ்ஜந்மாதி காரணத்வத்தை ப்ரஹ்மத்துக்கு விஶேஷணமாகவும் கொள்ளலாம் என்னும் அர்த்தம் நிரூபிக்கப் படுகிறது. *விஶேஷண பேதாத் விஶேஷ்ய பேத:* என்பது பொருந்தாது. விஶேஷ்யம் ஒன்றுதான் என்று கொள்வதற்கு ப்ரத்யக்ஷம் இல்லை என்றாலும் கூட, விஶேஷ்யம் ஒன்றாக இருக்கக்கூடும் என்பதை நாம் அறியலாம். எப்படியென்றால், ஒரு விஶேஷ்யத்துக்கு இருக்கும் பல விஶேஷணங்கள் ஒன்றுக்கொன்று முரண்படாமலிருந்தால் இந்த எல்லா விஶேஷணங்களும் சேர்ந்து ஒரு விஶேஷ்யத்தைக் காட்ட முடியும். பல விஶேஷணங்கள் இருக்குமிடத்தில் அவை ஒன்றுக்கொன்று விரோதம் (முரண்பாடு) உடையனவையாய் இருந்தால், விஶேஷ்யம் அங்ஙனே ஒன்றாகத் தேற முடியாது; பலவாகவே இருந்தாக வேண்டும். இந்த உண்மையை அறிவதற்கு நமக்கு ப்ரத்யக்ஷம் தேவையில்லை. விஶேஷ்யத்தைக் குறித்து விஶேஷணங்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன - எந்த அர்த்தங்களைக் காட்டுகின்றன - என்பதைக் கொண்டே விஶேஷ்யம் ஒன்றா அல்லது பலவா என்பதை நாம் அறுதியிட்டுக் கொள்ளலாம்.

இதன்படிப் பார்த்தால் ஜகத்காரணத்வம், ஸ்திதிகாரணத்வம், லயகாரணத்வம் என்னும் மூன்று விஶேஷணங்களும் விஶேஷ்யமான ப்ரஹ்மத்தினிடத்தில் பொருந்துகின்றன என்பது ஸ்பஷ்டம். ஏனென்றால் இவை ஒன்றுக்கொன்று விருத்த விஶேஷணங்கள் அல்ல. ப்ரஹ்மத்துக்கு எப்பொழுது ஸ்ருஷ்டி காரணத்வம் இருக்கிறதோ அப்பொழுது ஸ்திதி லய காரணத்வங்கள் இல்லை. எப்பொழுது ஸ்திதி காரணத்வம் இருக்கிறதோ, அப்பொழுது ஸ்ருஷ்டி லய காரணத்வங்கள் இல்லை. ப்ரஹ்மத்துக்கு எப்பொழுது லய காரணத்வம் இருக்கிறதோ, அப்பொழுது ஸ்ருஷ்டி ஸ்திதி காரணத்வங்கள் இல்லை. காலபேதத்தால் இந்த ஆகாரங்கள் ஒன்றுக்கொன்று முரண்படாதவைகளாய் ப்ரஹ்மத்தினிடத்திலே விஶேஷணங்களாகப் பொருந்தி நிற்கின்றன. ஆக விஶேஷண பேதங்கள் விஶேஷ்ய பேதத்தைக் காட்டித்தான் நிற்கும் என்பதில்லை. எங்கெல்லாம் விஶேஷண பேதங்கள்ஒன்றுக்கொன்று விருத்தங்களாய் ஒரே வ்யக்தியினிடத்தில் அந்வயிக்க முடியாதவைகளாய் இருக்கின்றனவோ அந்த இடங்களில் மட்டும்தான் விஶேஷ்ய பேதம் ஸித்திக்கும். ஆக ப்ரத்யக்ஷ பரோக்ஷங்கள் நியாமகங்கள் அல்ல. ப்ரத்யக்ஷம் விஶேஷ்ய பேதத்தையும் காட்டலாம் விஶேஷ்ய அபேதத்தையும் காட்டலாம். பரோக்ஷமும் இவையிரண்டில் எதை வேண்டுமானாலும் காட்டக்கூடும். விஶேஷணங்கள் பரஸ்பரம் விருத்தங்களாய் இருந்தால்அவை ஒரே விஶேஷ்யத்தில் அந்வயிக்க முடியாது. விஶேஷணங்கள் பரஸ்பரம் அவிருத்தங்களாய் இருந்தால் அவை ஒரே விஶேஷ்யத்தில் அந்வயிக்க முடியும். விஶேஷணங் களிலுள்ள விருத்தத்வ அவிருத்தத்வங்கள்தான் நியாமகங்கள். இத்தால் ஸ்ருஷ்டி, ஸ்திதி, லய காரணத்வங்கள் காலபேதத்தாலே பரஸ்பரம் அவிருத்தங்களான படியால் அவை விஶேஷ்யமான ப்ரஹ்மத்தினிடத்தில் பொருந்தும் என்று நிரூபிதமாயிற்று. ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் என்பது உபலக்ஷணமாயும் விஶேஷண மாயும் ப்ரஹ்மத்துக்கு லக்ஷணமாக அமைவதால் இந்த லக்ஷணத்தைக் கொண்டு ப்ரஹ்மத்தை அறிய முடியும். ஆகையால் ப்ரஹ்ம விசாரம் செய்யத்தக்கதே என்ற ஸித்தாந்தம் நிரூபிதமாயிற்று.

அடுத்த அதிகரணம் ஶாஸ்த்ரயோநித்வாதிகரணம். ஜகஜ்ஜந்மாதி காரணத்வம் ப்ரஹ்மலக்ஷணம் என்பது அநுமாந ப்ரமாணத்தினால் ஸித்திப்பதாலும், மற்ற ப்ரமாணங்களால் அறியப்படாததொன்றையே

ஶாஸ்த்ரம் காட்டுமாகையாலும், ப்ரஹ்ம விஷயத்தில் ஶாஸ்த்ரம் ப்ரமாணமாகாது. எனவே ப்ரஹ்மவிசாரம் அநாரம்பணீயம் என்று பூர்வபக்ஷம். எப்படி கார்யப் பொருளான க$_4$டத்திலிருந்து அதற்கு கர்த்தா ஒருவன் இருக்கிறான் என்று அநுமானத்தால் அறியப் படுகிறதோ, அப்படியே கார்யப் பொருளான இந்த ஜகத்துக்கும் காரணமாக ப்ரஹ்மம் உள்ளது என்று அறியப்பட்டு விடுமாகையாலே ப்ரஹ்மத்துக்கு ஜகத்காரணத்வம் அநுமானத்தினால் ஸித்திக்கிறது என்று பூர்வபக்ஷம்.

ஸித்தாந்தத்திலே கீழே காட்டப்பட்ட அநுமானம் ப்ரஹ்ம விஷயத்தில் ப்ரமாணமாக ஆக மாட்டாது என்று காட்டப்பட்டு ஶாஸ்த்ரம் மட்டும்தான் ப்ரஹ்ம விஷயத்தில் ப்ரமாணமாக ஆகும் என்று நிரூபிக்கப்படுகிறது. *ஶாஸ்த்ர யோநித்வாத்* என்பது ஸூத்ரம். *ஶாஸ்த்ரம் ஒன்றே ப்ரஹ்மத்தைப் பற்றிய ஜ்ஞாநத்துக்குக் காரணமாய் (ப்ரமாணமாய்) இருப்பது* என்பது இந்த ஸூத்ரத்துக்கு அர்த்தமாகும். இனி ப்ரஹ்ம விஷயத்தில் அநுமான ப்ரமாணத்துக்குண்டான தோஷங்கள் யாவை என்பதைப் பார்ப்போம்.

அநுமான ப்ரமாணமானது லோகத்ருஷ்டாந்தத்தை அடிப்படையாகக் கொண்டது. பூர்வபக்ஷத்தில் க$_4$டம் க$_4$டத்துக்குக் காரணமான குலாலன் (குயவன்) இவை முறையே கார்யப் பொருளான ஜகத்துக்கும் அதற்குக் காரணமான ப்ரஹ்மத்துக்கும் த்ருஷ்டாந்தமாக எடுக்கப்பட்டுள்ளன. இவையிரண்டும் ஜகத்துக்கும் ப்ரஹ்மத்துக்கும் த்ருஷ்டாந்தமாக ஆக மாட்டா என்பதை முதலில் காண்போம். லோகத்தில் காணப்படும் எந்த கார்யப் பொருளுக்கும் நிமித்த, உபாதாந காரணங்கள் வெவ்வேறாகவே பார்க்கப்படுகின்றன. ஆனால் ஜகத்தைப் பொறுத்த வரையில் ப்ரஹ்மமே ஜகத்துக்கு அபிந்ந நிமித்தோபாதாந காரணமாகப் பார்க்கப்படுகிறது. வேதாந்தமானது ப்ரஹ்மத்தை த்ரிவித (நிமித்த, உபாதாந, ஸஹகாரி) காரணமாகவும் காட்டுகிறது. இது ஶாஸ்த்ரத்தினால் மட்டுமே அறியப்படுகிற உண்மையாகும். அநுமானம் குலால ஸத்ருஶமாக ப்ரஹ்மத்தைக் காட்டுவதாலே ப்ரஹ்மத்தை நிமித்த காரணமாக மட்டும்தான் காட்ட முடியும். க$_4$டத்துக்குக் காரணமான குலாலன் எந்த விதத்திலும் ப்ரஹ்மத்துக்கு த்ருஷ்டாந்தமாக ஆக முடியாது. குலாலன் அல்பஜ்ஞனாயும், அல்பஶக்தனாயும் இருப்பவன். க$_4$டத்துக்கு குலாலன் எப்படியோ அப்படி ஜகத்துக்கு ப்ரஹ்மம் என்றால், ப்ரஹ்மத்தை ஜகத்காரணமாக மட்டும்தான்

இந்த அநுமானம் காட்டுமே தவிர, ப்ரஹ்மத்தை ஸர்வஜ்ஞனாயும் ஸர்வஶக்தனாயும் காட்டாது. அநுமானத்தினால் இவ்வளவே தேறும். லோக த்ருஷ்டாந்தத்தை அடிப்படையாகக் கொண்ட அநுமானத்தினால் ப்ரஹ்மத்தைப் பற்றிய பூர்ணமான ஜ்ஞாநத்தைப் பெறமுடியாது. லோக த்ருஷ்டாந்தத்தின் மூலம் ஸித்திப்பவன் ஒரு ஜீவனாகத்தான் இருக்க முடியுமே தவிர ப்ரஹ்மம் ஸித்திக்க முடியாது. இது மட்டுமன்று; விபுல கார்யங்களுக்கு லோகத்தில் பலர் சேர்ந்து கர்த்தாக்களாகப் பார்க்கப்படுகிறார்கள். ஜகதுத்பத்தி, ஸ்திதி, லயம் எல்லாம் மஹத்தான கார்யங்கள். அநுமானத்தை ப்ரமாணமாகக் கொண்டால் இவற்றுக்கும் கர்த்தாக்களாகப் பல ப்ரஹ்மங்கள் இருப்பனவாகத் தேறும். லோக த்ருஷ்டாந்தத்தை வைத்துக் கொண்டு பார்க்கிறபொழுது கர்த்ரு ஐக்யத்தை அநுமானம் காட்டாது. இக்காரணங்களினால் *அநுமான ப்ரமாணம் தோஷ யுக்தம்; அது ப்ரஹ்மத்தைக் காட்ட ஸமர்த்தமன்று; ஶாஸ்த்ரம் ஒன்றுதான் ஸமர்த்தம்; அதனால் ப்ரஹ்மவிசாரம் ஆரம்பிக்கத் தக்கதே* என்று தேறிற்று.

இவ்வாறு இந்த நான்கு அதிகரணங்களின் ஸாரார்த்தங்களை ஒருவிதமாக அநுபவத்தில் கொண்டோம். *ஶ்ருதிஸிரஸிவிதீப்தே* என்பது இந்த அர்த்தங்களை எப்படி ஸூசநம் பண்ணுகிறது என்று பார்ப்போம். *ஶ்ருதிஶிரஸிவிதீப்தே* என்பது *வேதாந்தத்தினால் ப்ரஹ்மம் பரமபுருஷார்த்தம் என்று காட்டப்படுகிறது* என்று நமக்குத் தெரிவிப்பதின் மூலம் ப்ரஹ்மத்தைப் பற்றி வ்யுத்பத்தி வரும் என்னும் உண்மையையும் தெரிவிக்கிறது. வ்யுத்பத்தி (அறிவு) வந்தால் மட்டும் போதாது. லக்ஷண பூர்வகமான வ்யுத்பத்தி வரவேண்டும்; அப்பொழுதுதான் ப்ரஹ்மத்தைப் பரம புருஷார்த்தமாக நாம் அறிய முடியும். ஆக இதுவும் *ப்ரஹ்மம் பரமபுருஷார்த்தம்* என்பதனால் ஸூசிப்பிக்கப் பட்டதாகிறது. ப்ரஹ்மம் ஶாஸ்த்ரைக ஸமதிகம்யமாக இருந்தால்தான் அதைப் பரம புருஷார்த்தமாக அறிய முடியும். ஆக ஶாஸ்த்ரைக ஸமதிகம்யத்வமும் *ஶ்ருதிஶிரஸிவிதீப்தே* என்பதினால் ஸூசிப்பிக்கப் படுகிறது. ஶ்ருதி ஶிரஸ்ஸிலே - வேதாந்தத்திலே - அவன் இப்படி விளங்குகிறான் என்பதால் ப்ரமாணாந்தரங்களிலே அவன் இப்படி தெரிவிக்கப்படுவதில்லை என்னும் அர்த்தமும் ஸூசிதமாகிறது. *ஶ்ருதிஸிரஸ்* ஶப்தத்தினால் ப்ரமாணாந்தரம் வ்யாவர்த்திக்கப்படுகிறது. இதனால் ஶாஸ்த்ரயோநித்வாதி கரணார்த்தமும்

ஸூசிப்பிக்கப்பட்டதாகிறது. ஆக *அவன் அறியப் படுகிறான்*, *லக்ஷண பூர்வமாக அறியப்படுகிறான்*, ஶாஸ்த்ரைக ஸமதிகம்யனாக அறியப்படுகிறான்*, பரம புருஷார்த்தமாக அறியப் படுகிறான்* என்னும் நான்கு அதிகரணார்த்தங்களும் *ஶ்ருதிஶிரஸி விதீப்தே* என்பதில் அடங்கி உள்ளன என்றதாயிற்று.

ப்ரஹ்மணி ஶ்ரீநிவாஸே - *ப்ரஹ்ம* என்பது ஸாமாந்ய ஶப்தம். *ஶ்ரீநிவாஸ:* என்பது விஶேஷ ஶப்தம். இங்கு விஶேஷ ஶப்தத்தை மட்டும் அருளிச் செய்திருந்தாலே போதுமாயிருக்க, அத்துடன் ஸாமாந்ய ஶப்தத்தையும் சேர்த்து எம்பெருமானார் அருளிச் செய்திருப்பதற்கு அபிப்பிராயமாவது என்ன என்று பார்க்க வேணும். உபநிஷத்துக்களிலே *ஸத்* *ப்ரஹ்ம* *ஆத்மா* என்று ஸாமாந்ய ஶப்த ப்ரயோகங்கள் அநேக இடங்களில் காணப்படுகின்றன. இந்த ஸாமாந்ய பதங்களும் *நாராயணன்* என்னும் விஶேஷ ஶப்தத்தால் சொல்லப் படுகின்றவனைத்தான் குறிக்கின்றன என்று காட்டுவதற்காக எம்பெருமானாரும் ஸாமாந்ய பதத்தை விஶேஷ வாசக ஶப்தத்துடன் சேர்த்துக் காட்டுகிறார். *ஶ்ரீநிவாஸே* என்று மட்டும் அருளிச் செய்யாமல் *ப்ரஹ்மணி ஶ்ரீநிவாஸே* என்று அவர் அருளிச் செய்திருப்பதற்கு இதுதான் அபிப்பிராயமாகப் பார்க்கப்படுகிறது.

ஶ்ரீநிவாஸ ஶப்தத்தினுடைய அவயவ ஶக்தி *ஶ்ரிய: நிவாஸ: ஶ்ரீநிவாஸ:* (அதாவது பெரிய பிராட்டியாருக்கு வாஸஸ்தாநமாய் உள்ளவன், எல்லா ஸம்பத்துக்களையும் உடையவன்) என்பதினால் நித்யவிபூதி நாதன் என்னும் அர்த்தத்தைக் காட்டுகிறது. ஶ்ரீநிவாஸ ஶப்தத்தினுடைய ரூடி (ஸமுதாய) ஶக்தியினாலே மதாந்தரஸ்தர் களுடைய நான்கு பக்ஷங்கள் நிராகரிக்கப் படுகின்றன. *த்ரிமூர்த்தி ஸாம்யம்*, *த்ரிமூர்த்தி ஐக்யம்*, *ப்ரஹ்மம் த்ரிமூர்த்திகளைக் காட்டிலும் மேலான தத்வம்*, *ஈஶ்வரனே ப்ரஹ்மம்; அவன் திரிமூர்த்திகளை விட வேறாக இருக்கும் ஸதாஶிவ ப்ரஹ்மம்; த்ரிமூர்த்திகள் ஈஶ்வரத்தன்மை அற்றவர்கள்* என்பன இந்த நான்கு பக்ஷங்கள். ஶ்ரீநிவாஸ ஶப்தம் ரூடியினாலே தேவதா விஶேஷமான நாராயணனையே தெரிவிக்கிறது. *ப்ரஹ்மணி ஶ்ரீநிவாஸே* - *நாராயணனாகிய ப்ரஹ்மம் - நாராயணன்தான் ப்ரஹ்மம்* என்று சொல்லி இருப்பதனால் இந்த நான்கு பக்ஷங்களும் தள்ளப்பட்டவை ஆகின்றன.

பரஸ்மிந் என்பதற்கு இரண்டு வ்யாக்யாநங்களை அநுக்ரஹித்துள்ளார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். *பரஸ்மிந்* என்பது பராதிகரணார்த்த ஸூசகம் என்பதாக முதல் வ்யாக்யாநம். *பரஸ்மிந்* என்பது உபயலிங்க அதிகரணார்தத்தை ஸூசநம் பண்ணுகிறது. என்று இரண்டாவது வ்யாக்யாநம். இரண்டையும் இப்பொழுது அநுபவத்தில் கொள்வோம். மூன்றாவது அத்யாயத்தில் இரண்டாவது பாதம் ஏழாவது அதிகரணம் பராதிகரணம். இந்த அதிகரணத்திலே ஜகத்காரண வஸ்துவே பரப்ரஹ்மம் என்று காட்டப்படுகிறது. *ஜகத்காரண வஸ்து உபாயம் என்பதாலும், உபாயத்தைக் காட்டிலும் உபேயம் உயர்ந்தது என்பதாலும் உபேயமாக உபாயம் இருக்க முடியாது; உபேயமாக வேறொரு வஸ்து இருந்தாக வேண்டும்* என்பது இந்த அதிகரணத்திலே பூர்வபக்ஷம். *உபபத்தேஶ்ச* என்னும் ஸூத்ரத்தில் *ப்ராப்யமான ப்ரஹ்மத்துக்கே ப்ராபகத்வமும் பொருந்துகையாலே ஜகத்காரண வஸ்துவான, உபாயமான ப்ரஹ்மம்தான் ப்ராப்யம்* என்று அறுதியிடுகிறார் ஸ்ரீவேதவ்யாஸர். ஆக ஜகத்காரண வஸ்துவுக்கு அதிரிக்தமான தத்வம் பரப்ரஹ்மமன்று; ஜகத்காரண வஸ்துவே பரப்ரஹ்மம் என்பது நம்மால் அறியத்தக்கது.

ப்ரஹ்மவிதாப்நோதி பரம் என்று உபநிஷத் வாக்யம். *ப்ரஹ்மோபாஸகன் ப$_2$லத்தைஅடைகிறான். உத்க்ருஷ்ட தத்வத்தை அடைகிறான்* என்னும் அர்த்தத்தை இந்த உபநிஷத் வாக்யம் தெரிவிப்பதால் உத்க்ருஷ்ட தத்வம்தான் ப்ராப்யம் என்பதை இந்த வேதாந்த வாக்யம் நமக்குக் காட்டுகிறது என்பது ஸ்பஷ்டம். இதனால் *உபேயம்* என்று ஒன்று தனியாகக் கிடையாது; உபாயமான ஜகத்காரண வஸ்துதான் உபேயமான பகவான்* என்று உபேயாந்தர வ்யாவ்ருத்தி ஸித்திக்கிறது. பரமாத்மா நமக்கு உபாயமாகவும் இருக்கிறான்; பரமாத்மா நமக்கு உபேயமாகவும் இருக்கிறான். அவனை அடைவதற்கு அவன்தான் வழியாகவும் இருக்கிறான். அவனாலே அவனைத்தான் நாம் சென்றடைகிறோம். அவனைக் கொண்டு மற்றொன்றை அடைவது என்பது கிடையாது. மற்றொன்றினாலே அவனை அடைவது என்பதும் கிடையாது. *ப்ராப்ய ப்ராபக ஐக்யம்* என்னும் இந்த அர்த்தத்தைத்தான் இங்கேயுள்ள *பரஸ்மிந்* என்னும் ஶப்தம் நமக்குக் காட்டுகிறது. *ஜகத்காரண வஸ்துதான் ஸ்ரீநிவாஸன்* என்பது கீழே காட்டப்பட்டுள்ளது. *பரஸ்மிந் ப்ரஹ்மணி ஸ்ரீநிவாஸே* - என்கையாலே

ஜகத்காரண வஸ்துவான பரப்ரஹ்மமே உபாயமாகவும் உபேயமாகவும் இருக்கிறது. என்னும் அர்த்தத்தை இது ஸூசநம் பண்ணுகிறது என்பது முதல் வ்யாக்யாநம்.

பரஸ்மிந்* என்கிற ஶப்தத்தாலே உபயலிங்காதிகரணார்த்தம் ஸூசிப்பிக்கப் படுகிறது என்பது இரண்டாவது வ்யாக்யாநம். *பகவான் அந்தர்யாமியாய் இருந்து கார்யவர்கத்தை ரக்ஷிக்கிறான்* என்ற அர்த்தம் கீழே காட்டப்பட்டது. *பகவான் ஜகத்துக்கு உபாதாந காரணம் ஆகவும் இருக்கிறான் என்பதும் வேதாந்தத்தில் ஸ்பஷ்டம்* என்று கீழே காட்டப்பட்டது. *பகவான் எந்த ஸ்தாநத்தில் இருந்தாலும் கூட ஸ்தாநப்ரயுக்தமான தோஷங்கள் இல்லாதவன்; காரணத்வ ப்ரயுக்தமாக கார்யத்தில் இருக்கும் எந்த தோஷமும் ப்ரஹ்மத்துக்கு வராது* என்னும் அர்த்தம் *ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்ரஹ்ம* *நிஷ்கலம் நிஷ்க்ரியம் ஶாந்தம் ப்ரஹ்ம* *நிரவத்$_3$யம் நிரஞ்ஜநம்* *அபஹதபாப்மா விஜரோ விம்ருத்யு: விஶோகோ விஜிக$_4$த்ஸ: அபிபாஸ: ஸத்யகாம: ஸத்யஸங்கல்ப:* போன்ற ஶோதக வாக்யங் களினால் ஸித்திக்கிறது. இந்த அர்த்தத்தைத்தான் உபயலிங்காதி கரணம் நமக்குத் தெரிவிக்கிறது. உபயலிங்கதயா பகவானுக்கு இருக்கிற வைலக்ஷண்யத்தை நமக்குக் காட்டிக் கொடுப்பதுதான் உபயலிங்காதிகரணம். *அகிலஹேயப்ரத்யநீகத்வம்* (எல்லா தோஷங் களுக்கும் எதிர்த்தட்டாய் இருக்கை) *கல்யாணகுணைகதாநத்வம்* (எல்லாத் திருக்கல்யாண குணங்களோடும் கூடியிருக்கை) என்பவைதான் இந்த உபய லிங்கங்கள் (இரண்டு அடையாளங்கள்)

பரஸ்மிந் என்கிற ஶப்தம் மேம்பட்டவன் என்னும் அர்த்தத்தைக் காட்டுகிறது. மேலானவன் என்றால் வைலக்ஷண்ய யுக்தன் என்று அர்த்தம். உபய லிங்கத்வத்தினாலே இவனுக்கு இந்த வைலக்ஷண்யம் ஸித்திக்கிறது. உலகத்திலே காரணமாய் இருக்கும் வஸ்துக்கள் எதுவும் உபயலிங்க விஶிஷ்டமாய் இல்லை. ஆனால் பகவான் உபாதாந காரணனாய் இருந்துகொண்டே உபயலிங்க விஶிஷ்டனாயும் இருக்கிறான். இக்காரணத்தினாலே இவன் விலக்ஷணனாக இருக்கிறான். இப்படி இவனுக்கு இருக்கும் வைலக்ஷண்யமாவது *பரஸ்மிந்* என்னும் ஶப்தத்தாலே ஸூசநம் பண்ணப்படுகிறது.

ஸ்ரீபாஷ்ய மங்களஶ்லோகம் ஶாஸ்த்ரார்த்த ஸங்க்ஷேபத்தைக் காட்டுகிறது என்னும் உண்மையைப் பலவாறு அநுபவித்துக் கொண்டு வருகிறோம். ஶாஸ்த்ரங்களிலே உபாய உபேயங்கள் காட்டப் பட்டுள்ளன. அவற்றுள் உபாயத்தை *விநத* - வணங்கின என்னும் ஶப்தம் காட்டுகிறது என்பதைக் கீழே அநுபவித்தோம். இந்த உபாயம் எத்தகையது என்னும் கேள்வி எழுகிறது. இதை விளக்குமாறு அமைந்து இருப்பதுதான் நான்காவது பாதத்திலே உள்ள *ஶேமுஷீ* என்னும் ஶப்தம். *ஶேமுஷீ* என்றால் ஜ்ஞாநம் என்று அர்த்தம். *விநத* என்னும் ஶப்தத்தையும் *ஶேமுஷீ* என்னும் ஶப்தத்தையும் சேர்த்துப் பார்க்கும் பொழுது ஜ்ஞாந ரூபமாய் இருப்பது வணக்கம் என்று தெரிகிறது. இங்கே *ஶேமுஷீ பக்திரூபா* என்று ஸாமாந்ய ஶப்தமான *ஜ்ஞாநம்* (ஶேமுஷீ) என்பது விஶேஷ ஶப்தமான *பக்திரூபா* என்பதுடன் சேர்ந்து ப்ரயோகிக்கப் பட்டிருக்கிறது. *ஶேமுஷீ பக்திரூபா* என்பது பக்திரூபாபந்ந (பக்திரூபமான) ஜ்ஞாநத்தைக் குறிக்கிறது. *பக்தி ரூபமான ஜ்ஞாநம்* என்பதிலிருந்தே பக்தி என்பது விஶேஷ ஶப்தம் என்றும் தெரிகிறது. ஸாமாந்ய விஶேஷ ந்யாயத்தைக் கொண்டு *பக்தி ரூபமான ஜ்ஞாநம்தான் உபாயம்* என்று இங்கே தாத்பர்யார்த்தத்தைக் கொள்ள வேணும். இத்தால் *கர்மமும் ஜ்ஞாநமும் சேர்ந்து உபாயம்* என்னும் பாஸ்கர மதமும், *வாக்ய ஜந்ய வாக்யார்த்த ஜ்ஞாநமே உபாயம்* என்னும் ஶாங்கராத்வைத மதமும் தள்ளப்படுகின்றன. *ஶேமுஷீ பக்திரூபா* - பக்திரூபாபந்ந ஜ்ஞாநம் என்பது ஶாஸ்த்ரங்களில் விதிக்கப்பட்டுள்ளதாகும். *ஶுத்தபாவம் கதோ பக்த்யா ஶாஸ்த்ராத் வேத்மி ஜநார்த்தநம்* என்னும் மஹாபாரத ஶ்லோகம் *பக்தியினால் ஶுத்தமான சித்தவ்ருத்தியை அடைந்து இருப்பவனான நான் ஜநார்த்தநனை அறிகிறேன்* என்று பக்தியை ஜ்ஞாந ப்ராப்திக்கு ஹேதுவாகச் சொல்லுகிறது. *பக்த்யா து அநந்யயா ஶக்ய:* (வேறொரு பலனை விரும்பாமல் என்னையே அடைய வேண்டும் என்னும் விருப்பத்துடன் செய்யும் பக்தியினாலே நான் அடையத் தக்கவனாக இருக்கிறேன்) என்று பகவான் கீதையில் அருளிச் செய்துள்ளான். *தத்வேந ப்ரவேஷ்டுஞ்ச பரந்தப* (பக்தி ஒன்றினாலேயேதான் உள்ளது உள்ளபடி அறியமுடியும், பார்க்க முடியும், அடைய முடியும்) என்னும் பகவத் வசநமும் *பக்திதான் ஜ்ஞாந தர்ஶந ப்ராப்திகளுக்கு ஸாதநமாய் இருக்கிறது* என்னும் பரமார்த்தத்தை நமக்குத் தெரிவிக்கிறது. இவ்வர்த்தம்தான் இங்கும் *ஶேமுஷீ

பக்திரூபா* என்பதினால் விவக்ஷிக்கப் பட்டிருக்கிறது. *அஹமஸ்மி அபராதாநாம் ஆலய:* என்பதைப் போலே இங்கு எம்பெருமானாரும் சொல்லிக் கொள்கிறார் என்பது *மம* ஶப்தத்தினால் ஸூசிதம். பித்தம் தெளிந்தவனுக்குத்தான் பால் ருசிக்கும். அதைப்போல் பக்திக்கு விரோதியான பாபங்கள் தொலையப் பெற்றவனுக்குத்தான் பக்தியாவது இனிமையாக இருக்கும். **மம பவது* - பக்தி உண்டாவதற்குத் தடையாயுள்ள தன்னுடைய பாபங்களைப் போக்கித் தனக்கு பக்திரூபாபந்ந ஜ்ஞாநத்தை அநுக்ரஹிக்க வேணுமாய் பகவானை ப்ரார்த்திக்கிறார் என்று ஒரு வ்யாக்யாநம்.

எல்லோருக்கும் பக்தியானது இனிமையாக இருப்பதில்லை. இவரைப் போன்ற ஜ்ஞாநிகளுக்கே பக்தி மிகவும் இனிமையாக இருக்கிறது. அதை பகவானிடம் ப்ரார்த்தித்தே பெறவேண்டும் என்பது *பவது* என்பதினால் காட்டப்படுகிறது. அதனால் மற்றவர்களை வ்யாவர்த்தித்து *எனக்கு பக்திரூபாபந்ந ஜ்ஞாநமாவது உண்டாகட்டும்* என்று பகவானை ப்ரார்த்திக்கிறார் என்று இரண்டாவது வ்யாக்யாநம்.

ஶேமுஷீ பக்திரூபா என்னுமிடத்தில் நாம் ஆழ்ந்து அநுபவிக்க வேண்டிய அர்த்த விஶேஷங்கள் பலவுண்டு. அவற்றுள் நம்முடைய ஸித்தாந்த ஸம்ப்ரதாயத்தினுடைய பரமார்த்தம் ஒன்றை எம்பெருமானார் (லகு ஸித்தாந்தத்திலே) நமக்குக் காட்டியருளின படியை அநுஸரித்து யதாமதி விண்ணப்பிக்கிறேன். *ஜீவபர யாதாத்ம்ய பூர்வக* என்று ஸ்வாமி எம்பெருமானார் வேதார்த்த ஸங்க்ரஹ ஆரம்பத்திலே அருளிச் செய்துள்ளார். ஜீவாத்மாவைப் பற்றியும், பரமாத்மாவைப் பற்றியும், இருவருக்கும் உண்டான ஸம்பந்தத்தைப் பற்றியும் முதலில் ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும். அகார வாச்யனான எம்பெருமானுக்கு அநந்யார்ஹ ஶேஷபூதன் இந்த ஜீவாத்மா. (மகார வாச்யனான) ஜீவாத்மாவுக்கு நிருபாதிக ஶேஷியாக இருப்பவன் பரமாத்மா. இவனைச் சொல்லாமல் அவனைப் பற்றிச் சொல்ல முடியாது. அவனைச் சொல்லாமல் இவனைப் பற்றிச் சொல்ல முடியாது. இவ்விருவருமே ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியாத ஸம்பந்தம் உள்ளவர்கள்.

அம்பொன்னரங்கர்க்கும் ஆவிக்கும் அந்தரங்க சம்பந்தம் என்கிறார் ஸப்த காதையில் விளாஞ்சோலைப் பிள்ளை. நமக்கு இந்த ஜ்ஞாநம் முதலில் வர வேண்டும். இதற்குப் பிறகு பரமாத்மாவைப் பற்றிய சிந்தநம் அமைய

வேண்டும். பரமாத்ம சிந்தநத்தாலே மோக்ஷம்; வாக்யார்த்த ஜ்ஞாநத்தாலே அன்று. ஶாரீரக ஶாஸ்த்ரம் நான்காவது அத்யாயம் முதல்பாதம் ஆவ்ருத்தி பாதம் எனப்படும். இதில் பதினோரு அதிகரணங்கள். இவற்றில் ப்ரஹ்ம வித்யா விசாரத்துக்கு என்று ஆறு அதிகரணங்கள். இந்த ஶரீரம் இருக்கும் பொழுதே ப்ரஹ்ம வித்யாதிகள் வந்து விடுகின்றன. பரமாத்மாவைப் பற்றிய அநுபவம் கிடைத்து விடுகிறது. *தஸ்மிந் த்ருஷ்டே பராவரே* என்னும்படி தர்ஶந ஸமாநாகாரமான ஒரு ஜ்ஞாநம். *ஆத்மா வா அரே த்₃ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதி₃த்₄யாஸிதவ்ய:* என்றெல்லாம் ஶ்ரவணத்தை, மநநத்தை அநுவாதம் பண்ணுகிறது இந்த வேதவாக்யம். இவற்றை விதிக்கவில்லை. த்யாநத்துக்கு மட்டும்தான் விதி என்று ஸ்ரீபாஷ்ய ஸாரம். பரமாத்மாவைப் பற்றிய சிந்தநத்தைச் செய்கிற பொழுது அந்தச் சிந்தநம் முதிர்ந்து விடுமானால் ஒருவனுக்கு ஏற்படுவது ப்ரத்யக்ஷ ஸமாநாகாரம். *சங்கினோடும் நேமியோடும் தாமரைக் கண்களோடும் செங்கனிவாய்....* என்று சொல்லுகிறபடியே ப்ரத்யக்ஷம் எங்கே என்றால் பரமபதத்திலேதான். இங்குக் கிடைப்பது தர்ஶந ஸமாநாகாரம். பரமபதத்திலே என்ன அநுபவம் கிடைக்குமோ அதற்கு ஸமாநமான அநுபவம் இங்கே கிடைக்கிறது. பரமபதத்திலும் இந்த அநுபவம்தான். ஆனால் இரண்டிற்கும் வ்யத்யாஸம் என்ன என்றால் - பரமபதம் நித்ய மண்டலமாக இருப்பதனாலே அங்கு கிடைக்கும் அநுபவம் நித்ய அநுபவம். இந்த லோகம் அநித்ய மண்டலமாக இருப்பதினாலே இங்கு கிடைக்கிற அநுபவம் அநித்யாநுபவம்.

ஆக அவனையும் உள்ளபடி அறிந்து (நம்மைப் பற்றியும் உள்ளபடி அறிந்து) அவனுடைய திருவடித் தாமரைகளை த்யாநம் பண்ண வேண்டும். இந்த த்யாநம் என்பது அஸக்ருத் ஆவ்ருத்த ஜ்ஞாநம். இது வாக்யார்த்த ஜ்ஞாநம் அன்று. *ஜ்ஞாந மாத்ரஸ்ய ஹேதுத்வ ஸ்ருதே:* - வேதாந்தம் ஜ்ஞாந மாத்ரம்தான் உபாயம் என்று சொல்லிற்றே என்றால் - அதைத்தான் நானும் சொல்லுகிறேன்* என்கிறார் ஸ்வாமி. *தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி நாந்ய: பந்தா அயநாய வித்யதே* என்று புருஷஸூக்தம் ஓதுகிறது. எம்பெருமான் கீதையில் அருளிச் செய்கிறான் - *பக்த்யா து அநந்யயா ஶக்ய:* என்று ஜ்ஞாநத்தாலே மோக்ஷம் என்று வேதாந்தம் சொல்லியிருக்க, பக்தியாலே மோக்ஷம் என்று கீதாசார்யன் சொல்லுகிறான். நம்முடைய ஸம்ப்ரதாயத்திலே பக்தி வேறு, ஜ்ஞாநம் வேறு என்று

கொள்வதில்லை. ஜ்ஞாநமானது பக்திரூபாபந்ந ஜ்ஞாநம். ஆக இப்படிப் பட்ட ஜ்ஞாநத்தைத்தான் *ஶுமுஷீ பக்திரூபா* என்று எம்பெருமானார் பகவானிடத்திலே ப்ரார்த்திக்கிறார். அதைத்தான் *மயர்வற மதிநலம் அருளினன்* என்று பாசுரம் பாடினார் நம்மாழ்வார். நலமாவது பக்தி. மதியாவது ஜ்ஞாநம். நமதாசார்யர்கள் அனைவருமே பக்தியைத்தான் எம்பெருமானிடத்தில் ப்ரார்த்திக்கிறார்கள். நம்முடைய ஸித்தாந்தத்தின் படி இந்த பக்தியானது ஸாதந பரமன்று. இந்த பக்தியானது ஸாத்யபரம். அதாவது பரமாத்மாவினுடைய அநுக்ரஹத்தினாலே கிடைக்கக் கூடியதாக இருப்பது பக்தி. இதுதான் ப$_2$லம். இதுதான் புருஷார்த்தம். ஆகையால்தான் இந்த பக்தியைப் பற்றி விசாரித்து இருக்கிறார் ஸ்ரீவேத வ்யாஸர் நான்காவது அத்யாயமான ப$_2$லாத்யாயத்திலே.

ரக்ஷகதீக்ஷே என்பதினால் சேதநர்களை ரக்ஷிப்பதையே வ்ரதமாகக் கொண்டவனான பகவானுடைய உபாயபாவம் தெரிவிக்கப்படுகிறது. *பரஸ்மிந்* என்பதினால் பகவானுடைய உபேயபாவம் தெரிவிக்கப் படுகிறது. *பக்திரூபா* என்பது ஸித்தோபாயமான பகவானை வஶீகரணம் பண்ணுவதற்கு ஹேதுவான (ஸாத்யோபாயமான) பக்தியைக் காட்டுகிறது. இவையெல்லாம் ஶாஸ்த்ரத்திலே சொல்லப் பட்டுள்ள பரமஸாரபூதமான அர்த்தவிஶேஷங்கள். இவற்றை இந்த ஶ்லோகத்திலே ஶாப்தமாகக் காட்டியருளியிருக்கிறார் எம்பெருமானார்.

இந்த ஶ்லோகத்திலே இவர் காட்டியருளும் அர்த்தங்களுள் ஏகதேஶம் பரபக்ஷ நிராஸநம். பரபக்ஷ நிராஸநம் என்பது இந்த ஶ்லோகத்தில் எம்பெருமானார் ஶாப்தமாக ஸ்வபக்ஷத்தை பதங்களால் அர்த்தப$_3$லத்தால் ஸித்திக்கிறது என்பதை இனி காண்போம். *ஜந்ம ஸ்தேம பங்காதி* ஶபதங்களால் ஒரே காலத்தில் ஸ்ருஷ்ட்யாதிகளை ஒத்துக் கொள்ளாத பாஸ்கர, ப்ரபாகர மதங்கள் தள்ளப் படுகின்றன. *ஒரே காலத்தில் ஸ்ருஷ்டி முழுவதும் (மொத்தமாக) ஏற்படுகிறது; ஸ்திதிகாலத்தில் பகவானுடைய ரக்ஷணமும் இப்படியே ஏற்படுகிறது; லயகாலத்திலும் ஒரே ஸமயத்தில் மொத்தமாக பங்கம் ஏற்படுகிறது* என்பது வேதாந்தம் காட்டும் அர்த்தம். இதை இவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. பரம வேதாந்த ஸாரபூதமான இவ்வர்த்தத்தைக் காட்டுவதன் மூலம் இவர்கள் மதங்கள் நிரஸிக்கப் படுகின்றன என்பது அர்த்தாத் ஸித்திக்கிறது. *ஜகத்தினுடைய உத்பத்தி

ஸ்திதி லயங்களுக்கு எல்லாம் பகவான் ஸாக்ஷியாக மட்டும் இருக்கிறான்* என்று சொல்லும் ஹிரண்யகர்ப மதம் *லீலா* ஶப்த ப்ரயோகத்தினால் அர்த்தாத் நிரஸிக்கப் படுகிறது. *விநத* *விவித* ஶப்தங்கள் *ஜீவர்கள் அநேகர்கள்; அவர்களுக்குள் பரஸ்பரம் பேதம் உள்ளது* என்பதையும் ஜீவபர பேதத்தையும் காட்டுவதால் அத்வைத மதம் தள்ளப்படுகிறது. *ஶ்ருதிஸிரஸி விதீப்தே* என்பதால் வேதத்தை ப்ரமாணமாக ஒத்துக் கொள்ளாமல் ஸ்வபுத்தியால் கல்பிக்கப்பட்ட சார்வாக, பௌத்த, ஜைந மதங்கள் தள்ளப்படுகின்றன. *ப்ரஹ்மணி* ஶப்தம் அப்ரஹ்மாத்மகமான ப்ரதாநத்தை (ப்ரக்ருதியை) காரணமாகச் சொல்லுகிற ஸாங்க்யர்களையும், பரமாணுக்களைக் காரணமாகச் சொல்லுகிற வைஶேஷிகர்களையும் நிரஸிக்கிறது. *ஸ்ரீநிவாஸ ஶப்தேந பாஶுபதாதி$_3$ வ்யுதாஸ:* என்கிறார் ஶ்ருதப்ரகாஶிகாசார்யர். *ஸ்ரீநிவாஸ* ஶப்தத்தினால் அவர தத்வமான பஶுபதியை பரதத்வமாகக் கொள்ளும் பாஶுபத மதம் தள்ளப்படுகிறது. *ஶேமுஷீ* என்பதால் ஜ்ஞாந கர்ம ஸமுச்சயத்துக்கு உபாயத்வம் சொல்லுகிறவர்களும், *வாக்யஜந்ய வாக்யார்த்தமே மோக்ஷோபாயம்* என்று சொல்லுகிறவர்களும் நிரஸிக்கப்பட்டனர்.

இப்படியாக, பரம காருணிகரான ஸ்வாமி எம்பெருமானார் ஸ்ரீபாஷ்ய மங்கள ஶ்லோகத்திலே காட்டியருளும் அர்த்தங்களுள் சிலவற்றை ஒருவாறு அநுபவிக்கும் பாக்யம் பெற்றவர்களானோம். இதுபோன்று ஸ்ரீபாஷ்யத்திலே எம்பெருமானார் காட்டியருளும் பரமவேதாந்த ஸார பூதமான அர்த்தவிஶேஷங்கள் அனைத்தையும் நன்கு அநுபவித்து எம்பெருமானார் திருவடி ஸம்பந்தம் பெற்ற பயன் ஸித்திக்கப் பெற்றவர்களாக நாம் ஆகவேண்டும் என்று திவ்ய தம்பதிகள், ஆழ்வார்கள், ஆசார்யர்கள் திருவடித் தாமரைகளில் ப்ரார்த்தித்து நிற்கிறேன்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே ஶரணம்